எழுநூறு ஆண்டுகளில் நன்னூல்

ஆசிரியர்
டாக்டர் கு. ப. அறவாணன்
B.O.L., B.Lit., M.A., M. Litt., Ph.D.
தாகர் பல்கலைக் கழகம்
தாகர், சென்கல், மேற்கு ஆப்பிரிக்கா.

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
சென்னை-600001.

A Critical Study on Nannuul
(A Mediaeval Grammar of Tamil)
And Its Commentaries

PROFESSOR. K. P. ARAVAANAN
IFAN
University of Dakar
DAKAR
SENEGAL

Selling Rights
Paari Nilayam,
59, Broadway
Madras-600 001, India.

BIBLIOGRAPHICAL DATA

1	Title of the book	...	A Critical Study On Nannuul and its Commentaries.
2	Author	...	K. P. ARAVAANAN, 9-8-1941 Kadalangudi, Tanjore Dist
3	Language	...	Tamil
4	Edition	...	First
5	Date of publication	...	9-8-1977.
6	Copy right holder	...	K. P. Aravaanan
7	Paper used	...	14. 2. KG. White Printing
8	Size of the book	...	21. 5 x 14 Cm. Demmi. 8
9	Printing points used	...	10, 8, 12, 14, 18, 36 Points
10	No. of pages	...	372
11	No. of copies printed	...	1,000
12	Artist	...	Eswari Arts
13	Printer	...	Novel Arts Printers, Madras 600014
14	Binding	...	Calico
15	Price	...	Rs 15. 00
16	Publisher	...	Tamil Koottam, Madras 600029
17	Subject	...	Tamil Grammar
18	Summary	...	A detailed study on 14th century Grammar and its commentaries upto 20th Century
19	Call number	...	P, 31, J x 1, 1 L7
20	Special Information	...	Financial assistance by Directorate of Tamil Development, Govt, of Tamilnadu.

திருமதி & திரு. அறவாணன் பதிப்பித்த/ எழுதிய நூல்கள்

எழுநாறு ஆண்டுகளில் நன்னூல்

கவிதையின் உயிர் உள்ளம் உடல்

நீ ஒரு பண்புத் தொகை

கவிதை - கிழக்கும் மேற்கும்

Science in Tamil

Some observation on Folklore

Comparative Study of literature

தற்காலத் தமிழ் முன்னோடிகள்

கல்வித்துறை உருப்பட

கலிக்கத்துப் பரணி ஒரு மதிப்பீடு

தொல்காப்பியக் களஞ்சியம்

தொல்காப்பிய ஒப்பியல்

அவிநயம்

ஐந்திரம்

அமுதசாகரம்

இந்திரகாளியம்

சனனின் தமிழ் இலக்கண நன்கொடை

அவள் அவன் அது

ஆராய்ச்சித் தமிழ் ஒரு முன்னுரை

புதிய கோலங்கள்

Research papers on Tamilology

கட்டுரை எழுதுதல் எப்படி?

பெண்மொழி

புரட்சிப் பொறிகள்

காலப் போக்கும் கல்லூரிப் போக்கும்

ஆழ்வே ஆய்வு

ஆய்வே வாழ்வு

'எழுநூறு ஆண்டுகளில் நன்னூல்' எனும் இவ்வாய்வேடு, பல்லாண்டு உழைப்பின் பயன். நன்னூல் இடைக்காலப் படைப்பு. இலக்கண உலகில், அந்நூல் தொடர்ந்து தலைமைத் தகுதி பெற்று வாழ்ந்து வந்திருக்கிறது. இடைக் காலத்திலும் பிற்காலத்திலும் நன்னூலிற்குத் தோன்றிய உரைகளே அந்நூலின் மாட்சிமைக்குச் சாட்சி. நூலையும், அதற்குரிய உரைகளையும் முற்றுமாக ஆழ்வு ஆய்வு செய்வதே, இவ்வாய்வின் நோக்கம். நோக்கின் ஈடேற்றத்தை அறிஞர் உலகம் கணித்தல் வேண்டும்.

'நன்னூலும் அதன் உரைகளும்' எனும் தலைப்பில், சென்னைப் பல்கலைக் கழக வழி எம். லிட். ஆராய்ச்சிப் பட்டத்திற்காக முறைப்பட நினைக்கவும், தினைக்கவும் வழி செய்தவர், அற்றை நாள் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் அ. மு. பரம சிவானந்தம் ஆவார். அவர்கள் வழி வழங்கிய ஆய்வேட்டைப் புதுக்கவும், வெளியிடவும் சென்னைப் பல்கலைக் கழகம் ஒப்புதல் வழங்கிற்று.

உரிய மாற்றங்களையும், ஏற்றங்களையும் பெற்றுப் புத்துருவம் எய்திய நிலையில், 'எழுநூறு ஆண்டுகளில் நன்னூல்' எனும் பெயருடன் இவ்வாய்வேடு, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார்தம் பார்வைக்கு வைக்கப்பெற்றது. தமிழ் வளர்ச்சிக் கழக ஆட்சியாளர்களும், அறிஞர் குழுவினரும், இந்நூல் வெளிவரத் தமிழக அரசின் சார்பில் நிதிப்பரிவு செய்தனர்.

கல்வித் துறைச் செயலர் திரு. அரங்கபாசியம், தமிழ் வளர்ச்சிக் கழக இயக்குநர் திரு. கொண்டல் சு. மகாதேவன், தனி அலுவலர் சிலம்பொலி சு. செல்லப்பன் ஆகியோர்தம் ஊக்குவிப்பே, இந்நூலின் அச்சாக்கத்திற்கு ஆணிவேர்.

இப்பெரிய அரிய நூலின் உருவாக்கத்திற்கு உதவியோர் பல்லோர். பல நன்னூற் பதிப்புகளையும், நூல்களையும் கொடுத்து உதவியதுடன் ஆய்வேட்டைப் பார்வையிட்டுச் சீர்செய்து உதவிய, தமிழக அரசு பொது நூலக இயக்குநர், திரு. வே. தில்லைநாயகம், ஏறத்தாழ, பல திங்கள் நூலகத்திலேயே இரவும் பகலும் இருந்து பயில வாய்ப்பு அமைத்து, பல நூல்களைத் தந்து ஆய்விற்கு வேண்டிய நிழற்படங்கள் எடுப்பதிலும் பேருதவி புரிந்த மறைமலையடிகள் நூலக நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி, அரிய பழைய நன்னூற் பதிப்புகள் சிலவற்றை நல்கிய தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், அறிஞர், மு. அருணாசலம், சிதம்பரம் ஆறுமுக நாவலர் நிறுவன மேலாளர் திரு. தி. க. இராசேசுவரன், சென்னை எழும்பூர் ஆவணக் காப்பக இயக்குநர் திரு. சிங்காரயன், சென்னைப் பல்கலைக் கழக நூலகர் திரு. மோகனராசன், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி நூலகர் திரு. பெருமாள், அயராது ஆர்வம் காட்டி ஊக்கம் ஊட்டிய டாக்டர். வி. மி. ஞானப்பிரகாச அடிகளார், கொடுமுடி. ச. சண்முகன், க. மணி ஆகியோர் ஆற்றின உதவிகள் நெஞ்சில் நிற்கும்; நிலைக்கும்.

நாவலர் ஆர்ட் அச்சகர் கவிஞர். நாரா. நாச்சியப்பன் நூலை அச்சேற்றும் பொறுப்பை, உரிய காலத்தில் நிறைவு செய்தனர்.

என் நூல் அனைத்திற்கும் தோன்றுத் துணையாக இலங்கும், இருபதாம் நூற்றாண்டுத் தமிழுலகில், 'பாரி' யாக வாழ்ந்து கொண்டிருக்கும் பாரி நிலையச் செல்லப்பனார் பரிவு காட்டினார்.

அடிக் குறிப்புகளின் காடாக அமைந்துள்ள இவ்வாய்வேட்டிற்கு அச்சுத் திருத்தம் செய்யும் பணி எளிதன்று. நூலின் பொருளையும், நோக்கையும் போக்கையும் நன்கு விளங்கியோரே செவ்வனே செய்தல் இயலும். பொறுமை மிக வாய்ந்த அருமை நண்பர் 'முக்குடை' ஆசிரியர் புலவர் சிவ. ஆதிநாதன், அச்சுத் திருத்தப் பணியை முற்றும் பார்த்தனர்.

இவ்வனைவர்தம் துணையைக் கொண்டு இந்நூல் உருவாயிற்று. அன்னோர் அனைவருக்கும் என் நன்றி.

அன்பன்,
க. ப. அறவாணன்.

Dedicated to
His Excellency
Dr. Leopold Sedar Senghor
President of Senegal
Dakar, W. Africa

உள்ளுறை

முதற்பகுதி
நன்னூல் ஓர் அறிமுகம்

1. ஆராய்ச்சி மூலங்கள்: 1—22

ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டவை; முன்னேடிகள்; ஆராய்ச்சித் :தலைப்பு; ஆய்வு எல்லை; ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட பதிப்புகள்; ஆய்வு அமைந்துள்ள முறை; கள ஆய்வு.

2. நன்னூல் எழுந்த சூழல் 23—30

அரசியல் சூழல்; சமூகச் சூழல்; சமயங்களின் சூழல்; இலக்கிய இலக்கணச் சூழல்; சமற்கிருதச் செல்வாக்கு; பேரரசும் சிற்றரசுகளும்; தொல்காப்பியக் கல்வி; ஐந்திலக்கணத் தேவை.

3. நன்னூல் ஆசிரியர் : 31—42

நன்னூல் ஆசிரியர்; நன்னூல் ஆசிரியர் - சமணத் துறவி; பவணந்தி பெயர் விளக்கம்; பவணந்தியின் அறிவுத்தந்தை; நன்னூலாரின் காலம்; நன்னூலார் வாழ்ந்த இடம்.

4. நன்னூல் பெயர்க்காரணமும் பொருத்தமும் : 43—48

நன்னூல் பெயர்க்காரணமும் பொருத்தமும்; பழையன கழிதலும் புதியன புகுதலும்; தொல்காப்பிய எதிர் நூல்; நன்னூல் பெயர்ப் பொருத்தம்.

5. நன்னூல் அமைப்பு : 49—72

ஐந்ததிகார நூலா? பாயிரம் இயற்றியது யார்? பொதுவியல் வைப்பு முறை; இடையியல், உரியியல் பெயர்ப்பொருத்தம்; நன்னூல் நூற்பாத் தொகை வகை விளக்கப் படங்கள்.

இரண்டாம் பகுதி
நன்னூல் உரைகள் விளக்க இயலாய்வு

6. உரையின் வரலாறு : 75—88

உரை இல்லாத காலம்; உரை தோன்றிய காலம்; எழுதாக் கிளவி; வாய்மொழி இலக்கியம்; இலக்கண

உரைத்தோற்றத்திற்குக் காரணம்; பழைய உரை யாசிரியர்களின் பெருமை; நன்னூல் உரைகள் எழுந்த சூழல்; மூலநூல் எழுந்த காலத்தை ஒட்டியே உரை நூல் எழுதப்படல்; நன்னூலுக்குப் பல உரைகள் பல்கி யமைக்குக் காரணம்; உரை வகையும் வரையறையும்; நன்னூல் தரும் உரை இலக்கணம்.

7. மயிலைநாதர் உரை : 89—115

நன்னூல் உரையாசிரியர் வரலாறு; கள ஆய்வு; மயிலை நாதர் காலம், ஊர், பெயர்க்காரணம், சமயம்; மயிலை நாதர், ஓர் இலக்கணக் கடல்; மயிலை நாதர், ஓர் இலக்கியக் கடல்; மயிலைநாதரின் வடமொழி அறிவு; மயிலைநாதரின் மொழிநடை; மயிலைநாதர் ஆளும் உத்திகள்; மயிலைநாதம் ஒரு செய்திக் களஞ்சியம்; இலக்கணப் புதுமைகள்; முடிப்பு.

8. ஆண்டிப்புலவர் உரை : 116—122

கி. பி. 16, 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகச் சூழல்; ஆண்டிப்புலவர் காலம்; ஆண்டிப்புலவர் உரை; செய்யுள் வடிவு நன்னூல் உரை.

9. சங்கர நமச்சிவாயர் உரை: 123—151

வாழ்க்கை; சங்கர நமச்சிவாயரின் இலக்கணப் புலமை; இலக்கியப் புலமை; வடமொழிப்புலமை; மதம், அழகு, உத்தி முதலாயின ஆளும் ஆற்றல்; உரைநெறி; மொழிநடை; உரை மூலம் அறியப்படும் அக்காலச் செய்திகள்; புதியன புகுதல்; பாட பேதங்கள்; முடிப்பு: உரைக்குரிய தனித்தன்மைகள்.

10. சிவஞான முனிவர் உரை : 152—167

சிவஞான முனிவர்; உரை வரைந்த சூழல்; இலக்கணப் புலமை; இலக்கியப்புலமை; வடமொழிப் புலமை; காட்டும் உத்தி முதலாயின; மொழிநடை; மறுப்பு முறைகள்; உரையால் விளங்கும் செய்திகள்; உரையில் உள்ள ஒரு குறை; முடிப்பு.

11. கூழங்கைத் தம்பிரான் உரை : 168—172

கூழங்கைத் தம்பிரான் காலம்; கூழங்கைத் தம்பிரான் பரம்பரை விளக்கம்; வைத்தியநாத தேசிகர் உரை.

12. விசாகப் பெருமாளையர் உரை : 173—186

19ஆம் நூற்றாண்டின் சூழல்கள்; அரசியல் சூழ்நிலை; சமூகச் சூழ்நிலை; அச்சுப்பொறி; செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கல்லூரி; உரைகளின் பெருக்கத்திற்குக் காரணம்; நன்னூலுக்கு எழுதப்பட்ட முதற் காண்டிகை; விசாகப் பெருமாளையர் உரை; பல பதிப்புகள்; உரை பற்றி உரைப்பாயிரம் உரைப்பது; உரையில் இடம் பெற்றுள்ள இன்றியமையாச் செய்திகள்; உரையின் தனித்தன்மைகள்.

13. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை உரை : 187—191

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை வாழ்க்கை; அன்மொழித் தொகை ஆராய்ச்சி; நன்னூல் உரை; நன்னூல் உதாரண விளக்கம், நன்னூல் இலகு போதம்.

14. இராமானுச கவிராயர் உரை : 192—200

முகவை இராமானுச கவிராயர் இலக்கிய இலக்கண மேற்கோள்; விருத்தியா? காண்டிகையா? உரையின் தனிச்சிறப்பு.

15. வேதகிரி முதலியார் உரை : 201—204

களத்தூர் வேதகிரி முதலியார்; காண்டிகை உரை; சிறப்பான விளக்கங்கள்; சிறப்பான சில செய்திகள்.

16. திருப்பாற்கடல்நாதன் உரை : 205—207

திருப்பாற்கடல்நாதன் கவிராயர்; முத்து வீரியத்திற்கு உரை; நன்னூல் உரை; உரை பற்றிய குறிப்புக்கள்.

17. டாக்டர் போப்பையர் உரை : 208—211

ஜி. யூ. போப்பு; எழுதிய நூற்கள்; போப்பு உரை; போப்பையரின் நன்னூல்பதிப்புச் சிறப்பு; தனிச்சிறப்பு.

18. இ. சாமுவேல்பிள்ளை உரை : 212—220

இ. சாமுவேல் பிள்ளை; தொல்காப்பியப் பதிப்பு; நூற் பொதிப்பொருள்; நூற்பெயர்; நூலமைப்பு; உரை வழங்கும் செய்திகள்; உரையின் சிறப்பு.

19. க. பெ. சவுந்தரநாயகம் பிள்ளை உரை: 221—226

எழுதிய நூல்கள்; நன்னூற் சுருக்கங்கள் வெளிவரக் காரணம்; நன்னூற்சுருக்கச் சார்பு; சுருக்கப் பதிப்புகள் தொடர்தல்.

20. ஆறுமுக நாவலர் உரை: 227—231

ஆறுமுக நாவலர்; பைபிளைத் தமிழாக்கும் பணி; சொற் பொழிவுக் கலையை வளர்த்தவர்; கிறித்துவ மத கோளரி; கட்டுரைக் கலைக்குத் தந்தை; நன்னூல் விருத்தியுரையை முதலில் அச்சேற்றியவர்; நாவலர் இயற்றிய காண்டிகை உரை.

21. சடகோபராமானுசாச்சாரியார் உரை: 232—235

வை. மு. சடகோபராமானுசாசாரியார்; சே. கிருட்டிணமாசாரியார் நன்னூற் காண்டிகை யுரை; உரையின் இயல்புகள்.

22. கோபாலாசாரியர் உரை: 236—238

கா. ஸ்ரீ. கோபாலாச்சார்யார்; தி. கோ. ஸ்ரீரங்காச்சாரி; காண்டிகை உரை; உரையின் இயல்புகள்.

23. பழைய உரை: 239—240

ஆசிரியர் பெயர் தெரியா நன்னூல் மூலமும் காண்டிகை யுரையும்.

24. நன்னூல் ஆங்கில உரைகள்: 241—252

இரேனியசு உரை; வால்டர் ஜாய்சு; சாமுவேல் பிள்ளை மொழிபெயர்ப்பு; அருணாசலம் பிள்ளை மொழிபெயர்ப்பு; என்றி பவர் ஐயர் மொழிபெயர்ப்பு; இலாசரசு ஐயரின் மொழிபெயர்ப்பு.

25. கிடைக்கப்பெறு நன்னூல் உரைகள்: 253—260

சரவண முத்துப் புலவர்; சரவணப் பெருமாளையர் உரை; சத்திரசேகர கவிராச பண்டிதர் உரை; டி. இ. பரசுராம முதலியார் உரை; ஆறுமுக சுவாமிகள் உரை; ஆசிரியர் பெயர் தெரியா உரை-1; ஆசிரியர் பெயர் தெரியா உரை-2; ஆசிரியர் பெயர் தெரியா உரை-3; குமாரசாமிப் புலவர் உரை; ஸ்ரீநிவாச முதலியார் உரை; பி. எம். ஸ்ரீநிவாசாசாரியார் உரை; ஆசிரியர் பெயர் தெரியா உரை-4 தெய்வசிகாமணி முதலியார் உரை; அமிர்தலிங்கச் செட்டிப் பதிப்புரை; அச்சிடப் பெறு நன்னூல் உரைகள்.

26. இருபதாம் நூற்றாண்டில் உரைகள்: 261—272

அரசியல்சூழல்; சமுதாயச் சூழல்; இலக்கண வளர்ச்சி; நன்னூல் உரைகள்; மூலபாடக் கல்வி; இலக்கணக்

கல்வி; ஒப்பியல் ஆய்வு; கருத்தரங்குள்; நன்னூல் உரைகள்; பவானந்தம் பிள்ளை பதிப்பு; நமச்சிவாய முதலியார் பதிப்பு; சிறப்பான செய்திகள்

மூன்றும் பகுதி

நன்னூல் உரை வேறுபாடுகள்

27. பாயிர உரை வேறுபாடுகள் : 275—283

கருத்து வேறுபாடுகள்; ஆய்வுமுறை; பாயிர உரை வேறுபாடுகள்; யாப்பு; கேட்போர்; பயன்; விருத்தி யுரை; ஆசிரியர் ஆகாதவர் இலக்கணம்; மடற்பனை.

28. எழுத்ததிகார உரை வேறுபாடுகள்: 284—302

அதிகாரம்; சார்பெழுத்து; சுட்டெழுத்து; வினாவெழுத்து; வகரப் பிறப்பு; இடைநிலை மெய்ம்மயக்கம்; போலி; எழுத்துப் போலி; இருமை எண்; விகாரம்; தொண்ணூறு–தொள்ளாயிரம்.

29. சொல்லதிகார உரை வேறுபாடுகள்: 303—351

வேற்றுமை; உயர்திணை; படர்க்கை வினைமுற்று, படர்க்கைப்பெயர்; செந்தமிழ் நாடு; திரிசொல்; தமிழ் ஒழிநிலம்; இடுகுறி காரணம்–மரபொடு ஆக்கம்; இருதிணைப் பொதுப்பெயர் பாற் பொதுவாய் நிற்றல்; தன்மை முன்னிலைப் பெயர்கள், பொதுப் பெயர்களா?; வினையால் அணையும் பெயர்; ஆகுபெயர்; ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே; எழுவாய் வேற்றுமை; விளிஏலாப் பெயர்கள்; இரண்டாம் வேற்றுமை உரு பேற்றலுக்குப் புறனடை; செய்வித்தான் ஏவற் கருத்து; வாய்பாடு; கால், கடை; வினையெச்சங்களின் முடிவு; ஆக்கச் சொல் தொக்கு வருதல்; உருபும் வினையும் எதிர்மறைபில் திரிபாமை; உருபும் வினையும் அடுக்கி முடிதல்; ஒருமொழி ஒழிதன் னினங்கொளற் குரித்தே; எச்சங்களின் முடிபு; தொகைநிலைத் தொடர்மொழி; தொகைநிலைத் தொடர்; வேற்றுமைத் தொகை; வினைத் தொகை; பண்புத் தொகை; தொகைநிலைத் தொடர்கள் பல பொருள் தருதல்; வினைவிடைகள் வழுவாமல் காத்தல்; திணைபால் மரபு வழுவமைதி;

பால்திணை வழுவமைதி; பால் இட வழுவமைதி; காலப் பகுப்பு; கால வழுவமைப்பு; காலவழு அமைதி; சிறப்புப் பெயரும் பொதுப் பெயரும்; பிரிக்க முடியாப் பெயர்கள்; ஒரு பொருட் பன்மொழி; உம்மை பெறும் சொற்கள்; செயப்பாட்டு வினை; இயற்கைப் பொருள் இத் தன்மையது எனல்; விடைமரபு வழுவாமல் காத்தல்; குறிப்பு மொழிகள்; யாற்றுநீர்ப் பொருள்கோள்; நிரனிறைப் பொருள்கோள்; கொண்டுகூட்டுப் பொருள் கோள்; இடைச்சொல்; எண்ணிடைச் சொற்கள் வினையொடு வருதல்; மற்றையது என்னும் இடைச் சொல்; உரிச்சொல்.

30. நன்னூல் உரை வேறுபாடுகள் முடிவுரை: 352—357

நன்னூல் உரை ஆராய்ச்சி முடிவுகள்; உரை ஆய்வில் இனிச் செய்ய வேண்டுவன.

31. நன்னூலைப் பற்றிய புகழ் மொழிகள் 358—362

32. நன்னூல் ஏட்டுச் சுவடிகள்: 363—366

33. சொல்லகராதி 367

முதற் பகுதி

நன்னூல் — ஓர் அறிமுகம்

1

ஆராய்ச்சி மூலங்கள்

தமிழ் ஆராய்ச்சியில் சிக்கலாய் இருப்பது அம்மொழியின் பழைமையே. சிக்கலை அறிந்து அவிழ்ப்பது தானே ஆராய்ச்சி யின் ஆன்மா ? என் ஆராய்ச்சிப் பொருளான நன்னூல் ஏறத் தாழ எழுநூறு ஆண்டுகள் பழைமை உடையது. குறிப்பாக இந் நூலைப் பொறுத்தவரை, இந் நூலுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் யார்? யார்? எழுதப்பட்ட உரைகள் எவை? எவை? அவை அச் சேறினவா? அவை எங்கெங்குக் கிடைக்கும் என்னும் வினுக் களுக்கு விடை காணும் முயற்சியில், ஆருண்டுகளுக்கு முன் ஈடுபட்டபோது, கைக்கு எட்டிய செய்திகள் குறைவே. உரையா சிரியர்கள் பற்றி அண்மையில் வந்த ஒரு நூலும் நன்னூல் உரை யாசிரியர்கள் எண்மரைப் பற்றிச் சுருங்கிய அளவில் கூறி நின்றது. ஆனால் இவ் வாய்வு நூல் ஏறத்தாழ நாற்பத்து நான்கு உரையா சிரியர்களைக் கண்டறிந்து அவர்தம் உரைகள் அனைத்தையும் பற்றி ஆழமாகச் சென்று அறிவிக்கிறது.

இவ் வாய்விற்காக எண்பதிற்கு மேற்பட்ட நன்னூல் மூலப் பதிப்புகளும், உரைப் பதிப்புகளும் ஆராயப்பட்டுள்ளன. நன்னூல் தொடர்பாகவும், அந்நூலின் காலம், அந்நூலில் கூறப் பட்டுள்ள இலக்கணக் கோட்பாடுகள் தொடர்பாகவும், இலக் கணம், இலக்கியம், வரலாற்றுத் தொடர்புடைய இருநூற்றிற்கு மேலான நூல்களைப் பயன்படுத்தியுள்ளேன். இவையன்றி, செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், தென்மொழி, கலைமகள், கொங்கு ஆகிய தமிழ் இதழ்களிலும், 'தமிழ்க் கல்சர்' முதலான ஆங்கில இதழ்களிலும், பல வேறு பருவங்களில், பல வேறு நிறுவ னங்களின் சார்பில் வெளி வந்த மலர்களிலும், பல வேறு கருத் தரங்குகளிலும், தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம் பெற்றிருந்த எழுபதுக்கு மேற்பட்ட கட்டுரைகள் இவ்வாய்விற்குத் துணை செய்

துள்ளன. நூல், கட்டுரை, ஆய்வுரைகளின் ஆசிரியர்கள் ஏறத் தாழ இருநூறு அறிஞர்கள் ஆங்காங்கு மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளார்கள். இவையன்றிப் பல்கலைக் கழக அளவில் ஆராய்ச் சிப் பட்டங்களுக்காகச் செய்யப்பட்ட நன்னூல் தொடர்பான ஆய்வு நூல்களும் கருவி நூல்களாகக் கொள்ளப்பட்டன.

முன்னோடிகள் : இருபதாம் நூற்றாண்டு ஆராய்ச்சி அரங்கில், தொல்காப்பியம் இடம் பெற்ற அளவிற்கு, நன்னூல் இன்னும் இடம் பெறவில்லை. எனினும், நன்னூல் தொடர்பாக, பல்கலைக் கழக அளவில் செய்யப்பட்ட மூன்று ஆராய்ச்சிகள் ஈண்டுச் சுட்டத் தக்கவை. டாக்டர் சி. சுப்பிரமணியம் அவர்களால், 1967இல் சென்னைப் பல்கலைக் கழகப் பி. எச். டி. பட்டத் திற்காகக் கொடுக்கப்பட்ட "A critical study of Tolkappiyam and Nannul with Linguistic Perspective" என்ற ஆய்வும், சி. விசய வேணுகோபால் அவர்களால் 1968இல் அண்ணாமலைப் பல்கலைக் கழக எம். லிட். பட்டத்திற்காகக் கொடுக்கப்பட்ட "A modern Evaluation of Nannul-Eluthuathikaram" என்ற ஆய்வும், செல்வி. பிரமீளா எசு. நதானியல் அவர்களால் 1961இல் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ் எம். ஏ. பட்டத் திற்காகக் கொடுக்கப்பட்ட "Noun Morphology of Nannul with Index" என்ற ஆய்வும் குறிப்பிடத் தக்கவை. இவையும் நன் னூலையும் நன்னூல் உரைகளையும் முற்றும் கொண்டு செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் அல்ல. எனினும் நன்னூலின் சிற்சில கூறுகளை இவை சிறந்த முறையில் ஆராய்ந்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

ஆராய்ச்சி : நன்னூல் எழுத்து, சொல் என்ற இரண்டு அதிகாரங்களையும், பாயிரப் பகுதியையும், அவற்றிற்கு எழுந்த உரைகள் அனைத்தையும் பற்றிய முதல் ஆராய்ச்சி 'நன்னூலும் அதன் உரைகளும்' என்ற தலைப்பையுடைய இவ் வாராய்ச்சி யாகும்.[1] ஏறத்தாழ நன்னூலைப் பற்றிய, நன்னூல் உரைகளைப் பற்றிய எழுநூறு ஆண்டு இலக்கண ஆராய்ச்சி என்பதால் சில செய்திகள் விடப்பட வாய்ப்புண்டு. இயன்ற வரை அவ்வாய்ப்புத் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

ஆய்வு எல்லை : நன்னூலின் உரைகளைப் பற்றிய இவ் வாராய்ச்சியில் நன்னூல் தோன்றிய காலம் தொடங்கிப் பத்தொன்

[1] 'எழுநூறு ஆண்டுகளில் நன்னூல்' என்ற நூலாக இப்போது வெளி வருகிறது.

பதாம் நூற்றாண்டு வரையுள்ள கால எல்லையில், எழுதப்பட்ட உரைகளே விளக்க இயலாய்வு முறையில் ஆராயப்பட்டுள்ளன. முழுமையான பார்வைக்காக, இருபதாம் நூற்றாண்டில் எழுதப் பட்ட உரைகளைப் பற்றிய சுருக்கமான ஆய்வும் இடம் பெற் றுள்ளது.

ஆய்வுக்குப் பயன்பட்ட பதிப்புகள் : இவ் வாராய்ச்சிக்கு ஏறத்தாழ எண்பது நன்னூற் பதிப்புகள் பயன்படுத்தப்பட் டுள்ளன. இவற்றுள் தகுயாய அறுபத்திரண்டு பதிப்பு களைப் பற்றிய விவரம் இந்நூலுள் தரப்பட்டுள்ளது. ஒவ் வோர் உரையாராய்ச்சியிலும் அவ்வப் பதிப்புகளுக்குரிய நூற்பா எண்களும், பக்க எண்களுமே பின்பற்றப்பட்டுள்ளன. உரையாராய்ச்சி தவிர, பிற இடங்களில் குறிக்கப்படும் நன்னூல் நூற்பா எண்கள். டாக்டர் உ. வே. சாமிநாதையர், 1935இல் பதிப்பித்த சங்கர நமச்சிவாயர் உரையைப் பின்பற்றித் தரப்பட் பட்டுள்ளன. நூலின் முதற் பதிப்பை ஆராய்ச்சிக்கு மேற்கொள் வதே தக்கது என்பதால், இயன்றவரை ஒவ்வொன்றின் முதற் பதிப்பே இவ்வாய்வில் மேற்கோளாகக் கொள்ளப்பட்டது.

ஆய்வு அமைந்துள்ள முறை : இந்நூல், (அ) நன்னூல்-ஓர் அறிமுகம், (ஆ) நன்னூல் உரைகள் - விளக்க இயலாய்வு, (இ) நன்னூல் உரை வேறுபாடுகள் என்ற முப்பெரும் பிரிவுகளை யுடையது. இம் முப்பெரும் பிரிவுகள் முப்பது உட்பிரிவுகளாய்ப் பகுக்கப்பட்டுள்ளன.

"நன்னூல் ஓர் அறிமுகம்" என்ற பிரிவு, நன்னூல் எழுந்த தற்கானச் சூழ்நிலை, நன்னூல் ஆசிரியர் வரலாறு, அவர்தம் காலம், அவர் வாழ்ந்த இடம் ஆகியவை பற்றியும், நன்னூல் நூற் பெயர்க்காரணம், நூல் அமைப்பு ஆகியவை பற்றியும் ஆராய் கிறது.

"நன்னூல் உரைகள் — விளக்க இயலாய்வு" என்னும் பிரிவு, பொதுவாக உரை எழுந்த வரலாற்றையும், சிறப்பாக நன்னூல் உரை எழுந்த வரலாற்றையும் விளக்கி, மயிலைநாதர் உரை தொடங்கி, கா. ஸ்ரீ. கோபாலாசாரியார், தி. கோ. ஸ்ரீரங்காசாரியார் ஆகியோர் எழுதிய உரை வரை ஆராய்கிறது. தொடர்ச்சியாக, கிடைக்கப் பெரு நன்னூல் உரைகளையும், அச்சிடப் பெரு நன்னூல் உரையேடுகளையும் சுட்டிக் காட்டுகிறது.

"நன்னூல் உரை வேறுபாடுகள்" என்ற பிரிவு, இவ்வாராய்ச் சியின் நெஞ்சாங்குலையாகும். இப்பிரிவு, நன்னூல் நூற்பாக்

களுக்கு உரை காணுவதில் உரையாசிரியர்கள் வேறுபடும் இடங்களைத் தனித்தனியே முறையாகச் சுட்டிக் காட்டுகிறது. அதனுடன், ஒவ்வொன்றையும் தருக்க இயல், மொழியியல் பின்புலங்களுடன் ஆராய்ந்து முடிவுரைக்கிறது.

முப்பதாம் உட்பிரிவாய் அமைக்கப்பட்டுள்ள முடிப்புரை, இவ்வாராய்ச்சியில் மேற்கொள்ளப்பட்ட அறுபது முடிபுகளைத் தொகுத்து உரைக்கிறது. அதனுடன், நன்னூல் ஆய்வுத் துறையில் இனி மேற் கொள்ளத்தக்க ஆராய்ச்சித் தலைப்புகளையும் தருகிறது.

இவையன்றி இந்நூலுள் நன்னூலைப் பற்றிய புகழ்மொழிகள், நன்னூல் ஏட்டுச் சுவடிகள், நன்னூற் பதிப்புச் செய்திகள், நன்னூல் சொல்லடைவு, நன்னூல் மூலம் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இறுதியில், பொருளடைவு அமைந்துள்ளது.

கள ஆய்வு : ஆராய்ச்சிக்குக் கள ஆய்வு இன்றியமையாதது என்பதால் நன்னூல் ஆசிரியர், உரையாசிரியர் தொடர்பான ஊர்களில் கள ஆய்விணை மேற்கொண்டேன். இவ்வாறு கள ஆய்வு நிகழ்த்தப் பட்ட இடங்கள், கோவை மாவட்டம்: விசயமங்கலம், சென்னை மாவட்டம்: சஞ்சீவிராயன் பேட்டை, தங்கசாலை, சிந்தாதிரிப்பேட்டை, செங்கற்பட்டுமாவட்டம்: பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம், தென்னார்க்காட்டுமாவட்டம்: சிதம்பரம், தஞ்சை மாவட்டம்: திருவாவடுதுறை, பொறையாறு, திருநெல்வேலி மாவட்டம்: விக்கிரமசிங்கபுரம், குமரி மாவட்டம்: சுசீந்திரம் ஆகியன. இவ் ஊர்களில் திரட்டப்பட்ட பயணச் செய்திகள் அனைத்தும் விரிவஞ்சி இவ்வாய்வில் முற்றும் தரப்படவில்லை. எனினும் மிக இன்றியமையாச் செய்திகள் மட்டும், நன்னூல் ஆசிரியர் ஆய்விலும், உரையாசிரியர்கள் வரலாற்றிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

2

நன்னூல் எழுந்த சூழல்

படைப்பாளன், சமுதாய உறுப்பினன். ஆதலால், அவனது படைப்பிலும் சமுதாய எதிரொளியும் படிந்தே இருக்கும். படைப்புகள், சமுதாயத்தின் அனைத்து நிகழ்வுகளையும் படம்பிடித்து வைத்திராவிட்டாலும், அவ்வக் காலத்தின் சுவடுகளைத் தாங்கியே இருக்கும். இதற்கு இலக்கண நூல்களும் விதிவிலக்குகள் அல்ல. இலக்கணத்தில் ஏற்படும் புதிய மாற்றங்கள், சேர்க்கைகள் சமுதாயப் பாதிப்பாலும் நிகழ்ந்திருக்கின்றன. நன்னூலிலும் அந்நூல் எழுந்த காலத்தின் பாதிப்புகள் இடம் பெற்றிருக்கின்றன. இப்பாதிப்புகளுக்கு, அரசியல், சமூக, சமயச் சூழலமைவுகள் காரணங்களாகும். ஆதலின் அவற்றை அறிந்துகொள்ளல் இன்றியமையாதது.

அரசியல் சூழல் : கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் எழுந்த பிற்காலச் சோழ அரசு, கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டு அளவில் முற்றுப் பெற இருந்தது. இராண்டாம் இராசாதிராச சோழனுக்குப் பிறகு மூன்றும் குலோத்துங்க சோழன், கி. பி. 1178ஆம் ஆண்டு முடிசூட்டப் பெற்றான். கி.பி. 1218 வரை, ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் ஆண்டான். பாண்டியரோடும், ஈழவேந்தரோடும் இவன் நிகழ்த்திய போர்களுக்குப் பின்னர், கொங்கு நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றான். அதன் தலை நகரான கருவூரைக் கைப்பற்றி, அங்குச் சோழ கேரளன் என்னும் பெயருடன் விசயமாமுடி சூடினான் என்று இவன் கல்வெட்டுகள் கூறுகின்றன.[1]

நன்னூலைச் செய்வித்த புரவலனான அமராபரண சீயகங்கன் இவன் ஆட்சியில் வாழ்ந்த ஒரு சிற்றரசனே. இவனைப் பற்றிய

1. புதுக்கோட்டை மாநிலக் கல்வெட்டுகள், எண் 166.

கல்வெட்டுகள் குலோத்துங்கனது மூன்றும் ஆட்சியாண்டு முதல் முப்பத்து நான்காம் ஆண்டு முடிய தமிழகத்தில் காணப்படு கின்றன.[1]

மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் அரசியல் மேலோங்கி இருந்தாலும் அவன் காலத்திலேயே சீர் குலைவதற்கான சின்னங் கள் தோன்றி விட்டன. குறுநாடுகளை இழுத்துப் பிடித்து இயக் கும் நடுவரசு, மெல்லக் குலையத் தொடங்கிவிட்டது. இவன் ஆட்சியில் இருந்த பாண்டி நாட்டு மன்னர்களின் நாடுகளில், இவனுட்சிக்கான கல்வெட்டுகள் இப்போது முதலாகவே காணப் படாமை கருதத்தக்கது.[2]

பஞ்சம்: இவனது ஆட்சியின் 12, 13ஆம் ஆண்டுகளில் தொண்டை மண்டலத்தில் பெருமழை பெய்தது. இதனால் ஏரிகள் உடைத்துக் கொண்டன; பயிர்கள் அழிந்தன. பஞ்சம் ஏற் பட்டது.[3] 23, 24ஆம் ஆட்சியாண்டுகளில் மழையின்மையால் பெரும் பஞ்சம் தோன்றியது. இச்செய்தி திருவண்ணாமலை, திருப் பாம்புரம் என்ற ஊர்களிலுள்ள கல்வெட்டுகளால், புலனாகிறது. அப்பஞ்சத்தின் போது வேளாளன் ஒருவன் தன் மகளிர் இருவரு டன் 110 காசுக்குக் கோயில் மடத்திற்குத் தன்னை விற்றுக் கொண்டு அடிமையானான்.[4]

சமூகச் சூழல்: குகையிடி கலகம்: இவனது 22ஆம் ஆட்சி யாண்டில், 'குகையிடி கலகம்' ஒன்று நிகழ்ந்தது. அக்கலகத்தின் போது, சைவத் துறவிமார்களின் மடங்களாய் விளங்கிய குகைகள் இடிக்கப் பட்டன. அவ்வாறு இடிக்கப் பட்டவற்றுள் திருத்தருப் பூண்டியில் இருந்த குகையும் ஒன்று. சோழ மன்னர்களின் குருமார்களாய் விளங்கியவர்களும், கோளகி மடம், பிட்சாவிருத்தி மடம் முதலான, சைவ ஆதீனங்கட்குத் தலைவர்களாய் விளங்கிய வர்களும் ஆகிய வடநாட்டுப் பிராமணர்கள், 'விரதம், சீலம், ஞானம்' ஆகியவற்றில் சிறந்த தென்னாட்டுச் சைவத் துறவி களின் செல்வாக்கையும், மேம்பாட்டையும் ஒடுக்க இக்கலகத்தை உண்டுபண்ணினர் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.[5]

1. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 7, எண் 643; கல்வெட்டு 116, 1922.
2. Sastri. K. A. N., Cholas, 1955, P. 407.
3. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., பிற்காலச் சோழர் வரலாறு-2 1957, ப. 170
4. மே. கா. நூ. ப. 171
5. மே. கா. நூ. ப. 160

பொதுவாக, இவன் காலத்துச் சமூகச் சூழல் நன்முக இருந்தது என்றாலும், மேற்கண்ட ஒரு சில நிகழ்ச்சிகள், சமுதாயத்தின் சில பகுதிகளே எதிரொளி செய்கின்றன. இந்நிகழ்ச்சிகளுக்கும், இவனது ஆட்சித் திறத்திற்கும், இவற்றால் இவன் பின்பற்றிய சமயக் கொள்கைகளுக்கும் நெருக்கமான தொடர்புண்டு.

சமயங்களின் சூழல்: இவன் சிறந்த சிவநேயச் செல்வன். ஆதலால், இவன் காலத்தில் சைவ சமயத்திற்கு அளப்பரும் பணிகள் செய்யப்பட்டன. திரிபுவனம் என்ற சோணாட்டில், திரிபுவன வீரேச்சுரம் என்று இவன் எடுத்த சிவன் கோயிலே இதற்குச் சான்று. சைவனாயினும் சைவ சமயம் அல்லாத பிற சமயங்களையும் புறக்கணிக்கவில்லை. வேலூரில் உள்ள திருமால் கோயிலுக்குத் தன் பெயரால் விளங்க வைத்தான். வைதிகச் சமயங்களின் எதிர்ச் சமயமான சமணத்தை இவன் ஒடுக்கவில்லை. சோழ மன்னர்கள் ஏனைய சமயத்தாரிடம் காட்டிய பொதுவான சமயப் பொறையை இவன் காட்டினான். எனினும், இக்கால கட்டத்தில் இவன், சமணரிடம் காட்டிய பரிவு, தனிப்பார்வைக் குரியது. இவன் சைவப் பள்ளிகளுக்குப் பள்ளிச் சந்தம், இறையிலியாக நிலம் அளித்த செய்தி கல்வெட்டுகளில் காணப் படுகிறது.[1] சமண சமயத்தையும், சமணரையும் கருதின அளவில், கண்ட அளவில் வெறுக்கும் 'பல்லவர் காலப் போக்கு', சோழர் காலத்தில் செத்துப்போய்விட்டது. சோழ மன்னர்களின், சமயப் பொறையும், விரிந்த மனப்பான்மையுமே இதற்குக் காரணங்கள். வேறுவேறு சமயங்களும், மக்கள் இனமும் உடைய பல்வேறு நாடுகளை வென்றும், அவற்றோடும், பிறவற்றோடும் அரசியல் வணிக உறவு கொண்டும் ஆட்சி செய்தவர்கள் ஆதலின் பிற சமயங்களையும் மக்கள் இனங்களையும் மதிக்கும் மனப்பாங்கும், பரிவுகாட்டும் பான்மையும் சோழர்களுக்கு இருந்தன. பல்லவர் காலச் சமய நிலையை ஒப்பிட்டு நோக்கும் போதுதான், சோழர் காலச் சமயக் கொள்கையின் ஒருமைப்பாடும், பெருமைப்பாடும் துலங்கும். அயல் சமயங்களை அணைத்து நடத்தும் இப்போக்கே, சோழர் காலத்தில் பலவேறு சமயத்தாரும் நூல் எழுதுதற்குக் காரணமாயிற்று. பௌத்தரால் வீரசோழியமும், சமணரால் நேமிநாதமும், வச்சணந்தி மாலையும், சைவரால் பெரிய புராணமும், வைணவரால் இராமாயணமும் ஒரே பருவத்தில் எழுதப்பட்டமை உன்னத்தக்கது. சமணத்தைச் சார்ந்த பவணந்தியால், சிறந்த தமிழிலக்கணம் எழுத இயன்றதற்கு இச்சமயப் பொதுமை, முதன்மைக் காரணம் ஆகும்.

1. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., பிற்காலச் சோழர் வரலாறு-2 1957 ப. 167

இலக்கிய, இலக்கணச் சூழல்: நேமிநாதம், வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப்பாட்டியல் ஆகிய இலக்கண நூல்களை இயற்றியவரும், களந்தை வச்சணந்தி முனிவரின் மாணவரும் ஆகிய குணவீர பண்டிதர் இவ்வரசன் காலத்தில் வாழ்ந்தவர்.[1] வீராந்த பல்லவரையர் என்பார், இவனது அவைக்களப் புலவர். இப்புலவரது வேண்டுகோளுக்கிணங்க, குலோத்துங்கன் பாரசவன் பொன்னன் என்பவனுக்குத் திருக்கடவூர்க் கோயிலில் 'நட்டுவ நிலை' என்னும் பட்டம் அளித்தான் என்று அக்கோயில் கல்வெட்டுக் கூறுகின்றது.[2] மாபாரதம் சமற்கிருதத்தினின்று இவன் காலத்திலேயே தமிழ்ப் படுத்தப்பட்டது.[3] திருத்தொண்டர் புராணம் எனப்பெறும் சைவப் பேரிலக்கியமான பெரிய புராணம் இவன் காலத்துத்தான் அரங்கேற்றப்பட்டது.[4]

சமற்கிருதச் செல்வாக்கு: பிற்காலச் சோழர் காலத்தில், சமற்கிருதம் மிகவாக வளர்க்கப்பட்டது. சோழ வேந்தர்கள் அம்மொழியை வளர்ப்பதில் தனி அக்கறை காட்டினர்கள்.[5] இதனால், சமற்கிருதத்திற்கும், சமற்கிருதவாணர்கட்கும் மிகுந்த செல்வாக்கு இருந்திருத்தல் வேண்டும். அதனால்தான் சமற்கிருதத்தினின்று மாபாரதம் தமிழ்ப்படுத்திய நிகழ்ச்சி, பெரிதாகப் போற்றப்படுகிறது. இக்காலத்தில் எழுந்த, யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம், தண்டியலங்காரம் ஆகிய இலக்கண நூல்கள் சமற்கிருதப் பாதிப்புடையனவாய் இருத்தல் கண்கூடு. இந்தப் பாதிப்பு, நன்னூலிலும் காணப்படுகிறது. எனினும், இலக்கிய ஏட்டளவில், சமற்கிருதச் சொற்களின் ஆளுகை நேராமல் காக்கவேண்டும் அல்லது குறைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. நன்னூலிலுள்ள, வடமொழி ஒலிகளைத் தமிழ்ப்படுத்த வழிகாட்டும் பதவியல் நூற்பாக்கள் மேற்கண்ட போக்கையே அறிவிக்கின்றன. வைதிக சமயத்திற்கு எதிரான சமண சமயச் சார்பே, தமிழ்ப் படுத்தும் இக் கோட்பாட்டிற்குக் காரணமாதல் கூடும்.

பேரரசும் சிற்றரசுகளும்: சோழப் பேரரசின் நடுவரசு, இக்கால அளவில், கட்டுக் குலையத் தொடங்கிவிட்டமை ஒரு வழியில் நல்லதாயிற்று. ஆங்காங்கு இருந்த குறுநில மன்னர்கள், பழைய காலத்தைப் போல, பேரரசின் பிடியில் கட்டுண்டு கிடவாமல் இருக்க முடிந்தது. ஒரு சிலர் பெருநில வேந்தனுக்கு எதிராய்

1, 2, 3, 4, சதாசிவ பண்டாரத்தார், தி.வை., பிற்காலச் சோழர் வரலாறு-2 1957, ப. 167.

5. Sastri, K. A. N. Cholas, P. 639

இருந்த நிலையில், எதிராய் இல்லாமல், இணக்கமாய் இருந்த குறுநில மன்னர்கள், சோழப் பேரரசனின் தனியன்பையும், அரவணைப்பையும் பெற முடிந்தது. இவ்வாறு பெற்ற வேந்தர் களுள் சீயகங்கனும் ஒருவனுய், முதல்வனுய்க் கூட இருந்திருத்தல் கூடும். இதனுல், சீயகங்கன், சோழ அரசனுக்கு உட்பட்டவன் என்றலும் உரிமையோடு இருக்க முடிந்தது. கல்வெட்டுகள் பரவலாக இவனது படைத்திறத்தையும், கொடைத் திறத்தையும் காட்டுவதும், அவற்றுட் சில, மூன்றும் குலோத்துங்கன் ஆட்சி ஏல்லைக்குட்பட்ட கோயில்களில் பொறிக்கப்பட்டிருப்பதும், [1] நன்னூற் பாயிரம்,

"... ... ...துன்னூர்
இகலற நூறி இருநில முழுவதும்
தனதெனக் கோலித் தன்மத வாரணம்
திசைதொறும் நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கை
திருந்திய செங்கோல் சீய கங்கன்" [2]

எனப் பொருள் சேர்ந்த புகழ் வாய்ந்த மொழிகளில் இவனைப் போற்றுவதும் இவனுக்குச் சோழ அரசில் இருந்த பெருமையைக் காட்டுகின்றன. பேரரசன் பாண்டியன் மாகீர்த்தி[3] அவைக் களத்தில் அறிஞர் முன்னிலையில் தொல்காப்பியம் அரங்கேற்றப் பட்டது போல, நன்னூல், சோழ நாட்டுச் சிற்றரசன் அவைக் களத்தில் அரங்கேறியது. பெருவேந்தன் சோழன் இருந்தும், சிற்றரசன் சீயகங்கன், இவ்வரிய வாய்ப்பைப் பெற்றது, சோழர் காலத்தில் சிற்றரசர்க்கு இருந்த செல்வாக்கைக் காட்டுகிறது; சீயகங்கனுக்கு இருந்த தனிப்பெருமையைக் காட்டுகிறது.

சோழர் காலத்தில் எழுந்த இலக்கணங்கள் எட்டனுள் ஏழு புறச்சமயத்தாரால் செய்யப்பட்டன. சமண, பௌத்த சமய அறிஞர்கள் இவ்விலக்கணங்களை எழுதியவர்கள். யாப்பருங்கலம் யாப்பருங்கலக் காரிகை, நேமிநாதம், வெண்பாப்பாட்டியல், நன்னூல், அகப்பொருள் விளக்கம் ஆகிய இவ்வாறும், சமண சமயத்தாரால் இயற்றப்பட்டன. வீரசோழியம், பொன்பற்றிப் புத்தமித்திரர் என்னும் பௌத்தரால் எழுதப்பட்டது. தண்டியலங் காரம் என்ற அணி நூல் மட்டுமே சைவரால் ஆக்கப்பட்டது.

---

1. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 13ஆம் நூற்றாண்டு, 1970, ப. 172.
2. நன்னூற் சிறப்புப் பாயிரம், வரி 11—16
3. தொல். எழுத்து, நச். உரை, பாயிரப்பகுதி.

இலக்கணம் ஆக்குவதில் புறச் சமயத்தாரின் தனியக்கறை ஆராய்ச்சிக்குரியது. பெரும்பாலும், தொடக்க காலத்தில், புறச் சமயத்தார் பிற நாட்டவராய் இருந்தனர். தமிழகம் வந்த போது, உள்நாட்டு மொழியைப் பயில விரும்பினர். உள்நாட்டு மொழியைப் பயிலாவிடில், பொது மக்களோடு உறவு கொள்ளவும், உறவைப் பெருக்கவும் இயலாது. இக்காரணங்களால், மொழிப் பயிற்சியும், இலக்கணப் பயிற்சியும் மிக வேண்டியனவாய் இருந்தன. பதினெட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ்ப்புலம் வந்த ஐரோப்பியரும், ஐரோப்பியப் பாதிரிமாரும் இலக்கணப் படைப்பில் மிக்க ஆர்வம் காட்டினதற்கும் இவையே காரணம். சோழர் காலத்திற்கும் இக்காரணம் முற்றும் பொருந்தும். இதனால் இலக்கணம் செய்தார் அனைவரும் அயலார் என்பது கருத்தன்று. அயலார் இலக்கணப் படைப்பிலும், பயிற்சியிலும் மிக்க அக்கறை காட்டுவர்; காட்டினர் என்பதே கருத்து. அன்றியும், பிறப்பில் தமிழராய் வளர்ப்பிற் புறச்சமயத்தைத் தழுவிக் கொண்டோர், தம் சமயத்தார் வேற்று நாடுகளிலிருந்து வந்து பயில்வதற்கு எளிமையாக இலக்கணங்களைப் படைத்திருத்தல் கூடும். நன்னூல் தோன்றுவதற்கான அடிப்படைகளுள் இதுவும் ஒன்றுதல் கூடும். சீயகங்கன், கங்க மன்னன்; சமணன். அங்கு வந்து தங்கும், பலநாட்டுச் சமணர், தமிழ் பரவிய நாடுகளில் சமயத்தைப் பரப்புவதற்கு வாய்ப்பாக, பயில்வதற்கு எளிமையாக, பவணந்தியை இலக்கணம் படைக்குமாறு பணித்திருத்தல் கூடும். 'அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணர' இலக்கணம் படைக்குமாறு, பவணந்தியைச் சீயகங்கன் வேண்டினதாகப் பாயிரம் உரைப்பது இக்கருத்தில்தான் போலும்.

தொல்காப்பியக் கல்வி : எழுத்து, சொல், பொருள் இலக்கணம் பற்றி, முற்ற விளக்கும் முதனூல், தலைநூல் — தொல் காப்பியம். நன்னூல் தோன்றுதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே அந்நூல் தோன்றிவிட்டது. அது தோன்றி மிகுந்த காலமாகி விட்டபடியால் நூலை முழுவதும் புரிந்து கொள்வதில் துன்பமிருந்தது. மிகுந்த காலமும் எடுத்தது. தொல்காப்பியத்தை விளங்கிக் கொள்ளவும், விளக்கிக் காட்டவும் இக்காலத்தில் உரைகள் தோன்றத் தொடங்கின. உரை காண்பதில், பல கருத்து வேறுபாடுகள் நேர்ந்தன. இவற்றைத் தவிர்க்கப் புது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நூல்களை விளக்கிப் புதிய உரைகள் எழுந்தன. இளம்பூரணம் இவ் வடிப்படையிலேயே எழுந்தது. இளம்பூரணரின் உரையைப் பின்பற்றி மேலும் பல உரைகள் தொடர்ந்து தோன்றின. பலரால் உரை வகுக்கப்படும்

போது கருத்து வேறுபாடுகள் நேர்ந்தன. அவை மூலத்தைப் புரிந்து கொள்ளுவதை மேலும் சிக்கலாக்கின. தொல்காப்பியத்தை நன்கு பயில, ஒரு முன்னுரையாக இலக்கண நூலே புதிதாக எழுதப்பட்டது. நேமிநாதம் இந்த அடிப்படையில்தான் தோன்றியது. 'தொல்காப்பியப் பெருங்கடலைக் கடக்க உதவும் தோணி' என்று சிறப்புப் பாயிரத்தில், நேமிநாதம் வருணிக்கப் பட்டமை இக்கருத்தை வற்புறுத்துகிறது. இவையெல்லாம் தொல் காப்பியத்தை விளக்கிக் கொள்ள மேற் கொள்ளப்பட்ட பன்முக முயற்சிகள். எனினும், தொல்காப்பியர்க்குப் பின் எழுந்த இலக்கிய வழக்காறுகள், இலக்கண வழக்காறுகள், வேற்று மொழி ஆதிக்கத்தால் ஏற்பட்ட மாற்றங்கள் முதலாயவற்றை முழுமையாக எடுத்துரைக்க வேண்டியிருந்தது.

இத்தகு காலத்தின் தேவையை நிரப்ப வீரசோழியம் முன்பே முயன்றது. என்றாலும், அந்நூல் பழந்தமிழ் மரபைப் பெரிதும் புறக்கணித்தது. சமற்கிருதச் செல்வாக்கிற்கு மிக ஆட்பட்டிருந் தது. இதனால் மக்கள் போற்றுதலை அந்நூல் இழந்துவிட்டிருந்தது. பழந்தமிழ் மரபுகளை முற்றப் புறக்கணியாமல், வேண்டிய அளவு கொள்ளவும், தள்ளவும், பின்வந்த வழக்காறுகளை ஏற்கவும் நீக்கவும் வேண்டிய சூழலில் நன்னூல் தோன்றியது. இவ்வடிப் படையில்தான், நன்னூல் எழுந்தது என்பதை, 'தொகை வகை விரியின் தருக' எனச் சீயகங்கன் வேண்டினதாக உள்ள பாயிரக் குறிப்பும் உறுதி செய்கிறது. இவ் வுய்த்துணரல் உண்மையானது என்பதனைக் கொங்கு மண்டல சதகம் தெளிவுபடுத்துகிறது.

> **சொல்காப்பியத்தின் குணதோடந் தேர்ந்து சொலுவதற்குத்**
> **தொல்காப்பியங் கற்க நீண்டது; அதனைச் சுருக்கியிசை**
> **ஒல்காப் பெரும் பவணந்தி**

என்பன கொங்குமண்டல சதகப் பாவடிகள்.[1] 'அமராபரண னென்ற சிறப்புப்பெயர் வாய்ந்த சீயகங்கன் என்னும் அரசன் தமிழிலக்கியங்களின் ஆராய்ச்சிக்கு இன்றியமையாததும், பரந்து கிடப்பதுமான தொல்காப்பியத்தைக் கற்று விதிவிலக்குகளை அறிந்து கொள்வது சில் நாள்வாழ் பல்பிணிச் சிற்றறிவினராகிய மனிதர்க்கு அரிதென்பதை' அறிந்து பவணந்தியை நன்னூல் எழுத வேண்டினன் என்று, உ. வே. சா. தரும் குறிப்பும் ஈண்டுக் கருதத் தக்கது.[2] யாதுமக்கள் அனைவருமே புரிந்து கொள்ளத்தக்க வகையில் அந்நூல் அமைதல் வேண்டும் என்று சீயகங்கன் விரும்பி

1, 2. சாமிநாதையர், உ. வே., நன்னூல், மயிலைநாதர் உரை, முன்னுரை 1918, ப. 10.

னுன். இதனை 'யாவரும் உணர' இலக்கணம் செய்யுமாறு வேண்டினுன் என்ற பாயிரக் குறிப்பினின்று அறிந்து கொள்ள லாம்.

ஐந்திலக்கணத் தேவை : தொல்காப்பியத்துள் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றே விரித்துக் கூறப்பட்டன. யாப்பு, அணி என்பன பொருளதிகாரத்தில் பேசப்பட்டிருக்கின்றன. எனினும், காலப் போக்கில் யாப்பதிகாரம், அணியதிகாரம் என்று தனியே பேசுகிற அளவுக்கு அவை விரிந்து விட்டன. அவ்விரி விற்குக் காரணங்கள் இரண்டு :

1. தொல்காப்பியத்திற்குப் பின் பல நூறு ஆண்டுகள் வளர்ந்த இலக்கியங்கள், அவ்விலக்கியப் பாக்களில் ஆளப் பட்டுள்ள பலவேறு பாவடிவங்கள், அணிவகைகள் ஆகியன தொல்காப்பியச் செய்யுளியல் கட்டுக்கோப்பினின்று விலகி, விரிந்தவை. இலக்கண ஆசிரியரின் ஒப்புதல் (Recognition) இல்லாமல் அவை கிடந்தன. 2. தொல்காப்பியத்திற்குப் பின் அயல்மொழிகளின் ஆதிக்கம் பல்கி விட்டது. சமற்கிருதம், பாலி முதலான வட புல மொழிகளும், பக்கத்து நாடுகளில் வழங்கிய திராவிட மொழிகளும், அரசியல், வாணிக, சமய உறவு களால், தமிழில் கலக்கத் தொடங்கிப் பெருகின. சமற்கிருதத்தின் ஆளுகை, தொல்காப்பியர் காலத்தைக் காட்டிலும் பல மடங்கு பெருகியிருந்தது. இதனுல், அம்மொழியினின்று அலங்கார சாத்திரங்கள் தமிழில் வந்து கலக்கத் தொடங்கின. இச்சூழலில், தனிப்பேரிடம் பெற வேண்டிய யாப்பையும், அணியையும் பொருளதிகாரத்திற்குள் அடக்க முடியவில்லை. இரண்டும் தனி யாகக் கிளைத்து, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்தாகப் பல்கி விட்டன, ஐந்திலக்கணம் (இலக்கணப் பஞ்சகம்)[1] என்ற தனிக் கோட்பாடே உருவாகி விட்டது. சோழர் காலத்தின் தனிப்பெரும் நன்கொடை இவ்வைந்திலக்கணக் கோட்பாடாகும். இவர்கள் காலத்தில்தான் யாப்பைத் தனியாக விளக்கும் யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும், வெண்பாப் பாட்டியலும் உருவாயின. அணியைத் தனியே துலக்கும் தண்டியலங்காரம் தோன்றியது. அகப்பொருளைத் தனியே விளக்க நம்பியகப்பொருள் எழுதப்பட்டது. பொருள் யாப்பு அணி பற்றிய புது நூல்கள் தனித்தனியே இயற்றப்பட்டன. அதுபோல எழுத்து, சொல் பற்றிய தனி நூலாய் நன்னூல் இக் காலத்தில் எழுந்தது.

1. அருணுசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 13 ஆம் நூற்றாண்டு, ப. 154.

3

நன்னூல் ஆசிரியர்

சோழர் காலத்தில் எழுந்த ஐந்திலக்கண நூல்களே மற்றைய காலத்தில் எழுந்த இலக்கணங்களைக் காட்டிலும் பெருவாழ்வு பெற்றன. எழுத்து, சொல்லிலக்கண நூல்களுள் நன்னூலும், பொருள் இலக்கண நூல்களுள் நம்பியகப் பொருளும், யாப்பிலக்கண நூல்களுள், யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் அணியிலக்கணங்களுள் தண்டியலங்காரமும் அறிஞர் பெருமக்களால் பெரிதும் போற்றப்பட்டுப் பயிலப் பட்டன. இவ்வாறு பயிலப்பட்ட இலக்கணங்களுள் ஒன்றாகிய நன்னூலின் ஆசிரியர் பவணந்தி ஆவார். இச்செய்தி கீழ்வருவனவற்றுள் உறுதியாகிறது:

'மலர்தலை உலகின்' எனத் தொடங்கும் நன்னூற் சிறப்புப் பாயிரத்தில்,

பன்னருஞ் சிறப்பில் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே[1]

என்று குறிக்கப்படுதல்; நன்னூல் விருத்தியுரையாசிரியர் சங்கர நமச்சிவாயர், ''பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான்'' என்று 136-ஆம் நூற்பா உரையில் புகழ்ந்து குறித்தல்; கொங்கு மண்டல சதகத்துள், 'கங்கக் குரிசில் உவக்க நன்னூலைக் கனிந்து புகல் துங்கப் புலமைப் பவணந்தி' என்று வருதல்;[2] தொண்டை மண்டலச் சதகச் செய்யுளில், 'நன்னூல் உரைத்த பவணந்தி' எனக் கூறப்படுதல்[3] ஆகியன காட்டும்.

---

1. நன்னூற் சிறப்புப் பாயிரம், அடி 21—22.
2. கொங்கு மண்டல சதகம், பதிப்பு, பக். 8, 9.

பவணந்தியார், நன்னூலை இயற்றியமையால், 'நன்னூலார்' என்ற பெயரும் இவருக்கு வழங்கிற்று. இவ்வழக்காறு வழி வழியாய்ப் போற்றப்பட்டது.

இலக்கணக் கொத்து நூலாசிரியர் சுவாமிநாத தேசிகர் எட்டாம் சூத்திர உரையில், 'நன்னூலார்' என்றே பவணந்தியைச் சுட்டல்; 'நன்னூலார்' என்றே பிரயோக விவேக நூல் உரையாசிரியர் 12, 42-ஆம் கலித்துறை உரையில் கூறுதல் ஆகியன சான்றுதல் காண்க.

நன்னூலாசிரியர் சமணத் துறவியார்: பவணந்தி துறவி என்பது, 'இருந்தவத்தோன்' என வரும் பாயிரத் தொடராலும்,[1] தொண்டை மண்டல சதகத்திலும், கொங்கு மண்டல சதகத்திலும், 'பவணந்தி முனி' என்று குறிக்கப்படுதலினாலும் உணரப்படும். அவர் சமணர். இக்கருத்திற்கு இணக்கமாக நூலகத்தேயும், புறத்தேயும் சான்றுகள் பல உள்ளன. எழுத்ததிகாரக் கடவுள் வாழ்த்தும், சொல்லதிகாரக் கடவுள் வாழ்த்தும்[2] அருகதேவனை நோக்கி, அவரால் இயற்றப் பட்டவை. மொழிக்கு முதற்காரணம் நாதம் என்ற வைதிகர் கொள்கையைக் கூறுமல் அணுத்திரளே மொழிமுதற் காரணம் என்ற சமணக் கருத்தைக் காட்டுகிறார்.[3] உயிர்களை ஓரறிவுயிர் முதலாக ஐந்தறிவு உயிரீறாக அவர் அமைத்திருக்கும் முறைமை, சமண முறையைப் பின்பற்றியது. சைன நூலான மேருமந்தர புராணம்-வச்சராயுதனணுத்தரம் எனும் பகுதியில் உள்ள, 10,11-ஆம் பாடல்களில் இப் பகுப்புமுறை அப்படியே உள்ளது. இருவினைகளின் பந்தத்தினின்று விடுபட உயிர்கள் நரககதி, விலங்கு கதி, மக்கள் கதி, தேவ கதி என்னும் நான்கு கதிகளில் பிறந்து இறந்து பேரின்பம் பெற வேண்டும். இவற்றை மனத்துட்கொண்டே, நன். 'மக்கள் தேவர் நரகர்' உயர்திணை எனப்பகுக்கிறார்.

பழங்காலத்தில் சமண சமயத்துறவிகள் 'நந்தி' என்றே வழங்கப்பட்டனர். நேமிநாத நூலாசிரியரான குணவீர பண்டிதர், சமணர். அவர்தம் ஆசிரியரும் சமணர். அவர் பெயர் வச்சணந்தி அடிகள் என்பதாகும். திருஞானசம்பந்தர், 'மானின் நேர்விழி மாதராய்' என்ற பதிகத்தின் ஆரும் பாட்டில், 'கனக நந்தியும் புட்ப நந்தியும் பவண நந்தியும் குமணமா கனக நந்தியும் குணக

1. நன்னூற் சிறப்புப் பாயிரம், அடி 22
2. நன்னூல் 56, 288
3. நன்னூல் அம்பொதுப் சூத்திரம் 58

நந்தியும் திவண நந்தியும் மொழிகொளா–அனக நந்தியர்...சினகர்' எனச் சமணரைக் குறித்தல் காண்க. [1]

பவ–என்பது தோன்றுதல், அழிதல், உண்டாதல், வருதல் (எதிர் காலம்), அறிதல், அறியாதிருத்தல் என்று ஆறு நிலைகளையும் உடையாரைக் குறிப்பது. வட மொழியிலுள்ள வேணிசம்காரம் உரையால் இங்கு விளங்குகிறது. பவணந்தியும் இச் சிறப்புப் பற்றியே வழங்கப்பட்டார் போலும்.

பகவான் விருடபதேவர், சமணர் தீர்த்தங்கரர்களுள் முதலாமவர். அவரே அறநெறிகளின் சின்னமாக நந்தியைத் தோற்றுவித்தார். அறம் எனில் நந்தி, நந்தி எனில் அறம். விருடப தேவர் கைலாசகிரியில் வீடு பேறடைந்தார். வீடு அடைந்தவரின் திருவுருவைச் சமைத்து, அப்பெருமகன் திருவடிப் பீடத்தில் நந்திச் சின்னத்தையும் அமைத்து, பகவானையும் அறத்தையும் ஒருங்கே போற்றினர். வச்சரநந்தி, கனகநந்தி, பவணந்தி, தருமநந்தி, அச்சணந்தி, வீரநந்தி எனும் பெயர்கள் இவ்வடிப் படையிலேயே அறவோர் என்ற பொருளில் அமைந்தனவாம். சைன மடங்களுக்கு நந்தி மடம் என்றே பெயர். நந்தி மங்கலம், நந்தி புரம், நந்தி மலை, நந்தீசுவரம் என்ற ஊர்ப் பெயர்களும் இவ்வடிப் படையில் உண்டானவையே. குமரி மாவட்டம் திருநந்திக்கரை சமணர்களின் இருப்பிடமாகும். அங்குள்ள குகைக் கல் வெட்டு 'திருநந்திக்கரை படாரர் குடுத்த பூமி' எனக் குறிப்பிடுகிறது. அங்குள்ள குகைக் கோயிலை அடுத்துச் சிவன் கோயில் அமைந்துள்ள இடம், சமணர்களால் இந்து மதத்தாருக்கு விட்டுக் கொடுக்கப்பட்டது.

வள்ளிமலைக் குகைக்கல் வெட்டுகள் : குடியாத்தம் வட்டம் மேல்பாடிக்கு மேற்கே ஒரு மைல் தொலைவில் வள்ளிமலை எனும் பாறை உள்ளது. இங்கு இரு குகைகள் காணப்படுகின்றன. இவற்றின் பல பகுதிகளில் சைன உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதனை உருவாக்கியது, கங்கை வமிச மன்னனாகிய இராச மல்லவானும். இங்குள்ள கல் வெட்டொன்று பவணந்தியின் சீடராகிய தேவசேனை என்பாரின் பெயரினைக் கொண்டுள்ளது.

1. தேவாரம், 8216

சமண முனிவர்கள் கூட்டமாகச் சேர்ந்திருந்து தொண்டு செய்தனர். இக் கூட்டத்திற்குச் 'சங்கம்' என்றே பெயர். சங்கம் மிகப் பெரிதாக வளர்ந்த போது, அது நால் பிரிவாகப் பிரிக்கப்பட்டது. அப்பிரிவுகளாவன: நந்தி கணம், சேனகணம், சிம்மகணம், தேவகணம். ஒவ்வொரு கணத்திலும் கச்சை, அன்வயம் என்னும் துணைப் பிரிவுகள் இருந்தன. கனக நந்தி முதலானவர்களைத் திருஞான சம்பந்தர் குறிப்பிடுகிறார். நமர் நந்தியைச் சுந்தரர் குறிப்பிடுகிறார். தருமசேனன் என்ற அப்பர் பெயர், அவரது சேனகண உறவைப் புலப்படுத்துகிறது. தமிழகக் கல் வெட்டுகள், புட்ப நந்தி, ஸ்ரீநந்தி, கனகநந்தி, பெருநந்தி, குணநந்தி, அஜ்ஜநந்தி என்ற பெயர்களைக் காட்டுகின்றன. நன்னூல் ஆசிரியர் பவணந்தி, நந்தி கணத்தைச் சேர்ந்தவரே.

இதனால் நந்தி என்ற பெயர், சமண சமயத் துறவிகளுக்கே இட்டு வழங்கப் படுதல் புலனாகிறது. மேற் சுட்டிய சான்றுகளால், பவணந்தி துறவி என்பதுவும், சமணத் துறவி என்பதுவும் உறுதியாகின்றன.

சுப்பிரமணிய தீட்சிதர் தம் பிரயோக விவேக உரையில், 'செயப்படு பொருளை ஆக்கல் அழித்தல் முதலாகச் சினேந்திரன் மதம் பற்றி நன்னூலார் பலவாகக் கூறுவர்' என்றும், 'நன்னூலார் வாமனன் சினேந்திரன் செய்த சத்த நூல் பற்றிக் கூறுவர்' என்றும் குறிப்பிடுதலையும்[1] இங்கே இணைத்துப் பார்க்க.

பவணந்தி–பெயர் விளக்கம்: பவணந்தி என்ற பெயர் பவண + நந்தி என்பதன் மரூஉ. பவணம்–நாகலோகம்; பவணன்–பவணேந்திரன்–இந்திரருள் ஒருவன். சமணர் முன்னோர் இப் பெயரை இட்டு வழங்கினர் போலும். [தேவ + இந்திரன் — தேவேந்திரன் என வருதலையும், இப் பெயரைச் சைனர்கள் இட்டு வழங்குவதையும் இங்கே நினைவு கூர்க.] இப் பெயரைத் தம் குறிப்பில் விளக்கும்போது, மல்லீன், பவ–உளதாகு (Existence) என்றும், நந்த–மகிழ்ச்சி (Joy) என்றும் பொருள் விளக்கந் தருகிறார். இதனால் பவணந்தி என்ற பெயருக்கு 'உளதாகு மகிழ்ச்சி' என்பது பொருளாகிறது.[2] பவண் அல்லது பவழ் + நந்தி > பவணந்தி என்றுயிற்று எனவும் விளக்கலாம்.

---

1. பிரயோக விவேகம் 12, 49ஆம் கணித்துறை உரை
2. மல்லீன் குறிப்புகள், ப. 670

பவணந்தியின் அறிவுத் தந்தையார்: பாயிரத்தில், பவணந்தியோடு தொடர்புடைய பெயராக 'சன்மதி' எனும் பெயர் குறிக்கப் படுகிறது.

"பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி"[1]

என வரும் இத்தொடரைக் கொண்டு பவணந்தி முனிவரின் தந்தையார் சன்மதி முனி என்று 'தமிழ் புளூடார்க்' ஆசிரியர் குறிப்பிடுகிறார்.[2] இக் கருத்துச் சரியன்று. ஆசிரியரை 'ஞானபிதா' என்றும், மாணவனை 'ஞானபுத்திரன்' என்றும் வழங்குதல் சைன மரபு. இம்மரபு பற்றியே 'சன்மதிமுனி அருள் பவணந்தி' எனப் பாயிரம் குறித்ததாதல் வேண்டும். சன்மதி ஒரு துறவி என்பதுவும், 'சன்மதி முனி' எனவரும் தொடரால் புலனாகும் உண்மையாகும்.

நன்னூலாரின் காலம்: வள்ளிமலை என்னும் மலை யொன்று திருவல்லத்திற்கு வடக்கே உள்ளது. இம் மலைக்குகை ஒன்றில் பல சைன உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றின் கீழ் வரையப்பட்டுள்ள கல்வெட்டில் பவணந்தி பட்டாரர் என்னும் பெயர் காணப்படுகிறது.[3] இப்பெயர் நன்னூலாசிரியர் பெயர்தான் என்பதையோ கல்வெட்டின் காலத்தையோ தெளிவாய் வரையறுக்க இயலவில்லை. பவணந்தியாரைப் புரந்த சீயகங்கன், கங்கர் குல வேந்தன். இவன் வேண்டுகோளுக்கிணங்கவே பவணந்தியார் நன்னூல் இயற்றினர் என்பது பாயிரத்தால் தெளிவாகிறது. இவ்வேந்தனது காலத்தைக் கணிக்கக் கல் வெட்டுத் தடயங்கள் கிடைத்துள்ளன. மூன்றும் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 1178-1218) இருந்த சிற்றரசர்களுள் சீயகங்கன் என்பானும் ஒருவன். இவனது ஆட்சியின் கீழ் கங்கநாடும், கொங்குநாடும் இருந்தன. இவற்றுள் கங்கநாடு சமணக் குரவர்களுள் ஒருவரான சிம்மநந்தி என்பவரால் நிறுவப்பட்டது. அதிலிருந்து இம்மரபில் வந்த தலைவர்கள் சமண மதத்தராய்த் திகழ்ந்தார்கள். சீயகங்கனும் சமணனாகவே இருந்தான். எனினும் வேற்றுச் சமயங்களைப் புறக்கணிக்கவில்லை. காஞ்சீபுரம் ஏகாம்பரநாதசுவாமி கோயிலில் ஒரு நந்தா விளக்கு வைக்க, சீயகங்கன் நிவந்தம் வழங்கியிருக்கிறான். இச்செய்தியை அக்கோயிலில் கல்வெட்டில் பொறித்தும் வைத்தான். அக்

1. நன்னூல் சிறப்புப் பாயிரம், அடி 20-21
2. சைமன் காசிசெட்டி, 'தமிழ் புளூடார்க்', 1859, ப. 79
3. எபிகிராபிகா இண்டிகா, தொகுதி 4, ப. 122

கல்வெட்டில், 'ஸ்ரீமற் குவளாளபுர பரமேச்வரன் கங்க குலோற்பவஞ் சீய்ய கங்க அமராபரணன்' என்றவன் குறிக்கப்படுகிறான். இக் கல்வெட்டில் வரும் 'அமராபரணன்' என்ற தொடரும், நன்னூற் சிறப்புப் பாயிரத்தில் வரும் 'அமராபரணன் சீயகங்கன்' என்ற தொடரும் ஒத்துள்ளமை காண்க. இக் கல்வெட்டின் காலம் கி.பி. 1.0. ஆகும்.[1] இதே காலத்தைச் சேர்ந்த வேறு கல்வெட் டொன்று 'அமராபரண சீயகங்கன் நம்பிராட்டியான அரியபிள்ளை திருவல்லமுடைய நாயகனுக்கு வைத்த சந்தி விளக்கு' என்று குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டால், அமராபரணன் என்று சிறப்பிக்கப்பட்டவன் இவனே என்பதும், இவன் மனைவி பெயர் அரியபிளை என்பதும் அறியப்படுகின்றன.[2] சீயகங்கனுடைய கல்வெட்டுகள் கி.பி. 1181 முதல் 1212 வரை கிடைக்கின்றன. இவன் தந்தை பெயர் சோழேந்திர சிங்கன். இவனுடைய தலைநகர் குவளாலபுரம் என்ற கோலார். இவன் மாமன் பெயர் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் என்பதாம். மகன் பெயர் அருங்குன்றப் பிள்ளையான் சீயகங்கன் என்பர். இவர்களுள் சீயகங்கனின் மாமன், காஞ்சி காமாட்சிக் கோயில் கோபுரத்திற்குள் மண்டபம் கட்டுவித்ததைப் பற்றி ஒரு கல்வெட்டுப் பேசுகிறது. அக்கல்வெட்டுக் கீழ் வருமாறு:

"இராசராச தேவற்கு யாண்டு எட்டாவது சிறைமிட்ட சீயகங்கதேவர் மாமன் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் புடோஎ அரசன் இத்திருமண்டபம் செய்வித்தோன்." [3]

இங்கே குறிக்கப்பட்ட கோயில் முற்காலத்தே சோளேந்திர சிங்கன் கோயில் என்று வழங்கியது போலும். இவ்விராசராச தேவன், மூன்றும் குலோத்துங்க சோழன் மகன் மூன்றும் இராசராச சோழன். இங்குக் குறிக்கப்பட்ட காலம் கி.பி. 1224. சீயகங்கனின் மகன், கி.பி. 1161இல் திருக்காளத்தி கோயிலில் நுந்தா விளக்கொன்று ஏற்ற சாவா மூவாப் பசுக்கள் அளித்தான் என்று அவ்வூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.[4]

கல்வெட்டுகளில், கி.பி. 846இல் தந்திவர்மன் காலத்தில் திருச்சானூரிலும், கி.பி. 1101இல் முதற் குலோத்துங்கன் காலத்தில் சித்தூர் வாவிலித் தோட்டத்திலும், கி.பி. 1147இல் இரண்டாம்

1. தெ. இ. கல். தொகுதி 3, ப. 122
2. தெ. இ. கல். தொகுதி 3, எண் 62
3. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 8ஆம் நூற்., ப. 170-171
4. தெ. இ. கல். தொகுதி 4, எண் 643

குலோத்துங்கன் காலத்தில் திருக்காளத்தியிலும், கி.பி. 1161இல் மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் திருக்காளத்தியிலும், கி.பி. 1212இல் திருவல்லத்திலும், கி.பி. 1224இல் மூன்றும் இராசராசன் காலத்தில் மேல்பாடியிலும் 'சீயகங்கன்' என்ற பெயர் ஆளப் பட்டுள்ளது. இப்பெயர்களுள் மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்தில் (1178-1218) வாழ்ந்த சீயகங்கன் என்ற பெயர் மட்டுமே, 'அமராபரணன் சீயகங்கன்' என்று கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. நன்னூல் சிறப்புப் பாயிரமும்,

"திருந்திய செங்கோல் சீய கங்கன்
அருங்கலி வினோதன் அமரா பரணன்" [1]

என்று குறிப்பிடுகிறது. ஆதலால் மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் குறிக்கப்பட்ட சீயகங்கன் பெயரே, நன்னூலாரின் புரவலரின் பெயர் என்பது உறுதியாகிறது. மூன்றும் குலோத் துங்கன் மூன்றும் ஆட்சியாண்டாகிய கி.பி. 1181இல் சீயகங்கனைப் பற்றிய முதற்குறிப்பும், கி.பி. 1212ஆம் ஆண்டில் முடிவான குறிப்பும் காணப்படுகின்றன. இக்கால (கி.பி. 1181-1212) இடை வெளியில் சீயகங்கன் வாழ்ந்தான் என்பது தெளிவு. இதனால் சீயகங்கனால் புரக்கப்பட்ட பவணந்தியாரும் இக்காலத்தினர் என்பது உறுதியாகிறது.

நன்னூலார் வாழ்ந்த இடம்: பவணந்தியாரின் ஊர்ப்பெயர் 'சனகை' என்பது பாயிரத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வூரைச் சுற்றிலும் பொன்பூச்சிட்ட மதில் எடுக்கப்பட்டிருந்தது என்பது 'பொன்மதில் சனகை' என்ற தொடரால் புலனாகிறது. இச் சனகை என்பதற்குச் 'சனநாதபுரம்' என்று உரை கூறினார் மயிலைநாதர். சனநாதபுரம் என்றும் சனகாபுரம் என்றும் இப் பெயர்க்கு மயிலை. உரையில் பாடபேதங்கள் உள்ளன. சங்கரநமச் சிவாயர் சனகாபுரம் என்றும், இராமானுச கவிராயர் சனகாபுரி என்றும் உரைவகுப்பர். சைமன் காசி செட்டியும் சனகாபுரம் என்றே குறிப்பர்.[2]

மேற்கூறப்பட்ட சனகாபுரம் எங்கிருக்கிறது என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. தொண்டை நாட்டு அரக்கோணம் வட்டத்தில் உள்ள சோழசிங்கபுரத்தைச் சார்ந்த ஊர்களில் ஒன்று;[3] மைசூர் நாட்டு நரசபுரம் வட்டத்தில் உள்ள

1. நன்னூல், சிறப்புப் பாயிரம், 15-16
2. சைமன் காசிசெட்டி, 'தமிழ் புளூடார்க்', ப. 79
3. சாமிநாதையர், உ. வே., மயிலை. பதிப்பு 1918, ப. 7

சனநாதபுரம்;[1] கோவை மாவட்டம் ஈரோட்டு வட்டத்தில் உள்ள சீனுபுரம்[2] என மூன்று இடங்கள் குறிக்கப்படுகின்றன.

தொண்டை நாட்டுச் சனகாபுரம் : இவ்வூர் பவணந்தியாரின் ஊர் என்று கொள்வதற்குச் சில சான்றுகள் காட்டப்படுகின்றன. அவை யாவன :

தொண்டை நாட்டிலுள்ள திருவல்லம் என்ற சிவத்தலத்தின் அருகில் உள்ள வள்ளிமலைக் குகையில் பவணந்தி என்ற பெயர் கீழே செதுக்கப்பட்ட சைன குருவின் சிலை ஒன்று உள்ளது.[3] தொண்டை மண்டல சதகம், சனகையில் சன்மதி மாமுனியின் மாணாக்கராகிய நன்னூல் செய்த பவணந்தி மாமுனியின் ஊரும், சின்னூல் வரைந்த குணவீர பண்டிதரின் ஊரும், தொண்டை மண்டலத்தில் உள்ளன என்று 6.ஆம் சதகச் செய்யுளுள் கூறுகிறது. அச் செய்யுள் வருமாறு:

"தன்னூர்ச் சனகையிற் சன்மதி மாமுனி தந்த மைந்தன்
நன்னூல் உரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
சின்னூல் உரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மன்னு புரத்திரு அன்னமின் னேதொண்டை மண்டலமே"

இச் சான்றுகளின் வன்மை மென்மையை ஆராய்தல் வேண்டும். திருவல்லத்திற்கு அண்மையிலுள்ள வள்ளிமலைக் குகைக் கல்வெட்டில், பவணந்தி என்ற பெயர் வந்திருப்பது உண்மையே. எனினும் அப்பெயருடன், பாணராயர், பட்டாரகர் என்று வந்துள்ள சிறப்புப் பெயர்களும் கருதுதற்குரியன.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வடுகவழி பன்னீராயிரம் ஆன வாணபுரத்தை யாண்ட பெரும்பாணப்பாடி 'பாணராயர் விக்கிர மாதித்தர்' அல்லது 'பாணராயர் விசயாதித்தன்' என்ற இருவரில் ஒருவரே மேலே கண்ட கல்வெட்டில் காணப் படும் பாணராயர் ஆவர். இதற்கு வேறு சான்றுகளும் துணையாய் உள்ளன. கி.பி. 878இல் நொளம்ப பல்லவர் பாண ராய விக்கிரமாதித்தனுடனும், நொளம்ப பல்லவருடன் இராச மல்லனும் (கி.பி. 870–907) சேர்ந்து கொண்டு கி.பி. 898–இல் பாணராய விசயாதித்தனுடனும் போரிட்டுள்ளனர். ஆகவே ஈண்டுக் குறிப்பிட்டுள்ள பாணராயர், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் போதிருந்தவர். ஆதலால், மேற்கண்ட வள்ளிமலைக் கல்வெட்டின் காலமும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டாயிற்று.

1. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு-2, ப. 163
2. இராசு, புலவர், கொங்கு-திங்களிதழ்க் கட்டுரை, சனவரி, 1971
3. எபிகிராபிகா இண்டிகா, தொகுதி 4, ப. 142

பவணந்தியின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு அன்று ஆகையால், மேற் கல்வெட்டில் குறிக்கப்பட்ட பவணந்தி, நன்னூலாசிரியராய் இருத்தல் இயலாது. தொண்டை மண்டல சதகத்தில் வந்த செய்தியைத் தகுந்த சான்றாகக் கொள்ளுதற்கில்லை. கொங்கு மண்டல சதகமும் பவணந்தியைத் தன் மண்டலத்தார் என்று போற்றுகிறது. பெயர் பெற்ற அறிஞர்களைத் தத்தம் பகுதியினர் என்று கூறுவதில் விருப்பங் கொண்டவை மண்டல சதகங்களாதலால் அவை காட்டும் செய்திகளை முதன்மைச் சான்றுகளாகக் கொள்ளுதற்கில்லை. தமிழக அரசின் சுவடி நூலகத்தில், தொண்டை நாட்டின் சமணத் தலங்கள் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. அங்குத் தொண்டை நாட்டுச் சமணச் சிற்றூர்களை எல்லாம் குறித்து வைத்த குறிப்புகள் உள்ளன. அவற்றுள் சமணப் பள்ளி முன்பிருந்து அழிந்திருந்தால் 'கிலம்' என்றும், நல்ல நிலையிலிருந்தால் 'பெலம்' என்றும், வேறு கோயிலாக மாற்றப் பட்டிருந்தால் 'அன்னியன் குடியிருப்பு' என்றும், விற்பனை செய்தோ ஒற்றி வைத்திருந்தாலோ 'அடைமானம்' என்றும் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியல் எதனுள்ளம் தொண்டை நாட்டுச் சனகாபுரம் சேர்க்கப்படவில்லை.[1]

மைசூர் நாட்டுச் சனநாதபுரம் : மயிலை. குறிக்கும் சனநாத புரம் இவ்வூர் தான் போலும். தென்னிந்தியாவில் நான்கு சனநாத புரங்கள் உள்ளன என்று திருவனந்தபுரம் தொல்லியல் துறைத் தலைவர் தமக்குத் தகவல் தந்துள்ளதாக உ. வே. சா. 1918 இல் வெளிப்படுத்திய தம் மயிலை. உரைப்பதிப்பில் குறிப்பிடுகிறார்[2] மைசூர் நரசபுரம் வட்டத்தில் உள்ள சிற்றூர் இதுவென்றும், இஃது மாவிலங்கைச் சனநாதபுரம் என்று வழங்குகிறது என்றும், இஃது சீயகங்கன் ஆட்சி புரிந்த கங்க நாட்டின்கண் உள்ள தென்றும் தொல்லியல் அறிஞர் து. அ. கோபிநாதராவ் 'செந்தமிழ்' இதழ் ஐந்தாம் தொகுதியில் விளக்கியுள்ளார். கங்க குலத்தரசர் பெரும்பான்மை சமணராகவே இருந்தமையால், சிரவண பெள்குளம் முதலான சைனத்தலங்களில் தங்கியிருந்த சமண அறிஞர்களைப் புரந்தனர். மைசூர்ப் பகுதியினைச் சார்ந்த சிவமுகாசனம் முதலிய மாவட்டங்களிலுள்ள கல்வெட்டுகள் பலவற்றுள், சிரவண பெள்குளத்தில், தீபங்குடியில் இருந்துவந்த நிடும்பரைத் தீர்த்தத்து அருங்கலான் வயத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற சமண விருந்தினர் பலர் இருந்தனர் என்றும், அவர்களில் ஒருவர் திருத்தக்க தேவர், மற்றொருவர் சூடாமணி ஆசிரியர் என்றும் தெரிகிறது. இவ் விருந்தினருள் பலர் தமிழ்ச் சமணரே என்பதற்கேற்ப, இவர்களுள்

1. டி 30002, ஆர் 344-ஐப் பார்க்க
2. சாமிநாதையர், உ. வே., மயிலை. பதிப்பு, ப. 8.

புகழ்பெற்ற புஷ்பசேன பட்டாரகர் என்பாரது பெயரை எல்லாக் கல்வெட்டுகளிலும் புஷ்பசேன பட்டாரகர் என்றே எழுதியிருப்ப தனுல் துலக்கமுறும்.[1] இதனுல், இப்பகுதி தமிழ்ச் சமணரே அணுக்கமாய் இருந்து போற்றியமை புலனுகின்றது.

இஃதன்றி, இவ்வூரைக் குறித்து வரும் கல்வெட்டுத் தொடர்கள் பார்வைக்குரியவை. அவை வருமாறு:

"கங்கபாடியான முடிகொண்ட சோழமண்டலத்துத் தென் கரை இடைநாட்டு மாவிலங்கையான சனநாதபுரம்".

இத்தொடரில், சோழ, கங்க, சனநாதபுரம் என்ற மூன்றின் இணைப்பையும் ஒருசேரப் பார்க்கும்போது இவ்வூரே பவணந்தி முனிவரின் பிறந்த இடம் என்ற முடிவுக்கு வரத் தோன்று கிறது.[2] 'மாவிலங்கை' என்பதே மைசூர் சனநாதபுரத்தின் முன்னைய பெயராகும். பிற்காலச் சோழர்தாம், முதலாம் இராச ராசனின் பட்டப் பெயர்களுள் ஒன்றுகிய 'சனநாதன்' என்பதை அவ்வூருக்குச் சூட்டினர். அதனுல்தான் கல்வெட்டுத்தொடர், 'மாவிலங்கையான சனநாதபுரம்' என்று குறிப்பிடுகிறது. கி.பி. பதினென்றும் நூற்றுண்டில் அரசன் நிணவால் ஏற்பட்ட பெயரான சனநாதபுரம் பாயிரத்தில் பாராட்டப்படும் அளவிற்கு வழங்கி இருக்கலாம். சனகை என்று மருவி இருத்தல் இயலாது. சனகாபுரத்தில் பவணந்தி இருந்தது உண்மை எனில், அவ் வூரின் பழம்பெயரைப் பாயிர ஆசிரியர் சுட்டிக் காட்டாமல் இரார். சனநாதபுரம் என்பது 'சனகை' என்று மருவுவது இலக்கணப் பொருத்த மாகாது. மயிலை. உரையில், சனநாதபுரம் என்ற பெயர் காணப்படுகிறது. எனினும் பாடபேதமாக 'சனகாபுரம்' என்பதுவும் சில மயிலை. உரைப் பிரதிகளில் காணப்படுகிறது.[3] இக்காரணங்களால், பவணந்தி மைசூர் நாட்டினர் என்பது அத்துணைப் பொருத்தமாய் இல்லை என்பது தெளிவாகிறது.

கொங்கு நாட்டுச் சீனுபுரம்: சீனுபுரம் என்னும் பெயர் கொண்ட பழம்பெருஞ் சமணத்தலம் கொங்கு நாட்டில் உள்ளது. சனகாபுரி, சனகாபுரம் என்பது அவ்வூரின் பழம்பெயர். சீனு புரத்திற்கு அண்மையில், திங்களூர் செல்லும் வழியில் மழுட்டித் தோப்பு என்ற இடத்தில் முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதரின் (ரிஷப தேவர்) கோயில் உள்ளது.

---

1. கோபிநாத ராவ், து. அ., நன்னூல், 'செந்தமிழ்' 1905—6, தொகுதி 4 ப. 398
2. அருணைசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு-13ஆம் நூற். 1970 ப. 160
3. சாமிநாதையர், உ. வே., மயிலை. பதிப்பு, ப. 19

"முச்சக நிழற்றும் முழுமதி முக்குடை
அச்சுதன்" [1]

என்று பவணந்தியார் குறிப்பிட்டது போன்ற அருக தேவனின் அழகிய சிற்பம் அங்கேயுள்ளது. 'அணியாத அழகர்' என்று கல்வெட்டிலும் சிறப்புப் பெயரைப் பெற்ற விசயமங்கலத்துச் சந்திரப் பிரப தீர்த்தங்கரரை, 'அணிவன அணியா! அழகா! செய செய' என்று பாராட்டும் திருப்பாமாலை, 'சனகாபுரி உறை அனகா போற்றி' என்று சீனபுரத்தைப் பாராட்டுகிறது.[2] கொங்கு மண்டல சதக ஆசிரியர் கார்மேகக் கவிஞர்,

"கொங்கில் குறும்பில் தனி ஆதி நாத குருவிளங்கும்
மங்கும் பொழில் சனகாபுரம்"

என்று ஊரையும்,

"கங்கர் குரிசில் உவக்க நன்னூ லுக் கனிந்துபுகல்
துங்கப் புலமைப் பவணந்தி" [3]

என்று புலவரையும் போற்றுகிறார்.

சனகாபுரம், சனகை எனமருவும் என்று கூறுவதில் இலக்கணப் பொருத்தமும் இருக்கிறது. சீயகங்கனின் ஆட்சியில் இருந்த மைசூர்ப் பகுதியையும் கொங்கு நாட்டையும் ஒய்சளர், போரிட்டு வென்றுவிட்டனர். கி.பி. 1194-க்கு முன்னர், மூன்றும் குலோத் துங்க சோழன் கொங்குநாட்டுப் பகுதிகளையும், கங்கபாடி நாட்டை யும் போரிட்டு மீட்டான். மீட்ட பகுதிகளுக்குச் சீயகங்கனைச் சிற்றரசனுக முடி சூட்டச் செய்தான். பவணந்தி காலத்தில், கொங்குநாடும், கங்கநாடும் சீயகங்கனின் தலைமையில் இயங்கிக் கொண்டிருந்தன. 'சீயகங்கன் நின்றருள் கொங்கு மண்டலம்' என்ப தொரு பழம்பாட்டு அடி. 'உபகரித்த வல்காவலன் சீய கங்கனும் தான் கொண்கு மண்டலமே' என்பது கொங்கு மண்டல சதகப் பாடல் அடி.[4] 'கொங்கு நாட்டு வேளாளர் தலைவன்' என்பது இவனது பட்டப் பெயர்களுள் ஒன்று.

விசயமங்கலத் தமிழ்ச் சங்கம் : பல்லவ நாட்டிலிருந்து திரு நாவுக்கரசரின் சமயப் பரப்புதலாலும், பாண்டிய நாட்டிலிருந்து திருஞானசம்பந்தரின் சமயப் பரப்புதலாலும், அவ்வந் நாடுகளி லிருந்து சமணர் பலர் வெளியேறினர். வெளியேறியவர் பெரும்

1. நன்னூல், 258
2. இராசு, புலவர் செ., கொங்கு இதழ்க்கட்டுரை, சனவரி 1971
3. சாமிநாதையர், உ. வே., மயிலை. பதிப்பு, ப. 8-9.
கோவை கிழார், கொங்கு நாடும் சமணமும், கோவை நியூப் பதிப்பகம் லிமிட், கோயம்புத்தூர் 1953, ப. 91-92
4. சாமிநாதையர், உ. வே., மயிலை. பதிப்பு. ப. 8-9.

பாலும் கொங்குநாட்டுப் பகுதியில் குடியேறினர். சீனபுரம் அருகி லுள்ள விசயமங்கலத்தில் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவிப் பல நூல்களை வெளியிட்டனர். [1]

பவணந்தியாரின் கற்சிலை : விசயமங்கலம் சந்திரப் பிரப தீர்த்தங்கரர் கோயிலில் தமிழ்ப் புலவர்கள் சிலைகள் பல இருக் கின்றன. பவணந்தியாரின் தவக்கோல அமர்ந்த நிலைச் சிலையும், அருகில் அலங்காரத் திருமேனியாக சீயகங்கனின் நின்ற நிலைச் சிலையும் உள்ளன. அவையிரண்டும் சீனபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்டன என்று கூறுகின்றனர். [2] ஆக, கொங்கு நாட்டிற்கும் சமணத்திற்கும் இடையேயுள்ள நெருக்கமான தொடர்பு, அங்கே உள்ள சீனபுரம் என்ற ஊர், ஆதிநாதரின் கோயில், விசய மங்கலம், அங்குள்ள தமிழ்ச்சங்கம், அவ்வூர்க் கோயிலில் உள்ள கற்சிலைகள், கொங்குமண்டல சதகக் கூற்று, சீயகங்கனின் அரசியல் சூழல் இவற்றையெல்லாம் ஒப்பிட்டு நோக்க, சீயகங் கன், பவணந்தி ஆகியோரின் வாழ்விடம் கொங்கு மண்டலந்தான் என்ற முடிவுக்கு வரவேண்டி நேருகிறது. எனினும், பவணந்தி முனிவர்க்கும், தொண்டை நாட்டிற்கும் உள்ள உறவை முற்ற மறைப்பதற்கில்லை; மறுப்பதற்கில்லை. தொண்டை மண்டல சதகத் தில் மட்டுமன்றி, தொண்டை மண்டலக் கல்வெட்டுகளிலும் பவணந்தியின் பெயர் இடம் பெற்றுள்ளது. ஒரு காலத்தில் தொண்டை மண்டலமும் சமணர் தொடர்புள்ள திருத்தலமாய் இலங்கியிருக்கிறது.

பவணந்தி முனிக்குக் கொங்கு மண்டலத்திலும், தொண்டை மண்டலத்திலும் தொடர்பு இருந்ததற்கான தடயங்கள் கல்வெட்டு வரலாற்று வழியும், இலக்கிய வழக்காற்று வழியும் உறுதியா கின்றன. இவற்றையெல்லாம் ஒருங்கு வைத்து நோக்கின் கீழ்க் காணும் முடிவுக்கு வரல் முற்றப் பொருந்தும் எனத் தோன்றுகிறது. நன்னூலார், அப்பர் பெருமான் காலத்திற்கு முன்னும், ஓரளவு பின்னும் சமணக் கோட்டையாக இருந்த தொண்டை மண்டலத் தில் பிறந்து, தொண்டை நாட்டு அரசியல் காற்றுச் சமணத்திற்கு எதிர்த்திசையில் வீசிய வேளையில், புறப்பட்டுப்போன, போய்க் கொண்டிருந்த பல சமணக் குடிகளையும் பின்பற்றி, கொங்கு மண்டலம் சென்றவராதல் கூடும். சென்ற இடத்தில், தம் புலமையால் அரசனின் அரவணைப்பைப் பெற்று, கொங்கு மண்ட லத்தில் இருந்தபடி, நன்னூலை இயற்றினர் என்று கொள்ளலே பொருத்தம்.

---

1. இராசு, புலவர் செ., இ. ப. க. மன்றக் கருத்தரங்கக் கட்டுரை
2. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 13-6-71, கையேட்டுப் படி.

4

நன்னூல்-பெயர்க் காரணமும் பொருத்தமும்

தமிழில் ஏறத்தாழ எழுபத்திரண்டு இலக்கண நூல்கள் தோன்றின. இவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி பற்றிப் பேசுவன. இவற்றுள் ஏறத்தாழ முப்பத்து மூன்று இலக்கண நூல்கள் மறைந்து விட்டன.[1] இவற்றின் பெயரும், சிற்சில நூற்பாக்களுமே இன்று கிடைக்கின்றன. இவைபோக எஞ்சிய முப்பத்தொன்பது இலக்கண நூல்களில் மிகச் சிலவே தனிச் சீராட்டுப் பெற்று, இன்றும் பாராட்டப்படுகின்றன. அவ்வாறு பாராட்டப்படுவனவற்றுள் நன்னூலும் ஒன்று. பிரயோக விவேக உரைகாரர், முனிவர் ஆகியோர், தம் உரை விளக்கங்களுள் பவணந்தியாரைப் பரக்கப் புகழ்வர். சுவாமிநாத தேசிகர்,

> "முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினுள்
> நன்னூ லார் தமக்கு எந்நூ லாரும்
> இணையோ என்னும் துணிவே மன்னுக"

என்று தம் இலக்கண கொத்துரையுள் குறிப்பர். இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகர், நன்னூலிருந்து, 203 நூற்பாக்களை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்.[2] நன்னூற் பொருளையும், பெயரையும் தம் நூலுள் தக்க இடத்தில் அமைத்துப் பாராட்டிய இலக்கியங்கள் பல. அவை பிரபுலிங்க லீலை, திருவெங்கையுலா, திருத்தணிகையுலா, கோடீச்சுரக் கோவை, தமிழ் விடு தூது என்பன.[3] பத்தொன்பதாம் நூற்றாண்டில்

---

1. வேங்கடசாமி, மயிலை சீனி., மறைந்துபோன தமிழ் நூல்கள் எனும் நூலை ஆதாரமாகக் கொண்டு எடுக்கப்பெற்ற கணக்கெடுப்பு
2. Subramanian. Dr. S.V., Studies in Tamil Language and Literature. 1973 P. 27
3. 'நன்னூலைப் பற்றிய புகழ்மொழிகள்' என்ற தலைப்பில் பார்க்க

சென்னைக் கல்விச் சங்கத்தின்வழி, தமிழ்த்தேர்வு நடாத்திய ஐரோப்பியர், நன்னூலைக் கட்டாயப் பாடமாக அமைத்திருந்தனர். எமறி பவர் (1676), எச். ஸ்டோக் (1830), வால்றறர் சாய்சு (1858), டி. பிரதர்டன் (1848), டாக்டர் ஜி. யு. போப்பு (1857) ஆகியோர் இந்நூலைப் புகழ்ந்து போற்றினர்.[1] அன்றியும், ஆங்கிலத்தில் பல்லோராலும் மொழிபெயர்க்கப் பட்ட முதல் இலக்கண நூல் இதுதான். டாக்டர் கால்டுவெல், நன்னூலையே தம் ஒப்பிலக்கண ஆய்வுக்கு மேற்கொண்டார். இருபதாம் நூற்றாண்டு மொழியியல் ஆய்விலும் நன்னூல் அறிவியல் முறையில் அமைக்கப்பட்ட இலக்கணம் என்று பாராட்டப்படுகிறது.[2] நன்னூல் இத்துணைச் சிறப்புகள்பெறக் காரணங்கள் எவை? தொல்காப்பியர் 946 நூற்பாக்களில் 2046 அடிகளில் கூறிய செய்திகளைச் சுருக்கி, விளக்கம் குன்றாமல் 462 நூற்பாக்களில் 1027 அடிகளில் கொடுத்தமை, நூலை நடத்திச் செல்லும் முறை (Order and arrangement) தருக்க நெறிக்கு உட்பட்டு இருக்கின்றமை, எளிதில் மனத்தில் பதியும் பாங்கு கொண்ட நூற்பா அகவல் யாப்பில் நூலை ஆக்கியமை, நூற்பாவில் ஆளப்பட்ட சொற்கள் திரிபில்லாமலும் அரிய சொற்களாய் இல்லாமலும் அமைந்தமை, நூற்பா அடிகள் பல்காமல், சொற்கள் பல்காமல் பெரும்பான்மையான நூற்பாக்கள், மூன்று, நான்கு வரிகளுக்கு மிகாது, திட்ப நுட்பம் செறிந்து விளங்குகின்றமை, தமிழ்மொழி மரபுகளைப் புறக்கணியாமலும், புதிய செய்திகளைப் புறக்கணியாமலும், வேற்றுமொழி ஆதிக்கத்திற்கு இடங்கொடாமலும் அமைத்தமை ஆகியவைபே காரணங்களாம்.

பழையன கழித்தலும் புதியன புகுத்தலும்: நன்னூல் ஆசிரியர் கடைப்பிடித்த கொள்கைகளுள் தலையாயது 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்பதாகும். பழைமையைக் கண்மூடிக் கொள்ளவும், தள்ளவும், புதுமையைக் கண்மூடிக் கொள்ளவும் தள்ளவும் செய்கின்ற போக்கினின்று, ஒரு புதிய போக்கை இலக்கணச் சட்டமாக்கி விடுகிறார் பவணந்தியார். இக் கோட்பாடு, பவணந்தியார் தமிழிலக்கணத்திற்கு வழங்கிய மிகு பெருங் கோட்பாடு ஆகும். அன்றியும், பழைய செய்திகளைக் கழிததல என்றும், புதிய செய்திகளைப் புகுததல் என்றும் குறிப்பிடாமல், பழையன கழிதல், புதியன புகுதல் என இயல்பான இலக்கண நெறிகளாகக் குறிக்கும் நுட்பமும் கருதுதற்குரியது.

தொல்காப்பிய எதிர்நூல்: தம் கோட்பாட்டுக்குத் தக, தொல்காப்பியத்தில் கூறப்பட்ட சிலவற்றை விடுத்தும், கூறப்

1. 2. 'நன்னூலைப் பற்றிய புகழ்மொழிகள்' என்ற தலைப்பில் பார்க்க

படாத சிலவற்றைச் சேர்த்தும் பவணந்தியார் இலக்கணம் செய்தார். இதனுல், இவர் தொல்காப்பியர்க்கு எதிரானவர் என்றும், இவரெழுதிய நன்னூல் 'தொல்காப்பிய எதிர்நூல்' என்பதும் கருதப்பட்டன. தொல்காப்பியர் கோட்பாடு (School) வேறு; நன்னூலார் கோட்பாடு வேறு என்பதும் கருதப்பட்டது. [1] இலக்கண உலகில் இருவேறு கோட்பாடுகள் இருந்தன. இவற்றுள் குறிப்பிட்ட ஒரு கோட்பாட்டைத் தொல்காப்பியர் பின்பற்றினர். அவர் பின்பற்றியது ஐந்திரக் கோட்பாடு என்பது பனம்பாரனுர் பாயிரத்தாலும், சேனவரையர் உரையாலும் தெரியவருகின்றது. [2] இக்கோட்பாடு அகத்தியனுர்க்கு எதிரானது. நச்சினுர்க்கினியர் எழுத்ததிகார உரையில் காட்டும் அகத்தியனுர் கதை உண்மையோ பொய்ம்மையோ! இது தொல்காப்பியர் அகத்தியர் கோட்பாட்டிற்கு எதிரானவர் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது. தொல்காப்பியர் பின்பற்றுத கோட்பாடு ஆரியச் சார்பினது ஆகலாம். அவ்வாரிய இலக்கணக் கோட்பாடே பிற்காலத்தில் பாணினியக் கோட்பாடாய் உருப்பெற்றிருத்தல் கூடும். ஆக பழைய காலத்திலேயே ஐந்திரக் கோட்பாடு ஒன்றும், அதுவல்லாத கோட்பாடு பிறிதொன்றும் இருந்தன என்பது தெளிவு. முன்னது ஆரியச் சார்பற்றது. பின்னது ஆரியச் சார்பானது. தொல்காப்பியர் முன்னதைப் பின்பற்றினர். பவணந்தியார் பின்னதைப் பின்பற்றினர். பவணந்தி, பாணினியத்தைப் படித்திருக்கிறர் என்பதுவும், அதன் எதிரொளியே பதவியல் என்பதுவும் அறிஞர்தம் கணிப்பு. [3] எழுத்து, சொல், பொருள் இவற்றில் தொல்காப்பியர்க்கு மாருன கோட்பாடுகள் இருந்து வந்திருக்கின்றன. பன்னிரு படலமும், புறப்பொருள் வெண்பா மாலையும், பொருளதிகார அளவில் தொல்காப்பியர்க்கு மாருன கருத்துடையன. [4] இவற்றைப் போலவே எழுத்து, சொல் இலக்கண அளவிலும் வேறுபட்ட கருத்துடைய நூல்கள் இருந்திருத்தல் வேண்டும். 'அவிநயம்' அவ்வகையினதாய் இருக்கலாம். மயிலை. உரையினின்று பவணந்தியார் ஓரளவு அவிநயத்தைப் பின்பற்றி இருப்பது

---

1. அறவாணன் க. ப., சமணரின் நன்கொடை, சைனக் கருத்தரங்கத் தாள், சென்னை 17-3-1974.
   Vijaya venugopal, G.A., Modern Evaluation of Nannul, 1968 P. 2
2. 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' பனம்பாரனுர் பாயிரம் சேனவரையர் உரை, 74.
3. சாமுவேல் பிள்ளை, எஸ்., தொல்காப்பிய நன்னூல், 1958. ப. 7, 8
   வையாபுரிப்பிள்ளை, எஸ்., இலக்கணச் சிந்தனைகள், 1956 ப. 11
4. அருணுசலம் பிள்ளை, மு., புறத்திணை இலக்கண ஆராய்ச்சி, 'தமிழியற் சாட்சிகள்', 1968, ப. 5—15

புலனுகின்றது.[1] நன். ஆங்காங்கே வழக்கற்றுப் போன செய்தி களேப் பழையன கழிதலாக விலக்கியும், புதியன புகுத்தலாக ஏற்றும் இலக்கணம் செய்திருக்கிருர். இவ்வடிப்படையில் தொல். கூறியுள்ளவற்றுள் சிலவற்றை விடுத்திருக்கிருர்.[2] மெய் பிறி தாதல், மிகுதல், குன்றல் என்ற கலேச்சொற்களுக்குப் பதிலாக, தோன்றல், திரிதல், கெடுதல் என்ற கலேச்சொற்களேப் புதியவை யாக ஆண்டிருக்கிருர்.[3] தொல். விரித்துக் கூறியவற்றைச் சுருக்கியும், சுருக்கிக் கூறியவற்றை விரித்தும் கூறியிருக்கிருர்.[4] இதனுல் தொல். பற்ருளர், நன்னூலே 'எதிர்நூல்' என்று எதிர்த் தனர் போலும். இச்சூழலில், பவணந்தியாரைச் சார்ந்தவர்க்கு, நன்னூல் எதிர் நூலா, அன்ரு என்று ஆய்வு நிகழ்த்த வேண்டி நேர்ந்திருக்கிறது. மயிலே. உரையால் இஃது புலனுகிறது.

> "அம்முத லீரா ருவி; கம்முதல்
> மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்"[5]

என்ற நூற்பாவில், பவணந்தியார், முன்னேர் இங்ஙனம் மொழிந் தனர் என்ற கருத்தில் 'விளம்பினர் புலவர்' என்ருர். இதனின்று முன்னேரை எதிர்த்து அன்று, பின்பற்றியே நூலியற்றியதாகத் தெரிகிறது. இந்நூற்கு விசேடவுரை எழுதும்போது மயிலே. "'விளம்பினர் புலவர்' என்ற விதப்பினுனேயும் பாயிரத்திற் பெறுவ தேயன்றி நூலுள்ளும் இஃது எதிர்நூல் அன்று என்பது பெற்றும் எனக் கொள்க" என்று குறிப்பிடுகிருர். நன்னூல் தொல்காப்பிய வழிமொழி நூலா அல்லது வழிபடு நூலா என்ற வழக்காட்டு மயிலே. காலத்தோடு நின்றுபோய் விடவில்லே. இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் நன்னூலேப் போற்றியும் தூற்றியும் கண்டனங் களும், கண்டன மறுப்புகளும் மதுரைத் தமிழ்ச்சங்க இதழான செந்தமிழில் வெளிவந்துள்ளன.[6] இலங்கை இராமநாதன், 'தொல்காப்பியரும் பிற்காலத்தாரும்' எனும் தலேப்பில் தொல் காப்பியரைப் புகழ்ந்தும், பவணந்தியாரை இகழ்ந்தும் தொடர் கட்டுரை எழுதி வந்தனர். இதற்கு மறுப்பாக, யாழ்ப்பாணத்து க. வைத்தியலிங்கம் பிள்ளே, கட்டுரை எழுதினர். இம்மறுப்பிற்கும் மறுப்பு, யாழ்ப்பாணம் ஆர். ஆர். குணரத்தினம் என்பாரால் 'நன்னூல் என்னும் இயைபில் பெயர்ச் சொற்ருெடர் மறுப்பு' என்ற

---

1. மயிலேநாதர் நன்னூல், உரை: 59, 73, 103, 124, 127, 130, 149 263, 319, 359, 369
2, 3, 4. வெள்ளேவாரணனுர், க., தொல்காப்பியம்-நன்னூல் பார்க்க
5. மயிலேநாதர் உரை, 62
6. செந்தமிழ், தொகுதி 17, பகுதி 9, ப. 443

தலைப்பில் எழுதப்பட்டது.[1] இருபதாம் நூற்றாண்டின் பிற்பாதியில், நன்னூல் நன்னூலே என்றொரு கட்சியும், நன்னூல் நன்னூலன்று என்றொரு கட்சியும் மாறி மாறி எழுதி வழக்காடின. இவ் வழக்காட்டு, 'தென்றல்' என்ற வார இதழில் தொடர்ந்து வெளிவந்தது.[2] இவ்வேறுபாடுகளும், கருத்துப்போர்களும் தொல்காப்பியத்தை நினைந்து, அதனைத் தொடுத்து அடுத்ததாக நன்னூலை நினைந்தமையின் விளைந்தவை. தொல்காப்பியர்க்கும், பவணந்தியார்க்கும் இடையே ஏறத்தாழ 1800 ஆண்டுகள் கால இடைவெளி இருந்திருக்கிறது. இந்த நீண்ட இடைவெளியில் எழுந்த இலக்கியங்கள் எத்தனை? எத்தனை? இலக்கணங்கள் எத்தனை? அவ்வப்போது தன் அழுத்தமான காலச் சுவடுகளைப் பதித்துச்செல்லும் அரசியல் மாற்றங்கள் எத்தனை? இவற்றினுடைய பாதிப்புகள் மொழியில் படியாமலா போய்விடும்? கல்லெழுத்துகளாகப் படிந்துவிடும். நன்னூல், தொல்காப்பியர்க்குப் பின் பல வேறு கால கட்டங்களைத் தாண்டிப் பிறந்தது ஆதலால் தொல்காப்பியர்க்கும் பவணந்திக்கும் கருத்து இடைவெளி ஏற்படுதல் இயற்கை. இவை ஒரு காலத்தில், இருவர் நடத்திக் கொண்ட இலக்கணப் போர்கள் அல்ல. காலம் கொடுத்த வளர்ச்சி. இவற்றிற்கும் அப்பால், பவணந்தியார், தமக்கு முன் பிருந்த இலக்கணவாணரின் அடிச் சுவட்டைப் பின்பற்றியே இலக்கணம் செய்தார் என்பதை,

> "..... முன்னோர் நூலின்
> வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்"[3]

என்று சிறப்புப் பாயிரம் குறிப்பிடுகிறது. இங்கு 'முன்னோர்' என்று பாயிரம் பன்மையில் குறிப்பது காண்க. இக்குறிப்பு, பவணந்தியார்க்கு முன்னூல், தொல்காப்பியம் மட்டுமன்று என்பதனையும், அவருக்குப்பின் தோன்றிய வீரசோழியம், நேமிநாதம், இன்று கிடைக்கப்பெறு அவிநயம், சினேந்திரம் ஆகியனவுமாம் என்பதனையும் உணர்த்துகிறது. தொல்காப்பியத்தினின்று பவணந்தியார் வேறுபடும் இடங்களுள் சில மேலே கண்ட இலக்கணங்களில் கூறப்பட்டிருப்பதும் கருதுதற்குரியது.[4] பவணந்தியார்க்கு முன்னிருந்த இலக்கணங்கள் மட்டுமன்றி, முன்னைய இலக்கண உரைகள், இலக்கியப் புதுவழக்குகள், தம் கால உலக

1. செந்தமிழ், தொகுதி 18, பகுதி 1, ப. 17—25
2. தேவ நேயப் பாவாணர், ஞா., நன்னூல் நன்னூலா? 1957, சென்னை மாணவர் மன்ற வெள்ளிவிழா மலர், ப. 22—27
3. நன்னூற் சிறப்புப் பாயிரம், அடி 17-18
4. சுப்பிரமணியன், சே.வை. இலக்கணத்தொகை, ப. 22, 23, 299

வழக்குகள், பிறமொழி இலக்கணங்கள் ஆகியனவும் துணையாக இருந்திருத்தல் வேண்டும்.[1] இவ்வாறு தமக்கு முன்பிருந்த சான்றோர்களைப் பவணந்தியார் 'மொழிப புலவர், என்ப, என்மனார் புலவர், மொழிநரும் உளரே, வைத்தார், விளம்பினார் புலவர், துணிநரும் உளரே, விளம்புப, செப்புவர், இழுக்கார், நேர்ப, பணிப்பர், கொடுப்ப, வரையார், உரைப்பர் என முப்பத்தோர் இடங்களில் சுட்டிப் போற்றுகிறார்.[2] இச் சுட்டுமொழிகள், பவணந்தியார், தமக்கு முன்பிருந்த பல இலக்கண ஆசிரியர்களைப் பின்பற்றி நூல் செய்தார் என்பதற்குச் சான்றுகள்.

நன்னூல்-பெயர்ப்பொருத்தம்; சீரும் சிறப்பும் வாய்ந்த தம் இலக்கண நூலுக்கு, 'நன்னூல்' எனப் பவணந்தியார் பெயரிட்டது அவரது துணிந்த, தெளிந்த நெஞ்சைக் காட்டுகிறது. மணி வாசகர் தாம் எழுதிய வாசகங்களுக்குத் 'திருவாசகம்' என்று பெயர் அமைத்தது போல், இராமலிங்க அடிகள், தமது நூலுக்குத் 'திருவருட்பா' என்று பெயர் சூட்டியது போல், பவணந்தியாரும், தம் நூலுக்கு 'நல்' என்று பண்படை கொடுத்து 'நன்னூல்' என்றமைத்துக் கொண்டார், நூல் அமைவையும், நூல் நுவல் பொருளையும் நோக்குவார்க்கு இப்பெயர் முற்றப் பொருந்தும் என்பது புலப்படும். தன்மையால் பெற்ற பெயருக்கு நன்னூலையே காட்டாகக் காட்டுவர், மயிலை, சங். ஆகியோர்.[3]

நன்மை + நூல் = நன்னூல். 'நூல்' என்பது உவம ஆகு பெயராய் இலக்கண நூலை ஈண்டு உணர்த்துகிறது. ஆதலின், நன்னூல், என்பது நல்ல இலக்கணம் என்று பொருள்படும். இத் தொகைநிலை பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

நக்கண்ணையார், நக்கீரர், நப்பாலத்தனர், நல்லந்துவனர், நல்லாவூர் கிழார், நல்லிறையனர், நல்விளக்கனர். நல்வெள்ளியார், நல்வேட்டனர், நற்கேந்தனர், நன்னுகையார் என்ற சங்க காலப் புலவர்களின் பெயர்களும், நற்றிணை என்ற நூற்பெயரும், 'நல்' என்பதை முன்னெட்டாக உடையவை இவை 'செஞ்ஞாயிறு' என்பது போல, பிறவற்றை விலக்கி 'நல்' என்று அடை பெற்றவை அல்ல, நன்னூல் என்ற நூற்பெயரையும் இவ்வாறே கொள்ளுதல் வேண்டும்.

---

1. Vijayavenugopal, G. A. Modern Evaluation of Nannūl (எழுத்து) See Chapter Commentary of Ilampuranar and Nnnūl, p. 306
2. ஆறுமுக நாவலர் நன்னூற் பதிப்பின்படி நூற்பா எண்கள்: 16, 36, 40, 48, 50, 55, 61, 63, 108. 115, 121, 124, 128, 130, 188, 193, 195 198, 206, 227, 273, 276, 289, 301, 319, 338, 354, 373, 376, 383 385, 386, 390, 391, 392, 397, 406.
3. மயிலைநாதர் உரை, 48; சங்கர நமச்சிவாயர் உரை, 49

5

நன்னூல் அமைப்பு

இந்நூல், பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்ற மூன்று பெரும்பிரிவுகளை உடையது. பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும், சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. எழுத்து, சொல்லதிகாரங்களுள் ஒவ்வொன்றும் ஐவ்வைந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

சங்கர நமச்சிவாயர் உரைப்படி, கீழ்க் காணுமாறு ஒவ்வோரியலிலும் நூற்பாக்கள் காணப்படுகின்றன.

எழுத்ததிகாரம்		சொல்லதிகாரம்	
1. எழுத்தியல்	— 72	6. பெயரியல்	— 62
2. பதவியல்	— 23	7. வினையியல்	— 32
3. உயிர்மயங்கியல்	— 53	8. பொதுவியல்	— 68
4. மெய்ம்மயங்கியல்	— 36	9. இடையியல்	— 22
5. உருபு புணரியல்	— 18	10. உரியியல்	— 21
	202		205

இவ்வமைப்பும் நூற்பா எண்ணிக்கையும், மயிலைநாதர் காட்டும் வெண்பாக்களால் உறுதியாகின்றன. அவ்வெண்பாக்கள் கீழ்வருமாறு :

எழுபா னிரண்டெழுத்தி னேற்றபதத் தைஞ்ஞான்
கொடுமூன் றுயிர்மை பான்மூன்—றருமெய்ய்
ரூரு றுருபியன்மூ வாறு மெழுத்துரைநூற்
டாவிருநூற் ரேரிரண்டாப் பார்

பேரறு பத்திரண்டு பின்னினையென் னுன்கு பொது
ஓரறுபத் தெட்டிடை மூவேழின்—மேலொன்
றுரியிருபத் தொன்றுகச் சொற்சுத் திரத்தின்
விரியிருநூற் றேரைந்தா வேண்டு[1]

நன்னூல்—ஐந்ததிகார நூலா? நன்னூல், ஐந்ததிகார நூலாக இருந்தது என்ற கருத்திற்கு இடந்தரும் குறிப்பை மயிலை.[2] வழங்குகிறார். இதனையொட்டியும், 'அரும்பொருணந்து' எனவரும் பாயிரத் தொடரைக் கொண்டும், நன்னூல் ஐந்ததிகார நூல் என்ற கருத்து வளர்ந்து நிலைத்துவிட்டது.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களால் நன்னூல் மயிலை நாதர் உரை முதன் முதலாக வெளியிடப்பெற்றது. உ.வே.சா. பதித்த முதல் நன்னூல் பதிப்பு இதுதான். கி.பி. 6—5—1918இல் ஐயரால் எழுதப்பட்ட முகவுரையோடு இந்நூல் பதிப்பாகி இருக்கிறது. அவர் இப்பதிப்பில் 'நூல்' என்னும் தலைப்பில், நன்னூல் தொடர்பான சில அரிய செய்திகளைத் தருகின்றார். அவற்றுள் ஒன்று, நன்னூல், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி—என்ற ஐந்திலக்கணங்களும் உடையதாக இருந்திருத்தல் வேண்டும் என்பதாகும்.[3] இக் கருத்தையே, 28—9—1925இல் தான் பதிப்பித்த உரையிலும் எடுத்துரைக்கிறார். இவ்வெண்ணம், பின் எழுந்த பலராலும் எடுத்தாளப்படுகிறது.[4] உ.வே.சா. தன் கருத்தினுக்குச் சில சான்றுகளைக் காட்டுகிறார்.

1. 'அரும் பொருள் ஐந்தையும் யாவரும் உணர' எனவரும் நன்னூல் சிறப்புப் பாயிரத் தொடரில் 'அரும் பொருள் ஐந்து' எனக் குறிக்கப்பட்டிருத்தல், 2. மயிலை. நூற்பா, 257, 267, 418, 461—ஆம் நூற்பாக்களில் தரும் நுணுக்கமான குறிப்பு, 3. 'நுதலிய பொருள் ஐந்து என உணர்த்தினமையின், இந்நூலுட் கூறிய பொருள், யாப்பு, அணி என்னும் மூன்றதிகாரங்களும் அக்காலத்துள்ளன போலும்' என்ற சங். உரை, 4. 'தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சு லக்ஷணத்தையும் அறுதி இடுவதான நன்னூல் என்று ஒரு சாஸ்திரம் உண்டு' என்று ஸ்ரீ பிள்ளை லோகாரிய சீயர், 'தமிழ நன்னூற் துறைகள் அஞ்சுக்கு இலக்கியம்' எனவரும் சூரத் தாழ்வார் தனியன் உரையில் குறித்தல், 5. "மங்கலம் இனிது முடிதற்குக் காரணமன்று. மங்கலங் கூறிய வழியும், நன்னூல்

1. சாமிநாதையர், உ வே., மயிலை. பதிப்பு, ப. 139, 312
2. ,, நூ, 461
3. சாமிநாதையர், டாக்டர் உ.வே., நன்னூல் மயிலை. உரை, ப. 13
4. இளவரசு, சோம., இலக்கண வரலாறு, 1963, ப. 138; அரவிந்தன் மு. வை., உரையாசிரியர்கள், 1968, ப. 469

முதலியவற்றின் முடிவு காணைமையின்" என்ற சிவஞான முனிவரின் உரை[1] ஆகிய இச் சான்றுகளை வைத்துக் கொண்டு நன்னூல், ஐந்து அதிகாரங்களை உடையது என முடிவு கட்ட இயலுமா? இயலாது.

பாயிரம், யாரால், என்று, எவ்விடத்து எழுதப்பட்டது என்பது இன்றுகாறும் தெரியவில்லை. பாயிரத்தினுள் சீபகங்கன், பவணந்தி யாரை 'அரும்பொருள் ஐந்தை யாவரும் உணர' நூல் எழுதும்படி வேண்டிக் கொண்டான் என்பதன்றி, பவணந்தி ஐம்பொருள் அதிகாரத்தையும் எழுதினர் என்ற கருத்துப் புலனுகவில்லை. மயிலை. நன்னூலை ஐந்ததிகார நூல் எனக்கருதினர். இக்கருத்து 157, 267, 478ஆம் நூற்பாக்களில் தெளிவாக வெளிப்படையாகக் குறிக்கப்படவில்லை. 'பழையன கழிதல்' எனவரும் 461-ஆம் நூற்பா ஐந்ததிகாரத்திற்கும் சிங்கநோக்காக நிற்கும் புறநடை என்று மயிலைநாதராதல் காட்டப்படுகிறது. சங். கருத்து, பிறழ உணரப்பட்ட கருத்தேயாகும். அத்துடன் 'உள்ளன போலும்' என்று ஐயம் தொனிக்கவே எழுதியுள்ளார். ஐந்து இலக்கணங்களும் இருந்தன, இறந்தன என்ற எண்ணம், மேலோங்கி இருக்கிறது. முனிவரின் குறிப்பு, நன்னூல் முற்றுப்பெருமற் போய் விட்டது என்ற கருத்தைத் தோற்றுவிக்கிறது. மங்கலச்சொல் பெய்தால் இனிது பணி முடியும் என்பதில்லை. இனிது முடியாப் பணியும் உண்டு என்று முனிவர் காட்டுவதால், நன்னூல் இரண்டு அதிகார நூலே, ஏனைய அதிகாரங்கள் எழுதப்படாமல் விடப்பட்டன என்றே எண்ணத் தூண்டுகிறது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத் தனியனில் குறிக்கப்படும் 'நன்னூற்றுறைகள்' என்பது நன்னூலையே குறிக்கிறது என்பதற்குச் சான்றில்லை; பொருத்தமும் இல்லை.

> " நெஞ்சுக்கு இருள்கடி தீபம்; அடங்கா நெடும்பிறவி
> நஞ்சுக்கு நல்ல அமுதம்; தமிழ் நன்னூல் துறைகள்
> அஞ்சுக்கு இலக்கியம்; ஆரண சாரம்; பரசமயப்
> பஞ்சுக் கனலின் பொறி பரகாலன் பனுவல்களே"[2]

என்ற கூரத்தாழ்வார் செய்த பெரிய திருமொழித் தனியனில் வரும் நன்னூல் துறைகள் அஞ்சு என்பது 'ஐந்திணை நெறி அளாவி' என்பது போல, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளையும் குறித்திருத்தல் கூடும். அல்லது தமிழில் பிற்காலப்

1. சிவஞான முனிவர் உரை, தருக்க சங்கிரகம்
2. திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழித்தனி முன்னுள்ள தனியன் 8

பிரிவுகளான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பவற்றைப் பொதுவாகச் சுட்டியிருத்தல் கூடும். மேற்கண்ட பாடலைப் பாடிய கூரத்தாழ்வார் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்க மாகும்.[1] ஆகவே இவ்வாழ்வார், பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்ட நன்னூலைக் குறிப்பிட்டிருத்தல் இய லாது. இப்பாடலுக்கு உரை செய்த பிள்ளை லோகாரிய சீயர் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர். அவர் காலத் திற்கு முன்பே நன்னூல் தோன்றிப்புகழ் பெற்றுவிட்டது. தனி யனில் 'நன்னூல்' என்ற சொற்றொடராட்சியைக் கண்ட அளவி லேயே நன்னூல் என்று ஒரு சாஸ்திரம் உண்டு என்று எழுதிவிட் டார். அவர் எழுதியது கால வழு என்பது தெளிவு. இப்போதுள்ள நன்னூல் எழுத்து சொல் அதிகாரங்கள் அன்றி வேறு அதிகாரங்கள் இருந்திருக்குமானால் கீழ்க்காணும் செய்திகள் பவணந்தியாரால் எழுத்ததிகார, சொல்லதிகாரங்களில் கூறப்பட்டிருக்க வேண்டிய தில்லை.

தொல்காப்பியப் பொருளதிகாரம் மரபியலில், நூல் வகை, பத்துவகைக் குற்றங்கள், முப்பத்திரண்டு வகை உத்தி ஆகியன கூறப்பட்டுள்ளன. இவை நன்னூல் பாயிரத்தில்[2] இடம் பெறுதல், 2. பொருளதிகாரம் செய்யுளியலில் கூறவேண்டிய செய்யுள் இலக்கணம் பற்றி, நன்னூல் சொல்லதிகாரம் பெயரியலில்[3] கூறுதல், 3. அணி எனத் தனி அதிகாரத்தில் குறிக்க வேண்டிய குறிப்பை 'அணிபெறச் செய்வன செய்யுள்' எனச் சொல்லதி காரத்தில்[4] குறித்தல், 4. யாப்பதிகாரத்தில் இடம்பெற வேண்டிய 'பொருள்கோள்' வகைகள், நன்னூல் பொதுவியலில்[5] இடம் பெறுதல், 5. பொருள் அதிகாரம் அல்லது அணி அதிகாரத்தில் இடம் பெற வேண்டிய உவம உருபுகளின் பட்டியல் நன்னூல் பொதுவியலில்[6] கொடுக்கப்படுதல், 6. பொருளதிகாரம் மரபிய லில் இடம்பெற வேண்டிய ஓர் அறிவுயிர் முதலாக ஆறு அறிவுயிர் வகைகள் நன்னூல் சொல்லதிகார உரியியலில்[7] இடம் பெறுதல் ஆகியவை எழுத்து சொல்லதிகாரங்களில் இடம் பெற் றிருப்பதால் பெறப்படுவது நன்னூல் இரண்டு அதிகார நூல் என்பதுதான். இலக்கணம், மொழியின் எழுத்து, சொல் ஆகிய

1. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 13ஆம் நூற். 1970 ப. 164
2. நன்னூற் பாயிரம் 4, 5, 6, 7, 8, 11, 12, 13, 14
3. மே. கா. நூ. 268
4. மே. கா. நூ. 269
5. நன்னூல் 411—419
6. மே. கா. நூ. 367
7. மே. கா. நூ. 435—449

வற்றின் உயிர்ப்பு, அமைப்பு என்று பவணந்தி நன்கு தெளிந்தவ ராதல் வேண்டும். இந்தத் தெளிவே, நன்னூலை இரண்டே பிரிவாக, பத்து உட்பிரிவுகளாக அமைக்கத் தூண்டியிருக் கிறது.

" பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்ற அரிய நூற்பா, ஐந்திகார நூல் என்றால், சொல்லதிகார இறுதியில் இடம் பெற்றிருக்குமா? இந்நூற்பா 'நூலிற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று' எனச் சங். குறிக்கிறார். நூல் முடிந்த பின் தானே நூலுக்குப் புறனடை. அவ்வண்ணமெனில், நன்னூல், சொல்லதிகாரத்தோடு முற்றுப் பெற்றது என்றுதானே பொருள்? ஆம்.

நன்னூற் பாயிரம் யார் இயற்றியது? எழுத்ததிகாரம் சொல்லதி காரம் என்ற பெயர்கள் தொல்காப்பியத்தைத் தழுவிப் போற்றப் பட்டன போலும். இவற்றிற்கு முன்னுள்ள பாயிரம் பவணந்தி யாரால் செய்யப்பட்டதா என்பதுவும் விரிவான ஆய்வுக்கு உட்பட்டது.

தமிழர், போதிய அளவு வரலாற்றுணர்ச்சி உடையர் அல்லர் என்ற கருத்து பரவலாக உண்டு. அக் கருத்தினர், தமிழர் தம் பெயரையும், வாழ்வையும், வரலாற்றையும் எழுதிவைக்காமற் போனதைச் சுட்டிக் காட்டுவர். இவை ஒருபுற உண்மைதாம், இலக்கியத்தின் முகப்பாகவும், இலக்கணத்தின் முகப்பாகவும் போற்றப்படுவது பாயிரம். இப் பாயிரம் ஆக்கியோன் வரலாற் றைத் தெளிவாகக் குறித்துச் செல்லும். வரலாற்றைப் போற்றுத தமிழர் பாயிரத்தைப் போற்றியமை வரலாற்றுத் துறையின் பெரும் பேருகும். இப் பாயிரங் கூடத் தொல்காப்பியர் காலத் திற்கு முன்பு வழக்கில் இல்லை போலும். அதனால்தான் தொல் காப்பியர், எங்கும் பாயிரம் பற்றிப் பேசவில்லை; 'பாயிரம்' என்ற சொல்லைக்கூட ஆளவில்லை. ஆனால் தொல். காலத்தில் பாயிரம், வழங்கத் தொடங்கி இருத்தல் வேண்டும். அதனால்தான், பனம்பாரனார் பாயிரம், தொல்காப்பிய முகப்பாக இடம் பெற்றிருக் கிறது. பாயிரத்தின் இடத்தைப் பின்பு 'பதிகம்' எனும் முகப்பு பற்றிக் கொண்டிருக்கிறது. பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் இவற்றுள் ஆக்கியோன் வரலாறு பேசும் பதிகம் இடம் பெறுகிறது. இலக்கண நூற்களுக்கு முகப்பாய் அமைவது பாயிரம், இலக்கிய நூற்களுக்கு முகப்பாய் அமைவது பதிகம்

என்று வேறுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் இவ்விரு கூறுகளும் காலப் போக்கில் ஒன்றிவிட்டன. 'பதிகம்' எனும் வழக்கு இறந்தது. பாயிரம், இலக்கண இலக்கியம் இரு துறையிலுள்ளம் ஆட்சி செய்யத் தொடங்கியது. இதனைக் கம்பர் வில்லிபுத்தூரார் நூல்கள் உறுதி செய்கின்றன. பாயிரமாகத் தழைத்துப் பதிகமாக இசைத்து, இறுதியில் பாயிரமாகவே நிலைத்து விட்டது. தமிழ் இலக்கியத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டளவில், பாயிரம், இலக்கியத்தின் அகற்ற முடியா முகப்புறுப்பு ஆக இடம்பெற்று விட்டது. நன்னூலில் 'சுயசரிதம்' பேசும் சிறப்புப் பாயிரம் இவ்வாறு அமைந்ததே. ஆனால் அப்பாயிரத்தைத் தொடர்ந்து, பாயிர வகை, தொகை, விரிவினைத் தெரித்துப் பேசும் 55 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் நூல், நூல்வகை, நூல் முறை (உத்தி, அழகு, குற்றம்), நூல் அமைப்பு, நூலைப் படிப்பிக்கும் ஆசிரியர், ஆகா ஆசிரியர், நூலைப் படித்தற்கு ஆகும் மாணாக்கர், ஆகா மாணாக்கர் என்பன பொதுப் பாயிரத்துள் பேசப்படுகின்றன. ஆக்கியோன் முதலான பதினேர் உறுப்புகள், பாயிரம் சொல்லுதற்கு உரியார், தற்புகழ்ச்சிக்குரிய இடங்கள், பாயிர இன்றியமையாமை என்பன சிறப்புப் பாயிரத்துள் கூறப்படுகின்றன. நூலாசிரியனோடு தொடர்பற்று இருப்பது பொதுப்பாயிரம்; நூலாசிரியனோடு தொடர்புற்று இருப்பது சிறப்புப் பாயிரம் எனலாம்.

தமிழ் இலக்கணம், எழுத்து, சொல் பொருள் இவற்றைக் கூறுவது எனத் தொல். காலத்தில் விரிந்திருந்தது. மொழியின் அமைதியையும், மொழியிலக்கியத்தின் அமைதியையும் விரித்துப் பேசுவது இலக்கணம் எனக் கருதப்பட்டது. நாளடைவில், எழுத்து, சொல் என்ற மொழி அமைப்பையும், பொருள் என்ற இலக்கிய அமைப்பையும், யாப்பு என்ற செய்யுள் அமைப்பையும், அணி என்ற பாவமைப்பையும் பேசுவதாக விரிந்தது. இவ்விரிவு கூட வீரசோழிய காலத்தில், விரிந்து, பின்னே மறைந்துவிட்டது. எட்டு நூற்றாண்டுகளுக்குப் பின் தொன்னூல் விளக்கம் எழுதிய வீரமாமுனிவர் (18ஆம் நூற்.) காலத்தில்தான் இலக்கணம் ஐந்து என்னும் மரபு மீண்டும் தலைதூக்குகிறது. இடையில் எழுந்த நேமிநாதம் (12ஆம் நூற்.), எழுத்து, சொல் பற்றியும், பிரயோக விவேகம் (17ஆம் நூற்.) சொல் பற்றியும், இலக்கண விளக்கம் (17ஆம் நூற்.) எழுத்து, சொல், பொருள் பற்றியும், இலக்கணக் கொத்து (17ஆம் நூற்.), வேற்றுமையியல், விகாயியல், ஒழிபியல் பற்றியும் கூறுகின்றன. நன்னூலார் காலத்தில், மொழியின அறிவியல் அடிப்படையில் சிந்திக்கும்

மனப்பான்மை உருக்கொள்ளத் தொடங்கிவிட்டது.[1] சொல்லைப் பலவேறு கூறுகளாகப் பகுத்தறியும் பதவியல் நுண்ணறிவு இதனைத்தான் காட்டுகிறது. இந்தப் புதிய நுட்பத்தைப் பவணந்தி, சமற்கிருத நூல் அறிவினாலும் பெற்றிருத்தல் கூடும்.[2] பதவியல், பாணினியத் தாதுப்படலத்தின் எதிரொலிதான் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். அங்ஙனமெனில், இலக்கணம், மொழியின் எழுத்தையும் சொல்லையும் சொற்றொடரையும் சொற் பொருளையும் ஆராய்வது என்ற தெளிந்த வரையறைக்குச் சுருங்கி விட்டது என்பது தெளிவு. இத் தெளிந்த உணர்வோடு எழுதும் பவணந்தி, 'பாயிரம்' பற்றி வரைவது தேவைதானா? பாயிரம் மொழி இலக்கணத்தையா கூறுகிறது? இவை ஆய்வுக்குரியன.

நன்னூல் மொத்த நூற்பாக்கள் 462. இவற்றுள் பாயிர நூற்பாக்கள் மட்டும் 55 (462 – 55 = 407). பாயிரம் எண்: 37, 41, 42, 43, 44, 45, 52, 54 ஆகிய நூற்பாக்கள் அப்படியே இளம்பூரணர் எழுத்ததிகாரப் பாயிர உரையில் உள்ளன. பாயிரம் எண்: 46, 47, 48, 52, 54ஆம் நூற்பாக்கள் இளம்பூரணர் உரைநடைச் சற்று மாற்றிச் செய்யுளாக்கப் பெற்றவை. பாயிர எண்: 5, 6, 7, 8ஆம் நூற்பாக்கள் இறையனார் அகப்பொருள் உரையில் உள்ளன. பாயிர எண்: 5,6,7,8,10,11, 12 ஆம் நூற் பாக்கள் யாப்பருங்கல விருத்தி உரையில் (10-ஆம் நூற். காணப் படுகின்றன. இவற்றினின்று ஒன்றை உறுதி செய்து கொள்ள லாம். நன்னூல் பாயிரத்தில் உள்ளவை, நன்னூலுக்கு முன்பே வழங்கிய இறையனார் களவியல் உரை, யாப்பருங்கல விருத்தி யுரை, தொல்காப்பிய இளம்பூரணர் உரை என்பவற்றினின்று எடுக்கப்பட்டுள்ளன என்பதே அது.[3]

பாயிரநூற்பா 7, 16, 17 ஆகியன தொல்காப்பியத்தில் உள்ளன. பாயிர எண் 9, 10, 11, 12, 13, 14 ஆகியவை பாடலனார் என்ற இலக்கண ஆசிரியரால் செய்யப்பட்டவை.[4]

---

1. கைலாசபதி, டாக்டர் க., அடியும் முடியும், ப. 26
1. ஐயாபுரிப் பிள்ளை, எஸ்., இலக்கணச் சித்தாந்தங்கள் ப. 11
2. Subramaniam Dr. S., A Critical Study of Tolkappiam and Nannul Madras Uiniversity unpulished thesis 1967, P. 11-12
4. யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியர் குணசாகரர் ஒழிபியல் 8ஆம் காரிகை உரையில் மேற்கண்ட நூற்பாக்களை எடுத்துக்காட்டி, இவை பாடலனாரால் இயற்றப்பட்டவை எனக் குறிப்பிடுகிறார்.

"முன்னோர் மொழிபொருளே அன்றி அவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவம் என்பதற்கும்-முன்னோரின்
வேறுநூல் செய்துமெனும் மேற்கோளில் என்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்"

எனவரும் நன்னூற் பாயிர வெண்பாவை, அதன் முதல் உரை யாசிரியர் மயிலை. (14-ஆம் நூற்.) பாடலனுர் இயற்றியது என்றே குறிப்பிடுகிறர். "தோன்றுத் தோற்றித் துறைபல முடிப்பினும் தான் தற் புகழ்தல் தகுதி இன்றே" என்ற 52ஆம் நன்னூல் பாயிர நூற்பா, தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்கூறும் 53ஆம் நூற்பா ஆகியன பற்றி மயிலை. "இவ்விரண்டு சூத்திரமும் பனம்பாரம்" என்று குறிப்பிடுகிறர். முன்னோர் (9), பஞ்சிதன் சொல்லா (24), உரத்தின் வளம்பெருக்கி (25), மாடக்குச் சித்திரமும் (55) எனவரும் பாயிர நூற்பாக்கள் மட்டும் வெண்பா யாப்பில் உள்ளன. தமிழிலக்கண நூல்கள் ஆசிரியம், ஆசிரிய விருத்தம், வெண்பா, கட்டளைக் கலித் துறை என்ற யாப்பிலேயே பெரும்பாலும் இயற்றப்பட்டுள்ளன. இவற்றுள் பதின்மூன்று நூற்கள் ஆசிரியப்பாவால் இயன்றவை. நான்கு நூல்கள் வெண்பாவால் இயன்றவை. மூன்று நூல்கள் ஆசிரிய விருத்தத்தால் இயன்றவை. ஐந்து நூல்கள் கட்டளைக் கலித்துறையால் இயன்றவை.[1] இவை ஒவ்வொன்றும் ஒரே பாவகையில் தான் இயற்றப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியம் முழுதும் ஆசிரியப் பாவினாலும், நேமிநாதம் முழுதும் வெண் பாவினாலும், வீர சோழியம் முழுதும் கட்டளைக் கலியாலும் இயற்றப்பட்டுள்ளன. ஒரே நூலில் இருவகைப் பாடல்கள் பெரும் பாலும் இயலுவதில்லை.[1] (அவிநயம் இதற்கு விலக்கு). ஆதலின் நன்னூலின் 458 நூற்பாக்கள் ஆசிரிய யாப்பில் செய்யப்பட்டிருக்க, நான்கு மட்டும் வெண்பா யாப்பில் செய்யப்பட்டிருப்பது சிந்தனைக் குரியது. நன்னூல் நூல் உள்ளே யாண்டும் வெண்பாவைக் காணுமாறில்லை. இவை மட்டும் வெண்பா யாப்பில் இருப்பதால், இவை பிற்காலச் சேர்க்கை என்ற ஐயத்திற்கு உள்ளாகிறது. ஈண்டுக் குறிக்கப்படாத ஏனைய பாயிர நூற்பாக்கள் பெரும்பாலனை, இறையனுர் அகப்பொருள் உரை, யாப்பருங்கல முதற்சூத்திர விருத்தி உரை, தொல்காப்பிய பாயிர உரை ஆகியவற்றுள் உரை நடையாக அமைந்துள்ளன. ஏனையவற்றிற்கான மூல நூற்கள் தற்போது கிடைக்காமற் போயிருக்கலாம். பவணந்தியாரால் பெரி தும் பின்பற்றப்பட்டது எனக் கருதப் பெறும் அவிநயம், அதன் உரை இன்று கிடைக்கவில்லை. பாடலம், பனம்பாரம் ஆகிய இலக்கண நூல்களும் இன்று மறைந்துவிட்டன. இலக்கண

1. அறவாணன், க. ப., இலக்கணப் பாயிரங்கள்—ஒரு மதிப்பீடு, வ. சுப்பையா பிள்ளை பவளவிழா மலர், 1973, ப. 153

நூற்கள் ஏறத்தாழ 45உம், உரை நூற்கள் ஏறத்தாழ 35உம் மறைந்து போயுள்ளன.[1] 'மலர்தலை உலகின்' எனத் தொடங்கும் தற்சிறப்புப் பாயிரம் முன்னும், 'முகவுரை...பதிகம்' எனத் தொடங்கும் பாயிர நூற்பாக்கள் ஐம்பத்தைந்தும் அதன் பின்னும், 'பூமலி அசோகின்' எனத் தொடங்கும் எழுத்ததிகார நூற்பா அதன் பின்னுமாக இப்போதைய பதிப்புகளில் பதிக்கப்பட்டுள்ளன. இவ் வைப்புமுறைக்கு மாறுக, மயிலை. 'முகவுரை...' முதலாகத் தொடங்கும் 55 நூற்பாக்களை முன்னும், அதன்பின் 'மலர்தலை' என்ற சிறப்புப் பாயிரத்தையும், அதன்பின் 'பூமலி' என்ற எழுத்ததிகார முதல் நூற்பாவையும் வைத்துள்ளமை ஊன்றி நோக்குதற்குரியது. இவ்வைப்பு மாற்றம் பாயிரம் பவணந்தியார் செய்ததில்லையோ என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கிறது. பாயிரம் பவணந்தியாரால் எழுதப்பட்டிருப்பின், நூலுக்கு முகப்பாக முதலில் அமைய வேண்டியது இறை வணக்கம் அல்லவா? வீர சோழியத்துள்ளும் நேமிநாதத்துள்ளும், தொன்னூல் விளக்கத்தினுள்ளும், இறைவணக்கமும், எழுத்ததிகார முகப்பு வணக்கமும் அடுத்து அடுத்து ஒன்றி நிற்பது கருதத்தக்கது. நூலாசிரியனின் கை வண்ணம் முதன்முதலில் இறைவணக்கத்தையே எழுதும் என்ற பொதுமரபை மனங்கொள்ளின், நன்னூல் 'பூமலி' இறைவணக்கத்திற்குப் பின்னுள்ளவை, பவணந்தியாரால் எழுதப்பட்டவை என்பதும், முன்புள்ளவை, அவரால் எழுதப்பட்டன அல்ல என்பதும் வலியுறும்.

நன்னூல், சூத்திர அடைவைக் குறிக்கும் இரு வெண்பாக்கள், மயிலை., சங்., விசாகப் பெருமாளையர் உரையுள் காணப்படுகின்றன.

"எழுபான் இரண்டுஎழுத்தின்; ஏற்றபதத்து ஐஞ்ஞான்
கொடுமூன்று உயிரீறு ஐம்பான்மூன்று—அருமெய்யீறு
ஆறுறு; உருபியன் மூவாறு ஆம்; எழுத்துரைநூற்
பாஇருநூற் றேரிரண்டாப் பார்"

"பேர்அறு பத்திரண்டு; பின்வினைஎண் ணுன்குபொது
ஓர்அறுபத் தெட்டுஇடை மூவேழின்—மேலொன்று
உரிஇருபத் தொன்றுகச் சொற்சூத் திரத்தின்
விரியிருநூற் றேரைந்தா வேண்டு"

இவ்வெண்பாக்களுள், பாயிர நூற்பாத் தொகை கூறப்படாதது, பாயிரம், நன்னூலின் பகுதி அன்று என்ற எண்ணத்தை உறுதிப் படுத்துகிறது. இவையன்றி, நன்னூல் பொருள் அடைவைக்

1. மயிலை சீனி. வேங்கடசாமியின் 'மறைந்து போன தமிழ் நூல்கள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பெற்ற கணக்கு

காட்டும் இரு கட்டகளைக் கலித்துறைப் பாக்களை மயிலை. எடுத்துக் காட்டுகிறார். இவை உ.வே.சா., சங். பதிப்பிலும் உள்ளன. இப் பாக்களுள் பாயிரப் பொருள் அடைவு குறிக்கப்படாமல், விடுக்கப் பட்டிருப்பது மேற்கண்ட கருத்தை மேலும் வலிவுபடுத்துகிறது. மேற்காட்டிய காரணங்களினால், நன்னூல் பாயிரப் பகுதி, பவணந்தியாரால் எழுதப்பட்டது அன்று என்ற கருத்துக் கிடைக் கப்பெற்று உறுதியாகிறது.

'பாயிரம்' நன்னூலின் உறுப்பாக எப்போது சேர்ந்திருக்கும் அல்லது சேர்க்கப்பட்டிருக்கும்? மயிலை. உரையைத் தவிர ஏனைய உரைகளில், பாயிரம், நன்னூலின் கூறுபோலக் காட்டப் படுவ தால், பாயிரம் மயிலை. காலத்திற்குப் பின் சங். காலத்திற்குச் சற்று முன், நன்னூலின் பகுதியாகவே கருதப்படத் தொடங்கி இருத்தல் வேண்டும். அவ்வாறு கருதி, உரையும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

இவ்வாறு, நூலின் முன்னே, பின்னே, இடையிலோ சில பகுதிகள் சேர்ந்து மூல நூலாகவே மதிக்கப்படும் 'பிறழ்பாடு' இலக்கியத் துறையில் எளிதில் நிகழும். சிலப்பதிகாரக் காதை இறுதியில் உள்ள வெண்பாக்கள் இளங்கோவால் இயற்றப்பட்டன அல்ல. பின் வந்தோர் அவற்றையும் சிலம்பின் கூறுகவே கருதினர். பதிற்றுப்பத்தின் பதிகங்கள், மூல பாவாசிரியர்களால் எழுதப்பட்டன அல்ல. பிற்காலத்தில் அவையும் மூலம் போலக் கருதப்பட்டு உரையும் வகுக்கப்பட்டன. பாரதம் பாடிய பெருந் தேவனரின் கடவுள் வாழ்த்துப் பாட்டுகள் நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு ஆகியவற்றுள் இடம் பெற்றுள்ளன. இவை நூல் பாத்தொகை எண்ணை விஞ்சி இருப் பதினின்று(1+400; 1+200), இவை பழம்பாடல்கள் அல்ல என்பது தெளிவு.[1] ஆனால், பிற்காலத்தில் இவையும் நூலின் உறுப் பாகவே கருதப்பட்டுப் போற்றப் பெற்றன.

இதனைப் போன்றே, மயிலை. காலத்திற்குப் பின், பாயிர நூற் பாக்களையும் நன்னூல் உறுப்பாகக் கருதும் மரபு உருவாகி நிலைத்துவிட்டது.

இயல்கள்: இயல்களின் பெயரிலும், வைப்புமுறையிலும் பேரளவு வேறுபாடு இல்லை. எனினும், பொதுவியல் வைப்பிடம் பற்றியும் இடையியல், உரியியல் பெயர்கள் பற்றியும் உரை

1. சத்தியமூர்த்தி, சி., கடவுள் வாழ்த்துப் பாடிய கவிஞர், கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை ஆய்விதழ், தொகுதி 2, 1971, ப. 68

காரர்களிடையேயும், பதிப்பாளர்கள் இடையேயும் வேறுபாடுகள் உள்ளன.

பொதுவியல் வைப்புமுறை: பெயரியலையும் வினையியலையும் அடுத்துப் பொதுவியல் வைக்கப்பட்டிருக்கிறது. பொதுவியலுக்குப் பின்னே இடையியலும் உரியியலும் இடம்பெற்றுள்ளன. பொதுவியல், தொல்காப்பிய எச்சவியல் போன்றது. செய்திகளிலும் எச்சவியலை ஒத்தே பொதுவியல் செல்கிறது. பெயர் வினை இடை உரி நான்கிற்கும் பொதுவான எஞ்சிய செய்திகளை அறிவிக்கிறது, பொதுவியல். ஆதலின், பெயர் வினை இடை உரியியல்களை அடுத்துப் பொதுவியல் இடம்பெறுதலே முறை. இயல்பான பொது இலக்கணங்களை முன் பேசி, ஒழிபிலக்கணத்தை இறுதியில் பேசுதல் தானே தமிழிலக்கண நெறி? தொல்காப்பியரும் எச்சவியலை ஈற்றில்தானே போற்றியுள்ளார். ஆதலால், தமிழிலக்கண மரபையும், தொல். வைப்பொழுங்கையும் பார்த்த அறிஞர் சிலர், பொதுவியலை, இறுதி இயலாக வைத்து உரையெழுதி யுள்ளனர். 1840இல் விருத்தியுரை வகுத்த இராமானுச கவிராயர், 1878இல் நன்னூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த இலாசரசு, 1922இல் பல உரைகளை ஒப்பிட்டுப் பதிப்பித்த பவானந்தம் பிள்ளை ஆகியோர் பொதுவியலை, இறுதி இயலாக வைத்தே, பதித்து, உரை எழுதியுள்ளனர். பெயர், வினை, இடை, உரி, பொதுவியல் என்றே அமைந்திருத்தல் வேண்டும் என்ற கருத்தில் கவிராயர் தரும் விளக்கம் தருக்க நெறிக்குட்பட்டது.[1] பெயர்ச்சொல், பொருளை விளக்குதலால் பெயரியல் எனப் பெயர்தந்து முதலிலும், வினைச்சொல் பொருளினது புடை பெயர்ச்சியை விளக்குதலால் வினையியல் எனப்பெயர் தந்து அதன் பின்னும், இடைச்சொல், இப் பெயர்வினை இரண்டிற்கும் உறுப்பாகி அவற்றைச் சார்ந்து வருதலால் இடையியல் எனப்பெயர் தந்து அவற்றின் பின்னும், உரிச்சொல் முற்கூறிய பொருளினது குணப்பண்பு தொழிற் பண்புகளை விளக்கி நிற்றலால் உரியியல் எனப்பெயர் தந்து அவற்றின் பின்னும், இப்பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களின் ஒழிபையும் பொதுமையின் விளக்கி நிற்றலால் பொதுவியல் எனப் பெயர்தந்து ஈற்றின் கண்ணும் வைக்கப்பட்டன. இவ்வைப்பு முறை, 'ஒத்துமுறை வைப்பு, என்னும் உத்தியின் பாற்படுவதாகும். இவ்வாறு வைக்காமல் பெயர், வினை, பொது, இடை, உரி என்று அமைத்துச் 'சிங்க

1. இராமானுச கவிராயர், நன்னூல் காண்டிகை உரை 1840, சொல்லதிகார முன்னுரை பார்க்க

நோக்கு' என்று சூத்திரநிலை காட்டி விளக்கினர் சில உரைகாரர். அஃது பொருத்தம் இல்லை என்பதைக் கவிராயர் நிறுவுகிறார்:

"சிங்கநோக்கமென்று பெயர் விளை இடை யுரி நான்கிற்கும் இடையிலே பொதுவியலை வைத்து இம்முறை பிறழக் கூறுவாரும் உளர். அது பெயர் வினை இரண்டிற்கும் பொதுமை எனப் பொருள்படுமன்றிப் பின்னிற்பனவற்றிற்கும் பொதுமை எனப் பொருள்படாமையானும், படினும், பெயர்வினை இரண்டிற்கும் ஒரு கூறு பொதுமை; மற்றொரு கூறு இடையுரி இரண்டிற்கும் பொதுமை; எனப் பொருள்பட்டு இடர்ப்பட நிற்குமாதலானும், அவ்வாறு கூறுதல், 'முன்னோர் நூலின் வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்' என்றதற்கு மாறுகொளக் கூறலாமாதலானும், நூலாசிரியர் முதலியோர் கருத்தன்றுதலானும், நூன்முறை அன்றுதலானும் அது பொருந்தாதென மறுக்க. இன்னும் இது இந்நூலுடையார்க்கும் கருத்தன்றென்பதை அவர், பெயர் வினை இடை யுரி எனச் செவ்வெண்ணை இடமிடந்தோறுமெண்ணி இலக்கணங் கூறுதலால் காண்க?" சிங்கநோக்காக, பொதுவியல் நடுவில் நின்றது என்று கூறினும், கவிராயர் அமைத்த வைப்பு முறை தமிழிலக்கண மரபிற்கு முரணுவதன்று; தொல். வைப் பொழுங்கிற்கு எதிரானதன்று என்பது ஈண்டு கருதத்தக்கது.

இடையியல், உரியியல் பெயர்ப்பொருத்தம்: இடையியல் உரியியல்களின் பெயர்பற்றி நன்னூல் உரையாசிரியர்க ளிடை மிகுந்த கருத்து வேறுபாடு நிலவுகிறது. இடையியல், உரியியல் என்று சிலரும், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல் என்று பலருமாக இவ்வியல்களின் தலைப்புகளை வரைந்துள்ளனர். இடையியல், உரியியல் என்ற பெயர்கள் தொல்காப்பியத்தை ஒட்டியும் முன்னைய இயல்களைப் (பெயர் + இயல் = பெயரியல்; வினை + இயல் = வினையியல்) போலவே இடையியலும் உரி யியலும் அமைதல் வேண்டும் எனக் கருதியும் சில உரைகாரர்கள் இத் தலைப்பைப் போற்றினர் போலும். ஆனால், நன்னூல் உரையாசிரியர்கள் பலர் இத்தலைப்புகளைப் பின்பற்றவில்லை என்பது ஒப்பீட்டு ஆராய்ச்சியால் புலனாகிறது.

நன்னூலை முதன் முதல் அச்சிட்டு 1835இல் வெளியிட்ட தாண்டவராய முதலியார், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல் என்றே பதிப்பித்துள்ளார். தொல்பழம் உரைகாரர் மயிலை., நன்னூலுக்கு முதற் காண்டிகை உரை 1839இல் வகுத்த விசாகப் பெருமாளையர், 1840இல் புதிய விருத்தியுரை அளித்த

கவிராயர்,[1] 1853இல் நன்னூலைத் தழுவி ஆங்கிலத்தில் தமிழிலக்கணம் வரைந்த அருணாசலம் பிள்ளை, 1858இல் தொல் காப்பிய நன்னூல ஒரு சேரப் பதிப்பித்த என். சாமுவேல் பிள்ளை, 1866இல் நன்னூற் சுருக்கம் வெளியிட்ட க. பெ. சவுந்தரநாயகம் பிள்ளை, 1884இல் ஆங்கிலத்தில் நன்னூலைப் பெயர்த்து வெளி யிட்ட இலாசரசு, 1936-இல் நன்னூல நன்கு பதித்து வெளியிட்ட கா. நமச்சிவாய முதலியார் ஆகிய அனைவரும் 'இடைச் சொல்லியல், உரிச்சொல்லியல்' என்றே வழங்கி, உரையும் எழுதி யுள்ளனர். சங். இக்கொள்கையினரே என்பது தமிழகஅரசு ஓலைச் சுவடி நூலகத்தில் உள்ள எண் 60. சங். உரைப்பிரதியினின்று தெரிய வருகிறது.

நன்னூல் நூற்பாக்களைப் பார்க்கும்போது இவ்வாறு பெயரிட்டு வழங்குவதே மிக பொருத்தமெனத் தோன்றுகிறது. பெயர் பற்றிய 275ஆம் நூற்பாவில், 'பெயர்' என்றும், வினையிலக்கணம் பற்றிய 320-ஆம் நூற்பாவில் 'வினை' என்றும் மட்டுமே குறிப்பிட்ட பவணந்தியார் இடையிலக்கணம் பேசும்போது (420) 'இடைச் சொல்' என்று விதந்தும், உரியிலக்கணம் கூறும்போது (442) 'உரிச்சொல்' என்று விதந்தும் குறிப்பிடுகிறார். இடைச்சொற் களிலும் உரிச்சொற்களிலும் பெரும்பாலான, ஏனைய பெயர் வினை களைக் காட்டிலும் குறையுடையன அல்ல; அவையும் சொற்களே என்று தனித்து எடுத்துக் காட்டுவான் வேண்டிய பவணந்தியார், இடைச்சொல், உரிச்சொல் என்ற விதந்து கூறியிருத்தல் கூடும். இக்கருத்திலேயே பின்வந்த உரைகாரர்களும் இடைச்சொல்லியல் உரிச்சொல்லியல் என்று போற்றியவராதல் வேண்டும். ஆதலின் இப்பெயர்களே, நன்னூலார் போற்றிய இயல்களின் பெயர்களாக இருத்தல் வேண்டும்.

நன்னூல் யாப்பு: இந்நூல் நூற்பா அகவலால் இயன்றது. சங். உரைப்படி 462 நூற்பாக்களும் மயிலை. உரைப்படி 461 நூற்பாக் களும் உள்ளன. மொத்தம் 1029 அடிகளாய் உள்ள இந் நூற்பாக் களில் ஆளப்பட்ட சொற்கள் 1601 ஆகும்.

---

1. 1840இல் இராமானுச கவிராயரே, தம் நன்னூல் காண்டிகை உரையைப் பதிப்பித்தார். இப்பதிப்பில், இவர் இடைச் சொல்லியல், உரிச் சொல்லியல் என்றே பதிப்பித்துள்ளார். 1940இல் கா. ர. கோவிந்தராச முதலியாரால் வெளியிடப் பெற்ற இரண்டாம் பதிப்பில் இவைமாற்றப் பட்டு, இடையியல், உரியியல் என்றே பதிப்பிக்கப்பட்டு விட்டன. சங். உம் இக்கருத்தினரே—தமிழக அரசு ஓலைச்சுவடி நூலக ஏடு எண். 60 உ. வே. சா. நூலகச் சுவடி எண் 126, 127—ஐப் பார்க்க

நன்னூல் நூற்பாத் தொகை வகை விளக்கம்

(இருதலைப் பிறைக்குட்பட்ட எண்கள் நூற்பாவைக் குறிப்பன)



எழுத்ததிகாரம் (56-257)

1. எழுத்தியல் (56–127)

கடவுள் வணக்கமும் அதிகாரப் பெயரும் (56); எழுத்திலக்கணப் பாகுபாடு (57)



புறனடை : சந்தியக்கரம் (125)
எழுத்தின் சாரியை (126)
எழுத்தியல் புறனடை (127)

2. பதவியல் 128—50



புறனடை : வடமொழியாக்கம் 146-149
தமிழிற் சிறப்பெழுத்தும்பொதுவெழுத்தும் 150

3. உயிரீற்றுப் புணரியல் 151-203



4 மெய்யீற்றுப் புணரியல் 204-239



5. உருபு புணரியல் 240 257



புறனடை: சாரியைகட்குப் புறனடை – 252

நால்வகைப் புணர்ச்சிக்கும் புறனடை 254

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி 255

மூன்றும் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி 256

எழுத்ததிகாரத்திற்குப் புறனடை 257

சொல்லதிகாரம் 258-462

1. பெயரியல் 258–319

கடவுள் வணக்கமும் அதிகாரத் தொடக்கமும் 258



2. வினையியல் 320–351



3. பொதுவியல் (352-462)



4. இடையியல் 420-441

இடைச்சொல்லின் இலக்கணம் 420

இடைச் சொல்லின் பொருள்கள் 421

இடைச் சொற்கள் 421–441



5. உரியியல் 442-462

உரிச்சொல்லின் இலக்கணம் 442

பொருட்குணம் 443

- உயிருடைப் பொருள் 444
  - ஓரறிவுயிர் 445
  - ஈரறிவுயிர் 446
  - மூவறிவுயிர் 447
  - நாலறிவுயிர் 448
  - ஐயறிவுயிர் 449
  - உயிருடை பொருட்குணப்பண்பு 452
  - உயிருடை பொருட்களின் தொழிற்பண்பு 453
- உயிரில் பொருள் 450–451
  - உயிரில் பொருட் பண்பு 454

இருபொருட் பொதுப்பண்பு 455

ஒருகுணம் குறித்த பல உரிச்சொல் 456, 458, 459

பலகுணம் குறித்த ஓர் உரிச்சொல் 457

இயலுக்குப் புறனடை 460

சொல்லதிகாரப் புறனடை 461

நூல் புறநடை 462

இரண்டாம் பகுதி

நன்னூல் உரைகள்- விளக்க இயலாய்வு

6

உரையின் வரலாறு

உரை இல்லாத காலம்: தமிழிலக்கியத் துறையைப் பொறுத்த வரை செய்யுள் இலக்கியமே மூத்த பிள்ளை. பாவலர்களின் நெஞ்சில் கருவிருந்து ஏட்டெழுத்தில் உருவெடுத்த பாக்கள் அனைத்தும் தோன்றியபோது எல்லார்க்கும் விளங்கியிருத்தல் வேண்டும். விரிவுரை, விளக்கத்தின் துணையில்லாமலே பண்டைய மக்கள் பயின்றிருத்தல் வேண்டும். இலக்கியம் மட்டுமல்லாது அன்று தோன்றிய இலக்கணங்கள் கூட, உரையில்லாமல் புரிந்து கொள்ளப்பட்டன. 'உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலம் உண்டு' என்றும், 'உதாரணங் காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரை நடந்த காலமும் உடையவாகும் முற் காலத்து நூல்கள் என்பது கருத்து' என்றும் பேராசிரியர் தம் முரையில் கூறியுள்ளவை[1] மேற்கண்ட செய்தியை உறுதிப் படுத்தும்.

உரை தோன்றிய காலம்: ஒரு காலத்தில் தோன்றிய இலக்கிய இலக்கணங்கள் அவை தோன்றிய காலத் தலைமுறைக்கு விளங்கியிருக்கும். தலைமுறைகள் கடக்கும்போது, அவ்வப்போது ஆளும் அரசுகள் மாறுகின்றன. ஊடே ஊடே அயலினத்தாரின் பாதிப்புகளும் கலக்கின்றன. இவற்றை எல்லாம் கடந்து இலக்கியம் வாழும்போது, அவ்விலக்கியம் அக்காலத்தினரால் முற்றப் புரிந்துகொள்ள இயலாமற் போய்விடக் கூடும். இக் கட்டத்தில்தான் உரையாசிரியர்கள் பிறக்கிறார்கள். அவர்களிடமிருந்து உரைகள் பிறக்கின்றன. அவற்றைப் பயில்பவர் பிறக்கிறார்கள். இப்பிறப்பு தமிழில் கி. மு. சில நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டது. தொல். இச்செய்தியை உறுதி செய்கிறார்.[2]

---

1. பேராசிரியர் உரை, மரபியல், 98, 101
2. தொல்காப்பியம், செய்யுளியல், 288

எழுதாக்கிளவி — வாய்மொழி இலக்கியம் : பழங்காலத்தில் ஓர் ஆசிரியரிடம் பல மாணாக்கர் உடன் உறைந்து கற்பர். ஆசிரியர் குறிப்பிட்ட நூல்களுக்கு உரை கூறி விளக்குவர். மாணாக்கர் கேட்பர். பார்த்துப் படிக்கும் கல்விச் செல்வத்தைவிட கேள்விச் செல்வமே அக்காலத்தில் இயலக் கூடியது. திருவள்ளுவர் கேள்வியை ஒரு செல்வமாகவே போற்றியதற்கும், 'கற்றிலனாயினும் கேட்க'[1] என்று ஆணையிட்டதற்கும் இச்சூழ்நிலையே காரணம். அக்காலத்து எழுதிப்படிப்பது என்பது மிகத் துன்பமானது. ஏடுகள் எங்காகிலும் ஓரிரு இடங்களிலேயே இருக்கும். அவற்றை ஒவ்வொருவரும் பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதிப்படிப்பது என்பது கடுமையான செயல். வீண் கால நீட்சி; வீழ்ச்சி. இதனால் குறிப்பிட்ட ஓர் ஆசிரியரிடம் உள்ள குறிப்பிட்ட நூல்களின் ஒவ்வொரு ஓலைச்சுவடியைக் கொண்டு எல்லாரும் பயில்வராயினர். ஆசிரியர் ஒவ்வொன்றுக விளக்கிச் சொல்ல மாணாக்கர் கூர்ந்து கேட்பர். 'செவி வாயாக நெஞ்சு களனாக' என்று பவணந்தியார் குறித்தது இதுபற்றியே. பாடம் கற்போர் இயல்பு என்று குறியாமல் மாணாக்கர் பாடம கேட்கும் இயல்பு என்று மயிலை. கொளு எழுதியதும் இது பற்றியே.[2] ஆசிரியரும் மிகுதியாக எழுதி விளக்க வேண்டிய வற்றை எழுதாமல், வாயால் கூறியே விளக்கி வந்தனர். 'விரிப்பின் பெருகும்', 'விரிவஞ்சி விடுத்தாம்', 'வல்லார் வாய்க் கேட்டுணர்க' என்று உரையாசிரியர்கள் இடையிடையே எழுதிச் செல்லும் வழக்கம், அக்காலத்தில் எழுதுவதில் இருந்த இடர்ப் பாட்டை உணர்த்தும். நூல்களுக்கு உரை எழுதாமல், வாயால் விளக்கிச் செவியால் கேட்டுக் கல்வி கற்றுப் புலமை பெறும் வழக்கம் அக்காலத்தில் நாடெங்கும் பரவியிருந்தது.[3] 'உரை' என்ற சொல்லும் தமிழில் 'சொல்' என்றே பொருள்படுதல் இக்கருத்தை வலியுறுத்தும் துணைச்சான்றாகும்.[4] இதனால் தொடக்கக் காலத்தில் தோன்றிய உரைகள், வாய்மொழி இலக்கியங்களாயும், எழுதாக் கிளவிகளாயும் ஆசிரியரிடத்தும், மாணாக்கரிடத்தும், தந்தையிடத்தும், மகனிடத்தும் வாழ்ந்து கொண்டிருந்தன. காலம் செல்லச்செல்ல இலக்கியத்தின் பழைமை முதுமையாகிக் கொண்டு வருவதும், தலைமுறை தலைமுறையாகத் தாண்டி வரும்போது பல புதிய விளக்கங்கள் பெருகுவதும் இயல்பு. மலை மேலிருந்து உருண்டு வரும் சிறியதொரு பனிக்கட்டி,

1. திருக்குறள், 414
2. நன்னூல், பாயிரம், 39
3. அரவிந்தன், மு. வை., உரையாசிரியர்கள், 1968, ப. 5
4. சஞ்சீவி, டாக்டர் ந., ஆராய்ச்சிக் கட்டுரைகள், 1970, ப. 20

அடிவாரம் அடைகையில் பனிப்பாறை யாகி விடுதலைப் போல வாய்மொழி உரையும் கால நீட்சியில் பல்கிப் பெருகியிருத்தல் வேண்டும். இச் சமயத்திலேயே காலந்தோறும் புதுப்புது இலக்கியங்கள், இலக்கணங்கள் தொடர்ந்து தோன்றிக்கொண்டே யிருந்தன. இக்கட்டத்தில் பின்வந்த அடுத்தடுத்த தலை முறைக்கு முன்பிருந்த இலக்கிய இலக்கணங்கள், அவற்றிற்கான உரைகள், முன்னைய தலைமுறைக்கு இருந்ததை விடக் கூடுதல். இதனால், எல்லாவற்றையும் கேட்க முடியும் என்றாலும், எல்லா வற்றையும் நெஞ்சில் நிறுத்துவது அரிதாயிற்று. இக்கால கட்டத்தில்தான் உரைகளை எழுதிக் கற்க வேண்டிய நிலைமையும் காப்பாற்ற வேண்டிய கட்டாயமும் உருவாகி இருக்கின்றன. இவ்வாறு காப்பாற்றப்பட்ட உரைகளும் ஏட்டில் எழுது வதில் இருந்த தொல்லைகளால் தொடக்கத்தில் குறிப்புரை களாகவே அமைந்தன. அரிய சொற்களுக்குப் பொருளும், சொற்களைக் கொண்டு கூட்டி முடிக்கும் முறையும், சில வரலாற்றுக் குறிப்புகளுமே இவற்றில் இடம் பெற்றன. சிலப்பதிகாரத்திற்கு முதலில் தோன்றியது அரும்பதவுரைதான். ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றிற்கு இயற்றப்பட்ட பழைய உரைகள் குறிப்புரைகளே. அகநானூறு தொண்ணூறு பாடல்களுக்கு மட்டும் அமைந்த ஆதியுரையும் குறிப்புரையே.

இலக்கண உரைத்தோற்றத்திற்குக் காரணம்: இலக்கியங் களின் மொழிநடையை விட, இலக்கணங்களின் நூற்பா நடை மிகுந்த செறிவுடையது. அதனால் இலக்கியங்களை விட, இலக்கணங்களுக்கு உரை மிக இன்றியமையாததாயிற்று. இலக்கணக் கோட்பாடுகளை எடுத்துக்காட்டுகளின்றித் தெளிவு படுத்த இயலாது. அறிவியல் பாடங்களுக்குச் செய்முறைப் பயிற்சிகளைப் போல இலக்கண விளக்கத்திற்கு எடுத்துக் காட்டுகள் இன்றியமையாதவையாகும். இலக்கிய உரைகளைக் காட்டிலும் இலக்கண உரைகளில் மேற்கோள்கள் மிகுந்து காணப்படுவதற்கு இதுவே காரணமாகும். எனவேதான் யாப்பருங்கல விருத்தியில் ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு மேற்கோள்களும், நச்சினார்க்கினியரின் சொல்லதிகார உரையில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட மேற்கோள்களும், தொல். பொரு ளதிகார உரையில் ஆறுயிரத்திற்கு மேற்பட்ட மேற்கோள்களும் காணப்படுகின்றன. ஆனால், இலக்கிய உரைகளாகிய புற நானூற்று உரையில் ஐம்பதிற்கும் குறைவான மேற்கோள்களும், பத்துப்பாட்டு உரையில் இருநூறு மேற்கோள்களும், திருக்குறள் பரிமேலழகர் உரையில் ஏறத்தாழ மூன்நூறு மேற்கோள்களும்

எடுத்தாளப்பட்டுள்ளன.[1] இப்புள்ளி விவரம், இலக்கியத்தை விட, இலக்கணங்களில் மேற்கோள் மிகுதியாக ஆளப்பட்டிருத்தலைக் காட்டுகிறது. நூற்பாக்களை விளக்க எடுத்துக்காட்டுகளே போதுமானவை என்ற கருத்தும் ஆசிரியர்களிடையே நிலவியிருக்கிறது. புறப்பொருள் வெண்பா மாலையின் அமைப்பு இக்கருத்தை வலியுறுத்தும். அந்நூலின் ஆசிரியர் ஐயனரிதனார், மயேச்சுரர், அமிதசாகரர், தண்டியாசிரியர், சுப்பிரமணிய தீட்சிதர் முதலியோர் மூல விளக்கத்திற்கு எடுத்துக்காட்டுகளைச் சிறப்பாகக் கருதினர். உரையாசிரியர்களில் சிலர் இலக்கண நூற்பாக்கள் சிலவற்றிற்கு உரையெழுதாமல் எடுத்துக்காட்டுகளை மட்டும் எழுதிச் செல்லும் வழக்கம் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. பெயர் தெரியாத தொல்காப்பிய பழைய உரையாசிரியர், தம் சொல்லதிகாரம் கிளவியாக்க உரையில், 6,7,8,9ஆம் நூற்பாக்களுக்கு உரை எழுதவில்லை. எடுத்துக்காட்டுகள் மட்டுமே காட்டியுள்ளார். தேசிகர், தம் பிரயோக விவேக நூல் உரையில், செம்பாதிக்குமேல் நூற்பாக்களுக்கு உரை எழுதாமல் எடுத்துக்காட்டுகளை மட்டுமே கொடுத்துள்ளார். காலப் போக்கில், இக்குறிப்புரை, மூலபாடம் சொல்லல், கருத்துரைத்தல், சொல் வகுத்தல், சொற்பொருள் உரைத்தல், பொழிப்புரைத்தல், உதாரணங் காட்டல், வினாத்தோற்றல், விடை கொடுத்தல், விசேடங் காட்டல், விரிவு காட்டல், அதிகார வரவுகாட்டல், துணிவு கூறல், பயனெடு படுத்தல், ஆசிரிய வசனம் காட்டுதல் என்ற பதினென்கு பகுதியாக விரிந்து வளர்ந்தது.[2] இவ்வளர்ச்சி பன்னூறு ஆண்டுகளின் வளர்ச்சியாகும். இவ்வளர்ச்சி, பவணந்தியாரை ஒட்டிய காலத்திலேயே முழுமையடைந்து விட்டது.

பழைய உரையாசிரியர்களின் பெருமை : பழைய இலக்கிய இலக்கணங்கள், இன்றைய பொதுமாந்தர் புரிந்துகொள்ளும் எல்லைக்கு அப்பாற் போய்விட்டவை. அப்படியே மொழியை உணர்ந்து கொண்டாலும், மொழியில் அடங்கிய நோக்கங்களையும், மரபுகளையும், குறிப்புகளையும் முற்ற உணர்ந்து கொள்வது மிகக் கடினம். இக்கடின நிலையை மாற்றி, பண்டைய நூல்களை எளிதாக உணர்ந்து கொள்ள வழி அமைத்தவர்கள் பண்டைய உரையாசிரியர்களே. இக்காலத்திற்கும், பண்டைத் தமிழர் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் உரைகாரர்கள் வாழ்ந்தார்கள். ஆதலின் இக்காலத்தாரை விட மிகுந்த அளவில் பழைய நூல்களை நன்கு புரிந்துகொண்டு அவர்களால் விளக்கம் கூற முடிந்தது.

1. தாமோதரன், டாக்டர் அ., திருக்குறள் மேற்கோள் விளக்கம், 1970 ப.20
2. மயிலைநாதர் உரை, நூற்பா 20.

இடைக்காலத்தில் உரைகாரர்கள் தோன்றாமல் போயிருப்பாராயின், பழந்தமிழ் இலக்கணங்களும் இலக்கியங்களும் மேலும் பல கிடைக்காமல் காலவெள்ளத்தில் அழுந்தியிருக்கும். பொருளதிகாரம் வல்லாரைத் தகைப்படவில்லையே என்று பாண்டிய மன்னன் கவன்றதும், இசை உணர்ந்தாரைக் காணவில்லையே என்று நம்பியாண்டார் நம்பி வருந்தினதும் ஆகிய வரலாற்று நிகழ்ச்சிகள் ஈண்டு நினைக்கத்தக்கன. எகிப்து, கிரேக்க முதலான நாடுகளின் பண்டைய மொழி வேறு; இக்கால மொழி வேறு. இரண்டிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. நாகரிகமும் அங்ஙனமே வேறு வேறுகி விட்டது. அந்நாடுகளின் மொழியும் நாகரிகமும் தனித்தனியாகத் துண்டிக்கப்பட்டு விட்டன. இஃதே போன்ற ஒரு நிலைமை தமிழ் நாட்டிலும் நிகழ்ந்திருத்தல் கூடும். மொழியைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில், இத்தகையதொரு துண்டிப்பு ஏற்படாதவாறு உரையாசிரியர்களே காப்பாற்றினர்கள். இத்துண்டிப்பு ஏற்படாமல் காத்துப் பின் வரும் தலைமுறையினருக்கு அந்த மூல நூல்களை எடுத்து வழங்கியவர்கள் இவ்வுரைகாரர்களே.[1] தனியே உரைநடை (Prose writing) தமிழில் தழைக் காமற் போயினும், உரையாசிரியர்களின், உரைத்தமிழ் செழித்து வளர்ந்தது. இவ்வுரைத் தமிழும் இல்லாமற் போயிருக்குமானால், தமிழ் உரைநடை வரலாற்றின் தொன்மை மறுக்கப்பட்டிருக்கும். தொல்காப்பியர்க்கு முன்பிருந்து தொடங்கிய தமிழ் உரை வரலாறு பன்னூறு ஆண்டுகளில் நன்கு செழித்துவிட்டது. நன்னூலுக்கு உரைகாரர்கள் தோன்றுதற்கு முன்னேயே, சில உரையாசிரியர் முன்னோடிகள் சிறந்த உரைக்குரிய வழித்தடம் அமைத்திருந்தார்கள். சிலர் பெருஞ்சாதனையே நிகழ்த்தியிருந்தார்கள். இறையனார் களவியலுக்கு உரை வகுத்த நக்கீரர் இப் பெருமைக்கு உரியவராவார். தமிழ் உரைநடையில் கட்டுரைக் கலைக்குத் தந்தையார் நாவீறு படைத்த நக்கீரனார் என்றும், அவர் உரை 'உரைநடையின் ஊற்றிடம்' என்றும் ஆராய்ச்சி அறிஞர் போற்றுவர்.[2]

நன்னூல் உரைகள் எழுந்த சூழல்: கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த இறையனார் களவியல் உரையிலிருந்து உரை வரலாற்றின் வளப்பமான கட்டம் தொடங்குகிறது. எனினும் கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் உரைகள் பல்கத் தொடங்கின. இக்காலம் சோழர் காலம். தமிழ் நாட்டு அரசியலில் வேற்று நாடுகளையும் வெற்றிகொண்டு ஆட்சி நடாத்திய

1. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 13ஆம் நூற். ப. 148
2. சஞ்சீவி, டாக்டர் நா., கட்டுரைக்கலை ஆராய்ச்சிக் கட்டுரைகள், ப. 153

காலம் இது. அரசியல் சமூக சமய நிலைகள் புதிய வேகத்தில் புதிய சூழலில் இலக்கியத் துறைக்கு ஆக்கம் கொடுத்துக் கொண்டிருந்தன. சமயங்கள் ஒன்றோடொன்று போராட்டம் இல்லாமல் தத்தம் போக்கில் இயங்கிக் கொண்டிருந்தன. சைவ, வைணவ சமயங்கள் அரசியலைச் சார்ந்து ஆதிக்கம் பெற்றிருந்தன. எனினும், அவை பல்லவர் காலத்தைப் போல, சமண பௌத்த சமயங்களை ஒடுக்கும் பணியில், ஒழிக்கும் பணியில் காலத்தை அழிக்கவில்லை. இதனால் அனைத்துச் சமயத்தாரும் கடவுட் பணிகளிலும், கடவுள் நூற்படைப்புப் பணிகளிலும், பழைய நூல்களுக்கு உரை காணும் பணிகளிலும் ஈடுபட்டார்கள்.

சைவ சித்தாந்தம், விசிஷ்டாத்வைதம் முதலான தத்துவங்கள் நாட்டிலே பரவின. அவை முதன்முதலில் செய்யுள் வடிவத்தில் வரத்தொடங்கின. அந்நூல்களில் காணப்படும் கருத்துகள் மக்களுக்குத் தெளிவாக விளங்கும் பொருட்டு அவற்றிற்கு உரைகள் வகுக்கப்படலாயின. தத்துவக் கொள்கைகளைத் தருக்க (Logic) முறைப்படி விளக்க வேண்டியிருந்ததனாலே தமிழ் உரைநடை புதுவழியில் கிளைத்துத் தழைக்கலாயிற்று.

சோழர்கால சமற்கிருத உரைகள் : பிற்காலச் சோழர் காலத்தில் சமற்கிருதக் கல்வி, பேருக்கத்தோடு வளர்க்கப்பட்டது. அம்மொழியை வளர்ப்பதில் சோழர்கள் தனி அக்கறை காட்டினர்கள். இதனால் பல சமற்கிருத மூல நூல்களே சோழ மன்னர்களின் அரவணைப்போடு எழுதப்பட்டன. அன்றியும் உரைநூல்கள் பலவும் இக்காலத்தில் இயற்றப்பெற்றன. இவ்வாறு உரைகளும் மூல நூல்களும் தோன்றிய இக்காலச் சூழல் தமிழறிஞர் களையும் சமற்கிருதம் அறிந்த தமிழறிஞர்களையும் தூண்டியிருத்தல் வேண்டும். வேங்கடராமா மகனன மாதவனும், சுந்தரியும் காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு சிற்றூரில் தங்கி ரிக்வேதத்திற்கு விரிவான உரை வகுத்தார்கள். உலகையே வெற்றிகண்ட வீரரைப் போல இன்பமான சூழலில் இருந்து உரை எழுதினதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த அத்வைதா என்பவர் சூத்திர இலக்கியத்திற்கு மிகச் சிறந்த தோர் உரை எழுதினர். இவரெழுதிய பதஞ்சரி என்ற உரை மிகச் சிறந்த ஒன்றாகும். பரதாசுவாமின் என்பார் சாமவேதத்திற்கு உரை வகுத்தார். இச்சமயத்திலேயே சத்குரு சிஷ்யா என்பவர் ஐத்ரேய பிராமணத்திற்கும், ஆரண்யாவிற்கும் உரை எழுதினர். இவற்றுடன் அவர் சர்வானுக்கிரமணி என்ற கார்த்தியாயரின் நூலிற்கும், ஆசுவதாயன சிரௌத்த சூத்திரத்திற்கும் உரை வகுத்தார். இதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஷ்ணு

சித்தர், விஷ்ணு புராணத்திற்கு உரை எழுதினர். இராமாயணத்திற்கு ஈடு ஆக எழுதப்பட்ட உதாலியின் விவேக திலகா இக்காலத்ததுதான். பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்த 'தார்திக ரட்சா' என்ற நூலின் ஆசிரியரான வரதராசன் உதயணனைப் பற்றிய, 'குசுமாஞ்சலி'க்கு ஓர் உரை எழுதினர். சைவ சித்தாந்தத்தைச் சார்ந்தும் பல பாடியங்கள் சமற்கிருதத்தில் எழுதப்பட்டன. ஹரதாத்தாச்சார்யாவும், இவரைத் தொடர்ந்து ஸ்ரீகண்டாவும் சைவ பாஷ்யங்களை எழுதினர். அகோர சிவாசாரியாரும் உமாபதி சிவாசாரியாரும் தமிழர்கள். இவர்களும் நிரம்ப விளக்கவுரைகளைச் சமற்கிருதத்தில் எழுதினர். சூரியனார் கோயிலைச் சார்ந்த ஜ்ஞான சிவாசார்யா, சிவஞான போதத்திற்குச் சமற்கிருதத்தில் பாடியம் எழுதினர். பதின்மூன்றும் நூற்றாண்டில் கிருஷ்ண லீலாசுகர், 'புருஷகாரா' என்றதோர் உரையை எழுதினர். இவ் வுரைகள் அனைத்தும் சோழர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 9–ஆம் நூற்.–13–ஆம் நூற்.), அவர்தம் ஆட்சி நிழலில், அவர்தம் ஆளுகைக் குட்பட்ட நாடுகளில் எழுதப்பட்ட சமற்கிருத உரைகளாகும்.[1] இதே போலப் பிற தென்னிந்தியப் பகுதிகளிலும் வேதாந்தத் தத்துவங்களுக்கு வடமொழியில் சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகியோரால் சூத்திரங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை ஆகியவற்றிற்குப் பல பேருரைகள், இக்காலத்தை ஒட்டியே சற்று முன்னும் பின்னுமாக எழுதப்பட்டன. தமிழகத்தில் குடியிருந்த சமணரும் பௌத்தரும் பிராகிருத மொழிகளையே முதலில் கையாண்டு வந்தனர். அதனுடன் தமிழையும் நன்கு கற்றிருந்தனர். அவர்தம் சமய நூற்கள் அனைத்தும் சமற்கிருதத்திலும் பிராகிருதத்திலுமே இருந்தன. இவற்றிலுள்ள உண்மைகளை மக்களிடம் பரப்ப வேண்டியிருந்தது. அதனால், மேற்கண்ட நூல்களிலுள்ள செய்திகளைத் தமிழில் தர வேண்டியது கட்டாயமாயிற்று. இதனால், சமற்கிருதம் அல்லது பிராகிருதத்தையும் தமிழையும் சேர்த்துப் புதிதாக மணிப்பிரவாளம் என்ற கலப்புரை வகையைத் தம் ஸ்ரீபுராண வழி அறிமுகப் படுத்தினர். சமணரின் ஸ்ரீபுராணத்தைத் தொடர்ந்து, வைணவரும், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்திற்கும், குரு பரம்பரா பிரபாவ நூல்களுக்கும் மணிப்பிரவாள நடையிலேயே உரையெழுதினர்.

ஆக, சைவ, வைணவ, சமண சமயத்தார், தம் தத்துவ நூல்களை விளக்க எடுத்துக்கொண்ட முயற்சி, தமிழில் உரை காணும் பேரியக்கத்தையே உண்டாக்கிவிட்டது. இவற்றைக் காட்டுவது, தமிழுரையின் தொடக்கமே இக்காலந்தான் என்பதற்

1. Nilakanta Sastri, K. A., Cholas, P. P 687—689

காக அன்று. உரையியற்றுவது ஒரு பேரியக்கமாக (Movement) பத்தாம் நூற்றாண்டளவில் உருவாகி விட்டது என்பதனைக் காட்டவே. 'உரைவகை ஒரு முயற்சி. சார்பிலக்கண நூல்வகை ஒரு முயற்சி. இலக்கிய வகை ஒரு முயற்சி. இம்மூவகை முயற்சியாலும் தொன்னூல்கள் இடைக்காலத்துப் பரவின. படிக்கப் பெற்றன' என்ற பேராசிரியர் ஒருவரின் கருத்து ஈண்டு எண்ணத் தக்கது.[1] இவ்வாறு இடைக்காலத்தில் எழுந்த இவ்வுரையியக்கம், நன்னூல் உரைத்தோற்றத்திற்குப் பெருங்காரணமாய் அமைந்தது. இஃதன்றி, இலக்கண நூல்களைப் பொறுத்த அளவில் பிறிதோர் இன்றியமையாக் காரணமும் உண்டு. இலக்கணக் கோட்பாடுகளை எளிதில் மனப்பாடமாக்கி, மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அதற்கேற்ப, 'சில்வகை யெழுத்தில் பல்வகைப் பொருளைச் செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித் திட்ப நுட்பம் சிறக்க' அமையுமாறு நூற்பா யாத்தனர். இதனால் ஒவ்வொரு நூற்பாவும், அந்நூற்பாவில் இடம்பெற்ற ஒவ்வொரு சொல்லும் மிகுந்த பொருளழுத்தம் உடையனவாய் இருந்தன. பலவேறு நுண்ணிய கருத்துகளை அவை தம்முள் அடக்கிக் கொண்டிருந்தன. அதனால், இலக்கணங்களுக்கு உரைகள் தோன்றுவது தவிர்க்க முடியாததாயிற்று. நன்னூல் திட்பநுட்பம் செறிய நூற்பா யாப்பில் அமைக்கப்பட்டிருந்த இலக்கணமாதலால், பலவேறு உரைவிளக்கம் அதற்குத் தேவைப்பட்டது.

மூலநூல் எழுந்த காலத்தை ஒட்டியே உரை நூல் எழுதப்படல்: மூலநூல் தோன்றிப் பல காலம் ஆனபின், அம் மூலநூல் போதிய அளவு விளக்கம் பெறுத போது, உரை எழுவது இயல்பு. பலநூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தொல்காப்பியத்திற்குப் பலநூறு ஆண்டுகளுக்குப் பின் வந்தவர்கள் இக் காரணம் பற்றியே உரையியற்றினர்கள். ஆனால் நன்னூலுக்கு அவர் காலத்திலேயே அல்லது அவரை அடுத்த காலத்திலேயே உரைகள் தோன்றிவிட்டன. இதற்குக் காரணம் என்ன? பவணந்தியார்க்கு முன்பே இத்தகையதொரு மரபு, தமிழில் தோன்றிவிட்டமையே தலைமைக் காரணமாம்.

பவணந்தியார் தோன்றுவதற்கு முன்பே நூலாசிரியரை ஒட்டிய காலத்தில் உரை எழுதும் பழக்கம் தமிழிலக்கிய உலகில் புகுந்துவிட்டது. யாப்பருங்கலம், வீரசோழியம் ஆகிய நூல்களுக்கு, நூல் செய்த ஆசிரியருடைய நேர் மாணாக்கரே உரை எழுதினர். இதனினும் மேலே போய், நூலாசிரியரே தம் நூலுக்கு

1. மாணிக்கம், டாக்டர் வ. சுப., சந்தச் சிலம்பு, ப. 77

உரை எழுதும் வழக்கமும் தோன்றி விட்டது. இவ்வாறு நூலாசிரியரே உரை எழுதும் பழக்கம் வடமொழியில் உண்டு. 'வட நூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார்' என்று பிரயோக விவேகம் வரையறுக்கிறது.[1] புறப்பொருள் வெண்பா மாலை ஆசிரியர் ஐயனரிதனர், தண்டியாசிரியர் ஆகியோர் எடுத்துக் காட்டுப் பாடல்களைத் தந்ததன் மூலம், ஒரு வகையில் தாமே தம் நூலுக்கு உரை வகுத்தவர் ஆவர். நாற்கவிராச நம்பி தம் அகப் பொருள் விளக்கத்திற்குத் தாமே உரை எழுதினதாகச் சிறப்புப் பாயிரம் கூறுகிறது:

> " அகப்பொருள் விளக்கம் என்று அதற்கொரு நாமம்
> புலப்படுத்து இருநளப் பொருள்விரித்து எழுதினர்"[2]

சுப்பிரமணிய தீட்சிதர், தம் பிரயோக விவேகம் என்ற சொல்லிலக்கண நூலுக்குத் தாமே உரையெழுதினர். 'தண்டியாசிரியர் மூலோதாரணம் காட்டினற் போல, யாரும் உரை எழுதியது அல்லது மூலோதாரணமும் காட்டினேம்' என்பர்.[3]

இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகரும், இலக்கணக்கொத்தின் ஆசிரியர் சுவாமிநாத தேசிகரும் இவ்வாறே தம் நூலுக்குத் தாமே உரை எழுதினர்.

இவற்றை நோக்க, நன்னூலுக்கு அவர் காலத்திலேயே அல்லது அவர் காலத்தை ஒட்டியே உரை எழுந்ததில் வியப்பில்லை. இவ்வாறு நூலாசிரியரும் ஆசிரியரின் சீடர்களும் உடனுக்குடன் உரை எழுதுவானேன்? சில நூல்களுக்கு உரைகள் பல்கும்போது நூலாசிரியரின் மூலக் கருத்துக் கூட மறக்கப்பட்டு விடலாம்; கருத்துப் பெருக்கத்தில் கரைந்து விடலாம்; குழம்பி விடலாம். இவற்றைத் தவிர்க்கவே இதுபோன்ற உரைகள் தோன்றின் போலும்.

நன்னூலுக்குப் பல உரைகள் பல்கியமைக்குரிய காரணங்கள்: பல உரைகள் ஒரு நூலுக்கு எழுதப்படும்போது, அந்நூல் பெருமை பெறுகிறது. இவ்வாறு பெருமை பெற்ற நூல்களுள் ஒன்று நன்னூல். நன்னூலுக்கு உரைகள் பல்கியமைக்குப் பிறி தொரு காரணமும் இருக்கிறது. சமயப் போட்டியின் விளைவாகவும், நன்னூலுக்கு உரைகள் எழுதப்பட்டன. தொல்காப்பியம் உரை

---

1. பிரயோக விவேகம், காரகப் படலம், 3
2. நம்பியகப் பொருள், சிறப்புப் பாயிரம், அடி 11—12
3. பிரயோக விவேகம், காரகப் படலம், 8

பல பெற்றதற்குக் காரணம், புரியாமை; நன்னூல் உரை பல பெற்றமைக்குக் காரணம், சமயப் போட்டி. நன்னூல் பழைய உரை சமண சமயச் சார்பானது. சமணர் உரையால், நன்னூலும் குற்றப்பட்டது என்று சைவர் கருதினர். 'சேற்று நிலத்தில் கவிழ்ந்த பால் தேன் நெய் முதலியனவுஞ் சேருஞற் போல நன்னூற் சூத்திரமும் அவ்வுரையுடனே கலந்து குற்றப்பட்டதென்க.'[1] என்று சங். ஆசிரியர் சுவாமிநாத தேசிகர் கருதி எழுதினர். அதனுல் தம் மாணாக்கர் சங். யை ''நன்னூலுக்குச் சிறந்ததோர் உரை நீர் செய்திடுக'' என்று பணித்தனர். உடன் சங். நன்னூல் விருத்தி வகுத்தனர்.[2] சமண சமயத்திற்கும் சைவ சமயத்திற்கும் ஊடே இருந்த போட்டியே, சங். உரை தோன்றக் காரணமாய் இருந்தது என்பது இக்குறிப்பால் புலனுகிறது. 18ஆம் நூற்றுண்டளவில், தருமபுர ஆதீனத்திற்கும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றிப் பெருகிவிட்டன. இவ்வேறுபாடு உ.வே.சா. காலம் வரை கூட இருந்து தொல்லே தந்தது என்பது அவர் தம் 'உதிர்ந்த மலர்கள்' என்ற கட்டுரையால் புலனுகிறது.[3] இவ் வேறுபாடு இலக்கிய அளவில், உரையளவில், பதிப்புத்துறை யளவில் போட்டியாய் வளர்ந்தது. இலக்கண விளக்கம் என்ற ஐந்திலக்கண நூல் பதினேழாம் நூற்றுண்டில் வைத்தியநாத தேசிகர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் தருமபுர ஆதீனப் புலவர். இவருக்குப் பின் வந்தவர் சிவஞான முனிவர்; திருவாவடு துறை ஆதீனத் தம்பிரான்களுள் ஒருவர். வைத்தியநாத தேசிகரின் இலக்கண விளக்கம் இவருக்குப் பிடிக்கவில்லே. அந்நூலில் உள்ள குறைகளே எடுத்துக்காட்டி,'இலக்கண விளக்கச் சூறவளி' என்ற மறுப்புரையை வெளியிட்டனர். அதனுடன் நில்லாமல் இலக்கண விளக்கத்திற்கு எதிராகத் தன் கொள்கைகளேச் சங்கர நமச்சிவாயரின் நன்னூல் விருத்தியுரையோடு இணேத்து, நன்னூ லுக்குப் புத்தம் புத்துரை என்ற உரையை வழங்கினர்.[4] இப் புத்தம் புத்துரை, தருமபுர, திருவாவடுதுறை ஆதீனப் போட்டி யால் தமிழுக்குக் கிடைத்ததாகும். கி.பி. 1840இல் வாழ்ந்த இராமனுச கவிராயர் சிறந்த வைணவப் பற்றுளர். அதனுல் 'இராமனுச விருத்தி' என்ற பெயரில் நல்லதோர் உரையைத் தமிழுக்கு நல்கினர். ஐரோப்பியர்களும், கத்தோலிக்க, புரொட்டஸ் டண்டு கிறித்தவர்களும் பத்தொன்பதாம் நூற்றுண்டில், நன்னூல்

1. இலக்கணக் கொத்து, சூத்திரம் 3 ஆம் உரை
2. சாமிநாதையர், உ. வே., சங். உரைப்பதிப்பு, 1927, ப. 22
3. சாமிநாதையர், உ. வே., என் சரித்திரம், 1950, ப. 890
4. பவானந்தம் பிள்ளே, நன்னூல் காண்டிகை உரை, 1912, முகவுரை, 17

மொழி பெயர்ப்புகளையும் பதிப்புகளையும் வெளியிட்டார்கள். அவ் வெளியீடுகள் அனைத்தும் சமயப் போட்டியின் விளைவுகள் அல்ல. எனினும் சமய நலனையும் ஓரளவு கருத்தில் கொண்டு அவை வெளியிடப்பட்டன. சமயத் தொண்டிற்காக வருகின்ற பாதிரி மார்கள் உள்நாட்டு மொழியைப் பயில, வழிகாட்டியாக அவை ஆக்கப்பட்டன.

இவ்வாறு சமய ஆர்வத்தால் மட்டுமன்றி, பிறிதொரு வகையாலும் நன்னூல் உரைகளும், பதிப்புகளும் தோன்றின. இவ்வாறு தோன்றினதற்கு முதன்மைக் காரணம், அக்காலத்தில் தோன்றிய கல்வி நிறுவனங்களே. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் பள்ளியளவிலும், கல்லூரி அளவிலும் நன்னூல் பாட நூலாக்கப்பட்டது. பாட வாழ்வு பெற்றதால் பல எளிய உரைகள் வெளிவந்தன. இவற்றின் நோக்கம் நன்னூலில் கூறப் பட்டிருக்கின்ற செய்திகளை எளிமையாக்கிப் புரிய வைப்பதே. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இக் காரணம் பற்றியே நிரம்ப உரைகள் வந்தனவென்பதை விட, நிரம்ப பதிப்புகள் வந்தன எனலாம். இவை பெரும்பாலும் வணிக நோக்கிலேயே வெளியானவை.

உரை வகையும் வரையறையும்: உரைநடையின் ஊற்றுக விளங்கும் பழைய நூல்களின் உரைகள் கி.பி. 13–15ஆம் நூற்றாண்டுகளில் மிக வளப்பமாகத் தழைத்தன. இக்காலத்தை உரை வரலாற்றின் பொற்காலம் எனலாம்.[1] இந்நூற்றாண்டுகளில் உரைகள் பல்கியதுடன் மட்டுமன்றி, உரை பற்றிய வயைறை களும் பெருகியிருக்கின்றன. அவற்றைச் சுருக்கமாக அறிந்து, நன்னூல் கூறும் உரையிலக்கணத்தை அறிதல் வேண்டும். தொல். காண்டிகை, உரை என்று இருவகையுரைகளைக் காட்டி இலக்கணமும் உரைக்கின்றார்.[2] இறையனார் களவியல் உரை நான்குவகை உரைகளைக் குறிப்பிடுகின்றது. "சூத்திரம் உரைக்கின் அது நான்கு வகையான் உரைக்கப்படும்: கருத்து ரைத்து, கண்ணழித்து, பொழிப்புத் திரட்டி, அகலங்கூறல்."[3] நம்பியகப்பொருள் நான்கு வகை உரைகளின் தன்மைகளை விளக்குகிறது.[4] கருத்துரைத்தல், கண்ணழித்து உரைத்தல்,

1. Kamil Zvelebil, Dr., The Smile of Murugan on Tamil Literature of South India, Leiden, E. J. Brill, 1973, Chapter 16. The prose of the Commentators, p. 248
2. தொல்., மரபியல், 102—106
3. இறை., அகப்., முதலாவது சூத்திரம் உரை
4. நம்பியகப் பொருள் உரை—நூ. 1

பொழிப்புத் திரட்டல், அகலங்கூறல் என்பவற்றை அது காட்டும். இவற்றை விளக்கும்போது, "கருத்துரைத்தலாவது, சூத்திரத்தின் உட்கோள் உரைத்தல்; கண்ணழித்தலாவது, சூத்திரத்துள் சொற்றேறும் பொருளுரைத்தல்; பொழிப்புத் திரட்டலாவது, சூத்திரத்துப் பொருளா எல்லாம் தொகுத்து உரைத்தல்; அகலங் கூறலாவது, சூத்திரப்பொருளாத்தூய்மை செய்தற்குக் கடாவும் விடையும் உள்ளுறுத்து விரித்துரைத்தல்" என்று விளக்கும். யாப்பருங்கல விருத்தியுரை,

> " முத்திறத் தானும் மூவிரு விகற்பினும்
> பத்து வீதத்தானும் பதின்மூன்று திறத்தானும்
> எழுவகை யானும், இரண்டுகூற் றானும்
> வழுவுநனி நீங்க மாண்பொடும் மதத்தொடும்
> யாப்புறுத்து உரைப்பது சூத்திர வுரையே"

என்று உரையின் வகைகளை விரித்துரைக்கின்றது. இதனால் உரையும் பத்துக்குற்றம் (வழு) நீங்க, பத்து அழகு (மாண்பு) விளங்க, எழுவகை மதம் பொருந்த இருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது.

வீரசோழியமும் பதினான்கு வகை உரை வகைகளைச் சுட்டும்.[1] நன்னூலும், 'பாடம் சொல்லல், கருத்துரைத்தல், சொல் வகுத்தல் சொற் பொருள் உரைத்தல், பொழிப்புரைத்தல், உதாரணங் காட்டல், வினாத் தோற்றல், விடை கொடுத்தல், விசேடம் காட்டல், விரிவு காட்டல், அதிகார வரவு காட்டல், துணிவு கூறல், பயனெடு படுத்தல், ஆசிரிய வசனம் காட்டல்' என்று உரையின் பதினான்கு வகைகளைப் பேசும். நன்னூலாரின் நூற்பாவிற்கு மயிலை. விளக்கம் தரும்போது வேறுரை வகைகளையும் சுட்டிக் காட்டுகிறார்.[2] "தொகுத்துக் கண்ணழித்தல், விரித்துக் கொணர்ந்து உரைத்தல் என்னும் இரு கூறும்; பொழிப்பு, அகலம், நுட்பம் என்னும் மூவகையும்; எடுத்துக் கோடல், பதங்காட்டல், பதம் விரித்தல், பதப்பொருள் விரித்தல், வினாதல், விடுத்தல் என்னும் அறுகூறும்; பொழிப்பு, அகலம், நுட்பம், நூல் எச்சம், பதப் பொருள் உரைத்தல், ஏற்புழிக் கோடல், எண்ணல் என்னும் ஏழும்; 'சொல்லே, சொல்வகை, சொற்பொருள், சோதனை, மறைநிலை, இலேசு, எச்சம், நோக்கே, துணிவே, கருத்தே, செலுத்தல் என்று ஈரைந்து கிளவியும் நெறிப்பட வருவது பனுவல் உரையே' என்னும் இப்பத்தும்; சூத்திரம் தோற்றல், சொல் வகுத்தல், சொற்பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடங்

1. வீர. உரை, 178
2. நன். மயிலை. உரை. 20

காட்டல், உதாரணம் காட்டல், ஆசிரிய வசனம் காட்டல், அதிகார வரவு காட்டல், தொகுத்து முடித்தல், விரித்துக் காட்டல், துணிவு கூறல், பயனெடு புணர்த்தல் என்னும் இப் பதின்மூன்று பகுதியும்.'' என்று காட்டுவர் மயிலை. அவர் கூட்டும் பதின்மூன்றேடு கருத்துரைத்தல் என்ற ஒன்றைக் காட்டி உரை பதினொன்று வகைப்படும் என்பர் புத்தமித்திரனர்.[1] நாலடியார் அகல உரை, 'பொழிப்பு, அகலம், நுட்பம், நூலெச்சம் என்ற நான்கு கூற்றினது' என்று கூறுகிறது.[2]

தமிழ் லெக்சிகன், உரை என்பதற்கு எண்வகைப் பொருளைத் தருகிறது. அவற்றுள் பொருள் உரைத்தல் என்ற அளவில், Explanation, Interpretation, Commentary, Exposition, Gloss என்று ஐவகைப் பொருளைத் தருகிறது.[3]

நன்னூல் தரும் உரையிலக்கணம்: உரையின் பதினொன்று கூறுகளை விளக்கும் பவணந்தியார், காண்டிகை யுரை, விருத்தியுரை ஆகியவற்றின் இலக்கணங்களைத் தருகிறார். கருத்துரை தருதல், பதவுரை தருதல், எடுத்துக் காட்டுத் தருதல் என்ற மூன்றினேடு வினவுதலும், விடைதருதலும் ஆகிய இரண்டினையும் மேற்கொண்டு நூற்பாவின் உட்கிடையாகிய பொருளை விளக்கியுரைப்பது காண்டிகையுரையின் இலக்கணமாகும்.[4] நூற்பாவின் உட்கிடையாகிய பொருளல்லாமலும், அவ்வவ் விடங்களில் பொருள் விளக்கத்திற்குத் தேவையான எல்லாப் பொருள்களும் விளங்கும்படி, தான் உரைக்கும் உரையாலும், ஆசிரிய வசனங்களாலும் மேற்கூறிய காண்டிகை யுறுப்பு ஐந்தினாலும், ஐயப்பாடு அகலுமாறு மெய்யான பொருளைக் குறைவு படாமலும் உரைப்பது விருத்தியுரையின் இலக்கணமாகும்.[5]

இவ்வடிப்படையில் பார்க்கும்போது, 14ஆம் நூற்றாண்டில் எழுந்த மயிலை. உரை, 17 ஆம் நூற்றாண்டில் எழுந்த தன்னூல் சங். உரை, 19 ஆம் நூற்றாண்டில் எழுந்த கவிராயர் உரை, 20 ஆம் நூற்றாண்டில் எழுந்த மோசசு பொன்னையா உரை[6] நீங்கலாக ஏனைய அனைத்தும் காண்டிகை உரை என்ற அளவிலேயே அடங்கும். நூற்பாக்

1. வீர சோழியம், 178
2. நாலடியார், 319
3. தமிழ் லெக்சிகன், தொகுதி 1, பகுதி 1, ப. 451
4. நன்னூல், நூ. 22.
5. நன்னூல், நூ. 23
6. மோசசு பொன்னையா, நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை, எழுத்து, 1968, ப. 23.

களுள் பொருள் விளங்குவனவற்றிற்குச் சுருக்கமாகவும், ஏனைய வற்றிற்கு விரிவாகவும், சிலவற்றிற்கு வினு விடையாகவும், சில வற்றிற்கு மோனை எதுகை முதலிய தொடை நயம்படவும் ஒவ்வொன்றையும் பிரித்துப் பிரித்துத் தனித் தனியாகவும், பல வற்றைத் தொகுத்து அவற்றின் பிண்டமாகவும் பொருளெழுதிச் செல்லும் மயிலை. உரையும் விருத்தியுரை எனத் தக்கதே. சில ஏட்டுப் படிகளில் "காண்டிகை யுரை முற்றிற்று" என்னும் தொடர் காணப்படுவதால் இவ்வுரை காண்டிகை உரை என்று கொள்ளற்பாலது என்று உ. வே. சா. குறிப்பிடுகிறார்.[1] இக்குறிப்பு முழு அளவு பொருந்துமா என்பது ஐயத்திற்குரியதே. மயிலை. உரையைக் காண்டிகையுரை என்று எழுதியது ஏடு எடுத்தெழுதி யோர் செய்த பிழை என்றே தோன்றுகிறது. காண்டிகை யுரை கூட, கருத்து, பதப்பொருள், காட்டு என்ற மூன்றளவில் நின்றது. இது முக்காண்டிகை உரை எனப்பட்டது. இவ்வாறு எழுதும் மரபே பழையது. விசாகப் பெருமாளையரின் காண்டிகை உரை தொடக்கப் பதிப்பில் (1839) முன் மூன்றே இடம்பெற்றன. ஆறுமுக நாவலர் காலம் தொடங்கியே (1880) வினு விடையும் சேர்ந்த ஐங்காண்டிகை உரை எழுதும் பழக்கம் பரவலாயிற்று.

1. சாமிநாதையர், உ.வே., மயிலை. உரைப் பதிப்பு, 1918, ப. XXII

7

மயிலைநாதர் உரை

நன்னூல் உரையாசிரியர்கள் வரலாறு : நன்னூலுக்கு உரைப் பணியாற்றியோர் ஏறத்தாழ நாற்பத்து நான்கு பேர். மயிலை. தொடங்கி தி.கோ. சீரங்காச்சாரியார் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) வரை 22 ஆசிரியர்கள், கிடைக்கப்பெறு உரை வழங்கிய 13 உரையாசிரியர்கள், அச்சிடப் பெறு உரை யேட்டு ஆசிரியர்கள் அறுவர், இருபதாம் நூற்றாண்டு உரையாசிரி யர் மூவர் ஆக நாற்பத்து நான்கு பேர். இவர்களுள் இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்கள் வரலாறு அனைவரும் அறிந்த ஒன்று ஆதலின் விடப்பட்டது. எஞ்சிய உரையாசிரியர்களுள், சிலரின் பெயர் தெரியவில்லை. சிலரது பெயர் தெரிந்தாலும் அவர் தம் வரலாறு தெரியவில்லை. அத்தகையோர் நீங்கலாக இருபத் தெண்மரது வரலாறு இப்பகுதியுள் கொடுக்கப்படுகிறது. சில உரை யாசிரியர்கள் பற்றிய புதிய தகவல்கள் இவ்வாய்வாளனுல் ஆராய்ந்து அறிந்து கொடுக்கப்பட்டுள்ளன. ஈழத்து உரையாசிரி யர்கள் மட்டும் அறுவர் உள்ளனர். கூழங்கைத் தம்பிரான், ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை, க.பெ. சவுந்தரநாயகம் பிள்ளை, ஆறுமுக நாவலர், சரவணமுத்துப் புலவர், வ. குமாரசாமிப்புலவர் என்போர் அவ்வறுவ ராவர். இவர்தம் வரலாறு, சைமன் காசிச் செட்டி எழுதிய (1859) 'தமிழ் புளுடார்க்', சுன்னகம் அ. குமார சாமிப் புலவர் எழுதிய 'தமிழ்ப் புலவர் சாத்திரம்' (1916), சி. கணே சையர், தென் புலோலியூர் கணபதிப்பிள்ளை ஆகியோரால் எழுதப் பட்ட ஈழநாட்டுப் புலவர் வரலாறு ஆகியவற்றை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. சிலருடைய வரலாறுகள் பெருநூலாக எழுதத்தக்க அளவிற்கு விரிவு வாய்ந்தவை. முனிவர், டாக்டர் ஜி.யூ. போப், ஆறுமுக நாவலர் ஆகியோர்தம் வரலாறுகள் தனிப்பெரும் ஆய்வு நூலுக்கு உரியவை. இவ்வாய்வில், அவர் தம் வரலாறு தலைமைப் பொருள் அன்று ஆதலால், சுருங்கிய

அளவிலேயே அவர்கள்தம் செயற்கரும் பணிகள் சுட்டப்பட்டிருக்கின்றன. கடலடியில் பெரும்பகுதி மூழ்கி சிறுபகுதி தெரியக் கிடக்கும் பனிப்பாறை போன்றே இவ்வரலாற்றுச் சுருக்கத்தைக் கருதல் வேண்டும். அண்மையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர்களின் வரலாற்றைக் கூட நாம் போதிய அளவு போற்றவில்லை என்பது வரலாற்றைத் தேடும் போது கிடைக்கும் உண்மை. செயற்கருஞ் செயல்கள் செய்த பல பெரியவர்களை எத்துணை விரைவில் நாம் மறந்து விட்டோம்?

களஆய்வுகள்: பழைய உரையாசிரியர்கள் பிறந்து, வாழ்ந்த இடங்களை நேரில் சென்று பார்த்துச் செய்திகள் இவ்வாய்வாளனால் திரட்டப்பட்டுள்ளன. சங். பிறந்த திருநெல்வேலி தடி வீரய்யன் கோயில் தெரு, அங்குள்ள புராணிகர் வீடு ஆகியனவும், முனிவர் பிறந்த விக்கிரமசிங்கபுரம், அவர் தீக்கை பெற்ற சுசீந்திரம், பெரும்பகுதி தங்கியிருந்த பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம், அடக்கமான திருவாவடுதுறை ஆகியனவும், கவிராயர் தங்கியிருந்த சஞ்சீவிராயன் பேட்டை, அவர் வழிபட்ட சஞ்சீவிராயன் கோயில், தெரு ஆகியனவும், அவர் பிறந்த இடமான சிந்தாதிரிப் பேட்டை, அவர் பிறந்த இல்லம், அவர் அடக்கம் செய்யப்பெற்ற பாளையங்கோட்டை கல்லறை ஆகியனவும், ஆறுமுக நாவலர் உரையியற்றிய சிதம்பரம், அச்சியற்றிய தங்கசாலை அச்சகம் ஆகியனவும், இலாசரசு அடக்கமாகியுள்ள பாளையங்கோட்டை முருகன் குறிச்சி கல்லறையும் இவ்வாய்வாளனால் நேரிற் சென்று பார்த்து, ஆராய்ந்து செய்திகள் திரட்டப்பட்டன. இவற்றையெல்லாம் நேரிற்சென்று ஆராயும்போது உதவியவர்கள் பலர். அவர்களுள் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரிப் பேராசிரியர் க.வ. முத்தையா, விக்கிரமசிங்கபுரம் கோபால கிருஷ்ணப் பிள்ளை, பிள்ளையார் பாளையம் திருஞானசம்பந்த முதலியார், சஞ்சீவிராயன் கோயில் அருச்சகர் ஆறுமுகம், சிதம்பரம் நாவலர் நிறுவன மேலாளர் தி.க. இராசேசுவரன், சென்னை மறைமலையடிகள் நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி ஆகியோர் குறிபிடத் தக்கவராவர்.

மயிலைநாதர்

மயிலைநாதரின் காலம்: மயிலை. தம் நன்னூல் உரையில், சீயகங்கனைப் பலபடப்பாராட்டி இருக்கிறார். கங்கர் குடியைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்.[1] இவையெல்லாம், கங்க மன்னனோடும், கங்கர் குடியோடும் இவருக்கிருந்த தொடர்பையும்

1. நன்னூல் 359, 369, 413

மதிப்பையும் காட்டுகின்றன. கங்கர் தமிழகத்தில் பெருமையோடு விளங்கிய காலம் பதின்மூன்று பதினான்காம் நூற்றாண்டுகளிலாகும். மயிலை. இக்கால எல்லைக்குள்ளேயே வாழ்ந்தவராதல் வேண்டும். இவர், தொல்காப்பிய இளம்பூரணர் உரை, அவிநய உரை, யாப்பருங்கலக் காரிகை உரை என்பவற்றை எடுத்துக்காட்டி இருப்பதால்[1] இவ்வாசிரியர்கள் காலத்திற்குப் பிற்பட்டவர் என்பது தெளிவு. பவணந்தியாரின் காலமாகிய பதின்மூன்றும் நூற்றாண்டிற்குப் பின் இவர் வாழ்ந்தார். நூலுக்கு உரை தேவைப்படும் அளவு பெரும்புகழ் பெறக் குறைந்தது ஒரு நூற்றாண்டு ஆகுமெனக் கொண்டாலும், இவர் காலம் 14ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகும்.[2] நன்னூலைப் பொறுத்தவரை இவர் முதல் உரையாசிரியர் அல்லர் எனினும், மூத்த உரையாசிரியருள் ஒருவர் ஆவார்.

மயிலைநாதரின் ஊர்: இவரது சொந்த ஊர் பற்றிய சான்றுகள் இதுகாறும் எதுவும் கிடைத்தில. எனினும், இவருக்குரிய பெயர் மயிலைப்பூரில் உள்ள ஒரு கடவுளின் பெயர் என்பதால், இவர் பிறந்த ஊரே மயிலை ஆகலாம். பவணந்தியார் பிறந்த இடம் தொண்டை நாடு ஆதலால், பவணந்தியாரின் இலக்கணத்தில் மிக ஈடுபாடு கொண்ட இவ்வுரையாசிரியர்க்கும் பிறந்த ஊர் தொண்டை நாடாகலாம். மயிலாப்பூர் தொண்டை நாட்டு ஊர்களுள் ஒன்றாக இருப்பது இதனை உறுதி செய்கிறது. மயிலைநாதரால் பாராட்டுப் பெற்ற, பவணந்தியைப் புரந்த சீயகங்கன் ஆளுகைக்கு உட்பட்ட கொங்குநாடு, தொண்டை நாட்டின் எல்லை நாடு என்பதுவும், சீயகங்கனின் கொடைத்திறம் குறிக்கும் கல்வெட்டுகள் தொண்டை நாட்டுத் தலைநகராகிய காஞ்சியில் காணப்படுவதும்,[3] மயிலை நாதருக்கும், தொண்டை நாட்டிற்கும் ஊடேயுள்ள உறவை வலுப்படுத்துகின்றன.

மயிலைநாதர் பெயர்க்காரணம்: மயிலாப்பூர் பழங்காலத்தில் சிறந்த சைனத் தலமாய் இலங்கிற்று. இங்குச் சைனக்கோயில் ஒன்றும் இருந்தது. இவ்வாலயம் சில நூற்றாண்டுகட்கு முன்பு கடலாற் கொள்ளப்பட்டது. இவ்வாறு கடலாற் கொள்ளப்படும் என்பதை முன்பே அறிந்த சைனப் பெரியோர் இதிலிருந்த நேமி

---

1. பாயிர உரை 15—16 அடிகள், நூ. 110, 267, 273
2. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 14ஆம் நூற். 1969, ப. 113
3. காஞ்சிபுரத்து உடையார் திருவேகம்ப முடையார்க்கு ஸ்ரீமத் குவளாலபுர பரமேஸ்வரன் கங்க குலோற்பவன் சீயகங்கன் அபராபரணன திருவேகம்ப முடையானேன் வைத்த திருநந்தா விளக்கு 1க்குப் பசு 302 நிஷ்பம் 1. தெ. இ. கல்வெட்டுக்கள் மூன்றும் தொகுதி, 62, நான்காந் தொகுதி 823

நாதர் படிமை மூன்றையும் காப்பான இடத்திற்கு எடுத்துச் சென்று விட்டனர். அவ்வாறு எடுத்துச்சென்று சிற்றூரில் சிலாவிக்கிரகத்தையும் இளங்காட்டில், தாம்பர விக்கிரகத்தையும், இயக்கி விக்கிரகத்தையும் எழுந்தருளுவித்தனர்.[1]

சைனப் பதிகங்களுள், மயிலாப்பூர்ப் பத்து, திரு மயிலாபுரிப் பத்து, திருமயிலாபுரி நேமிநாதர் பத்து எனவரும் பதிகங்கள் மயிலாப்பூரிலிருந்த சைனக் கோயில்மேல் பாடப் பெற்றவை.

"தேனிமிர் பைம்பொழில் திருமயிலாபுரி நீனிறக் கடவுள் நேமி நாதர்" என்பது நேமிநாதம் பாயிர உரை. "மறமே முனிந்து மயிலாபுரி நின்று மன்னுயிர்கட் கறமே பொழியும் அருட் கொண்டலே" என்பது திருநூற்றந்தாதிக் காப்புச் செய்யுள். இக் குறிப்புகளால், மயிலாப்பூருக்கும், சைன சமயத்திற்கும் இருந்த நெருக்கம் தெளிவுபடுகிறது. இவ்வூரில் இருபத் திரண்டாம் தீர்த்தங்கரராய் எழுந்தருளி இருந்தவரே நேமி நாதர். இவருடைய பிறிதொரு திருப்பெயரே மயிலைநாதர் என்ப தாம். இப்பெயரே உரைகாரராகிய மயிலைநாதருக்குச் சூட்டப் பட்டது என்பர்.[2]

மயிலைநாதரின் சமயம்: சமணத் தீர்த்தங்கரரின் பெயர் தாங்கிய மயிலைநாதர், தம் சமய உணர்வை உரையினுள்ளே ஆங்காங்கே பெய்திருக்கிறார். 72, 273, 274, 301ஆம் நூற்பாக்களில் 'அருகன்' என்ற பெயரை எடுத்துக்காட்டுதல், 296ஆம் நூற்பா வுரையில், தவத்தால் "வீடெய்தினன்" என்பதனைக் காட்டுதல், 158ஆம் நூற்பா வுரையில் ஆசீவகப் பள்ளியைக் காட்டுதல், சீவகசிந்தாமணி, சூளாமணி, பெருங்கதை, மேருமந்தர புராணம் ஆகிய சமண நூல்களை ஆங்காங்கு ஆளுதல் ஆகிய சான்றுகளைக் கொண்டு மயிலை. சமணர் என்றமுடிவுக்கே பலரும் வந்துள்ளனர். இம்முடிவு சரியன்று. மேற் காட்டியவை மயிலைநாதரின் சமணப் புலமையைக் காட்டுவனவே தவிர சமணச் சார்பைக் காட்டவல்லன என்று கொள்ளற்கு இடமில்லை. ஏனெனில், இஃதே போன்று மேலே காட்டிய எடுத்துக்காட்டுகள், விளக்கங்கள் எல்லாம் பிற சமயச் சார்புள்ள உரைகளிலும் காணப்படுகின்றன.[3] அன்றியும், மயிலை. சமண நூல்களிலிருந்து மட்டுமன்றி, சைவ நூற்களிலிருந்தும், வைணவ நூற்களிலிருந்தும், பௌத்த நூற்களிலிருந்தும் எடுத்துக் காட்டுகளை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

1. சாமிநாதையர், உ.வே. நன்னூல் மயிலை உரை, ப. 15
2. மே. கா. நூ. ப. 15.
3. சங். நன். உரை 159

சைவ, வைணவ மூலவர்களை, இலக்கிய மேற்கோள்களாகப் பல இடங்களில் தாராளமாகக் கையாளுகிறார். 72, 273ஆம் நூற்பாக்களில் அரன், அரி, அயன் என முன்னே காட்டி, இறுதியாக, அருகனை இணைத்திருக்கிறார். 159ஆம் நூற்பாவிற்கு எடுத்துக் காட்டாக, பிரமக் கோட்டம் என்பனையும், 274ஆம் நூற்பாவில் நான்முகனையும், 273ஆம் நூற்பாவில் அரனையும் காட்டக் காணுகிறோம். 274ஆம் நூற்பாவில், சங்கரனையும் 418ஆம் நூற்பா வுரையில் உமை உருத்திரனையும் காட்டுவர். 274ஆம் நூற்பாவில், நாராயணனையும், 409இல் திருமகளையும், 420இல் நப்பின்னையையும், 346இல் 'செங்கண்மால்' என்ற பெயரையும், 440இல் 'மாறன்' என்ற பெயரையும், 438இல் 'மாயக் கடவுள்' என்ற பெயரையும், 396இல் காலேக வண்ணன் என்ற பெயரையும், 158இல் வாசுதேவக் கோட்டம் என்ற எடுத்துக் காட்டையும், 295, 409ஆம் நூற்பாக்களில் காமன் என்ற திருமால் மகனையும் ஆளுகிறார். 338ஆம் நூற்பாவில் 'மதிலரங் கத்தே உண்டு உறங்குவான் ஒருவன்' எனத் திருவரங்கப் பெருமானையும், 398இல் 'பொலிக பொலிக பொலிக' என்ற திவ்வியப் பிரபந்த வரிகளையும் எடுத்தாளுகிறார். 385ஆம் நூற்பாவில் 'கங்கையாடிப் போந்தேன் ஒரு பிடி சோறு தம்மின், எனக் காட்டுவதும், 398இல், உலகம் மூன்று, காலம் மூன்று' குண மூன்று, தொழிலாறு எனக் காட்டுவதும் 400இல் கார்த்திகை விளக்கைக் காட்டுவதும் இவரது சைவநெறி அறிவைக் காட்டுவன. திருமுருகாற்றுப்படையினின்று, 164, 166, 179, 359, 420, 436ஆம் நூற்பாக்களில் எடுத்துக் காட்டுகளை நல்குவது, 238ஆம் நூற்பாவில் திருச்சிற்றம்பலக் கோவையாரையும், 423ஆம் நூற்பாவில் பரிபாடலையும் காட்டுவது, மயிலைநாதரின் சைவ இலக்கியப் புலமையைக் காட்டுவன. பெருமாள் திருமொழியை 304ஆம் நூற்பாவிலும் குருபரம்பரையை 413ஆம் நூற்பாவிலும் காட்டுதலினின்று இவரது வைணவ இலக்கிய அறிவு புலனாகும். புகை உண்மையால் எரியுள்ளது (296, 383), கடவுளால் ஆக்கப் பட்ட விமானம் (298), நாகர்க்குப் பலி, தேவர்க்குச் சிறப்புச் செய்தான் (355), பார்ப்பான் கள்ளுண்ணுன்(357)—என்ற கருத்துத் தொடர்கள், மயிலைநாதரின் சமணத்திற்கப்பாலும் சென்ற அறிவை உணர்த்துவன. நூற்பா 440இல் பிறத்தல், பிணிபடல், மூத்தல், இறத்தல் என்ற பௌத்தத் தத்துவத்தைக் காட்டுதலால் இவரது புத்தப் புலமையும் புலனாகிறது. மேற்கண்ட சான்றுகளிலிருந்து, சைவ, வைணவ, பௌத்த இலக்கிய, கொள்கை, கோட்பாடுகளை மயிலை. போற்றியமை தெளிவாகிறது. அதனுடன், அவர் சமணப் பற்றுள்ள உரைகாரர், பிற நெறிகளைப் புறக்கணித்த குறைகாரர்

என்ற கருத்தும் சரியற்ற தாகிறது. இதனால், சுவாமிநாத தேசிகர் குறிப்பிடும் நன்னூலைக் குற்றப்படுத்திய சமண உரை இதுவன்று என்பதுவும் பெறப்பட்டு உறுதிப்படுகிறது.[1]

மயிலாப்பூர் சிறந்த சைவத்தலம்: மயிலை, சமணர் என்று கொள்ளற்குப் பிறிதொரு காரணம் அவருடைய பெயராகும். மயிலை. எனும் பெயருக்குத் தக, மயிலாப்பூர் சமணத்தலம் என்பதுவும், மயிலைநாதர் என்ற பெயர் இருபத்திரண்டாம் தீர்த்தங்கரரின் பெயர் என்பதுவுமாம். இக்கோட்பாடும் முற்றும் சரியன்று. மயிலாப்பூர் சமணத்தலம் என்பது போல மிகப்புகழ் பெற்ற சைவத் தலமுமாகும். சைவ சமயத்தின் ஒரு கூறுகிய 'கபாலிகம்' அவ்வூரில் செல்வாக்கோடு இருந்த தென்பதை, 'கபாலீச்சரம்' என்ற ஊர்ப்பெயரும், கபாலீச்சுரர் கோயிலும் காட்டுகின்றன. தேவாரக் குரவர்கள் 'கபாலீச்சுரம்' என்று தம் பாடல்களில் பரக்கக் குறிப்பிடுவதும் இதனை உறுதிப்படுத்தும்.[2] மயிலாப்பூர் தேவார நாயன்மார்களால் பாடப்பெற்ற தலம். "ஊர்திரை வேலை உலவும் மயிலை", "மட்டிட்ட புள்ளோயங் கானல் மயிலை", "மடலார்ந்த தெங்கின் மயிலை"[3], "கண்ணுர் மயிலை", "மடநல்லார் மயிலை", "மயிலை கூர்தரு வேல் நல்லார்", "துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித் தென் மயிலை" எனவரும் சம்பந்தர் தேவாரப் பாக்களும்,[3] "மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பூர்" எனவரும் திருநாவுக்கரசரின் தேவாரப் பாவும்[4] மயிலாப்பூர் சிறந்த சைவத் தலமாய் கி.பி. 7, 8ஆம் நூற்றுண்டுகளிலேயே இருந்தது என்பதை உறுதி செய்கின்றன. மயிலை. சமணர்க்கே உரிய பெயர் என்று முடிவறுத்தல் சரியன்று. சிவபெருமானின் ஒரு பெயர் 'வைத்திய நாதன்' என்பதாகும். அறுபடை வீடுகளுள் ஒன்றுன சுவாமிமலை முருகனின் பெயர்கள் சுவாமிநாதன், குருநாதன் என வழங்கும். 'நாவின் நல்லுரை யாகிய நாதன்' என்று சிவனைப் பாடுகிறார் அப்பர் பெருமான்.[5] உமாதேவியாரின் புதல்வர்கள் எனப்படும் செங்குந்தர்—சைவர்கள் ஆவர். சைவ சமயத்தாராய்ப் பிறந்து வாழ்ந்து, 'செங்குந்தர் ஊசல்' என்று நூலை எழுதிய ஒரு சைவரின் பெயர் மயிலைநாதர் என்பதாகும்.[6] இச்சான்றுகளால், மயிலாப்

1. பார்க்க: இந்நூல் ப. 99
2. சம்பந்தர் தேவாரம், சுந்தரர் தேவாரம், அப்பர் தேவாரம்
3. சம்பந்தர் தேவாரம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 183
4. அப்பர் தேவாரம், 215/1, 258/6
5. அப்பர் தேவாரம், 178/2
6. இராமசாமிப் புலவர், ச.அ., தமிழ்ப்புலவர் அகரவரிசை—3 19

பூர் பல்லவர் காலந்தொட்டு, தற்காலம் வரை சிறந்த சைவத் தலமாக இலங்கியது—இலங்கி வருகிறது என்பது தெளிவாகிறது.

மயிலைநாதர் சைவ சமயத்தாரே: மயிலைநாதர் தம் உரை முடிவில் ஒரு குறள் வெண்பாவைக் கூறி முடித்திருக்கிறார். அவ்வெண்பா இவரே இயற்றியது. அவ்வெண்பா பின் வருமாறு:

சொல்லும் பொருளுமெனத் தோன்றித்தோன் றுத்துணையை
அல்லும் பகலும் அடை

இவ்வெண்பாவின் சொல்லாட்சி, பொருளடக்கம், போக்கு அனைத்தும் தேவாரப் பாக்களை எதிரொலி செய்கின்றன. சிவ பெருமானைச் சொல்லும் பொருளுமாக, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருவாரூரர் ஆகியோர் குறிப்பிட்டுப் போற்றியுள்ளனர். "ஆரருஞ் சொற்பொருள் ஆகிநின்ற எமது ஆதியான்", "உரையினுல் உறுபொருளாயினுன்" என்பர் சம்பந்தர்.[1]

திருநாவுக்கரசர் சிவனைச் சொல்லும் பொருளும் எனல்: "சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளுமாகிய", "சொல்லாகிச் சொற்பொருளாய் நின்ருர்", "சொல்லாய்ப் பொருளானுன் நீயே", "சொல்லானைப் பொருளானை", "சொல்லும் நன்பொருளும் ஆவார்", "சொல்லும் பொருளும் ஆனுர் தாமே", "சொல்லொடு பொருளனைத்தும் ஆனுன் தன்னை" என்று திருநாவுக்கரசர்[2] சிவபெருமானைச் சொல்லும் பொருளும் என்றே குறிப்பர்.

சுந்தரர் சிவனைச் சொல்லும் பொருளும் எனல்: "எழுத்தொடு சொற்பொருள் எல்லா முன் கண்டானே", "சொல்லுவாரிச் சொல், பொருள் அவை நீ என்பேன் நான்", "சொல்லை நம்பி பொருளாய் நின்ற நம்பி", "சொற்பதப் பொருள் இருளறுத் தருளும் தூய போதி", "சொற்பொருளாய்ச் சுருங்கா மறை நான்கினையும் ஓதி"[3] என்று செம்மேனி எம்மானுகிய சிவபெருமானைப் போற்றுகிறார் சுந்தரர்.

கடவுள் தோன்றுத் துணை எனல்: மயிலை. தன் வெண்பாவில் இறைவனைத் 'தோன்றுத் துணை' என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு இறைவனைத் துணை எனக் குறிப்பிடுதல் சைவ உலகின் மரபாகும். இதனை, "அற்றவர்கள் நற்றுணைவன்" என்ற சம்பந்தர் வாய்மொழியாலும், "தோன்றிய எவ்வுயிர்க்கும் துணையாய் நின்ற காயானை",

1. சம்பந்தர் தேவாரம், 224—8, 282
2. அப்பர் தேவாரம் 41—3, 241—6, 254—5, 287—1, 291—5, 305—2 307—8
3. சுந்தரர் தேவாரம் 4—7, 68—8, 88—6, 96—7, 97—1

"பல்லுயிர்க்கும் துணையானன்" எனவரும் அப்பர் மொழிகளாலும், "பரதமே தொழுவார் பற்றறுவன் துணை", "வழித்துணை... மருந்தே" எனவரும் சுந்தரர் கூற்றுகளாலும்[1] உணர்ந்து உறுதிப் படுத்திக் கொள்ளலாம். மயிலை. சைவர் என்பதற்குப் பிறிதொரு சான்றும் உண்டு. தஞ்சாவூர் சரபோசி மகாராசா சரசுவதி மகால் நூலகத்தில் நன்னூல் மயிலை. உரைச் சுவடி ஒன்று உள்ளது.[2] அஃது சிதைந்த நிலையில் இருப்பினும் மிகப் பழைய ஏட்டுச் சுவடிகளுள் ஒன்றாகும். இந்தச் சுவடியின் முதல் ஏட்டில் பாடல்கள் சில இடம் பெற்றுள்ளன. இப் பாடல்கள் மயிலை. சமய ஆய்விற்கு இன்றியமையாதனவாகும். அப்பாக்கள் பின் வருமாறு:

1 எண்ணிய எண்ணிய எய்துப கண்ணுதல்
2 பவள மால்வரை பயந்த
3 கவள யானையின் கழல் பணிவோரே
4 தவளத் தாமரைத் தாதார் கோயில்
5 அவனைப் போற்றதும் அருந்தமிழ் குறித்தே
7 பந்தம் அகலப் பரஞானம் கைகூடுங்
7 கந்தனிரு பாதம் கருது
8 சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
9 பரமா சாரியன் பதங்கள்
10 சிரமேற் கொள்ளுதுந் திகழ்தரற் பொருட்டே

மேற்கண்ட பாக்களுள் முதல் மூன்று வரிகளில் விநாயகர் வணக்கமும், 4, 5ஆம் வரிகளில் கலைமகள் வணக்கமும், 6, 7ஆம் வரிகளில் முருக வணக்கமும், 8, 9, 10ஆம் வரிகளில் அகத்திய வணக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் விநாயகர், முருகன், அகத்திய வணக்கங்கள் இடம் பெற்றுள்ளமையால், இவை சைவ ராலேயே இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும். சேனவரையர் இயற்றியதால் ஒரு பா அவருரையில் முகப்பில் இடம் பெற்றுள்ளது. சேனவரையர் பாடலும், மயிலை. உரையில் இடம் பெற்றுள்ள இப் பாக்களும் ஒத்திருக்கின்றன. இறுதி ஐந்து வரிகள் ஒன்று போலவே உள்ளன. சேனவரையர் உரையில் முகப்பாக இடம் பெற்றுள்ள

1. சம்பந்தர் தேவாரம் 326-2; அப்பர் தேவாரம் 263-4, 276-3; சுந்தரர் தேவாரம் 62-1, 70-9
2. A Descriptive Catalogue of the Tamil Manuscripts in the Tanjore Maharaja Sarfoji's Saraswathi Mahal Library, Tanjore, Pandit L. Olaganatha Pillai, Vol I. 1925 No. 65 P, 41-42

கடவுள் வணக்கத்தைச் சேனவரையர் இயற்றினர் என்று கொள்ளும்போது, மயிலை. உரையில் இடம் பெற்றுள்ள மேற்கண்ட பாடலை மயிலைநாதரே இயற்றினர் என்று கொள்ளலே நேரிது. இப்பாக்கள் மயிலைநாதரின் சமயத்தை ஐயத்திற் கிடமில்லாமல் சைவம் என்று பறை சாற்றுகின்றன.

ஆக, மயிலை. சமண இலக்கியங்களன்றிச் சைவ இலக்கியங்களையும், கோட்பாடுகளையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார் என்பதுவும், மயிலைநாதர் எனும் பெயர் மயிலையில் எழுந்தருளியுள்ள சிவனையே குறித்தல் கூடும் என்பதுவும், மயிலை சைவத் தலங்களுள் சிறந்த ஒன்று என்பதுவும். மயிலைநாதர் பாடி முடித்துள்ள வெண்பா தேவார எதிரொலி என்பதுவும், தஞ்சை சரசுவதி மகால் உரைச் சுவடியில், மயிலைநாதரின் சைவ வணக்கம் இடம் பெற்றிருக்கிறது என்பதுவும், மயிலைநாதர் சமணரல்லர், சைவரே என்று கருத வைக்கின்றன. எனினும், சமண, பௌத்த, வைணவ நூல்களையும் இவர் ஆங்காங்கே எடுத்துக் காட்டுவதினின்று, மயிலைநாதர் பிற சமயங்களைப் புறக்கணித்தவர் அல்லர், போற்றியவர் என்பதனை முன் காட்டிய சான்றுகள் உறுதி செய்கின்றன.

மயிலைநாதர் உரை: ஒவ்வொரு துறையிலும் முன்னோடிகளுக்குத் தனிப்பெருமை உண்டு. இத்தகு தனிப்பெருமைக்குரியவர், மொழித்துறையிலும் உள்ளனர். தொல்காப்பியத்திற்கு முதல் முழு உரை செய்தபெருமை இளம்பூரணருக்கு உண்டு. அதே போல, நன்னூல் முழுமைக்கும் முதல் உரை எழுதிய பெருமை மயிலைநாதருக்கு உண்டு. இம் மயிலைநாதரின் காலம் பவணந்தியார் காலத்தை ஒட்டிய கி.பி. பதினான்காம் நூற்றாண்டு என்பது அறிஞர் முடிவு.[1] கிடைத்த உரைகளுள் இவர் உரையே பழையது ஆதலாலும், பவணந்தியாரைப் போற்றிய கங்கர் குடியை இவரும் தம் முரையுள் போற்றுவதாலும்[2] இக்கருத்து உறுதியாகிறது.

மயிலைநாதருக்கு முன்பு நன்னூல் உரை: நன்னூலுக்கு முதன் முதலில் தோன்றிய உரை மயிலை. உரைதானா என்பது ஆராய்ச்சிக்குரியது. மயிலை. உரைக்கு முன்பே நன்னூலுக்கு உரை அல்லது உரைகள் இருந்திருக்கின்றன என்று உய்த்துணர்தற்குச் சான்றுகள் உள்ளன. மயிலை. தம் முரையில், பிற உரைகளையும், உரையாசிரியர்களையும் சுட்டிக் காட்டுகிறார். அவ்வாறு சுட்டிக் காட்டும்போது பெயரை வெளிப்படையாகவும், பெயரைச்

1. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 14ஆம் நூற். 1869, ப. 118,
2. பாயிர உரை. அடி 15, 16, நூற்பா உரை: 110, 267, 275

சொல்லாமல் பொதுப்படையாகவும் சுட்டுவர். பெயர் சுட்டி உரைப்பன பெரும்பாலும் தொல். உரையாசிரியர்களையும், சிறுபான்மை அவிநய உரைகாரரையும் குறிக்கும். நூலையோ நூல் உரைகளையோ குறிக்கும்போது, அவற்றின் முழுப் பெயரைச் சுட்டி எழுதுவதே மயிலை. உரைமுறை. ஆதலின் உரையாசிரியர்களின் பெயரைக் குறிப்பிடாமல் இவர் சுட்டுமிடங்கள், மயிலைநாதருக்கு முன்பிருந்த நன்னூல் உரையாசிரியர்களையே குறிக்கின்றன. இவ்வாறு மயிலை. பதின்மூன்றிடங்களில் பிற உரைகாரர்களைச் சுட்டிக் காட்டுகிறார். என்பாரும் உளர் (நன்னூல் மயிலை. உரை எண்கள்: 94, 161, 213, 290, 319, 342, 364, 417), உரைப்பாரும் உளர் (60), முடிப்பாரும் உளர், (238), சொல்லுவாரும் உளர் (271) குற்றிகர, குற்றுகரங்கட்குப் புள்ளி கொடுப்பாரும் உளர் (97) என்பன அவர் சுட்டுவன. இக்குறிப்புகளிலிருந்து, மயிலைநாதருக்கு முன்பே நன்னூலுக்கு உரைகள் வழங்கியிருக்கின்றன என்பது தெளிவாகிறது. ஆனால் இவ்விடங்கள் நன்னூல் பழைய உரைகாரர்களைச் சுட்டவில்லை, தொல்காப்பிய உரையாசிரியரையே சுட்டின என்றும் கருதலாம். அவ்வாறு கருத இடமில்லை. காரணம் தொல்காப்பிய உரையாசிரியரைச் சுட்டும்போது இளம்பூரணர் என்று பெயரிட்டு வழங்குவதே இவர் முறை. பிறிதொரு வகையில், மயிலை. சுட்டுமிடங்கள், நன்னூலுக்கு முன் பிருந்த பழைய வாய்மொழி உரைகளையே குறிக்கின்றன என்று கொள்ளலாம். இவ்வாறு கொள்ளுதற்கும் இடம் இல்லை. மேற்காட்டிய பதின்மூன்றிடங்களில், வாய் மொழி உரையே என்பதற்குத் தக, 'என்பர், உரைப்பார், சொல்லுவார்' என்ற சொற்கள் அமைந்துள்ளன. எனினும் 97ஆம் நூற்பாவில் 'புள்ளி கொடுப்பாரும் உளர்' என்று குறிப்பதும், 238 ஆம் நூற்பா வுரையில் 'முடிப்பாரும் உளர்' என்று குறிப்பதும், நன்னூலுக்கு எழுத்து வடிவ உரையிருந்தமையைக் குறிப்பாகக் காட்டுகின்றன. இஃதன்றி வேறு வகையிலும், நன்னூலுக்குப் பழைய உரை இருந்தமை புலனுகிறது. ச. பவானந்தம் பிள்ளை 1912 இல் தன் நூலின் முன்னுரையில், "நன்னூல்: இதற்குச் சமண முனிவர் ஒருவர் உரை செய்தனர். இதனை நூலாசிரியரே செய்தனர் என்றும் கூறுப" என்று குறிப்பிட்டுள்ளார்.[1]

முதன் முதலாக, தொல்காப்பியத்தையும் நன்னூலையும் ஒப்பிட்டுப் பார்வையில் 1858இல் பதிப்பித்த என். சாமுவேல் பிள்ளை நன்னூல் உரைகளைப் பற்றி ஒரு குறிப்புக் கொடுத்திருக்

1. பவானந்தம் பிள்ளை, ச., பேரகத்தியம் திரட்டு, 1942, ப.

கிறார். அக்குறிப்பில் நன்னூலுக்குச் சமணர் உரை ஒன்றுண்டு என்று சுட்டியிருக்கிறார்.

"Samanamunivar, a Buddhist wrote the first exposition of the Nunnol, was known as the 'சமண முனிவர் உரை'. Though lost as a work, a considerable portion of its contents is to be met with in subsequent commentaries, to which it served as a sort of ground-work or basis."[1] என்பது அவர் தரும் குறிப்பு.

நன்னூல் உரையாசிரியருள் ஒருவராய சங். வரலாற்றில் அவர் ஏன் நன்னூலுக்கு உரை எழுத நேர்ந்தது என்பதற்கு விடையளிக்கப் பட்டிருக்கிறது. சங். ஆசிரியர் சுவாமிநாத தேசிகராவார். தேசிகர் நன்னூலுக்கு எழுதப்பட்ட சமண உரை உண்டு, அது குற்றமுடையது என்று கருதினர்.[2] அதனால் அவர் நன்னூலுக்குப் புதியதோர் உரை வேண்டும் என விரும்பினர். தன் விருப்பத்தைச் சங். இடம் கூறினர். ஆசிரியர் விருப்பத் திற்குத் தக, சங். உரையியற்றினர். ஈண்டு, தேசிகர், தம் இலக்கணக் கொத்துரையில் சுட்டிக் காட்டும் நன்னூல் சமண உரை, மயிலை. உரையே என்று கருதுகிறார் உ. வே. சா.[3] இக் கருத்து ஆய்வுக்குரியது. பவானந்தம் பிள்ளை, சாமுவேல் பிள்ளை, சுவாமிநாத தேசிகர் ஆகியோரால் சுட்டப்படும் சமண உரையும், உ. வே. சா. வெளியிட்ட மயிலை. உரையும் ஒன்றன்று. அச் சமண உரை, மயிலை. உரையினின்று வேறுபட்ட பிறிதொரு பழைய நன்னூல் உரையே யாகும்.

மயிலை. அறிந்திருந்த நன்னூல் உரைகள் அவர் காலத்தில் வழக்கில் இருந்துள்ளன. முன் சுட்டிய பதின்மூன்றிடங்களே அதற்குச் சான்று. தேசிகரும் பிறரும் கூறுகின்ற அளவிற்கு, மயிலை. உரை தீவிர சமண உரையன்று.[4] சமணச் சார்பில் தீவிரமுடைய வேறோர் உரையேட்டையே சமணர் உரை என்று அவர்கள் காட்டியிருத்தல் கூடும். தமிழக அரசாங்கச் சுவடி நூலகத்தில் முற்றுப்பெரு நன்னூல் உரையேடு ஒன்றுள்ளது.[5]

1. சாமுவேல் பிள்ளை, எஸ். தொல்காப்பிய–நன்னூல், 1858, ப. 121, 122
2. சுவாமிநாத தேசிகர், இலக்கணக் கொத்துரை, 8
3. சாமிநாதையர், உ.வே., சங். பதிப்பு, 1953, ப. 21
4. பார்க்க: மயிலை. சமயம், ப. 92
5. A Descriptive Catalogue of the Tamil manuscripts in the Govt, Orlental Manūscripts Library, Madras, Vol. I 1912, No, 66 Palmleaf, size 17 1/8 × 1 1/8 320 Contains 68 sutrams in Pothuviyal only.

இவ்வேட்டுப் பகுதியைப் பார்க்கும்போது, இவ்வுரையேடு சமணச் சார்பானது என்பது தெரிய வருகிறது. இச் சான்று களால், மயிலைநாதருக்கு முன்பே நன்னூலுக்கு உரை இருந்தது என்பதுவும், அவ்வுரை சமணச் சார்பினரால் எழுதப்பட்டிருந்தது என்பதுவும், அது 'சமணர் உரை' என்று வழங்கப்பட்டது என்பதுவும், அஃது சுவடி நூலகத்தில் உள்ள முற்றுப்பெரு உரையேடு ஆகலாம் என்பதுவும், பழைய சமணர் உரையும், உ. வே. சா. வெளியிட்ட மயிலை. உரையும் ஒன்று அன்று என்பதுவும் பெறப்பட்டன.

மயிலைநாதர் ஓர் இலக்கணக் கடல்: நன்னூலுக்கு உரை வகுத்த மயிலை. அந்நூலுக்கு முன் தோன்றிய இலக்கணங்கள் அனைத்தையும், இலக்கண உரைகள் அனைத்தையும் நன்கு பயின்றிருக்கிறார். தொல்காப்பியம், இளம்பூரணர் உரை, அவிநய உரை, யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக் காரிகை உரை, நேமிநாத உரை, பனம்பாரம், மாபுராணம், பரிமாணம், நிகண்டுகள், கந்தருவ நூல், அகத்தியம் ஆகிய நூல்களையும், நூலாசிரியர்களையும், நூலுரையாசிரியர்களையும் தம் நூலில் பொருத்தமான இடங்களில் சுட்டிக் காட்டுகிறார். சிறப்பாக, தமக்கு முன் வாழ்ந்த ஆன்றவிந்த கொள்கைச் சான்றோரைப் பொருத்தமான அடைமொழியோடு குறிப்பது மயிலைநாதரின் தனிமுறை. இளம்பூரணரைக் குறிப்பிடும்போது, "ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம்பூரணரெனு மேதமின்மாதவர்" என்று குறிப்பர்.[1] பிறிதோரிடத்தில் இளம்பூர்ண ஆசிரியர் என்றே காட்டுவர்.[2] அவிநய உரைகாரரைச் சொல்லும்போது, "புவிபுகழ் புலமை அவினய நூலுட் டண்டலங் கிழவன் றகைவரு நேமி ஒண்டிசை நிறைபெயரிராச பவித்திரப் பல்லவதரையன்" என்பர்.[3] தொல்காப்பியரைக் குறிக்கும் போது, 'ஒல்காப் பெருமை தொல்காப்பியர்' என்றும், 'ஆசிரியர் தொல்காப்பியனார்' என்றும், 'மெய்ந்நூலார் தொல்காப்பியனார்' என்றும், 'முன்னூலார் தொல்காப்பியனார்' என்றும், 'தொல் காப்பியனார்' என்றும் முன்னும் பின்னும் சிறப்படை கொடுத்துப் போற்றுவர்.[4] அகத்தியனாரை 48, 130, 258, 259, 272, 290, 294, 296, 299, 322, 326, 332, 339, 341, 354, 377, 381, 394 ஆகிய நூற்பா வுரைகளில் பாராட்டிக் குறிப்பிடுகிறார். அவ்விடங்களி

1. நன்னூல், மயிலைநாதர் உரை, 359.
2. மே. கா. நூ. 359
3. மே. கா. நூ. 359.
4. நன். மயிலை. உரை 130, 319, 359; 69, 105, 448; 357; 357, 364; 371, 377.

லெல்லாம், 'மிகத் தெளி கேள்வி அகத்தியனார்' என்றே குறிப்பர். அவிநயத்தை, ஆழ்ந்து ஆழ்ந்து படித்த இவர், 59, 101, 128, 130, 149, 263, 319, 359, 369, 394 ஆகிய நூற்பா உரைகளில் சுட்டுவர். சுட்டும் இடங்களில், 'அளவறு புலமை அவிநயனார்' என்றே அவரைச் சுட்டுவர். இவர்களன்றி, மாபுராணம் உடையார்,[1] பரிமாணனார்,[2] கந்தருவ நூல் உடையார்,[3] யாப்பருங்கல முடையார்[4] என மற்றேரையும் தம்முரையுள் போற்றுவர்.

மயிலைநாதர் ஓர் இலக்கியக் கடல்: வழி வழி வரும் இலக்கண மரபுகளையும் இலக்கிய மரபுகளையும் அவற்றிலுள்ள உரைக் குறிப்புகளையும் அறிந்து தேர்ந்தவர்தான் முழுமையான உரைகாரராக இருக்க முடியும். இலக்கிய உரைகாரரைக் காட்டிலும், இலக்கண உரைகாரர், இலக்கிய வழக்குகளை முற்றக் கற்றறிந்திருக்க வேண்டியது இன்றியமையாதது. மயிலை. தான் ஒரு சிறந்த இலக்கண உரைகாரர் என்பதைத் தான் காட்டும் மேற்கோள்கள் மூலம் நிறுவியுள்ளார். எட்டுத்தொகை நூற்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய அனைத்தையும், பத்துப்பாட்டு நூற்களுள் திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, பெரும்பாணற்றுப்படை, சிறுபாணற்றுப்படை, மலைபடுகடாம் ஆகியவற்றையும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நாலடியார், நான்மணிக்கடிகை, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, களவழி நாற்பது, திருக்குறள், திரிகடுகம், பழமொழி, முதுமொழிக் காஞ்சி ஆகிய வற்றையும், காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, சூளாமணி ஆகியவற்றையும், முத்தொள்ளாயிரம், திருச்சிற்றம்பலக் கோவையார் ஆகியவற்றையும் தம்முரையுள் ஆங்காங்கே வழங்கியுள்ளார்.[5] இவரது உரையிலுள்ள விளங்கா மேற்கோள்கள் வருங்காலத்தில் விளக்கம் பெறுமானால், இவரது இலக்கிய அறிவின் விரிவை மேலும் அறிந்து கொள்ள முடியும். ஈதன்றி, ஆங்காங்கே, இவர் காட்டும் எடுத்துக் காட்டுகள் இவர்

1. நன். மயிலை. உரை, 91.
2. மே. கா. நூ. 401
3. மே. கா. நூ. 100.
4. மே. கா. நூ. 418
5. மே. கா. நூ. 151, 154, 155, 164, 166, 169, 171, 172, 175, 177, 179, 182, 185, 223, 227, 238, 243, 259, 267, 268, 271, 284, 296, 297, 298, 301, 305, 306, 307, 308, 310, 316, 326, 328, 330, 337, 338, 339, 340, 341, 342, 343, 345, 350, 352, 353, 354, 355, 359, 365, 377, 378, 379, 380, 395, 397, 400, 408, 409, 414, 419, 420, 430, 432, 434, 435, 436, 437, 439, 440, 441, 452, 455, 456, 457, 458.

பழந்தமிழ்ப்புலவர் மீது கொண்டிருந்த பற்றைக் காட்டுகின்றன. சான்றாக, 299, 367 ஆம் நூற்பாக்களில் 'கபிலரது பாட்டு' என்றும் 367 ஆம் நூற்பாவில் 'கல்லாட மாமூலனார்' என்றும், 371 ஆம் நூற்பாவில் 'கபில பரணர்' என்றும், 400ஆம் நூற்பாவில் 'நக்கீரர் நச்செள்ளையார்' என்றும் இவர் காட்டுவன காண்க.

மயிலைநாதரின் வடமொழி அறிவு: சொற்களை நான்கு வகைப்படுத்திய அறிஞர், திசைச் சொல்லுக்குள்ளேயே வட சொல்லை அடக்காமற் போனது ஒரு சிக்கல். இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒவ்வோர் உரையாசிரியரும் முயன்றுள்ளனர். அவ்வாறு அவர் முயன்றுரைத்த மாற்றம் ஏறத்தாழ ஒன்றுதான். வடசொல்லைத் தனித்து எடுத்துப் பேச அம்மொழியின் பெருகிய வழக்குத் தமிழோடு ஊடுருவியமை; ஊடுருவிக் கெடுத்தமை; வடமொழி வரவையும் உறவையும் செல்வாக்குள்ள தமிழர் கூட்டத்தின் ஒரு பகுதியினர் ஏற்றுக் கொண்டமை என்பனவே காரணங்களாகும். இவற்றிற்கு மேலான ஒரு காரணத்தை உரை யாசிரியர்கள் கண்டு கூறினர். 'வடசொல் ஒரு நிலத்திற்கே உரியதன்றிப் பதினெண் பூமிக்கும் விண்ணிற்கும் புவனுதிகட்கும் பொதுவாய் வருதலின், திசைச் சொல்லின் அடக்காது வெருேதினு ரென்க.' என்பது மயிலை.[1] கூற்று. சேனவரையர், முனிவர் முதலான அனைத்துரையாசிரியர்களும் இம்மாற்றத்தையே திருப்பித் திருப்பி வரைகின்றனர். அவர்களுக்கு, வடமொழி மீது இருந்த மதிப்பை இம்மாற்றம் காட்டுகிறது. மயிலைநாதரும் இதற்கு விலக்கல்லர்.

மயிலை. வடமொழிப்புலமை வாய்ந்தவர். இதனை அவர் உரையிலுள்ள சில குறிப்புகள் காட்டுகின்றன. அவர் வட மொழியை, 'ஆரியமொழி' என வழங்கும் குறிப்புக் கருத்திற் குரியது.[2] அவர் ஆரிய மொழி ஒலிகளை உரப்பி, எடுத்துக் கனைத்துச் சொல்லல் வேண்டும் என மூன்றிடங்களில் காட்டுவர்.[3] ஆரிய இலக்கணக் கூற்றுள் ஒன்றை ஞாபக வகையை அவர் எடுத்துக் காட்டுவர்.[4] வடமொழி ஆகாரவீறு தமிழில் வரும் போது, ஐகாரமாகும் எனக்காட்டி, வேலை, சாலை, மாலை, உவமை,

1. நன். மயிலை. உரை 278.
2. மே. கா. நூ. 97. வடமொழி என்பது சமற்கிருதத்தை மட்டுமே குறிக்கவில்லை. அஃது தொல்காப்பியர் காலத்தில் வடுகர் மொழியையே குறித்தது. பார்க்க: பரமசிவானந்தம், அ.மு., 'வடமொழி, ஆரியம், சமற் கிருதம்'—கொய்த மலர்கள், 1960. ப. 132—140.
3. மே. கா. நூ. 146, 258, 273.
4. மே. கா. நூ. 107.

வனிதை என்னும் சொற்கோ எடுத்துக்காட்டுவர்.[1] உதயணனைக் குறிக்கும் வத்ஸராஜன் என்பது வத்தராயன் ஆகும் என்று காட்டுவர்.[2] தமிழில் இருமை (dual) இல்லை என்பதனை, வட மொழிக்கு இரண்டல்லாத எல்லாம் பலவென்றும், தமிழுக்கு ஒன்றல்லாத எல்லாம் பலவென்றும் அறிக என உரைப்பர்.[3] இவருக்கு வடமொழிக் கலைநூல்கள் தெரிந்திருக்கலாம் என்ப தற்குத் துணையாக, "வடமொழி முதலான பிற கலைக்கடல்கள்" என்று காட்டுவர்.[4] 'வடமொழிப்பதம் தமிழொடு வருங்கால், பொதுவெழுத்துப்பதம் வருதலே சிறப்புடைத்து, அல்லன வருதல் சிறப்பன்றெனக் கொள்க' என்ற குறிப்பு நன்னூலை ஒட்டியதா யினும் தனிக் கருதுதலுக்கு உரிய குறிப்பு.[5]

கி. பி. ஏழு எட்டாம் நூற்றாண்டுகள், வடமொழிக் கலப்பு, செல்வாக்கில் இருந்த காலம். பல்லவ வேந்தரும், அவர் கீழிருந்த மாந்தரும் சமற்கிருதத்தைப் பெருகப் போற்றினர். அதன் பல விளைவுகளில் தலையாய விளைவு கிரந்த எழுத்துக்களைப் பரவ லாக்கியது. அவ்வெழுத்துகள் சமற்கிருதத்தை எழுத, தமிழர் கண்டுபிடித்த ஒருவகை தமிழ் எழுத்துகள் என்ற புதுமைப் போர் வையில் அறிமுகமாயின. இவ்வெழுத்துகளை ஏற்று ஆதரித்தோர் ஒருபுறம் இருக்க, எதிர்த்தோர் பிறிதொரு புறமிருந்து தமிழ்க் காப் பியக்கம் நடத்தியுள்ளனர். அதன் விளைவே நன்னூல் பதவியலில் உள்ள வடமொழியாக்கம். ஏனைய பிறமொழி எழுத்துகளைப் புறக் கணிப்பது போலவே கிரந்த எழுத்துக்களையும் புறக்கணிக்க வேண்டும் என்ற இயக்கம் உரையாசிரியர் அளவில் வெற்றி பெற்றது. அவ்வெற்றிக்கு உறுதுணைத் தூண்களாய் இருந்தவருள் ஒருவர் மயிலை.

மயிலைநாதரின் மொழிநடை: உரைநடை, தமிழில் பத்தொன் பதாம் நூற்றாண்டில்தான் பிறந்தது என்பது பிழை.[6] தமிழில் என்று உரைநூல்கள் தோன்றினவோ அன்றே உரைநடையும் தோன்றிவிட்டது என்பதே இலக்கிய வரலாற்று நீதி. மொழிநூல் தந்தையார் தொல். காலத்திலேயே உரைநூல்கள்[7] தமிழில் எழுதப்பட்டு விட்டன. பின்னர் மக்கள் பேச்சிலும், கல்வெட்டு மொழியிலும் வளர்ந்த உரைநடைத் தீபம், உரையாசிரியர்கள்

1. நன். மயிலை. உரை, நூ. 146
2. மே. கா. நூ. 146
3. மே. கா. நூ. 396
4. மே. கா. நூ. 459.
5. மே. கா. நூ. 145.
6. பரமசிவானந்தம், அ.மு., தமிழ் உரை நடை, 1959, ப.39—42.
7. தொல். செய்யுளியல், 163, 171, 235.

காலத்தில் நன்கு தூண்டப்பட்டது. அவ்வாறு தூண்டத் தூண்டிய உரைகாரருள் மயிலைநாதரும் ஒருவர். நூற்பாவிற்கு உரைவகுத்த நெறியில் இவருக்கெனத் தனி நெறிகள் உள்ளன. பெரும்பாலும், இவரது நூற்பாவின் பொருள் உரைமுறை, அ. கொளு, ஆ. பொருள், இ. சிறப்புக் குறிப்பு, ஈ. வரலாறு (எ–டு) எனப் பொதுவாய் அமையும். பாயிரம், பெரும்பாலும் சிறப்புக் குறிப்புரையோடு முடிந்துவிட்டது. இருநூற்பாக்களை ஒருசேரச் சேர்த்து இவர் உரை கூறலும் உண்டு.[1] உத்தி, குற்றம், சூத்திர நிலை இவற்றை நூல் முழுதும் பொருத்திக்காட்ட இவர் முயலவில்லை. பத்தழகுகளை எங்கும் இவர் இணைத்துக் காட்டவில்லை. நூலாசிரியர்களை, உரையாசிரியர்களை இவர் வறிதே அழைப்பது இல்லை; அழகான புகழ் மொழிகளை அடை மொழிகளாக்கி அழைப்பர். "அளவல் புலமை அவிநயனுர்"[2], "மிகத்தெளி கேள்வி அகத்தியனுர்"[3], "உளங்கூர் கேள்வி இளம்பூரணர் எனும் ஏதமில் மாதவர்"[4] எனவரும் அடைமொழி களைக் காண்க.

அரிதான சொற்களுக்குப் பொருள்தந்து புரிய வைப்பர்.[5] எகின்–அன்னம்; குயின்–கொண்மூ, முதலியன சான்று.

இலக்கணப் பொருள் நுணுக்கத்தை எளிதில் புரியவைக்க, பொருத்தமான உவமைகளை எடுத்துக்காட்டுவர் உரையாசிரியர். இக்கலையில் சங். மிக வல்லவர்.[6] நச்சினுர்க்கினியர் தொடக்கி வைத்தவர்.[7] மயிலைநாதரும் தேவையான இடங்களில், உவமை களைக் கொண்டு பொருளை விளக்குமாற்றைக் காணுகிறோம். ஆரும் வேற்றுமை உருபு 'அது' வேற்றுமை உருபேற்பதை "ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே"[8] என்ற நூற்பா உரையில் விளக்கு கிறார். பெயர், உருபு ஏற்பதற்கும், 'அது' என்ற உருபு உருபேற்ப தற்கும் ஒரு வேறுபாடு உண்டு. முன்னது விளி ஏற்கும். பின்னது ஏற்காது. விளி ஏலாதது ஒரு குறைதானே. அதனை நிறைவு செய்ய ஓர் உவமையைச் சொல்லுகிறார். உறுப்புக் குறைபடாதவன் மனிதன். சில உறுப்பிற் குறைபட்டாரும் மனிதர்தானே. அது

1. நன். மயிலை. உரை, 179
2. மே. கா. நூ. 59
3. மே. கா. நூ. 48
4. மே. கா. நூ. 339
5. மே. கா. நூ. 214, 215.
6. சங். உரைத்திறனைப் பார்க்க.
7. தொல். எழுத்ததிகார உரை, 1,2.
8. நன். மயிலை. உரை. 296

போலத்தான், ஒரு குறை வாய்த்தாலும், ஆறனுருபு, உருபேற்பது என்று வாதிடுகிறார். பிறிதோர் இடத்தில், 'அரசனுல் இயற்றப் பட்ட தேவகுலம் என்றற்றொடக்கத்தனவற்றுள் உருபல்லாத பிற மொழிகள் வருமாறு என்னை எனின், அவை கனலொடு புகையும், குடையொடு நிழலும் போல உருபு வர வந்து, நீங்க நீங்கும், பொருளை விளக்க வேண்டுழி என்க'[1] என்பர். இவர் அணிகளைப் பற்றி அறிந்திருந்தமையை 359ஆம் நூற்பா உரை காட்டுகிறது. சொல்லெச்சம் பற்றிய நூற்பாவில், விலக்கு அணியையும், சிலேடை அணியையும், நுவலாநுவற்சி அணியையும் சுட்டிக் காட்டுகிறார். அக்காலக் கல்வெட்டுமொழி, இலக்கண அமைதிற்குத் துணையாக இருந்திருக்கிறது. சான்றாக, வடசொல் தமிழில் வந்து வழங்குமாற்றை வரையறுப்பதற்குப் பவணந்தியார் கல்வெட்டுத் துணையை நாடியிருத்தல் கூடும்.[2] மூல நூலாசிரியர் அன்றி, உரையாசிரியரும், கல்வெட்டுகளைப் படித்திருக்கின்றனர் என்பதற்கு மயிலை. உரையே சான்று. 400ஆம் நூற்பாவிற்கு எடுத்துக்காட்டு நல்கும்போது, "கீழ் நோக்கிய கிணறு மேல் நோக்கிய மரம்" என்ற தொடரைக் காட்டுவர். இத்தொடர், கல்வெட்டில் அடிக்கடி ஆளப்பெறும் தொடர்.[3]

இலக்கிய நடை: பழைய இலக்கிய வாணரின், இலக்கியப் புலமை ஆழ்ந்தது; அகன்றது. தமக்கு முன் இருக்கும் இலக்கியச் செல்வங்களைத் தம் சொந்த உடமையாக்கிக் கொள்வர். அவரெழுதும் படைப்புகளுள், அவர் படித்த பண்டை இலக்கியங்களின் நிழல் அப்படியே படர்ந்திருப்பதைக் காணலாம். தம் தனிமை கெடாதவாறு, இலக்கியச் சாயலின் இனிமையை இணைத்தளிப்பது அன்னவர்க்கே உரிய அரிய கலை. இக் கலையாற்றலில், மயிலைநாதரும் குறைந்தவரல்லர். குழைகொண்டு கோழி எறியும் வாழ்க்கையவர் என்ற தொடரில் பட்டினப்பாலையின் சாயலைக் காணலாம்.[4] அதுபோல சில: தச்சனுல் இயற்றப்பட்ட வையம் என்ற எடுத்துக் காட்டில் குறுந்தொகையின் சாயல்.[5] குறுங் கானம் போல என்பதில், சிறுபஞ்சமூலச் சாயல்;[6] தைந் நீரரடுப என்ற வரியில் பரிபாடலின் சாயல்.[7] எறும்பு மூட்டை கொண்டு திட்டை ஏறல் என்ற பழமொழித் தொடரில்

1. நன். மயிலை. உரை. 296
2. அறவாணன், க. ப., 'இலக்கண அமைவில் கல்வெட்டு மொழியின் தாக்கம்', ஆய்வுக்கோவை, இ.ப.த. மன்ற வெளியீடு, 1978, ப. 624
3. சாசன மாலை, எஸ். ராஜம் வெளியீடு, 1960, ப. 41
4. நன். மயிலை. உரை 407; பட்டினப் பாலை, 22—23
5. மே. கா. நூ. 296; குறு. 61
6. மே. கா. நூ. 351; சிறுபஞ்ச., 92. 7. மே.கா.நூ. 351; பரி., 11

புறநானூற்றின் சாயல்;[1] ஆடா வடகு எனக் காட்டுவதில், திணைமாலையின் சாயல்;[2] தீத்தீண்டு கையால் தெரிவித்தல்காண் என்பதில் திணைமாலையின் சாயல்;[3] இதனை இதனால் என்ற தொடரில் இதனை இதனால் இவன்முடிக்கும் எனவரும் திருக்குறளின் சாயல்;[4] அமரீர், அசுரீர் என்ற விளித்தொடரில் யாப்பருங்கலவிருத்தி உரை மேற்கோட்பா அடியின் சாயல்.[5] இவற்றுல் முன்னேர் மொழியைப் பொன்னே போலப் போற்றும் மயிலைநாதரின் இலக்கியத் திறனை உணரலாம்.

எதுகை நடை : நூற்பாவுக்கு உரை நல்கி, எடுத்துக் காட்டு உரைக்கும் போது கூட மயிலைநாதரின் கவிதை நெஞ்சைக் காணலாம். சான்றுக, அடை, ஆடை, நரை, நாரை, முகை, மூகை என்று 101ஆம் நூற்பாவில் குறிப்பதையும் வீக்கம், நோக்கம், ஊக்கம் என்று 121ஆம் நூற்பாவில் குறிப்பதையும் காண்க.

பழமொழியாளுதல்: வாய்ப்பு நேரும் இடங்களில் தக்க தமிழ்ப் பழமொழிகளையே எடுத்துக்காட்டுவர். மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா[6] என்பதுவும், முட்டை கொண்டு திட்டை ஏறல்[7] என்பதுவும் இவர் காட்டும் பழமொழிகள்.

பேச்சு வழக்கை ஏற்றல்: மரபிலக்கணிகள், பேச்சு மொழியை முற்றப் புறக்கணிப்பதில்லை. வாய்ப்பு நேரும்போது அதனை எடுத்துக்காட்டாமல் விடுவதும் இல்லை. சான்றுக மயிலை. "வாரியோள், வாருங்கோள், வந்தியோள்" என்பனவற்றைக் காட்டுதலைச் சுட்டலாம். இவற்றைக் காட்டி மயிலை. பின் எழுதும் தொடரும் கருதுதற்குரியது. "இவை கால வழக்காய் வருவன" என்று காட்டும் குறிப்புச் சிறப்பானது.[8]

வினை எழுப்பி விடையிறுத்தல்: இம்முறை சமற்கிருத இறக்குமதி என்பர்.[9] தாமே வினை எழுப்பித் தாமே விடை

---

1. நன். மயிலை. உரை, 383; புறம், 173
2. மே. கா. நூ. 267; திணைமாலை, 4
3. மே. கா. நூ. 267; திணைமாலை 4
4. மே. கா. நூ. 163; குறள், 517
5. மே. கா. நூ. 308; யாப். விருத்தி, 53
6. மே. கா. நூ. 377
7. மே. கா. நூ. 383
8. மே. கா. நூ. 256
9. அறவாணன், க. ப., சேனாவரையர் உரைத்திறன், தென்மொழி, மே., ஜூன் 1970, ப. 57

யளித்தல் இதன்முறை. இலக்கண உரைகாரருள் சேனவரையரும் இலக்கிய உரைகாரருள் பரிமேலழகரும் இந்நெறியைப் போற்று வோர் ஆவர்.[1] மயிலை. இம்முறையைப் பின் பற்றி உரை வழங்கிச் சென்றிருப்பதை 55, 59, 253 322, 418ஆம் நூற் பாக்களில் காணலாம்.

மயிலை. எத்துணைக் கூர்ந்து, சீரார்ந்த உரை வழங்குகிறார் என்பதற்கு ஒரே ஒரு சான்று. பாஅச் சோற்றிற்கு ஒரு சோறு பதம். நூலுரை, உரை விரி எனும் இவை, ஆறு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொடர்த்தொகை மொழி. இவை நூலையொக்கும் உரை, நூற்குரை, நூலதுரை, நூற்கணுரை, நூலன்ன உரை நூலும் உரையும் என்றும், உரையை விரி, உரைக்கு விரி, உரையது விரி, உரைக்கண் விரி, உரைக்கும் விரி, உரை விரிவுடையது என்றும் வரும்,[2] எனக் காட்டும் உரைத்திறன் எண்ணற்பாலது. வினுக்களின் பெயர்ப் பொருத்தத்தை மயிலை. விளக்கிய நயம் தனிச் சிறப்புக்குரியது. "அறிவினுல் வரும் வினு, எதிர்வாதியாலும் ஆசிரியனுலும் வரும். எதிர்வாதி, எதிரியை அளத்தற்கும் அறியாமை காட்டு தற்கும் வினுவும். ஆசிரியன், ஒருவனை அளத்தற்கும் கொடுத் தற்கும் அவனை விளக்குதற்கும் அவ்வாறு வினுவும்[3] என விளக்குவர்.

மயிலைநாதர் ஆளும் உத்தி முதலாயின: இலக்கண நூலைப் படைப்பதற்கும், படிப்பதற்குமாகச் சில பொது விதிகளை முன்னோர் வகுத்துப் போற்றினர். அவற்றுள், உத்தி, அழகு, குற்றம், சூத்திரநிலை என்பன குறித்தற்குரியன. இவை நூற் படைப்பிற்கும், படிப்பிற்கும் உரியன. உத்தி, சூத்திரநிலை ஆகியன, இலக்கண நூலைப் புரிந்துகொள்ளப் பெரிதும் துணை செய்வன. குற்றம் நீங்கிய அழகு படைப்பாளனுக்கு மிக இன்றியமையாதது. இவற்றை நூலுரையாளன் தன் உரையின் ஊடே ஊடே நுழைத்து விளக்கல் நுட்பமானது. மயிலை. இந்நுட்பத்தை முற்றச் செய்யவில்லை யாயினும் ஆங்காங்கே செய்திருக்கிறார்.

சிறப்புடைப் பொருளைத் தானெடுத்து மொழிதல் (57, 297), உய்த்துணர வைப்பு (91), ஏற்புழிக் கோடல் (153), ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் (302), முடிவிடங் கூறல் (459) என

1. சேனுவரையம், 7, 412, 416
2. நன். மயிலை; உரை, 872
3. மே. கா. நூ. 384

உத்திகளையும், கூறியது கூறல் (294), மயங்கக் கூறல் (148), மற்றொன்று விரித்தல் (145), குன்றக் கூறல் (461) மிகைபடக் கூறல் (461) எனக் குற்றங்களையும், சிங்க நோக்கு (351, 419, 461) எனச் சூத்திர நிலையையும் சுட்டிச் செல்வர்.

மயிலைநாதம்—ஒரு செய்திக் களஞ்சியம்: தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரை உரைநூல்கட்குப் பல பெருமைகள் உள்ளன. அவை இல்லையேல், மறைந்துபோன தமிழ் இலக்கியங்களின் பெயர்களும் அறியப் படாமற் போயிருக்கும். இப்போது மறைந்துவிட்ட பல நூற்பெயர்களை, நூலாசிரியர் பெயர்களை, உரைகளை, உரையாசிரியர் பெயர்களை மயிலை. போன்ற உரைகாரர் எடுத்துக் காட்டினமையால்தான், அப்பெயர்களாவது பிழைத்தன. 'மறைத்துபோன தமிழ் நூல்கள்' என்ற அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களது நூல் இதனை உறுதி செய்கிறது.[1] பல நூல், நூலாசிரியர், நூலுரையாசிரியர் பெயர்களை அறிவித்த தனிப்பெருமை மயிலைநாதர்க்குண்டு. ஈதன்றி இன்னும் பல அரிய குறிப்புகளை மயிலை. வழங்கி யிருக்கிறார்.

ஆவி (உயிர்), மெய் (உடம்பு) என்னும் பெயர்களை உவம ஆகுபெயர்களாக, தமிழ் எழுத்துகளுக்கு ஏற்றிவைத்து உரைப்பது மரபு. மயிலை இவற்றை இடுகுறிப் பெயர்களாகக் குறிப்பர்.[2]

நன்னூல் தொல்காப்பியம் வழங்கிய செய்திகள் சிலவற்றை விடுத்திருக்கிறது, அது வழங்காத புதுச்செய்திகளை வழங்கியிருக்கிறது. இதனால், தொல்காப்பிய வழிநூல் நன்னூல் என்பதனைக் காட்டிலும், வழி அழி நூல் என்ற கருத்து, அக்காலத்து இருந்தது போலும். இதனால் நன்னூலையே 'எதிர் நூல்' என்று சிலர் வழக்காடினர் போலும். மயிலை. நன்னூல் எதிர்நூல் அன்று, வழிநூலே என்ற கருத்துடையவர்.[3] மயிலை, மேற்கண்ட கருத்தைத் தம் முரையில் குறிப்பிடுவதால், நன்னூலைப் பற்றிய அன்றைய வழக்குகள் புலனுகின்றன. நன்னூல் எழுதப்பட்ட போது, சிலர், இஃது தொல்காப்பிய எதிர் நூல் எனப் பிரசாரம் செய்திருத்தல் கூடும். அதனைத் தவிர்க்கவே உடனுக்குடன் உரை எழுதி மயிலை. விளக்கினர் போலும்!

எழுத்துகளை உருவ எழுத்து, உணர்வெழுத்து, தன்மை எழுத்து, ஒலி எழுத்து எனப் பிரிப்பர்.[4] இதனைப் போன்று

1. வேங்கடசாமி, மயிலை சீனி., மறைந்துபோன தமிழ் நூல்கள், முன்னுரை
2. நன். மயிலை. உரை, 61
3. மே. கா. நூ. 62
4. மே. கா. நூ. 57, 256

பிறிதொரு பாகுபாடு யாப்பருங்கல விருத்தியில்[1] காணப்படுகிறது. இப்பிரிப்பு எழுத்து வரலாற்றிற்கு மிகக் கைகொடுக்கிறது. சார்புநூலைப் புடைநூல் என்றே ஓரிடத்தில் குறிப்பர்.[2] 'நாவல்' என்ற சொல்லிற்குப் பலபொருளுண்டு. சங். "நாவல் என்பது நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத் துரப்பதொரு சொல்" என்பர் (ப, 53). மயிலை. போர்க்கழைத்தல் என்ற பொருளுடைய தென்பர்.[3]

சகரக் கிளவி தமிழ் வழக்கன்று என்ற கொள்கை தோன்றுமாறு தொல். எழுத்ததிகாரம் 62ஆம் நூற்பாவைச் செய்தார். மயிலை. அக்கூற்றை மறுத்துச் சகர முதல் தமிழ்ச் சொற்களின் பட்டியலையே எடுத்துக் காட்டுவர்.[4]

சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி
சளிசகடு சட்டை சவளி—சவிசரடு
சந்து சதங்கை சழக்காதி யீரிடத்தும்
வந்தனவாற் சம்முதலும் வை

விளையாலளையும் பெயர்: சில இடங்களில், விளைமுற்று வடிவங்களே விளையாலளையும் பெயர்களாக வந்துவிடுதல் உண்டு. அத்தகு இடங்களில் எப்படி வேறுபடுத்தி அறிவது? மயிலை. கூர்மையானதொரு வேறுபாட்டைச் சொல்லுகிறார். 'எடுத்தல் ஓசையால் சொல்ல விளைப்பெயராம்; படுத்தல் ஓசையால் சொல்ல முற்று விளைப்பதமாம்.'[5]

ஒன்பது பற்றிய எண்ணுப் பெயராராய்ச்சி இன்னும் ஓய்ந்த பாடில்லை. இவ்வாய்வில் புதியதோர் கருத்து விளக்கம் தோன்றவித்திட்டவர் மயிலைநாதரே. ஒன்பது—ஒன்று ஊனமான பத்து—என யாரும் சொல்லாத புதியதொரு குறிப்பைக் கொடுத்துள்ளார்.[6]

பருவப் பெயர்கள்: சிற்றிலக்கியங்கள் செல்வாக்குப் பெற்ற காலத்தில் பருவப்பெயர்கள் பெருக வழங்கின. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்

1. யாப். விருத்தி, கழக வெளியீடு, 1973, ப. 576-577
2. நன். மயிலை. உரை, 90
3. மே. கா. நூ. 100
4. மே. கா. நூ. 105
5. மே. கா. நூ. 131, 285
6. மே. கா. நூ. 193

என்ற ஏழு பருவப் பெயர்கள் எப்போது தமிழில் வழங்கத் தொடங்கின? இவற்றை முதன்முதலாகக் குறித்தவர் இவரே.[1]

காலம் : இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்று காலம் மூவகைப் படும். இதனை முறை மாற்றி இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்று பவணந்தியார் நூற்பா யாத்தனர். இம்முறைமாற்றுக்குக் காரணம் காட்டும்போது, மயிலை. அக்காலத்திருந்த காலப்பகுப்புப் பற்றிய விரிவான செய்திகளைத் தருகின்றார். காலமென ஒரு பொருள் இல்லை என்பாரும், நிகழ்காலம் ஒன்றுமே என்பாரும், இறப்பு எதிர்வு என்ற இரண்டு என்பாரும், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூன்றென்பாரும் உளர் என்று காட்டி அவர் காட்டும் காரணங் களையும் காட்டுகின்றார். "இவ்விகற்ப மெல்லாம் அறிவித்தற்கு இவ்வாறு சூத்திரம் செய்தார் என்க" என்று மயிலை. தரும் விளக்கம் சிறப்பான ஒன்றாகும்.[2]

அரிய சொற்களும் பொருளும் : அரிய சொற்களுக்குப் பொருள் கூறல் இவர் வழக்கம். மரபுவழா நிலைச் சூத்திரத்தில் சில மரபுச் சொற்களைக் குறிப்பர்.[3] அவ்வாறு குறிக்கும்போது, "பொரி என்பது எருமைக்குரித்து. குழ என்பது ஆவினங் கன்றுக்கும் எருமைக் கன்றுக்கும் உரித்து. களபமென்பது யானைக் குரித்து" என விளக்குவர். இவ் விளக்கத்திற்குக் குறிப்பு வழங்கும் உ. வே. சா. பொரி, குழ, களப மென்ற வற்றிற்கு ஒரு பிரதியிலும் உதாரணம் கிடைத்திலது என்பர். ஆனால் களபம்-குட்டி என்ற வழக்கைச் சிலப்பதிகாரத்திலும், குழக் கன்று (குழ + கன்று) என்ற வழக்கைத் திவ்வியப் பிரபந்தத் திலும் காணுகிறோம்.[4]

இலக்கியத் தொகைகளுக்குப் பெயர் சூட்டல் : தமிழ் இலக்கியத்தை அழிவினின்று தடுத்துக் காக்கவே தொகை (Anthology) தோன்றிற்று. இத்தொகுப்பும், தொகுத்த பெயர் களும் சரியாக என்று தோன்றின என அறியக் கூடவில்லை. மயிலை. தான் முதன் முதலாக, ஐம்பெருங்காப்பியம், எண்பெருந் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, உரிச்சொற் பனுவல்கள் என்ற குறிப்பை வழங்குகிறார்.[5]

---

1. நன். மயிலை. உரை, 276
2. மே. கா. நூ: 381
3. மே. கா. நூ. 387
4. சிலம்பு, 25-49; பார்க்க: தமிழ் லெக்சிகன்: குழக்கன்று.
5. நன். மயிலை. உரை, 387

அவிநயம் : அவிநயம் என்பது ஓர் இலக்கண நூல் என்பது மயிலை. உரையால் அறியக் கிடக்கிறது. ஆனால் இவ்விலக்கண நூலின் உரைகாரர் பெயர் அறியப்படாமலே இருந்தது. அவ் வுரையாசிரியர் பெயரை முதல்முதல், இராசபவித்திரப் பல்லவ தரையர் என்று தெளிவுபடுத்தியவர் இவரே.[1] அவிநய நூற் பாக்கள் அனைத்தும் கிடைக்கப்பெறவில்லை. எனினும் அந்நூலின் சிலச்சில நூற்பாக்கள் ஆங்காங்கே மேற்கோளாகக் காணப்படு கின்றன. மயிலை. உரையில் அன்றி யாப்பருங்கல விருத்தியிலும் அவை கிடக்கின்றன. இவற்றுல் எல்லாம் அறிய முடியாத சில அடிப்படைக் குறிப்புகளை மயிலை. காட்டும் அவிநய மேற்கோள் நல்கியிருக்கிறது. அவிநய நூலாசிரியர் சைனர் என்பது, அணுத் திரளை மொழிக்கு முதற்காரணமாகக் கொள்வதினின்று கிடைக் கிறது.

நன்னூல் 127 இல் மேற்கோளாக, மயிலை.

> "தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிறபொருளைச்
> சுட்டுதற் கண்ணேயாஞ் சொல்"

என்ற 'அவிநயப் புறனடை' நூற்பாவைக் காட்டுகிறார். இக் காட்டுனின்று, அவிநய இலக்கணம், நூற்பா யாப்புடன் அன்றி, வெண்பா யாப்பாலும் செய்யப்பட்டிருக்கிறது என்பது உய்த் துணரப் படுகிறது.

பழமொழி : இதுவரை கையெழுத்து ஏடு எதுவிலும் காணப் படாதிருந்த பழமொழியின் முதற்செய்யுள், மயிலை. உரையால் அறியப்பட்டது.[2] அப் பழமொழிச் செய்யுள் :

> "அரிதவித் தாசின் றுணர்ந்தவன் பாதம்
> விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்
> துரியதனிற் கண்டுணர்ந்தா ரோக்கமே போலப்
> பெரியதை ஞவி பெரிது"

எண்ணூல் : பழந்தமிழில் பலவேறு கலைநூல்கள் இருந்தன. அவை கடலாலும், கரையானாலும், காலத்தாலும் கொள்ளப்பட்டு அழிந்தன. அவ்வாறு அழிந்த கலைநூல்களுள் என் ஆராய்ச்சி நூல்களும் அடங்கும். அத்தகு நூலொன்றைப் பெயரளவில் மயிலை. உரை அறிவிக்கிறது.

> "தாதிவர் தாமரைத் தடமலர் ஒதுங்கிய
> ஆதியை வணங்கி அறைகுவன் எண்ணே"

---

1. நன். மயிலை. உரை. 359
2. மே. கா. நூ. 418

என்ற பாட்டை, மயிலை. 330 ஆம் நூற்பாவுரையில் ஆளுவதால் பண்டு எண்ணூல் எனும் ஒரு நூல் தமிழில் வழங்கியதென அறியலாம்.

பரிமாணம் : பரிமாணம் என்ற இலக்கண நூல் பரிமாணனாரால் செய்யப்பட்டது என்ற குறிப்பை, 'விதந்த மொழியினம் வேறும் செப்பும் என்ருர் பரிமாணனார்' என்ற மயிலை. மேற்கோளினின்று தெளியலாம்.[1]

இளம்பூரணர் : தொல்காப்பியக் கடலில் முதலில் மூழ்கி உரைமுத்து எடுத்தவர் இளம்பூரணர். இவர், பேரறிவினர் என்பதும், துறவி, தவசி என்பதும் மயிலைநாதர் உரையால் விளக்கமாகின்றன. 'ஒல்காப்புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம்பூரணர் என்னும் ஏதமில் மாதவர்' என்பது அக் குறிப்பு.[2]

பனம்பாரம் : பனம்பாரம் என்ற நூலை இயற்றியவர் பனம்பாரனார். இவரே தொல்காப்பியப் பாயிரத்தைச் செய்தவர். இவர் எழுதின பாடல் ஒன்று குறுந்தொகையில் உள்ளது.[3] இப்பாக்களன்றி, 'பனம்பாரம்' என்ற நூலொன்றை இவர் ஆக்கினர் என்பதும், மயிலை. உரையால் தெளிவாகின்றன. இன்று நன்னூல் சூத்திரங்களாகக் கருதப்படும் 51, 52 ஆம் நூற்பாக்கள் பவணந்தியாரால் எழுதப்பட்டன அல்ல. பனம்பாரனாரால் எழுதப்பட்டன என்பது மயிலை. குறிப்பு.[4]

ஒரு நூற்பாவைப் பற்றி : பாயிரம் 8ஆம் நூற்பாவை அடுத்து 'முன்னோர் மொழி பொருளே அன்றி' எனத் தொடங்கும் வெண்பா வடிவுடை நூற்பா நன்னூல் பகுதியாக இன்று பதிக்கப்படுகிறது. ஆனல் மயிலை. உரைப்படி, இந்நூற்பா நன்னூலின் பகுதி அன்று. மேற்கோள் பாட்டே என்பது புலப்படுகிறது.

ஒரு பாட்டைப் பற்றி:

> " ஓங்கெழில் முதலாக் குன்றுகூதிர் பண்பு தோழி
> விளியிசை முத்துறழ் என்றிவை யெல்லாம்
> தெளிய வந்த செந்துறைச் செந்துறை"

என்ற பாட்டு, யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக் காரிகை உரையினுள்ளும் காட்டப்பட்டுப் பொருள் விளங்காமல்,

1. நன். மயிலை. உரை, 401
2. மே. கா. நூ. 359
3. குறு. 52
4. நன். மயிலை. உரை, 51, 52

அறிஞரைத் தவிப்பில் ஆழ்த்தி வந்தது. மயிலை. உரையில்தான், இப்பாட்டு, முதல் நிலைப்பு உணர்த்தும் பாட்டு என்பது தெரிய வந்தது. குறிப்பாக உணர்த்துஞ் சொற்களைப் பற்றிய 268 ஆம் நூற்பாவில் முதன் மொழி பாட்டை உணர்த்தும் வகைக்கு இப் பாட்டை எடுத்துக்காட்டி, மயிலை. விளக்கினர். இவ்விளக்கம் இன்றேல், மேற்கண்ட பாட்டு, பொருள் விளங்கா இருள்பாட்டாகவே இருந்திருக்கும்.

இலக்கண உரைகளுள் தொடர்ந்து இடம்பெற்று வரும் சில தொடர்கள், உரைநடை என்றே இதுகாறும் கருதப்பட்டன. மீயிலை. உரைக்குப் பின்தான், அவை பழைய, மறைந்துபோன நூல்களின் சூத்திரங்கள் என்பது அறியப்பட்டது.[1]

உயிர்ப் பொருள்களின் தொழிற்பண்பு பற்றி மிகச் சுருங்கவே பொருளுரைத்தனர் பிறர். இவரோ சிறப்பாக, உய்த்தல் என்பதற்கு மடைத்தொழில், வாணிகம், உழவு, கல்வி, எழுத்து, சிற்பம் என்ற ஆறு தொழில்களையும் முயறல் எனக் காட்டினர்.[2]

இலக்கணப் புதுமைகள் : மரபுமரபாக நினைக்கப்பட்டு வரும் பழைய நெறிக்கு மறுதலையாகச் சில புது நெறிகளை மயிலை. காட்டுவர். பலவேறு புரட்சிப் புதுமைச் சிந்தனையாளர் மயிலை. என்பதனை அக்குறிப்புகள் உறுதி செய்கின்றன. அவன் எனும் சுட்டுப்பெயரை அ + அன் எனப் பிரித்து விளக்குதல் ஒரு முறை. ஆனால் மயிலை. அச் சொல்லைப் பகாப்பதம் என்கிறார்.[3] சாரியை, சொல்லாகத் தோன்றி இடைச் சொல்லாகத் தேய்ந்தது என்பர். அற்று, அத்து, இல் போன்றவற்றைக் காண்க. மயிலை. சாரியையின் வரவு இன்னெளிக்காகவே என்பர்.[4] வந்தான் என்பதனை வா + த் + த் + ஆன் எனப் பிரிப்பது அண்மைக்கால இலக்கண நெறி. வா + த் + த் + ஆன் என்பவற்றுள் 'வா' என்பது 'வ' எனக் குறுகி நின்றது விகாரம் என்று காட்டுவர். 'வம்' என்பதனைப் பகுதியாக மயிலை. காட்டுவர். 'வா' என்பது 'வம்' என்றாகும். வம் + த் + ஆன் என்பது, இவரது புதுமைப் பிரிப்பு.[5] இறந்தகால இடைநிலை வரும் சொற்களுக்கு எடுத்துக்காட்டு நல்கும்போது விட்டான் (விடு + ட் + ஆன்), உற்றான் (உறு + ற் + ஆன்) எனக் காட்டுவர்.[6]

---

1. நன். மயிலை., உரை. 127, 227
2. மே. கா. நூ. 452
3. மே. கா. நூ. 130
4. மே. கா. நூ. 131
5. மே. கா. நூ. 144.
6. மே. கா. நூ. 141

கிரந்த எழுத்துகளான ஜ, ஷ, ஹ, க்ஷ என்ற எழுத்துகளை எழுதுதல் இடைக்காலத்தில் அறிமுகமாகி பல்லவ அரசர் துணையோடு செல்வாக்கும் பெற்று விட்டன. இவ்வாறு எழுதுவோர் ஒருபுறம் இருக்க எதிர்ப்போர் பிறிதொரு பக்கம் இருந்தனர். மயிலை. 'கிரந்த எழுத்துகளைச் சேர்த்து எழுதக் கூடாது' என்ற கொள்கையினர். அதனற்றன், "தமிழில் வரும் வடமொழிப் பதங்களுடன் பொதுவெழுத்தால் வருவன சிறிப்புடையன; அல்லவை சிறப்பில்லாதன" எனப் பொறித்துள்ளார்.[1]

வினை எழுத்துகள் : வினை எழுத்துகள், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறிலும் வரல்வேண்டும். ஆனால் எல்லா எழுத்துகளும் அவ்வாறு வருதல் இல்லை. ஏகார வினை இட முதலிய ஐந்தினும், யா வினை கால முதலிய நான்கினும் வருதல் அரிதென்பர் மயிலை.[2]

'அனைத்து' என்ற ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்றை 369 ஆம் நூற்பாவில், 'பன்மை' எனக் குறிப்பர். அச்சொல்லின் புறவடிவம் (External structure) ஒருமை வடிவாய் இருந்தாலும், அகவடிவம் (Internal structure) பன்மையை உணர்த்துவதால் அவ்வாறு கூறினர் போலும்.

பகுபத முடிவுகள் : 'றவ்வொடுகர உம்மை...' எனத் தொடங்கும் நூற்பாவில்[3] இவர் தம் கருத்துப் பாணியில், பகுபத முடிவுகளை விளக்குகிறார். இவர் விளக்கத்திற்கும் பிற்காலத்தார் கூறும் விளக்கத்திற்கும் நிரம்ப வேறுபாடுகள் உள்ளன. அவ்வேறுபாட்டுள் ஒன்றே (வா > வம்) முன்பு எடுத்துக்காட்டப் பட்டது.

நன்னூல் ஐந்ததிகாரம் எனல் : நன்னூல், இரண்டு அதிகார நூலா, ஐந்ததிகார நூலா,என்பது ஆய்வுக்குரியது. இவ்வாய்வில் நன்னூல் ஐந்ததிகாரம் என்ற கருத்திற்கு வலிவு கொடுத்தவர் மயிலை. நூற்பா 461இல் "இந்நூலிற் சொன்ன ஐந்ததிகாரத்திற்கும் சிங்கநோக்காய் நிற்பதொரு புறநடை உணர்த்துதல் நுதலிற்று" என்றும், "இவ்வாறே மேல்வரும் அதிகாரங்களிலும் கண்டு கொள்க" என்றும் இவர் குறித்த குறிப்புகள் மிக இன்றியமையாதன.[4]

---

1. நன். மயிலை. உரை, நூ. 145
2. மே. கா. நூ. 278
3. மே. கா. நூ. 144
4. பார்க்க: இந்நூல் ப. 50.

பாயிரம் பவணந்தியார் இயற்றியதா? இந்த அடிப்படை வினாவைக் குறிப்பாக எழுப்பிவிட்ட பெருமை மயிலைநாதரையே சாரும். "மலர் தலை உலகின்" சிறப்புப் பாயிரத்தை, "பூமலி அசோகின்" எனத்தொடங்கும் முதல் நூற்பாவிற்கு முன் வைத்தமை, எழுத்ததிகார, இறுதியிலும் சொல்லதிகார இறுதியிலும் மட்டுமே, சூத்திரமுதன் நினைப்புச் சூத்திரத்தைக் காட்டி, பாயிரத் திற்குக் காட்டாமற் போயினமை, இன்று பவணந்தியார் நூற்பா என வழங்கும் சில நூற்பாக்கள் மயிலை. உரையில் இல்லா மற் போயினமை மேற்கண்ட ஊகத்தை உறுதி செய்கின்றன.[1]

முடிப்பு : மயிலைநாதர்க்கு ஏனைய நன்னூல் உரையாசிரியர் கட்கு இல்லாத சில தனிப்பெருமைகள் உள்ளன.

தொல்காப்பியம்—நன்னூல் இரண்டிற்கும் இடையே நீண்ட கால இடைவெளி மட்டுமின்றி, நீண்ட கருத்து இடைவெளியும் உண்டு. இவ்விடைவெளி, பவணந்தியார் காலத்தில் திடுமென முகிழ்த்தது அன்று. இவ்விடைவெளி, கால நீட்சியால் ஏற்பட்ட கருத்து வளர்ச்சி என்பதனையும், இவ்வளர்ச்சிக்குக் காரணம் பவணந்தியார்க்கு முன்சென்ற 'இலக்கணத் தூசிப்படைகள்' என்பதனையும் மயிலைநாதம் தெளிவுறுத்துகிறது. எடுத்துக்காட்டு, மேற்கோள் நல்கும்போது முன்பிருந்த மூத்தோரின் பெயரைச் சுட்டிக் காட்டாதிருத்தல் அக்கால 'மரியாதை'யாய் இருந்திருக் கலாம். ஆனால் அதனால் ஏற்பட்ட 'இலக்கிய இருண்ட காலம்' சிறிதன்று. மயிலைநாதம் அதற்கு விலக்கு.

அரிய பெரிய புதிய செய்திகளின் கருவூலமாக விளங்குவது மயிலைநாதத்திற்கே உரிய தனிப் பெருமை!

1. பார்க்க: இந்நூல், ப. 88.

8

ஆண்டிப் புலவர் உரை

பிற்கால உரைகள்

கி.பி. 16, 17, 18ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்துச் சமூக, சமய அரசியல் சூழல் : சுந்தர பாண்டியனின் ஆட்சி கி. பி. 1320 வரை தமிழகத்தில் இருந்தது. இவருக்குப் பின் இசுலாமியர் ஆட்சியின் கீழ்த் தமிழகம் வர நேரலாயிற்று. முசுலிம்களை எதிர்த்துப் பாண்டிய வேந்தர் நின்றனராயினும் அவர்தம் ஆளுகையை அகற்ற இயலவில்லை. தமிழகத்தில் புதிய சமயம் பரப்பப்பட்டதும், முசுலீம் அரசர்களின் கொடுமையும் மக்களிடையே வெறுப்பை வளர்த்தன. இவ்வெதும்பிய நிலை, விசய நகர மன்னருக்குப் பேருதவியாயிற்று. முதலாம் புக்கன் (கி. பி. 1344–77) விசய நகரப் பேரரசுக முடி சூட்டிக் கொண்ட பிறகு மதுரை நகரம் முசுலீம் ஆளுகையினின்று விடுபெற்றது. புக்கனைத் தொடர்ந்து, போர்ச்சுக்கீசியர் முதலான (கி.பி. 1498) ஐரோப்பியர் வருகின்ற வரை, வளருகின்ற வரை, நாயக்க மன்னர்களின் ஆட்சி, தமிழகத்தில் தொடர்ந்தது. எனினும் அணி செய்த இரகுநாத நாய்க்கனுக்குப் பிறகு, சிவாஜியின் மாற்றுந்தாயின் மகனுன வேங்காஜி பான்ஸ்லே (கி.பி. 1676-85) என்ற மராத்தியனின் கீழ்த் தஞ்சைப்பகுதி ஆட்சி சூட்டப்பட்டது. இராமநாதபுரம் புதுக்கோட்டைப் பகுதிகள் சேதுபதிப் பரம்பரை ஆட்சியில் இருந்துவந்தன. போர்ச்சுக்கீசியரைத் தொடர்ந்து போட்டிபோட்டுக் கொண்டு டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர் தமிழகத்தில் ஊடுருவினர். 18ஆம் நூற்றாண்டிறுதியில் (1781) தமிழ்நாட்டுப் பகுதிகளில் வரி தண்டும் அளவுக்கு வளர்ந்துவிட்டனர். ஆக, இம் முந்நூறு ஆண்டு அரசியல், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை

அயலார் ஆதிக்கத்தின் கீழ்தான் பெரும்பாலும் இருந்தது. ஆந்திரத் தெலுங்கர்கள், வடநாட்டுச்சுல்தான்கள், மராத்தியர்கள் ஐரோப்பியர்கள் ஆகிய வேற்றினத்தாரின்கீழ், தெலுங்கு, இந்துஸ்தானி, மராத்தி, ஆங்கிலம், பிரஞ்சு முதலான மொழிகள் தமிழகத்தில் ஆதிக்கம் பெற்றன. இசுலாம், கிறித்தவ சமயங்கள் தமிழ்நாட்டில் அறிமுகமாகத் தொடங்கின. ஓயாப் போர்களும், மதச் சண்டைகளும், மக்களிடையே நிலையான அமைதி நிலவ விடவில்லை. என்றாலும் மதுரை நாயக்க மன்னர் காலத்தில் செங்கோலாட்சி இருந்தது. எனினும், இவர்கள் ஆந்திரர்கள் ஆதலால், தெலுங்கு மொழியும், வடமொழியும், இந்துச் சமயமும் செல்வாக்குப் பெற்றன. தஞ்சை மராத்தியர் ஆட்சியில் சமற் கிருதம் தனிவாழ்வு பெற்றிருந்ததைச் சரசுவதி மகால் நூலகம் உறுதி செய்கிறது. சுல்தான்கள் ஆட்சியில், அவர்தம் சமயமும், அவர்தம் மொழியான இந்துஸ்தானியும் போற்றப்பட்டன. இந்தச் சூழல் இலக்கியத் துறையைப் பேரளவு பாதித்தது. இசைத் தமிழில் தெலுங்கு மொழியாட்சியும், ஆட்சித் தமிழில் இந்துஸ் தானிய ஆட்சியும், அறிவியல் மொழியில் ஐரோப்பிய மொழியின் ஆட்சியும் நேர்ந்தன. இவற்றையும் மீறித் தமிழிலக்கியங்கள் தோன்றின. அவற்றுள் பெரும்பாலன, அரசனையும் ஆண்டவனை யும் சார்ந்த பிரபந்தங்களாகவே இருந்தன. அவற்றையும் மீறிச் சில இலக்கியங்கள் தோன்றுமல் இல்லை[1].

நன்னூலைப் பொறுத்தவரை, ஆண்டிப் புலவர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான் ஆகி யோர் இக்காலை அளவில் உரை எழுதினர். இவ்வுரைகளுள், ஆண்டிப்புலவரும், கூழங்கைத் தம்பிரானும் எழுதிய உரைகள் இன்று கிடைக்கவில்லை. சிவஞான முனிவரின் விருத்தியைத் தனியுரையாகக் கொள்ளுதற்கில்லை. சங்கர நமச்சிவாயரின் உரையே இக்காலத் தெழுந்தவற்றுள் தனிப்புகழ் வாய்ந்தது. எனினும் மயிலைநாதர் உரை எழுந்து ஏறத்தாழ 350 ஆண்டு களுக்குப் பின்புதான் புதிய உரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இது மயிலை. உரை எத்துணைச் செல்வாக்கோடு, இலக்கண உலகில் நடமாடியிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. மயிலை உரையை விட, சங்., முனிவர் ஆகிய இருவரின் உரை விளக்கங் களில், சமற்கிருதச் செல்வாக்கு அதிகம் படிந்திருப்பதைக் காணலாம். காரணம்—காலந்தான்!

1. பிள்ளை, கே. கே., தமிழக வரலாறு—மக்களும் பண்பாடும். 1972, ப. 403—420

ஆண்டிப் புலவர்

செஞ்சி நாட்டில் உள்ள ஊற்றங்கால் என்ற சிற்றூரில் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் பகதேவன்[1]. இவரைப் பாவாடை வாத்தியார் என்றும் குறிப்பிடுவர். இவரால் எழுதப் பட்ட நூல்கள் இரண்டு. அவையாவன: நன்னூல் செய்யுள் உரை, ஆசிரிய நிகண்டு என்பனவாம். நன்னூல் செய்யுள் உரை பற்றி பின்னர் விளக்கப்பட்டும் ஆசிரிய நிகண்டு, ஆசிரிய விருத்தப்பாக்களில் இயற்றப்பெற்ற நூலாகும். பல பொருள் 'ஒரு சொற்'களையும், ஒருசொல் பல பொருள்களையும் பா வழியில் இவர் விளக்கியுள்ளார். 'பொன்' என்ற ஒரு பொருளைக் குறிக்க மட்டிலும் ஐம்பத்தொன்பது சொற்களை இவர் குறிப்பிடுவர். "பெருகு பொன்னின் நாமம் ஒன்றெழிய அறுப தாம்" என்பது இவர்தம் நிகண்டு வரி.[2]

ஆண்டிப் புலவரின் காலம்: இவரால் இயற்றப்பட்ட ஆசிரிய நிகண்டு 'உரிச்சொற் பனுவல்' எனப்படும் உரிச்சொல்நிகண்டைக் குறிப்பிடுகிறது. இந்நிகண்டை இயற்றியவர் காங்கேயர் ஆவார். சைவராகிய இவர் வாழ்ந்த காலம் பதினன்காம் நூற்றாண்டு ஆகும்[3]. இவரால் குறிக்கப்பெறும் பிறிதொரு நிகண்டு கயாதரம் ஆகும். கயாதர நிகண்டின் காலம் சி.பி. 1450 என்பர்[4]. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த உரிச்சொல் பனுவலையும், 15ஆம் நூற் றாண்டைச் சார்ந்த கயாதரத்தையும் இவர், தம் நூலான ஆசிரிய நிகண்டில் குறிப்பதால், இவர், 14, 15ஆம் நூற்றாண்டுகட்குப் பிற்பட்டவர் என்றாகிறது.

நிகண்டு சொல்லாட்சி: ஆண்டிப் புலவர், தனது நூலுக்கு ஆசிரிய நிகண்டு எனப் பெயர் வைத்திருக்கிறார். 'நிகண்டு என்ற சொல், பதினாறும் நூற்றாண்டில்தான் பெருவழக்காக வழங்கத் தொடங்கியது. பதினைந்தாம் நூற்றாண்டு வரை இச்சொல், இப் பொருளில் தமிழின்கண் வழங்கவில்லை. இக்காலம் வரை எழுதப் பட்ட எல்லா நிகண்டுகளும் "உரிச்சொல் பனுவல்கள்" என்றே குறிக்கப்பட்டன. பிங்கலச் சிறப்புப் பாயிரம் 'பிங்கல முனிவன் எனத் தன் பெயர் நிறீஇ, உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை' என்றே கூறும். 'பிங்கல முதலா நல்லோர் உரிச்சொலின் நயந்

1. கந்தையாப்பிள்ளை, ந.சி., தமிழ்ப்புலவர் அகராதி, 1952, ப. 34
2. குமாரசுவாமிப் புலவர், சுன்னாகம், அ., தமிழ்ப்புலவர் சரித்திரம், 1951, ப. 31
3. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, பத்தாம் நூற். 1972, ப. 167—9
4. மே. கா. நூ. ப. 167—169

தனர் கொளலே' என்றே நன்னூல் குறிப்பிடும்[1]. உரிச்சொல் நிகண்டிற்குக் 'காங்கேயர் உரிச்சொல்' என்பதே பழைய பெயர். கயாதரத்தின் பழைய பெயர் 'கலாதரன் உரிச்சொல் பனுவல்' என்பதே.

கி.பி. 16ஆம் நூற்றுண்டினரான மண்டல புருடர், 'நிகண்டு சூடாமணி என ஒன்று சொல்வன்' என்று குறிப்பிடுகிறார். சிவ ஞான சித்தியார் பரபக்கத்திற்கு உரை செய்த ஞானப்பிரகாசர் பதினொரும் நூற்றுண்டினர். இவர் நிகண்டைக் குறிப்பிடும் ஒரு மேற்கோள் பாடலைத் தருகிறார்[2].

" கணிதம் நிருத்தம் வியாகர்ணம் சந்தம்
கணங்கண்டு கற்பம் சங்கம்"

எனவரும் பாடலடியில் குறிக்கப்படுவது வடமொழி நிகண்டாகும். 'கூட்டமெனினும் நிகண்டு எனினும் ஒக்கும்' என்றெழுதுவார் சங். (பதினேழாம் நூற்றுண்டு). நிகண்டை இடுகுறியாற் பெயர் பெற்ற நூலுக்கு எடுத்துக்காட்டாகத் தருவர் சங்[3].

ஆக, நிகண்டு என்ற சொல் பரவலாக வழங்கப்பெற்ற காலம் கி.பி. 16ஆம் நூற்றுண்டே என்பது தெளிவாகிறது. இச்சொல் செல்வாக்குப் பெற்ற காலத்திலேயே ஆண்டிப்புலவரும் தம் நூலுக்கு ஆசிரிய நிகண்டு எனப்பெயர் அமைத்திருத்தல் வேண்டும். ஆகவே இவரது காலம் பதினொரும் நூற்றுண்டு என்பது தெளிவாகிறது.

இவரைப் பற்றிய பிற செய்திகள் கிடைக்கவில்லை.

நன்னூல் உரை: ஆண்டிப் புலவர் நன்னூலுக்கு ஆசிரிய விருத்த யாப்பிலேயே ஓர் உரை இயற்றினர். அவ்வுரை 'உரை யறி நன்னூல்' என்று வழங்கப்படுகிறது.

உரை எழுதிய பகுதிகள்: இவர் எழுதிய நூல்களுள் 'ஆசிரிய நிகண்டு' என்பதுவும் ஒன்று. இந்நூற் பாயிர அடியே இவர் நன்னூலுக்கு உரையெழுதிய செய்தியை உணர்த்துகிறது.

"எழுத்துடன் சொல்லெனு மிலக்கணம் வகுத்துணர
இயம்பும் ஆசிரியத்தினுல்
நன்னூல் எனும்பெயர் விளங்கவே செய்தனன்"

---

1. நன்னூல், 460.
2. சிவஞான சித்தியார் உரை, 185ஆம் பா.
3. நன்னூல், 49.

பாயிர அடிகளுள் எழுத்து, சொல் ஆகியவற்றிற்கு உரை வகுத்தனர் என்று கூறப்பட்டது கொண்டு, எழுத்தியல், பதவியல் என்ற இரண்டு இயல்களுக்கு இவர் உரை எழுதினர் எனக் குறிப்பர் தமிழ் புளூடார்க் ஆசிரியர்.[1] இவ்வாறு கொள்ளுதலைக் காட்டிலும், எழுத்து, சொல்லதிகாரங்கள் ஆகிய இரண்டிற்கும் உரை வகுத்தனர் என்று கொள்ளுதலே பொருந்தும். 'எழுத்து' என்பது இயலின் பெயரையும், அதிகாரப் பெயரையும் பொதுவாகக் குறித்தாலும், 'சொல்' என்பது சொல்லதிகாரத்தைக் குறித்தது என்று கொள்ளுதலே மரபு. பவணந்தியாரும் 'இயம்புவன் எழுத்தே' என்று எழுத்ததிகாரத்தையும், 'அறைகுவன் சொல்லே' என்று சொல்லதிகாரத்தையும் குறிப்பிட்டுக் கூறுவது[2] ஈண்டு ஒப்பிட்டு ஓரத்தக்கது.

செய்யுள் வடிவில் உரை எழுதுதல்: நூல்களுக்கு உரை எழுதும் போது செய்யுள் வடிவிலேயே உரை எழுதும் பழக்கம் பிற்காலத்தது. பாவடிவில் உரையமையும் போது எளிதில் மனப் பாடம் செய்து நினைவில் கொள்ள இயலும். இவ்வடிப்படையில், சமற்கிருதத்தில் நிரம்பச் செய்யுள் உரைகள் தோன்றின. புலவரின் ஆர்வமும், சமற்கிருத உறவும், மக்கள் வரவேற்பும், தமிழில் செய்யுள் உரைகள் தோன்றக் காரணமாதல் கூடும். சிவஞான போதத்தை விளக்க, வெண்பாக்களே தரப்பட்டுள்ளன. சிவஞான சித்தியாருக்கு, குருஞான சம்பந்தரால் செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட ஞான பரண விளக்கம் என்ற உரை விளக்கம் உண்டு. திருக்குறளுக்குச் செய்யுள் உருவத்தில் உரைநூல் உள்ளது. அகநானூற்றிற்கு இடையளநாட்டு மணக் குடியான பால்வண்ண தேவனுன வில்லவதரையன் என்பவனுல் எழுதப்பட்ட உரையொன்றுண்டு. இவ்வுரை அகவற்பாவினுல் செய்யப்பட்டது, இதனை, அகநானூற்று உரைச் சிறப்புப் பாயிரம் உரைக்கிறது. 'இத்தொகைக்குக் கருத்து அமைத்தான் அகவலாற் பாடினுள், இடையள நாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனுன வில்லவதரையன்' என்பன அப்பாயிரக் கூற்று. இவற்றை நோக்க ஆண்டிப் புலவர் ஆசிரிய விருத்தப்பாவில் நன்னூலுக்கு உரை எழுதியதன் உண்மை துலங்கும்.

செய்யுள் வடிவு நன்னூல் உரைக்கு ஒரு சான்று: ஆண்டிப் புலவர் எழுதிய உரை முழுதும் இன்று கிடைக்கவில்லை. எனினும் அவர் நன்னூல் பதவியல் எட்டாம் நூற்பாவிற்கு விளக்கமாக எழுதிய விருத்த வடிவ உரை கிடைத்துள்ளது.

1. சைமன் காசிசெட்டி, தமிழ் புளூடார்க் (ஆங்), 1859, ப. 15
2. நன்னூல் 56, 258

"செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை உண்மை நுண்மை இவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே"

இந்த நன்னூல் நூற்பாவின் ஈற்றில், 'இவற்றெதிர் இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே' என விதந்து கூறினர் நன்னூலார். இவ்விதப்பிற்கு,

செம்மையும் கருமையும் பசுமையும் வெண்மையும் திண்மையும்
நுண்மையுடனே சிறுமையும் பெருமையுங் குறுமையும்
தீமையுந் தூய்மையு மலால் [நெடுமையும்

வெம்மையுங் குளிர்மையுங் கொடுமையுங் கடுமையும் மேன்மையும்
கீழ்மையும் பின்மெய்மையும் வறுமையும் பொய்ம் மையும்
மென்மையும் நன்மையும் சொல [வன்மையும்

ஐம்மையும் பழமையும் புதுமையும் இனிமையும் அணிமையும்
நிலைமையும்சேர் ஆண்மையும் மும்மையும் ஒருமையும்
அறுமையும் அருமையும் மிக்க [பன்மையும்

கைம்மையும் கூர்மையுங் கேண்மையும் சேண்மையும் கூடிய
வளமையும்
இளமையும் காணரிய முதுமையும் பண்புப் பகாப்பதங்
காட்டுமின் னனைய மாதே.

என விளக்கம் காட்டுவர். இப்பாவில் நாற்பத்து மூன்று மையீற்றுச் சொற்கள் காட்டப் பட்டுள்ளன. இவ்வரிய பாடலை கி.பி. 1851ஆம் ஆண்டில் நன்னூலுக்கு உரைவகுத்த வேதகிரி முதலியார் எடுத்துக்காட்டியுள்ளார். பின்னர், 1916இல் தமிழ்ப் புலவர் சரித்திரம் எழுதிய சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர், இப் பாட்டை ஆண்டிப் புலவர் வரலாற்றோடு இணைத்துக் காட்டியுள்ளார்.[1] இப் பாட்டை மூலமாகக் கொண்டு ஆண்டிப் புலவர் உரையறி நன்னூற் பற்றிச் சிலவற்றை உய்த்துணரலாம். காரிகையை முன்னிறுத்தி, இந்நூல் செய்யப் பட்டிருத்தல் கூடும் என்பது 'மின் அனைய மாதே' என்னும் மகடூஉ முன்னிலையான்

1. வேதகிரி முதலியார், நன்னூல் உரை, 1851. ப. 30
குமாரசுவாமிப் புலவர், தமிழ்ப்புலவர் சரித்திரம், 1916, ப. 32

தெரிகிறது. இலக்கிய அளவில் பெண்ணை முன்னிறுத்தி முதலில் பாடியவர் சமணப் புலவர்கள். நாலடியார் இதற்குச் சான்று. இலக்கண அளவில் இம்முறையை முதலில் யாப்பருங்கலக் காரிகை ஆசிரியர் பயன்படுத்தினர். நன்னூலில் உள்ள ஒவ்வொரு நூற்பாவிற்கும் உரையறி பா இயற்றுமல், விதப்புக் கிளவிகள் உள்ள இடங்களுக்கு மட்டும் செய்திருத்தல் கூடும். பதினைந்து சீர் ஆசிரிய விருத்தத்தால் இயற்றப் பட்டுள்ளது என்பதால், அவர் மிகப் பிற்காலத்தவர் என்பதும் தெளிவாகிறது.

9

சங்கர நமச்சிவாயர் உரை

வாழ்க்கை: நன்னூலுக்கு எழுந்த உரைகளுள்—சிறப்பாகக் குறிப்பிடத்தக்க உரைகளுள் - ஒன்று இவ்வுரை. இவ்வுரை யாசிரியர் சங்கர நமச்சிவாயர் பிறந்த ஊர் திருநெல்வேலி நகரம். இந்நகரின்கண்ணுள்ள தடிவீரையன் கோயில் தெருவே இவர் வாழ்ந்த இடம். வேளாளர் குலத்தில் பிறந்த இவர் தூய சைவர். சங்கர நமச்சிவாய பிள்ளை என்ற இயற் பெயருடைய இவர் பெற்ற புலமை நலத்தால், பிற்காலத்தில் சங்கர நமச் சிவாயப் புலவர் என்றழைக்கப்பட்டார். இவருக்கு முத்துக்குமார பிள்ளை என்ற பெயருள்ள ஒரு மகனர் இருந்தார்.[1]

சூழல்: சைவமும் தமிழும் ஒருங்கே இனிதே தழைத்த இடம் திருநெல்வேலி. இவர் காலத்தில் இலக்கண விளக்கம் நூலி யற்றிய வைத்திய நாத தேசிகர் இங்கே வாழ்ந்தார். இலக்கணக் கொத்து ஆசிரியரான சுவாமிநாத தேசிகர், இந்நகரிலுள்ள ஈசான மடத்தில் தங்கி இருந்தார். இவ்விருவரும் தமிழிலக்கண இலக்கியங்களையும், சைவ சாத்திரங்களையும் கற்றுத் துறைபோகிய பெருநாவலர்கள். குறிப்பாக, தேசிகர், வடநூற் கடலையும் நிலைகண்டு உணர்ந்த கலைவல்லார். சங்.க்குத் தேசிகரின் பார்வை நீழலில் அறிவுத் தெளிவு பெற வாய்ப்புக் கிடைத்தது.

ஆசிரியர்: தேசிகரிடம் தமிழிலக்கிய இலக்கணங்கள், தொல்காப்பிய உரைகள், சைவ சாத்திரங்கள், பக்தி இலக்கியங்கள் முதலானவற்றை நன்கு பயிலும் அரிய வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. தேசிகர், தம் மாணாக்கரின் கல்வித்திறத்தை நன்கு கண்டு தெளிந்தார். ஆதலின் அவரிடம் ஒரு பெரும் பணியை ஒப்படைக்க எண்ணினர். தொல்காப்பியத்துக்குப் பின்னெழுந்த

1. சாமிநாதையர், உ. வே., நன்னூல், சங். உரை, ப. XXI

நூல்களுள் நன்னூல் தனிச்சிறப்பு வாய்ந்தது என்று அவர் நம்பினர். நன்னூலைப் பற்றிய பாராட்டுரைகள் அவர் வழங்கியுள்ளார். அவை இங்கு நினைத்தற்குரியன:

> முன்னோர் ஒழியப் பின்னோர் பலரினுள்
> நன்னூ லார்தமக்கு எந்நூலா ரும்இணையோ
> என்னும் துணிவே மன்னுக[1]

நன்னூலைப் பற்றி இக் கருத்தினராயினும் நன்னூலுக்கு அக் காலத்து வழங்கிய சமண உரை பற்றி இவர் மிக வருந்தினர். பழைய உரைகளில் தான் கொண்ட கருத்து வேறுபாடுகள் ஒரு பக்கம்; அவையெல்லாம் சமண நெறியில் சமண எடுத்துக்காட்டுகளால் நிரம்பி இருந்தமை மறுபக்கம். துணிவும், சமற்கிருதச் சார்பும், சைவப் பற்றும் கொண்ட தேசிகருக்குப் பழைய நன்னூல் உரைகள் மீது வெறுப்பு மிஞ்சியது. "சேற்று நிலத்தில் கவிழ்ந்த பால் தேன் நெய் முதலியனவும் சேருஞற் போல நன்னூல் சூத்திரமும் அவ்வுரையுடனே கலந்து குறைப்பட்ட தென்க."[2] இச் சூழலில் தன் மாணாக்கராய சங். ஐ நன்னூலுக்குப் புத்துரை எழுதப் பணித்தனர். சங். தன் அறிவு ஆசானைச் செய்ந்நன்றி மறவாச் சிந்தையோடு, தன் பாயிர உரையில் எழுதிப் போற்றுகிறார்.

> "மலர்தலை உலகிற் பலநூ லாய்ந்து
> செய்வதுந் தவிர்வதும் பெறுவது முறுவதும்
> உய்வது மறியே லொருபொரு ளாக
> நன்னெறி பிறழா நற்றவத்தோர் பெறும்
> தன்னடித் தாமரை தந்தெனை யாண்ட
> கருணையங் கடலெனன் கண்ணிணவிட் டகலாச்
> சுவாமி நாத குரவனே"[3]

தான் கற்ற இலக்கண இலக்கியப் புலமை நலங்களைக் கொளுத்தி, சங். நன்னூல் உரை வகுத்து அரங்கேற்றுங் காலம் வரையும், புலவரை, ஊற்றுமலை சமீன் மருதப்ப தேவர் புகழ்ந்து புரந்தனர். திங்கள் தோறும் நான்கு கோட்டை நெல்லும் நாள்தோறும் ஒருபடி பாலும் அவருக்கு அரண்மனையிலிருந்து கொடுக்கப்பட்டு வந்தன. இவ்வாறு புலவரைப் புரத்துவந்த ஊற்றுமலை மருதப்பரே, "நன்னூற்கு உரை நீ

1. இலக்கணக் கொத்துரை, 8
2. மே. கா. நூ. 8
3. சாமிநாதையர், உ. வே., நன். சங். உரைப் பதிப்பு, ப. 2

நவையறச் செய்து பன்னூற் புலவர் முன் பகர்தி" எனச் சங். ஐ வேண்டிக் கொண்டாராம். அவ்வாறு வேண்டிக் கொண்ட சமீனத் தன் பாயிர வரியில் புகழ்ந்து போற்றுகிறார் புலவர்.

"பொன்மலை எனஇப் புவிபுகழ் பெருமை
மன்னிய ஊற்று மலைமரு தப்பன்
முத்தமிழ்ப் புலமையும் முறையர சுரிமையும்
இத்தலத்து எய்திய இறைமகன்"[1]

சமீன் வேண்டிக் கொண்டதற்கிணங்க சங். உரை இயற்றினார் என்னும் குறிப்பை, இவ்வுரைக்குச் சிறப்புப் பாயிரமாக அமைந்துள்ள விருத்தங்கள் புலப்படுத்துகின்றன.[2]

"நன்னூலுட் கருத்துலகோர் அறியஉரை
செய்கஎன நரேந்திர சிங்கம்
தென்னூற்று மலைமருதப் பன்புகலப்
பொருள்விளங்கச் செய்தான".....

என்பதனாலும்,

நன்னூற்கு விரித்துரைசெய்தான்.....
தென்னூற்று மலைமருதப்பன் சொல்சங்
கர நமச்சிவாயன் தானே"

என்பதனாலும் மேற்கண்ட கூற்று உறுதியாகிறது.

சிவநேயச் செல்வர்: சங். உரை எங்கும் சைவம் கமழுவதைக் காணலாம். இவருரையைப் பாராட்டி எழுதப்பெற்ற உரைச் சிறப்புப் பாயிரம், "சங்கர நமச்சிவாயன் என்னும் பன்னூற் செந்தமிழ்ப் புலவர் சைவ சிகாமணி நெல்லைப் பதியினன்" என்று குறிக்கிறது.

உரைக்கு எடுத்துக்காட்டாக, திருவாசகம், இருபா இருபஃது, திருக்கோவையார், திருமுருகாற்றுப்படை, சம்பந்தர் தேவாரம் ஆகிய சைவ இலக்கியங்களை[3] எடுத்துக் காட்டுகிறார். 257ஆம் நூற்பா உரையில், 'மண்புகுந்தும் விண்பறந்து மாலு மயனுங் காணை ஒரு பொருள்' எனப் பரமசிவத்தைக் குறிப்பதும், 269ஆம் நூற்பா உரையில் 'சிவபுண்ணியஞ் செய்' என்றே குறிப்பதும், உம்மைத் தொகைக்கு எடுத்துரையாக அறுபத்து மூவரைச்

1. நன். சங். உரை, ப. 2, பாவரி 9—12
2. மே. கா. நூ. உரைச் சிறப்புப் பாயிரம், 1, 3
3. சங். இலக்கிய மேற்கோள், பார்க்க.

சொல்வதும் சங்கர நமச்சிவாயர்க்கு உள்ள சைவ ஈடுபாட்டைக் காட்டுவன. நல்ல சைவப் பற்றினர் எனினும் புற சமயத்தாரை இவர் முற்றப் புறக்கணிக்கவில்லை. தம் முரையுள் ஆசீவகப் பள்ளி,[1] அரங்கத்தான்,[2] ஆதிரையான், கண்ணன், திருவாய் மொழி, ஓணத்தான்[3] என இவர் பிற சமயப் பெயர்களைக் காட்டுவதும், நாலடியார், சீவக சிந்தாமணி, சூளாமணி, பெருங் கதை, யாப்பருங்கலக் காரிகை, மணிமேகலை, கம்பராமாயணம் ஆகிய பிற சமய இலக்கியங்களை எடுத்துக் காட்டுவதும்[4] இவரது சமயப் பொதுமை நெறியைப் புலப்படுத்தும். இவையே அன்றி 'ஆனைமுகக் கடவுள் முதலியோர்க்கும் மூன்று கண்ணுள' எனவும், 'ஆனைமுகக் கடவுளை மும்மதத்தன் என்றுற் போலும்' எனவும், குறிப்புவினைக்கு எடுத்துக் காட்டாக விநாயகக் காப்பைக் காட்டுவதும், குமரக்கோட்டம், 'சூரரியிர் குடித்த', 'வேட்டுவக் குமரன் தன் பெயர் முட்டை என்றற் றொடக்கத்தன இடுகுறி ஆக்கந் தொடர்ந்தன' என்பதும், பரமன், முக்கணன் எனக் காட்டுவதும், 'மூவிலை வேல்', நாம் அரன் உடைமை, இறைவற்குக் கண் மூன்றும் முச்சுடர், 'இறைவற்கு உடை போர்வை இரண்டும் தோல்' என எடுத்துக் காட்டுவதும்[5] இவர் சைவ நெறியினர் என்பதனை உறுதிப் படுத்துகின்றன.

சங்கர நமச்சிவாயரின் இலக்கணப் புலமை: பன்னிரண்டு ஆண்டுகள் தமிழிலக்கிய, இலக்கணக் கடலுள்ளும், சமற்கிருத இலக்கிய இலக்கணக் கடலுள்ளும் மூழ்கிக் கரைசேர்ந்த சுவாமிநாத தேசிகரின் மாணாக்கர் சங். ஆதலின் ஆசிரியரின் பேரறிவுச் சாயல் அவரிடம் இருந்திருத்தல் வேண்டும். அவர் தொல்காப்பியத்தையும், அதன் உரைகளையும் நன்கு ஊன்றிப் படித்திருக்கிறார். தொல்காப்பியரை, 'ஆசிரியர் தொல்காப்பியர்' என்றும், 'ஆசிரியர் தொல்காப்பியனார்' என்றும் தம் உரைகளில் குறிப்பிட்டுப் போற்றுகிறார்.[6] தொல்காப்பிய நூலாசிரியரை 'ஆசிரியர்' என்று குறித்தலும், 'தொல் காப்பியனார்' எனுமதிப்பு 'ஆர்' ஈற்றேடு வழங்குதலும் அவர் மேல், சங்.க்கு இருந்த ஆழ்ந்த மதிப்பைக் காட்டுகின்றன.

---

1. நன்னூல், 159
2. மே. கா. நூ. 130
3. மே. கா. நூ. 132, 276, 290, 321
4. சங். இலக்கிய மேற்கோள் பார்க்க
5. நன்னூல் 62, 159, 232, 257, 275, 321, 340, 379, 399
6. நன்னூல், சங். உரை. 91, 94, 124, 128, 158, 164, 233, 270, 275 284, 295, 316, 330, 360, 401

தொல்காப்பிய உரைப்புலமை : இவர் தனக்கு முன் எழுந்த தொல்காப்பிய உரைகளை நன்கு கற்றவர் ஆதலின் சிற்சில இடங்களில் தொல்.நூற்பாக்களுக்குப் பொருந்த எழுதப்படா உரைகளைச் சுட்டுகிறார். அவ்விடங்களுக்குத் தாம் காணும் புது விளக்கத்தையும் எடுத்துக் காட்டுகிறார். 158ஆம் நூற்பா பொதுப்புணர்ச்சியைப் பற்றிப் பேசுகிறது. நொ, து என்ற ஓரெழுத்து மொழிகள் மெல்லின வருமொழிகளோடு புணரும்போது, மெல்லொற்று மிகும். இதனை 'நொதுமுன் மெலி மிகலுமாம்' என்ற நூற்பாக் குறிப்பிடுகிறது. 'மிகலும்' என்பதிலுள்ள எச்ச உம்மையால் இடையின வொற்றும் மிகும் என்பது பெறப்படும். இதனை ஆசிரியர் தொல்காப்பியனாரும் 'அவற்றுள் மெல்லெழுத்தியற்கை உறழினும் வரையார்' என்ற உம்மையால் தழுவிக் கொண்டார் என்பது சங். கருத்து. இவ்வாறு கருத்துரைக்கும்போது, 'அச்சூத்திரத்திற்கு (மேற்குறித்த தொல்காப்பியச் சூத்திரத்திற்கு) அவ்வாசிரியர் கருத்தன்றி வேறுரை செய்வாருமுளர்' என்று சுட்டியுரைக்கிறார். இவ்விடத்தில் வேறுரை செய்தவர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஆவர். 164 ஆம் நூற்பா குற்றியலுகரப் புணர்ச்சியைப் பற்றிப் பேசுகிறது. குற்றியலுகரம் பற்றி இருவிதக் கொள்கைகள் உள்ளன. அவற்றுள் உகரம், உயிரீறு என்பதொன்று; உயிர் ஏற இடங்கொடுக்கும் மெய்க்கு நிகரான ஈறு என்பது பிறிதொன்று. இளம்பூரணரும், நச்சினார்கினியரும் இரண்டாம் கருத்தினர். இவ்வுரைகாரர்கள் தமக்குத் தக மாட்டேற்று இலக்கணம் கூறுவதாக சங். கருதி, தம்முரையில் மறுப்பும் உரைக்கிறார். அம் மறுப்பினைத் தொடர்ந்து அவர் குறிப்பிடும் கருத்து இங்கே கருதத் தக்கது. அக் குறிப்பாவது: ''இவ்வாறு அந்நூலோடு (தொல்.) பொருந்தா உரைக்கோள் பல உள. அவற்றை அந்நூற் கருத்தாகத் துணிந்து அந்நூலோடு இந்நூலை (நன்னூல்) மறுதலைப் பட்டதென்று கோடற்க''. இச்சான்றுகளால் சங். பழைய தொல்காப்பிய உரைகளோடு முரணிய கருத்தினர் என்பதும், நன்னூல் தொல்காப்பிய எதிர் நூலன்று என்ற கருத்தினர் என்பதும் புலப்படுகின்றன. பிறிதோர் இடத்திலும் சங். தொல்காப்பிய உரைகாரரை மறுத்து மொழிவதைக் காணலாம்.[1] ''சொல்லெச்சம் என்பது சொல் விகற்பங்கள் இன்றிச் சொல்லென்னும் சொல் எஞ்சி நிற்பதென்றூஉம் பெற்றும். 'சொல்லின் எச்சம் முன்னும் பின்னும், சொல்லல வல்லது எஞ்சுதல் இன்றே' என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார் என்க. இவ்வாசிரிய வசனத்திற்கு இப் பொருளன்றி வேறு கூறுவாருமுளர்'' என்று சங். குறிப்பிடுகிறார். இவரால் குறிப்பிடப் படுவோர், சேனாவரையரும் நச்சினார்க்கினியருமாவர்.

1. நன்னூல், சங். உரை, 360

இவ்வாறு தொல். நூற்பாக்களுக்குப் பொருந்த உரை கூறி, பொருந்தா உரைகளை இவர் சுட்டுவதினின்று, இவரது தொல் காப்பிய நூற்புலமையும் உரைப் புலமையும் தெற்றென விளங்கு கின்றன.

அகத்தியப் புலமை : அகத்தியரைப் பற்றியும் அவர் எழுதிய அகத்தியம் பற்றியும் ஆங்காங்கே பல உரைகளில் சுட்டுவதைக் காணலாம். மயிலைநாதத்திலும் அகத்தியர் பேசப்பட்டிருக்கிறார். ஈண்டும் சங். 260, 265, 291, 295, 297, 300, 323, 327, 340, 342 ஆகிய இடங்களில் அகத்தியரைச் சுட்டுகிறார். இவ்விடங்களில் ஆசிரியர் அகத்தியனார் என்று மதிப்போடு காட்டுவது கருதத் தக்கது. காட்டுகின்ற இவ்விடங்கள் அனைத்திலும் அகத்திய நூற்பாக்களும் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. இதனால் இவர் காலத்தில் அகத்தியம் என்ற பெயரில் ஓர் இலக்கண நூல் உலாவி இருக்கின்றது என்பதுவும், அவ்விலக்கண நூலை இவர் துறைபோகக் கற்றிருக்கிறார் என்பதுவும் புலனாகின்றன.

அவிநயப் புலமை : தொல்காப்பியத்திற்குப் பின்னெழுந்த நூல்களுள் அவிநய இலக்கணமும் ஒன்று. யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம், நேமிநாதம், நவநீதப் பாட்டியல் ஆகிய இலக்கண நூல்களின் உரைகளில் இந்நூல் எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது. தக்கயாகப் பரணி உரையும், பன்னிரு பாட்டியல் உரையும் இந்நூலைக் குறிப்பிடுகின்றன.[1] இந்நூலின் உரையாசிரியர் இராசபவித்திரப் பல்லவதரையர் பற்றி முதலில் அறிவித்தவர் மயிலை. என்பது அவர் உரை ஆய்வில் கூறப்பட்டது. மயிலை. அன்றி, சங். உம் அவிநய நூலைப் பயின்றிருக்கிறார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. 320 ஆம் நூற்பாவுரையில் வினையிலக்கணம் உணர்த்தும்போது வினைதரும் ஆறனுள் ஒன்றுன 'செயல்' என்பதைப் பற்றி விளக்குகிறார். இங்குச் செயல் எனக் குறிக்கப்பட்டது 'காரியமாகிய வினையடி யன்றென உணர்க' எனக் காட்டி,

> "காலம் அறிதொழில் கருத்தனே டியையப்
> பால்வகை தோறும் படுமொழி வேறே"

என ஆசிரியர் அவிநயனார் கூறியவாறு' என்று அவிநய ஆசிரியரைக் குறிப்பிடுகிறார். இக்குறிப்பால், சங். உடைய அவிநயப் புலமை புலப்படுவதோடு, 'ஆசிரியர் அவிநயனார்'

1. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 13ஆம் நூற்., ப. 232

என்று போற்றுவதால் அவர் மீது வைத்திருந்த மதிப்பும் புலனு கிறது.

அவிநயப் புறனடை : அவிநயத்தைச் சார்ந்து இந்நூல் இயற்றப் பெற்றதால் இப்பெயர் கொண்டது போலும். யாப்பருங் கலத்தை ஒட்டி யாப்பருங்கலக் காரிகை செய்யப்பட்டது போல இந்நூலும் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இந்நூலை யாப் பருங்கல விருத்தியுரைகாரரும், மயிலையும் தம் உரைகளில் சுட்டுதலைப் போல, சங். உம் சுட்டியிருக்கிறார். 128ஆம் நூற்பா வுரையில் இந்நூலிலிருந்து கீழ்க்காணும் மேற்கோளையே எடுத் தாளுகிறார்:

> "தன்னை உணர்த்தி னெழுத்தாம் பிறபொருளைச்
> சுட்டுதற் கண்ணேயாஞ் சொல்"

பிற இலக்கணப் புலமை : புறப்பொருள் புலமையை, இவர் புறப்பொருள் வெண்பா மாலையினின்று வெண்பாக்கள் பலவற்றைத் தம்முரையில் எடுத்துக் காட்டுவதினின்றும், யாப்புத் திறத்தை யாப்பருங்கலக் காரிகையை எடுத்தாளுவது கொண்டும்,[1] அணி யிலக்கண அறிவை 429 ஆம் நூற்பா உரையில் தீபக அணியைக் காட்டுவது கொண்டும் கண்டறியலாம்.

இலக்கியப் புலமை : மொழியாசிரியன் இலக்கணத் துறை யினன் ஆயினும், இலக்கியத் துறையினன் ஆயினும், பழம் பேரிலக்கியங்களைத் துறைபோகக் கற்றிருத்தல் வேண்டும். இன்றேல் இலக்கணக் கூறுகளை விளக்கவியலாது. இலக்கியக் கூறுகளைத் துலக்க இயலாது. பண்டைய தமிழ்வாணர் இருதுறை நூல்களையும் நன்கு பயின்றிருந்தனர். சங். இதற்கு விலக்கல்லர். ஏனைய நன்னூல் உரைகாரரைக் காட்டிலும் இவரது இலக்கியப் புலமை மிக விரிந்திருந்தது என்பதனை இவர் உரை காட்டுகிறது. கால வரிசையில், இவர் தம்முரையில் கையாண்டுள்ள இலக்கியங் களைப் பட்டியலாக்கிப் பார்த்தால் இது புலப்படும். எட்டுத் தொகை : நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு; பத்துப் பாட்டு : திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, பெரும் பாணற்றுப் படை, சிறுபாணற்றுப் படை, மலைபடுகடாம்; காப்பியங்கள் : சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, சூளாமணி, பெருங்கதை; கம்பராமாயணம், அரிச்சந்திர புராணம்; பதினெண்கீழ்க்கணக்கு : திருக்குறள், நாலடியார், திணைமாலை

1. நன். சங். உரை: புறப்பொருள் வெண்பா மாலை: 222, 269, 302, 344 410, 441, 458, 459; யாப். காரிகை. 39-1

நூற்றைம்பது, நான்மணி, திரிகடுகம், ஐந்திணை எழுபது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஆசாரக்கோவை, இனியவை நாற்பது; பக்தி இலக்கியங்கள் : திருவிருத்தம், திருவாசகம், திருக்கோவையார், சம்பந்தர் தேவாரம், பொய்யாமொழிப்புலவர் பாடல் (?); நிகண்டு : உரிச்சொல் நிகண்டு; உரைகள் : பரிமேலழகர் உரை, தொல். இளம்பூரணர் உரை, நச்சினார்க்கினியர் உரை, சேனாவரையர் உரை, இறையனார் களவியலுரை ஆகியவற்றை மேற்கோளாகவும், மறுப்புரைகளாகவும், தன்வய உரைகளாகவும் இவர் காட்டுகிறார்.

இலக்கிய மேற்கோள் : அவர் மேற்கோளாக எடுத்தாண்ட நூல்கள் இங்கே பட்டியலிடப்படுகின்றன. (முதல் எண் : நன்னூல் நூற்பா எண். இரண்டாம் எண் : மேற்கோள் காட்டப் பட்ட வரிசையில், நூலின் பாட்டு எண்.)

அகநானூறு : 152–4; 178–3; 202–80; 202–384; 244–8; 317–212; 327–12; 336–46; 340–1; 344–16; 346–21; 351–5, 48; 353–80, 248, 331; 380–96; 422–1; 430–260; 437–76; 440–46, 7; 451–7; 459–122; அரிச்சந்திர புராணம் : 425–128; ஆசாரக் கோவை : 178–31; 378–5; 378–54; இருபா இருபஃது : 255–18, 11; இனியவை நாற்பது : 401–7; ஐங்குறுநூறு : 403–391; 441–121; ஐந்திணை எழுபது : 306–68; ஐந்திணை ஐம்பது : 459–28; கம்பராமாயணம் : 398–256 முதற்போர்; கலித்தொகை : 262–56; 302–6; 302–148; 308–35; 343–கடவுள் வாழ்த்து; 344–103, 42; 351–37, 4; 432–54; 435–11; 437–86; 440– ; 440–40; 441–99; 441–108, 33, 101; 456–84; 456–3; களவழி நாற்பது : 347–5; 420–36; குறுந்தொகை : 155–140; 222–2; 307–169; 338–14; 339–25; 341–51; 344–100, 27; 346–232; 351–46, 84, 253, 22, 78, 260; 353–7; 363–153; 374–5; 401–18; 420–138; 436–155; 437–193; 440–2; 457–105; 458–2; கார் நாற்பது : 344–11; சிலப்பதிகாரம் : 202–ஆய்ச்சியர் குரவை; 302–பதிகம், 10; 339–19/51–3; 459–ஆய்ச்சியர் குரவை; சிறுபாணாற்றுப்படை : 299–172; சீவக சிந்தாமணி : 297–30; 302–1232; 341–848; 351–421, 452, 894, 2322; 355–53; 378–443; 378–2360; 379–1036; 380–1760; 392–2127; 401–1007; 401–74; 409–2932, 1623; 410–775, 1446, 1661, 2789, 53, 160, 1253; 412–53, 312, 129; 433–1873; 441–1021, 1; சூளாமணி : 298—கல்யாணம் 189; 338–சீயவதை 5; 459–கல்யாணம் 51; சீயவதை 108, தூது 45; திணைமாலை நூற்றைம்பது : 269–5; 306–81; 410–10; திரிகடுகம் : 302–திரிகடுகம் காப்பு : 344–44;

360–14; 378–79; திருக்குறள் : 3–836; 56–3; 60–943; 60–236; 91–1200, 1115; 91–5; 1263, 1194; 122–84; 125–774; 125–169; 152–1081; 155–396; 162–835; 162–890; 168–1210; 172–1169; 226–973; 255–51; 269–647; 269–37; 290–84; 297–1083; 297–295; 298–232, 1102; 299–964; 302–194; 309–771; 319–110 ; 339–143; 44; 340–500; 343–763; 343–943 343–230; 343–701; 344–467, 90, 1150; 360–55; 360–308; 360–475; 379–144; 379–63; 379–848; 389–1091; 401–913; 409–293, 709, 1111; 410–1040; 416–255; 424–168; 424–487; 429–146, 675, 674; 433–380, 441–366, 978; 458–232; திருவாசகம் : 229–கீர்த்தி 135, 299–திருப்பூவல்லி 3; 302–நீத்தல் 40; 302–உயிருண்ணி 8; 338–திருவெம்பாவை 20; 342–திருப் பொன்னூசல் 341, கோயில் திருப்பதிகம் 7; 349–திருக்கோத் தும்பி 2; 378–கோத்தும்பி 15; 379–புணர்ச்சி 9; திருக் கோவையார் : 268–15; 290–1; 392–30, 143; திருநூற்பாத் திரட்டு : 308–63; திருமுருகாற்றுப்படை : 351–275, 185; 353–318; 437–250; 458–182; திருவிருத்தம் : 114–5; தேவாரம் (சம்பந்தர்) திருப்பரம்புரம் : 344; நற்றிணை : 171–19; 302–3; 307–34; 336–300; 344–10; 438–158; 441–55, 178; 456–115; நாலடியார் : 151–மெய்ம்மை, 11; 155–கயமை, 1,183–210; 264–251; 282–119; 295–243; 302–314; 302–395; 302–216; 344–220, 366; 360–56, 111; 373–93; 378–151; 380–346; 398–49; 419–93; 421–9, 396; 433–19; 457–156; நான்மணிக் கடிகை : 302–8; 344–28; 412–26; 413–26; பதிற்றுப்பத்து : 344, 81, 456–22; பரிமேலழகர் உரை : 290–392; புறநானூறு : 108–271; 152–227; 155–109; 173–124; 183–1; 224–184; 244–300; 269–2, 195, 12; 297–22; 302–290; 307–206; 309–195; 327–375; 338–6; 341–24, 395; 344–2, 33, 278, 70; 351–44, 113; 353–2, 194; 355–124; 374–227; 378–15; 378–335; 390–7; 398–9; 401–2; 491–321; 401–38; 403–238; 420–147; 424–243; 432–235; 440–196; 441–5; 476–227; 487–9; 453–34; 459–18, 52, 126, 4, 137, 19, 36; பொருநராற்றுப்படை : 183–248; 299–163; 398–61; 458–66; பெருங்கதை : 302; பெரும் பாணாற்றுப்படை : 269–1; பொய்யாமொழிப் புலவர் பாடல் : 275; மணிமேகலை : 56–13; 341–93; 373–7; மலைபடுகடாம் : 380–218; 398–41; 425–275; முத்தொள்ளாயிரம் : 101.

இலக்கண மேற்கோள் (எண் : நன்னூல் நூற்பா எண்) அகத்தியனார் : 260, 265, 291, 297, 300, 323, 327, 340; அவிநயனார் : 320; அவிநயப் புறனடை : 128; இறையனார்

அகப்பொருள் சூத்திரம் : 302; உரிச்சொல் நிகண்டு : (காப்பு) 321; தொல்காப்பியனூர் : 91, 94, 124, 128, 138, 164, 233, 270, 275, 284, 295, 316, 318, 320, 360, 401; புறப்பொருள் வெண்பா மாலை : 222-34; 269-225; 302-11; 410-189, 224; 344-99; 441-42; 428-335; 459-48, 37, 83: யாப்பருங்கலக் காரிகை : கடவுள் வாழ்த்து-331.

ஏறத்தாழ முப்பத்தைந்து இலக்கியங்களை இவர் மேற்கோள்களாகக் காட்டுவதினின்று இவர்தம் இலக்கிய அறிவின் பரப்பையும், அவற்றைத் தகுந்த இடங்களில் பெய்வதனின்று இவர்தம் அறிவாழத்தையும், சைவ இலக்கியங்களைப் பெரும் பான்மையாகக் கையாளுவதினின்று இவரின் சைவ சமயப் பற்றையும் புரிந்து கொள்ளலாம்.

வடமொழிப் புலமை: சங். க்கு வடமொழி நூலில் மிகப் பயிற்சி இருந்ததா என்பது ஐயத்திற்கிடனுய் இருக்கிறது. "அங்கங்கே காட்டும் வடமொழிப் பிரயோகங்களையும் நியாயங்களையும் கொண்டு சங்கர நமச்சிவாயரது வடநூற் பயிற்சியின் அளவை அறிந்துகொள்ளலாம்" என்னும் உ. வே. சா. அவர்களின் குறிப்பு ஆராய்ச்சிக்குரியது.[1] 125ஆம் நூற்பா ஐகார, ஔகாரங்களின் கூட்டொலித் தன்மையைக் குறிக்கிறது. இந் நூற்பா எழுத்துப் போலியைக் குறிப்பதாக உரை எழுதியுள்ளார் சங். அ + இ > ஐ; அ + ய் > ஐ; அ + உ > ஔ, அ + வ் > ஔ, என்று சங். விளக்கினர். ஆனல் புத்தம் புத்துரை யாசிரியராகிய முனிவர் இக்கருத்தை மறுத்து சங். எழுதிய உரை முழுவதையும் அப்படியே விலக்கிவிட்டுத் தாமே புத்துரை எழுதுகிறார். இந் நூற்பா வடமொழியைச் சார்ந்த சந்தியக்கரத்தைக் குறிப்பதாக அவர் விளக்குகிறார். அ + இ + ய் > ஐ; அ + உ + வ் > ஔ என்பது முனிவரின் விளக்கம். விளக்கத்தின் முடிவில் முனிவர் குறிப்பிடும் செய்தி தனிப்பார்வை குரியது.

"இச்சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள் கொள்ளாது தமிழ்நூற் பயிற்சி ஒன்றுமே யுடையார் எழுத்துப்போலி உணர்த்திற்றென்று பொருள் கொண்டு அஇ > ஐ; அய் > ஐ; கஇ > கை; கய் > கை; அஉ > ஔ; அவ் > ஔ; கஉ > கௌ; கவ் > கௌ, என உதாரணம் காட்டுவர்."[2]

1. சாமிநாதையர், உ. வே., நன். சங். உரைப்பதிப்பு, ப. 26
2. தண்டபாணி தேசிகர் பதிப்பு, மாதவச் சிவஞான சுவாமிகள் இயற்றிய புத்தம் புத்துரை என்னும் நன்னூல் விருத்தியுரை, 1957, ப. 100

ஈண்டு, முனிவர் குறிப்பிடும், 'தமிழ் நூற்பயிற்சி ஒன்றுமே உடையார்' என்ற சுட்டு, சங். குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. சங். உரையைப் புதுக்கி அங்கங்கே பின்னிணைப்பாக உரையெழுதிச் சேர்த்த முனிவர், இந்நூற்பாவிற்குச் சங். எழுதிய உரையை முற்ற விலக்கி விட்டனர் என்பதும், எழுத்துப்போலி எனக் கொளுகூறி உரை கூறுபவர் சங். என்பதும் மேற்கண்ட செய்தியை உறுதி செய்கின்றன. இக் குறிப்பினின்று சங்கர நமச்சிவாயருக்கு வடமொழிப் புலமை இல்லை என்பதை உய்த்துணரலாம்.

ஆனால், வடமொழி இலக்கணங்களைப் பற்றிய கேள்வி அறிவு சங்கர நமச்சிவாயருக்கு இருந்திருத்தல் வேண்டும். அவர்தம் ஆசிரியர் தேசிகர் வடமொழி நூற்கடலார் என்பது அவரது வரலாற்றால் அறியப்படும் உண்மை. ஆதலின் வடமொழிப் புலமை நலத்தார் இல்லை எனினும், பலவேறு வடமொழி இலக்கணக் கூறுகளைத் தமிழ்மொழி வழியே சங். தம் ஆசிரியர் தேசிகரிடத்துப் படித்திருத்தல் கூடும். இவ்வாறு கேட்டுப் படித்து எழுதிய குறிப்புகள் சங். உரையில் இடம் பெற்றுள்ளன.

62ஆம் நூற்பா விரிவில் "வடநூலார் இடுகுறியை 'ரூடி' என்றும், காரணத்தை 'யோகம்' என்றும், காரண இடுகுறியை 'யோக ரூடி' என்றும் வழங்குப" எனக் குறித்தல்; ஒன்று இரண்டு பல என்பன வடநூல் வழக்கு, ஒன்றல்லன வெல்லாம் பல என்பது தமிழ்நடை எனப் பதவியல் முதல் நூற்பாவில் விளக்குதல்; இவ்விளக்கத்தைத் தொடர்ந்து "இப்பதவியலுக்கு மேற்கோள் ஆரியமே என்பார் மொழி என்னுது பதம் என்றும் கூறினர்" எனக் காட்டுதல்; 460ஆம் நூற்பா உரியியலுக்குப் புறனடை கூறுவது. அப்புறனடை விளக்கத்தில், "இலக்கணம் கூறும் நூலுள் நிகண்டினையும் உடன் கூறுது அதனை வேறொரு நூலாகக் கூறுதல் தமிழுள்ளே அன்றி ஆரிய முதலியவற்றுள்ளும் காண்க" எனக் காட்டுதல்; 133ஆம் நூற்பா வுரையில், பிரகிருதி, விகிருதி என்னும் ஆரிய மொழிகள் பகுதி விகுதி எனத்திரிந்து நின்றன எனச் சொல் வரலாறு கூறுதல்; 137ஆம் நூற்பா விரி வுரையில் 'வடநூன் மேற்கோள்' எனச் சுட்டுதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

வடமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கையாண்டு விளக்குவது இவரது முறை. எடுத்துக் காட்டாக, 'வ்யதிரேகம்' என்ற வடநூல் வழக்கை, 'எதிர்மறை முகம்' என்று 183ஆம் நூற்பா உரையிற் குறிப்பிடுவார்.

வடநூலார் சொற்பொருளா வாச்சியம், வெங்கியம், இலக்கணை என மூன்றாகவும், இலக்கணையை வெங்கியத்துள் அடக்கி இரண்டாகவும் கூறுவர். சங். இக்கலைச் சொற்களா விளக்கித் தமிழிற்கு ஏற்பப் புதுச் சொற்களா 269ஆம் நூற்பா உரையில் எடுத்துக் காட்டுகிறார். "இவற்றுள், வாச்சியம் என்பது வெளிப்படை; வெங்கியம் (வியங்கியம்) என்பது குறிப்பு; இலக்கணை என்பது ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றொரு பொருட்குத் தந்துரைப்பது" என்பது அவர் தரும் விளக்கம்.

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனச் சொற்களா நான்காகப் பகுத்தவர், வடசொல்லைத் திசைச் சொல்லில் அடக்காமற் போயினமை ஆராய்ச்சிக் குரியது. இவ் வாராய்ச்சியைப் பல உரைகாரர்களும் செய்திருக்கின்றனர். சங். 270ஆம் நூற்பா உரையில் இவ்வாராய்ச்சியை நிகழ்த்துகிறார். "தமிழ் நாட்டிற்கு வடதிசைக்கட் பதினெண் மொழிகளுள் ஆரிய முதலிய பல மொழியும் உளவேனும் தென்றமிழ்க்கு எதிரியது கடவுட் சொல்லாகிய ஆரியம் ஒன்றுமே என்பது தோன்ற அவற்றுள் தமிழ்நடை பெற்றதை வடசொல் என்றும், ஏனைய வற்றுள் தமிழ்நடை பெற்றதைத் திசைச்சொல்லென்றும் சான்றோரால் நியமிக்கப்பட்டன என்க" எனக் கூறுவர்.

இலக்கணை: இலக்கணை என்பது ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றொரு பொருட்குத் தந்துரைப்பது. இவ் விலக்கண மரபைத் தொல். தனித்துச் சுட்டவில்லை. பின் வந்தோரே இதனைப் போற்றினர். சமற்கிருத அறிவு தமிழிலக்கண வாணருக்குப் பெருகிய பின்னரே இது போன்ற இலக்கண மரபுகளையும் போற்றத் தொடங்கி யிருத்தல் வேண்டும். சங்கரநமச்சிவாயரும் ஆசிரியரின் வழி கேள்வி அறிவால் தாம் அறிந்த ஆரிய இலக்கண மரபுகளா ஆங்காங்கே தம் உரையில் இணைத்துக் காட்டுகிறார். அவ்வாறு காட்டப் படுவனவற்றுள் இவ் விலக்கணையும் ஒன்று. இதனை 94, 143, 145, 151, 153, 269ஆம் நூற்பாக்களில் பொருத்திக் காட்டுகிறார். 269ஆம் நூற்பா உரையில்; விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என்று இலக்கணையின் மூன்று பிரிவுகளையும் காட்டி, அவற்றிற்குப் பொருத்தமான தமிழிலக்கியச் சான்றுகளையும் காட்டுகிறார். காண்டல் விரோதம்: பிரத்தியட்ச விரோதம் என்பது வடமொழியாளர் கொண்டதோர் இலக்கண மரபு. இலக்கண விளக்க உரைகாரரும் ஐந்தாம் நூற்பா உரையில் இதனைக் காட்டுவர். சங். ஆய்தக் குறுக்கம் பற்றிய 97ஆம் நூற்பா வுரையில், இதனைத் தமிழாக்கிக் 'காண்டல் விரோதம்'

என்று சுட்டுவர். அனுவாதம்: முற்கூறியதனை வேறு ஒரு காரணம் பற்றிப் பின்னரும் எடுத்தாளுதல் அனுவாதம் எனப்படும். இக் கலைச்சொல் வடமொழி மரபைப் பற்றியது. 96ஆம் நூற்பாவில் சார்பெழுத்து அதிகாரத்தில் மகரக் குறுக்கத்தைக் கூறிய நன்னூலார், இடைநிலை மெய்ம்மயக்க அதிகாரத்தில் 120ஆம் நூற்பாவிலும் மீண்டும் அதனைக் குறிப்பிடுகிறார். இது கூறியது கூறலன்று; காரணம் பற்றிவரும் அனுவாதம் என்பது உரையாசிரியர் கருத்து. பாரிசேடம்: பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகாரம் என்ற ஆறனுள் பகுதி எஞ்சிய ஐந்தனையும் தனியே விதந்து கூறுகிறார். இந்நிலையில் தத்தம் பகாப்பதங்களே பகுதியாகும் என நூற்பா அமைப்பது பகுதியைக் கருதியேயாம். இவ்வாறு ஒழிந்து நின்ற ஒன்றை உணர்ந்து கொள்ளும் முறையைப் பாரிசேடம் என்பார் வடநூலார். இதனை 134ஆம் நூற்பா உரையில் இவர் ஆளுகிறார். அவாய் நிலை: தொடர் நிலை, அவாய் நிலை, அண்மை நிலை, தகுதி என மூவகை. (இலக்கண விளக்கம் 161) இது வடமொழிப் பகுப்புமுறை. இதனுள் அவாய் நிலையானது ஒரு சொல் மற்றொரு சொல்லை வேண்டி நிற்பது. இந்த அவாய் நிலையை வடமொழியாக்கம் 147ஆம் நூற்பா உரையில் இவர் உரைக்கிறார். எகர ஒகரம்: எ, ஒ என்ற இரு குறில்களும் தமிழ் சிறப்பெழுத்துகள். சமற்கிருதத்தில் இல்லாதவை. எனினும் சமற்கிருதம் செம்மை செய்யப்பெற்ற ஏட்டுமொழி. பேச்சு மொழியாக வழங்கும் பிராகிருதங்களில் எகரம் ஒகரம் வழங்குகின்றன. ஒரு வகையில் சமற்கிருதத்தில் எ, ஒ இல்லை எனினும், பிறிதொரு வகையில் இவை பிராகிருதத்தில் வழங்கப் படுகின்றன. இக்காரணம் பற்றியே தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துகளைப் பேசும் 150ஆம் நூற்பாவில், எகர ஒகரத்தை நூற்பாவின் முன் வையாமல், றனழ என்பனவற்றை அடுத்தே வைத்துள்ளார் என்றிவர் குறிப்பிடுகிறார். இதனின்று, வடமொழி மட்டுமன்றி, அம்மொழி சார்ந்த பிராகிருத எழுத்தமைதிகளையும் இவர் தெரிந்து வைத்திருந்தார் என்பது உறுதியாகிறது. பிரமாணம்: பிரத்தியட்சப் பிரமாணம், அனுமானப் பிரமாணம், ஆகமப் பிரமாணம் என்பன வடமொழிப் பிரமாண வழக்குகள். இவற்றுள் அனுமானப் பிரமாணத்தைக் கருதல் அளவை எனத் தமிழாக்கி இவ்வுரைகாரர் 257ஆம் எழுத்ததிகாரப் புறனடை நூற்பா உரையில் கையாளுகிறார்.

சங். எடுத்துக் காட்டும் மதம், குற்றம், அழகு: இலக்கணத்திற்கு அழகூட்டுவன மதம் முதலாயின. இவை இலக்கணத்தை நன்கு புரிந்துகொள்ளவும், புரிய வைக்கவும் மிகப் பயன்படுவன. ஆதலால் உரையாசிரியர்களுக்கு அருமையும் பெருமையும்

வாய்ந்த கைக்கருவிகளாக இவை பயன்படுகின்றன. அம் மட்டுமன்றி நூலின் பெருக்கத்தைத் தடுத்து விளக்கம் குன்றுமல் சுருக்கத்தைத் தருவன இவை. இவற்றைப் பிற உரைகாரர்கள் விளக்கினர். எனினும் சங். இவற்றைத் தம் நூலில் ஆங்காங்கே உரையோடும், நூற்பாவோடும் பொருத்திக் காட்டும் போக்கு தனித் தன்மை வாய்ந்தது. மதம், குற்றம், அழகு, உத்தி முதலியவற்றை 'வந்துழி வந்துழிக் காட்டுதும்' என்ற முன்னுறுதி அளிக்கும் இவ்வுரையாசிரியர் அவற்றை நூலெங்கும் கையாண்ட திறத்தை உரையெங்கும் காணலாம்.

பண்டைய உரையாசிரியருள் ஏறத்தாழ ஏழு மதங்களையும் முப்பத்திரண்டு உத்திகளையும், முற்றத் தம்முரையுள் பொருத்திக் காட்டிய ஒரே உரைகாரர் இவர்தான். இவர் காட்டிய மதங்களை யும் அழகுகளையும் இங்கே பட்டியலிட்டு பார்த்தால் இவர்தம் புலமை இனிதின் விளங்கும்.

மதங்கள் : உடன்படல் (94), ஒருதலை துணிதல் (91), தானுட்டித் தனதது நிறுப்பு (145), பிறர் தம் மதமேற்கொண்டு கனவு (106), பிறர் நூற்குற்றங் காட்டல் (128), பிறிதொடுபடான் தன்மதங் கொளல் (58), மறுத்தல் (94).

குற்றங்கள் : குன்றக் கூறல் (406, 460), கூறியது கூறல் (பாயிர உரை பக், 4, 265, 286), மற்றொன்று விரித்தல் (265, 460), மாறுகொளக் கூறல் (265, 347), மிகைபடக் கூறல் (265, 407).

அழகுகள் : சுருங்கச் சொல்லல் (116, 406), பத்தழகு : 'நடவா...'137 ஆம் நூற்பா பத்தழகோடும் பிறந்து நின்றது.

உத்திகள் : இரட்டுற மொழிதல் (137, 62, 138, 140, 245, 248, 291, 315, 318, 399, 402), இறந்தது விலக்கல் (124), உய்த்துணர வைப்பு (96), உரைத்தாம் (99), உரைத்தும் (132), எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல் (109), எடுத்த மொழியின் எய்த வைத்தல் (136), எடுத்துக்காட்டல் (135), எதிரது போற்றல் (140), ஏதுவின் முடித்தல் (72), ஏற்புழிக் கோடல் (340), ஒத்து முறை வைப்பு (38), ஒப்பின் முடித்தல் (136, 137, 176, 209, 243), ஒருதலை துணிதல் (91), ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் (67, 170 281, 334), சொல்லின் முடிவினப் பொருள் முடித்தல் (109), சொற் பொருள் விரித்தல் (135), தன்குறி வழக்கம் மிக எடுத்துரைத்தல் (137), தானெடுத்து மொழிதல் (90), தொகுத்துச் சுட்டல் (57), நுதலிப் புகுதல் (56), பிறநூல் முடிந்தது தானுடம்படுதல் (101),

பிறன்கோட் கூறல் (124), பின்னது நிறுத்தல் (100), மாட்டெறிந் தொழுகல் (133), முடித்துக் காட்டல் (145), முடிந்தது முடித்தல் (126, 137 (இனம்) 381), முடிவிடங் கூறல் (97), முன்மொழிந்து கோடல் (94), வகுத்துக் காட்டல் (57), விகற்பத்தின் முடித்தல் (126, 137, 145).

சூத்திர நிலைகள் : சிங்க நோக்கம் (109), தவளைப் பாய்த்து (107), பருந்தின் வீழ்வு (96).

உரைநெறி: அரியவான, தேவையான ஒரு பொருள் பல சொற்களைத் திரட்டி விளக்கிக் காட்டுதல் இவர் உரைநெறியுள் ஒன்று. ஒன்பதாம் நூற்பாவில், ஆசிரிய வசனமெனினும் மேற்கோள் எனினும் பழஞ்சூத்திரத்தின் கோள் எனினும் ஒக்கும் என்று விளக்குவதும், 264ஆம் நூற்பா உரையில், பேடு, அழிதூஉ, அலி, மகண்மா ஒரு பொருட் கிளவி எனக் காட்டுவதும் காண்க.

உரை இயல்பு: உடம்படுமெய் பற்றிய தெளிவான கருத்தை வழங்குவது 162ஆம் நூற்பா. பவணந்தியாரின் சீரிய இலக்கண நன்கொடையில் இதுவும் ஒன்று. இவ்வுடம்படுமெய் பற்றிச் சங். தரும் விளக்கம் அழகானது. "உடம்படாத உயிர் இரண்டும் உடம்படுதற் பொருட்டு இடையே வரும் மெய் உடம்படுமெய்" என்பது ஒரு விளக்கம். "உயிரோடு உயிர்க்கு மயக்கம் இன்மையின் வரும் உயிர்க்கு உடம்பாக அடுக்கும் மெய் உடம்படுமெய்" என்பது அவர் வழங்கும் பிறிதொரு விளக்கம். 'மதத்தினுள்ளும் அழகினுள்ளும் வருவன சில வற்றை உத்தியுள்ளும் கூறியது என்னை எனின், கொள்கை வகையான் மதமென்றும் சிறப்பு வகையான் அழகென்றும் இம் மதம், அழகு முதலிய வெல்லாம் புத்தி நுட்பத்து அமையும் வகையான் உத்தி என்றும் கூறப்படுமென்க'[1] எனக் காட்டுதல் ஒரு நயம்.

உயிர்மெய்யை விளக்கும்போது, மாத்திரை வகையான் உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை என்றும், ஒலிவகையான் உம்மைத்தொகை என்றும் இவர் விளக்கும் பாங்கைக் காண்க.[2] படர்க்கையைப் பற்றிச் சுருக்கத் தெளிவுடன் அழகான வரைபறை தருகிறார். "சொல்வானும் கேட்பானுமாகிய இருவர் கூட்டத்துப் பிறந்த சொல் அவ் விருவரிடத்து நில்லாது அயலானிடத்துப் படர்தலின் படர்க்கை

1. நன். சங். உரை, 14
2. நன். சங். உரை, 109

எனப்பட்டது'' என்பது அவர்தம் விளக்கம்.[1] ''இலக்கணமுடைய தன்றிப் படைப்புக் காலத்து இலக்கணமுடைய தோடு ஒருங்கு படைக்கப்பட்டது போலத் தொன்று தொட்டன்றி இடையே வருவது இலக்கணப் போலி; தொன்று தொட்டன்றி இடையே இலக்கணஞ் சிதைந்து மரீஇயது மரூஉ'' என்று தெளிவாக விளக்குவர்.[2] குறிப்பு வினையில் 'வினை' இல்லாமை வெள்ளிடை. இதற்கு அதற்கான விளக்க மொன்று தருகிறார் சங். எதிர்மறைக் கண்ணும் குறிப்பின் பாற்படும் இலனென்றற்றொடக்கத்து எதிர்மறைக் கண்ணும் வினையில்லையாம். அங்ஙனமாகவும் இவற்றை வினையென் பதூஉம் இவை செய்பவன் முதலிய ஆறுந் தரும் என்பதூஉம் என்னை எனின், இவற்றை வினையென்பது முயற்கோடு, ஆகாயப்பூ என்றாற் போல இன்மையை உண்மைபோல வைத்துக் கூறுவதோர் இலக்கணை.[3] இவை செய்பவன் முதலிய ஆறுந் தரும் என்பது ''சிதமின்மை பனியின்மை காட்டல்'' போல வினையின்மை செய்பவன் முதலியவற்றின் இன்மைகளைக் காட்டி நிற்றலையாம்.[4] ஏவல், வியங்கோள் என்பன ஒத்தும் வேறு பட்டும் நிற்பன. இவற்றிடையே உள்ள வேற்றுமையைச் சுருக்கமாகக் காட்டுவர் சங். ''ஏவல் வியங்கோள் என்பன ஒருபொருட் கிளவியாயினும் இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் செல்லும் ஏவலே வியங்கோள் என்பது தொன்னெறி மரபாம்'' என்பர்.[5]

உரை எழுதும் உரையாசிரியர் மூல நூலாசிரியரை நன்கு போற்றி மதிப்பர். நூற்பா அமைவில் ஏதேனும் இடர் வரும்போது உரை விளக்கத்தால் ஏந்திக் காப்பர். சான்றாக, இருதிணைப் பொதுவினைப் பட்டியலைப் பவணந்தியார் 330ஆம் நூற்பாவில் கூறுகிறார். இப்பட்டியலில் இருதிணைப் பொது வினையான செய்யும் என்ற முற்று இடம் பெறவில்லை. பவணந்தியார், கருத்துக் குறைவால் விட்டு விட்டனரா? இல்லை என்று கூறி, அவர் இலைமறைகாயாக நூற்பாவில் வரைந்திருப் பதைத் தெரியப் புலப்படுத்துகிறார் சங். பொதுவினைப் பட்டியலில் ஈரெச்சம் இருதிணைப் பொதுவினை எனக் குறிக்கப்படுகிறது. ஈரெச்சம் (இருதிணைப் பொதுவினை) என்ற தொகைச் சொல்லுள்,

1. நன்னூல், சங். உரை, 266
2. மே. கா. நூ. 267
3. மே. கா. நூ. 97
4. மே. கா. நூ. 321
5. மே. கா. நூ. 338

செய்யும் என்ற பெயர் எச்சமும் அடங்கும் அன்றே! செய்யும் எனற பெயரெச்சமே, செய்யும் என்ற முற்றுகவும் வருதலின், ஈரெச்சம் என்ற குறியிட்டிலேயே பவணந்தியார் இதனையும் அடக்கினர் என விளக்குவர்.[1]

மொழிநடை: "சங். உரையில் சில பகுதிகள் சேனுவரையம் முதலியவற்றைப் போலச் சிறந்திருக்கின்றன என்று சில சமயங் களில் ஆசிரியர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேம்" என்று உ. வே. சா. பாராட்டுரை வழங்குவர்.[2] "அளப்பருந் தமிழ்க் கடல் படிந்து ஐந்திலக்கணப் பொருள்மழை பொழிந்த நெல்லைச் சங்கர நமச்சிவாயப் புலவர் பெருமான் இயற்றிய விருத்தி யுரை" என கா. ஸ்ரீ. கோபாலாச்சாரியார் பாராட்டுவர்.[3] இப் பாராட்டுரைகள் முற்றப் பொருத்தமானவை. நூற்பாவை அடுத்துக் கொளுவைக் கூறி, பதாசாரம் எழுதி, எடுத்துக்காட்டு நல்கி, தேவையாயின் விருத்தி உரை அமைப்பது இவர்தம் உரைநெறி. மயிலை. கூட, பதாசாரம் கூறுமற் போயின நூற்பாக்கள் உள்ளன.[4] இவர் அனைத்திற்கும் பதாசாரம் எழுதி எடுத்துக்காட்டும் எழுதுவர். எடுத்துக்காட்டுகளில் சைவம் தொடர்பான சொற்களை, தொடர்களை, பாடல்களை, பாவரிகளைக் காட்டுவதில் தனி அக்கறை காட்டுவர்.

விருத்தி உரையில் இவரது கைவண்ணம் தனியாகத் துலங்கும். ஒரே நூற்பாவிற்கு இரண்டுரை கூற வேண்டி யிருந்தால் கூறுவார்.[5]

பல வேறுபாடு இருந்தால் அதனைக் காட்டிப் பொருள் உரைப்பர்.[6] நூற்பாவில் அரிய சொற்கள் ஆளப்பட்டிருக்கு மாயின் அவற்றிற்குரிய பொருளைத் தம் உரையில் புலப்படுத் துவர்.[7] எடுத்துக் காட்டாக 18ஆம் நூற்பா உரையில், திட்பம் குற்றமின்மையின் அகலவற நிற்றல் எனப் பொருளுரைப்பர். சில இடங்களில் எடுத்துக்காட்டுப் பாக்களில் பொருள் தெளிவு வேண்டிய சொற்களுக்குப் பொருள் கூறுவர். 101ஆம் நூற்பா உரையில், "நாவல் என்பது நெற்போர் தெழிக்கும் பகட்டினங்

1. நன்னூல், சங். உரை, 330
2. மே. கா. நூ. உரையாராய்ச்சி, ப. 23
3. கோபாலாச்சாரி, கா. ஸ்ரீ., ஸ்ரீரங்காச்சாரி, தி. கோ., நன்னூல் காண்டிகை உரை, 1898, முன்னுரை, ப. 1.
4. நன். மயிலை. உரை, பாயிர நூற்பாக்கள் இவ்வாறு அமைந்துள்ளன.
5. நன். சங். உரை, 62
6. மே. கா. நூ. 14
7. மே. கா. நூ. ப. 18, 128, 216, 217, 232

கூறத் துரப்பதொரு சொல்'' என்று குறித்தமை காண்க. சில சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வழங்கலும் இவர் உரைநெறி. சான்றாக, உத்தி பற்றிய 14ஆம் நூற்பா உரையில் ''தந்திரம் என்பது நூல்; உத்தியான் அமைக்கும் பொருளை 'உத்தி' என்றது ஆகுபெயர்'' என்றது காண்க. சில இடங்களில் குறிப்பாக உத்தி, அழகு முதலானவற்றில் பல்கிய எடுத்துக் காட்டுகளைக் காட்ட வேண்டி யிருக்கும். அவற்றை வரும் நூற்பாக்களில் ஆங்காங்கே காட்டுவோம் என்பதை ''இந்நூலுள் வந்துழி வந்துழிக் காட்டுதும்'' என நூற்பா 11, 14, 19, 20, 21 குறித்துக் குறித்த படியே அங்கங்கே அவற்றைத் துலக்குவது அருமையானது. சில இடங்களில் சில இலக்கண ஆட்சிகளை மாட்சிமையோடு இவர் விளக்குவதைக் காணலாம். இடுகுறிப் பெயர்–ஒரு பொருளைக் குறித்தற்குக் கடவுளாலும் அறிவுடையோ ராலும் இட்ட குறியாகிய பெயர் இடுகுறிப் பெயர் என்பர். இயல்பு வழக்குகளையும், தகுதி வழக்குகளையும் இவ்வாறே 26ஆம் நூற்பா உரையில் விளக்குவர். ஒரு நூற்பாவில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு சொல்லும் எத்துணைப் பொருளழுத்தம் வாய்ந்தது என்பதனைத் தனித்து நுனித்து இவர் ஆய்ந்து காட்டும் திறனை 128ஆம் நூற்பா வுரையில் பார்க்கிறோம். உரை நலத்தில், இவர் பிற உரைகாரர்களை மறுத்துரைக்கும் முறை தனிப் பாராட்டுக்கு உரியது. அவர்தம் மறுப்பு முறை உரை வேறுபாடுகள் என்ற பகுதியில் பின்னே ஆராயப்படுகிறது.

உவமை வழிக் கருத்து விளக்கம்: எல்லாவற்றிற்கும் மணி முடியாக—இவருக்கே உரிய தனித் தன்மையாக—விளங்குவது உவமை வழி தம் கருத்தை நாட்டுவது. மிகப் பொருத்தமான உவமைகளைப் பொருத்தமான இடங்களில் பொருத்தி உரைப்பது பொருந்த உரைப்பது இவருக்குக் கைவந்த கலை. நச்சினார்க்கினி யர், மயிலை. போன்றவர் இலக்கண நுணுக்கங்களைத் துலக்க உவமைகளைக் கையாண்டனர். எனினும் மிகப் பரவலாக, பலவாக உவமைகளைக் கையாண்டவர் சங். ஆவார். ஒரு நூல் முன்னூலை நோக்க வழி நூலாயும் அதன் பின்னூலை நோக்க முதனூலாயும் விளங்க இயலும். இக் கருத்தை; 'ஒருவற்கு மைந்தனயினன் மற்றொருவற்குத் தந்தையாயினற் போல முதனூலாயும் வழிநூலாயும் நிற்கு மென்பது பெற்றும்'' என 7ஆம் நூற்பா உரையில் விளக்குகிறார். வழி நூலை ஒட்டிச் சார்பு நூல் தோன்றுகிறது. ''எனவே முதநூற்கு வழிநூலும் சார்பு நூலும் ஒருவற்கு மைந்தனும் மருமானும் போலும் என்க'' என்று 8ஆம் நூற்பா உரையில் தருகிறார். அணுத்திரள் காரணமாக எழுத்துத் தோன்றுகிறது. எழுத்து காரணமாக மொழி தோன்று

கிறது. ஆக மொழி அனைத்திற்கும் மூலம் அணு. "சிதலது நீர்வாய்ச் சிறுதுகளாற் பெரும் புற்றுரு அமைந்த பெற்றிய தென்ன ஐம்புலப் பேருரு ஐந்தும், ஐந்தணுவாய் இம்பரிற் சமைவது யாவரும் அறிதலின் அநாதி காரணமாகிய மாயையினை ஈண்டுக் கூறுது ஆதிகாரணமாகிய செவிப்புலனும் அணுத்திரளை எழுத்திற்கு முதற்காரணம் என்றார்" என்பது 58-ஆம் நூற்பாவில் இவர் தரும் உவமை விளக்கம்.

ஆய்த எழுத்து உயிர் எழுத்துப் போல, "அற்றுல் அளவறித் துண்க அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்கு மாறு" என்ற 943ஆம் குறட்பாவில் அலகு பெற்றும், மெய்பெழுத்துப் போல "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றுமை நன்று" என்ற 236ஆம் குறட்பாவில் அலகு பெறுமலும் வருவதை முதன்முதல் எடுத்துரைத்தவர் இவரே. இவ்வாறு உயிரோடும் மெய்யோடுங் கூடியும் கூடாதும் நிற்கும் இவ்வெழுத்தை, இவர் "அலிபோலத் தனி நிற்றலின் தனிநிலை எனப்படும்" என உவமை வழி விளக்குவர்.[1] ஆய்தம், மொழி முதலிலோ, ஈற்றிலோ வாராது. மொழியிடையில் மட்டுமே வரும். இருமருங்கும் வெவ்வேறு எழுத்துகள் இருசிறகெழுப்ப எழும் உடலதுபோல் இடையெழுந்து ஒலிப்பதன்றி ஒரு வாற்றானும் ஈறாய் வரும் தன்மையது அன்று[2] என்பர். குற்றியலுகரம், நெடில், ஆய்தம், உயிர், வலி, மெலி, இடை என்பனவற்றை அடுத்து வன்மையூருகரம் உறழ்ந்து முப்பத்தாறாய் வரும். ஆனால் இடைத் தொடர் குற்றுகரங்களுள், இடையின எழுத்துகளை அடுத்து 'டு', 'று' என்ற ஈற்றுக் குற்றுகரங்கள் வருவதில்லை. இவ்வாறு இரண்டு வாராமையால் குற்றுகரம் மொத்தம் 34 அன்றி, 36 ஆகாது. இதற்கு மறுப்பாக, ஆனமுகக் கடவுளை மும்மதத்தான் என்றார்போல இலக்கணை என்னும் விதியால் குற்றியலுகரம் முப்பத்தாறு என்று கொள்க எனக் காட்டுவர்.[3] ஙகர மெய் தனித்து வரும் தன்மையற்றது. அஇஉ என்ற சுட்டெழுத்துகள், எ, யா, ஆ என்ற வினா எழுத்துகளை அடுத்தே வரும். இவ்வாறு வருதலை 'முடவன் கோலூன்றி வந்தாற் போல' என்று சங். காட்டுவர்.[4] குறிலுயிர்க்கு ஒரு மாத்திரை, நெடிலுயிர்க்கு இரண்டு மாத்திரை. இவை அரை மாத்திரை ஒலிக்கூறுடைய மெய்பெழுத்துகளோடு

1. நன். சங். உரை, 60
2. மே. கா. நூ. 92
3. மே. கா. நூ. 94
4. மே. கா. நூ. ப. 106

உறழ்ந்து உயிர்மெய்களாக ஒலிக்கும்போது முறையே ஒன்றரையாகவோ இரண்டரையாகவோ ஒலிப்பதற்கு மாற்றாக முன்பிருந்த படியே, ஒரு மாத்திரை யாயும், இரண்டு மாத்திரையாயும் ஒலிக்கின்றன. இதனை 'அப்பொடு பெய்த உப்பே போல உயிரொடு புணர்த்திய மெய் தன்னளவு தோன்றுது ஒன்றுய் நிற்கும்' என்பர்.[1] நெடில் குறிலது நீட்டம்; விகாரம். இதனைப் 'பாலன் விருத்தனுளில் போலக் குறியினது விகாரமே நெடிலாதல்' என்பார் இவர்[2]. தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழி பெயர்ப்பு என்பன யாப்பின் நால்வகை. இவற்றுள் தொகைவிரி என்பது இடம் பெற்றது. தொகை வகை விரி எனப் பிறிதொன்று வேண்டாவா? இதற்குப் புலவர் உவமை வழி விடையளிக்கிறார். நடுநின்ற வகை பின்னின்ற விரியை நோக்கின் தொகையாகவும், முன்னின்ற தொகையை நோக்கின் விரியாகவும் அடங்குதலின் இது தொகை விரி யாப்பென்றதன்பாற் படுமென்க. எனவே தொகை விரி என இரண்டாய் வரினும் மரத்தினது பராரையினின்றும் கவடுகோடு கொம்பு வளரப் பலவாய் ஒன்றேடொன்று தொடர்பு பட்டு எழுந்து நிற்றல் போலத் தொகையினின்றும் ஒன் றேடொன்று தொடர்புபடப் பகுக்கப்பட்டுப் பலவாய் வரினும் தொகை விரி யாப்பேயாம் என்க. இது சிறப்புப் பாயிர உரையில் இடம்பெற்ற உவமை வழி விளக்கம். பவணந்தியாரின் கொள்கைப்படி, அளபெடையில் நெடிலே, அடுத்து நிற்கும் குறில் ஓர் அடையாளக் குறியீடே. தனி எழுத்து அன்று. இக் கருத்தை அழகான உவமை மூலம் சங். விளக்குவர். இறந்து கிடக்கும் ஒருவனது உடம்பைப் பார்த்து "படுமகன் கிடக்கை காணூஉ" (புறம் 271) என்றுற் போன்றது உயிர் அற்ற வெற்றுக் குறியீட்டைக் 'குற்றுயிர்' எனக் குறித் தல். இவ்விளக்கத்தை 10ஆம் நூற்பாவுரையில் காணலாம். தமிழ் எழுத்து சொற்களில் இடம் பெறும்போது தனக்கு உரிய ஒலியை இழப்பதில்லை. ஆங்கிலம் போன்ற மொழிகளில் ஒரே எழுத்து, இடம் பெரும் சொற்களுக்குத் தக ஒலிக்கப்படிவதைக் காணலாம்.[3] தமிழ் மொழியில் அமைந்திருக்கும் இத்திறத்தை, "எழுத்து, சுண்ணத்தின் கண் அரிசன முதலிய போலாது மாலையின் கண் மலர் போல அவற்றில் நிற்கும்" என இவர் காட்டுவர்.[4] பகுதி, சொல் முதலில் நிற்பது. விகுதி சொல்

1. நன்னூல், சங். உரை, 109
2. மே. கா. நூ. 72
3. தாயம்மாள் அறவாணன், புதிய கோலங்கள், 1973. ப. 9
4. நன். சங். உரை, 127

லீற்றில் நிற்பது. பகுதியின் பொருளைத் தனக்குத் தகுமாற்றவல்லது விகுதி. இதனைத் "தன்னியல்பில் நிற்கும் ஒருவன் உள்ளத்தை ஆடை அணி முதலியவற்றைக் கொடுத்தி முன்னின்று தன்னிடத்து அவாவ விகாரப்படுத்தல் போலத் தன்னியல்பில் நிற்கும் பகுதிப் பொருளை இடைநிலை முதலியவற்றைக் கொடுத்து முன்னின்று தன்னிடத்து அவாவ விகாரப் படுத்தலின் விகுதி" என விளக்குகிறார் இவர்.[1] நடத்து என்னும் ஏவற் பிறவினைப் பகுபதம் நட என்னும் பகுதியும் 'து' என்னும் விகுதியும் பெற்றுத் தகரம் மிக்கு முடிந்தது. நடத்தினன் என்ற வினைமுற்றில், நடத்து என்பதே பகுதியாய் நின்று, ஆன் விகுதியாய் நின்று, இன் இறந்த கால இடைநிலையாய் இருக்கிறது. நடத்து என்பதில் விகுதியாய் நின்ற துகரமே நடத்தினன் என்பதில், பகுதி யீறாக நிற்கிறது. இது எவ்வாறெனில், "தந்தையைக் குறிக்க மகனெனப் பட்டாஞ்ஞருவன் தன் மகனைக் குறிக்கத் தந்தையாயினுற் போல" என உவமை வழி விளக்கந் தருகிறார் சங்.[2] ஒரு பகுபதம், பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, ஆகிய உறுப்புகளோடு இலங்குவது, மா, பலா முதலியன பராரை முதலிய சினைபொடு நின்றன எனக் கண்டது கூறுவார் போலக் கூறப்படுகிறது என்பர் சங்.[3]

எழுத்ததிகாரம் மூன்றாவது இயலில், புணர்ச்சி அதனது இரு வகை, இயல்பு, விகாரம், விகார வகைகள், பொதுப் புணர்ச்சி விதிகள் என்பனவற்றைப் பதினொரு நூற்பாக்களில் விளக்கி, பின்னரே, நூலாசிரியர் பவணந்தியார் உயிரீற்றுப் புணர்ச்சி பற்றிச் சிறப்பாகக் கூறத் தொடங்குகிறார். உயிரீற்றுப் புணர்ச்சி அல்லாத செய்திகளும் இவ்வியலில் பேசப்பட்டும், இவ்வியல் உயிரீற்றுப் புணரியல் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஏன்? வேறு மரங்கள் சில இடம் பெற்றிருந்தாலும், பெரும்பான்மை இடம் பற்றியிருந்த கமுக மரத்தை ஒட்டிக் 'கமுகந் தோட்டம் என்றாற் போல' மிகுதி பற்றிய குறியாய் இவ்வியலிற்கு இப்பெயர் அமைந்தது என விளக்குவர் சங்.[4] ஒரு மொழியைத் தனிமொழி என்பர். ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் கூடியவற்றைத் தொகை நிலை மொழி என்பர். வினைத் தொகை, பண்புத் தொகை ஆகியன ஒன்றிற்கு மேற்பட்ட சொற்களால் கூட்டப் பெற்ற தொகை நிலை மொழிகள். ஆனால் இவற்றை இளம்பூரணரும், நச்சினார்க்

1. நன்னூல், சங். உரை, 133
2. மே. கா. நூ. ப. 139
3. மே. கா. நூ. ப. 141
4. நன். சங். உரை, 151

கினியரும் ஒரு மொழிகள் எனக் குறிப்பர்.[1] இக் கூற்றை "அவர் கூற்றுத் தாய் மலடி என்றுற் போலும்" எனக் கூறிச் சங். மறுத் துரைக்கும் அழகு தனியானது.[2] நால்வகைச் சொற் பிரிவு களுள் திரிசொல் என்பது ஒரு பிரிவு. இயற்சொல் என்பது பிறி தொரு பிரிவு. இப்பிரிப்பு, எழுத்துகளின் திரிந்தமையையும் திரியாமையையும் கருதியா? அன்று. குரங்கின் முகம் தன் இயல்பாய் இருந்தபோதேனும் நரம் (மாந்தர்) முகச் செவ்விக்கு மறுதலைப் பட்டமை கருதி வலிமுகம் எனப்பட்டது போலக் கல்வி ஏதுவானன்றி இயல்பாகத் தம் பொருளை உணர நிற்றலின், இயற்சொல் என்றும், அவ்வியல்பிற்கு மறுதலைப் பட்டுக் கல்வி ஏதுவால் தம் பொருளை உணர நிற்றலின் திரிசொல் வென்றும் கூறப்பட்டன என்று காட்டுவர் சங்.[3]

வாதத் திறன் : பிறர் உரைக்கு மறுப்புரை நல்கும் இடங் களில், இவரது வாதத்திறன் பளிச்சிடுகிறது. எனினும், மறுப் புரை இல்லாத இடங்களில் கூட, தருக்க நெறியோடு சுருக்க மொழிகளில் இவர் உரையாடும் திறனை ஆங்காங்குக் காணலாம். சான்றாக, விகாரப் புணர்ச்சிக்கு விதி கூறுகிறார் பவணந்தியார். இது இயற்கை. விகாரத்திற்கு மறுதலையான இயல்பு புணர்ச்சிக்கும் தனி விதி தரவேண்டுமா? விகாரம் அல்லாதன எல்லாம் இயல்பாகுந் தானே! ஆனால் நூலாசிரியர், "விகாரம் அனைத்தும் மேவல தியல்பே" என 153 ஆம் விதியைத் தனியே அமைக்கிறார். இதற்கு விடையளிக்கிறார் உரைகாரர். ',மலர்க்கணைத் தொடுத் தான் என விகாரமாய வழி மலராகிய கணையைத் தொடுத்தான் எனவும், மலர்கணை தொடுத்தான் என இயல்பாய வழி மலரையும் கணையையும் தொடுத்தானெனவும் பொருள் வேறுபடுதலின் கூற வேண்டுமென்க" என வாதத்திறனோடு உரை வரைகிறார். ஒற்று மிகும்போது வேற்றுமைத் தொகையாகவோ பண்புத் தொகையாகவோ இயங்கும் தொடர், ஒற்றுமிகாத போது உம்மைத் தொகையாய்ப் பொருள்படுகிறது. இப்பொருள் புலப்பாட்டுக்கே, இயல்பு, விகாரம் என்ற இரண்டிற்கும் நூற்பா யாத்தார் பவணந்தி யார் என்பது சங். கருத்து.

கல்வெட்டுத் தொடர்கள் : இலக்கணங்களைப் படிக்கவும் படைக்கவும் கல்வெட்டு மொழிகள் பெருந்துணை புரிந்திருக் கின்றன. உரையாசிரியர்கள் கல்வெட்டுத் தொடர்களைத் தத்தம் உரையினூடே கையாளுதல் உண்டு. சங். கல்வெட்டுத் தொடர்

1. தொல். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகள், புணரியல், 8
2. நன். சங். உரை, 152
3. மே. கா. நூ. 272

கஸ்ஸக் கையாளும் நெறியினர். இவர் நூற்பா 186 இல் 'கீழ்மேல் தென்வடல்' என்று குறிக்கிறார். இத்தொடர் கல்வெட்டிலும் கிரய சாசனப் பத்திரங்களிலும் அடிக்கடி காணப்படுந் தொடர் ஆகும்.

குறட்பாக்கட்கு உரை : சங். குறளின் காதலர். இவர் நனிமிக எடுத்தாண்ட மேற்கோள் திருக்குறளே என்பது முன்பு காட்டப்பட்டது. மறுப்புரைக்கும் போது குறளைச் சார்புச் சான்றாகவும் இவர் காட்டுவர். அதற்கும் மேலாக, குறளுக்குப் பொருத்தமான விளக்கவுரை வரைந்து காட்டுதலை 360 ஆம் நூற்பா உரையில் காணலாம்.

> "இணரெரி தோய்வன்ன இன்னு செயினும்
> புணரின் வெகுளாமை நன்று"

என்ற 303 ஆம் குறட்பாவிற்கு இவர் எழுதிய விளக்கம் அழகானது; அருமையானது. 'பிற உயிர்க்கு இன்னு செயின் அவை பிழையாது தமக்கு வருதல் கருதித் தம்மாட்டு அன்பும், பிற வுயிர்கள் மாட்டு அருளும், இன்னு செய்தலான் மேன்மேல் வளரும் பிறப்பிறப்பின் அச்சமும்; நம்மால் இன்னு செய்யப்பட்டாரை நாமடைந்து இரத்தல் கூடினும் கூடும், அதனால் யார்மாட்டும் இன்னு செய்யக் கடவமல்லம் என்னும் வருங்கால உணர்ச்சி யும் இலராய் ஒருவர் தன்னால் ஆற்றல் கூடாத இன்னாதன வற்றைத் தங்கட் செய்தாராயினும், அவர் தமக்கு வேண்டுவதொரு குறை முடித்தல் கருதி நாணுது தன்னை அடைந்தாராயின், அவர் செய்த இன்னாமை கருதி அவரை வெகுளாது அவற்றை மறந்து அவர் வேண்டும் குறை முடித்து முன்செய்த இன்னாமையால் அவர் கூசி ஒழுகுதல் தவிர்தற்குக் காரணமாகிய மெய்ப்பாடு முதலியன தன்கட் குறிப்பின்றி நிகழ; அவர்க்கினியனாகி இருத்தல், தன் சால்புக்கு நன்று,' என அகலவுரை நல்கும் அழகைக் காண்க. 379 ஆம் நூற்பா திணை பால் வழுவமைதி பற்றியது. இந்நூற்பா உரையில் பல இலக்கிய மேற்கோள்களைச் சங். எடுத்தாளுவர். அவற்றுள், "ஏவவும் செய்கலான் தான் தேரான் அவ்வுயிர் போஒம் அளவும் ஓர் நோய்" என்ற 848 ஆம் குறளும் ஒன்று. இக்குறட்பாவில், "சொல் புத்தியும் இல்லாமல், தன் புத்தியும் இல்லாமல்" இருக்கும் மனிதனது உயிரை நோயாக்கி அஃறிணை யாகச் சுட்டியுரைக்கிறார் திருவள்ளுவர். இதனை இழிப்பின் கண் அஃறிணையாயிற்று என்பர் மயில். சங். இழிப்பின்கண் அஃறிணை யாக்க வில்லை. மேற்கண்ட இயல்புடையாரைச் சினத்தால் சாடும் போது செறலின்கண் உயர்திணை அஃறிணையாயிற்று, என்று உரைக் குறிப்பு எழுதுகிறார். இக் குறிப்புரை சிறப்பான நுட்ப வுரை யாகும்.

கற்றுரைக் கற்றுரே காமுறுவர் : பழந்தமிழ் நூல்களிலும் உரைகளிலும் ஆழ்ந்த புலமையுடையவர் ஆதலின் அவரது நல மறிந்து மதிக்கும் பான்மையும், பாராட்டும் போக்கும் இவர் உரை யிடத்துள்ளன. சங்க இலக்கியப் படைப்பாளரைச் 'சான்றோர்' என வழங்குதல் தமிழ் உரையாசிரியர் மரபு. சான்றோர் எனில் நற்குண நற்செய்கைகளால் நிறைந்தவர் என்பது கருத்து. தாம் கூறும் இலக்கண மரபுரைகளுக்குச் சான்றோர் வழக்கோடு பொருத்திக் காட்டி வலியுறுத்திக் கூறல் இவர் பாங்கு. மென்றொடர்க் குற்றுகர மொழிகளுள் பல வேற்றுமையால் மருந்துப்பை மருத் துப்பை என்றாற் போல வன்றொடராக மாறும். வண்டுக்கால் போன்றன அவ்வாறு ஆகா. இத்தகு வழக்குகளுக்குச் சான்றோர் செய்யுட்கண்ணும் ஏற்ற பெற்றி கொள்க என்பர் சங்.[1] இதனைப் போலவே 197, 338ஆம் நூற்பா உரைகளில் சான்றோர் மரபினை எடுத்துக் காட்டுவர்.

செந்தமிழ் நாடு, பாண்டிய நாடா, சோழ நாடா என்பது பண்டைய விவாதப் பொருள்களுள் ஒன்று. இவர் பாண்டி நாடே என்ற கொள்கையினர். அதற்குச் சான்றாக, பாண்டிய வேந்தனை பண்டைய சான்றோர் தமிழ்நாடன் எனப் போற்றியமையைக் காட்டுவர்.[2]

சான்றோரைப் போற்றுதல் : இலக்கணப் போலிக்கும் மரூஉ மொழிகளுக்கும் இடையே பெரும் வேறுபாடில்லை. பின் இவற்றை எவ்வாறு வேறு பிரித்தறிவது? சான்றோர் ஆட்சியையே மூலமாகக் கொள்ளுதல் வேண்டும் என்பது சங். கருத்து.[3] 'கொய்தளிர்த் தண்டலை' என்ற பாட்டு பழம் பாட்டு. இப்பாட்டை 'வழு' என்று மயிலை. காட்டினர். இவ்வுரைகாரர், இப்பாட்டுச் 'சான்றோர் இலக்கியம்'; முன்னர் கண்டு காட்டிய வழுவை ஏற்றுக்கொள்ள முடியாது என்பர்.[4] இவையெல்லாம் சான்றோரிடத்து இவருக் கிருந்த மதிப்பைப் புலப்படுத்தும் சான்றுகள்.

சங். உரை மூலம் அறியப்படும் அக்காலச் செய்திகள் : இலக் கியங்களும், இலக்கணங்களும் அவற்றின் உரைகளும் காலத்தின் விளைச்சல்கள். ஆதலின் அவ்வக் காலத்தின் பழக்கவழக்க ஒழுக் கங்கள் முதலானவை அவ்வக்கால இலக்கியங்களில், உரைகளில் சாயல்களாகப் படிந்திருக்கும். இவ்வாறு சங். உரையினுள்ளும்

---

1. தன். சங். உரை, 184
2. மே. கா. நூ. 271
3. மே. கா. நூ. 267
4. மே. கா. நூ. 397

பல வேறு செய்திகள் இடம் பெற்றுள்ளன. சீயகங்கன் என்ற பாயிரத் தொடருக்குச் சிங்கம் போன்ற கங்கன் என உவமைத் தொகையாய்ப் பொருள் விரித்தல் — இப்பொருள் கோள் மூலம் பவணந்தியாரின் புரவலன், சீயகங்கன் என்ற பெயரினன் அல்லன், 'கங்கன்' என்ற பெயரினனே என்ற பொருளைத் தோற்றுவித்தல்,[1] சனகை என்ற பவணந்தியாரின் ஊர்ப் பெயரை மயிலை. சனநாதபுரம் என விரித்திருக்க இவர் சனகாபுரம் என விரித்துரைத்தல்,[2] பவணந்தியார் எழுதிய பொருள் யாப்பு அணி என்னும் மூன்று அதிகாரங்களும் அக்காலத்துள்ளன போலும் என்று உய்த்துணர்த்தல்,[3] பவணந்தியாரின் அருக தெய்வ வணக்கத்தை விரித்து எழுதும்போது, திருவள்ளுவரின் கருத்தைப் பொருத்திக் காட்டி, தம் பார்வையில் திருவள்ளுவரும் சமணரோ என்று ஐயுறச் செய்து, தொடர்ந்து மிகுதியாகக்குறளை எடுத்துக்காட்டுதல் மூலமாகவும், திருவள்ளுவரைச் சைவசமயச் சாயலில் 'நாயனார்' என்று வழங்குவதன் மூலமாகவும் அவ்வைய மகற்றுதல்,[4] ஆய்த எழுத்து முற்காலத்து எழுதப்பட்டது போலத் தம் காலத்து எழுதவில்லை எனக் காட்டுதல்,[5] இசைத் தமிழுக்கெனத் தனி நூல்கள் இருந்திருக்கின்றன; அத்தகு நூலை இயற்றியோர் இசை நூலார் என்று வழங்கப்பட்டிருத்தல்,[6] 'கங்கன்' எனப் பவணந்தியாரின் புரவலன் பெயரை எடுத்துக் காட்டுகளில் பொறித்தல்,[7] கம்பன் என்ற காவி முதலான தெய்வங்களைப் பூசிக்கும் சாதியார் பெயரைக் காட்டாய்க் காட்டல்,[8] தொல்காப்பியரை வட நூல் வழக்கினர் எனக் காட்டுதல்,[9] ஆடவரை மயக்கும் வேலைப் பெண்டிர் வாழ்ந்தனர் எனக் காட்டல்,[10] மாந்தருள் காதறுபட்டோரும், மூக்கறு பட்டோரும் இருந்தனர் என்ற குறிப்பைக் காதறை, மூக்கறை என்ற காட்டுக்கள் வழி காட்டல்,[11] பழைய

1. நன். சங். உரை, சி.பா. உரை, அடி 16
2. மே. கா. நூ. அடி 20
3. மே. கா. நூ. சி.பா. அடி, 10
4. மே. கா. நூ. 56
5. மே. கா. நூ. 90
6. மே. கா. நூ. 101
7. மே. கா. 111
8. மே. கா. நூ. 111, உ.வே.சா; அடிக்குறிப்பு
9. மே. கா. நூ. 128
10. மே. கா. நூ. 133
11. மே. கா. நூ 140: இவர் காலத்திலேயே மதுரையில் திருமலை நாயக்கன் அரசாண்டான் (கி. பி. 1629—55). சீரங்கன் என்ற அரசன் தன் படையோடு மதுரையில் புகுந்து மக்களின் மூக்கையும் மேலுதட்டையும் அரிந்து மைசூருக்கு மூட்டை மூட்டையாக அனுப்பிய வரலாற்றை ஒப்பிட்டு ஒர்க—பிள்ளை, கே. கே., தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், 1972, ப. 275

இலக்கியங்களைச் சான்றோர் செய்யுள் எனப் போற்றிப் பழைய இலக்கணங்களை 'முன்னைத் தமிழ் நூல்கள்' என்று கூறல்,[1] ஒருவன் ஒன்றைக் கூறினால் கேட்பவன் வேறுபொருள் கற்பித்துக் கொண்டு பொருள்கூறும் 'சலவாதி'யார் பற்றிக் குறித்தல்,[2] இவர் காலத்தில் குற்றியலுகரம் புள்ளியோடு எழுதப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டல்.[3] ஒளித்தன்மைக்கு விண்மை என்ற பெயர் வழங்கியிருத்தல்,[4] ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்ற நான்கையும் குறிப்பாய்ச்சுட்டும் 'நாற்கவி' என்ற சொல்லை யாளுதல்,[5] நுண்ணறி உடையோர் நூலோடு பழகினும், பெண் ணறி வென்பது பெரும் பேதைமைத்தே' எனக் காட்டுதல் மூலம் பெண்டிர் அறிவு பெறுதல் கூடாமை எனக் கருதுதல்,[6] தமிழ் ஒலி நிலம் பதினெறு எனல்,[7] இந்திரனுற் செய்யப்பட்ட நூல் ஐங்கிரம் எனல்,[8] கறுப்பின் கண் அழகு எனப் போற்றுதல்,[9] உணவு உண்டபின் கைகளைப்பும் இளைப்பும் வரும் எனல்,[10] கோசரை நல்லிளங் கோசர் எனப் பாராட்டிக் குறித்தல்,[11] சிலம்பில் வரும் அடைக்காயை இவர், வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு என்ற மூன்றையும் தனியே குறித்துக்காட்டல்,[12] பறவை போல, மாந்தர் கூப்பிடும் பழக்கம் உண்டென்பதைக் 'குருவி போலக் கூப்பிட்டான்' எனக் காட்டல்,[13] உம்மைத் தொகைக்குரிய எடுத்துக்காட்டுகள் பல காட்டி, அவற்றுள் 'அறுபத்து மூவர்' என்பதனைக் காட்டி அதனை அறுபதின்மரும் மூவரும் என விரித்துக் காட்டுகிறார். இக்காட்டின் மூலம் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் அறுபது நாயன்மார் களையும் மூன்று சமய குரவர்களையும் கருதுதல்,[14] திராவிட மொழி களான கன்னடம், துளுவம் என்ற இரண்டையும் பெயர் சுட்டி

1. நன். சங். உரை, 145
2. மே. கா. நூ. 147
3. மே. கா. நூ. 164
4. மே. கா. நூ. 182
5. மே. கா. நூ. 191
6. மே. கா. நூ. 265
7. மே. கா. நூ. 273
8. நன். சங். உரை 290
9. மே. கா. நூ. 301
10. மே. கா. நூ. 340
11. மே. கா. நூ. 356
12. மே. கா. நூ. 358
13. மே. கா. நூ. 260
14. மே. கா. நூ. 268

உரைத்தல்,[1] கபில பரணர் என்ற காட்டகூப் போல, கல்லாட மாமூலனுர் என்ற புதுவழக்கைப் போற்றல்,[2] சாத்தன் என்ற தெய்வத்திற்குப் பலியிடும் வழக்கைக் காட்டல்,[3] தந்தை, ஆண் பிள்ளை பிறந்தால் மகிழ்வார் என்பதை 'மைந்தன் பிறந்தான்; அதனுல் தந்தை உவக்கும்' எனக் காட்டல்,[4] விளக்கணி எனப் பெறும் தீபக அணியைச் சுட்டுதல்,[5] பிங்கலம், திவாகரம், சூடாமணி என்ற நிகண்டுகளின் பெயர் கஹைத் தருதல்,[6] கணவன் அறநெறி நிற்றல் வேண்டும்; மஹைவி அவன் வழி நிற்றல் வேண்டும் என்ற கருத்தில் 'ஆடவருள் ஒருவர் அறத்தின் வழி நிற்பார், பெண்டிருள் ஒருவர் கொழுநர் வழி நிற்பார்' எனல்,[7] அறவழி சொர்க்கத்தையும், மறநெறி நரகை யும் நல்கும் என்ற கருத்தில் "அறஞ்செயிற் சொர்க்கம் புக்கான், பாவஞ்செய்தான் நரகம் புகும்" எனக் காட்டல்,[8] காலையில் கதிரவஹை வழிபடல் கண்ணுக்கு நன்று எனுங்கருத்தில், 'கண் தழைப்பான் கதிரவன் தொழுதான்' என்று காட்டல்,[9] எறும்பு மூட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்யும் என்ற உலக வழக்கைக் காட்டுதல்,[10] கையாலே வீட்டில் பிழியப் பெற்ற எண்ணெயைத் தடவினுல் முடி தழைக்கும் எனுங் கருத்தில் "கடுவுங் கைபிழி எண்ணெயும் பெற்றமையால் மயிர் நல்ல வாயின" எனக் குறித்தல்,[11] இருடிகளால் சொல்லப்படுவன 'ஆரிடம்' எனப்படும். தண்டி யலங்காரத்தில் செய்யுள் வழுக்கள் கடிந்து நீக்கப்படா இடங்களுள் ஒன்றுக ஆரிடம் குறிக்கப்பட்டிருக்கிறது.[12] இவ்வாரிடத்தை சங். மாத்திரை பற்றிய நூற்பாவில் எடுத்தாளுதல்,[13] முதலியன குறிப்பிடத்தக்க முதன்மையான செய்திகளாம்.

புதியன புகுதல் : இலக்கியங்களில் வாழும் வழக்குகளாகப் போற்றப்பட்ட சில சொற்கள், தொடர்கள், இலக்கண நெறிகள்

---

1. நன்னூல் சங். உரை, நூ.371
2. மே. கா. நூ. 372
3. மே. கா. நூ. 394
4. மே. கா. நூ. 394
5. மே. கா. நூ. 429
6. நன். சங். உரை 460
7. மே. கா. நூ. 289
8. மே. கா. நூ. 384, 402
9. மே. கா. நூ. 345
10. மே. கா. நூ. 394
11. மே. கா. நூ. 404
12. தண்டி' 115
13. நன். சங். உரை 99

கால நீட்சியில் வழக்கிழத்தல் கண்கூடு. இதனைப் போலவே ஒரு காலத்தில் இல்லாத புது வழக்காறுகள் மொழியில் இடம் பெறுதல் இயற்கை. மாற்றம் மொழியில் தவிர்க்க இயலாது. அம்மாற்றங்களைக் கட்டுக்குள் நிறுத்திக் கொண்டு செல்லல் இலக்கணவாணரின் கடமை. பவணந்தியார் இவ்வாறு கருதிப் புகுத்திய இருநெறிகள் தாம் பழையன கழிதலும், புதியன புகுதலும். இவ்விரண்டனுள் 462ஆம் நூற்பாவில் நெறியாகக் காட்டப்படும் புதியன புகுதலை, உரை எழுதும் போது ஆங்காங்குச் சுட்டிக் காட்டுவர் சங்.

தன்மை ஒருமைக்கண் அன் விகுதியும் பன்மைக்கண் ஓம் விகுதியும் புதியன புகுதல்.[1] நீர் உண்ணும், தின்னும் என்பன[2] வாழ்த்து முதலிய ஏவற்பொருளில் வரும் அல்லீற்று உடன்பாட்டு எதிர்மறை வியங்கோள்.[3] இழிந்தோன்—ஈ; ஒப்போன்—தா; மிக்கோன்—கொடு என முறையே வரவேண்டிய இரப்புரைகள் முறை மாறி வரும்[4]. மன், கொன் முதலாய இடைச்சொற்கள் 'மன்னை', 'கொன்னை' என வரும்.[5] ஏகார இடைச்சொல் எதிர் மறைப் பொருளில் வரும்[6]. இவை சங். காட்டுவன.

பாட பேதங்கள் : பழைய உரைகளின் பாதையினின்று விலகி, சங். காட்டும் பாட வேறுபாடுகள் ஆங்காங்குள்ளன. இவற்றை அவரே சுட்டிக் காட்டிச் செல்லுதலும் உண்டு. சுட்டிக் காட்டாமல் புதுப்பாடம் போற்றி உரை கூறலும் உண்டு.

'முதல் வழி சார்பு' என்பது 5ஆம் நூற்பாவிற்குச் சங். கொண்ட பாடம்; மயிலை. ஈண்டுப் 'புடை' எனப் பாடம் ஓதுவர்.

சூத்திரநிலை பற்றிய 19ஆம் நூற்பாவில் மயிலை. 'பருந்தின் விழுக்காடு', எனப் பாடங்காட்ட. சங், பருந்தின் வீழ்வு என்று கொள்வர்.

'தற்சுட்டு அளவு' என 95ஆம் நூற்பாவில் சங். பாட மோதிப் புறப்பொருள் காட்டுவர். மயிலை. 'அளபு' எனப்பாடம் கொள்வர். சங். இதனைச் சுட்டிக் காட்டுவர். 'ஏவலுரு' என்பது 207ஆம்

---

1. தன். சங். உரை 332
2. மே. கா. நூ. 337
3. மே. கா. நூ. 338
4. மே. கா. நூ. 407
5. மே. கா. நூ. 420
6. மே. கா. நூ. 422

நூற்பாவில் சங். காட்டும் பாடம். 'ஏவற்குரு' என்பது மயிலை. காட்டும் பாடம். 'ஏவற்குரு' எனப் பாடம் ஓதுவதிலுள்ள குறை யைச் சுட்டிக் காட்டுவர் சங். 'ஒரு பொருட் பல்பெயர் பிரிவில வரையார்' (397) என்பது சங். பாடம். 'வரையா' என்பது மயிலை. பாடம். வினைச்சொல்லின் இலக்கணம் கூறும் 320ஆம் நூற்பா,

"செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறுந் தருவது வினையே"

என அமைந்துள்ளது. 427ஆம் நூற்பா உரையில் மேற்கோளாகக் காட்டப்படும் இதே நூற்பா, பாடம் வேறுபட்டுக் கிடக்கிறது.

"செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொரு ளுந்தரும் திறத்தது வினையே"

எனக் காட்டப்பட்டுள்ளமை காண்க.

சங். உரைக்குரிய தனித் தன்மைகள் : சங். உரை சில வகை களில் தனித்தன்மை வாய்ந்தது. உவமை வழி அரிய இலக்கணச் செய்திகளை எளிமையாக விளக்குதல், அனைத்து நூற்பாக் களுக்கும் உரை எழுதிச் செல்லுதல், ஆங்காங்கு, உத்தி, அழகு, சூத்திரநிலை, குற்றம் ஆகியவற்றைப் பொருத்திக் காட்டுதல், இலக்கண உரையா, இலக்கியக் களஞ்சியமா என்று ஐயம் தோன்றுமாறு நிரம்ப இலக்கியங்களை மேற்கோளாக எடுத்தாளுதல், தமக்கு முன் வாழ்ந்த தொல்காப்பியம் முதலான நூல்களின் உரை யாசிரியர்களையும், நன்னூல் உரையாசிரியர்களையும் திறம்பட மறுத்தல் ஆகியன இவர்தம் தனித்திறங்கள்; தனி நிறங்கள். இவை எல்லாவற்றுள்ளும், அழகழகான உவமை வழி இலக்கணக் கோட்பாடுகளைத் தெளிவுபடுத்தும் இவர் பாங்கே, மற்றைய உரைகாரர்களிடையிலிருந்து இவரைப் பிரித்துக் காட்டுகிறது, உயர்த்திக் காட்டுகிறது.

10

சிவஞான முனிவர்

(கி. பி. ? — 1785) சிவஞான முனிவர் தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு புதிய ஊழியைத் தொடக்கி வைத்தவர்; செல்லும் இடமெல்லாம் ஒல்லும் வகையான் சைவத்தையும் தமிழையும் விதைத்தவர்; விரோத்தவர் இலக்கியம் பலவற்றைப் படைத்தவர்; தன் வாதத் திறனால் புறச் சமயப் போக்குகளைப் புடைத்தவர்; தமிழில் தருக்க நெறியை வளர்த்தவர். இலக்கணம், மெய்ப் பொருள் நூல்கள் பலவற்றிற்கு அரிய உரைகள் அளித்தவர். இவரைப் புலவர் பெருமக்கள் சிவஞான யோகி, சிவஞான சுவாமி, மாதவச் செல்வர், முனிவர், என்று அழைப்பர். இத்துணைப் புகழ் வாய்ந்த முனிவர், திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள விக்கிரம சிங்கபுரம் என்ற ஊரில் பிறந்தார்.[1] இவர் தாயார் பெயர் மயிலம்மை; தந்தையார் பெயர் ஆனந்தக் கூத்தர். பெற்றோர் தம் மகனுக்கு இளமையில் இட்டு வழங்கிய பெயர் முக்காளவிங்கர் என்பதாம். முக்காளவிங்கர் பள்ளியில் பயிலும்போதே அழகான கருத்துச் செறிவுள்ள பாடல்கள் இயற்றுவதில் வல்லவராய் இருந்தார். ஒரு முறை, திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த தம்பிரான்மார்கள் விக்கிரம சிங்கபுரத்திற்கு வந்திருந்தனர். அவர்களைத் தன் இல்லத்திற்கு விருந்துண்ண வருமாறு முக்காளவிங்கர் அழைத்தார். அவ் வமயம், அவரது தந்தையார் ஊரில் இல்லை. என்றாலும் தாயும் மகனும் தம்பிரான்களுக்குச் சுவையான விருந்து படைத்தனர். இந்நிகழ்ச்சிக்குப் பின், விக்கிரமசிங்கபுரத்தை அடுத்துள்ள

1. விக்கிரமசிங்கபுரத்தில் முனிவரின் நினைவாக 'சிவஞான முனிவர் ஆலயம்' ஒன்று இன்றும் உள்ளது. முனிவரின் ஒன்றரை அடி உயரச் சிலையும் உண்டு. உடன் பிறந்த வழியில் வந்த 'கோபாலகிருட்டின பிள்ளை' என்பார் அக்கோயிலில் பூசகராக உள்ளார்.

யிருந்த தம்பிரான்மார்களுக்கும் முக்காளலிங்கருக்கும் நல்லதொரு நட்பு ஏற்பட்டு வளர்ந்தது. காலநீட்சியில், திருவாவடுதுறை சென்று சிவஞான உபதேசம் பெற்றுச் சிவப்பணி செய்யவேண்டும் என்ற வேட்கை இவருக்கு எழுந்தது. தன் வேணவாவைத் தன் பெற்றோர்களிடம் தெரிவித்தார் முக்காளலிங்கர். அவர்தம் பெற்றோர் அருள் பழுத்த சைவப் பெரியோர் ஆதலின் தம் மகன் மடத்தில் இணைவதற்கு உடன்பட்டனர். தம்பிரான்களுடன் தன் சைவப் பயணத்தைத் தொடங்கினர். குமரி மாவட்டம், சுசீந்திரம் என்ற திருத்தலத்தில் அவர்களுடன் சில காலம் தங்கி யிருந்தார். அப்போது திருவாவடுதுறையில் பின்வேலப்ப தேசிகர் சின்னப் பட்டத்தில் எழுந்தருளி யிருந்தார். முக்காள லிங்கர், சுசீந்திரம் ஈசான மடத்தில் தங்கியிருந்த வேலப்ப தேசி கரிடம் சமய அறிவும் தமிழ்ப் புலமையும் பெற்றார். அவர்பால் இருந்து சிவதீக்கையும், சைவத் துறவையும் மேற்கொண்டார். தீக்கைப் பெயராக 'சிவஞான யோகி' என்ற புதுப்பெயரும் சூட்டப் பெற்றது. அக்காலத்தே அவர் செந்தமிழ், வடமொழி என்ற இரு மொழிகளிலும், இலக்கணம், இலக்கியம், தருக்கம் முதலிய துறை களிலும் புலமை பெற்றுச் சிவாகமங்களிலும், திருமுறைகளிலும் சிவஞான போதம் முதலிய சித்தாந்த நூல்களிலும் மிகச் சிறந்த பயிற்சியும் புலமையும் பெற்றார். பின்னர்ப் பல்வேறு சைவத் தலங்களுக்குச் சென்று சைவத்தையும், தமிழையும் ஒருங்கே பரப்பினர். ஒருகால், முனிவர் திருப்பாதிரிப்புலியூர்க்குச் சென்றி ருந்தார். அப்போது கற்றோர் கூடிய பேரவையொன்றில் "கரை யேற விட்ட முதல்வா உன்னையன்றி ஓர் கதி யுண்டாமோ" என்ற ஈற்றடி தந்து, இதனை முழுப்பாட்டாக முடித்துத் தரு வோர்க்கு நூறு பொன் பரிசு அளிப்பதாக ஒரு பெருஞ்செல்வர் அறிவித்திருந்தார். அது கேட்ட ஓர் ஏழைப் பார்ப்பனன் முனிவரை அடைந்து, மேற்கண்டவாறு ஒரு பாட்டு வேண்டினன். அவர் உடனே ஒரு தடையுமின்றி ஒரு பாப்பாடி அருளினர். அப் பாட்டுப் பின்வருமாறு :

"வரையேற விட்டமுதம் சேந்தனிட
உண்டனை; வல்வினம் என்றுலும்
உரையேற விட்ட முதலாகுமோ எனைச்
சித்தென் றுரைக்கின் என்னும்,
கரையேற விட்டமுதல் நாள்அவனுக்
கொண்டுநறும் புரிசைமேவும்
கரையேற விட்டமுதல்வா உன்னை
அன்றியோர் கதியுண் டாமோ?"

பிள்ளையார்பாளையம் பயணம் : பின்னர், தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள பிள்ளையார்பாளையம் என்ற ஊரையடைந்து தங்கியிருந்தார். இவ்வூர், திருஞான சம்பந்தரின் நினைவைப் போற்றுமுகமாக, பிள்ளையார் பாளையம் என்று வழங்கப்பட்டது.[1] அழகான இச்சிற்றூரில் தன் வாழ் நாளின் பெரும்பகுதி தங்கியிருந்தார். அங்கே மணியப்ப முதலியார் என்ற பெருஞ்செல்வர் ஒருவர் முனிவரைப் புரந்து வந்தார்.[2] அக்காலத்தேதான் வைணவருட் சிலர் செருக்கிக் கூறிய கம்ப ராமாயணத்து 'நாடிய பொருள் கைகூடும்' என்று தொடங்கும் பாட்டிற்குக் 'கம்பராமாயண முதற் செய்யுள் கங்கோத்தர விருத்தி' என்ற விளக்கம் எழுதினர். இவ்விளக்கத்தில், மேற்கண்ட பாடலின்கண் உள்ள 22 வழுக்களை அடுக்கிக் கூறினர். வைணவர்கள் அவர்கூறும் வழுக்களுக்கு விடையளிக்க இயலவில்லை. அவர்கள், தம் தருக்கு நீங்கி முனிவரை வணங்கி மன்னிப்பு வேண்டினர். அதன் பின்னர், முனிவரே, தாம் முன்பு அப் பாடலுக்கு ஏற்றிக் கூறிய 22 வழுக்களையும் நீக்கி அமைதி காட்டினர்.

பன்னிரு மாணாக்கர் : முனிவரின் இருமொழிப் புலமையும், தருக்கத் திறனும் பலரை ஈர்த்தன. அதனால் வாய்ப்புள்ளோர், முனிவரை அணுகி மாணாக்கராய் ஏற்க வேண்டினர். இவ்வாறு வேண்டிய பன்னிருவர்க்குச் சைவத்தையும் தமிழையும் கற்பித்தனர் முனிவர். இவரிடம் பாடம் பயன்ற மாணாக்கர் திருத்தணிகைக் கச்சியப்ப முனிவர், மதுரகவி தொட்டிக்கலைச் சுப்பரமணிய முனிவர், சிதம்பர முனிவர், இலக்கணம் சிதம்பரநாத முனிவர், முத்துக்குமாரசுவாமி தேசிகர், சரவணபத்தர், இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை, திருமுக் கூடல் சந்திரசேகரமுதலியார், கரவாந்தண்டலம் அடைக் கலங் காத்த முதலியார், கடம்பார் கோயில் தானிகர் கலியாண சுந்தர உபாத்தியாயர் முதலியோராவர்.

முனிவரின் படைப்புகள் : ஏறத்தாழ இருபத்தொன்பது நூற் களை இயற்றியுள்ளார் முனிவர். இவற்றில் இலக்கணம் தொடர் பானவை மூன்று, இலக்கியங்கள் பதினைந்து; தருக்க நூல் ஒன்று; சமய நூல்கள் பத்தாம். நன்னூல் புத்தம் புத்துரை இந்நூல்களுள்

1. ஔவை துரைசாமிப்பிள்ளை, சிவஞான போதக மூலமும் சிவஞான சுவாமிகள் அருளிய சிற்றுரையும், 1968, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, ப. 53

2. முனிவர் தங்கியிருந்த மடமே 'மணியப்பன் சாவடி' என்று இன்றும் வழங்குகிறது.

குறிப்பிடத்தக்கதாம். இந்நூல்களுள் சில சமற்கிருதத்தினின்று மொழிபெயர்த்தவை ஆகும்.

முனிவர் சிவனடி சேர்தல் : தன் காலம் முழுதும் சிவப்பணி புரிந்த முனிவர், திருவாவடு துறையில் கி. பி. 17-4-1785 ஞாயிற்று கிழமை 1.40 மணிக்குச் சிவனடி சேர்ந்தார்.

சிவஞான முனிவர் உரை : பன்னூறு ஆண்டுகள் பழம் வாழ்வு வாழ்ந்து வளர்ந்த தமிழ், பாண்டிய மன்னரின் வீழ்ச்சிக்குப் பின்னர், வேற்றுப்புல, மொழி மாந்தரின் ஆளு கைக்கு ஆட்பட்டு அல்லற்பட்டது. தெலுங்கு, இந்துத்தானி, மராத்தி, ஆங்கிலத் தாய்மொழியினரின் ஆட்சியில் மாற்றுந் தாய் மனத்தோடுதான் தமிழ் கருதப்பட்டது. இந் நிலையில், தமிழுக்கு வாழ்வளித்துக் காப்பாற்றிய பெருமை சைவத்திரு மடங்களையே சேரும். நன்னூலைப் பொறுத்தவரை புத்தம் புத் துரை நல்கி, அந்நூலைச் சமயக் காழ்ப்பின்றிக் காத்த சீர்மை செந் தமிழ்ப் பண்ணையாகிய திருவாவடுதுறை ஆதீனத்திற்கு உண்டு. அம் மடத்தே விளங்கி வளர்ந்த சிவஞான முனிபுங்கவர்க்கு முற்ற உண்டு.

உரை வரைந்த சூழல் : நன்னூலுக்கு முனிவர் முற்ற உரை எழுதவில்லை. தமக்கு முன் சைவப் பெரு நாவலர் சங்கர நமச் சிவாயர் எழுதி வைத்த விருத்தியுரையை ஆங்காங்கே திருத்தம் செய்தனர். மிகச் சில நூற்பாக்களில் மேலும் தாம் வரைய நினைத்த விளக்கங்களை வரைந்திருக்கிறார். மொத்தம் 462 நன்னூல் நூற்பாக்களில் முனிவரின் திருத்தம் பெற்றவை 83 நூற் பாக்கள் தாம். அவை, பாயிரம்: 3, 10, 50; எழுத்ததிகாரம்: எழுத்தியல்: 73, 89, 91, 94, 95, 99, 106, 125; பதவியல் : 130, 132, 137, 138, 142, 145; உயிர்மயங்கியல்: 167, 173 175, 176, 177, 178, 181, 182, 194, 196, 197, 199, 201, 203; மெய்மயங்கியல் : 211, 212, 213, 214, 215, 217, 218; 220, 221, 222, 223, 226, 228, 229, 230, 234; உருபு புணரியல்: 245, 252; சொல்லதிகாரம்: பெயரியல்: 258, 260, 261, 262, 267, 270, 275, 276, 284, 285, 290, 292, 293, 295, 296, 297, 298, 299, 300, 301, 317, 318; வினையியல்: 321, 322, 339, 340, 351; பொதுவியல்: 355, 399, 415, 417; இடையியல்: 420; உரியியல்: 442, 449. இவற் றுள்ளும் செம்பாகம் மிகச் சிறிய குறிப்பளவில் தான் திருத்தம் பெற்றுள்ளன. என்றாலும் இந்த நூற்பாக்களின் விளக்கத்தினூடே முனிவர் அளித்துள்ள இலக்கண விளக்கங்கள் பெருஞ்சிறப்பு வாய்ந்தவை. முனிவர், திருத்தியும் கூட்டியும் விளக்கியும் புதுக்

கியும் அமைத்த இவ்வுரை 'புத்தம் புத்துரை' என வழங்கலாயிற்று.

இலக்கணப் புலமை : முனிவர், பழந்தமிழ் இலக்கணங்களை நன்கு கற்றவர்; தொல்காப்பிய மூலத்திலும் உரைகளிலும் தோய்ந்து திளைத்தவர். படைப்புத் துறையிலும், உரைகாணும் துறையிலும், சமயத் துறையிலும் செயற்கரிய செய்தவர். இலக்கணம் (3), இலக்கியம் (13), தருக்கம் (2), தத்துவம் (6), சமயம் (4), சம்பிரதாயம் (1) என்ற துறைகளில் இருபத்தேழு நூல்களைப் படைத்தவர்.[1] இவர் தொண்டாற்றிய முதனிலை சமயத்திற்கு உண்டென்றாலும், இரண்டாம் நிலை இலக்கணத்திற்கே உண்டு. இலக்கணத் துறையில், தொல்காப்பியப் பாயிர விருத்தி தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, நன்னூல் புத்தம் புத்துரை ஆகியவற்றை எழுதியருளினார். இவற்றுள், இவர்தம் துறைபோய இலக்கண நுணுக்க அறிவைப் புரிந்து கொள்ளலாம். இந்நூற்கள் வழி இவர் வழங்கிய புத்திலக்கணக் கொள்கைகள் பல; இலக்கணச் சிக்கல்களுக்குக் கொடுத்த தீர்வுகள் பல. தொல்காப்பியரை, நூற்பா 7, 30, 60, 107, 182, 194, 261, 267, 285, 449 ஆகியவற்றிற்கு உரை கூறும் போது, 'ஆசிரியர் தொல்காப்பியர்' என்றே மதித்துப் போற்றுவர். குறிப்பு வினைமுற்றுப் பற்றிய 321 ஆம் நூற்பாவுரையில், பல்வேறு இலக்கண விளக்கங்களை நல்கி விட்டு, "இவையெல்லாம் தொல்காப்பியக் கடலில் தோன்ற விளங்கும்" எனக் குறிப்பர். தொல்காப்பியத்தைக் கடலென்று போற்றிப் புரக்கும் முனிவரின் பேரறிவுத் திறத்தைக் காண்க. தொல். பாலைத்திணையை, நடுவு நிலைத் திணை எனக் குறிப்பதை விளக்கி எடுத்துக்காட்டி இடைச் சொல்லிற்கு விளக்கம் கூறுமிடம் கருதத் தக்கது.[2] சேனாவரையர், ஆனா வரையரென்னும் சேனாவரையத்தை வழங்கியவர். தமிழையும், வடமொழியையும் துறை போகக் கற்றவர். இவரை முனிவர் தம்முரையில் சுட்டிக்காட்டிப் போற்றுகிறார். சேனாவரையரின் உரையில் மூழ்கித் திளைத்துக் குறிப்பாக அவர் வினை விடையிறுக்கும் முறையை ஆழ்ந்து சுவைத்த பாங்கு பின்வரும் குறிப்பால் புலனாகிறது. நட, வா என்பன ஆய் என்னும் விகுதி குன்றியவை என்ற கருத்தினர் முனிவர். தொல்காப்பியரும் சேனாவரையரும் இக்கருத்தினரே என்பது முனிவர் வாதம். 'இதனை அஃது அச்சூத்திரத்தில் (தொல். எச்சவியல் 54) சேனாவரையர் கடாவிடைகளான் விளங்கக் கூறியவாற்றாலும் அறிக' என 137 ஆம் நூற்பா உரையில் குறிப்பிட்டுப் போற்றுகிறார். இவரது இலக்கண அறிவின் ஆழம், தருக்கத் திறன் ஆகியன எல்லாம் இவர் பிற உரைகாரர்களுக்கு மறுப்பு

1. சிவஞான யோகிகள் பிரபந்தத் திரட்டு, 1929, முன்னுரை 10, 11
2. தண்டபாணி தேசிகர், ச., நன். விருத்தியுரைப் பதிப்பு, 1957, 420

வழங்கும் இடங்களில் முற்ற விளங்குகின்றன. அம்மறுப்புரைகள் பற்றிய ஆய்வு தனியே இடம் பெறுகிறது.

இலக்கியப் புலமை : முனிவர் பல இலக்கியங்களைப் படைத்தவர் மட்டுமல்லர்; படித்தவர். அதுவும் தமிழ், சமற்கிருதம் இரண்டையும் முற்றக் கற்றவர். சமய இலக்கியங்களில் தோய்ந்து மூழ்கியவர். இதனை இவர் உரைகள் அனைத்தும் காட்டும். நன்னூல் புத்தம் புத்துரையும் இவரது பல்துறை இலக்கியப் புலமையைக் கடலில் மூழ்கிய பனிப்பாறை போலக் காட்டுகிறது.

திருக்குறள் : முனிவர் மிகுதியாக எடுத்தாண்ட இலக்கியம் திருக்குறள். திருக்குறளை ஆளும் இடங்கள் பின்வருமாறு : நூற்பா 95–குறட்பா 774, 169; 295–135, 321; 298–847; 299–353, 502; 302–410, 1102, 1121, 1235; 317–167; 322–187, 196; 339–653, 698, 824, 960; 351–379, 407, 466, 813 திருவாசகம் : முனிவர் சைவப் பேரிலக்கியங்களில் ஆழ்ந்தவர். ஆதலின் கல் நெஞ்சையும் உருக்கும் திறன் வாய்ந்த திருவாசகம் 346, 376, 381, 382, 385 ஆகிய பாக்களின் அடிகளை நூற்பா 137இல் எடுத்துக்காட்டாய் நல்கி இறும்பூதெய்துகிறார். திருமுருகாற்றுப்படை : மூத்த சைவ இலக்கியமாகப் போற்றப்படுவது திருமுருகாற்றுப்படை. சங்க இலக்கியத்துள்ளும் சமய இலக்கியத்துள்ளும் ஈடுபாடு கொண்ட முனிவர், 'பழமுதிர் சோலை மலை கிழவோனை'ப் பற்றிய முருகாற்றுப்படை அடிகளை 351, 353 ஆம் நூற்பாக்களில் காட்டுவர். நாலடியார் : திருக்குறளை அடியொற்றி எழுந்த அறநூல் நாலடியார். முனிவர் இந்நூல் பாக்களையும் ஆங்காங்கே ஆளுகிறார். நூற்பா 295–நாலடி. 125, 248; 339–133, 347. அழகான கருத்தாழமுள்ள வெண்பா : இவரது பாயிர உரை தனிக்கடல். அக்கடலுள் புதுச் செய்திகள் பல உள்ளன. அவற்றுள் அரிய முத்தாய் ஒரு வெண்பா உள்ளது. அவ் வெண்பா எந்நூலில் உள்ளது என்பது தெரியவில்லை; குறள், பரிமேலழகர் உரையில் காட்டப்பட்டுள்ளது. எனினும் இலக்கண, இலக்கிய அறிவு நல்லுலகத்திற்கு அழைத்துச் செல்லும் ஆற்றலுடையது என்பதனை ஒலிநயம், சொன்னயம் குன்றுத அப்பாட்டு எடுத்துக்காட்டுகிறது.

> எழுத்தறியத் தீரும் இழிசனமை தீர்ந்தான்
> மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்-மொழித்திறத்தின்
> முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
> கட்டறுத்து வீடு பெறும்

என்பது அவ்வெண்பா.

வட மொழிப் புலமை : பன்மொழிப் பயிற்சி அறிவு, மொழியில் இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் மிகப்பயன் படுவது. முனிவரின் வடமொழிப் பயிற்சி பல்வேறு சித்தாந்தத் தத்து வங்களைத் தமிழுக்கு நல்கியிருக்கிறது. அதற்கு இவரது மா பாடிய உரையே சான்று. இவரது வடமொழிப் புலமை சித்தாந்த நூல்களில் மட்டுமல்லாமல் இலக்கண நூல்களிலும் எதிரொலி செய்தலைக் காணலாம். முனிவர் வடமொழி பயின்றது, தனித்துக் கருதத்தக்க வரலாறு ஆகும். முனிவரின் வடமொழிப் பயிற்சிக்கு மிக உதவியவர் மணலிச் சின்னையா முதலியார் என்ற பெருஞ்செல்வராவர். முதலியார், சமற்கிருதம் வல்ல வேதியர் ஒருவரை அழைத்து, முனிவர்க்கு வடமொழி வேத சாத்திரங்களைப் பயிற்றுவிக்க வேண்டினர். அப்போது, அவ் வேதியர், முனிவரின் சாதி வேற்றுமை கருதி சமற்கிருதம் கற்பிக்க மறுத்துவிட்டனர். அப்போது வள்ளல் முதலியார் அதற்கு உடன்படவில்லை. கடவுள் திருவுள்ளம் அறியச் சீட்டிட்டு முடிவு செய்க எனப் பணித் தனர். அவ்வமயமும், அவ் வேதியர், சமற்கிருத சாத்திரங்களைக் கற்பித்தல் கூடாது என்றெழுதிய சீட்டு நூறும், கற்பித்தல் கூடும் என்றெழுதிய சீட்டு ஒன்றும் குலுக்கி இட்டு, ஒரு சீட்டைத் தேர்ந் தெடுத்தபோது, அச் சீட்டு 'கற்பித்தல் வேண்டும்' என்ற சீட்டாய் இருக்கவே வேதியர், முனிவர்க்குச் சமற்கிருதம் கற்பிக்க உடன் பட்டார்.[1] இவ்வாறே, சமற்கிருதம் கற்ற முனிவர், அம்மொழி யிடத்திருந்த இலக்கிய இலக்கணச் சாத்திரங்களை முற்றக் கற்றுத் தேர்ந்தனர் என்பது அவரது தமிழ் நூற்றொண்டால் புலனுகும் உண்மையாம்.

வடமொழி மதிப்பு : முனிவர், வடநூல் பல கற்றுத் தேர்ந்த வர். வடநூலினின்று பல கொள்கை நியாயங்களைத் தமிழிற்குத் தந்தவர். தமிழில் திணித்தவர். தமிழ்நூல் மரபுகள், தமிழிலக்கிய இலக்கணங்களோடு பொருந்துவதுடனன்றிவடநூல் மரபுகளோடும் பொருந்தியிருக்க வேண்டும் என்று விரும்பியவர். அவ்வாறு பொருந்தாமல் தமிழ் இலக்கணங்கள் உரைத்த இலக்கண மரபு களைப் புறக்கணித்தவர்.

'கேட்போன்' என்ற பாயிரப் பகுதிக்கு நூலரங்கேறும் அவைக் களத்து இருந்து கேட்டார் என்று இளம்பூரணர், மயிலை. ஆகியோர் உரை வகுத்தனர். இவ்வாறு உரை கோடல் வட நூலார்க்கு உடன்பாடு அன்று எனக் கூறி மேற்கண்ட உரையை மறுத்து, வட நூலார்க்கும் உடன்படும் உரையைக் கூறுவர்.[2] நச்சினர்க்கினியர்,

1. பிள்ளை, கா.சு. பதிப்பு, நன். விருத்தி, 1971, ப. 40, 41
2. தண்டபாணி தேசிகர், ச., நன். விருத்தி பதிப்பு, 1971, ப. 40, 41

மயிலை. சங். இலக்கண விளக்க நூலார் ஆகியோர் 125 ஆம் நூற் பா அ + இ > ஐ, அ + ய் > ஐ என எழுத்துப் போலியைக் கூறிய தாக உரை வகுத்தனர். இவ்வுரையை மறுத்துரைக்கிறார் முனிவர். இவை சமற்கிருத சந்தியக்கரத்தை ஒத்தவை என்று நிலைநாட்டு கிறார். அத்துடன் மேற்காணும் உரைகாரர் அனைவரும் சமற் கிருத நூற்பயிற்சி இல்லாதார் என்று சுட்டிக் காட்டுவதோடு, 'தமிழ் நூற் பயிற்சி ஒன்றுமே உடையார்' என்று இடித்துக் காட்டு கிறார். தமிழ் எழுத்துகளின் வைப்பு முறை சமற்கிருதத்தைத் தழுவியது என்பது போலவும், ஆசிரியர் பதஞ்சலியார்க்கு ஏற்ப அமைக்கப்பட்டது என்பது போலவும் 73ஆம் நூற்பாவில் உரை வகுத்துள்ளனர். பிறிதொன்று, எங்கும் சென்று வழங்குவது சமற்கிருதம் என்பதாகும்.

சமற்கிருதம் அனைத்துலகிற்கும் செல்லும் எனல்: நால்வகைச் சொற்பாகுபாட்டில் திசைச்சொல் என ஒன்றும், திசையடிப்படை யில் வகுக்கப்பட்ட வடசொல் எனப் பிறிதொன்றும் இடம் பெற்றுள் ளன. வட சொல்லைத் திசைச் சொல்லிற்குள்ளேயே அடக்கிவிட லாம். தனித்துக் கூற வேண்டியதன் இன்றியமையாமை என்ன? இவ் வினாவிற்கு முனிவர் இறுக்கும் விடை கருதற்குரியது. "ஆரியச் சொல் எல்லாத் தேயத்திற்கும் விண்ணுலகம் முதலி யவற்றிற்கும் பொதுவாதலின் அவ்வாரியச் சொல் தமிழ்நடை பெற்றதைத் திசைச்சொல் என்றல் கூடாது எனக் கோடலுமாம். அங்ஙனமாயின் வடசொல் என்றது என்னையெனின் ஆண்டுப் பயிற்சி மிகுதி பற்றி எனக் கொள்க."[1] முனிவரின் இவ்விடை விளக்கம் ஆரியமொழி மீது அவர் வைத்திருந்த மதிப்பையும் பற்றையும் காட்டுகிறது.

வடநூல் மரபுகள் கொண்டு தமிழிலக்கணப் போக்கைத் தொடங்கல்: முனிவர் பாயிர உரையில் யாப்பு, நுதலிய பொருள், கேட்போர், பயன் ஆகியவற்றிற்கு இணையான வட சொல் வழக்காறுகளைக் காட்டுவர். "வடநூலார், யாப்பை 'ஆனந்தரியம்' என்றும், நுதலிய பொருளை 'விடயம்' என்றும், கூறுப" என விளக்குவார். எழுத்ததிகாரத் தொடக்கத்தில் இவர் தரும் விளக்க உரை வடமொழிச் சார்பினது. அதிகாரம் என்பது இருவகை. அவற்றுள் ஒன்று, வேந்தன் இருந்த இடத்திலேயே இருந்து தன் ஆட்சி எல்லை முழுதும் ஆணை செலுத்தல் போல, ஒரு சொல் ஓரிடத்து நின்று, பல சூத்திரங்களும், பல ஒத்துகளும் தன் பொருளை கூறி வரச் செய்வது. இதனை வடநூலார் 'யதோத்

1. நன். விருத்தி, 270

தேச பக்கம்' என்று வழங்குவர். பிறிதொன்று, சென்று நடத்தும் தண்டத் தலைவர் போல, ஓரிடத்து நின்ற சொல் பல சூத்திரங்களோடும் சென்று இயைந்து தன் பொருளைப் பயப்பிப்பது. இதனை வடநூலார் 'காரியகால பக்கம்' எனக் குறிப்பர். இவ்விரு விளக்கங்களும் எழுத்ததிகார முகப்பாகச் சிவஞான முனிவர் அமைக்கிறார். ஐகார விகுதி செயப்படு பொருண்மையை உணர்த்தும். எடுத்துக் காட்டு: உடுக்கை, சேர்க்கை. இகர விகுதி வினைமுதற் பொருண்மை உணர்த்தும். எடுத்துக் காட்டு: சேர்ந்தாரைக் கொல்லி, நூற்றுவரைக் கொல்லி. இவ்வாறு குறிப்பிட்ட வினைப்பெயர் விகுதிகள் சிறுபான்மை பிற பொருள் உணர்த்தியும் வரும். இவ்வாறு நியமம் தப்பி வரும் முறை வடநூலிலும் உண்டு என்று முனிவர் எடுத்துக் காட்டுவர்.[1] தொடர் மொழி வடநூலார் கூறியவாறே அவாய் நிலைய லும் அண்மையானும் தகுதியானும் தொடரும் எனவும் அவற்றிற்கு உதாரணம் முறையே ஆற்றங்கரைக்கண் ஐந்து கனிகள் உளவாகின்றன, நீரால் நனை, அறம் வேண்டி அரசன் உலகம் புரந்தான் எனவும் அமைவதை முனிவர் தம் விளக்கத்தில் கூறுவர்.[2] ஆறும் வேற்றுமையை முனிவர் வடமொழிப் பின்புலங்கொண்டு மிக விரிவாய் விளக்குவர். ஆறும் வேற்றுமைப் பொருளாகிய முறைப் பொருள், ஒற்றுமை, வேற்றுமை என இருதிறம். அவற்றுள் ஒற்றுமை, ஒரு பொருளே. வேற்றுமை, மூவகைப்படும். அவை: ஒன்றுய்த் தோன்றல், உரிமையாய்த் தோன்றல், வேறுய்த் தோன்றல் என்பன. இம்மூவகை வேற்றுமையை வடநூலார் நூற்றிருபது பேதமாக்குவர் என முனிவர் சுட்டி உரைக்கிறார்.[3] முனிவர் இவ்வாறு வடமொழி என்றே வடநூலார் என்றே சுட்டியுரைக்கும் இடங்கள் தவிர, வடமொழி இலக்கண மரபுகளைக் கற்றுச் செரித்துத் தமிழிலக்கண மரபுகளோடு கூட்டிக் குழைக்கும் இடங்களும் பல இருத்தல் வேண்டும்; பல இருக்கின்றன.[4]

முனிவர் காட்டும் உத்தி முதலியன : மாதவச் சிவஞான முனிவர் தாமே உரையெழுதாது, தமதாய்வுக் கருத்துகளைச் சங். உரையில் இடம் பெறச் செய்தமை, சங்கர நமச்சிவாயர் இடம் முனிவர் வைத்திருந்த விலாதிக்க ஒண்ணு மதிப்பைப் புலப்படுத்துகிறது. முனிவரால் மதிக்கப்படும் அளவுக்கு ஆழ்ந்தகன்ற

1. நன். விருத்தி. 145
2. நன். விருத்தி 260
3. மே. கா. நூ. 300
4. மே. கா. நூ. 295, தண்டபாணி தேசிகர் அடிக்குறிப்பு

உரையைச் சங். நல்கினர். உத்தி, அழகு முதலானவற்றை முற்ற இலக்கணத்தோடு முதலிற் பொருத்திக் காட்டியவர் சங். ஆதலின் இவற்றைப் பொருத்தி உரைக்கும் பொறுப்பு, முனிவர்க்கு குறைவாகவே இருந்தது. என்றாலும் ஆங்காங்குச் சிற்சிலவற்றை மட்டும் நூலோடு பொருந்த முனிவர் உரைக்கின்றனர். அவை யாவன: உத்தி: இரட்டுற மொழிதல் – (399, 402); குற்றம்: கூறியது கூறல் (பாயிரம், 29); மாறுகொளக் கூறல் (116, 293, 44), மதம்: பிறர் நூற் குற்றங் காட்டல். இவையன்றி, நன்னூலார் கூறியன நீங்கலாகத் தொல்காப்பியத்துள் கூறப்பட்டனவாக முனிவரே தம்முரையில், மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல் [நூற்பா உரை 73, 94] உரையில் கோடல் [98, 295, 314] ஆகியவற்றையும் காட்டுவர்.

மொழி நடை: "தெளிவுந் திட்பமும் உடைய செய்யுள் இயற்றுவதிலும், சிறந்த உரை நடை யாள்வதிலும் இவர் இணை யற்றவர். பிற்காலத்துப் பெரும் புலவர் யாவரும் இவர் உரை நடையைப் பெரும்பான்மையும் தழுவியே செவ்விய செந்தமிழ் வாசக நூல்கள் வகுத்தனர். செந்தமிழில் உரைநடை கைவந்தவர் களுள் தலைசிறந்தவர் இவரே. உரைத் தலைவரும் இவரே. ஆதலின், இவரை உரை மன்னர் எனலாம்" என, கா. சுப்பிர மணிய பிள்ளை, முனிவரைப் போற்றிப் புகழ்கிறார்.[1] நடையின் முதற்சிறப்பு தெளிவு; தருக்கத்தின் தலைச்சிறப்பு துணிவு. இத் தெளிவும் துணிவும் இவர் நடையின் தனித்தன்மைகள். இவ் விரண்டனுக்குக் காரணங்கள் கூர்த்த மதியும், ஆழ்ந்த புலமை யுந்தான்.) இவ்விரண்டும் முனிவரிடம் ஒருங்கே அமைந் திருந்தன.

பொருள் தன்மையை வரையறுக்குங்கால், "பொருள் தன்மை யாவது ஒரு பொருட்குக் கேடு பிறந்தாலும் தனக்குக் கேடின்றித் தான் ஒன்றேயாய்ப் பலவகைப்பட்ட பொருள்தோறும் நிற்கும்."[2] என்பர்.

நான்காம் வேற்றுமை வழக்கு, உரிமை, அச்சம், பாவனை என்ற நான்கு பொருள்களுள் வரும் அழகை, "முதல் என்றதனால் மருகனுக்கு மகள் கொடுத்தான் என்பது வழக்கு. மகனுக்கு அரசு கொடுத்தான் என்பது உரிமை. அரசர்க்குத் திறை கொடுத்தான்

1. பிள்ளை, கா.சு. சிவஞான முனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும் ப. 3
2. தண்டபாணி தேசிகர், தன். விருத்தி, 257

என்பது அச்சம். தந்தை தாய்க்குத் திதி கொடுத்தான் என்பது பாவகீன"[1] என்று காட்டுவர்.

ஒன்றுபோல ஒற்றுமை நயம் மிக்குள்ள இரண்டு அல்லது பல இலக்கணக் கூறுகளை வேறுபடுத்தி விளங்கலும் அரிது; விளக்கலும் அரிது. இத்துறையில் முனிவர் துறைபோனவர். இவ்வாறு ஒன்றுபோலக் கிடக்கும் இலக்கணக் கூறுகளைப் பிரித்து விளக்கங் காட்டுதலை நூலெங்கும் காணலாம். அவற்றுள் சிறப்பாய சில:

குறிப்பு வினை—குறிப்பு வினையாலணையும் பெயர்க்கும் இடையே உள்ள வேறுபாடு: குறிப்புவினை, குறிப்பு வினையாலணையும் பெயர் என்ற இரண்டும், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறன் அடியாகவே தோன்றுகின்றன. அங்ஙனமாயின் இரண்டிற்கும் இடையே உள்ள வேற்றுமை யாது? முனிவர் வேற்றுமையைப் பிரித்துக் காட்டுகிறார்: "வினைக் குறிப்பு சொல்லெல்லாம் தெரிநிலை வினைபோல முதல் நிலையில் பொருள் சிறந்து நிற்கும்; வினைக் குறிப்புப் பெயர்ச்சொல் அவ்வாறன்றி விகுதியில் பொருள் சிறந்து நிற்கும்."[2] ஆகு பெயர் – அன்மொழித் தொகை: இவ்விரண்டும், தம் பொருள் உணர்த்தாது பிறிது பொருள் உணர்த்துதலான் ஒக்கும். அவற்றின் இடையே உள்ள வேற்றுமை: "ஆகுபெயர் ஒன்றன் பெயரால் அதனோடு இயைபு பற்றிய பிறிதொன்றனை உணர்த்தி ஒருமொழிக்கண்ணதாம்; அன்மொழித் தொகை இயைபு வேண்டாது இருமொழியும் தொக்க தொகையாற்றலால் பிறிது பொருள் உணர்த்தி இரு மொழிக் கண்ணதாம்; இவை தம்முள் வேற்றுமை என்க." நுணுக்க விளக்கம்: இன் என்பது இறந்தகால இடை நிலை களுள் ஒன்று. இவ்விடை நிலை போயினென் போன்ற சொற்களில் முழுமையாய் வரும். ஆயினும் முழுமையாய் வாரா இடங்களே வழக்காற்றில் மிகுதி. இவ் விலக்கிய நுணுக்கத்தை அறிந்து விளக்கந் தருகிறார் முனிவர். அவர்தரும் விளக்கம்: "இன்னிடை நிலை, எஞ்சியது எனக் கடை குறைந்தும், போனது என முதல் குறைந்தும் வரும்."[3] இடைச்சொல: "முற்கூறிய பெயர்ச்சொல் வினைச் சொற்களும் ஆகாது அவற்றின் வேறும் ஆகாது இடை நிகரனவாய் நிற்றலின் இடைச்சொல் எனக் காரணக் குறிபெற்றன. இது பாலைத்திணை நடுவு நிலைத் திணை எனப் பெயர் பெற்றது. போலும் என்க"[4] என்ற இடைச்சொல் பற்றிய விளக்கமும், இவ்

1. நன். விருத்தி, 298
2. நன். விருத்தி, 132
3. நன். விருத்தி, 142
4. நன். விருத்தி, 420

விளக்கத்தைத் தொடர்ந்து அவர் எழுதும் விரிவும் போற்றற் குரியன.

முனிவர் கூர்த்த மதியினர்; சீர்த்த பண்பினர். காட்டாக, "அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே" என்ற நூற்பாவிற்கு, மயிலையும் சங். உம் ஒத்த பொருள் கண்டனர். மேற்கண்ட நாற்பொருளையும் பெறுதல் நூற்குப்பயன் என்பது அவர்தம் உரை. இச்சுருக்க உரைக்கு மேலான நுணுக்க உரை கண்டு காட்டுவர் முனிவர். அறம் பொருள் இன்பம் மட்டு மன்றி முடிவான முற்றுன வீட்டையும் அடைதல் என்ற கருத்துத் தொனிக்க உரை வரைவார்: "நான்கும் என்னும் செவ்வெண்ணில் தொகையோடு முற்றும்மை விகாரத்தால் தொக்கன" என்பது முனிவரின் சுருக்க நுணுக்கம். முற்றும்மை தொக்கது என்று கொள்ளாவிடின் அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றுள் சில மட்டும் பெறுதலே நூற்பா குறித்ததாகிவிடும். நூற்பாவின் கருத்து அதுவன்றுதலால், நான்கும் முற்றக் கிட்டும் என்ற கருத்தில் முனிவர் மேற்கண்டவாறு விளக்கியுள்ளார்.

பகுத்தறிவு என்னும் ஆறும் அறிவுடைய மக்களையும் சேர்த்து பவணந்தியார் ஐயறிவுயிர் என நூற்பா யாத்தனர் (44). "மக்கள் தாமே ஆறு அறிவு உயிரே" என்ற தொல்காப்பியர் கருத்துக்கு இது முரண். முனிவர் இம் முரணுக்குப் பொருத்தமான அமைதி காட்டுவர். "மக்கள் முதலியோர் மன அறிவோடு ஆறறிவுயிர் என்பது நோக்கி அன்றே முன்னர், 'மக்கள் தேவர் நரகர் உயர் திணை' (26) எனக் கூறிப் போந்ததூஉம், ஆதலின் இங்ஙனம் ஐம்புலன் மாத்திரையே நுகரும் அறிவுடைய மக்கள் முதலியோரை விலங்கு முதலியவற்றோடு எண்ணி ஐயறிவுயிர் எனக் கூறினர் என உய்த்துணர்ந்து கொள்க" எனக் காட்டுவர் முனிவர். தொல் காப்பியர் மனனுணர்வுடையவர் மக்கள், புலனுணர்வு மட்டும் உடையவர்கள் மாக்கள் எனப் பாகுபடுத்தி ஓது கின்றார்ஆதலின் இவரும் அக்கருத்தே பற்றிக் கூறினர் எனக் கருத்தொற்றுமை காட்டுவர் முனிவர்.

எடுத்துக்காட்டில் புதுமை: நூற்பாக்களுக்குக் காட்டு நல்கும்போது தம் முணர்வையும் காட்டி, எடுத்துக்காட்டுவது உரைகாரர் வழக்கம். சமணர், சமண சமய, இலக்கிய வழக்காறு களை நினைவு கூர்வதும், சைவர், சைவ சமய இலக்கிய வழக்காறு களை நினைவு கூர்வதும் இயல்பு. முனிவர், சைவ சமய உணர்வினர், உளத்தினர். இது அவர் புத்துரை எங்கும் புலப்படும். இதனினும் தனித்தன்மை வாய்ந்த முறையில் ஓர் எடுத்துக்காட்டை நல்கி

யிருக்கிறார். ஒரு நூற்பாவிற்குக் காட்டும் எடுத்துக்காட்டுகளை ஒரு கதை போல - நிகழ்ச்சி போல—எடுத்துக்காட்டல் இவர் புத்துரையில் காணும் ஒரு புதுமை. பெயரே ஐ ஆல் கு இன் அது கண் என்ற வேற்றுமை உருபுகள் அனைத்தும் ஒரே நிகழ்த் தொடருள் வருமாறு முனிவர்காட்டும் எழுத்துரை வருமாறு:

> "நாரா யணன் பூ ஓரா யிரத்தைக்
> கரத்தாற் கொய்தோ ராற்கே கொடுத்துச்
> சக்கரச் சிறுமையின் நீங்கி நற்சுவை
> பாற்கடற் கண்ணே பள்ளி கொண்டான்"[1]

இப்பா, இலக்கணக் கொத்து 15-ஆம் சூத்திரமாகும். ஆதீன ஆசிரியர் சுவாமிநாத தேசிகர்பால், முனிவர் கொண்டிருந்த மதிப்பு இவ்வாறு அவர் நூலிலிருந்து எடுத்துக்காட்டைக் காட்டக் காரணமாம்.

முனிவரின் தமிழ் நடை தனித்தமிழில் இயலுவது; நுணுக்க விளக்கங்கள் செறிந்தது; தருக்கத்திறன் நிறைந்தது; சிக்கலற்றது; தெளிவுடையது; மேற்கோள் நிறைந்தது; பதினெட்டாம் நூற்றாண்டின் உரைநடை வரலாற்றில் குறிப்பிடத்தக்க சீர்மை வாய்ந்தது.

மறுப்பு முறைகள்: முனிவர் உரை காணுவதில் புதுப்போக்கினர்; புது நோக்கினர். இப் போக்கிலும் அவரது வடமொழி அறிவு குழைந்திருக்கும். இக் குழைவே முன்னோர் சிலர் உரையை மறுக்கும் வாய்ப்பை இவருக்கு உண்டாக்கியது. மறுப்பு எழுதுவதிலும் கண்டனம் எழுதுவதிலும் இவர் பெயர் பெற்றவர். இலக்கண விளக்கச் சூறாவளி, சமவாத வுரை மறுப்பு, திருவாவடுதுறை மரபட்டவகை மறுப்பின் மறுப்பு ஆகிய நூல்கள் முனிவரின் வாதிடுந் திறனை விளக்குவன. தருக்க நூற் பயிற்சி மிக்குடையவராதலின் இவர் மறுப்புகளில் தருக்கத்திறன் பின்னிக் கிடக்கும். இவ்வழகால் முனிவருடைய நன்னூல் புத்தம் புத்துரையும் பொலிவு பெற்றிருக்கிறது. மறுக்கும்போது, மறுப்பிற்காளாவோரைச் சற்றுச் சுடுசொற்களால் முனிவர் குறித்து விடுதல் உண்டு. "இக் கருத்தறியாத உரையாசிரியரை உள்ளிட்டோரெல்லாம்" என்று 'கருத்தறியாத' எனப் பாயிர உரையில் காட்டுவதும்[2], சந்தி அக்கரம் எனக் கொள்ளுதற்கு மாற்றாக எழுத்துப் போலி உரை வழங்கிய சங். முதலானோரைத் "தமிழ்நூற் பயிற்சி

---

1. நன். விருத்தி, 292
2. நன். விருத்தி. ப. 41

ஒன்றுமே உடையார்'' என்று 125-ஆம் நூற்பா உரையில்குறிப் பதும் காண்க. தொல். பெயரியல் 28-ஆம் நூற்பாவுக்குச் சேனா வரையரும், நச்சினார்க்கினியரும் விசேடண இலக்கணத்தை ஒட்டி உரை கூறினர். இவர்தம் உரையை நன். 284-ஆம் நூற்பா உரையில் முனிவர் மறுத்துரைக்கும்போது அவர் தம்மை, ''தோன்றியவாறே விசேடண இலக்கணம் சிதைத்து இடர்ப் பட்டு உரை கூறுவார்'' என உரைப்பர். மறுப்புரை நல்கும்போது, மறுப்புக்குரியாரைப் பொதுவாகப் பெயர் சொல்லி மறுத்தல் பண்டை உரையாசிரியர் நெறி அன்று. மாறுக, முனிவர், ''நச்சினார்க்கினியர், சேனாவரையர், பரிமேலழகர், உரையாசிரியர் முதலாயினோர் ... தமக்கு வேண்டியவாறே பொருளெழுதிச் சொற்குணம் வாளா போயினர்'' என்று காட்டுவர்.

மறுப்பில் மற்றுமொரு புதுமை: சங். உரையை ஒட்டி முனிவர் உரை விளக்கம் தர எண்ணியது ஒரு பெரும் புதுமைதான். இதற்குக் காரணங்கள் (அ) இருபேருரையாசிரியரும் பாண்டி நாட்டு நெல்லை மண்ணினராயும், (ஆ) நெல்லை வேளாளராயும், (இ) திருவாவடுதுறை ஆதீனத்தோடு தொடர்புள்ளோராயும் இருந்தமையும் ஆதல் கூடும். இங்ஙனம்; சங். உரையை மதித்து முனிவர் புத்தம் புத்துரை வழங்கினர் எனினும், அவ்வுரையில் வேண்டாப் பகுதிகளை விலக்க அஞ்சினரில்லை. திருத்தத் தயங்கி னரில்லை. இவ்வாறு திருத்தியும் விலக்கியும் கூறப்பட்ட பகுதிகள் 138, 182, 194 நூற்பாக்களுக்கு எழுதப்பட்ட உரையைப் பார்த்தால் புலப்படும். இதனினும் மேலாக, சங். உரையை அங்ஙனமே வைத்து அதற்கும் சேர்த்து மறுப்புரைகளை முனிவர் எழுதிய இடங்களும் உள்ளன. 125, 128, 293ஆம் நூற்பாக்களில் முனிவரின் தருக்க மறுப்புகள் சங். உரைக்கும் சேர்த்துக் கொடுக்கப் பட்டனவேயாம்.

நூலுரையுள், முனிவர் பதின்மூன்று இடங்களில் பிற உரையா ளர்க்கு எதிர்ப்புரை கூறியிருக்கிறார். அவ்விடங்களாவன: பாயிரம், 94, 125, 128, 137, 138, 182, 194, 284, 290, 293, 295, 339. இம் மறுப்புகளின் கருத்துகள் அனைத்தும் ''நன்னூல் உரையாசிரியர் களின் கருத்து வேறுபாடுகள்'' என்ற அதிகாரத்தில் தனியே ஆராயப்படுகின்றன.

உரையால் விளங்கும் அரிய செய்திகள்: அத்திரி கோத் திரத்தில் பிறந்த அத்திரையன் பேராசிரியன் எழுதிய 'வலம்புரி முத்தின்...' எனத் தொடங்கித் 'தொன்னூற் புலமைத் துணிபுனர் வோரே' என முடியும் 33 அடிகளையுடைய

பொதுப்பாயிரம் வழக்கில் இருந்தமை,[1] இப்பாயிரத்தில் ஆசிரிய, மாணவ, பாடங்கோடன் முறை பற்றிய கருத்துரைகள் இடம் பெற்றுள்ளமை,[2] முத்தமிழுள் ஒன்றுகிய இயற்றமிழுக்கு 'எழுத்து' எனப்பெயர் வழங்கியமை,[3] வீடு என்பதற்கு 'வீடு அடைதல்' எனப் பொருள் காட்டியமை,[4] தமிழ் நெடுங்கணக்கு வைப்பு முறையை விரிவாக முதன் முதலாக எடுத்துரைத்தமை,[5] பாணினிய பாஷ்ய ஆசிரியர்களுள் ஸகயடனும் ஒருவர் எனக் காட்டியமை,[6] உயிர்மெய் எழுத்துகள் ''உருவு திரிதலுப் புள்ளி பெறுவன புள்ளி பெற்றும்' மேலுங் கீழும் விலங்கு பெறுவன விலங்கு பெற்றும், கோடு பெறுவன கோடு பெற்றும், புள்ளியும் கோடும் உடன்பெறுவன உடன் பெற்றும் வருவனவாம்'' எனக் குறிக்கின்றமை,[7] உயிர்மெய் நெடிலைக் குறிக்க [பண்டு புள்ளியிட்டு வழங்கினர்] முனிவர் காலத்தில்தான் 'கால்' இடும் வழக்கம் வந்துள்ளமை,[8] கத்தரிக்காயைப் புழுவோடு தெரியாமல் கறிக்கின்றமை,[9] சிவனுக்கு, மால் கண் கொடுத்தமை; மாற்றுகச் சிவன் அரிக்குச் சக்கரம் அளித்தமை,[10] வீட்டுச் சுவரில் சித்திரம் தீட்டியமை,[11] மாணிக்கனை ஆசிரியன் கசை கொண்டு அடித்தமை,[12] திருடருக்குத் தண்டனையாகக் கசையடி தந்தமை,[13] ஞானசம்பந்தரது தேவாரம் 'சம்பந்தனது தமிழ்' எனப் போற்றப் பட்டமை[14] முதலியன அவர் தரும் சில செய்திகளாம்.

உரையில் உள்ள ஒரு குறை : பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில், சைவ மடங்கள், சமயத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கருதிப் புரந்தன; போற்றின. இவ்வாறு புரந்து போற்றிய ஆதீனங்களுள் திருவாவடுதுறை ஆதீனமும் ஒன்று. நன்னூலுக்கு உரை வழங்கிய சங்கர நமச்சிவாயரும், சிவஞான முனிவரும் இம்மடத்தின் தொடர்பு உடையவர்கள். முனிவர்

1. நன். விருத்தி, ப. 5
2. நன். விருத்தி, ப. 5
3. மே. கா. நூ. ப. 12
4. மே. கா. நூ. ப. 12
5. மே. கா. நூ. 78
6. மே. கா. நூ. 73
7. மே. கா. நூ. 89
8. மே. க. நூ. 89
9. மே. கா. நூ. 296
10. நன். விருத்தி, 298
11. மே. கா. நூ. 298
12. மே. கா. நூ. 298
13. மே. கா. நூ. 298
14. மே. கா. நூ. 300

ஆதீனத் தம்பிரான்களுள் ஒருவராகவே இருந்தவர். சங். திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த சுவாமிநாத தேசிகரின் அருமந்த மாணாக்கர். இதனால் இம் மூவருள் ஓர் இலக்கணச் சங்கிலி அமைத்து கிடந்தது. தேசிகரின் ஆணைக்கிணங்க, சங். நன்னூல் உரை இயற்றியதும், அவரியற்றிய உரையைத் திருத்திப் புதுக்கி முனிவர் அமைத்ததும் தொடராக்கிக் கருதத்தக்கன. இவற்றுள், முனிவர் புதுக்கிய சங். உரைப்பகுதிகளுள் சில இடங்கள், தேசிகரின் இலக்கணக் கொத்துரைப் பகுதிகளை அப்படியே ஒத்துள்ளன. தமக்கு முன்னோடியாய் விளங்கிய தேசிகரின் கருத்துகளை முனிவர் வேற்றுமை பாராட்டாமல் தம் உரையினுள்ளும் பயன்படுத்தினர் போலும். 292—15; 295—14, 15, 16; 296—31; 297—36; 298—36; 300—40; 301—42, 52—58; 302—52; 317—32, 33; 322—விஞ 3; 339—21.[1] (முன்னுள்ள எண்கள் முனிவர் நூற்பா வுரையையும் பின்னுள்ள எண்கள் இலக்கணக் கொத்துரை எண்களையும் குறிப்பன) ஆகியன அவ்வாறு ஒத்துள்ள பகுதிகள்.

தேசிகர் பதினேழாம் நூற்றாண்டினர். முனிவர் பதினெட்டாம் நூற்றாண்டினர். ஆதலின், பின்னவர், முன்னவர் உரைப்பகுதிகளை அப்படியே எடுத்தாண்டுள்ளார் என்பது தெளிவு. இஃது முனிவரின் தனித்தன்மையைக் (Originality) குறைத்து மதிப்பிட வைக்கிறது. எனினும் இவ்வாறு எடுத்தாண்டமை, முனிவர், தேசிகரின் உரைபை மிக மதித்தமையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது என்று அமைதி கொள்ளலாம்.

முடிப்பு : (முனிவர் எழுதிய உரை, நூல் முழுவதற்கும் இல்லை. அவர் உரை யெழுதிய நூற்பாக்கள் குறைவு. எனினும் அவற்றின் மூலமாக அவர் வழங்கிய செய்திகள் பல. அவர் உரையில் காணப்படும் தனித்தன்மைகள் சிறப்பானவை. புது விளக்கங்கள் வழங்குதல், வடமொழி அறிவோடு தமிழிலக்கணக் கூறுகளை விளக்குதல், மறுப்புகளைத் தருக்க நெறியோடு தருதல் ஆகியன முனிவரின் தனிப்பாங்குகள்.)

1. நன். விருத்தி, பக். 385, 392, 395, 399, 401, 407, 409, 412, 428, 442, 464

11

கூழங்கைத் தம்பிரான்

(கி.பி. 1699—1795) : இவருக்குக் கூழங்கையர் என்றும், கூழங்கைத் தம்பிரான் என்றும் பெயர்கள் நிலவின. காஞ்சிபுரம் வேளாளர் குடியில் பிறந்தவர். தமிழிலும் வடமொழியிலும் வல்லவர். இளைய பருவத்திலேயே கல்வி மேதையாக இலங்கியதால் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவத்தூர் மடத்தம்பிரான ஆசிரியராகக் கொண்டு அவரிடம் தத்துவ இயலும், இறையியலும் பயின்றார். இவரது பேராற்றலைக் கண்டு தம்பிரான்கள், இவரைத் தம் மடத்திலேயே தங்க வைத்துக் கொண்டனர். இவர் அங்கேயே பலருக்குப் பாடம் பயிற்றுவித்து வந்தனர். இவரது பயிற்றுவிக்கும் திறமையையும், அறிவாற்றலையும் கண்ட மாணாக்கர் இவரையே சுற்றிச் சுற்றி வந்தனர். இவரது செல்வாக்குப் பெருகுவதைக் கண்ட மற்றத் தம்பிரான்கள் பொறுமை கொண்டனர். இவர் மீது பொய்ப்பழி சுமத்தினர். கண்டிகை ஒன்று களவு போனது என்று குற்றஞ்சாட்டினர். 'நும்பால் சாற்றப் பெற்றுள்ள குற்றத்தை நீ செய்யவில்லையானால் நெருப்பில் காய்ந்து சிவந்த இரும்பை உன் வலக்கையிலே எடுத்து உன் குற்றமற்ற தன்மையை நிறுவிக்காட்டு' என்றனர். அவ்வாறு செய்வதாக உடன்பட்டார். காய்ந்த இரும்பை வலக்கையால் தூக்கினார். கை நன்கு வெந்து கூழாகிவிட்டது. அது முதலாக இவருக்குக் கூழங்கைத் தம்பிரான் என்றும் கூழங்கையார் என்றும் பெயர் வந்தது. பழைய இயற்பெயர் மறைந்து புதுப்பெயர் நிலைத்து விட்டது.

இந்நிகழ்ச்சி அவரை மிக வாட்டி இருத்தல் வேண்டும். இதன் விளைவாக சைவ சமயத்தை இவர் வெறுத்துவிட்டார் எனலாம். உடன் புறப்பட்டு இலங்கை யாழ்ப்பாணம் சென்றார். அங்கு வைத்தியலிங்கச் செட்டியார் என்பார் இவரைப் புரந்தார்.

கூழங்கைத் தம்பிரான்–ஆசிரிய-மாணாக்கர் பரம்பரை விளக்கம்





அடிப்படை : மயிலை சினி. வேங்கடசாமி, 19ஆம் நூற்றாண்டில் தமிழிலக்கியம் ப. 312

தொடக்கத்தில் அவருடைய புதல்வர்களுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்தார். அதன் மூலம் இவரது அறிவாழம், பெரும் புலமை, ஈழ நாடெங்கும் பரவின. இவரிடம் பலர் கல்வி கற்றனர். ஆறுமுக நாவலரின் தந்தையார் ப. கந்தப்பிள்ளை (1760–1842) ஈழநாட்டு மாதகல் என்ற ஊரினரான மயில்வாகனப் புலவர் (1778–1816) ஆகியோர் இவருடைய மாணாக்கரே. கொழும்பு நகரெங்கும் இவர் பெயர் பரவிற்று. கிறித்தவப் பாதிரி மார்களின் உறவும் பல்கிற்று. கபிரியேல் பச்சேக்கோ (Rev. Gabriel Pacheco) இவரிடம் தமிழ் பயின்றார். தேவப் பிரசைகளின் திருக்கதை (History of the people of god) என்ற நூலை இவர் எழுதுவதற்கு ஆற்றலைத் தந்தவர் கூழங்கையரே. இறுதிக் காலத்தில் கிறித்தவம் தழுவிய இவர் யோசேப் புராணம் எனும் காவியத்தை 21 காண்டங்களில் 1023 பாக்களில் வடித்துள்ளார். இந்நூல் முற்றக் கிடைக்கவில்லை. இந் நூலிலிருந்து ஆற்றுப் படலத்திலுள்ள நான்கு பாடல்களையும் ஆங்கில மொழி பெயர்ப்போடு எடுத்துக் காட்டிப் பாராட்டுகிறார் தமிழ்ப் புளூடார்க் ஆசிரியர் சைமன்.[1] டச்சு, போர்ச்சுக்கீசிய மொழிகளிலும் வல்லாண்மை பெற்ற இவர், யாருக்கும் அஞ்சாதவர்; நடுவு பிறழாதவர். இவர் அஞ்சாமையைச் சுட்டும் நிகழ்ச்சிகள் சில சொல்லப்படுகின்றன.[2] நல்லூர்க் கவிவெண்பா, கூழங்கையார் வண்ணம், சித்தி விநாயகர் திருவிரட்டை மணி மாலை ஆகியன இவர்தம் பிற நூல்கள். இவர் இயற்றிய சில தனிப் பாடல்களும் உள்ளன.[3] யாழ்ப்பாணம் கண்டிக்குழை சீவ்ய தெருவில் வாழ்ந்து வந்தார். நன்னூலுக்கு ஒரு விருத்தியுரை வழங்கிய இவர், யாழ்ப்பாணம் பிரிட்டிஷாரிடம் வீழ்ந்த 1795-ஆம் ஆண்டில் இறந்து போனார். இவருடைய கல்லறை நெல்லூர்ப் பங்கில் உள்ள ஈழத்துத் திருநெல்வேலியில் உள்ளது. இவர் கல்லறையில் அமரச் செய்து புதைக்கப்பட்டது பற்றி, தவத்திரு. இராபர்ட், "Oriental Illustrations of the Sacred Scriptures" (Robert) எனும் நூல் பக். 20–இல் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"Some of those who are reported to be very holy are buried in salt, and in a sitting posture, so that they are considered to be still at their devotions. Thus Koonakai tambiran of Jaffna was buried."[4]

---

1. சைமன் காசிச்செட்டி, தமிழ்ப் புளூடார்க், ப. 56
2. இராமசாமிப் புலவர், அ., தமிழ்ப் புலவர் வரிசை, நான்காம் புத்தகம், 1953, ப. 78
3. குமாரசாமிப் புலவர், சுன்னாகம், அ., தமிழ்ப்புலவர் சரித்திரம், ப. 106
4. Simon Casie Chetty, The Tamil Plutarch, p. 57

இத்துணைப் பெருமைகள் கொண்ட இவர் நன்னூலுக்கு விருத்தியுரை ஒன்று எழுதினர்[1]. அவ்வுரை இப்போது கிட்ட வில்லை. இவர், சிவஞான முனிவரை அடுத்தே உரையெழுதியிருத் தல் வேண்டும். ஏனெனில், கூழங்கைத் தம்பிரான் மறைவதற்கு (1795) முன்னரே 17-1-1785 இல் சிவஞான முனிவர் சிவனடி சேர்ந்தார் என்று அவர் தம் வரலாறு குறிப்பிடுகிறது.[2]

வைத்தியநாத தேசிகர் உரை: இலக்கண விளக்க ஆசிரியர், வைத்தியநாத தேசிகர், முதலில் நன்னூற்குச் சைன முனிவர் தக்கவுரை அன்று என்று கண்டு, தாமோர் உரை எழுதினர். பின்னர், பல இடங்களில் நன்னூலோருடன் தம் கோட்பாடு வேறு பட்டமையின் 'இலக்கண விளக்கம்' என்ற தனி நூலைச் செய்தனர்[3]

1. குமாரசுவாமிப் புலவர், சுன்னகம், தமிழ்ப்புலவர் சரித்திரம், 1916 ப.106
சாமிநாதையர், உ.வே., சங். உரைப்பதிப்பு, 1953, ப. 7
2. தண்டபாணி தேசிகர், தன். விருத்தியுரைப் பதிப்பு, 1971, ப. 23
3. தாமோதரம் பிள்ளை, சி., தாமோதரம் 1879, ப. 76

12

விசாகப் பெருமாளையர்

பத்தொன்பதாம் நூற்றாண்டு அரசியல், சமூக சமயச் சூழ்நிலைகள்; இலக்கிய இலக்கணங்களைத் தோற்றுவிப்பதிலும், அவற்றைக் குறிப்பிட்ட போக்குகளில் ஆற்றுவிப்பதிலும் அரசியல், சமூக, சமயச் சூழல்கள் பெரும்பங்கு பெற்றிருக்கின்றன. இலக்கியத் துறையில் ஏற்படும் மாற்றங்களை, ஏற்ற இறக்கங்களைச் சமூகப் போக்கே நிருணயிக்கின்றது; நெறிப்படுத்துகின்றது. நன்னூலுக்கு, முன்பு எழுதப்பட்ட உரைகளைக் காட்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிகுதியான உரைகள் எழுதப்பட்டன. பல பதிப்புகள் அச்சிடப்பட்டன. நன்னூல் ஆங்கில மொழி பெயர்ப்புகள் தமிழராலும், ஆங்கிலேயராலும் விரும்பிச் செய்யப் பட்டன. நன்னூலில் கூறப்பட்ட செய்திகளைச் சுருக்கி உரைக்கும் முயற்சியும், எளிமையாக்கி எடுத்துக் காட்டு நல்கும் முயற்சியும் நடந்தன. இவையனைத்திற்கும் காரணங்கள் பலவாக இருப்பினும் சூழ்நிலையே முதற்காரணமாகும்.)

அரசியல் சூழ்நிலை : கி.பி. 16, 17, 18 ஆம் நூற்றாண்டு அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்தி அயலார் தம் ஆதிக்கத் திற்குக் காலூன்றி விட்டனர். போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியர், தமிழகத்தில் முகாமிட்டனர். இவர்களுள் ஆங்கிலேயர் 'கும்பினி' என்னும் வாணிகக் குழுவை அமைத்து, ஆங்காங்கே கோட்டைகளைக் கட்டிக் கொண்டு வாணிகம் செய்து வந்தனர். காலப்போக்கில் நாட்டை ஆண்ட நவாப்புகள், பாளையக்காரர்கள் ஆகியோருடன் சேர்ந்து கொண்டு போர்களிலும் இவர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். ஏற்பட்ட வெற்றியில் பங்கு போட்டுக் கொண்டு சில இடங்களில் ஆளும் அதிகாரத்தையும் கைப்பற்றினர். இவ்வதிகாரப்

பங்கீட்டில் தமக்குள்ளேயே போர்கள் செய்து கொண்டனர். போர்ச்சுக்கீசியரும், டச்சுக்காரரும் கால அடைவில் மறைந்தனர். பிரஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். நவாபுக் குடும்பச் சண்டையில் தலையிட்டனர். முடிவில் இம் முயற்சியில் ஆங்கிலேயர் பெரு வெற்றி பெற்றனர். இம்மண்ணிலேயே நிலைத்தனர். ஆட்சியைக் கைப்பற்றிய கிழக்கிந்தியக் கம்பெனியினர் கி.பி. 1858 ஆம் ஆண்டில், ஆட்சி யுரிமையை ஆங்கில அரசிடம் ஒப்படைத்தனர். இதன்பின், பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆதிக்கத்தின் கீழ் இந்திய நாடு வந்த பின், நாட்டில் அமைதியும் ஒழுங்கும் ஏற்பட்டன. ஓயாப்போரில் உழன்று கொண்டிருந்த மக்கள் அமைதியான ஆட்சி நிழலில், இலக்கிய ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர்.

சமூகச் சூழ்நிலை : அமைதியான அரசியல் காரணமாக சமூக வாழ்க்கையிலே மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு ஏற்பட்டது. அதனால் மக்களிடத்தில் அமைதியும் ஒழுங்கும் நம்பிக்கையும் பரவின. இந்த நல்ல சூழல், கலை வளரக் காரணமாயிற்று. அஞ்சல் துறை, போக்குவரத்துத் துறைகளால் ஏற்பட்ட நன்மைகள் மிகுதி. அஞ்சல், போக்குவரத்துத் துறை கள் அறிஞர்களையும், கவிஞர்களையும் நாடு முழுதும் கலந்துரை யாடுவதற்கும் உறவாடுதற்குமுரிய வாய்ப்புகளைப் பெருக்கின. சாதி பேதங்களில் ஆழ்ந்து கிடந்த நிலை மாறி, பள்ளி, கல்லூரி, போக்குவரத்து வண்டிகளில் சமரசம் பரவிற்று.

சமயச் சூழ்நிலை : பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்பே, இந்திய மண்ணில், கிறித்தவமும், இசுலாமும் அடி எடுத்து வைத் திருந்தன. ஆங்கிலேயரின் ஆட்சி இந்நூற்றாண்டில் இங்கு நிலைத்து விட்டபோது, எண்ணற்ற ஐரோப்பியப் பாதிரிமார்கள் இந்தியா வந்தனர். அவர்கள் ஏழை எளிய மக்களோடு அன்புடன் உறவு கொண்டனர். அவ்வுறவுக்கு வட்டார மொழி அறிவு மிகவும் தேவையாயிருந்தது. அதனால் பாதிரிமார்கள் தமிழ் படித்தார்கள். தமிழ் மூலமாகப் பல கருத்துகளைச் சொல்லு தல் மட்டுமின்றி, மக்களுக்கு எளிதில் புரியும் மொழியில் எழுதவும் வேண்டியிருந்தது. ஆதலால் சமயஞ்சார்ந்த தமிழ் வசன நூல் களை எழுதி அச்சிட்டுப் பரப்பினர்கள். தம்மைப் போன்று, தம்மைத் தொடர்ந்துவரும், தம் நாட்டவர்க்கும், பாதிரிகளுக்கும் தமிழ் பயில வாய்ப்பாக இருக்கும் பொருட்டு, இலக்கண நூல்களை யும் எழுதினர். இவ்விலக்கண நூல்கள் நன்னூல் போன்ற தமிழ் இலக்கணங்களையும், உலகவழக்குகளையும் அடிப்படையாகக் கொண்டவை. பெஸ்கி என்ற வீரமாமுனிவர், இலத்தின் மொழியில்

பாதிரிகட்காக எழுதிய தமிழ் இலக்கணத்தைப் பாவிண்டன் துரை ஆங்கிலத்தில் பெயர்த்த மொழி பெயர்ப்பும், இலத்தின் மூலம் சென்னைத் தமிழ்ச் சங்கத்தாரால் அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டன.

அச்சியந்திரம்: அச்சுக் கருவிகள் பதினாறும் நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டன. எனினும், அவை கிறித்தவப் பாதிரிமாரிடத்திலும் ஐரோப்பிய வணிகக் கும்பினியாரிடத்துமே இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் தமிழ் நாட்டவர்க்கும் அச்சியந்திரம் அமைக்கும் உரிமை கிடைத்தது. நூல் வெளியிடுவது பற்றி, கி.பி. 1835-ஆம் ஆண்டு அரசாணை ஒன்று வெளியிடப்பட்டது. '1835 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3 ஆம் தேதி ஆனரேபிள் கவர்னர் சென்ரல் அவர்களாலே ஆலோசனை சபையில் விதிக்கப்பட்ட அச்சுச் சட்டம்' என்ற தலைப்புடைய இச்சட்டத்திற்கு '1835 ஆம் வருஷத்து ஆக்ட் என்னும் 11வது சட்டம்' என்பது பெயர். இச்சட்டத்தின் முழுச் செய்தியும் இவ்வாண்டு வெளியான செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக் கெசட்டில் தமிழ் ஆங்கிலம் முதலான மொழிகளில் வெளியிடப் பட்டது.[1] இச்சட்டம் வந்த பிறகு ஓலைச் சுவடிக்குள் முடங்கிக் கிடந்த தமிழ் இலக்கிய இலக்கணங்கள் அச்சுத் தேரேறி உலா வரத் தொடங்கின. ஏட்டுச் சுவடிகளை வாங்கவும் பார்க்கவும் பயிலவும் பெரும்வசதி அற்றவர்கள், குறைந்த செலவில், அச்சிட்ட நூல்களை வாங்க முடிந்தது. வீரமாமுனிவர் எழுதிய சதுரகராதி உள்ள ஏட்டுச் சுவடி ஒன்று பத்துப் பவுன் (150 ரூபாய்) விற்ற தாகவும், அவ்வகராதி அச்சிடப்பட்டு விற்கப்பட்டபோது 2½ ஷில்லிங்குக்குக் (1 ரூபாய் 85 காசு) கிடைத்ததாகவும் 1865 ஆம் ஆண்டில் யோவான் மர்தாக்கு என்பவர் குறிப்பிட்டுள்ளார்.[2] ஆக அச்சியந்திரம் வந்தமை, நூல்கள் பரவலாக, குறைந்த விலையில் வாங்கிப் படிக்கப்படுவதற்கு வாய்ப்பாயிற்று. அறிஞர் இடையில் படிக்கப்பட்டு வந்த நன்னூல் இலக்கணம், மக்கள் இடையில் பெருகப் படிக்கப்படும் சூழ்நிலை உருவானதற்கு அச்சி யந்திர வருகை தலையாய காரணம் ஆகும்.

செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கல்லூரி: ஆங்கில அரசு, ஒரு வகையில் இந்திய நாட்டு மொழிகளையும் போற்றியது. ஆங்கில நாட்டினின்று இந்திய நாட்டில் வந்து அலுவல் பார்க்கும்

---

1. பரசிவானந்தம், அ.மு., பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் உரை நடை வளர்ச்சி, 1966, ப. 59, 60
2. John Murdoch Cassified Clatalogue of Tamil Printed Books with Introductory Notices, Madras, 1968 Preface XXXIII.

ஆங்கிலேயர் வட்டார மொழியைப் பயின்றிருக்க வேண்டும் என்று சட்டம் உருவாயிற்று. வட்டார மொழியைப் பயின்று தேர்வெழுதி வென்றவர்களுக்கு மட்டுமே ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. இதனால் தமிழ்நாட்டில் இருந்த ஆங்கில அலுவலர்கள் தமிழ் மொழியைப் படிக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளாயினர். அவர்கள் தமிழ் படிப்பதற்காகவும், அவர்கட்குத் தேர்வுகள் வைத்து நடத்துவதற்காகவும், "Fort St. George College" என்ற கல்விச் சங்கத்தை அமைத்தனர். கி.பி. 1812 ஆம் ஆண்டி நிறுவப் பட்ட இச்சங்கம் கி.பி. 1820 முதல் அலுவலாற்றத் தொடங்கியது. இச்சங்கத்தின் சார்பில் அச்சுக்கூடமும், நூல் விற்பனை நிலையமும் நூலகமும் அமைக்கப்பட்டன. கர்னல் மக்கன்சி அவர்கள் தொகுத்து வைத்திருந்த ஓலைச்சுவடி நூல்கள் இச்சங்கத்தின் பொறுப்பில் இருந்தன. தமிழ் மொழியை இச்சங்கத்தின் மூலம் கற்கத் தொடங்கிய ஆங்கிலேயருக்குத் தமிழ் இலக்கணம் எளிதில் விளங்கவில்லை. ஏனென்றால் நன்னூல் முதலான இலக்கணங்கள் செய்யுள் வடிவில் இருந்தன. எழுதப்பட்டிருந்த உரைகளும் எளிமையாய் இல்லை. உரைநடையில் அமைந்த இலக்கணங்கள் அக்காலத்தில் இல்லை. நூற்பாக்களைப் படித்து, அவற்றிற்குப் பொருள் புரிந்து கொண்டு பின்னர் இலக்கணத்தை அறிந்து கொள்வது கடினமாய் இருந்தது. ஆதலின் உரைநடையில் அமைந்த இலக்கண நூல் அவர்கட்குத் தேவைப்பட்டது. இதனால் அக்காலத்து ஆங்கில நிருவாகம், தமிழில் உரைநடையில் இலக்கண நூல் எழுதுகிறவர்களுக்கு ஒரு தொகை பரிசு அளிப்பதாக விளம்பரம் செய்தது. இது காரணமாக முதன்முதல் உரை நடை இலக்கணம் தோன்றியது. மேலே குறிப்பிட்ட பரிசைத் 'தமிழ் விளக்கம்' என்ற நூல் பெற்றது. இந் நூலைத் திருவேற்காடு சுப்பராய முதலியார் எழுதியிருந்தார். இந்நூலின் முதற் பதிப்பு கி.பி. 1811 இலும், இரண்டாம் பதிப்பு கி.பி. 1817 இலும் வெளியாயின. இதன் பிறகு உரைநடையில் தமிழிலக்கணம் ஒன்றை 'இலக்கண விளக்கை' என்ற பெயரில் தாண்டவராய முதலியார் எழுதியிருந்தார். இவர் வித்துவான் சிதம்பர பண்டாரத்திற்கு அடுத்தபடி, சென்னைக் கல்விச் சங்கத் தலைமைத் தமிழ்ப் புலவராய் இருந்தவர். இவரே நன்னூல் மூலத்தை முதல் முதலாக அச்சிட்டு வெளியிட்டவர். இவருக்குப் பின், முத்து சாமிப் பிள்ளை, புதுவை நயவப்ப முதலியார், தஞ்சைச் சரபோஜி அவைக்களப் புலவராய் இருந்த கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், மதுரைக் கந்தசாமிப் புலவர் முதலியோர் கல்விச் சங்கத்தின் தமிழ்த்துறைத் தலைவராய் விளங்கினர். ஆங்கிலேயர் தமிழ் கற்றே தீரவேண்டிய கட்டாயம், சென்னைக் கல்விச்

சங்கம் ஆகியன, தமிழிலக்கணக் கல்வியை மிகு வேகமாகப் பரப்ப உதவின. அக்காலத்தில், தொல்காப்பியம் பலருக்குத் தெரியாத நூலாய், எவிதில் புரியாத நூலாய் இருந்தமையினால், நன்னூல் எல்லார் பார்வையிலும் பட்டுப் பல பதிப்புகளைப் பெற்றது. சென்னையில் கல்விச் சங்கம் இருந்த அதே காலத்தில் இங்கிலாந்தில் அயலிபரி (Hayleybury) என்ற ஊரில் இதுபோன்ற பிறிதொரு கல்விநிலையம் நிறுவப்பட்டது. அந்த நிலையத்தின் பெயர் 'மாண்புமிகு கிழக்கிந்தியக் கம்பெனியின் கல்லூரி' (The Honourable East India Company's College) என்பதாம். அரசாங்கப் பணிசெய்ய, இந்திய நாட்டுக்கு வர விரும்பிய ஆங்கிலேயர், அந்தக் கல்லூரியில் இந்திய நாட்டு மொழிகளுள் ஒன்றைக் கற்ற பின்புதான் இந்தியாவிற்குச் செல்ல அனுமதிக்கப் பட்டனர். அக்கல்லூரிகளில் கீழைநாட்டு மொழிகளின் பேராசிரியராய் இருந்தவர். ஜராபர்ட்டு ஆண்டர்சன (Robort Anderson) ஆவார். அவர் சென்னை மாநிலத்தில் அரசாங்க அலுவல் பார்த்துவிட்டு, உடல்நலம் குன்றியமையால், 1815ஆம் ஆண்டு இங்கிலாந்து திரும்பி, அக்கல்லூரிப் பேராசிரியராய் அமர்ந்தார். அவர் அக்கல்லூரியில் தமிழ் பயிலும் ஆங்கில மாணாக்கர்க்காகத் தமிழ் இலக்கண நூல் ஒன்றை எழுதி 1821இல் வெளியிட்டார். 'Rudiments of Tamil Grammar' என்பது அந்நூலின் பெயர். அந்நூலைத் தொடர்ந்து மேலும் பல இலக்கணம் பற்றிய நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்தன. ஆக இவ்விரு சங்கங்களும் நன்னூல் தமிழ், ஆங்கிலப் பதிப்புகள் பல்கக் காரணமாய் இருந்தன. 1857 ஆம் ஆண்டு இச்சங்கம் கலைக்கப்பட்டு, மாற்றியமைக்கப்பட்டது. சங்கத்தின் பணிகள் அனைத்தும் 'தேர்வு வாரியத்'திடம் (Board of Examiners) ஒப்படைக்கப்பட்டன.[1]

உரைகளின் பெருக்கத்திற்குக் காரணம் ஆய்வு நோக்கமன்று; தேர்வு நோக்கமே: நன்னூலைப் பொறுத்தவரை எளிய உரைகள் பலவும், பதிப்புகள் பலவும் வெளிவர இக்கால அரசியல், சமூக, சமயச் சூழ்நிலைகள் காரணமாய் இருந்தன. அவற்றுடன், இக் காலத்தில் அறிமுகமான அச்சியந்திரமும், அமைக்கப்பட்ட கல்விச் சங்கங்களும் நன்னூற் கல்வி பரவப் பெருந்துணை புரிந்திருக்கின்றன. இவ்வாறு பரவிய நன்னூற் கல்வி ஓர் அறிமுகம் என்ற அளவிலேதான் பரவியது. ஆராய்ச்சி என்ற அளவில் பரவவில்லை. அதற்குக் காரணம், நன்னூல் உரைகளும்

1. வேங்கடசாமி, மயிலை சீனி., பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், 1972, ப. 23

பதிப்புகளும் சென்னைக் கல்விச் சங்கத் தேர்வு அல்லது பல்கலைக் கழகத் தேர்வுக்காகவே எளிமைப் படுத்தப்பட்டுப் பதிக்கப் பட்டுள்ளமை. இவற்றுள் இளைய வயதினர் புரிந்து கொள்ளும் எளிமை இருந்தது; காலத்திற்கு ஏற்ற எடுத்துக்காட்டுகள் இருந்தன. அரிய பெரிய ஆராய்ச்சிகள் இடம் பெறவில்லை.

விசாகப் பெருமாளையரின் காண்டிகை உரையே முதலில் எழுதப்பட்ட காண்டிகை உரை; முதலில் அச்சான நன்னூல் உரை (1863). இவ்வுரைக்குச் சேயூர் முத்தைய முதலியார் உரைப் பாயிரம் ஒன்று வழங்கியுள்ளார். அவ்வுரைப் பாயிரத்தில், "சிறுவரும் உணரதாரும செவ்வியற் செய்தனன்...விசாகப் பெருமாளையன்" என்று குறிப்பிட்டுள்ளார்.[1] சென்னை அரசினர் நார்மல் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய க. பெ. சவுந்தரநாயகம் பிள்ளை நன்னூற் சுருக்கம் ஒன்றை வெளியிட்டார் (1864). அந்நூல் முகப்புரையில், "க. பெ. சவுந்தர நாயகம் பிள்ளை அவர்களால் நன்னூலில் சிறுவர்களுக்குப் பயன்படும்படி...எடுத்த இன்றியமையாச் சூத்திரங்களும், அவற்றிற்குச் செய்த வெள்ளுரையும், பதங்கட் கிலக்கணம் சொல்லும் முறை காட்டிய அட்டவணை, இலக்கணங் கூறிய உதாரணங்கள், இராமாயணம், நாலடி, குறள், நீதிநெறிவிளக்கம் என்னும் செய்யுள்களில் எடுத்த நூற்றுக்கதிகமான கடும் பதங்களின் முடிபும் ஆகிய இவைகள் அடங்கிய அநுபந்தம்" எனக் குறிப்பிடுவர். இம் முகப்புரையில் "சிறுவர்களுக்குப பயனபடுமபடி" என்று குறித்திருப்பதும், "அவற்றிற்குச் செய்த வெள்ளுரை என்று குறித்திருப்பதும் கருதத்தக்கன.

பாடநூற் பார்வையிலேயே இக்காலத்து நன்னூல் உரைகள் எழுந்தன என்பதற்குத் துணையாக கி.பி. 1868இல் கா. ஸ்ரீ. கோபாலாசாரியாரும், திரு. கோ. ஸ்ரீரங்காசாரியாரும் சேர்ந்து பதிப்பித்த நன்னூல் காண்டிகை உரையின் முகப்பிலேயே "Approved by the Text book Committee" என்று அச்சடிக்கப் பட்டிருப்பதும், முகவுரையில், பழைய உரைகள், 'இந்நாள் ஆங்கிலத்தோடு தமிழைக் கற்கும் மாணக்கர்க்கும் ஏனையோர்க்கும் ஒப்பப்பன்படாமையின் எமக்கு வித்தியாப்பியாசத்தில் உள்ள அநுபவத்தையும், எம்மினும் அதிக அனுபவமுடையாரது அபிப்பிராயத்தையும் கொண்டு உரைநடையை எளிதாக்கியும், மாணக்கர் பயிலுதற்கேற்றவாறு ஒவ்வோரியலிலும் சில முக்கியமான விஷயங்களை இறுதியில் அமைத்தும்' பதித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். 1879இல் விசாகப்

1. விசாகப் பெருமாளையர், நன். காண்டிகையுரை, இரண்டாம் பதிப்பு, 1840.

பெருமானோனாரின் நன்னூல் காண்டிகை உரைப்பதிப்பு கையடக்க அளவில் வெளியாயிற்று. இந்நூலின் இரண்டாம் பக்கத்தில் உள்ள குறிப்புக் கவனத்திற்குரியது[1]. 1890 இல் திருவல்லிக்கேணி வை. மு. சடகோபராமானுஜாசாரியாராலும் சே. கிருஷ்ணமாசாரியாராலும் பதிப்பிக்கப்பட்ட நன்னூல் காண்டிகையுரை முகவுரையில், "பழைய உரைகள் எல்லாவற்றுள்ளும் பரீட்சைக்குப் படிக்கும் மாணாக்கர்க்குப் பெரிதும் பயன்படாத பல விஷயங்களை நீக்கியும், மற்றையவற்றை நன்கு விளக்கியும், இன்றியமையாத பல விஷயங்களைப் புதிதாகச் சேர்த்தும், தெளிவாகப் பொருள் விளங்குமாறு மிக எளிய நடையில்...அவசியமான விஷயங்களை இறுதியில் கூட்டிப் பதிப்பித்தோம்...இந்நூல் பி. ஏ. முதலிய பட்டப் பரீட்சைகளுக்கு முழுவதும் உபயோகமான தாதலால் இந்நூலில் யப். ஏ. பரீட்சைக்கு உபயோகமாகத்தக்க முக்கியமான சூத்திரங்களுக்கு + இக்குறியும், யப்.ஏ., மெட்ரிகுயுலேஷன் இவ்விரண்டு பரீட்சைகளுக்கும் உபயோகப்படத்தக்க மிகவும் முக்கியமான சூத்திரங்களுக்கு * இக்குறியும் அந்தந்தச் சூத்திரத்தின் முதலில் இடப்பட்டிருக்கின்றன." என வரும் செய்தி கருதத்தக்கது.

ஆக இந்நூற்றாண்டில், வேறு எந்த நூற்றாண்டிலும் தோன்றாத அளவிற்கு உரைகள் தோன்றின. பதினைந்தாம் நூற்றாண்டில் மயிலை. உரையொன்றே தோன்றிற்று. பதினாறாம் நூற்றாண்டிலும் புதிய உரைகளே தோன்றவில்லை. பதினேழாம் நூற்றாண்டில் ஆண்டிப் புலவரின் உரையொன்றே தோன்றிற்று. பதினெட்டாம் நூற்றாண்டில் சங். உரையொன்றே தோன்றிற்று. பதினெட்டாம் நூற்றாண்டில், முனிவர், கூழங்கைத் தம்பிரான் எனும் இருவரின் உரைகள் தோன்றின. பத்தொன்பதாம் நூற்றாண்டிலோ தமிழில் பதின்மூன்று உரைகளும், ஆங்கிலத்தில் ஐந்து உரைகளுமாகப் பதினெட்டு உரைகள் நன்னூலுக்குத் தோன்றியுள்ளன. ஏறத்தாழ அறுபதுக்கு மேற்பட்ட நன்னூற் பதிப்புகள் அச்சிடப்பட்டுள்ளன. இத்துணை உரைகளும், பதிப்புகளும் இந்நூற்றாண்டில் வெளிவந்த போதும், இவை பெரும்பாலும், ஆங்கிலேயர்க்கு அல்லது ஆங்கிலம் வழி தமிழ் பயில்வார்க்காக எளிமைப்படுத்தப் பட்டும், தேர்வில் வெற்றி பெறுதற்குத்தக வினா முதலியன பின்னிணைப்புகளாகச் சேர்க்கப்பட்டும் வெளியிடப்

1. A Hint to Students: A careful Study of the Sutrams with their commenteries as specified below will enable candidates to answer satisfactorily all questions bearing on Tamil Grammar set for the different tests of the Madras University. For B.A. Examinations The whole book; For First in Arts Examination-Sutrams marked P; For Matriculation Examination-Sutrams marked M.

பட்டனவே தவிர ஆய்வு நோக்கிற்காக எழுதப்பட்டு வெளியிடப்பட்டவை அல்ல.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், நன்னூல் முதலான இலக்கணப் படிப்பில் சில குறிப்பிட்ட கோட்பாடுகள் வெளிப் படையாகவும், மறைமுகமாகவும் பலராலும் எடுத்துச் சொல்லப் பட்டு நிலை நாட்டப்பட்டன. இதனால் பழைய உரைகளில் குறிப்பாக மயிலை. உரையில் காணப்பட்ட சில மொழியியல் உண்மைகள் முற்றும் புறக்கணிப்பிற்கு உள்ளாயின. இதற்குக் காரணம் இக்கால உரைகாரர் பலரும், ஒன்று சமற்கிருதச் சார்பினராகவோ அல்லது ஆங்கிலச் சார்பினராகவோ இருந்தமையேயாம். இதனை, இவர்கள், தம் உரையில் தமிழிலக்கணக் கோட்பாடுகளைச் சமற்கிருதம் அல்லது ஆங்கிலத்தோடு ஒப்பிட்டுக் காட்ட எடுத்துக்கொண்ட முயற்சியே உறுதி செய்கிறது.[1]

காலத்தின் கண்ணாடியாய் விளங்கும் இந்நூற்றாண்டு உரைகள் கால வாரியாகத் தொடர்ந்து ஆராயப் படுகின்றன. இந்நூற்றாண்டு உரைகள் அனைத்திலும் ஆராய்ச்சியை விட 'எளிமை' பேராட்சி செலுத்துவதை அங்கங்கே காணலாம்.

விசாகப் பெருமாளையர் : கி. பி. 179—?

"தத்துவம் உணர்திருத் தணிகை மாதிபன்
சற்செனும் வீர சைவமா கேசன்
கறையணர்ந் தோங்கிய கந்தப்ப தேசிகன்
பெற்றருள் விசாகப் பெருமா ளையனென்
றுலகு புகழ்ந்த ஒங்கி
இலகு மியற்பெய ரெய்து நாவலனே"

—உரைப்பாயிரம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருத் தணிகையில் பிறந்தவர்.[2] இவர் தந்தை யார் பெயர் கந்தப்பையர். வீர சைவ மரபினர். பிராமணர் அல்லாத வீரசைவர் அந்தக்காலத்து ஐயர் என வைத்துக்கொள்வர். கந்தப்பையர் மிகச் சிறந்த இலக்கண இலக்கியப் புலமை யாளர். திருத்தணிகைப் பிள்ளைத் தமிழ், திருத்தணிகை

---

1. சந்தியக்கரம், எழுத்துவைப்பு, வடசொல், பேற்றுமைகள் ஆகியன பற்றி இந்நூற்றாண்டு உரையாசிரியர்களின் கருத்துகள் நினைக்கத் தக்கன. பவணந்தி ஒரு 'பிராமணர்' என்றே எவ்விதச் சான்றுமின்றிச் சிலர் எழுதிப் பார்ப்பர்.—கோபாலாசாரியார், கா. ஸ்ரீ. ஸ்ரீதரகாரியார், நன்னூல் காண்டிகையுரை, 1893, முன்னுரை காண்க.
2. சாலிவாகன சகாப்தம் 1720க்குச் சரியான பிங்கல—ஆனித்திங்கள் 24ஆம் நாள் (கி.பி. 1797).

யுலா முதலிய பன்னிரு நூல்களின் ஆசிரியர். கந்தப்பையர்க்குத் திருமணம் முடிந்து பல ஆண்டுகளாகியும் மகப் பேறு வாய்க்க வில்லை. குழந்தைப் பேற்றை மிக விரும்பிய இவர், தன் மனைவியின் தங்கையை இரண்டாம் மனைவியாகத் திருமணம் செய்துகொண் டார். முதல் மனைவியார் பெயர் வல்லியம்மாள்; இரண்டாம் மனைவியார் பெயர் தெய்வயானையம்மாள். ஒருநாள் மனைவியர் இருவரும் தண்ணீர் முகத்தற்குக் குளத்தை நாடிச் சென்றனர். செல்லும் வழியில் திருவேங்கடமலை அவர்களுக்குக் காட்சி அளித் தது. அப்போது ஒருவர் சொன்னார்: "நமக்கு இதுவரையில் குழந்தைப் பேறுண்டாக முருகன் அருள் புரிந்திலன். இனிமேல் நமக்கு மக்கட் பேறு உண்டாயின் அதோ தெரிகிற திருவேங்கட மலையானுடைய பெயரைத்தான் அவர்கட்குச் சூட்டல் வேண்டும்" மற்றொருவரும் அக்கருத்திற்கு உடன்பட்டனர். கால நீட்சியில் இருவருக்கும் ஆண் குழந்தைகள் பிறந்தன. குழந்தைகட்கு விசாகன் என்றும், சரவணன் என்றும் முருகன் திருப் பெயரைக் கந்தப்பையர் சூட்டினர். அப்போது, அவர் மனைவியர் இருவரும் திருவேங்கட நாதனை வேண்டி விண்ணப்பித்துக் கொண்ட நிகழ்ச்சியை நினைப்பூட்டினர். உடன், கந்தப்பையர், தம் புதல்வர் பெயரை, விசாகப் பெருமாள் என்றும், சரவணப் பெருமாள் என்றும் கூட்டி வைத்து அழைத்தனர்.[1] இருவரும் தந்தையாரிடம் பாடம் கேட்டுப் புலமை பெற்றனர். பின்னர் அக்காலத்துப் புலவர் உலகில் செல்வாக்கோடு வாழ்ந்த கவிராய ரிடமும் பாடம் கேட்டனர். விசாகப் பெருமாளையர் வடமொழி யிலும் வல்லவர். 'கனம் பொருந்திய கம்பேனியாரால் நியமிக்கப் பட்ட யூனிவர் சிட்டி என்னும் சகலகலா சாஸ்திரி சாலை'யில் தலைமைத் தமிழ்ப் புலவராக இருந்தார். டாக்டர் வின்சுலோவின் அகராதிக் குழுவில் பணிபுரிந்தார். இலக்கணச் சுருக்க விளக் விடை என்னும் நூலை எழுதி 1828 ஆம் ஆண்டில் அச்சில் பதிப் பித்தார். பால போத இலக்கணம் எழுதி 1832 இல் அச்சிட்டார். கல்விப்பயன், யாப்பிலக்கண விளக்விடை, அணியிலக்கண விளக் விடை ஆகிய நூல்களை எழுதினர். திருக்கோவையாருக்கு உரை எழுதி 1837இல் பதிப்பித்தார். இவர், சிவக்கொழுந்து தேசிக ருடன் சேர்ந்து 1857 ஆம் ஆண்டு திருவாசகத்தை ஏட்டுச் சுவடியி லிருந்து அச்சில் பதிப்பித்தனர். இதுவே முதன் முதல் அச்சிட்ட திருவாசகம் போலும்.[2] இவர் திருவள்ளுவ மாலைக்கு முதன் முதல்

1. இந்து புனைகதையே போலும். காட்டுபவர், இராமசாமிப் புலவர், கா.அ, தமிழ்ப் புலவர் வரிசை, எட்டாம் புத்தகம், ப. 135
2. வேங்கடசாமி, மயில, சீனி., பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழிலக்கி யம், ப. 277

உரை எழுதியவரென்றும், திருவள்ளுவர் வரலாற்றினையெழுதி, திருவள்ளுவரை மாசு படுத்தினர் என்றும் ஒருவர் எழுதியுள்ளார்.[1]

விசாகப் பெருமாளையர் உரை : தமிழிலும் வடமொழியிலும் வல்லவராகிய இவர், 'கனம் பொருந்திய கம்பேனியரால் நியமிக்கப்பட்ட யூனிவர் சிட்டி, என்னும் சர்வகலா சாஸ்திரி சாலை'யில் தலைமைத் தமிழ்ப் புலவராய் இருந்தார். டாகடர் வின்சுலோ தொகுத்த அகாதிக் குழுவிலும் பணியாற்றினர். இவற்றால், ஆங்கில அதிகாரிகளின் பழக்கமும் அவர் தம் கருத்துச் செல்வாக்கும் இவருக்குக் கிட்டின. இவர் வாழ்ந்த காலமும், சூழலும், ஏற்ற பொறுப்பும் இவரைப் புதுநோக்கு உடையவராக ஆக்கின. இதனால் இவர், இலக்கணம் எளிமைப் படுத்தப் பட வேண்டும் என்று எண்ணினர். திரிசொற்களால் இயன்ற இலக்கணங்களாலும், இலக்கண உரைகளாலும் கற்குங்காலம் மிகுதியாகின்றது. ஆகவே, பல நூல்களைக் கற்றுணர்ந்து எத் தொழிலையும் செய்யத் தக்கவர்கள் ஆவது அரிதாய் இருக்கின்றது. மேனாடுகளில் வாழும் சிறுவர்கள் சில நாள்களிலே பல நூல்களைக் கற்றுப் பல செய்திகளையும் உணர்ந்து பல தொழில்களையும் இயற்றும் திறனுடையவர் ஆகின்றனர். "இதனால் இந்நாட்டுச் சிறுவர்கள் தங்கள் வாழ்நாள்கள் வீணுட்படாமல் சில நாள்களில் அப்பல நூல்களையும் கற்றறிந்து எத்தொழிலையும் செய்யத்தக்க வல்லமை அடைவதற்கு அந்நூல்களை எல்லாம் உலக வழக்கியற் சொற்களால் உரைவசனமாகத் தெளிவுறச் செய்து கல்விச்சாலைகளிலே உபயோகம் உறும்படிச்செய்தல் நன்று என்னுங் கருத்துக் கொண்டு தமிழ் கற்கப் புகுவோரும் அவ்வாறுக அந்நூல்களைச் செய்யப் புகுவோரும் தமிழ் நடை நன்குணர்ந்து கற்கவும், இயற்றவும் இன்றியமையாக் கருவியாய் உள்ள எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் எளிதில் உணரும்படி கடின சந்தியின்றி உரை வசனமாகப் பாலபோத இலக்கணம் என்னும் பெயரினால் இந்நூல் செய்யப்பட்டதென அறிக."[2] இவ்வாறு விசாகப் பெருமாளையர் உள்ளத்தில் உறைந்து கிடந்த எண்ணமே, நன்னூலுக்கு எளிய இனிய காண்டிகை உரை எழுத அவரைத் தூண்டிற்று. எண்ணம் செயலாக வடிவம் பெற்று நூலாக வெளிவந்த போது, பெரும்புகழும் செல்வாக்கும் பெற்றது. தொடர்ந்து பல பதிப்புகள் அச்சாயின. காண்டிகை என்றாலே விசாகப்

1. சண்முகம், இரா., தொல்காப்பியம்—மக்கள் வாழ்வின் இலக்கணம், கோலாலும்பூர் தமிழ்நிலைய வெளியீடு, 1957, ப. 146
2. விசாகப் பெருமாளையர், பாலபோத இலக்கணம், பா. குமரய்யரின் கலாநிதி அச்சுக்கூட ஐந்தாம் பதிப்பு, சென்னை, 1870, ப. 2

பெருமாளையர் எழுதிய காண்டிகை எனக் கருதுகிற அளவுக்கு அவரது உரை பெயர் பெற்றது.

நன்னூலுக்கு எழுதப்பட்ட முதல் காண்டிகை உரை : கி.பி. 1835 இல் நன்னூல் மூலம் தாண்டவராய முதலியாரால் முதன் முதல் அச்சேற்றி வெளியிடப் பட்டிருந்தது. இவரை அடுத்து கி.பி. 1837இல் நன்னூல் காண்டிகை உரை விசாகப் பெருமாள் ஐயரால் எழுதப்பட்டு வெளியாயிற்று. முதல் காண்டிகை உரை இதுதான்; முதன் முதல் அச்சான உரையும் இதுவே. இன்று இம்முதற் பதிப்பு காணக் கூடவில்லை. எனினும் இப்பதிப்புப் பற்றிய செய்தி கௌரிப் பஞ்சாங்கத்திலிருந்து அறிய்ப்பட்டது.[1] பெயர் தெரியா உரைப்பதிப்பாக இப்பதிப்பு அங்குக் குறிக்கப் பட்டிருந்தாலும், அப்பதிப்பு, விசாகப் பெருமாளையருடையதே என்று உய்த்துணரச் சான்றுகள் உள்ளன. 1840 இல் இவரால் சென்னைப் பட்டணத்தில் தமது கல்வி விளக்க அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு, நன்னூல் மூலமும் காண்டிகை உரையும் எனும் தலைப்புடன் இரண்டாம் பதிப்பாக வெளி வந்துள்ளது. இவ்வுரை செய்தவர் திருத்தணிகைக் கந்தப்பையர் குமாரராகிய விசாகப் பெருமாளையர் என்ற குறிப்போடு 3 ரூபா 8 அணா விலையில் வெளியாகியுள்ளது. இப்பகுதியில் சேயூர் முத்தையா முதலியாரின் உரைப்பாயிரம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இச் சேயூர் முத்தையா முதலியாரே, 1837 இல் வெளியான நன்னூல் காண்டிகைக்கும் உரைப்பாயிரம் செய்துள்ளதாகக் கௌரிப் பஞ்சாங்கம் குறிப்பிடுகிறது. மேற்கண்ட பதிப்பில் இரண்டாம் பதிப்பு என்று குறிக்கப்படுவதாலும், அப்பதிப்பின் உரைப்பாயிர ஆசிரியரும், முதற்பதிப்பின் உரைப்பாயிர ஆசிரியரும் ஒருவரே என்பதாலும் 1840 ஆம் ஆண்டிற்கு முன் நன்னூல் காண்டிகை உரை வேறு பிறரால் எழுதப்படாததாலும், பதிப்பிக்கப் படாததாலும் இரண்டின் விலையும் ஒன்றே ஆதலாலும் 1837 இல் வெளிவந்ததாகக் கௌரிப் பஞ்சாங்கம் குறிப்பிடும் நன்னூல் காண்டிகை உரை, விசாகப் பெருமாளையரால் இயற்றப்பட்ட முதற் காண்டிகையே, முதற் பதிப்பே என்பது தெளிவாகிறது. ஆதலின், இப்போதைய சான்றுகளைக் கொண்டு, நன்னூல் முதற் காண்டிகையைச் செய்தவர் விசாகப் பெருமாளையர், நன்னூல் காண்டிகை யுரை முதன் முதலாக அச்சேறிய ஆண்டு கி.பி. 1837, முதல் இரு பதிப்புகளிலும் உள்ள உரைப்பாயிரம் வழங்கிய சேயூர் முத்தையா முதலியார் ஒருவரே என்பனவற்றை உறுதி செய்து கொள்ளலாம்.

---

1. சுப்பையா பிள்ளை, வ., பதிப்புத் துறையில் பட்டறிவு, செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 45, பாகம் 18, ப. 597

பல பதிப்புகள்: இவரது காண்டிகை உரை, கி.பி. 1880இல் ஆறுமுக நாவலர் காண்டிகை வருகின்ற வரை மிகுந்த செல்வாக் கோடு பலராலும் பயிலப்பட்டு வந்திருக்கிறது. அதனால் பல பதிப்புகளையும் பெற்றுச் சிறந்திருக்கிறது. நாவலரின் உரை வந்த பின்பும் கூட, ஐயரது உரை தொடர்ந்து புகழ்பெற்று வந்திருக்கிறது. கி.பி. 1900இல் ஐயரது காண்டிகையுரையின் புதுக்கிய பதிப்பு ப. வாசுதேவ முதலியாரால் வெளியிடப் பட்டிருக் கிறது.[1]

உரைபற்றி உனரப்பாயிரம் உரைப்பது: சங்கர நமச்சிவா யரால் செய்யப்பட்ட நன்னூல் விருத்தியுரையையும், சிவஞான முனிவரால் திருத்தம் செய்யப்பட்ட புத்தம் புத்துரையையும் சுருக்கி, சிறுவரும் புரிந்து கொள்ளும்படியாக, கருத்து, பதப் பொருள், எடுத்துக்காட்டு முதலானவற்றைக் கொண்டு செய்யப் பட்டது, இவ்வுரை. இதனைச் சேலூர் முத்தையா முதலியார் தம் உரைப்பாயிரத்தில் உரைக்கிறார்.[2]

> "...தமிழினிது உணர்பவர்க் கெல்லாம்
> துணையீ தாமெனத் தோன்றுநன் னூற்கு
> நயன்மிகு சங்கர நமச்சி வாயனுற்
> பயன்மிகச் செய்திடப் பட்டதன் பின்னர்த்
> தவஞா னந்தனில் சால்புகூர் துறைசைச்
> சிவஞான முனிவனுற் றிருந்திடப் பட்ட
> விருத்தி யுரைதனை வெளிப்படச் சுருக்கிக்
> கருத்துப் பதப்பொருள் காட்டுமற் றும்சில
> உறுமுறை காண்டிகை யுரையுளங் கொண்டு
> சிறுவரும் உணர்தருஞ் செவ்வியின் செய்தனன்"

உரையில் இடம் பெற்றுள்ள இன்றியமையாச் செய்திகள்: கொளுவை முதலிற் கூறி, பதவுரை, காட்டு என உரையமைந் துள்ளது. சில இடங்களில் அரிய குறிப்பை அளித்தலும் உண்டு. சான்று: நூல் என்றது ஆகுபெயராம்.[3] ஆங்காங்கே உத்தி, மதம் முதலானவற்றைப் பொருத்திக் காட்டலும் உண்டு. இதனை 57, 58, 90, 94, 97, 100, 101, 102, 10 , 124, 125, 137, 171; (மதம்) 105 ஆகிய நூற்பா வுரைகளில் காணலாம்.

---

1. நன்னூற் காண்டிகை யுரை புதுக்கிய பதிப்பு, ப வாசுதேவ முதலி யார், மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை, 1900, செப்டம்பர், இப் பதிப்பைச் சிதம்பரம் தி.க. இராசேசுவரன் கொடுத்துதவினார்.
2. விசாகப் பெருமாளையர், நன்னூற் காண்டிகை உரை, 1840, உரைப் பாயிரம்.
3. விசாகப் பெருமாளையர், நன்னூற் காண்டிகையுரை, 24, 291.

பதவியல், வடமொழி யாக்கத்தில், வடமொழி எழுத்துகளையே எடுத்துக்காட்டி, நூற்பாவோடு பொருந்த உரைப்பர். வடமொழி எழுத்துகளையே எடுத்துக்காட்டிய முதல் உரைகாரர் இவரே. "இடையுரி வடசொலின் இயம்பிய கொளாதவும்" என்ற 239ஆம் நூற்பாவிற்கு உரை எழுதும் போது, தீர்க்க சந்தி, குணசந்தி, விருத்தி சந்தி ஆகியவற்றைப் பொருத்திக் காட்டுவர். இவற்றை முதன் முதலில் நன்னூல் இலக்கணத்தோடு இணைத்துக் காட்டியவர் இவரே. வடநூலின்படி சொற்களும் பொருள்களும் மும்மூன்று வகைப்படும். செஞ்சொல், ஆக்கச்சொல், குறிப்புச் சொல்; செம்பொருள், ஆக்கப்பொருள், குறிப்புப்பொருள் என 290ஆம் நூற்பாவுரையில் குறிப்பர். "ஆறனுருபும் ஏற்கும் அவ்வுருபே" என்ற 293ஆம் நூற்பாவிற்கு உரை வரையும்போது, ஆரும் வேற்றுமை உருபாகிய 'அது' பிற உருபுகளையும் ஏற்கும் என்று கூறுதல், எழுவாய் உருபு ஏனைய உருபுகள் ஏற்றல் என்று கூறுவர். நான்காம் வேற்றுமைச் சொல்லுருபுகளாக 298 ஆம் நூற்பா உரையில் பொருட்டு, நிமித்தம் என்பவற்றைக் காட்டி, எடுத்துக்காட்டையும் நல்குவர். இடையியல், உரியியல் என்ப வற்றிற்கு மாறுக, இடைச் சொல்லியல், உரிச் சொல்லியல் என்றே குறிப்பர்.

ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் இடையே உள்ள வேறுபாட்டைச் சிவஞான முனிவரை ஒட்டி விரிவாய் விளக்குவர். "ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் தம்பொருள் உணர்த்தாது பிறிது பொருள் உணர்த்துதலால் ஒக்குமாகலின், தம்முள் வேற்றுமை யென்னவென்றால் ஆகுபெயர் பொருள் இடம் காலம் முதலிய சம்பந்தத்தால் வேறு பொருளை உணர்த்தி ஒரு சொல்லாய் வரும். அன்மொழித் தொகை, வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத் தொகையாற்றலால் வேறு பொருளை உணர்த்திப் பல சொல்லாய் வரும். ஆகுபெயர் நியதிப் பெயராய்த் தொன்று தொட்டு வரும். அன்மொழித் தொகை தொன்றுதொட்டு நியதிப் பெயராய் வாராமல் பாடுகிற புலவன் வியப்பு முதலிய காரணத் தால் சொல்ல ஆங்காங்கு வரும். இவையே ஒன்றற்கொன்று வேறுபாடாம்"[1] என்பது இவர் தரும் விளக்கம்.

விசாகப் பெருமானையர் உரையில் உள்ள தனித் தன்மைகள்: இவர் உரை, முதல் காண்டிகை என்ற சிறப்பிற்கும், முதன் முதல் அச்சான நன்னூல் உரை என்ற சிறப்பிற்கும் உரியது. இவர்

1. விசாகப் பெருமானையர், நன்னூற் காண்டிகையுரை, 290

நன்னூல் உரையுலகில் தொடங்கி வைத்த தனிப்பாங்கு 'எளிமை' என்பது தான். வடமொழி எழுத்து வரிவடிவங்களையே எடுத்தாண்டதும், தீர்க்க சந்தி முதலானவற்றைப் பொருத்திக் காட்டியதும், வேற்றுமைக் குரிய சொல்லுருபுகளையும் பொருத்திக் காட்டியதும் உரையுலகில், இவர் எடுத்துக் கொண்ட முதல் முயற்சிகளாகும்.

13

ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை உரை

"செந்தமிழில் பவணந்தி முனிவன் செய்த
சிறப்புடைய இலக்கணமாம் நன்னூல் கற்போர்
சிந்தைகொள நனிவிளங்கி இலகு போதச்
செழும்பெயரோ டுரையொன்று செய்து தந்தான்
செந்தமிழும் ஆங்கிலமும் நன்கு கற்றோன்
செந்தமிழில் பலநூற்கள் செய்த சீமான்
புந்தியினில் மிகச்சிறந்தோன் முத்துத் தம்பிப்
புலவனெனப் பலர்புகழும் புலமை யோனே"

—நன்னூல் இலகு போதச்சிறப்புப் பாயிரம்
சுன்னகம் அ. குமாரசாமிப் புலவர் பாடியது.

யாழ்ப்பாணத்து மானிப்பாய் ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை (உரை செய்த காலம் கி. பி. 1842) : மானிப்பாய் என்ற ஊர், யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் உள்ளது. இவ்வூரில் உறைந்து வந்த ஆறுமுகம் பிள்ளை என்பாருக்கும் மனைவி சீதேவிக்கும், மூத்த செல்வராகப் பிறந்தார். இளமையில் தம்மூரில் கல்வி பயின்று, பின்னர், பிற்றர் பேர்சிவல் பாதிரியாரால் நிறுவப்பட்ட வெஸ்லியன் மத்தியப் பாட சாலையில் பயின்றார். அப்போது அப்பள்ளித் தலைமையாசிரியராக இருந்த வில்லியம் நெவின்சு சிதம்பரப்பிள்ளை அவர்களிடத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்களைச் செவ்வையாய்க் கற்றார். 1876 ஆம் ஆண்டில் நாவலம்பட்டிக்குச் சென்று அங்கு ஆசிரியராய்ப் பணியாற்றிக் கொண்டிருந்தார். போதிய ஊதியம் கிடைத்த போதிலும் இந்தியா செல்லும் ஆவலினராய், 1880 இல் இந்தியாவுக்குப் பயணமானார். தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி அழகிய நாட்டகம் செட்டியார் என்பார் ஆண்மக்களுக்கு அவர் பின்னைகட்குப் பாடம் பயிற்றுவித்துக் கொண்டிருந்தார். பின்னர்

நாகப்பட்டினம் ஆண்டர்சன் (Anderson & Co) கம்பெனியின் தலைமை எழுது வினைஞராகவும் கணக்காளராகவும் கடமை யாற்றிக் கொண்டிருந்தார். தன் எழுத்து ஆர்வத்திற்கும் படிப்பு ஆர்வத்திற்கும் கணக்கர் வேலை ஒத்து வரவில்லை. தஞ்சை மாவட்டத்தில் உள்ள பொறையாறு என்ற ஊரில் இருந்த தவசிமுத்து நாடார் என்பவர் இவரை அழைத்து 'சத்தியாபிமானி' என்ற இதழுக்கு ஆசிரியராகப் பொறுப்பேற்கச் சொன்னர். பொறுப்பேற்றுப் பலகாலம் செவ்வையாய் அவ்விதழை நடத்தி விட்டு ஓய்வு பெற்றார். ஓய்வுபெறும் வேளையில் இவர் மீது நல்லெண்ணம் கொண்ட நாடார் சமூக மக்கள் ஒரு பெருந் தொகையை அன்பளிப்பாக அளித்து, அதனைத் தமிழ் வளர்ச்சிக் காகப் பயன்படுத்த வேண்டினர். ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் அப்பணத்தைக் கொண்டு, 1885ஆம் ஆண்டு ஜூபுலி அச்சகம் என்ற ஒன்றைச் சென்னையில் தொடங்கினர். இவ் வச்சகம் மூலம் பல நூல்கள் வெளியிடப்பெற்றன. காளிதாசன் வாழ்க்கை வரலாற்றை வடமொழியினின்று மொழிபெயர்த்துப் பல பதிப்புகள் அச்சிட்டு வெளிப்படுத்தினர். 1893ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்துக்குத் திரும்பினர். வண்ணார்பண்ணையில் ஆறுமுக நாவலர் வாழ்ந்த இல்லத்தை விலைக்கு வாங்கினர். அவ்வில்லத்திற்கு 'நாவலர் கோட்டம்' எனப் பெயரிட்டு அதற்குப் பக்கத்திலேயே 'நாவலர் அச்சகம்' என்ற அச்சகம் ஒன்றையும் நிறுவினர். அங்கிருந்து கொண்டு தமிழ்த்தொண்டும் சைவசமயத் தொண்டும் புரிந்ததோடு மட்டுமன்றி, மருத்துவத் தொண்டும் புரிந்தார். அதற்கு அறிகுறிபாக 'வைத்திய விசாரணி' என்ற பெயருடன் ஒரு மாத இதழையும் நடத்தினர். மதுரையில் இராமநாதபுரம் பாண்டித்துரைத் தேவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினை நிறுவிய போது இவர் பெரிதும் ஒத்துழைத் தார். சங்கத்தாரால் நடத்தப்பட்ட தேர்வுகளுக்குத் தேர்வாள ராகவும் பணியாற்றினர். 'செந்தமிழ்' இதழில் கட்டுரைகள் பலவற்றை எழுதினர். இவர் பல நூல்களை இயற்றினர். பல நூல்களைப் பதிப்பித்தார். நன்னூல் உதாரண விளக்கம் (1842), இலங்கைச் சரித்திர சூசனம் (1886), காளிதாச சரித்திரம் (1886), அபிதான கோசம் (1902), பாரதச் சுருக்கம் (1903), நன்னூல் இலகு போதம் (1904), ஆங்கிலம்—ஆங்கிலம்-தமிழகராதி (1907), கைலாய மாலை (ஆங்கிலப் பெயர்ப்பு –1910), சிவலிபன் தமிழ் இலக்கணம் (1911), யாழ்ப்பாணம் சரித்திரம் (1912), தென்மொழி வரலாறு (1920) ஆகியன இவர் பதிப்பித்தவை. இவர் சுன்னாகம் குமாரசாமிப் புலவரோடும் பொன்னம்பலம் இராமநாதனோடும் சேர்ந்து வினைப்பகுபத விளக்கம், பகவத் கீதை தமிழ்மொழி

பெயர்ப்பு, 'தி எதிகல் எபிக்ராம்ஸ் ஆஃப் அவ்வையார்' (ஆங்கிலம்) ஆகிய நூல்களை வெளியிட்டார். ஒன்பது பெருந் தொகுதிகளையுடைய கலைக்களஞ்சியம் அண்மையில் தமிழில் வெளிவந்தது. 1910ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ஆ. சிங்காரவேலு முதலியாரால் இயற்றப்பட்ட அபிதான சிந்தாமணி, மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. இவ்விரண்டிற்கும் முன்னோடியாக, 1902 ஆம் ஆண்டில் "அபிதான கோசம்" என்ற நூல் 395 பக்கங்கள், உடையதாய் ரூ. 5 விலையில் இவர் வெளியிட்டார். இதுவே தமிழில் வெளிவந்த முதற் கலைக் களஞ்சியமாகும்.

அன்மொழித் தொகை ஆராய்ச்சி: இவர், அக்காலத்திலேயே அன்மொழித் தொகை—ஆகுபெயர் பற்றி நுணுகி ஆராய்ந்திருக்கிறார். இவ்வாராய்ச்சி பிலவ ஆண்டு ஆவணி மாதம் யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் அழுத்தி வெளியிடப் பெற்றிருக்கிறது. சேனாவரையர், சிவஞான முனிவர் ஆகியோரின் கருத்துகளை ஒப்பிட்டு ஆராய்ந்து இவர் கூறும் முடிவு பார்வைக்குரியது: "மேலே காட்டிய அன்மொழித் தொகைச் சொற்கள் எல்லாவற்றையும் ஆகுபெயரென்று இத் தொல்லாசிரிய சிரோமணிகள் கருத்தை ஊன்றி ஆராயுமிடத்து, அச் சொற்களுக்குத் தொகை இலக்கணம் கூறவேண்டியவிடத்து அன்மொழித் தொகை என்றும், பெயரிலக்கணம் கூறவேண்டியவிடத்து ஆகுபெயரென்றும் கூறலே உண்மை இலக்கணமாம்.[1]

இவரது ஆராய்ச்சி முடிவுக்கே தற்காலத்து அறிஞர் ஒருவரும் வந்திருக்கிறார்[2] என்பது முத்துத் தம்பிப் பிள்ளை அவர்களது ஆராய்ச்சி வண்மையை உறுதிப்படுத்துவதாகும். "ஈழ நாட்டு அறிஞர்; நுண்மாண் நுழைபுலம் உடையார்; பல கலைத் துறை போனவர்; பல வகை நூலாக்கிய அறிஞர்" என்று இவரை, சுன்னாகம் குமாரசாமிப் புலவர் பரக்கப் பாராட்டும் மொழி இவருக்கு முற்ற பொருந்துவதாகும். இத்தகைய பாராட்டுப் பெற்ற இவ்வறிஞர், கி.பி. 1917 நவம்பர் 3ஆம் நாள் இவ்வுலகை நீத்தார்.

நன்னூல் உரை: இவர் நன்னூலுக்குச் சிறியதோர் உரை நூலை எழுதி வெளியிட்டார். "நன்னூல் உதாரண விளக்கம்" என்ற பெயரையுடைய இந்நூல் 26 பக்கங்களை உடையது.

---

1. ஆகுபெயரும் அன்மொழியும், 1841, ப 21
2. ஆபிரகாம் அருளப்பன், ஆகுபெயர் அன்மொழித்தொகை, அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறைக் கருத்தரங்கு, 1978

நூற்பாக்களைத் தாராமல் பல்வேறு எடுத்துக்காட்டுகளை மட்டும் தருவது. இந்நாட்டு இளைஞர், சொல்லிலக்கணம் முற்றுங் கற்றுத் தேர்ந்தும், அவருட் பெரும்பான்மையோர், அவ்விலக்கணத்தைத் தாங்கற்கும் இலக்கியத்தில் ஒருங்கமைத்துக் காட்டும் வலியில்லாதிருக்கின்றனர். இந்நிலை கண்டு, இவர் இந்நூலை யாத்ததாகத் தம் பதிப்புரையில் குறிப்பிடுகிறார்.[1] 'நூல் பயிற்சிக் கேற்பச் செய்கையின் பயிற்சியும் அவர்க்குச் சித்தியாம் வண்ணம், அவ்வப் பாகுபாட்டிற்கேற்ப உதாரணங்களை எடுத்துக் காட்டி, இலக்கணம் கூறி முடிப்பின் உபயோகமாம் என்பது கருதியே இந்நூல் செய்தாம்' என்பது அக் குறிப்பாகும். இந்நூலில், சொல்லதிகாரத்தில் உள்ள பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்பவற்றிற்கே எடுத்துக்காட்டுகள் நல்கப் பட்டுள்ளன. எனினும் தொடக்கநிலை மாணாக்கர்க்கு மிகவும் பயன்படும் நூலிது. ஒரு காலத்தில், இலக்கண உரை என்பது, எடுத்துக் காட்டு நல்கும் அளவிலேயே நின்றது என்ற உரை வரலாற்றுண்மையை இந்நூலின் பெயரும், பொருளடக்கமும் உறுதி செய்கின்றன.

நன்னூல் இலகு போதம்: இந்நூல், இதற்கு முன் வெளிவந்த பல உரைகளையும் தழுவித் தெளிவுற எழுதிய உரையோடு வினாவிடைகளுஞ் சேர்த்து, செய்யப்பட்டது. இவ் வுரைக்கு யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கச் செயலரும், சைவப் பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியருமாகிய சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரால் சிறப்புப் பாயிரம் ஒன்று வழங்கப் பட்டுள்ளது.[2] அஃது வருமாறு:

"செந்தமிழில் பவணந்தி முனிவன் செய்த
சிறப்புடைய இலக்கணமா நன்னூல் கற்போர்
சிந்தைகொள நனிவிளங்கி இலகு போதச்
செழும்பெய ரோடுரை யொன்று செய்து தந்தான்
செந்தமிழும் ஆங்கிலமும் நன்கு கற்றோன்
செந்தமிழில் பலநூல்கள செய்த சீமான்
புந்தியினின் மிகச்சிறநதோன் முத்துத் தம்பிப்
புலவனெனப் பலர்புகழும் புலமை யோனே"

---

3. நன்னூல் உதாரண விளக்கம், இரண்டாம் பதிப்பு, பிலவ ஆண்டு, ஆவணி ப. 1. இதன் புதிய மறுபதிப்பு அண்மையில் (1974 சனவரி) நடந்த ஈழத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்டது.

1. நன்னூல் இலகு போதம், மூன்றும் பதிப்பு, யாழ்ப்பாணம், நாவலர் அச்சுக் கூடம், 1918, சிறப்பும் பாயிரம்.

இந்நூலின் அமைப்பும், உரைகூறு முறையும் புதுமை யானவை. தொடர் வினுக்களாக அமைத்து, ஒவ்வொன்றிற்கும் அவ்வவ் விடங்களில் உரையியற்றுவதன் மூலமாகவே நூற்பாக் களுக்குப் பொருள் விளக்கம் செய்வது இதன் முறை. (அ) ஒவ்வொரு நூற்பாவின் முன்னும் ஒரு வினு, (ஆ) அதன் பின் நூற்பா, (இ) அதன்பின் பதம் பிரித்து அளிக்கப்பட்ட நூற்பா (ஈ) அதன்பின் நூற்பாவிற்குரிய பொருள், (உ) அதன்பின் சில வினுக்கள் – அவற்றிற்குரிய விடை பற்றிய குறிப்பு என்ற வரிசையில் ஒவ்வொரு நூற்பாவும் விளக்கம் பெறுகின்றது. 415 பக்கங்கள் உடைய இந்நூல் மாணவர்க்கு எளிதில் விளங்க வல்லது. அக்காலத்தில் இந்நூல் வெளிவந்த ஆறே மாதங் களுக்குள் 500 படிகள் விற்பனையாகி விட்டன என்று இரண்டாம் பதிப்பு முகவுரையில் குறிக்கப்படுவதால், இந்நூலுக்கு இருந்த வரவேற்பைப் புரிந்து கொள்ளலாம். உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்ற நன்னூல் 3, 4, 5 ஆம் இயல்கள் அனைத்தும் இந்நூலின்கண் புணரியல் என்ற பொதுத் தலைப்பின்கீழ் கொடுக்கப் பட்டுள்ளமை தனிப் பார்வைக்குரியது.

"தமிழுக்கு இலக்கண நூல்கள் பல உள. அவையெல்லா வற்றுள்ளும் நன்னூல் மிக்க திட்பமும் நுட்பமும் உடையது. அதனை மாணாக்கர் வருத்தமின்றிக் கற்குமாறு, வினுவும் வினுவிற் குரிய சூத்திரமும் சூத்திரப் பாகங்களும் பெரும்பாலும் விடையாக நிறுத்தியும், அவற்றோடு சூத்திரங்களையும் உரையையும் உதாரணங்களையும் தந்தும், மாணாக்கர்க்கு மயக்கம் தருவனவா யுள்ள இடங்களை எல்லாம் நன்குக விளக்கியும் முடித்தாம்" என்பது இவர்தம் முதற்பதிப்பு முகவுரை வாசகம்.[1] இவ் வாசகமே இந்நூலுக்குரிய தனித் தன்மையைச் சுட்டுகிறது.

நன்னூல் இலகு போதம் கி.பி. 1904ஆம் ஆண்டில்தான் வெளியிடப்பட்டது. எனினும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்து, அந் நூற்றாண்டிலேயே பிறிதோர் உரை நூலும் வழங்கிய முத்துத் தம்பிப் பிள்ளையே இந்நூலையும் செய்து வெளியிட்டதால் இந்நூலைப் பற்றிய ஆய்வும் இங்கேயே குறிக்கப்பட்டது.

1. நன்னூல் இலகு போதம், மூன்றும் பதிப்பு, முகவுரை, ப. 1.

14

இராமானுச கவிராயர் உரை

முகவை இராமானுச கவிராயர் (உரை செய்த காலம் கி.பி. 1847): "As a loss not only to himself (Ramanuja Kavirayar), but also to the interests of the Tamil literature generally.

His thorough knowledge of the language; the native vigour of his mind; his power of long, continued, patient labour, his delight in work, together with his manliness and integrity or character so remarkable in a Hindu, made him to me a helper in my Tamil studies and pursuits, whose value I could not ever estimate. But he is gone; and I shall enjoy his aid no more."

—Draw, Amplification of Parimelazhagar's Comments on the Kural, Volume II, 1842.

உரையாசிரியராகிய இயற்றமிழாசிரியர் இராமானுச கவிராயருடைய ஊர் முகவை எனப்படும் இராமநாபுரம். வைணவ மதச் சார்பினர். சிவஞான முனிவரின் மாணவருள் ஒருவராகிய இராமநாதபுரம் அரசரின் அவைக்களப் புலவராகிய சோமசுந்தரக் கவிராயரிடம் இவர் தமிழ் கற்றார். அவரிடம் கற்றது பற்றி நூல் பாயிரத்தில்,

"சிவஞான தேசிகன் சேவடிக் கன்புபூண்
டவனூல் உணர்த்திய ஐந்தியல் ஓர்ந்தனன்
சோமசுந் தரனெனும் தொன்னூற் குரவன்
காமர்செஞ் சேவடி கணணிணை யாககொண்
டியல்பல உணர்ந்தோர் எணணிலர் அவருழைத்
துயல்வரு கீழ்மையிற் றெடர்கீழ் நிலையினேன்"

என்று குறிப்பிடுகிறார். நாற்பது வயது வரை கல்லாமல் இருந்த பின்பே கற்றதாகவும், இவர் பின்னர் கற்றது பற்றிச் சில கதைகள் வழங்குவதாகவும் கூறும் டாக்டர் போப், அவற்றுள் ஒன்றைக் குறித்திருக்கிறார்.[1]

முகவை நகரத்தை விட்டு விட்டுச் சென்னைக்கு வந்தார், சென்னை வண்ணாரப் பேட்டையில் வந்து தங்கினார். இவர் வந்து தங்கிய தெருவில் பிள்ளையார் கோயில் ஒன்று இருந்தது. இவர் குடியிருந்த வீதி வழியே ஒருவன் இரட்டை மாட்டு வண்டியின் பின் பளுவுக்காக ஒரு கருங்கல்லை வைத்துக்கொண்டு போனானம். அந்தக் கல்லில் அனுமான் உருவம் அமைந்ததால் அதனைக்கண்ட கவிராயர், வைணவப் பக்தியோடு, அவனிடமிருந்த அந்த அனுமானைப் போன்ற உருவக்கல்லை வாங்கி, அத்தெருவிலிருந்த பிள்ளையார் கோயிலில் அமைத்தாராம். அது முதற் கொண்டு அக்கோவில் சஞ்சீவிராயன் கோயில் எனவும், அக்கோயில் இருந்த தெரு சஞ்சீவிராயன் கோயில் தெரு எனவும், அக் கோயிலைச் சூழ்ந்துள்ள தெருக்கள் அனைத்தும் சஞ்சீவிராயன் பேட்டை எனவும் வழங்கலாயின என்பர்.[2]

இவர் சென்னையில் சொந்தமாக ஓர் அச்சியந்திர சாலை வைத்து நடத்தினர். இவர் பலருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தார். இவரிடம் அட்டாவதானம் வீராசாமிக் கவிராயர், களத்தூர் வேதகிரி முதலியார், விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர், நீதிபதி தாண்டவராய முதலியார் முதலானோர் தமிழ் கற்றனர். இவர்களன்றி தாம்சன் கிளார்க்கு, இராஜஸ், துரு ஐயர், போப் ஐயர், இரேனியஸ் ஐயர் முதலிய ஐரோப்பியரும்

---

1. போப் டாக்டர் ஜி.யு., ஆங்கிலத் திருக்குறள் முன்னுரை.
2. இக்கோயில் மிகச் சிறியதாயினும், 150 ஆண்டு பழமை உடையது என்பதற்குச் சான்றாக இரண்டு கல்வெட்டுகள் அங்கு உள்ளன. கோயில சுற்றுப் பிரகாரத்தில் உள்ள கல்வெட்டு வாசகம்: "ரங்கசாமி நாயுடு ஜாண்டரப் பிள்ளையார் கோவில் தெரு பழய வண்ணரப் பேட்டை, சென்னை. 30-7-37 (1837)" பிறிதொரு கல்வெட்டு, கோயில் கருவறை வாயிற்படியில் உள்ளது. அக் கல்வெட்டின் வாசகமாவது:

   உ

   சிவமயம்

   1874.8.3. இந்தப் பேட்டை நாகூர் மங்களம்மாள் செ.ஜி. அனுமந்தபுரம் வீரபத்திரசாமி கயிங்கரியத்திற்கு சமர்ப்பித்தது.

இவரிடம் தமிழ் கற்றனர். இவருக்கு இருந்த தனிப்பெருமை, பல நூல்களைப் படைத்தது, பதித்தது, உரைவரைந்தது ஆகும். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, நன்னூல், திருக்குறள் ஆகியவற்றிற்கு உரையும், திருவேங்கட அனுபூதி, பார்த்தசாரதி பதம்புனை மாலை, வரதராஜர் பதிற்றுப்பத்தந்தாதி, பச்சையப்ப வள்ளல் பஞ்சரத்தின மாலிகை, இலக்கணச் சுருக்கம், அத்தும போதப் பிரகாசிகை (வடமொழியினின்று பெயர்க்கப் பட்ட நூல்) ஆகிய நூல்களைப் படைத்தும் அளித்தார். இவை யன்றி குடாரம் (சென்னை மாநகர்வயின் இலக்கணக் கவிஞரிற் சிலர் குறள் மீதும் பரிமேலழகர் உரை மீதும் மருண்டு சொல்லிய குற்றங்களாகிய காடுகளைக் களைந்த கோடாலி) என்ற பெயரில் ஒரு கண்டன நூல் வெளியிட்டார். இவை யாவும், இவரது சொந்த அச்சகத்திலேயே அழுத்தப்பட்டன. திருவேங்கட அனுபூதி கி.பி. 1847 இலும், இலக்கணச் சுருக்கம் கி.பி. 1843 இலும் வெளி யாயின. அத்த போதம் கி.பி. 1840 இல் வெளியாயிற்று. கி.பி. 1848 ஆம் ஆண்டு சூடாமணி நிகண்டில் பதினோராம் நிகண்டு இவராற் பதிப்பிக்கப்பெற்றது. டாக்டர். வின்சுலோ ஆங்கிலமும் தமிழுமாகிய பெரிய அகராதி ஒன்றை எழுதினர். இவருக்குக் கவிராயர் மிக உதவியாக இருந்தார். அதனைப் பாராட்டி அவர் எழுதுகிறார்: "அகராதியை அணியம் செய்யும்போது, எனக்குப் பல தமிழர்கள் உதவி செய்தார்கள். அவர்களுள் முதலாமவர் இராமானுச கவிராயர் ஆவார். இவர் சென்னையில் நெடுங்காலமாய், புகழ் பெற்ற தமிழாசிரியராய் விளங்கியவர்."[1]

கவிராயர் உரை : கவிராயரின் முகவை வாழ்க்கை அவருக்கு தமிழைக் கொடுத்தது. சென்னை வாழ்க்கை நல்ல செல்வாக்கைக் கொடுத்தது. சென்னை நகரில், உள்ளூர்த் தமிழறிஞர்களின் பழக்கமும், ஐரோப்பிய அறிஞர்களின் பரிவும் பழக்கமும் இவருக்குப் பெருகின. ஐரோப்பியர் சிலர் இவர் மீது வைத்திருந்த மதிப்பு ஜி.டி. போப், டாக்டர் வின்சுலோ, துரு ஆகியோர் தம் நூல் முகவுரையில் எழுதியுள்ள புகழ்மொழிகளால் புலனாகிறது. இந்த அறிஞர்கள் மீது கவிராயர் கொண்டிருந்த மதிப்பு இவர் பதித்த நன்னூல் உரைப்பாயிரத்தால் அறியப்படுகிறது.[2]

"இல்லையாந் தன்னிகா எனஉல கேத்தூஉம்
ஒல்லையாந் 'துரு' எனும் ஒளிகொள் போதகனும்
ஏமசன் மார்கத் தியனிலை வழாஅத்
தாமசன் கிளார்க்கெனுந் தகைப்புர வலனும்

1. வின்சுலோ அகராதி, முன்னுரை, 1862, ட. 9 (ஆங்.)
2. இராமானுச கவிராயர், நன்னூல் விருத்தியுரை, 1847, உரைப்பாயிரம்

துராசையி னீங்கித் தொன்னெறி வழாஅ
இராச னெனனும் பெயரியற் கோமகனும்
இந்நூற் குரையீங் ஙனமியற் றுகஎன
நன்னூற் குரைசெய நாடினன்"

என்பது கவிராயரே செய்த வுரைப்பாயிரம்.

ஐரோப்பியர், நன்னூல் உரை எழுதுமாறு கவிராயரை ஊக்கப் படுத்தியதுடன் பொருளுதவியும் செய்திருக்கின்றனர். கி.பி. 1845 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் தமதுடைய அச்சகத்திலேயே, நன்னூல் விருத்தியுரையை அச்சிடத் தொடங்கியிருக்கிறார். அச்சுப்பணி, கி.பி. 1847 நவம்பர் திங்களோடு முடிவடைந்திருக் கிறது. இடையில் பொருள் தட்டுப்பாடு நேர்ந்திருக்கிறது. இதனால், கி.பி. 1846 செப்டம்பர் முதல் நாள் ஓர் அறிக்கை ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிறார். அவ்வறிக்கையில் நன்னூல் உரை நூலுக்கு முன்பணம் கொடுப்போருக்கு ரூ. 5/- விலையுள்ள நன்னூல் பதிப்பு ரூ. 4-க்கு அளிக்கப்படும் என்றும் அறிவித் திருக்கிறார். இவ்வறிவிப்பு சென்னையினின்றும் விடுக்கப் பட்டுள்ளது. இவ்வறிவிப்பு கி.பி. 1847 இல் அச்சிட்டு முடிந்த நன்னூற் பதிப்பின் பின்னிணைப்பாக நன்றியோடு கவிராயரால் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்விணைப்பிலிருந்து 135 படிகளுக்கான முன்பணத்தை 77 பேர் கொடுத்துள்ளனர் என்பதுவும், இவர்களில் மூன்றில் ஒரு விழுக்காடு ஐரோப்பியர் என்பதுவும் தெளிவா கின்றன. நூல் வெளி வரும் முன்பே இவரது வேண்டுகோளுக் கிணங்க துருவும் (W. H. Drew), கிளார்க்கேயும் (I. Clarke), பிரௌனேயும் (C. A. Browne) கொடுத்துள்ள பாராட்டுக் குறிப்பு கள் மேற்கண்ட வேண்டுகோள் அறிக்கையுடன் இணைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுல் இவருக்கு ஐரோப்பிய அறிஞ ருடன் இருந்த தொடர்பு விளக்கமாகிறது. இவ்வுறவால் இவர் பெற்ற பிறிதொரு பயன் ஆங்கில அறிவாகும். முன்பே இவரிட மிருந்த தமிழறிவும், சமற்கிருத அறிவும் ஆங்கில அறிவோடு கலந்து இவரைப் பன்மொழிப் புலவராக்கின. இப் பன்மொழிப் புலமை, முற்ற இவர் உரையில் பயன்படுத்தப் படாவிடினும் ஓரளவு பயன்படுத்தப் பெற்றுள்ளது என்றே கூறுதல் வேண்டும். ஈண்டுப் பிறிதொரு குறிப்பை நினைத்தல் வேண்டும். இவருடைய மாணக்கராகிய விசாகப் பெருமாளையர், இவருக்கு முன்பே 1839-இலேயே நன்னூல் காண்டிகையுரை எழுதி வெளியிட்டு விட்டார்.[1]

1. கி.பி. 1940இல் கா ரா. கோவிந்தராச முதலியார் தன் நன்னூல் இராமா நுச கவிராயர் உரைபதிப்பில் விசாகப் பெருமாளையர் இராமாநுசக் கவி ராயரைப் பார்த்துத் தன் காண்டிகையுரையைப் பதிப்பித்ததாகக் கூறி யுள்ளது (ப. 9) காலவழு.

எனினும், கால நீட்சியில், இவரது உரை நிரம்பக் கருத்துகளை, செய்திகளைத் தாங்கி வெளிவந்தது என்று கூறுதல் வேண்டும். விசாகப் பெருமாளையரின் காண்டிகை உரை, தொடக்க நிலை மாணவர்களுக்குப் பயன்படும் என்றால் இராமானுச கவிராயரின் விருத்தியுரை புலத்துறைமுற்றிய புலமையோர்க்குப் பயன்பட வல்லது என்று கூறுதல்வேண்டும். அவ்வாறுகூறும்அளவிற்குத் தொல்காப்பியம், தொல்காப்பிய உரைகள், நன்னூல், நன்னூல் உரைகள், இடையில் தோன்றிய இலக்கிய இலக்கணங்கள் அனைத்தையும் பயின்று இவர் உரையியற்றியுள்ளார். இவரது அறிவுத் திறத்தில் ஆழ்ந்துபோன தொல்காப்பியம் வரதராச முதலியார், "ஏருலவு சென்னையெல்லாம் உரைத்துரைத்து நோக்குமிடம் எங்கும் செந்தேன் ஏருலவு தமிழ்க்கவிஞர்" என்று பாராட்டுகிறார். அட்டாவதானம் வீராசாமிக் கவிராயர், வேதகிரி புலவர், சேமங்கலம் தமிழ்ப்புலமை நாராயண உபாத்தியாயர், சத்தியவேட்டித் தமிழ்ப் புலமைச் சென்னகேசவ உபாத்தியாயர் ஆகிய புலவர் பெருமக்கள் கவிராயரை உயர்ந்த மொழிகளால் புகழ்ந்து போற்றியுள்ளனர்.[1] இத்துணைச் சிறப்பு வாய்ந்த அறிஞரால் இயற்றப்பட்ட இவ்வுரை கி.பி. 1867இல் வெளியாயிற்று. இம்முதற் பதிப்பின் சில பகுதிகள் சிதைந்துவிட்டன. அவற்றை இலக்கண வித்துவான் மயிலை சண்முகம் பிள்ளை கண்டறிந்து எழுதி அச்சிட்டனர்.[2]

இலக்கிய இலக்கண மேற்கோள் : கவிராயர், பண்டைத் தமிழ் இலக்கியங்களில் மிக்க ஈடுபாடு உடையவர்; பயிற்சி உடையவர். இதனை இவர் ஆண்டுள்ள இலக்கிய மேற்கோள்களிலிருந்து உணரலாம். இவர் இலக்கியங்களன்றி, தொல்காப்பியம் அதன் உரைகள், நன்னூல் உரைகள் முதலான இலக்கணங்களையும் இலக்கண உரைகளையும் ஆங்காங்குப் பெயர் சுட்டியும், சுட்டாமலும் ஆண்டிருக்கின்றனர். இவர், இலக்கண இலக்கியங்களை மேற்கோளாகக் காட்டியுள்ள இடங்கள்: அகநானூறு–நன்னூல்: 153; இலக்கண விளக்கம்–58, கம்பராமாயணம்–239, தண்டியலங்காரம்–17, திருக்குறள்–3, 91, 122, 125, 155, 172, 226, 253, திருவாய்மொழி–239, தொல்காப்பியம்–2, 94, 121, 124, 125, 128, 203, 204, 214, 255, நற்றிணை–172, நாலடி-

1. இராமானுச கவிராயர், நன்னூல் உரை, 1840. பலராலும் வழங்கப் பட்டுள்ள உரைப் பாயிரங்களைப் பார்க்க.
2. கோவிந்தராஜ முதலியார், கா. ர., இராமானுச கவிராயர் நன்னூல் உரைப் பதிப்பு, 1940, ப. 1;

யர்-183, பரிபாடல்-96, புறநானூறு-155, 172, 183, 229, 239, பொருநராற்றுப்படை-183, மலைபடுகடாம்-92, முத்தொள்ளாயிரம்-101, யாப்பருங்கலக் காரிகை-21, 75.

விருத்தியுரை எழுதுவதிலும், எடுத்துக்காட்டு நல்குவதிலும் மேற்கோள்கள் ஆளுவதிலும் கவிராயர், சங். ஐயும் முனிவரையும் ஆங்காங்குப் பின்பற்றியிருக்கிறார்[1]

கவிராயர் உரையில் இடம்பெற்றுள்ள இன்றியமையாக் குறிப்புகள் : மற்றைய உரைகாரரை இவர் ஓரளவு பின்பற்றி யிருந்தாலும், தம் நுண்மாண் நுழைபுலத்தால் கண்டு காட்டிய செய்திகள் பல உள்ளன.

'மலர்தலை உலகின்...' எனத் தொடங்கும் பாயிரத்தை ஏனையோர் சிறப்புப் பாயிரம் எனக் குறிக்க, இவர் நன்னூலில் பாயிரப் பகுதியில் இடம்பெற்றுள்ள சிறப்புப் பாயிர இலக்கணத்தினின்று வேறுபடுத்துவான் வேண்டி, 'சிறப்புப் பாயிரத் திலக்கியம்' என்று குறிப்பிட்டு இருத்தல், 'பொருத்தமான இதிகாச நிகழ்ச்சிகளை ஆங்காங்கே எடுத்துக்காட்டுதல், எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம் புரிந்ததை மறையோர் வேண்டா, மாண்டாரைப் பண்டழைத்துத் தந்த கண்ணனிடத்தும், துரோணாசாரியார் வேண்டா, வலக்கைப் பெருவிரல் அறுத்துத் தந்த வனசரன் (ஏகலைவன்) முதலியோரிடத்தும் காண்க' என்று காட்டுதல்[2], தொடுத்தலுக்கு எடுத்துக்காட்டு நல்கும்போது வான்மீகத்தைக் கம்பர் 12000 ஆக்கியதைக் காட்டுதல்[3], 'தொகை வகை விரி' என்பதை நூற்பாவோடு பொருத்தி, சார்பு என்றது தொகை, தனிநிலைப்பத்து என்றது வகை, 317 என்றது விரி என்று விளக்குதல்[4], வடமொழியிலுள்ள ரூடி, யோகம், யோகரூடி என்பவற்றை இணைத்துரைத்தல்,[5] அகரச் சுட்டுத் தூரப் பொருளையும், இகரம் சமீபப் பொருளையும் உகரம் எதிர்முகமின்றிப் பின் நிற்கும் பொருளையும் சுட்டுதலைக் காட்டி, உகரம் இவ்வாறு சுட்டி நிற்பதை 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்பதற்குப் பின்பக்கமாக முதுகு காட்

1. கோவிந்தராஜ முதலியார், கா. ர. இராமானுச கவிராயர் நன்னூல் உரைப்பதிப்பு, 1940, 62 முதலியன
2. மே. கா. நூ. 46
3. மே. கா. நூ. 50
4. மே. கா. நூ. 61
5. மே. கா. நூ. 62

டக் காண்பர் என்று பொருள் கூறிப் பொருத்துதல்[1], னகர ஒற்று வீடுபேறு பெறுதற்கு உரிய ஆண்மகனை உணர்த்துதலான், மெய் யிறுதி எழுத்தாகக் கொள்ளப்பட்டது என்று இளம்பூரணர் கருத் தினை ஒட்டி உரைகூறுதல்[2], தொல். நூற்பாக்களை உரையில் மேற் கோளாகக் காட்டும் போதும் இளம்பூரணர் பாடங்களையே பின்பற் றுதல்[3] முதலியன இவர்தரும் சில செய்திகள். உம்மைத் தொகைக்குக் 'கபில பரணர்' என்பதைப் பிறர் காட்ட 'கபில பாணர்' என்று இவர் காட்டுவர்.[4] சார்பெழுத்து முதலெழுத்தைச் சார்ந்து வருகிறது. இதனைத் தன் கால உவமை ஒன்றால் விளக்குகிறார். ஊதி யத்திற்கு முதல் பணம் காரணம் ஆதல் போல, சார்பெழுத்திற்கு முதல் எழுத்துக் காரணம் என்பர்[5]. 'மியாயிக' என்பதில் யகரம் இடையில் வந்துள்ளது. இதற்கு இவர் ஒருவரே காரணம் காட்டு கிறார். 'மாயிரு ஞாலம்' என்றால் போல யகரமெய் தோன்றி நின்றது என்பர்.[6] விளையியலை அடுத்துப் பொதுவியலை மற்றவர் வைப்பர். இவர் விளையியலை அடுத்து இடையியல் உரியியல்களை வைத்து இறுதியில் பொதுவியலை வைப்பர். இடையியல், உரியியல் என்பதற்கு மாற்றாக இடைச் சொல்லியல், உரிச் சொல்லியல் என்று ஆளுவர்

விருத்தியா? காண்டிகையா? : கவிராயர் தம்முரைக்கு விருத் தியுரை, காண்டிகையுரை என்ற இரு பெயர்களையும் வைத்திருக்கி றார். இரண்டு உரைகளும் வெவ்வேறு இலக்கணத்தை உடையன வாக இருக்க, ஒருரையே இரு பெயரையும் எங்ஙனம் பெறுதல் கூடும்? இதனைக் கவிராயர் விளக்குகிறார். "விருத்தியுரையைக் காண்டிகை உரை என்றது என்னெனின் 'ஐயமகல ஐங்காண்டிகை உறுப்போடு மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி' என்றார் ஆதலால், காண்டிகை, விருத்தியுரைக்கு அவயவமாம். ஆகவே, அவயவ ஆகுபெயராய் அவயவி ஆகிய விருத்தியுரை மேல் நின் றது" என்பது அவரது விளக்கம்.

ஏகார ஓகார நெடிலுயிர்களே மேற்புள்ளி பெறும் எனல் : "தொல்லை வடிவினை எல்லா எழுத்தும் ஆண்டெய்தும் எகர ஒகர

1. கோவிந்தராஜ முதலியார், க. ரா. இராமானுச கவிராயர், நன்னூல் உரைப்பதிப்பு, 1940, 66
2. மே. கா. நூ. 73
3. மே. கா. நூ. 431
4. மே. கா. நூ. 409
5. மே. கா. நூ. 4
6. மே. கா. நூ. 372

மெய் புள்ளி' என்ற நன்னூல் நூற்பாவை மாற்றித் 'தொல்லோ வடிவின எல்லா எழுத்தும்; ஆண்டெய்தும் ஏகர ஓகர மெய் புள்ளி' என்று புதுப்பாடம் காட்டுகிறார் கவிராயர்.[1] இவ்வாறு தான் காட்டுவதற்கு மூன்று காரணங்களையும் தருகிறார். (அ) 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே' என்ற தொல்காசிரியர் ஆணை, (ஆ) 'இறந்தது விலக்கல், எதிரது போற்றல்' என்ற உத்திகள், (இ) கவிராயர் காலத்தில் எழுதியோர்' ஏகார ஓகார நெடில்களுக்கே புள்ளியிட்டு எழுதினமை. இவற்றுள் மூன்றுவதாக இவர் காட்டிய காரணத்தை உறுதி செய்யச் சான்றுகள் உள்ளன.

கி.பி. 1827இல் சென்னைக் கல்விச் சங்கத்தினரின் ஆணைக்கிணங்க, காப்டன் என்றி ஆர்க்னஸ் (Henry Harkness) என்பவராலும், வெங்கடாசல முதலியாராலும் ஒரு நூல்எழுதப்பட்டது. இந்நூலின் பெயர். "A Tamil primier or First Book of a series, Designed to Assist Native Students on the Acquirement of a correct And Grammatical Knowledge of this Language" என்பதாம். இந் நூலில் நெடில் ஏகாரத்தைக் குறிக்க "ஏ" எனவும், நெடில் ஓகாரத்தைக் குறிக்க "ஒ" எனவும் அச்சிடப்பட்டுள்ளன. கி.பி. 1813இல் வெளியான திருச்சிற்றம்பலத் தேசிகரால் செய்யப்பட்ட இலக்கணச் சுருக்கத்தில் மேற்கண்டவாறே இரண்டு நெட்டுயிர்களும் புள்ளியுடன் தரப்பட்டுள்ளன. இவர்களோ ஒட்டியே, கவிராயரும் தம்முரையில், ஏகார ஓகாரத்தைப் பதிப்பித்துள்ளார். "எவல் வினை, ஒமைமரம்" என்றே இவர் பதிப்பில் நெட்டுயிர்கள் புள்ளியுடன் காட்டப்பட்டுள்ளன.[2] என்றாலும், மேற்கண்டவை உரைக் கருத்துகளாகத் தரப்படலாமே தவிர, மூல நூலைத் திருத்தி விளக்குதல் முறையாகாது. ஏனெனில் மூலநூலைத் திருத்துவது, அக்கால எழுத்து வரலாற்றுண்மையைப் பிற்காலத்தார் பிறழ உணர இடங்கொடுத்துவிடும்

உரையின் தனிச்சிறப்பு : கவிராயரின் ஐரோப்பியர் உறவும், ஆங்கில அறிவும், சமற்கிருதப் புலமையும், தமிழிலக்கிய இலக்கண ஆழமும், நன்னூல் விருத்தியுரையில் கருத்துப் பாய்ச்சி இருக்கின்றன. பிறப்பால், வளர்ப்பால், வாழ்வால் வைணவராய் வாழ்ந்த இவர், தான் வாழ்ந்த பிள்ளையார் கோவில் தெருவையே

1. கோவிந்தராஜ முதலியார் கா.ர. இராமானுச கவிராயர் நன்னூல் உரைப் பதிப்பு, 98.
2. இராமானுச கவிராயர், நன்னூல் உரை, 1847, ப. 222, 223, 236.
நேரிழையார் கூந்தலினேர்ப் புள்ளி பெற நீண்மரமாம்—
தண்டியலங்கார மேற். அப்பொருண்மோனியம்.

மாற்றிச் சஞ்சீவிராயன் கோயில் தெரு என்று பெயர் வைத்தவர். "ஆத்திச் சூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே" என்ற வைணவக் கடவுள் வாழ்த்தையும் இணைத்துப் பதித்தவர்.[1] வைணவத் தொடர்புள்ள திருவேங்கட அனுபூதி, பார்த்தசாரதி பதம்புனை பாமாலை, வரதராஜர் பதிற்றுப்பத்தந்தாதி என்ற நூல்களை இயற்றினவர். தம்முரையில் திருவாய்மொழி, இராமயணம், பாரதம் ஆகிய வைணவ நூல்களைக் காட்டியவர். என்றாலும், வீர சைவ சமயத்தாரிடமும், கிறித்தவ சமயத்தாரிடமும் இவர் காட்டிய அன்பும், கொண்ட மதிப்பும், இவரது சமயப் பொறையைக் காட்டுகின்றன. இருந்தாலும் அவரை அறிந்தோ அறியாமலோ, சமணரால், சைவரால், வீர சைவரால், கிருத்தவரால் தொட்டுத் துலக்கப் பட்டிருந்த நன்னூலை ஒரு வைணவராய்த் தொட்டு துலக்கிவிட்டார். நன்னூல் உரைகாரர்களில் குறிப்பிடத்தக்க முதல் வைணவ உரையாசிரியர் இவர்தான்.

1. இச்செய்தியைத் தந்தவர், சிதம்பரம் தி.க. இராசேசுவரன். தற்போதை ஆறுமுக நாவலர் நிறுவனங்களின் மேலாளர்.

15

களத்தூர் வேதகிரி முதலியார் உரை

களத்தூர் வேதகிரி முதலியார் (கி. பி. 1795 - 1852): தொண்டை மண்டலத்தைச் சார்ந்த களத்தூரில் கி. பி. 1795இல் வேதகிரி பிறந்தார். அக்காலத்தில் சென்னையில் செல்வாக்கோடு இருந்த கவிராயரிடம் கல்வி பயின்றார். தமிழ் இலக்கண இலக்கியப் பகுதிகளை அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் ஆற்றல் இவருக்கு இருந்தது. இவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். ஆறுமுக முதலியார், கந்தசாமி முதலியார் என்பன அவர்தம் பெயர்கள். கன்னிவாடி மகாராசாவின் அமைச்சராக இருந்த முத்துவீரப் பிள்ளையவர்களும், மதுரையைச் சார்ந்த முத்துகிருஷ்ண பிள்ளையவர்களும் முதலியாரின் அருமந்த புரவலர்கள் ஆவர்.[1] இவ்விருவராலும் மதுரை வணிகப் பெருமக்களாலும் அவ்வூருக்கு அழைக்கப்பட்டார். அதன் நிமித்தம் அங்குச் சென்றவர், மதுரையில் இருந்த தமிழ்ச் சங்கத்தின் தலைவராக ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். உடல்நலக் குறைவின் காரணமாக மதுரையை விட்டுப் புறப்பட்டுப் பாண்டிச்சேரி சென்றார். அங்கு இருந்த கத்தோலிக்க கல்வி நிறுவனம் ஒன்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் சென்னைக்குத் திரும்பினார். சென்னையில் ஓர் அச்சகத்தைத் தோற்றுவித்தார். அதன்வழி திருக்குறள், நைடதம், இலக்கணக் கொத்து ஆகியவற்றை உரையோடு வெளியிட்டார்.

முதலியார் பாவியற்றும் திறன்பெற்றவர். ஆதலால் அற இலக்கியங்கள் சிலவற்றை எழுதினார். மனுநீதி சதகம், மனுவிக்கியான சதகம், நீதி சிந்தாமணி, சன்மார்க்க சாரம் ஆகியவற்றை

1. வேதகிரி முதலியார், நன்னூல் காண்டிகையுரை, 1851, முகப்புரை யினின்று எடுக்கப்பட்ட செய்தியின்

இயற்றினர். இவற்றுள் முதல் மூன்று நூற்களும் நூறு நூறு பாடல்களை உடையன. சன்மார்க்க சாரம் 110 பாடல்களை உடையது. இப்பாடல்கள் ஈழத்தில் உள்ள அவருடைய நண்பருக்கு எழுதப்பட்டவை. ஆதலின், ஒவ்வொரு பாவின் இறுதியிலும் அந்நண்பரின் பெயர் காணப்படுகிறது. இவை யன்றி இலக்கணக் களஞ்சியம் முதலான தொகுப்பு நூல்களையும் வெளியிட்டார். இலக்கணக் களஞ்சியம் என்ற நூலினுள் அகத்தியம், தொல்காப்பியம், இலக்கணத்திரட்டு, பிரபந்த தீபம், கவிசாகரம், குவலயாநந்தம், அரியவிதி, மயேச்சுரம், அவினயம், பஞ்சலட்சணப் பயன் முதலிய இலக்கண நூல்களிலிருந்து பல சூத்திரங்களை எடுத்துக்காட்டுகிறார். இலக்கணக் களஞ்சியம் என்ற இப்பெயரையே தன் அச்சகத்திற்கும் பெயராக வைத்து மகிழ்ந்தார். இலக்கியக் களஞ்சியத்திலே ஆசிரிய நிகண்டு, கயாதர நிகண்டு, பொதிய நிகண்டு முதலிய நிகண்டுகளையும் பிறவற்றையும் காட்டியுள்ளார். நாலடியார்க்கு நல்லதோர் உரைவகுத்து வெளியிட்டார். யாப்பருங்கலக் காரிகையைப் பதிப்பித்து வெளியிட்டார். யாழ்ப்பாணம் மானிப்பாயில் இருந்த அமெரிக்கன் மிஷன் அச்சக வழியாக தமிழ் அகராதி ஒன்று கி.பி. 1842இல் வெளியிடப்பட்டது. இவ்வகராதிப் பணியில் முதலியாருக்கும் பெரும்பங்கு உண்டு. இவ்வச்சகத்தில் இருந்து தான் மண்டல புருடரின் நிகண்டு கி.பி. 1843இல் வெளியிடப் பட்டது. இச் செய்திகள், முதலியார்க்கு, ஈழநாட்டோடு இருந்த தொடர்பைக் காட்டுகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து அக் காலத்து வெளிவந்து கொண்டிருந்த 'மார்னிங் ஸ்டார்' இதழில் கட்டுரைகளை முதலியார் எழுதிவந்தார். இவை கி.பி. 1841—43ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து வெளிவந்தன. இவை இலக்கணம், இலக்கியம் தொடர்பானவை. இக்கட்டுரைகளால் இதழுக்குப் பெருமை பெருகியது. இதனால், இதழாசிரியர்கள் முதலியார் மீது பெருமதிப்பு வைத்திருந்தனர். தம் மதிப்பையும் அன்பையும் 'ஞான வடிவான...அரிதே' என்ற பாடல் மூலம் எழுதி முதலியார்க்கு விடுத்தனர் என்று 'தமிழ்ப் புளூடார்க்' ஆசிரியர் எழுதுகிறார்.[1] இவர் காலத்தில்தான் திருச்சிராபுர மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்ற பேரறிஞர் வாழ்ந்து வந்தனர். இவரிடம் பல மாணாக்கர்கள் தமிழ் பயின்றனர். இதனால் இவர் புகழ் பெருகியது. இதனைக் கண்டு பொறுத்த சிலர் பிள்ளைக்குச் செருக்கு அதிகம் என்றும், அதனை ஒழிக்க வேண்டுமென்றும் சொல்லிப் பரப்பி வந்தனர். அதனிலும் மேலாக, சம காலத்தி லேயே இலக்கணப் பேரறிஞராக விளங்கிய வேதகிரி முதலியாரை

1. சைமன் காசிச்செட்டி, தமிழ்ப்புளூடார்க், (ஆங்) ப. 128-129

வைத்து, பிள்ளையின் பெருமையைக் குறைக்க நினைத்தனர். முதலியார் 50000க்கு மேற்பட்ட சூத்திரங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கிறவர் என்று பெயரெடுத்தவர் ஆதலின், முதலியார் பிள்ளையைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்தனர். அச்சந்திப்பின் போது, மகாவித்துவான் தியாகராசச் செட்டியார், பிள்ளையின் அருகில் இருந்து வந்தார். முதலியாரைச் சந்தித்த வுடன், பிள்ளை, செட்டியாரைப் பணித்து, முதலியார் மனப் பாடமாக எத்துணைச் சூத்திரங்கள் ஒப்புவிக்கிறார் என்று கணக் கிடுமாறு ஆணையிட்டார். முதலியார், சில ஆயிரம் சூத்திரங் களையே ஒப்புவித்தார். பின்னர், பிள்ளையவர்களின் பெருமையை உணர்ந்து, அவரோடு அளவளாவிச் சென்றனர்.[1]

எளிய சூழலில், அருகிய வாய்ப்புகளைக் கொண்டு பெருகிய பணிகளாற்றிய முதலியார், தன் ஐம்பத்தேழாவது வயதில்— 1852ஆம் ஆண்டில் மறைந்தார்.

நன்னூல் காண்டிகை உரை (கி. பி. 1851) : நன்னூல் காண்டிகை யுரை, கன்னிவாடி மகாராசாவின் அமைச்சர் திண்டுக்கல் முத்துவீரப் பிள்ளையவர்கள் ஆணைக் கிணங்க வேதகிரி முதலியாரால் செய்யப்பட்டது. இவ்வுரை வேதகிரி முதலியார்க்கு உரிய இலக்கணக் களஞ்சியம் அச்சுக் கூடத் திலேயே 1851இல் (விரோதிகிருது ஆண்டு ஆனித் திங்கள்) பதிப்பிக்கப்பட்டது. இப்பதிப்பிற்குத் துணையாக, வேதகிரி முதலியாரின் புதல்வர்களான ஆறுமுக முதலியாரும் கந்தசாமி முதலியாரும் துணை செய்திருக்கின்றனர். இவர்களுடன் மேழியனூர் வாசுதேவ முதலியாரும் இப்பதிப்பு முற்றுப்பெறத் துணை நின்றிருக் கிறார். இவ்வுரை பெரும்பாலும் விசாகப் பெருமாளையர் காண்டிகை யுரையைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது.[2] சில இடங்களில், சங். எழுதி, முனிவரால் புதுக்கப்பட்ட விருத்தியுரைப் பகுதிகள் இடம் பெற்றுள்ளன.[3] குறிப்பிட்ட நூற்பா உரைகளின் முடிவில் வேதகிரி முதலியார் தாமாக எழுதிச் சேர்த்த குறிப்புகள் உள்ளன.[4] இவை இலக்கணப் புதுமைகள் உடையன அல்ல. வேதகிரி முதலியார் தொல்காப்பியப் பயிற்சியுடையார் என்பது

1. தமிழ்ப்புலவர் வரிசை, பன்னிரண்டாம் புத்தகம், ப. 134-137
2. வேதகிரி முதலியார் நன்னூல் காண்டிகையுரை : பதிப்பு, 1851; 91, 93, 94, 122, 137, 141, 161, 171, 172, 174, 183, 200, 201, 204, 205, 225, 229, 239, 243, 249, 255, 257, 261 முதலியன
3. வேதகிரி முதலியார் நன். காண்டிகை யுரைப்பதிப்பு: 56, 58, 91, 92, 127 முதலியன
4. மே.கை. நூ. 89, 91, 125, 131, 259 முதலியன

91ஆம் நூற்பா வுரையால் புலனாகிறது. அளபெடை பற்றிய இந்நூற்பாவுரையின் முடிவில், "ஆசிரியர் தொல்காப்பியரும் நீரும் நீரும் சேர்ந்தாற் போல நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்து நின்று நீண்டிசைப்பதே அளபெடை என்றார்" என்று எழுதுகிறார். இக்குறிப்பு முனிவரின் நன்னூல் விருத்தியுரைப் பகுதியை ஒட்டியது. இதனால், வேதகிரி முதலியார் தொல் காப்பியத்தைப் பயின்றிருந்தார் என்பதுவும், முனிவரின் நன்னூல் விருத்தியுரையைக் கற்றிருந்தார் என்பதுவும் புலனாகின்றன.

சிறப்பான விளக்கம் தருபவர்: "எழுத்ததிகார முற்றுப் பெற்றது" என்ற தொடரைப் பிரித்து விளக்கும் பகுதி சிறப் பானது. அவர் தரும் விளக்கம் பின் வருவது: "இவ்வாக்கியம் நான்கு சொற்கு மூன்று சந்தி. எழுத்ததிகாரம்—எழுவாய். முற்றுப் பெற்றது—பயனிலை. எழுதப்படும் காரணத்தால் எழுத் தென்றுயிற்று. பன்னீருயிரும் என்னும் சூத்திர விதியால் எழுத்தென்னும் சொல்லில் எகரம் முதலாயிற்று. ஆவிஞணநமன என்னும் சூத்திர விதியால் உகரமீருயிற்று. உயிர் வரினுக்குறள் மெய்விட்டோடும் என்னுஞ் சூத்திர விதியால் எழுத்து + அதி காரம் = எழுத்ததிகாரம் என்றுயிற்று. மவ்வீருெற்றழிந்து உயிரீ ருெப்பவும் என்னும் விதியாலும், எண்மூ வெழுத்திற் றெவ்வகை மொழிக்கு முன்வரு ஞநமயவக் கவியல்பும் என்னும் சூத்திர விதியாலும், எழுத்ததிகாரம் முற்று, எழுத்ததிகார முற்று, என்றுயிற்று. வன்ருெட ரல்லன முன்மிகா வல்வழி என்னுஞ் சூத்திர விதியால் எழுத்ததிகார முற்றுப் பெற்றது என்று வல்லொற்று மிக்கது. இவ்வாறு செய்யுளிலும் பருத்தறிக."[1]

சிறப்பான சில செய்திகள்: பாயிர உரையில் பவணந்தியார் ஐந்ததிகாரம் எழுதினதாகக் கருதி எழுதுதல், 12 ஆம் நூற்பா அறிவிப்பது எழுத்துப் போலியை அன்று சந்திபக்கரம் என்று உரை எழுதுதல் சிறப்பாகக் காணத் தக்கன. ஆண்டிப் புலவரால் எழுதப்பட்ட "செம்மையும்..." என்று தொடங்கும் ஆசிரிய விருத்தப்பா உரையைப் பதவியல் எட்டாம் நூற்பாவில் மேற்கோளாகக் காட்டுதல் இன்றியமையாக் குறிப்பாகும். காலப் பழமையே இக் காண்டிகை யுரைக்குள்ள தனிச் சிறப் பாகும். முனிவரின் நன்னூல் விருத்தியுரைப் பகுதிகள் சிலவற்றை ஆறுமுக நாவலருக்கு (விரோதிகிருது, ஐப்பசி 1851) முன்பே அச்சேற்றியது இன்னெரு சிறப்பு.

---

1. வேதகிரி முதலியார் நன்னூல் காண்டிகை உரைப் பதிப்பு, ப. 95

16

திருப்பாற்கடல் நாதன் உரை

திருப்பாற்கடல் நாதன் கவிராயர் (உரை எழுதிய காலம் கி.பி. 1853): திருநெல்வேலியில் வாழ்ந்த இவர், அம்பலவாணக் கவிராயர் என்பாரிடத்தில் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். 1820 இல் பாளையங்கோட்டைக்கு மாற்றலாகி வந்த இரேனியசு ஐயரிடம் (1790—1838) நெருங்கிப் பழகினர். சமயத்திற்கும் தமிழுக்கும் அரும்பணியாற்றிய இரேனியசு இறந்துவிட்ட போது கல்லறையிலேயே நான்கு ஆரங்கல் பண்களைப் பாடி நொந்தனர்.[1] அவற்றுள் ஒன்று:

"அன்பெனும் விளக்கில் அருளெனும் நெய்பெய்
தாழ்ந்த சிந்தையைத திரியாக்கி
மன்பெரு மானத் தீபம தேற்றிவான்
கடவுளைக் கண்டு மனிதர்க்கு
என்புருகிட நல்லறிவினைப் புகட்டும்
இரேனிய சென்னும் பேரிறைவன்
தன்பெரும் புகழை உலகினிற் பரப்பிச்
சார்ந்தனன் பரகதி தன்னில்"

ஏட்டுச்சுவடிகள்: இவர் வீட்டில் பல தமிழ் ஏட்டுச் சுவடிகள் இருந்தன. இவர் வீட்டிலிருந்தே பல ஏட்டுச் சுவடிகளை உ.வே.சா. பெற்றுப் பதித்தனர் எனத் தெரிகிறது. பத்துப் பாட்டு, சீவக சிந்தாமணி, பெருங்கதைப் பதிப்புகளின் முகவுரை களில், ஏடுகொடுத்து உதவியோர் பட்டியலில் திருப்பாற்கடல் நாதன் கவிராயரையும் அவர் சுட்டியிருக்கின்றார்.

கிருஷ்ணப்பிள்ளைக்கு ஆசிரியர்: இரட்சணிய யாத்திரிகம் இயற்றிய கிறித்துவக் கம்பர் எச்.ஏ. கிருஷ்ணப் பிள்ளைக்கு (1827—1900) இவரே ஆசிரியர் ஆவார்.

---

1. வேங்கடசாமி, மயிலை. சனி., கிறித்தவமும் தமிழும், 1955, ப. 100

முத்துவீரியத்திற்கு உரை: உறையூர் முத்துவீர உபாத்தியாயர் இயற்றிய 'முத்து வீரியம்' என்ற ஐந்திலக்கண நூலிற்கு உரை எழுதியவர் திருப்பாற்கடல் நாதன் கவிராயரே ஆவர். இந்நூலில் ஒரு பகுதியாகிய யாப்பதிகாரம் கி.பி. 1862 அக்டோபர் இல் அச்சாகியுள்ளது. ஐந்திலக்கணமும் அடங்கிய முழுநூல் கி.பி. 1889இல் அச்சேறியுள்ளது. இவ்விரு பகுதிகளிலும் நூலாசிரியரைப் பற்றிய இரண்டு சிறப்புப் பாயிரங்கள் உள்ளன. இவையிரண்டையும் இயற்றியவர் திருப்பாற்கடல் நாதரே.[1]

நன்னூலுக்கு உரை: அக்காலத்து நெல்லையில் பிரின்சுபால் சதா அமீனுகப் பணியாற்றிய அருணாசலம் பிள்ளைக்கு இவர் நெருங்கிய நண்பர் ஆவார். ஆகவே அருணாசலம் பிள்ளை நன்னூலுக்கு ஓர் உரை எழுதித்தர வேண்டுமென்று, திருப்பாற்கடல் நாதன் கவிராயரிடம் கேட்டுக் கொண்டார். தான் விரும்பும் அவ்வுரை நாலடியார், திருக்குறள், சிந்தாமணி, சிலப்பதிகாரம் ஆகிய நூற்களை அறிந்து கொள்ள உதவும் திறவுகோலாக இருத்தல் வேண்டும் எனக் கூறினர். பிள்ளையின் விருப்பத்தை நிறைவேற்றும் முகமாக நன்னூலுக்கு உரையொன்றைத் திருப்பாற்கடல் நாதன் கவிராயர் இயற்றினர். இச் செய்தி, அருணாசலம் பிள்ளையின் ஆங்கில நன்னூல் உரை முகவுரையிலிருந்து தெரிய வருகிறது. இவ்வுரை, ஆசான் உதவியின்றியே தமிழ் கற்கத் தகுந்தவாறு எளிய நடையில் தெளிவு குன்றாமல் எழுதப்பட்டது. இவ்வுரை, பின்னர், அருணாசலம் பிள்ளையால், "Tamil Grammar with An English Translation-Arranged, with reference to the Nunnool" என்கிற பெயரில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. இம்மொழி பெயர்ப்பில் இடப்பக்கம், திருப்பாற்கடல் நாதரின் நன்னூல் உரை விளக்கமும், எடுத்துக் காட்டுகளும் இடம் பெற, வலப்பக்கம் அருணாசலம் பிள்ளையின் ஆங்கிலப் பெயர்ப்பு அமைந்துள்ளது. இவ்விரட்டையர் உரை 1853ஆம் ஆண்டு சர்ச் மிஷன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. திருப்பாற்கடல் நாதரின் உரை, இவ்வாறு, அருணாசலம் பிள்ளையின் மொழி பெயர்ப்பில் ஒரு பகுதியாகவே இன்று கிடைக்கிறது. தனியாக இயற்றப்பட்டது என்ற குறிப்பு அவ்வாங்கிலப் பெயர்ப்பின் முன்னுரையில் கிடந்தாலும்[2] தனியாக அச்சிடப் பட்டது பற்றிய செய்தியை அறியக் கூடவில்லை.

உரைபற்றிய குறிப்புகள்: எளிமையாய் எல்லார்க்கும் விளங்கும் படியாக இருத்தல் வேண்டும் என்ற நோக்கிலேயே இவ்வுரை

1. முத்துவீரியப் பதிப்பு, 1889, சிறப்புப் பாயிரங்கள் காண்க
2. Arunachalam pillai, Tamil Grammar with an English Translation Arranged with reference to the Nunnol, Introduction p. 1

எழுதப்பட்டுள்ளது. இதனுல் விரிவான விளக்கங்களோ, உரை பற்றிய கருத்து வேறுபாடுகளோ, விவரங்களோ இவ்வுரையின் கண் இடம் பெறவில்லை. எனினும் இவ்வுரையில் சில குறிப்புகள் இன்றியமையாதன. எ யா ஆ ஓ ஏ என்ற ஐந்து எழுத்துகளும் வினு எழுத்துகள். இவை சொற்களின் முதலிலும் கடையிலும் வருமாற்றை நன்னூல் 67ஆம் நூற்பா விளக்குகிறது. இதனை இவ்வுரையாசிரியர் விளக்கி உதாரணம் காட்டும்போது, "ஓ" என்பதற்கு ஒத்தான் என்ற சொல்லைக் காட்டுகிறார். 'ஓ' என்பது உவம உருபு என்பது இவர் கருத்துப் போலும். உவம உருபடியை வினு எழுத்திற்குக் காட்டுவதன் பொருத்தம் விளங்க வில்லை. ஐ ஔ என்பவற்றை வடமொழி மரபை உட்கொண்ட சந்தியக்கரம் என்னும், தமிழ் மரபை உட்கொண்டு எழுத்துப் போலி என்று கருதுகிறார். இதற்குத் தக, அய், அவ் என்பவற்றை 12ஆம் நூற்பாவில் எடுத்துக் காட்டுகிறார். ஆய்தத்தின் மூலம் நாதம் என்று 8ஆம் நூற்பா வுரையில் குறிப்பிடுகிறார். இடையியல், உரியியல் என்று குறிப்பிடாமல், இடைச் சொல் லியல், உரிச் சொல்லியல் என்று வழங்குகிறார். இவர் உரையின் தனிச்சிறப்பு எதிர் எதிர்ப் பக்கம் ஆங்கில மொழி பெயர்ப்பு அமைந்திருத்தலாகும்.

17

டாக்டர் போப்பையர் உரை

"கன்னித்தமிழை வளர்க்கக் கடவுளால் படைக்கப்பட்ட செஞ்ஞாயிறுகள் சில. அச்சிலவற்றுள் ஒன்று டாக்டர் ஜி. யூ. போப் என்று சொல்லலாம். போப் ஐயர் வாழ்க. அவர்தம் தொண்டு வெல்க."

—திரு. வி. க. அணிந்துரை,
ஆ. அருள் தங்கையா,
புலவர் போப்பையர் 1944.

ஜி. யூ. போப்பு (கி.பி. 1820—1908): வட அமெரிக்காவிலுள்ள நோவா ஸ்கோஷியா என்ற மாநிலத்திலுள்ள பிரின்ஸ் எட்வர்ட் தீவில், ஜான் போப் என்ற வாணிகரின் மகனாக 1820இல் போப் பிறந்தார். பத்துப் பேரோடு உடன் பிறந்த ஐயர், சமயப்பணி செய்ய வேட்கை கொண்டார். தென்னிந்தியாவுக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பினராகி, எபிரேய, கிரேக்க மொழி வாயிலாக, கிறித்துவ மறைகளை நன்கு பயின்றார். 1838ஆம் ஆண்டு தொடங்கி, தமிழையும், வட மொழியையும் பயிலத் தொடங்கினர். 1839ஆம் ஆண்டில் வெஸ்லியன் சங்கத்தார் போப்பை இந்தியாவுக்கு அனுப்பத் தேர்ந்தெடுத்தார்கள். கப்பலில் இந்தியாவுக்கு வந்திட எட்டுத் திங்களாயிற்று. அக்காலம் முழுதையும் தமிழைப் பயிலுவதில் செலவிட்டார். தமிழ் மண்ணைத் தொடுமுன், தமிழில் பேசவும் எழுதவும் பழகிட வேண்டும் என்று விரும்பினர். கிறித்தவ சமய அறிவை ஆங்கில மொழி வழியே தான் பரப்ப வேண்டும் என்ற கருத்தினரும், அதற்கு மாறாக, அந்தந்த வட்டார மொழி வழியே தான் பரப்ப வேண்டும் என்ற கருத்தினரும் அக்காலத்து இருந்தனர். அவர்களுள் இரண்டாம் வகையைச் சார்ந்தவர் போப்பு.[1]

---

1. நம்போலா மாசுகரேனஸ், கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள் 1972, ப.280

போப் சென்னையில் சாந்தோம் என்னும் இடத்தில் சமயப் பணி புரிந்து, திருச்சபை பணி, வரலாறு இவற்றை நன்கு ஆராய்ந்தார். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு இவற்றை நன்கு கற்றார். இங்கிலாந்து திருச்சபையில் சேர்ந்து குருப் பட்டமும் பெற்றார். பின்னர் சமய மேலவர் ஆணைக்கிணங்க, திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரத்திற்குச் சென்றார். சென்ற சிறிது காலத்திற்குள்ளாக, கல்வி நிலையம் ஒன்றைத் தொடங் கினர். அப்பள்ளி இரவும் பகலும் நடத்தப் பெற்றது. மாணவர்கள் கண்டிப்பாக நடத்தப்பட்டனர். சாயர்புரத்தினின்று நேரே, தாயகம் சென்று சில காலம் இருந்துவிட்டு மீட்டும் வந்து, மேலவர் ஆணைப்படி தஞ்சைக்குச் சமயப் பணிக்காகச் சென்றார். அங்கிருந்தபோது தான் நிரம்பத் தமிழ் நூல்களைப் பயின்றார். ஆரியங்காவுப்பிள்ளை என்னும் அறிஞரும் கவிராயரும் இவருக்குத் தமிழறிவை ஊட்டினர்கள். அதனுடன் தமிழ் உணர்வையும் ஊட்டினர்கள். தமிழறிஞராக மாறிய போப்புக்குத் தமிழினிடத்தும் தமிழரிடத்தும் மிகப் பற்றுண்டாகியது. டாக்டர் போப் கிறித்தவம் ஓம்பத் தென்னாடு போந்தவர். அவர் ஓம்பிய கிறித்தவம் அவரைத் தமிழராக்கிற்று.[1] டாக்டர் போப்பின் கிறித்தவத் தொண்டிடைத் தமிழ்த் தொண்டும் விரவியது. இதைத் தமிழ் நாட்டின் தவமென்றே கூறலாம். அப் பெரியாரது தொண்டு தமிழின் மாண்பை உலகறியச் செய்தது. சிலரே பயிலும் அளவுக்குக் கிடந்த தொல்காப்பியம் நன்னூல் முதலான இலக்கண நூல்களை நன்கு பயின்று, அவற்றை எளிமையாக்கி, எளிய சிறுரும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எழுதி வெளியிட்டார் (1857). பள்ளிகளில் வரலாற்றுப் பாடங்களும், மாணவர்கட்கென உரைநடை நூல்களும் இடம்பெறக் காரணமாய் இருந்தவர் இவரே. தஞ்சையில் இருந்து பணி பல ஆற்றிவிட்டு, சாதி அடிப்படையில் ஏற்பட்ட சிக்கலால் உதக மண்டலம் போயினர். தம் உடல்நலக் குறைவால், பின்னர், அங்கிருந்து புறப்பட்டு தம் அறுபத்திரண்டாம் வயதில், 138 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குப் பயணம் ஆனர்.

எழுதிய நூற்கள்: 1885ஆம் ஆண்டு தொடங்கி, ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழகப் பேராசிரியராகப் பணியாற்றித், தமிழ், தெலுங்கு முதலான திராவிட மொழிகளைப் பயிற்றுவித்து வந்தார். அக் காலத்துத் திருக்குறள் (1886), நாலடியார் (1903), சிவஞான போதம், திருவாசகம் (1897) ஆகிய நூல்களை

1. திரு.வி.க. அணிந்துரை, ஆ. அருள் தங்கையர், புலவர் போப்பையர், சென்னை, தமிழ்நாடு வெளியீடு, 1944

ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மேனாட்டாருக்குத் தமிழ், தமிழினம், தமிழர் பண்பாடு, தமிழர் சமயம் இவற்றை அறிமுகம் செய்து பரப்பினர். தமிழ் இலக்கண நூற் சுருக்க விளக்கம் (1840), தமிழ் இலக்கண நூல் (1850), தமிழ்ச் செய்யுட் கலம்பகம் (1850) ஆகிய நூற்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தினர். 'இராயல் ஏசியாடிக் குவார்ட்டெர்லி, இந்தியன் ஆண்டிக்குவரி, இந்தியன் மேகசின்' ஆகிய அனைத்துலகப் புகழ் பெற்ற இதழ்களில் தமிழ் நாட்டுப் புலவர்கள், புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலைப் பகுதிகள், தமிழ்ப் புனிதர் வரலாறு ஆகியன பற்றிக் கட்டுரைகள் எழுதினர்.

டாக்டர் போப்பையர் உரை (கி.பி. 1857): "பத்தொன்பதாம் நூற்றாண்டில் டாக்டர் போப்பையரின் பெருமை தமிழ்நாட்டை விதானமிட்டது. அவர்தம் இலக்கண நூல் ஒவ்வொரு மாணாக்கர் கையிலும் பொலிவதாயிற்று. யான் முதன் முதல் பயின்ற இலக்கணம் இவருடையதே" என்பது தமிழ்த் தென்றல் திரு.வி.க. வின் பொன்னுரை.[1] இலக்கணத் துறையைப் பொறுத்தவரை இவரது நன்னூல் உரைப்பணி தனிச் சிறப்புக்குரியது.

போப்பையரின் நன்னூல் பதிப்புச் சிறப்புகள்: பதப் பொருளாக இவ்வுரையை எழுதிய டாக்டர் போப்பு, அவ் வுரையைப் பதிப்பிக்க எடுத்துக் கொண்ட முயற்சி பெரும் பாராட்டுக்குரியது. நன்னூல் பதிப்புகளில், இதுவரை வந்த பதிப்புகள் அனைத்திலும் மிக அழகு வாய்ந்த பதிப்பு இஃது ஆகும். இத்துணைச் சிறந்த பதிப்பு. இப் பதிப்புக்கு முன்னும் வரவில்லை; பின்னும் வரவில்லை. ஒவ்வொரு நூற்பாவின் தலைப்பிலும் பொருத்தமான இரத்தினச் சுருக்கமான ஆங்கிலத் தலைப்பு தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூற்பாவின் கீழும் பிறைக் குறிகளுக்குள் அருமையான பொழிப்புரை தரப்பட்டுள்ளது. தேவையான இடங்கள் அனைத்திலும் நூற்பா, சந்தி பிரித்துப் பதிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பக்கத்தின் நாற்புறமும் அழகாகக் கோடுகட்டிப் பதிக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு பக்கத்தின் மேற்பகுதியிலும் அதிகாரத் தலைப்பும், எண்ணும், இயலின் தலைப்பும், எண்ணும், கீழ்ப்பகுதியில் தமிழில் பக்க எண்களும் கொடுக்கப் பட்டுள்ளன. இறுதியில், இலக்கண அகராதி எனத் தலைப்பிட்டு, நூற்பாவில் உள்ள அரிய சொற்கள் அனைத்திற்கும் பொருளும் விளக்கமும் அவை வந்திருக்கும் நூற்பா எண்களும் வரிசை பிறழாமல் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1. அருள் தங்கையார், ஆ., புலவர் போப்பையர், 1944, திரு. வி. க அணிந்துரை.

பொதுவியல், எட்டாம் இயலாக இல்லாமல் பத்தாம் இயலாக வைக்கப்பட்டுள்ளது.

தனிச்சிறப்பு: டாக்டர் போப்பையர் பதித்திருக்கின்ற இப் பதிப்பு ஒரு கொள்கைப் பதிப்பு (Ideal Edition) எனலாம். இவர் நூற்பாக்களுக்கும் பொழிப்புரையாக உரை வரைந்துள்ளார். எனினும் உரை வேறுபாடுகளில், விவாதங்களில் சற்றும் இறங்க வில்லை. நன்னூல் உரைப் பதிப்புகளில், டாக்டர் போப்பையரின் பதிப்பே தனியழகும், தனி மதிப்பும் வாய்ந்தது.

18

இ. சாமுவேல் பிள்ளை உரை

இ சாமுவேல் பிள்ளை (உரை எழுதிய காலம் கி.பி. 1858): இவரது சொந்த ஊர் தஞ்சை மாவட்டத்திலுள்ள பொறையாறு ஆகும். இவரது தந்தையார் பெயர் தாண்டவராய பிள்ளை என்பதாம். அவர் கிறித்துவச் சுவிசேஷ சித்தாந்தி ஆவர். இச்செய்திகள் இவர் வெளியிட்ட தொல்காப்பிய - நன்னூல் உரைப் பதிப்பிற்குப் புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் அவர்கள் வழங்கியச் சிறப்புப் பாயிரத்தால் தெரிய வருகின்றன. அப்பாயிரத்தின் ஒரு பகுதி வருமாறு:

"நறைவார் சோலைப் பிறையா றெனுநகர்
வதிதரு சோழ வேளாள மரபில்
பதிதரு தாண்ட ராயவேள் பயந்த
நாட வருசுவி சேடசித் தாந்தி
செங்குவ ளேயந்தார் தங்குமணி மார்பன்
நாம வேலைப புவ்ந யக்கும்
சாமுவே லென்னும் தகைமை யோனே"

இவர் தொல்காப்பிய - நன்னூல் அன்றி, நன்னூலை வால்டர் ஜாய்ஸ் என்பவரோடு சேர்ந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அம்மொழி பெயர்ப்பின் முதற்பகுதியாகிய எழுத்ததிகாரம் மட்டும் அச்சில் வெளிபானதாகத் தெரிய வருகிறது. கிறித்தவச் சார்புள்ள 'திருச்சபைப் பத்திரிகை' (1863) என்ற இதழும், 'கற்பக விருட்சம்' (1864) என்ற இதழும் சென்னையிலிருந்து இவரால் வெளியிடப்பட்டன.[1] இவரைப் பற்றிய பிற வரலாற்றுச் செய்திகள் கிடைக்கவில்லை. எனினும், நன்னூல் உரை

1. வேங்கடசாமி, மயிலை. சீனி., 19ஆம் நூற்றாண்டில் தமிழிலக்கியம், 1952, ப. 187, 138

வரலாற்றில் ஒரு புதிய ஊழியைத் தொடங்கி வைத்த பெருமை இவருக்குண்டு.

தொல்காப்பியப் பதிப்புகள்: நன்னூல் பரவலாக அறியப் பட்டிருந்த அளவுக்குத் தொல்காப்பியம் இந்நூற்றாண்டின் முற்பகுதி வரை அறியப்பட்டிருக்கவில்லை. காரணம், தொல் காப்பியம் கி.பி 1848 வரை அச்சேறாமல் இருந்தமையே. மழவை மகாலிங்கையரால், தொல். எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை மட்டும் முதன் முதலாக கி.பி. 1849இல் வெளியிடப்பட்டது. திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரால், எழுத்ததி காரம் இளம்பூரணர் உரை, கி.பி 1868இல் வெளியிடப்பட்டது. இதே ஆண்டில், சொல்லதிகாரம் சேனாவரையர் உரை புலவர் கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளையால் வெளியிடப்பட்டது. சொல்லதிகாரம் இளம்பூரணர் உரை முழுதும் கா. நமச்சிவாய முதலியாரால் கி.பி. 1924இலும், நச்சினார்க்கினியர் உரை பவானந்தர் கழகத்தினரால் கி.பி. 1941இலும், கல்லாடர் உரை புலவர் கு. சுந்தரமூர்த்தியால் கி.பி. 1964இலும், பழைய உரையொன்று புலவர் கு. சுந்தரமூர்த்தியால் கி.பி. 1964இலும், தெய்வச்சிலையார் உரை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரால் கி.பி. 1959இலும் வெளியிடப்பட்டன. பொருளதிகாரத்தைப் பொறுத்த வரை, இளம்பூரணர் உரை முதல் இரண்டியல்கள், கா. நமச் சிவாய முதலியாரால் கி.பி. 1920இலும், முழுதுமாக வ.உ. சிதம்பரம் பிள்ளையால் கி.பி. 1928இலும், கி.பி. 1937இலும், நச்சினார்க்கினியர் உரை சி.வை. தாமோதரம் பிள்ளையால் கி.பி. 1885இலும், பேராசிரியர் உரை பவானந்தம் பிள்ளையால் கி.பி. 1917இலும் வெளியிடப் பெற்றன.[1] இப்பதிப்புச் செய்திகளிலிருந்து, எழுத்து, கி.பி. 1849க்கு முன்பும், சொல்லதிகாரப் பகுதி கி.பி. 1868க்கு முன்பும், பொருளதிகாரப் பகுதி கி.பி. 1885க்கு முன்பும் அச்சாக வில்லை என்பது தெரிய வருகிறது. தொல்காப்பியம், பத்தொன் பதாம் நூற்றாண்டின் நடுப்பாதியில் அச்சாகிப் பரவுவதற்கு முன்பே, நன்னூல் அச்சாகிப் பரவி விட்டது. கி.பி. 1838இல் நன்னூல் மூலமும், கி.பி. 1839இல் நன்னூல் உரையும் அச்சாகி விட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொல்காப்பியம் பொருளதிகாரம் (கி.பி. 1920இல் அச்சாகியுள்ளது) அச்சாகவில்லை. மறைந்தொழிந்தது என்று கருதியே, இலக்கணப் பஞ்சகத்தில் நன்னூலுக்குப் பின் நம்பியகப் பொருள் யாப்பருங் கலக் காரிகை, தண்டியலங்காரம் ஆகிய இவற்றைச் சேர்த்து அச்சிட்டுப் போற்றினர் போலும். கி.பி. 1847இல் எழுத்து

1. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 19ஆம் நூற். ப. 409-411

அச்சாகி வெளி வந்தபின் அந்நூலைப் பற்றிய அறிவு பரவலாகி விரிந்திருத்தல் வேண்டும். நன்னூலுக்கு முன் தோன்றிய தொல்காப்பியத்தின் அருமை பெருமையினை நினைந்ததோடன்றி தொல்காப்பியத்துடன் உடன் நன்னூலை ஒப்பிட்டுப் பார்க்கும் ஒப்பியல் உணர்வும் அரும்பியிருத்தல் வேண்டும். இவ்வுணர்வின் முழு வெளிப்பாடே இ. சாமுவேல் பிள்ளை பதித்த தொல்காப்பிய—நன்னூல் பதிப்பாகும். இரண்டு இலக்கண நூல்களையும் ஒப்பிட்டுப் பார்த்துப் பதிக்கப்பட்ட முதற்பதிப்பு முயற்சியும் இதுவேயாகும். தமிழிலக்கண ஒப்பியலாய்வின் தொடக்கமும், தமிழிலக்கணப் போக்கை வரலாற்றுப் பான்மையில் பார்க்க எடுத்துக்கொண்ட முதன் முயற்சியும் இதுவேயாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளியான இலக்கணப் பதிப்புகளில் இஃது ஒரு கருத்துக் களஞ்சியமாகும். தொல்காப்பியம் சொல்லதிகார மூலத்தை முதலில் அச்சேற்றியவர் சாமுவேல் பிள்ளையே. கி.பி. 1868க்கு முன் சொல்லதிகார உரையேதும் அச்சேற்றப் படவில்லை. கி.பி. 1858க்கு முன் சொல்லதிகார மூலங்கூட அச்சிடப்படவில்லை. சாமுவேல் பிள்ளையே தொல்காப்பியம் சொல்லதிகார மூலத்தை அச்சிட்டவர்.

Tamil Museum and Review of Oriental Philology என்ற தலைப்பில் ஓர் இதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழ் பற்றிய குறிப்பு இவர் பதிப்பில் இடம்பெற்றுள்ளது.[1] இவ்விதழிலேயே தொல்காப்பிய–நன்னூல் என்ற இந்நூல், முதலில் தொடராக வெளிவந்திருக்கிறது. அதனைப் பற்றிய ஆங்கிலக் குறிப்பொன்று, இதுவரை அச்சில் வெளியிடப் படாத சொல்லதிகாரம், ஆர்வமுள்ள ஆசிரிய மாணவர்களுக்காக அச்சிடப்பட்டுள்ளதைக் கூறுகிறது.[2]

நூல் முடிவில் ஒரு நினைவுக்குறிப்பு இவரால் இணைக்கப் பட்டுள்ளது. அந்நினைப்பில் "தொல். சொல்லதிகாரம் மிகக் குறைந்த குறிப்புகளோடுதான் வெளியிடப்பட்டுள்ளது. தற்போதைக்கு அச்சில் வாராத மூலப்பகுதியையாவது முதலில் அறிந்து கொள்ளலாம் என்பதுவே காரணம். வருங்காலத்தில், சொல்லதிகாரப் பகுதியும், எழுத்ததிகாரம் போல, நன்னூலுடன் ஒப்பிடப்பட்டு, ஆங்கில மொழிபெயர்ப்பு, எடுத்துக்காட்டு,

1. சாமுவேல் பிள்ளை, இ., தொல்காப்பிய—நன்னூல், 1858, ப. 6
2. மே. கை. நூ. ப. 6

குறிப்பு இவற்றோடு விரைவில் வெளியிடப்பெறும்" என்று சாமுவேல்பிள்ளை குறித்துள்ளார்.[1]

"The Second Book (Collatikaram) Etmology, forming in this volume, 'Book II. Tholcapya-Nunnool" from page 1 to21 is published the original text with a few references only, that simply students may have the advantage of the hitherto unpublished manuscript. The Book itself, however, with English translation, Examples, and Notes, is being rapidly prepared for the press, and will be issued in a Second volume, together with the...of the Nunno 1. the two compared after the model of Book I." என்பது அக்குறிப்பு. இவற்றுள், சொல்லதிகார மூலத்தை முதன் முதலாக அச் சேற்றியவர் இவரே என்பது உறுதியாகிறது.

தொல். பொருளதிகார மூலத்தையும் முதலிற் பதிப்பித்தவர்: பொருளதிகார உரையோ மூலமோ முழுமையாக கி. பி. 1885க்கு முன்பு அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் சாமுவேல் பிள்ளை தன் தொல்-நன்னூல் பதிப்பில் 36 பக்கங்களில் மூலம் மட்டும் இயல் வரிசையாக அச்சிட்டுள்ளார். பொருளதிகாரம் பற்றி அவர் இங்குக் கொடுத்துள்ள ஆங்கிலக் குறிப்பும் பொருள் அழுத்தம் உடையது.[2]

"This chapter contains also a statement of the manners and customs of the ancient Hindus with regard to their social condition in earlier times." என்பது அக் குறிப்பு. இக் குறிப்பால் தொல். பொருளதிகார மூலத்தை முதன்முதல் கி. பி. 1858 இல் அச்சிட்டவர் இ. சாமுவேல் பிள்ளை என்பது உறுதியாகிறது. ஆக, தொல். எழுத்து, சொல், பொருள் அதிகாரங்கள் மூன்றையும் ஒரே நூலில் முதலில் அச்சேற்றியவர் இவரே என்பது தெளிவாகிறது.

பலரது பாராட்டுரை: தமிழிலக்கணத் துறையில் பெரும் பணி பாற்றியுள்ள இ. சாமுவேல் பிள்ளையின் தொல்—நன்னூல் பதிப்புரை பற்றி அறிஞர் பலர் பாராட்டியுள்ளனர். புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், புதுவைத் தமிழ்ப் புலவர் பொன்னுசாமி முதலியார், தரங்கம்பாடி சண்முகக் கவிராயர் ஆகியோர் அறிவித்துள்ள சிறப்புப் பாயிரம் சாத்துகவிகள் ஆகியவை இப்

1. சாமுவேல் பிள்ளை, இ., தொல்காப்பிய—நன்னூல், இரண்டாம் பெரும் பிரிவு, ப. 69
2. மே. கா. நூ. ப. 32

பதிப்பின் முன் பகுதியில் இடம் பெற்றுள்ளன. சபாபதி முதலியார் இ. சாமுவேல் பிள்ளை செய்துள்ள தொல்—நன்னூல் உரைபற்றித் தந்துள்ள பாராட்டுப் பார்வைக்குரியது.[1] "தண்டரும் பெயரிய பண்டையோர் நூல்வழிப் பன்னு தொல்காப்பிய நன்னூ லெனவும் ஐந்தர பாணி னிய மெனவும் சமரச பாடிய சித்தாந்த மெனவும் அவம்பா டிலாத இளம்பூரணமும் மெய்ச்சொலாற் பழிச்சு நச்சினர்க்கினியமும் வானோர் மாண்பமை சேனவரையமும் சங்கர நமச்சிவாயமும் என்றிவை ஐந்துரையுந் தொகுத்தின்புற உண்மை யின் பூரண விருத்தி எனவும் பெயர்புனைந்து இந்நூலியற்றி எழுதா எழுத்தில் பன்னூ னெறியித் பதித்து நல்கினன்."

மேற்கண்ட பாயிரத்தினின்று, இத் தொல்—நன்னூல் உரை 'பூரண விருத்தி' என்பதுவும், தொல். உரைகளும் நன்னூல் உரை களும் இவ்வுரைக்கு மூலம் என்பதுவும் முற்ற விளங்குகின்றன.

நூற்பொதிப் பொருள் : இந்நூலின் முகப்பே இந்நூலின்கண் இடம்பெற்றுள்ள செய்திகளையும் வரலாற்றையும் நல்குவதாகும். "தொல்காப்பிய—நன்னூல்: இதனுள் தொல் காப்பியமும் நன்னூ லும் தம்முள் ஒற்றுமை வேற்றுமைகள் விளங்க, ஒரு பான்மை உதாரண சகிதமாய்ச் சூத்திர சம்பந்தத்துடனே அச்சிடப் பட்டி ருக்கின்றன: இந்நூல் ஐந்திர பாணினீயம் என்னும் சமரச பாஷிய சித்தாந்தம் என்றும் இனிப்பெயர் பெறும் பெற்றிக் கேற்ப உத் தேசித்து, வடமொழி வழக்கும் தமிழ்மொழி வழக்கும் ஐங்கிலிய வழக்கும் கொண்டிருக்கின்ற சம்பந்தா சம்பந்தங்களைக் காட்டிப் பூரண விருத்தியாய் எழுதப் புகுந்திருக்கும் உரை நூலுக்கு முதற் பிரயத்தனம்—இப்பதிப்பு இ. சாமுவேல் பிள்ளையினால், வால்டர் ஜாயிஸ் துரையவர்கள் உதவியைக் கொண்டு நிறைவேற்றியது— நூற்பயன். இத் தேசத்தாரிடத்தில் ஐங்கிலிப துரைத்தனத்தார் கல்வி விருத்தி பண்ணி வரு முயற்சியினால், இனித் தமிழ்நாட்டின் நன்மைக்கென்று புது நூலியற்றுவோர்க்குப் பாஷை நடைகளில் பேதா பேதக் கியானத்திற்கு வேண்டிய தெளிவு இந்து 1853 ஆம் வருஷம் சென்னை மாநகரம், கிறிஸ்து மதக்கியான விளக்கச் சங்கத்தார் அச்சுக்கூடத்தில் கானர் துரையவர்களால் பதிப்பிக்கப் பட்டது." இவ்விரிவான முகப்பு அமைப்பால், தொல்காப்பிய நன்னூல் பதிப்புரையின் அமைப்பு, நூற்பொதி பொருள், நூற் பெயர், நூல் வெளிவரத் துணைநின்ற அறிஞர் பெயர், நூற்பயன், நூல் வெளியிடப்பட்ட ஆண்டு, நூல் அச்சிடப் பட்ட அச்சுக் கூடம் ஆகிய அனைத்துச் செய்திகளும் விளங்குகின்றன.

1. சாமுவேல் பிள்ளை, இ., தொல்—நன்னூல், சிறப்புப் பாயிரம், ப. 3

நூற்பயன் : ஐந்திர பாணிநீயம் என்றும் சமரச பாஷ்ய சித்தாந்தம் என்றும் வேறுபெயர்கள் இந்நூலுக்கு இவ்வாசிரியராலேயே கொடுக்கப்பட்டுள்ளன. இச்செய்தி, இவரே இயற்றிய கடவுள் வணக்கம்—அவை யடக்கப் பாடலானும், நூல் முகப்பாலும், சமரச பாஷிய சித்தாந்தம் என்ற அகவற்பாவாலும், இவரது 'இஷ்டராகிய புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார்' பாடியுள்ள சிறப்புப் பாயிரத்தாலும் விளங்குகிறது.[1]

நூலமைப்பு : முன்னுரை 14 பக்கங்களிலும், சிறப்புப் பாயிரம் சாத்துகவி முதலாயின 8 பக்கங்களிலும், நூல் முதற் பகுதி 128 பக்கங்களிலும், இரண்டாம் பகுதி 70 பக்கங்களிலும் ஆக, 220 பக்கங்களில் இந்நூல் அச்சிடப் பட்டிருக்கிறது. 52 தலைப்புகளில் தொல்காப்பிய-நன்னூல் ஒப்புமைகள் தரப் பட்டுள்ளன. இளம்பூரணம், நச்சினார்க்கினியம், சேனாவரையம், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர் உரைகள், பெஸ்கியின் தொன்னூல் விளக்கம் ஆகிய இலக்கண நூல்களும் உரைகளும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவையன்றி இரேனியஸ், கால்டுவெல் ஆகியவர்களது எடுத்துக்காட்டுகளும் ஆளப்பட்டுள்ளன.[2] தொல்காப்பியத்தை ஒட்டி இயல் தலைப்பிட்டு, பின்னர்த் தொல்காப்பியத்தினின்று வரிசையாக நூற்பாக்களைத் தொடுத்து, அதற்கு இணையான நன்னூல் எண்களைப் பக்கத்தில் ஆசிரியர் கொடுத்துள்ளார். ஒவ்வொன்றையும் தொடர்ந்து ஆங்கிலத்தில் கருத்து சுருக்கமாய்ப் பொறிக்கப்பட்டுள்ளது.[3] தொடர்ந்து இரண்டாம் பிரிவில் (Book I, Part II நன்னூல் எழுத்தியல் தொடங்கி உருபு புணரியல் வரை வரிசையாகக் கொடுக்கப்பட்டு, அவ்வவற்றிற்கு இணையான தொல்-நன்) நூற்பா எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன.[4] அதனிறுதியில் முடிபியல் என்ற தலைப்பில் இலக்கணம் பற்றிய செய்திகள் ஆங்கில விளக்கத்தோடு தொகுத்துத் தரப்பட்டுள்ளன.[5] ஒவ்வோர் இயல் முடிவிலும் நினைவுக் குறிப்புகள், சுருக்கங்கள், பின்னிணைப்புகள் தந்து விளக்கல், அவ்வாறே அதிகார முடிவில் அவ்வவ்வதிகாரத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்துத் தருதல்,[6] இரண்டாம் பெரும்பிரிவில் தொல். சொல். இயல்களை ஆங்கிலத் தலைப்புடன் கொடுத்து, நூற்பாக்களைப் பதித்திருத்தல்,

1. சாமுவேல் பிள்ளை, இ., தொல். நன்னூல், ப. 2, 4, 15, 19
2. சாமுவேல் பிள்ளை, இ. தொல். நன். சி.பா. ப. 6
3. மே. கா. நூ. 1-39
4. மே. கா. நூ. ப. 40-89
5. மே. கா. நூ. ப. 91-126
6. மே. கா. நூ. ப. 88-62

பின்னர் நன். சொல்லதிகாரப் பகுதியைப் பெயர், வினை, இடை, உரி, பொதுவியல் என்ற வரிசையில் நூற்பாக்களைத் தருதல், ஆங்காங்கே இணைப்பு எண்களைக் கொடுத்திருத்தல்,[1] இறுதிப் பிரிவாக, தொல். பொருள். இயல்வாரியாக, ஆங்கிலத் தலைப்புடன் அனைத்து நூற்பாக்களோடு தந்திருத்தல் முதலியன குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய சில சிறப்புகள்[2].

தொல்காப்பியம் நன்னூல் உரை வழங்கும் செய்திகள்: தொல்–நன்னூல் கோட்பாடுகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் அறிவித்தல், தொல். ஐந்திரம் தழுவியது எனவும், நன்னூல், பாணினீயம் தழுவியதெனவும் உரைத்தல்,[3] பவணந்தியார், தொல். ஐந்திரத்தையும், பாணினியத்தையும் நன்கு பயின்ற பின்னரே நன்னூல் எழுதினர் எனல்[4], 'மலர்தலை உலகின்...'' என்ற சிறப்புப் பாயிரம் சமண முனிவரால் இயற்றப்பட்டது எனல்[5], ''உட்பெறு புள்ளி உருவாகும்மே'' என்ற தொல். நூற்பா இவ்விடத்தில் தேவையற்றது எனல்[6], ''சகரக் கிளவியும் அவற்றேர் அற்றே அஐஔள எனும் மூன்றலங் கடையே'' என்ற தொல். நூற்பாவிற்கு மாறுகத் தம் காலத் தமிழில் உள்ள ''சறுக்கு, சைஎனல், சௌரியம்'' என்ற எடுத்துக்காட்டுகளைக் காட்டுதல்,[7] ''பல்லுக்குத் தோற்றபனி முல்லை பைங்கிளிகள் சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றினவால் நெல்லுக்கு நூரே நூறென்பாள் நுடங்கிடைக்கும் வன்முலைக்கு மாரேமால் அன்றளந்த மண்'' என்ற வெண்பாவைக் காட்டுதல்,[8] புடலங் காயைப் 'புடோலங்காய்' என்று எடுத்துக் காட்டுதல்,[9] 'பதவியலில்,18 சமஸ்கிருத முன்னெட்டுகளை எடுத்துக்காட்டுதல்[10] (பிர, பரா, அப, சம், அநு, அவ, நிர், துர், வி, ஆ, நி அதி, அபி, சு, உற், பிரதி, பரி, உப), வடமொழி யாக்கத்தை ஒவ்வோர் வடமொழி எழுத்தையும் தெலுங்கு மொழி எழுத்தையும் காட்டி விளக்குதல்[11], சிபியின் மகன் செம்பியன் எனல்[12], பெயர்க்கு

1. சாமுவேல்பிள்ளை, இ., தொல்-நன்., 1-38
2. மே. கா. நூ. ப. 32-69
3. சாமுவேல் பிள்ளை, இ., தொல். நன். முன். ப. 7
4. மே. கா. நூ. முன், ப.8
5. மே. கா. நூ. முன். ப. 8
6. மே. கா. நூ. ப. உ
7. மே. கா. நூ. ப. டு
8. மே. கா. நூ. ப. கூஉ
9. மே. கா. நூ. ப. கூஉ
10. மே. கா. நூ. ப. சள
11. மே. கா. நூ. ப. சள
12. மே. கா. நூ. ப. டுச

இலக்கணம் வேற்றுமை, விகாரக்கிலக்கணம் காலம், இடைக் கிலக்கணம் தனித்தியலாமை, உரிச்சொல்லுக்கிலக்கணம் பெயர்க்கும் விகாரக்கும் பண்பாம் உரிமை-என்று விளக்குதல்[1], புதிய வியங்கோள் வடிவங்களைத் தருதல் (லகர ஈற்று வியங்கோள்-தொடங்கல், விடல்; ஆகார ஈற்று வியங்கோள்-வருவேனுக, செய்வேனுக; கடமை ஈற்று வியங்கோள்-வரக்கடவாய்; ஏனீற்று வியங்கோள்-நில்லேன், விடியேன்; அட்டீற்று வியங்கோள்-ஆகட்டும், போகட்டும்; உம்மீற்று வியங்கோள்-செய்யும், சொல்லும்[2]), முதல் ஏழு வேற்றுமைகளுக்கும் உருபேற்கும் முறைகளைப் பட்டியல் போட்டுப் புதிய முறையில் விளக்குதல்,[3] முதற் பெரும்பிரிவின் இறுதிப் பகுதியாக, சிறந்த நூலாசிரியர்களையும் உரையாசிரியர்களையும் குறித்தல், [அவ்வாறு குறிக்கப்படுவோர்: சுப்பிரமணியன், அகஸ்தியன், தொல் காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபீகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவினயன், காக்கைபாடினி, நற்றத்தன், வாமனன், இளம்பூரணர், நச்சினார்க் கினியர், சேனாவரையர், பவணந்தியார், சமண முனிவர் (உரை காரர்), சங்கர நமச்சிவாயர், சிவஞான தேசிகர், வைத்தியநாதர், சுவாமிநாத தேசிகர் என்ற ஈசான தேசிகர், சுப்பிரமணிய தீட்சிதர், வீரமா முனிவர், இராமானுச கவிராயர், சரவணப் பெருமாளையர், தாண்டவராய முதலியார், திருவேங்கடாசல முதலியார், மகாலிங்கையர், இரேனியூசையர் (Rhenius), திருப்பாற் கடலுதன் கவிராயர், பவரீசையர் (Pabricius)], அவர்களைப் பற்றி இரத்தினச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகளைத் தந்திருத்தல் ஆகியன குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய செய்திகளாம்[4].

வரலாற்றுக் குறிப்புப் பகுதியில் நச்சினார்க்கினியர் தொடக்கத்தில் புத்த மதத்தில் இருந்து பின்பு சைவராளர் என்பதும், பவணந்தியார் பௌத்தர் என்பதுவும், உரையியற்றிய சமணரைப் பௌத்தர் என்பதுவும், வைத்தியநாதருக்கும் சுவாமிநாத தேசிகருக்கும் இடையே கடும் கருத்து வேறுபாடு இருந்தது என்பதுவும், இரேனியூசையர் இறந்த போது, இடுகாட்டிலேயே, நெல்லைத் திருப்பாற் கடல்நாதன் கவிராயர் பாடிய நான்கு கையறுநிலைப் பாடல்களைப் போற்றித் தந்திருப்பதும் சிறப்பான குறிப்புகளாம். தெலுங்கு உயிர் எழுத்துகளையும் மெய்யெழுத்துகளையும் பின்னிணைப்பாகத்

1. சாமுவேல்பிள்ளை, இ., தொல்-தன் ப. ஊரு
2. மே. கா. நூ. ரூ
3. மே. கா. நூ. ப. ளயடு
4. மே. கா. நூ. ப. ஊஉ-கூஉ

தந்திருத்தல்,[1] தாண்டவராய முதலியார் தொல். பதிப்பித்ததாகக் குறிப்பிடல், இக் குறிப்பின் மூலம் அகத்திணையியலையும், புறத்திணையியலையும் தாண்டவராயர் இவருக்கு முன்பே பதித்துள்ளார் என்பது விளக்குதல்[2], புறத்திணையியல் இறுதி நூற்பாவிற்கு வழங்கிய அடிக்குறிப்பில், இதனை, "ஐயனரிதனார் வெண்பா மாலையுடனும், புறப்பொருட் பன்னிரு படலத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்க" என்று குறிப்பிடுதல், இக் குறிப்பினின்று புறப்பொருள் பன்னிரு படலத்தை இவர் அறிந்திருந்தார் என்பது புலப்படுத்தல், பன்னிரு படலத்தை அகத்தியரின் பன்னிரு மாணக்கர் எழுதினர் என இரண்டு இடங்களில் சுட்டுதல்,[3] தன் காலத்தில் வழங்கிய நன்னூல் அச்சான பதிப்புரைகளைக் குறிப்பிடுதல், விசாகப் பெருமாளையரின் காண்டிகை உரை, இராமானுச காண்டிகை உரை, நன்னூல் விருத்தி-இராமசுவாமி முதலியார் பதிப்பு, டாக்டர் போப்பையரின் அழகான நன்னூல் பதிப்பு, வால்ற்றர் ஜாயிஸின் "Grammatica Tamuliensis" என்பனவற்றின் பெயர்களைக்கூறி அவை கிடைக்கும் இடங்களையும் சுட்டி யிருத்தல்[4] ஆகியனவும் சுட்டப்படவேண்டிய சிறப்புச் செய்தி களாம்.

உரையில் சுட்டப்படும் அல்லது மேற்கோளாக காட்டப்படும் நூல்களும் நூலாசிரியர்களும்: சிவஞான முனிவருரை மொழி மரபு ப. 4, இலக்கணக் கொத்து மொழி மரபு 13-ப. 4, 46, 106, 107, பெஸ்கி உரை ப. 68, 120, அகத்தியம் ப. 91, இலக்கண விளக்கம் ப. 92, ஐயனரிதனாரின் வெண்பா மாலை ப. 39, 70, பன்னிரு படலம் ப. 39, 70, தண்டியலங்காரம் ப. 70, மாறனலங் காரம் ப. 70, யாப்பருங்கலம், ப. 70, யாப்பருங்கலக் காரிகை ப. 70.

சாமுவேல் பிள்ளையின் உரைச் சிறப்பு: இந்நூல், தொல்— நன்னூல் ஒப்பீட்டு ஆய்வின் முன்னோடி; நூலாசிரியர், உரை யாசிரியர் பற்றிய செய்திகளைத் தரும் களஞ்சியம்; வரிக்கு வரி, எழுத்துக்கு எழுத்து, பக்கத்திற்குப் பக்கம் கருத்துகளை வாரி வழங்கும் கருவூலம்!

1. சாமுவேல் பிள்ளை, தொல். நன். உரை, ப. எ உ எ
2. மே. கா. நூ. ப. 35
3. மே. கா. நூ. ப. 70
4. மே. கா. நூ. ப. 39

19

சவுந்தர நாயகம் பிள்ளை உரை

" ... ... உத்தமன் ஈன்ற
மைந்தன் பெருங்கலே வாணர்கள் நேயன்
பைந்தமிழ் ஆங்கிலோ பாஷையின் மிக்கவன்
பவந்தெறு நன்னெறி படர்சு குணாகரன்
சவுந்தர நாயகத் தகைமைசேர் கற்பினன்"

—அட்டாவதானம் சபாபதி முதலியார்,
"நன்னூற் சுருக்கம்" என்ற நூற்கு
எழுதிய சிறப்புப் பாயிரம்.

க. பெ. சவுந்திரநாயகம் சுருக்க உரை (உரை எழுதிய காலம் கி.பி. 1861): யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டைச் சாத்திர சாலையில் ஆசிரியராய் இருந்து பெரும் புகழ் பெற்ற சுபிரியேல் திசேரா என்பவரின் புதல்வர் இவர். க.பெ.ச. தொடக்கத்தில், வட்டுக் கோட்டையில் பயின்றார். பின்னர் சென்னைக்குச் சென்றார். அங்குப் பயின்று பி.ஏ., பி.எல். பட்டங்களைப் பெற்று வழக்கறிஞராய் விளங்கினர். ஆறுமுக நாவலர் தில்லையில் இருந்தபோது நடந்த அருட்பா—மருட்பா வழக்கில், நாவலர் சார்பாக வழக்காடிய சவுந்தர நாயகம் பிள்ளை இவர்தான் போலும்! கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சேலூரில் நார்மல் பள்ளித் தலைமையாசிரியராக இவர் பணியாற்றினார். பின்னர், 'சென்னப் பட்டணத்துக் கவர்ண்மென்ற் நார்மல்' பள்ளியில், தமிழ் பயிற்றுவதில் தலைமையாளராகத் தொண்டாற்றினர்.

எழுதிய நூல்கள்: நன்னூற் சுருக்க உரைகள் இரண்டை வெளியிட்டிருக்கும் இவர், ஆங்கில இதழ் ஒன்றையும் நடத்தினர்.[1]

1. கணபதிப் பிள்ளை, தென்புலோலியூர், மு. ஈழநாட்டின் தமிழ்ச் சுடர் மணிகள், 1967, ப. 111

இவர் 'மெய்ஞ்ஞானச் செய்யுள்' என்ற பிறிதொரு நூலையும் இயற்றினர். இந்நூல், மூவருள் ஒருவன், நீதி மொழி, வேத விசேடப் பதிகம், ஏசுநாயக மாலை என்ற நான்கு உட்பிரிவுகளை உடையது. இந்நூற் பாடல்கள் இவர் ஏசுமீது கொண்ட பேரன்பைத் துலக்குகின்றன. அப் பாடல்களுள் ஒன்று வருமாறு:[1]

"இப்புவி மேவி முப்பதான் டதனில்
இருநல வர்தனக் கேகி
அப்பனும் பரம ஐயனே! நின்ன
தன்புறு குருத்தொழில் தொடங்க
ஒப்பரு ஞானம் அவ்வயி னடைந்தோய்
ஒங்குமெம் மனமது மாறத்
துப்புறு ஞான நாணமே தாராய்
தூயனே ஏசு நாயகனே"

நன்னூற் சுருக்கங்கள் வெளிவரக் காரணம் : நன்னூற் கல்வி இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் மும்முனைகளில் பயிலப்பட்டது. இயற்கையாக அறிவார்வம் உடைய அறிஞர்கள் ஒரு முனையிலும், தேர்வுத் தேவைக்காகப் பயில விரும்பிய பொது மக்கள் மற்றொரு முனையிலும், தேர்வுத் தேவைக்காகவும் அறிவுத் தேவைக்காகவும் பயில விரும்பிய அயல் நாட்டு அறிஞர்கள் பிறிதொரு முனையிலு மாய் இருந்து நன்னூல் பயில்வதில் ஆர்வங் காட்டினர். இக் காலத்தில் தமிழிலக்கணத்தை எப்படி ஆராய்வது, நன்னூலை எங்ஙனம் ஒப்பிடுவது, ஆராய்வது என்பன சிந்தனைகளாய் இல்லை. எப்படித் தமிழ் இலக்கணத்தைப் புரிய வைப்பது? எங்ஙனம் அயல் மொழியார்க்கும் நன்னூலை விளங்க வைப்பது? என்பனவே சிக்கல் களாயும் சிந்தனையாகவும் இருந்தன. தமிழ் இலக்கணத் துறையில் தனி ஈடுபாடு கொண்டவர் மட்டுமே பயிலும்; நூலாக, ஆராயும் நூலாக, நன்னூல் போன்ற பிற இலக்கண நூல்கள் பதினெட்டாம் நூற்றாண்டு வரை இருந்த நிலை, இந்நூற்றாண்டில் மாறிவிட்டது. தமிழக வரலாற்றில் வேறு எக்காலத்திலும் இல்லாத அளவுக்கு, அயல் நாட்டாரின் அரசியல் உறவும், வணிக உறவும், ஆதிக்க மும் பெருகிவிட்டன. வடவேங்கடம்– தென்குமரி இடைப்பட்ட தமிழர், வட விமயம் தென்குமரி இந்தியர் ஆகி, மேலும், உலகத்தின் ஒரு பாகத்தையே தன்னாட்சியில் வைத்திருக்கும் ஆங்கிலப் பேரரசின் குடிமக்களாக ஆகிவிட்டனர். இதனால்,

1. இராமசாமிப் புலவர், தமிழ்ப்புலவர் வரிசை. தொகுதி 2. பகுதி 1. ப. 252, 253

தமிழரும், தமிழும், தமிழ் நூல்களும் வேற்று மொழியாளர் வழி விரைவில் பல நாடெங்கும் பரவும் நிலை ஏற்பட்டது. பரவு வதற்கும் பரப்புவதற்கும் ஏற்ப, தொழிற்புரட்சியால் ஏற்பட்ட போக்குவரத்து, அச்சு, இதழ்கள் ஆகியன வாய்ப்பாக இருந்தன. தொடக்கத்தில் அதிகாரிகளால் அறிவாளிகளால் மட்டுமே பயிலும் நிலையினதாய் நன்னூல் இருந்தது. இந்நிலை சென்னைக் கல்விச் சங்கம், மாநிலக் கல்லூரி, பல்கலைக் கழகம் ஆகியவாய் ஏற்பட்ட பிறகு மாறியது. படிக்கும் வட்டம் பெருகியது; விரி வடைந்தது. விரிவடையவே, இலக்கணப் புலமை அறிவுத் தேவையாய் இருந்த நிலை மாறி அலுவலகத் தேவையாய் வளர்ந்து விட்டது. இந்நிலையில் "தமிழிலக்கணங்களும் உரைகளும் எடுத்துக்காட்டுகளும் தமிழ் மொழிப் பயிற்சிக்கான எளிமையைச் சிக்கலாக்கி விட்டன; கடுமையாக்கி விட்டன" என்று அக்கால ஆங்கிலேயர் கருதினர். இக்கருத்துப்பட கி.பி. 1863இல் வேலூர் அரசினர் நார்மல் பள்ளித் தலைமையாசிரியராய் இருந்த ஜே. மோசாஸ் என்பார் திசம்பர் 21, 1863இல் க. பெ. சவுந்தரநாயகம் பிள்ளைக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.[1]

"The study of Tamil Grammar is often neglected under a false apprehension that it is difficult or impossible. And a student who begins to read the subject is, at the very threshold, bewildered by the voluminous and obscure commentaries and the barbarous examples (which for the most part one, purposely I believe, selected from authours who should have been gladly consigned for ever to the dark region of oblivion) rather than discouraged by the style in which the Grammar is written. To establish literary merit or superiority by rendering a subject as obscure as possible by means of unintelligible expressions or perflexing combinations of words, seems to have been the leading principles of the Indian authors." என்பது அக் கடிதத்தின் ஒருபகுதி. தேர்வுப்பார்வையில், தமிழ் மொழி அறிவிற்காக நன்னூல் முழுமையும் படிக்க வற்புறுத்துவது அநீதி என்றும் இக்காலத்தில் கருதப்பட்டது. இக்காலப் பாட அமைப்பின்படி, தமிழிலக்கணப் பாடம், மொத்தப் பாட அமைப்பில் பத்தில் ஒரு பகுதியே. அங்ஙனம் எனில் பத்தின் ஒரு பாங்கு காலத்தையே தமிழிலக்கணம் (நன்னூல்) படிக்கச்

1. சவுந்தர நாயகம் பிள்ளை, க.பெ., நன்னூற் சுருக்க உரை பாடம், 1861, முன்னிணைப்பு, ப. 5

செலவிட வேண்டும் என்று விரும்பப்பட்டது.[1] இவ்விருப்பத் திற்கு ஏற்ற நூல்கள் இல்லை என்பதைப் பின்வரும் உரைப்பாயிரம் உரைக்கிறது; "பல கலை வித்தை பயிலு மாணாக்கன் சில காலத்திற் செழுந் தமிழிலக்கணம் வழுவாது வோத ஓர் வழி முன்னில்லை"[2]. ஆக, தமிழிலக்கண அறிவு, ஆய்வுத் தேவை என்ற நிலையி னின்று, தேர்வுத் தேவை என்று இறங்கி, நாளடைவில், பத்துப் பாடங்களில் ஒரு பாடம் என்ற அளவிற்குச் சுருங்கியது. இக்கால கட்டத்தில் நன்னூல் 462 நூற்பாக்களும் தேவையில்லை என்ற கருத்தும் தோன்றிப் பரவியது.

இந்தச் சூழ்நிலையில்தான், ஈழநாட்டு வட்டுக் கோட்டையில் பிறந்து, தமிழகம் வந்து ஆசிரியராயும் வழக்குரைஞராயும் பணி யாற்றிய க.பெ. சவுந்தரநாயகம் பிள்ளை கி.பி. 1861இல், "நன்னூற் சுருக்க உரை பாடம்" என்ற நூலையும், கி.பி. 1866இல் "நன்னூற் சுருக்கச் சார்பு" என்ற நூலையும் வெளியிட்டார். தமிழ் நாட்டார்க்கும் அயல் நாட்டார்க்கும் தமிழ் பயிற்றும் ஆசிரியராக இருந்த பட்டறிவு, நன்னூலில் எந்த எந்த நூற்பாக்கள், மொழி அறிவு அளவில் தேவை என்பதைத் தேர்ந்தெடுக்க இவருக் குதவியது. காலத்தின் தேவையறிந்து நன்னூல் 462 நூற்பாக் களில் செம்பாகத்தை விடுத்து 200 நூற்பாக்களை மட்டும் உரை யோடு, க.பெ.ச. வெளியிட்டார். இச் சுருக்கத்தைப் பாராட்டி வரவேற்றனர். "The Best parts of the best work on Tamil Grammar" என்றும், "A more agreeable companion to the young student" என்றும், டி. கோபால ராவ் என்பார் பாராட்டி னர்.[3] வால்டர் ஜோய்சு என்பார் இக்கருத்தை "very wisely selected and intelligible" என்று புகழ்ந்துள்ளார்.[4] இச் சுருக்கத்தைத் தமிழறிஞர் பலரும் பாராட்டினர். புரசை அட்டாவ தானம் சபாபதி முதலியார், சென்னை கோ. இராசகோபாலப் பிள்ளை, ஆ. சுப்பராய பிள்ளை, கோவை சி. வேலுப்பிள்ளை, சிதம்பர முதலியார் ஆகியோர் புகழ்ந்து போற்றியுள்ளனர்.[5]

இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள பள்ளி, கல்லூரி களில் இந்நூலின் தேவை பெருகிற்று. இரண்டாம் பதிப்பு

---

1. சவுந்தர நாயகம் பிள்ளை, க.பெ. நன்னூற் சுருக்க உரை பாடம், தென்னற்காடு மாவட்டத் துணைப்பள்ளிக் கண்காணிப்பாளர், சி. எஸ். அரியநாயகம் பிள்ளையின் கடிதம், ப. 5
2. மே. கா. நூ. சி. வேலுப்பிள்ளை உரைப்பாயிரம்
3. சவுந்தர நாயகம் பிள்ளை, க.பெ., நன்னூல் சுருக்க உரை பாடம், ப. 7
4. மே. கா. நூ. ப. 8
5. மே. கா. நூ. பாயிரங்கள்

அச்சிடப்படுதற்கு முன்பே நிரம்ப நூல் வேண்டுதல் ஆணைகள் குவிந்து விட்டனவாம். கி.பி. 1884இல் இந்நூலின் எட்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது. இப்பதிப்பு மட்டுமே 14000 படிகள் அச்சிடப்பட்டனவாம்.[1]

உரை பற்றிய சில குறிப்புகள் : முதற்பதிப்பில் 200 நூற்பாக்களாகச் சுருக்கம் பெற்றுள்ள நூற்பாக்கள் எட்டாம் பதிப்பில் 219 நூற்பாக்களாக விரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூற்பாவும் பதம் பிரித்துப் பதிக்கப்பட்டுள்ளது. நூற்பாவிற்கு முன் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொருத்தமான தலைப்புகள் கொடுக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு நூற்பாவிற்கும் எளிய பொழிப்புரை தரப்பட்டிருப்பதோடு அவ்வவற்றிற்குரிய இலக்கிய மேற்கோள்கள் பா எண்களுடன் (Reference) குறிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே அடிக்குறிப்புகளும், இடம் பெற்றுள்ளன. பதங்களுக்கு இலக்கணம் சொல்லும் முறை காட்டும் அட்டவணை, வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல்லுக்கான தனித்தனிப் பட விளக்கங்கள், பத இலக்கணம் கூறப்பெற்ற எடுத்துக்காட்டுகள், பகுபத முடிவுகள் ஆகியன பின்னிணைப்பில் இடம் பெற்றுள்ளன. ஆக, தெளிவான மேற்கோள்கள் விளக்கத்துடன், பொருத்தமான தலைப்புகளுடன், முறையாக முதன் முதல் பதிக்கப்பெற்ற சுருக்க நூல் இதுவே. இதுவே இதன் தனிச் சிறப்பு.

நன்னூற் சுருக்கச் சார்பு:[2] கி.பி. 1886 இல், எட்டணை விலையில் இந்நூல் க.பெ.ச. அவர்களால் வெளியிடப் பெற்றது. இந்நூலின் கண் 195 பயிற்சி வினாக்கள், நன்னூலை அடியொற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூல் ஆங்கில முன்னுரையில், க.பெ.ச. குறிப்பிடுவது கருதத்தக்கது. புதிதாகத் தமிழ் பயிலு வோர்க்குத் தமிழில் உள்ள புணர்ச்சி விதிகள் புரிந்து கொள்ள எளிமையானவை அல்ல. சந்தி பிரிக்காமல் எழுதப்படும் தொடர்கள் எளிதில் அயல் மொழியாரை மயங்க வைத்தன. உரை நடையில் அவை தேவையில்லை என்றாலும் கூட, மரபிலக் கணப் புலவர்களால் வற்புறுத்தப்பட்டன. ஆங்கிலச் சார்பினரால் சந்திகள் முற்ற விளக்கப்பட்டது. கால அடைவில், உரை நடையில் மட்டுமின்றி செய்யுளிலும் சந்தி தேவையில்லை என்ற கருத்து நிலை பெறத் தொடங்கி விட்டது. இதன் எதிரொளியாக, க.பெ.ச.வின் முன்னுரை அமைந்துள்ளது. தாம் முற்றும் சந்தி

1. நன்னூல் சுருக்க உரை பாடம், க. பெ. ச, ஆங்கில முன்னுரை ப. 14
2. இந்நூலின் ஆங்கிலப் பெயர் : A companion to the Abridgement of the Nannul, Containing Exercises on all the important sutrams Found in the Abridgement with Indispensable Notes.

பிரித்தே பதித்துள்ளதாகவும், அவ்வாறு பிரிக்கப்பட்டுள்ள முறையை விரிவாகவும் தம் முன்னுரையில் விளக்குகிறார் இவர்.

சுருக்கப்பதிப்புகள் தொடர்தல் : க.பெ.ச. தொடங்கி வைத்த நன்னூற் சுருக்கப் பதிப்புரைப் பணி, பின்னும் தொடர்ந்தது. எ. தெய்வநாயகம் பிள்ளையால் 221 நூற்பாக்கள் சுருக்கி உரை யோடு தரப்பட்டன. பாளையங்கோட்டை 'சர்ச் மிஷன் பிரசில்' அச்சான இப்பதிப்பு, 1876 வரை ஏழு பதிப்புகளாக வெளியிடப் பட்டது. 1928இல் இரா. நடசேன் என்பார் நன்னூற் சுருக்கம் மூலமும் காண்டிகை உரையும் எனும் தலைப்பில் 219 நூற்பாக்களை உரையுடன் வெளியிட்டார். எசு. எசு. எல்.சி. பயில்வார், மதுரைத் தமிழ் சங்கத்தார் நடத்தும் 'மெட்ரிகுலேசன்' தேர்வு எழுதுவார், தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியப் பயிற்சி பெறுவோர் ஆகிய எத்திறத்தார்க்கும் இந்நூல் பயன்படும் என்று பதிப்பாசிரியர் தம் முன்னுரையில் குறித்துள்ளார்.

20

ஆறுமுக நாவலர் உரை

"நல்லாக ராறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமி ழெங்கே? சுருதியெங்கே?—எல்லாரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கே? பிர சங்கமெங்கே?
யாத்தனறி வெங்கே? அறை"

சி. வை. தாமோதரம் பிள்ளை

ஆறுமுக நாவலர் (கி.பி. 1822–1879): இலங்கை நாட்டு யாழ்ப் பாணத்து நல்லூரிலே சித்திரபானு ஆண்டில் (1822) பிறந்தார். தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை. தாயார் பெயர் சிவகாமி அம்மை. இளைய பருவத்தில், நல்லூர் சுப்பிரமணிய பிள்ளையிடம் பாடம் பயின்றார். பின்னர், இலக்கண இலக்கியங்களை இருபாலைச் சேனாதி ராய முதலியாரிடமும், அவர் மாணாக்கர் சரவணமுத்துப் புலவரிட மும் கற்றுத் தெளிந்தனர். சமற்கிருதத்தையும் நன்கு கற்றார். கற்ற பின் வீற்றர் பார்சிவல் என்னும் பாதிரியார் நடத்திய ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்து ஆங்கில மொழியையும் செவ்வையாகக் கற்றார்.

பைபிளைத் தமிழாக்கும் பணி: பார்சிவல் பாதிரியார் நாவலரின் பன்மொழிப் புலமையை உணர்ந்து, பைபிளைத் தமிழாக்கம் செய்யும் பணியை நாவலரிடம் ஒப்படைத்தனர். பாதிரியாரிடம் அலுவல் ஏற்பதற்கு முன்னரே, தான் எப்போதும் சிவகண்மணி, திருநீறு முதலான சைவ சமயக் குறிகளுடன்தான் வரமுடியும் என்றும், பாதிரி சைவசமய நிந்தனை புரிவது போல தான் கிறித்தவ சமய நிந்தனை புரிய வேண்டியதாக வரும்போது அவ்வாறு செய்வது பற்றி வருத்தப்படக் கூடாது என்றும் வரையறை செய்து கொண்டார். நாவலரை விட்டால் நல்ல தமிழறிஞர் கிடைப்பதருமை என்பதை உணர்ந்த பாதிரியாரும் நாவலருடைய விருப்பப்படி செய்யலாம் என்று ஒப்புக்

கொண்டார்.[1] நாவலர் ஈழத்தில் பைபிளைத் தமிழாக்கி வந்த போது, தமிழகத்திலும் கிறித்தவ சங்கத்தார் பிறிதொரு தமிழ் மொழிபெயர்ப்பைச் செய்து வந்தனர். தமிழ்ப்பைபிளைப் பதிப்பிக்க நேருகையில் எவருடையது பதிப்பிக்கப் பொருத்தமானது என்று முடிவுசெய்ய வேண்டி வந்தது. அப்போது சென்னைப் பெரும் புலவர் மழவை மகாலிங்கையரிடம், இரண்டு மொழிபெயர்ப்பு களையும் கொடுத்து, தக்க ஒன்றை அச்சிடத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. நாவலரின் தமிழ்மொழி பெயர்ப்பு அச்சிடத் தேர்ந்தெடுக்கப்பட்டு அச்சேற்றப்பட்டதாம்.

சொற் பொழிவுக் கலையை வளர்த்தவர் : நாவலருக்கு முன்னர்ச் சொற்பொழிவாற்றும் பழக்கம் தமிழ்நாட்டில் மிகுதியாக இல்லை. நாவலர் காலத்தில்தான் சொற்பொழிவு பெருவளர்ச்சி பெற்றது. ஈழம் தமிழகப் பகுதிகள் அனைத்திலும் நாவலர் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். இவரது சொற்பொழிவால் ஈர்க்கப்பட்ட திருவாவடுதுறை யாதினத்துப் பண்டாரச் சந்நிதி, நாவலரைத் தம் ஆதீனத்திற்கு அழைத்துச் சிறப்புப் பல செய்தனர். 'நாவலர்' என்ற பட்டத்தையும் வழங்கினர்.

நாவலர்—ஒரு பாவலர் : நாவலர் ஒரு சிறந்த பதிப்பாளர், சொற்பொழிவாளர், கட்டுரை வல்லாளர், உரையாசிரியர், மொழி பெயர்ப்பாளர் என்று மட்டுமே உலகம் அறியும். ஆனால், அவர் ஒரு சிறந்த கவிஞராகவும் இலங்கி இருக்கிறார். ஒருகால் சமயச் சொற்பொழிவு வொன்று செய்யத் தொடங்கினர் நாவலர். அப்போது அங்கு நின்ற தம் மாணாக்கரைப் பார்த்து, 'ஆனைமுக வணக்கம் பாடுக" என்று பணித்தனர். அம் மாணாக்கரோ "தாங்களே முதலிற் சொல்லுங்கள் அதுதான் தக்கது" என்றனர். உடனே நாவலர் அழகான பாடலொன்றை அங்கேயே பாடினர். அப்பாடல் பின்வருமாறு :

"சீர்பூத்த கருவிநூல் உணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய இருள்கள் நீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானூர் தந்த
வார்பூத்த அறிவிச்சை தொழிலென் றேதும்
மதம்பூத்த விநாயகன்தாள் வணங்கி வாழ்வாம்"[2]

1. கணேசய்யர், ஈழநாட்டுத்தமிழ்ப் புலவர் சரித்திரம். 1939, ப. 52
2. இராமசாமிப் புலவர், க. அ. தமிழ்ப்புலவர் வரிசை 3, 1951. ப. 98

மதிப்பிற்குரிய பதிப்பாசிரியர் : இறுதிக்காலம் வரை இல்லறம் புகாத நாவலர், பதிப்புத் துறையில் தனிப்புகழ் பெற்றவர். நாவலர் பதிப்பு என்றால் அச்சுப் பிழையே இராது என்று கூறும் அளவுக்கு ஒரு புதிய ஊழியையே உண்டாக்கியவர். 'பரிகார முத்திரை' என்று அச்சேற வேண்டியது 'பரிகார முத்திரை' என்றச்சாகி விட்டதோ என்று நாவலர் அஞ்சிப் பதறிய நிகழ்ச்சியை இவர்தம் அணுக்க மாணாக்கர் ஒருவர் எழுதியுள்ளார் அந்த அளவிற்குப் பிழையற்ற பதிப்புகள் வருவதில் பெரும்[1]. அக்கறை காட்டினார்.

கிறித்தவ மத கோளரி : ஆங்கில ஆட்சிக்குட்பட்ட இலங்கை நாட்டில், அமெரிக்கப் பாதிரிமார் கிறித்தவ சமயத்தைப் பரப்பி வந்தனர். கல்வி, மருத்துவத் தொண்டின் வழி கிறித்தவம் முறையே பரவி வந்தது. சைவசமய ஆழமுள்ள ஈழம் இதனை எதிர்த்தது. இந்த எதிர்ப்பின் ஒருபெருந் தலைவராய்—சைவ நாயகராய் விளங்கினர் ஆறுமுக நாவலர். எழுத்தாலும், பேச்சாலும் இவராற்றிய தொண்டுகள் மிகப்பல. 'உலகம் உவப்பத் தோன்றிய பரசமய கோளரி' என்று இவரைக் குறிப்பர் ஈழப் பேரறிஞர்.[2] ஏசுமத நிராகரணம், சைவ தூடண பரிகாரம், கிறித்தவமத கண்டனம், மிலேச்சமத விகற்பம் முதலான நூற்கள் இவராலும், இவர் தூண்டுதல் பெற்ற நண்பர்களாலும் வெளியிடப் பெற்ற கிறித்தவ எதிர்ப்பு நூற்களாம்.

கட்டுரைக் கலைக்குத் தந்தை: செய்யுள் இலக்கியம் பரவலாகப் பலராலும் பயன்பட்டு வந்த அக்காலத்தில் கட்டுரைக் கலைக்கு உயிர்ப்புக் கொடுத்தவர் நாவலர். கடிதங்கள் கூடப் பாவினாலேயே அக்காலத்து எழுதப்பட்டு வந்தன. ஊடே ஊடே வெளியாகும் ஒன்றிரண்டு கட்டுரைகளும் எளிய மக்கள் புரிந்து கொள்ளும் பாங்கில் எழுதப்பட வில்லை. இந்நிலையை முறித்து மாற்றியமைத்தவர் நாவலர். கட்டுரை வரைவதில் அவரின் முதன்மை நோக்கு பொருள் தெளிவு. இக் கருத்தை எண்ணியே முதன்முதல் முற்றுப் புள்ளி, காற்புள்ளி முதலான குறியீடுகளைப் பயன்படுத்திச் செல்வாக்குப் பெறச் செய்தார். இக்காரணங்களால் தான், இவரைப் பரிதிமாற் கலைஞர், 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்று பாராட்டுகின்றார். கொழும்பு பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை, கட்டுரை நடைக்குத் தந்தை நாவலர் என்று

---

1. கைலாசம் பிள்ளை, த., ஆறுமுக நாவலர் சரித்திரம், காலயுக்தி—தை ப. 14
2. கதிரவேற் பிள்ளை, நா., நாவலர் நினைவு மலர், 1938, ப. 29

தம் கட்டுரை ஒன்றில் போற்றுகிறார்.[1] ஈழநாட்டு யாழ்ப் பாணத்து நல்லூரில் பிறந்து ஈழத்திலும், தமிழகத்திலும் தொண்டாற்றிய ஆறுமுக நாவலர் "இலக்கணங்களில் வல்லவர்; இலக்கியங்களில் வல்லவர்; நீதிநூல்களில் வல்லவர்; நியாய நூல்களில் வல்லவர்; சைவ சித்தாந்த சாத்திரங்களில் வல்லவர்; சைவ ஆகமங்களில் வல்லவர்; சைவாகமப் பெருமையைச் சாதித்துப் போதித்தலில் வல்லவர்; ஏலே பயில்வோர் உளங் கொளக் கற்பிக்கும் செயலில் வல்லவர்; உலகியல்களைப் பல தலையின்றி உணர்தலில் வல்லவர்; செந்தமிழ் நூல்களைத் திருத்தி அச்சிடுஞ் செயலில் வல்லவர்; செந்தமிழ் வாக்கியங்களைச் சிறப்புறத் தொடுத்து வரையுஞ் செயலில் வல்லவர்; சைவப் பிரசங்கத்தில் வல்லவர்; புராணப் பிரசங்கத்தில் வல்லவர்; கசட்டு நெறிகளை மறுத்தெழுதும் கண்டனங்களில் வல்லவர்; செய்யுளியற்றுத் திறத்தில் வல்லவர்".[2]

நன்னூல் விருத்தியுரையை முதலில் அச்சேற்றியவர்: நன்னூலைப் பொறுத்தவரை நாவலர் செய்த பணிகள் இரண்டு. முதலாவது சங்கர நமச்சிவாயப் புலவரால் செய்யப்பட்டுத் திருவாவடுதுறை ஆதின வித்துவானாகிய சிவஞான சுவாமிகளால் திருத்தப்பட்ட நன்னூல் விருத்தியுரையைப் பதிப்பித்தது (1851). இரண்டாவது, நன்னூலுக்குக் காண்டிகை உரையொன்று எழுதியது (1880). இவற்றுள் நன்னூல் விருத்தி உரையைக் கி.பி. 1851ஆம் ஆண்டிற்கிணையான விரோதி கிருது வருடம் ஐப்பசித் திங்களில் தமது வித்தியாநு பாலன யந்திர சாலையில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். கிடைத்த நன்னூல் விருத்தி பதிப்புகளுள், இதுவே முதலாவது அச்சிட்ட பதிப்பு ஆகும்.

நாவலருக்கு முன், முனிவர் ஆகியோர் எழுதிய நன்னூல் விருத்தியுரையின் பகுதிகள் சிலவற்றை, வேதகிரி முதலியார் தம் நன்னூல் பதிப்பில் (1851 ஆனித் திங்கள்) ஆங்காங்கே அச்சிட் டிருக்கிறார். விருத்தி முழுதையும் முதலில் வெளியிட்ட பெருமை நாவலரையே சேரும்.

நாவலரியற்றிய நன்னூல் காண்டிகை உரை: நாவலரால் எழுதப்பட்ட காண்டிகை உரை கி.பி. 1880இல் முதல் பதிப்பாக வெளி வந்தது. கி.பி. 1879இல் நாவலர் இறந்த பின் தான்

1. கணபதிப் பிள்ளை, க. 'தமிழ்ப் பெருந்தகை' நாவலர் நினைவு மலர் 1938, ப. 17
2. குமாரசுவாமிப் புலவர், அ., தமிழ்ப் புலவர் சரித்திரம், 1951, ப. 35

காண்டிகை உரை வெளி வந்தது. நாவலர் எழுதி முடித்துத் தன் காலத்திலேயே அச்சிட்டு வெளியிட்ட நூல்கள் 52; எழுதத் தொடங்கி முற்றுப் பெரு நூல்கள் ஒன்பது. அவற்றுள் இலக்கண வினு விடை முதற்புத்தகமும் ஒன்று. அச்சிற் பதிப்பிக்கும் பொருட்டுப் பத்து நூல்களை எழுதி முடித்து வைத்திருந்தார்.[1] அவ்வாறு வைக்கப் பெற்றிருந்த நூல்களுள் நன்னூல் விருத்தி யுரையும் நன்னூல் காண்டிகை உரையும் தலைமை யானவை. நாவலரால் திருத்தியும் விளக்கியும் கூட்டியும் புதுக்கியும் வெளியிடப்பட்ட இவ்வுரையின் சிறப்பான கூறு எளிமை ஆகும். பதவுரையாக அமைந்த இவ்வுரையில், ஒவ்வொரு நூற்பாவிற்கும் உரிய தலைப்பை மேலும், வேண்டிய வினுக்களைக் கீழுமாக நாவலர் அமைத்திருந்தார். நூலிறுதியில் ஏறத்தாழ அறுபது பயிற்சிகள் தரப்பட்டிருந்தன. இலக்கண அமைதி, பகுபத முடிபு, சொல்லிலக்கண சூசி, இலக்கணம் கூறிய எடுத்துக் காட்டுகள், ஆசிரியர் நன்னூலைப் பயிற்றுவதற்கு அறிவுரை, நன்னூலைப் பயிலும் மாணாக்கர்க்கு அறிவுரை என்ற தலைப்புகளில் பல வேறு செய்திகளைக் கொடுத்துள்ளார். இன்று வரை இருபத்தாறு பதிப்புகளை இவர் உரை பெற்றிருப்பது ஒரு பெருஞ் சிறப்பாகும்.

1. இரத்தினம், கா. பெ. நாவலர் மலர், 1938 ப 86

21

சடகோபராமானுசாச்சாரியார் உரை

வை. மு. சடகோபராமானுசாச்சாரியார் (கி.பி. 1871—1910): வைத்தமாநிதி-முடும்பை-சடகோபராமானுசாச்சாரியார் 1871ஆம் ஆண்டு சென்னை திருவல்லிக்கேணியில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சீனிவாச அப்பன் அய்யங்கார், தாயார் பெயர் ஆண்டாள் அம்மாள். இவர், வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியாருக்குச் சிறிய தகப்பனார் ஆவர். கிறித்துவக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்த காரப்பங்கோடு கோபாலாச்சாரியார், சென்னை அரசினர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்த பு. மா. சீனிவாசாச்சாரியார் என்பவர்களிடத்திலே தமிழ் கற்றுத் தேர்ந்தார். தன் தந்தையாரிடமும், சுதரிசனுச்சாரியாரிடமும் சில நூல்களைப் பயின்றார். தமிழில் நன்கு பயிற்சி பெற்றபின், சென்னை சர்ச் ஆப் ஸ்காட்லாந்து மிசன் கல்லூரியில் பதினைந்து ஆண்டுகளும் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் ஆறு ஆண்டுகளும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார்.

உரையாசிரியர்: பல்கலைக் கழகப் பாடங்களில் இடம் பெற்ற நூல்களுக்கு எளிய உரை தேவைப்பட்டது. சே. கிருஷ்ணமாச்சாரியாரைத் துணையாகக் கொண்டு நன்னூல் காண்டிகை உரையை எழுதினார் (1896). தொடர்ந்து பல்கலைக் கழகப் பாட நூற்கள் பலவற்றிற்கும் பொது மக்கள் அனைவர்க்கும் விளங்கும் வகையில் உரை எழுதி வெளியிட்டார். வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார்க்குத் தமிழாசிரியராக இருந்து அவரைத் தமிழ்ப் புலவராக்கினார். பின்னர் அவரைத் தன் உரை வேலைகளிலும் கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டார். வை. மு. ச. அவர்களின் வழி பெற்ற தமிழறிவும் உரைப் பதிப்புத் துறையில் பெற்ற பட்டறிவுமே பிற்காலத்தில், வை. மு. கோ. வைத் தனிப்பெரும் உரையாசிரியராக ஆக்கின.

மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்: மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராகச் சில காலம் தொண்டாற்றினர். நெல்லைச் சிதம்பரக் கவிராயர் என்பார் இயற்றிய உசித சூடாமணி நிகண்டு என்ற நூலுக்கு வை. மு. ச. அழகான சிறப்புப் பாயிரம் ஒன்று வழங்கியுள்ளார்.[1] தனது முப்பத்தொன்பதாவது வயதிலேயே கி.பி. 1910ஆம் ஆண்டில், வை. மு. ச. இறந்து விட்டார். குறைந்த வயதில் நிறைந்த தமிழ்ப்பணிகள் செய்த தமிழறிஞர்களுள் இவரும் ஒருவராவர்.

சே. கிருட்டினமாச்சாரியார் (கி.பி. 1863—1926): தொண்டை நாட்டுத் திருக்கழுக்குன்றத்திற்கு அருகில் உள்ள ஓரகடம் என்னும் சிற்றூரில் 1863இல் இராம அய்யங்காரின் மகனுய்ப் பிறந்தார். தன் தந்தையாரிடமும் திருக்கழுக்குன்றப் பள்ளி ஆசிரியர் மாடபூசி கோவிந்தாச்சாரியாரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். பின்னர் சென்னையில் இருந்த புன்னைமாட பூசி சீநிவாசாசாரியார் என்பவரிடமும் மேலும் பல நூற்களைப் பயின்றார்.

சென்னையில் இருந்து, கற்று , நூலாய்வுகள் நிகழ்த்திக் கொண்டிருந்த போது, வை. மு. ச. வின் நட்புக் கிடைத்தது. இருவரும் கலந்து எண்ணினர். பல்கலைக் கழகத் தமிழ்ப் பாட நூல்களுக்குப் போதுமான அளவில் எளிய உரைகள் இல்லாமல் இருந்த இச் சூழலை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். 1890ஆம் ஆண்டு முதல் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு களுக்குரிய பாடநூல்களுக்கு உரையெழுதி வெளியிட்டனர்.[2]

நன்னூல் காண்டிகை உரை: கி.பி. 1896இல் வெளியிடப் பட்ட இக்காண்டிகை உரை, அரசினரால் பாடநூலாக ஒப்புக் கொள்ளப்பட்டுக் கல்விச் சாலைகளில் இடம்பெற்றது. இன்று வரை ஏறத்தாழ இருபதுக்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளியாகி, பல்லாயிரக் கணக்கில் விற்பனையாகி, நன்னூல் இலக்கணத்தைப் பரவலாக்கிற்று.

உரையின் இயல்புகள்: ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தக சாலை, 19, தென்னண்டை மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை என்ற முகவரியிலிருந்து வெளியான இவ்வுரை தேர்வுப் பார்வை யில் மிகச் சிறந்தது.

1. இராமசாமிப் புலவர், க. அ., தமிழ்ப் புலவர் வரிசை—17, 1958, ப. 39
2. மே. கா. நூ. 9. 1955, ப: 41

மயிலை. உரை, 1918–இல் டாக்டர் உ. வே. சா. ஆல் அறிவிக்கப்படும் வரை, 'பழைய உரை' என்றும் 'ஜைன உரை' என்றும் வழங்கப்பட்டு வந்தது. இவ்வாறு வழங்கப் பட்டு வந்த அப்பழைய உரையை, இப் பதிப்பாளர்கள் தம் பதிப்பெங்கும் அடிக்குறிப்பில் தேவையான இடங்களில் கொடுத் துள்ளனர்.[1] இவ்வகையில், மயிலை. உரை 1918இல் டாக்டர் உ. வே. சாமிநாதையரால் வெளியிடப்படாததற்கு முன்பே 'பழைய உரை' என்ற தலைப்பில் அடிக்குறிப்பாக முதன் முதலில் வெளியிட்ட பெருமை இவர்களையே சேரும். "நன்னூலின் பழைய உரையிலிருந்து சாரமான விஷயங்கள் சில இதில் ஆங்காங்குச் சேர்க்கப்பட்டுள்ளன" என்பது இவர்கள்தம் முகவுரை. இவ்வுரை முழுவதும் பி.ஏ., எம். ஏ., மெட்ரிக்குத் தேர்வுகளுக்குச் செல்லும் மாணக்கர்களுக்காக எழுதப்பட்டது என்பதை இவர்தம் முகவுரை வலியுறுத்தும். "பழைய ஜைன உரை, சங்கர நமச்சிவாயரால் செய்யப்பட்டுச் சிவஞான முனிவரால் திருத்தப் பட்ட விருத்தியுரை, விசாகப் பெருமாளையர் செய்த காண்டிகை யுரை, இராமானுச கவிராயரின் காண்டிகை விருத்தியுரை ஆகிய உரைகள் எல்லாவற்றுள்ளும், பரீட்சைக்குப் படிக்கும் மாணக்கர்க்குப் பெரிதும் பயன்படாத பல விஷயங்களை நீக்கியும் மற்றையவற்றை நன்கு விளக்கியும், இன்றியமையாத பல விஷயங்களைப் புதிதாகச் சேர்த்தும் தெளிவாகப் பொருள் விளங்குமாறு மிக எளிய நடையில் எழுதப் பட்டது இக் காண்டிகை உரை" என்று தம் முகவுரையின் கண் குறிப்பர். இந்நோக்கில் பல பின்னிணைப்புகள் இப்பதிப்போடு சேர்க்கப் பட்டுள்ளன. அவை: பரீட்சைக்கு உரிய வினாக்கள்; தமிழிலக் கணத்துக்கு ஒத்த ஆங்கிலப் பெயர்கள்; பொருளிலக்கணச் சுருக்கம், யாப்பிலக்கணச் சுருக்கம், அணியிலக்கணச் சுருக்கம், காப்பிய இலக்கணம், இலக்கணக் கண்ணோடி ஆகியன.

எளிய இனிய நடையில் இவர்தம் உரை இயன்றிருக்கிறது. ஆங்காங்கே தேவையான சிறப்புக் குறிப்புகளும் இடம் பெற் றுள்ளன. குறிப்பாகச் சுட்டவேண்டிய அக் குறிப்புகளாவன: (அ) பெயர்ப் பகுபதத்துக்கும்[2] குறிப்பு வினைமுற்றுப் பகு பதத்துக்கும் வேறுபாடு, (ஆ) பெயரிடைநிலைக்கும் வினையிடை நிலைக்கும் வேறுபாடு[3], (இ) தழுவு தொடர்க்கும் தழாத் தொடர்க்

1. சடகோபராமானுசாசாரியார், கிருஷ்ணமாசாரியார் பதிப்பு, நூற்பா 60, 62,
2. வை. மு. ச., கே.கி., நன்னூல் ப, 72
3. மே. கா. நூ. ப.87

கும் வேறுபாடு[1], (ஈ) புணர்ச்சி விகாரத்துக்கும் செய்யுள் விகாரத்துக்கும் வேறுபாடு[2], (உ) முன்னிலை வினைக்கும் ஏவல் வினைக்கும் வேறுபாடு[3], (ஊ) தொழிற் பெயர்க்கும் வினையாலணை யும் பெயர்க்கும் வேறுபாடு[4], (எ) ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் வேறுபாடு[5], (ஏ) முதல் வேற்றுமைக் கருத்தாவுக்கும் மூன்றும் வேற்றுமைக் கருத்தாவுக்கும் வேறுபாடு[6], (ஐ) ஏவற்கும் வியங்கோளுக்கும் வேறுபாடு[7], (ஒ) அடுக்குத் தொடர்க்கும் இரட்டைக் கிளவிக்கும் வேறுபாடு[8], (ஓ) மொழி மாற்றுப் பொருள் கோடலுக்கும் கொண்டு கூட்டல் பொருள் கோடலுக்கும் வேறுபாடு[9], (ஔ) பெயர்ச் செவ்வெண்ணுக்கும் உம்மைத் தொகைக்கும் வேறுபாடு[10] ஆகியன.

தேர்வுப் பார்வையில் இவ்வுரை எழுதப் பட்டிருந்தாலும், 'எளிமை' இவ்வுரையின் ஒரு சிறப்பு. விரிவான விளக்கங்களை, நுணுக்கங்களை ஆங்காங்கே தந்திருப்பது பிறிதொருசிறப்பு.

---

1. வை. மு. ச., கே. சி., நன்னூல், ப. 98
2. மே. கா. நூ. ப. 100
3. மே. கா. நூ. ப. 105
4. மே. கா. நூ. ப. 185
5. மே. கா. நூ. ப. 190
6. மே. கா. நூ. ப. 194
7. மே. கா. நூ. ப. 219
8. மே. கா. நூ. ப. 258
9. மே. கா. நூ. ப. 272
10. மே. கா. நூ. ப. 280

22

கோபாலாசாரியார் உரை

கா.ஸ்ரீ. கோபாலாசாரியார் (உரை எழுதிய காலம் கி.பி. 1898): இவர், சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் பணியாற்றிய தமிழாசிரியராவார். காரப்பங்கோடு என்ற ஊரைச் சேர்ந்தவர். இவரே வை.மு.ச.வின் ஆசிரியராவார். இவர், செய்யுள் இயற்றுவதில் திறன்பெற்றவர். சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் வல்லவர். காஞ்சிபுரம் இராசாமி நாயுடு, திருமயிலை சண்முகம் பிள்ளை ஆகிய தமிழறிஞர்கள் இவர் காலத்தே வாழ்ந்தவராவர். விஷ்ணுபுராணம் என்ற நூலுக்குச் சிறப்புப்பாயிரம் ஒன்று இவர் வழங்கியுள்ளார். அப்பாயிரத்திலுள்ள ஒரு பாட்டுப் பின்வருமாறு:

> நீரினெதிர் சென்று நெருப்பினிடை நின்றுநிதி
> கூருங் கிழியை வென்று கோதில்பரம் இன்னதென்று
> பாரும் விசும்புமுயப் பண்ணிய நம் செந்தமிழ்தான்
> சீரின் விளங்கியது தென்மதுரை நன்னகரே"

இவரைப் பற்றிய பிற செய்திகள் கிடைக்கவில்லை.

தி. கோ. ஸ்ரீரங்காச்சாரி (உரை எழுதிய காலம் கி.பி. 1898): கா. ஸ்ரீ. கோ.விடம் தமிழ் பயின்ற மாணாக்கர் இவர். பின்னர் அவருடன் சேர்ந்து நன்னூல் உரை எழுதிய இவ்வாசிரியர் 'சென்னை சர்ச் ஆப் ஸ்காட்லெண்ட் மிஷன்' கல்லூரியில் தமிழாசிரியராய் இருந்தார். வைணவ நூல்களில் நல்ல பயிற்சி உடையவர். ஆசாரிய சரித்திரம் முதலிய உரைநடை நூல்களை எழுதியவர். 'ஜனப்பிரியன்' என்ற திங்களிதழ் ஒன்றை நடத்தியவர். தன் ஆசிரியர் கா. ஸ்ரீ. கோ. அவர்களைத் தான் எழுதிய நூல் முகப்பொன்றில் நினைவு கூர்கிறார். அவர் நினைவு கூரும் பாடல் பின்வருமாறு:

"சந்தமர் காரப்பாகர் தன்னில்வரு தண்ணிரவி
செந்தமிழால் என்னைத் தெருட்டியநல் அந்தணர்கோன்
சீரிய கோபாலகுரு சேவடிசிந் தித்துரைப்பேன்
ஆசிரியதம் நற்சரிதத் தை."

காண்டிகை உரை (கி.பி. 1898): இவ்விருவரையும் பற்றிய வரலாறு ஒன்றும் அறிந்திடக் கூடவில்லை. முன்னவர், கா. ஸ்ரீ. கோபாலாசாரியார், சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பணியாற்றியவர் என்பதும், பின்னவர், தி.கோ. ஸ்ரீரங்கசாரியார், முன்னவரின் மாணவர் என்பதும் நூல் முகப்பால் புலனுகின்றன. கா.ஸ்ரீ.கோ. 1896 இல் நன்னூல் காண்டிகை உரை எழுதிப் பதிப்பித்த வை.மு.ச.வின் ஆசிரியர் என்பது அவர்தம் வரலாற்றுல் தெரிய வருகிறது.[1] இக்குறிப்பினின்று ஆசிரியருக்கு முன்பே மாணுக்கர் வை.மு.ச. நன்னூல் காண்டிகை உரையை வெளியிட்டனர் என்பது புலனுகிறது.

உரையின் இயல்புகள்: ஒவ்வொரு நூற்பாவிற்கும் உரிய தலைப்புகளோடு நூற்பா, பதவுரை, குறிப்புரை என்று இவ்வுரை அமைந்துள்ளது. நூற்பாவிற்கு மேல், நூற்பாவின் கருத்தைத் தாங்கும் தலைப்பு இடப்பட்டதால், கொளு தேவையில்லை என விடப்பட்டது போலும். தொல்காப்பிய உரையாசிரியர்கள் இளம் பூரணர், நச்சினர்க்கினியர், இலக்கண விளக்கக்காரர், பரிமேலழகர் ஆகியோரை எடுத்துக்காட்டுகிறர்கள்[2]. ஐ ஒளபற்றிய 70 ஆம் நூற்பா எழுத்துப்போலி கூறியதே என்ற இராமானுச கவிராயர் கருத்தை மறுத்து, அந்நூற்பா சந்தியக்கரம் உணர்த்துவதே என நிலைநாட்டுகிறர்கள். பாயிர நூற்பாக்களையும், எழுத்து, சொல்லதிகார நூற்பா எண்ணிக்கையோடு இணைத்து, 462 என்ற நூற்பாத் தொகை கொடுப்பதும் அச்சிடுவதுமே முன்னைய வழக்கம். இவர் அதற்கு மாருக, இரண்டையும் பிரித்து, பாயிரம் 55 என முடித்துப் பின்வரும் நூற்பாக்களுக்குத் தனி எண் கொடுத்துள்ளனர். 'நிகண்டு' என்பது இடுகுறியாற் பெயர்பெற்ற ஒன்றுக நன்னூல் உரைகாரர்களால் காட்டப்படுதல் மரபு.[3] இது பொருத்தமின்று என்பது இவர்கள் கருத்து. 'நிகண்டு என்பது நிகமயதிதீ நிகந்து-பொருளை அடைவிப்பது என்னும் காரணம் பற்றியதென யாஸ நிருத்தம்' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இக்கருத்தை

1. இராம சுவாமிப்புலவர், சு. அ., தமிழ்ப்புலவர் வரிசை, பதினேழாம் புத்தகம் 1958, ப. 36
2. கா. ஸ்ரீ. கோ., பதிப்பு, 1898 நூற்பா, 115, 124, 296
3. நன். சங். உரை. 49

இவர்கள் தம் முகவுரையில் எடுத்துக் காட்டியுள்ளார்கள். உயர் நிலைப் பள்ளிக்கும் கல்லூரிக்குமாகவே இக் காண்டிகை செய்யப் பட்டது என்பது, இந்நூலைப்பற்றிக் கருத்து வழங்கிய அக்காலப் பொது இயக்குநரின் அணுக்கர் வி.டி. சேஷாத்திரியாச்சாரியார் குறிப்பாலும், கோவை மாவட்டப் பள்ளித் துணைக் கண்காணிப் பாளர் சி.எஸ். சுவாமி அய்யங்கார் குறிப்பாலும், இவர்கள்தம் முன்னுரையாலும் தெளிவாகிறது. அம்முகவுரை பின்வருமாறு:[1]

"பழைய உரைகள் இந்நாள் ஆங்கிலத்தோடு தமிழைக் கற்கும் மாணக்கர்க்கும் ஏனையோர்க்கும் ஒப்பப்பயன் படாமையின் நன்னூல் உரை நடையை எளிதாக்கியும் பொருளைத் தெளிவாக்கி யும், உதாரணங்களை ஏற்ற இடங்களில் மாற்றியும் விளக்கியும், இன்றியமையாத அரிய விஷயங்களை வேண்டுமிடங்களில் கூட்டி யும், இந்நூலுக்குத் தொல்காப்பியம் முதலான நூல்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தக்க விடங்களில் காட்டியும், வடநூலுக்கும் இதற்குமுள்ள சம்பந்தத்தை ஆங்காங்குக் குறித்தும், மாணக்கர் பயிலுவதற் கேற்றவாறு ஒவ்வோரியலிலும் சில முக்கியமான வினாக்களை இறுதியில் அமைத்தும், அன்னூர் எளிதின் அறியலாகாத உரிச்சொற்களை இடர்ப்படாதறியும்படி தொல்காப் பிய உரியியற் சூத்திரங்களை இறுதியிற் சேர்த்தும், பரிமேலழகர் முதலிய தொல்லாசிரியர் மதங்களை ஆங்காங்கே தெரித்தும் இக் காண்டிகை இவ்வுரைகாரர்களால் செய்யப்பட்டிருக்கிறது."

1. கா. ஸ்ரீ. கோ., தி. கோ. ஸ்ரீ. நன்னூல் பதிப்பு, முகவுரை, ப 1

23

பழைய உரை

ஆசிரியர் பெயர் தெரியா நன்னூல் மூலமும் காண்டிகை உரையும்— அரசு வெளியீடு (கி.பி. 1952): 1952ஆம் ஆண்டு சென்னை அரசாங்கக் கீழைத்திசை கையேட்டு வரிசையில் 14ஆம் வெளியீடாக இப்பதிப்பு வெளிவந்துள்ளது. நூலகப் பொறுப்பாளராய் (Curator) ஆக இருந்த டி. சந்திரசேகரன், எம்.ஏ.,எல்.டி. யால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. கையேட்டு எண் 1239. இப்பதிப்பு ஓலைச் சுவடியிலிருந்து வித்துவான் எம். பசுபதி என்பவராலும் வித்துவான் வி. எஸ். கிருஷ்ணன் என்பவராலும் படி எடுக்கப்பட்டு திருத்தம் பெற்றுள்ளது. 270 நூற்பாக்களே உடைய இக்காண்டிகை உரையின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இக்காண்டிகை உரை முன் வெளிவந்துள்ள உரைகளைக் காட்டிலும் எளிமையும் இனிமையும் வாய்ந்தது என்று பதிப்பாசிரியரால் 28-1-52 இல் குறிக்கப்பட்டுள்ளது.

"On the whloe this small work can be regarded as the most and lucid brief commentary on Nannul published so far. It is hoped this will be found highly useful to the reader and students of Tamil Literature."[1]

இப்பதிப்பு—பழைய காண்டிகை உரையே: 1839 இல் வெளிவந்து பின்னர்த் தொடர்ந்து பல பதிப்புகளைப் பெற்ற திருத்தணிகை விசாகப் பெருமாளையர் எழுதிய நன்னூல் காண்டிகை உரையே, இவ்வுரை. 1840இல் வெளிவந்த விசாகப் பெருமாளையர் பதிப்போடு இப்பதிப்பும் இவ்வாசிரியனால் ஒப்பிட்டு ஆராயப்பட்டது.

1. பழைய உரைப் பதிப்பு, நன்னூல், சந்திரசேகரன், தி. பதிப்பித்தது. 1952, முகவுரை, ப 1

பாயிரம் தொடங்கி, பெயரியல் தொடக்கம் வரையுள்ள உரையை (1—270 ஆம் நூற்பா வரை) ஒப்பிட்டு ஆய்ந்ததில் இரண்டும் ஒன்றே என்பது தெளிவாயிற்று. தலைப்பில், தமிழ் எண்களுக்குப் பதில் ஆங்கில எண்கள் 1952 ஆம் ஆண்டுப் பதிப்பில் கொடுக்கப் பட்டுள்ளன. இவை, மூலச் சுவடியில் இல்லாதவை. இருபதாம் நூற்றாண்டுக்குத் தக, பதிப்பாசிரியர் மாற்றிக் கொண்டதாகும். நூற்பா, நூற்பாப் பதப்பொருள், விசேட விளக்கம், எடுத்துக் காட்டு எல்லாவற்றிலும் இக் காண்டிகை, முற்ற விசாகப் பெருமாளையர் காண்டிகை யுரையாகவே இருக்கிறது. பழைய உரைப் பயிற்சி இன்மையால், இது வெளிவராத காண்டிகை உரை எனக் கருதப்பட்டு, பதிப்பிக்கப்பட்டது போலும்.

24

நன்னூல் ஆங்கில உரைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தி லிருந்தே ஆங்கிலேய அரசு இந்தியாவை ஆளத் தொடங்கிவிட்டது. இதனை வாய்ப்பாகக் கொண்டு, கிறித்தவச் சமயப் பரப்புநர்களும் ஐரோப்பியர்களும் பெருவாரியாக வெளிநாடுகளிலிருந்து வந்து குவிந்து விட்டார்கள். சிறப்பாக ஆங்கிலமொழி அரசின் துணை யோடு செல்வாக்குப் பெற்றது. பெறவே, உள்நாட்டார் ஆங்கி லத்தைப் பயின்றனர். மக்களை அரசு ஆண்டது. மக்களது உள்ளத்தைச் சமயம் ஆண்டது. இவ்விரண்டு ஆளுகையும் குலை யாமல் நிலையாக வேண்டுமானால் மக்களோடு உள்ள தொடர்பு நிலைக்க வேண்டும். அத்தொடர்பு நிலைக்க வேண்டுமெனில் மக்கள் மொழி தமக்குப் புரியவேண்டும். மக்களுக்குப் புரியும் மொழியில் தாம் பேசியாக வேண்டும். இத்தகு காலத்தின் கட்டாயமே, வட்டார மொழிகளுக்கு நற்காலம் ஆயிற்று. தேசிய மொழிகளில் உள்ள இலக்கிய இலக்கணங்கள், மேனாட்டு மொழி களில் அறிமுகமாகவும், மேனாட்டு மொழிகளில் உள்ள இலக்கிய இலக்கணங்கள் இந்நாட்டு மொழிகளில் கலக்கவும் நல்வாய்ப்பு இதனால் அமைந்தது. இவ் விலக்கியப் பரிமாற்றமே, ஈரினத்தார் இடையே இருந்த சேய்மையைக் குறைத்தது. இலக்கியப் பரிமாற்றத்தோடு சேர்ந்து கலை, பண்பாட்டுப் பரிமாற்றங்களும் சேர்ந்து நிகழ்ந்தன. இந்தச் சூழலில்தான் நன்னூல் ஆங்கில மொழி பெயர்ப்புகள் அறிமுகமாயின. பிறிதொன்றையும் இங்கே கருதுதல் வேண்டும். குறிப்பாக நன்னூல் மொழிபெயர்க்கப்படு வதற்கு, அரசியல், சமூக, சமயச்சூழல்கள் மட்டுமே காரணங்கள் என்று முடித்துவிட இயலாது. இச்சூழல்களின் ஆளுகைக்கு வேறு தமிழ் இலக்கண நூல்கள் இலக்காய் இருக்கலாம் அல்லவா? அவ் வாறு ஆகவில்லையே. ஏன்? பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க அளவிலேயே தொல்காப்பியம் அச்சில் வெளிவராவிட்

டாலும், அறிஞர் நடுவில் அறிமுகமாயிருந்தது.[1] அச்சில் வெளி வராத இலக்கணக்கொத்து, தொல் காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கம் ஆகியனவும் 1851 அளவிலேயே பரவலாக ஆங்கிலேயர் நடுவிலும் அறிமுகமாகியிருந்தன.[2] இவையெல்லாம் அச்சில் வெளிவரவில்லை என்பது மட்டுமின்றி, நன்னூலில் அமைந்துள்ள சுருக்கம், தெளிவு, அறிவியல் நெறியில் அமைந்துள்ள இலக்கண விதிகள் ஆங்கிலேயரையும் ஆங்கிலம் கற்றோரையும் பெரிதும் கவர்ந்திருத்தல் வேண்டும்.

"It is generally allowed by all who are at all conversant with Tamil literature that the Nunnool or Tamil Grammar of Pavananti is the most philosophically and logically arranged Grammar of any language in the universe, and that a through acquaintance with it, though requiring the labour of years of study, is not too dearly bought even at that price, in as much as without that through acquitance with it, no one can be said to be said to be a perfect master of the Tamil language." என்பன தவத்திரு டி. பிரதர்டன், பி.ஏ. என்பாரது பாராட்டு மொழிகளாகும்.[3] ஆங்கிலேயரை நன்னூல் எவ்வாறு கவர்ந்து ஈர்த்தது என்பதற்கு மேலே உள்ள மேற்கோளே சான்று. இக் கவர்ச்சியே நன்னூலுக்குப் பல மொழி பெயர்ப்புகளையும் பதிப்பு களையும் தொல்காப்பியத்திற்கு முன்பே கொண்டு வந்து சேர்த்தது.

இரேனியசு ஐயர் (கி.பி. 1790-1838) இவர், செர்மனிய நாட்டு, பிரசியா மாவட்டத்தில், கிராய்டென்சு கோட்டை எனுமிடத்தில் 1790 ஆம் ஆண்டு பிறந்தார். பெர்லின் நகரிலும் இங்கிலாந்து நாட்டிலும் தம் சமயம் பரப்பும் பயிற்சி பெற்று 1814 ஆம் ஆண்டு சென்னைக்கு வந்தார். பின், தரங்கம்பாடிக்குச் சென்று தமிழ் கற்றார். மீண்டும் சென்னை வந்து சர்ச்சு மிஷன் சங்கத்தில் சேர்ந்து சமயப் பணி யாற்றினார். 1820 ஆம் ஆண்டில் பாளையங் கோட்டைக்குச் சென்றார். அங்குப் பல்லாண்டுகள் சமயத் தொண் டாற்றிவிட்டு 1838 ஆம் ஆண்டு சூன் மாதம் ஒன்பதாம் நாள் காலமானார்.[4] பாளையங்கோட்டைக்குத் தெற்கே 25 மைல்

1. Rhenius. C. T. E., A Grammar of the Tamil Language, 1846, Introduction p. vi.
2. Joyes, W. and Samuel Pillai, S., Grammatica Tamuliensis or An English version of the celebrated Tamil Nunnool, 1848, p. 5
3. Brotherton, Rev. T., Ibid. p. 10
4. இவரது கல்லறை இன்னும் பாளையங்கோட்டை முருகன் குறிச்சி கிறித்தவக் கல்லறைக் காட்டில் உள்ளது.

தொலைவில் நிலம் வாங்கி அதனை ஓர் ஊராக்கி டோனவூர் என அதற்குப் பெயரிட்டுப் பள்ளிகள், மருத்துவ மனைகள், வீடுகள் முதலானவற்றைக் கட்டிக் கொடுத்தார். 'தரும சங்கம்' ஒன்றை ஏற்படுத்தி, அதன்வழி, சாந்தபுரம், சந்தோஷபுரம் முதலான பன்னிரண்டு ஊர்களை உருவாக்கினர். நூல் சங்கம் ஒன்று அமைத்து அதன்வழிப் பல நூல்களை வெளிவரச் செய்தார். கைம்பெண் காப்புக் கழகம் ஒன்று ஏற்படுத்தி அதன் மூலமாக அவர்களுக்குப் பொருளுதவி செய்து வந்தார். இது போன்ற நற் பணிகள் செய்த இவர் இறந்தபோது மக்கள் அனைவரும் கலங்கிக் குமுறினர். இச் சமயத்தில் இவரது நெருங்கிய நண்பராகிய திருப்பாற்கடல்நாதன் கவிராயர் எழுதிய இரங்கற் பாக்கள் கல் நெஞ்சையும் கரைப்பவை. இவரது மாணாக்கர் வின்பிரிட் ஐயர் (Rev. S. Winfred—1810–1879) எழுதிய இரங்கற் கவிதையும் நெஞ்சை நெகிழ்ப்பதாகும்.

தமிழ்ப்பணி: முகவை இராமானுச கவிராயரிடம் கல்வி பயின்ற இவர் உரைநடை எழுதுவதில் வல்லவர். டாக்டர் போப்பு ஐயர் இவரைத் தேர்ந்த தமிழறிஞர் என்று புகழ்கிறார். இவர் பல நூல்களை எழுதினர். ஞான போத விளக்கம் (1825), வேதப் பொருள், பூமி சாஸ்திரம், இலக்கண நூற் சுருக்கம் (1832), மோட்ச மார்க்கம் (1834), வேத உதாரணத் திரட்டு (1835), தமிழ் மொழி இலக்கணம் (ஆங்கிலம்) (1836), வேத சாஸ்திரச் சுருக்கம் (1838) முதலானவற்றையும், வேறு பல துண்டு வெளியீடுகளையும் இவர் எழுதி வெளியிட்டார். இவற்றுள் இலக்கண நூற் சுருக்கமும், தமிழ் மொழி இலக்கணம் என்ற ஆங்கில நூலும் நன்னூல் இலக்கணப் புலமையோடு செய்யப் பெற்றவை.

நன்னூல் முதலான தமிழிலக்கண நெறிகளைச் செரித்துக் கொண்டு, அயல்மொழியார்க்கும் துணைநிற்கும் வகையில், ஆங்கிலத்தில் தமிழ் இலக்கண நூல்கள் பல வெளிவந்துள்ளன. பெஸ்கி, சீகன்பால்கு (Ziegenbalg) ஜி. யு. போப்பு ஆகியோர் இப்போக்கில் நூல் ஆக்கி வெளியிட்டுள்ளனர். 1834–இல் இரேனியசு என்பார், "A Grammar of the Tamil Language" என்ற நூலை வெளியிட்டார். இந்நூலில் கூட, பவணந்தி எழுதிய நன்னூலைப் பற்றியும் உரை இயற்றிய சங். பற்றியும் குறித்திருக்கிறார். நூலிறுதியில் "Specimen of the Nannul, a part of the 4th rule of the சொல்லதிகாரம்" என்ற தலைப்பிட்டு, "மக்கள் தேவர் நரகர் உயர்திணை மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை" என்று நூற்பாப் பொருளைத் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக ஆறு பக்கங்கள்

விரிவாக ஆராய்ந்துள்ளார். உயர்திணை அஃறிணை என்ற சொற்களின் பொருட் காரணம் பற்றி ஆராய்ந்த இவர், முடிவாக, "Translated, if those two words are explained, or written without contraction it will be, the caste which is high, and the caste which is not of that high caste" என்று கூறியுள்ளார். இக்கூற்று சங். உரையைத் தழுவி உரைத்த கருத்தாகும். நன்னூலின் ஒரு பகுதியை விரிவான முறையில் ஆங்கிலத்தில் முதன் முதல் ஆராய்ந்தவர் இரேனியசு ஆவர்.

பல்கலைக் கழக ஆங்கில மொழி பெயர்ப்பு (1837): "Madras Missionary Register" (vol. III No. 2, of April 1837) எனும் இதழில், அக்காலத்துப் பல்கலைக் கழக அளவில் பி. ஏ. வுக்குப் பாடமாக அமைக்கப்பட்ட நன்னூலின் ஒரு பகுதி ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளிவந்தது. இப் பகுதியைத் தாம் படித்ததாக, பவர், "Introduction of the Nannul" என்று நூலின் முகவுரையில் கூறுகின்றார்.[1]

வால்டர் ஜாய்சு (ஆங்கிலத்தில் பெயர்த்த காலம் கி. பி. 1848: இவர், இ. சாமுவேல் பிள்ளைக்கு மிகத் துணையாக இருந்தவர் என்று தெரிகிறது. சாமுவேல் பிள்ளை, 1848-இல், வால்டர் ஜாய்சுடன் நன்னூலை மொழி பெயர்ப்பதில் பெற்ற படிப்பினையே, பின்னர் தனியாக, தொல்காப்பிய-நன்னூல் என்ற நூல் ஒன்றை வெளியிடத் துணை செய்திருத்தல் வேண்டும். நன்னூலை ஆங்கிலத்தில் வெளியிடப் பெருமுயற்சியை ஜாய்சு மேற்கொண்டிருக்கிறார். எழுத்ததிகாரத்தை முதலில் வெளியிட்டவர், தொடர்ந்து சொல்லதிகாரத்தை வெளியிடப் பல அறிவிப்புகளை எல்லாம் செய்திருக்கிறார். ஆனால் அவ்வேட்கை முற்றுப்பெறுமலே போய்விட்டது. இவரைப் பற்றி வேறு செய்திகள் கிடைக்க வில்லை.

இ. சாமுவேல் பிள்ளை (ஆங்கிலப் பெயர்ப்புச் செய்த காலம் கி. பி. 1848): முதன்முதலில் தொல்காப்பிய நன்னூலை வெளியிட்டதில் வழிகாட்டிய இவரே, முதன் முதல் நன்னூலைப் பேரளவு மொழி பெயர்ப்பதிலும் வழிகாட்டியிருக்கிறார். இவரைப் பற்றிய வரலாறு நன்னூல் உரையாசிரியர்கள் வரலாற்றுப் பகுதியில் இடம் பெற்றிருக்கிறது.

வால்டர் ஜாய்ஸ், சாமுவேல் பிள்ளை (கி. பி. 1848): நன்னூல் முற்றுமாக ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யும்

1. Bower, Introduction to the Nannul 1872 P. VIII

முயற்சி ஜாய்ஸ் என்பவராலும், சாமுவேல் பிள்ளை என்பவராலும் 1843 ஆம் ஆண்டுத் தொடங்கப் பட்டது. அவர்களது நூலின் முகப்புப் பகுதி கீழ்வருமாறு:

GRAMMATICA TAMULIENSIS
OR
AN ENGLISH VERSION OF THE CELEBRATED
TAMIL NUNNOOL
WITH
EXPLANATORY NOTES, VOCABULARY,
APPENDICES, AND EXTRACTS FROM THE
HITHERTO UNPUBLISHED COMMENTARY
OF SUNGHARA NAMASIVAYUR
BY
W. JOYES and S. SAMUEL PILLAI

———

REVISED AND CORRECTED BY
THE REV. T. BROTHERTON, B. A.

———

BOOK I
MADRAS
PRINTED BY REURBEN TWIGG, AT THE
CHRISTIAN KNOWLEDGE SOCIETY'S
PRESS, CHURCH STREET VEPERY.
1848

பாயிரம் முதற் பகுதியாக 1848 இலும் எழுத்ததிகார முதலியலான எழுத்தியல் இரண்டாம் பகுதியாக 1849 இலும், பதவியல் மூன்றும் பகுதியாக 1850 இலும், உயிரீற்றுப் புணரியல் நான்காம் பகுதியாக 1850 இலும், மெய்யீற்றுப் புணரியல் ஐந்தாம் பகுதியாக 1850 இலும், உருபு புணரியல் ஆறும் பகுதியாக 1851 இலும் வெளிவந்துள்ளன. பின்னர், எழுத்ததிகாரம் இரண்டாம் பதிப்பையும் சொல்லதிகாரம் முதற் பதிப்பையும் வெளியிடும் திட்டம் பற்றி அறிவித்துப் போதிய உறுப்பினர்கள் சேர்ந்து துணைசெய்யுமாறு ஆசிரியர்கள் இருவரும் வேண்டி யிருக்

கின்றனர். இவ்வேண்டுதல் "MADRAS QUARTERLY MISSIONARY JOURNAL 1851" சனவரி இதழில், பக்கம் 202 இல் வெளிவந்துள்ளது. இவ்வேண்டுதல், ஆரும் பகுதியில் மு டி வி லு ம் வெளியிடப்பட்டுள்ளது. எக்காரணங்களாலோ முதலாவது ஆறு தொகுதிகளில் இரண்டாம் பதிப்பும் வெளிவர வில்லை. திட்டமிட்டப்படி சொல்லதிகார மொழி பெயர்ப்பும் வெளிவரவில்லை. இப்பணி முற்ற முடியாமற் போனது மிக வருந்தத்தக்கது என்று தவத்திரு எச். பவர் தம் "INTRODUCTION TO THE NUNNUL" என்ற நூலின் முகவுரையில் குறிப்பிடுகிறார்.[1]

இப் பதிப்புக்கு, எழுத்ததிகாரம் முழுதிற்கும் முதலில் ஆங்கிலத்தில் வெளிவந்தது என்ற தனிப்பெருமை உள்ளது. 1848 வரை வெளிவராத உரையில் சில பகுதிகள் இவர் பதிப்பில் முதன் முதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

அருணாசலம் பிள்ளை (ஆங்கிலப் பெயர்ப்புச் செய்த காலம் கி. பி. 1853): திருநெல்வேலி மாவட்டம் வாலிகண்டபுரம் என்னும் ஊரில் பிரின்சுபல் சதாசீன் என்ற அரசியல் அலுவலில் இருந்தார். செய்யுள் இயற்றும் திறன் உடையவர். தமிழிலக்கியங்களில் தேர்ச்சி உடையவர். திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிகர் மீது குரு தோத்திர வெண்பா, குரு தெரிசனப் புகழ்ச்சிக் கலிவெண்பா முதலான நூல்கள் இயற்றியுள்ளார்.

"செந்தினகர் வாழ்குகனே சீரார் துறைசையின்கண்
வந்தே குருவடிவாய் வார்கழற்றேன்—சந்ததமும்
அன்பர் குழாங்கட் கருத்துமதை யானருந்தி
இன்புற் றிருந்தேனிங் கேய்ந்து"

என்ற இப்பாடல் குரு தோத்திர வெண்பாக்களில் ஒன்றாகும். தொல்காப்பியம், வீர சோழியம், நேமிநாதம், இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து, நன்னூல் முதலிய இலக்கண நூல்களையும், நாலடியார், குறள், சிந்தாமணி, சிலப்பதிகாரம்முதலான இலக்கிய நூல்களையும் இவர் கற்க எண்ணினர். அதற்குத் தக இலக்கண அறிவைப் பெருக்கவும், இலக்கண மூலங்களை எளிமைப் படுத்தவும் விரும்பினர். தான் விரும்பும் இலக்கண உரை, மற்றைய இலக்கியங்களைக் கற்க ஒரு திறவு கோலாய் இருத்தல் வேண்டும் என்று கருதினர். தம் கருத்தை, அவ்வூரில் அப்போது புகழ்

1. Introduction to the Nannul P.TX.

வாய்ந்து விளங்கிய திருப்பாற்கடல் நாதன் கவிராயரிடம் தெரிவித்தார். கவிராயர், நன்னூல் நூற்பா அனைத்தையும் செம்மையாய்க் கவனித்து அதைத் தெளிவும் மயக்கமற்ற முறையுமாக ஏற்படுத்தி ஒரு புது நூல் செய்தார். இவ்வுரையை ஆங்கிலம் வழி தமிழிலக்கணம் பயில விரும்புவார்க்கு ஏதுவாக அருணாசலம் பிள்ளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

இரேனியசு ஐயரின் நெருங்கிய நண்பரும், நன்னூல், முத்து வீரியம் ஆகியவற்றின் உரையாசிரியரும் ஆகிய திருப்பாற்கடல் நாதன் கவிராயர், இவருடைய நெருங்கிய நண்பர் ஆவார். தன் நண்பரின் தமிழ் நன்னூல் உரையையே தான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருப்பதாக ஆங்கில நன்னூல் முன்னுரையில் அருணாசலம் பிள்ளை குறிப்பிடுகிறார்.

TAMIL GRAMMAR
WITH
AN ENGLISH TRANSLATION
ARRANGEDWITH REFERENCE TO THE
NUNNOOL
COMPILED BY
ARNACHELLUM PILLAY
PRINCIPAL SUDR AMEEN OF TINNEVELLY
PALAMCOTTAH :
PRINTED AT CHURCH MISSION PRESS
1853

இவ்வாங்கில மொழிபெயர்ப்பு நன்னூல் எழுத்தியல் தொடங்கி உரியியல் வரை அமைக்கப்படவில்லை. நூற்பாக்களை வரிசையாக வைத்து, மொழிபெயர்க்கப்படவும் இல்லை. முதற்பிரிவில் எழுத்தியலும், இரண்டாம் பிரிவில் பெயர், வினை, இடை, உரி, திசைச் சொல்லியல்களும், மூன்றும் பிரிவில் பொதுவியலும், நான்காம் பிரிவில் பொதுப் புணர்ச்சியியலும் அமையுமாறு மொழிபெயர்ப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. நூல் முழுதும், எகர ஒகரக் குறில் உயிர்களுக்கும், அவையேறிய உயிர்மெய்களுக்கும் மேலே புள்ளி யிட்டே அச்சிடப் பட்டுள்ளது. திருப்பாற்கடலனைதன் கவிராயர் நன்னூலுக்குத் தமிழில் உரை எழுதியுள்ளார் என்ற செய்தியை இவர் தம் முகவுரையே உலகுக்கு உணர்த்தியது. இந்தப்

பார்வையில், இவர் தம் ஆங்கில, தமிழ் முன்னுரைகள் வரலாற்றுப் பெருமை வாய்ந்தன.

என்றிபவர் (18. திசம். 1812–2. செப்.1885 ஆங்கிலப் பெயர்ப்புச் செய்த காலம் கி.பி. 1855): Society for the Propagation of the Gospel என்ற அமைப்பைச் சேர்ந்தவர் இவர். திருநெல்வேலி வேதியர்புரத்தில் இருந்தவர். சமணப் புலவராகிய சாஸ்திரம் ஐயரிடம் தமிழ் கற்றார். கிறித்துவப் பரப்பு நிலையங்கள் ஒன்று சேர்ந்து தமிழ் விவிலியத்தின் புதிய பதிப்பை வெளியிட விரும்பிய போது, அப்பெரும் பொறுப்பு என்றி பவர் ஐயரிடமே ஒப்படைக்கப்பட்டது. இவர் பலவேறு சமயப் பணிகள், இலக்கியப் பணிகள் அனைத்தையும் வேதியர்புரத்தில் இருந்துகொண்டு தொண்டாற்றினர். இங்கிருந்துதான் நன்னூல் முழுமைக்குமாக ஆங்கில மொழி பெயர்ப்பைச் செய்தார். பெரும்புலமை பெற்ற பவர், நன்னூலை அரிய குறிப்புரையுடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார் (1855). சென்னை மாநிலக் கல்லூரியில் பாடமாக இடம்பெற்ற சீவகசிந்தாமணி நாமகள் இலம்பகத்தை இவர் இ. முத்தையாப் பிள்ளை என்பவரின் துணையுடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1868இல் வெளியிட்டார். இதனைத் தான் ஓலைச் சுவடியினின்று எடுத்துப் பெயர்த்து எழுதியதாகவும், ஒப்பிட்டு மாற்றங்களைச் சரிசெய்து எழுதி வெளியிட்டதாகவும், அந்நூல் முகவுரையில் குறிப்பிடுகிறார். வேத அகராதி (1841), நியாயப் பிரமாண விளக்கம் (1847), விசுவாசப் பிரமாண விளக்கம், இந்துமதத்துக்கும் பாப்பு மதத்துக்கும் இருக்கிற சம்பந்த விளக்கம் (1851), பதமஞ்சரி (ஆங்கிலத் தமிழ்ச் சொற்கள் 1852), தர்ம சாஸ்திர சாரம் (1857), சாதிவித்தியாச விளக்கம் (1857), பிரசங்க ரத்னவலி (1878), கிறிஸ்து மார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான சரித்திரம் (1879) முதலியன இவர் இயற்றிய பிற நூல்கள்.

இவர், பாளையங்கோட்டையில், 1885ஆம் ஆண்டில் செப்டம்பர்த் திங்கள் இரண்டாம் நாள் காலமானார். இவரது கல்லறை பாளையங்கோட்டைத் தூய யேவான் கல்லூரிக்கு எதிரில் உள்ள இடுகாட்டில் உள்ளது.

வேதியர் புரத்திற்கு இவரைப் பார்ப்பதற்காக லுதரன் சமயப் பரப்பு நிலையத்தினின்று (Lutheran Mission) வந்த டாக்டர் கிரால் (Graul) என்பாரிடம் தம்மிடமிருந்த நன்னூல் ஆங்கிலப் பெயர்ப்புக் கையெழுத்து ஏட்டைக் கொடுத்து விட்டார். 1853 அல்லது 1854இல் தான் அவரிடம் கொடுத்ததாக இவர்

குறிப்பிடுகிறார்.[1] டாக்டர் கிரால் ஜெர்மனி சென்று "Outline of Tamil Grammar" என்ற பெயரில் பெஸ்கியினுடைய தமிழிலக்கணத்தோடு பவரின் நன்னூல் மொழி பெயர்ப்பையும் சேர்த்து 185:இல் வெளியிட்டார். இப்பதிப்பு அருமையான பதிப்பு என்று பவரே பாராட்டிச் சொல்கிறார். இது இப்போது கிட்டவில்லை.

பவர், 1876ஆம் ஆண்டு, தாமே, "Introduction to the Nannul" என்ற தலைப்பில், நன்னூல் பாயிரப் பகுதியை மட்டும் மொழி பெயர்த்து வெளியிட்டார். 55 நூற்பாக்களையும், மூலக் கருத்துச் சிதையாமல் அழகான ஆங்கிலத்தில் மொழிபெயர்த் துள்ளார். பின்னிணைப்புகளில், நூற்பாக்களுக்கு விரிவான குறிப்புரையும், 17 பக்கங்களில் சொல்லதிகாரம் பற்றிய சில அரிய செய்திகளையும் குறிப்பிட்டுள்ளார்:

(அ)"Madras Mission Register" எனும் இதழில் நன்னூலின் முதற்பகுதி ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வந்துளது. இப் பகுதியையே முதன் முதல் பவர் படித்துள்ளார். இவ்விதழ் இலண்டன் மிஷனரி சொசைட்டியைச் சார்ந்த தவத்திரு ஜான் ஸ்மித்து என்பவரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது. (ஆ) இவ்விதழில் வெளிவந்துள்ள நன்னூல் மொழிபெயர்ப்பு, பல்கலைக் கழகப் பி.ஏ. பட்டத்திற்குப் பாடமாய் அமைக்கப்பட்டுள்ளது. பவரே பல்கலைக் கழகத் தேர்வாளர்களில் நடுவர் என்பதால், மேற்கண்ட நன்னூல் மொழிபெயர்ப்பை விரும்பிப் படித்திருக்கிறார். (இ) இலக் கியத்தில் திருக்குறள் எப்படி மிகச் சிறந்ததோ அப்படி, இலக்கணத் துறையில் நன்னூலே சிறந்தது (The Nannul of pavananti in the Tamil Grammar as the Kural of Tiruvalluvar in the Tamil classic) என்ற கருத்தினர் இவர். (ஈ) நன்னூல், தொல்காப்பியத்தைப் பின்பற்றியது. தொல்.க்கு மூலம் அகத்தியச் சூத்திரம். தமிழிலக்கணம் அனைத்துமே பாணினியத்தைப் பின் பற்றியவை. தமிழிலும் சமற்கிருதத்திலும் உள்ள இலக்கணங் கள் எல்லாம், இந்திரனுல் எழுதப்பட்ட ஐந்திரச் சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டவை. (உ) தொல். கி. பி. எட்டாம் நூற்றுண்டினர். (ஊ) பவணந்தியைப் புரந்த கங்கன், மதுரையில் இருந்தான், கி. பி. பதினான்காம் நூற்றுண்டினன். (எ) சங். உரை மிகப் புகழ் பெற்றது. (ஏ) தமிழில் 'கவிதை' என்பதை குறிக்கும் செய்யுள் என்ற சொல் 'செய்' என்ற சொல்லின் அடிப்

2. Introduction to the Nannul, P. X.

படையில் அமைந்தது. கிரேக்க மொழியில் உள்ள 'Poem-poie in' கவிதை என்ற சொல்லுக்கும் 'செய்' என்பது பொருள். இவ்வரிய ஒப்புமையைப் பின் இணைப்பில் எடுத்துக் காட்டுதல். (ஐ) முதன் பின் இணைப்பில் நன்னூல் கருத்துக்களோடு டாக்டர் பென்டலே, அரிஸ்டாடில், கால்ரிட்ஸ், எலலீசு, ட்ரஞ்ச், ஹிப்பாகரேட், பேக்கன் என்பார் கருத்துகளை ஒப்பிட்டுக் காட்டுதல். (ஒ) குறள், நாலடியார், மூதுரை ஆகியவற்றைக் காட்டுதல். (ஓ) இரண்டாம் பின்னிணைப்பில், இலக்கணத்தையும் சமற்கிருதத்தையும் இலட்சணத்தையும், இலக்கியத்தையும், சமற்கிருத இல்ட்சியத் தையும் இணைத்துக் காட்டுதல். (ஔ) படி-பாடம் என்பன சமற்கிருத 'பதம்' என்ற சொல்லடியினின்று வந்தவை எனல்.

(ஃ) " என்னுடி சின்னரங்கம்
உனக்கழுத கண்ணீரு
வீராணத்து ஏரிரெம்பி
வெள்ளிமலை நீச்சாச்சே"

இந் நாட்டுப்புறப் பாடலை, ஆங்கிலப் பாவலன் 'லீ' என்பான் எழுதிய பாவோடு பொருத்திக் காட்டுதல். மேற்காட்டியவை இவர் முன்னுரையாலும் (Advertisement) பின்னிணைப்புகளாலும் அறியப்படும் இன்றியமையாச் செய்திகளாம்.

இலாசரசு ஐயர் (ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த காலம் கி. பி. 1878): நன்னூலின் பெரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த இவ்வறிஞர் தமிழர் ஆவார். கிறித்தவ குருமாரான இவர், தானெரு சென்னைப் பல்கலைக் கழகப் பி.ஏ. பட்டதாரி என்பதற்காகப் பெருமிதம் கொண்டு வாழ்ந்தார். தான் வெளி யிட்ட ஆங்கில மொழி பெயர்ப்பின் முகப்பில் இஃது ஒரு சென்னைப் பல்கலைக் கழகப் பட்டதாரியால் செய்யப் பெற்றது என்று பொறித்துள்ளார். பிற்காலத்து இறையியல் திறனுக்காக டாக்டர் பட்டம் வழங்கப் பெற்றார். திருக்குறளில் மிகுந்த ஈடுபாடு உடையவர். ஆதலால், குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். தமிழ்ப் பழமொழிகளைத் திரட்டி, அகராதியாக அச்சேற்றினர். அக்காலத்து வந்த பல திங்கள் இதழ்களில், சிறந்த கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். இவர் பெயரில் 'தமிழ்ப் பேராசிரியர் கட்டில்' ஒன்று சென்னை பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டது. இலாசரசு அவர்களின் மூத்த மகளார் செல்வி. தியோடர் இலாசரசுக்கும் அவர்தம் இளைய

தங்கையர்களுமாகச் சேர்ந்து உரூபாய் 51,800ஐ, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நன்கொடையாக வழங்கினர்கள். இத் தொகையையும், அரசாங்க நன்கொடை உரூபாய் 2500ஐயும் கொண்டு, இலாசரசு பெயரில், 1946இல், தமிழ்ப் பேராசிரியர் கட்டில் நிறுவப்பட்டது.[1] இலாசரசின் அரும்பெரும் தமிழ்ப் பற்றுதலுக்கு இஃது ஒரு நிலைப்பு வைப்பாகும்.

இவர் 1878 ஆம் ஆண்டு, ஐலைத் திங்கள், சென்னையினின்று நன்னூல் பெயர்ப்பை வெளியிட்டார். அந்நூலின் முகப்புவாசகம் பின் வருவது:

AN
ENGLISH TRANSLATION
OF
THE NANNUL
DESIGNED FOR THE USE OF
UNIVERSITY STUDENTS
BY
A TAMIL GRADUATE
OF THE MADRAS UNIVERSITY

MADRAS
PRINTED BY V. T. PARAMASHIVAN AT THE
HOBART PRESS
1878

Price 8 As—By post 9 As

COPY RIGHT SECURED

1. Pillai, K. K., The History of Higher Education in South India, 1957, P. 133. "Another generous donation of Rs. 51,800 came from Miss. Thecdore Lazarus and her sisters in 1946 to be utilised towards the establishment of a chair of Tamil in the University. The interest accuring from the donation, together with the Government grant of Rs. 2500, has been utilised by the university in creation of a Professorship in Tamil, called "The Rev. Dr. Lazarus professorship in Tamil."

இம் முகப்பிட்டு மொழி பெயர்ப்பை வெளியிட்டார். பதின்மூன்று ஆண்டுகள் மொழியாசிரியராய் பணியாற்றியதன் பயனே இப் பெயர்ப்பு என்று தம் முகவுரையில் குறிப்பிடுகிறார். எல்லா நூற் பாக்களுக்கும் நேருக்கு நேர் மொழி பெயர்ப்பு இல்லை எனினும் அவற்றில் கூறப்பட்ட கருத்துகள் அனைத்தும் தேர்வுப் பார்வை யில் சுருங்கிய அளவில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இப்பதிப்பை அடுத்து, இப்பதிப்பின் அனுபவத்தைக் கொண்டே டிசம்பர் 1878 இல் நன்னூலைப் பெரிதும் அடிப்படை யாக வைத்துக் கொண்டு "A Tamil Grammar Designed For Use in Colleges and Schools" எனும் இலக்கணப் பதிப்பை (230 பக்கங்கள்) வெளியிட்டார். இப்பதிப்பு, ஐந்து ஆறுவது ஆங்கில வகுப்புகளுக்குத் தமிழ்ப் பாடம் பயிற்றுவிக்க இயற்றப் பெற்றது என்று தன் முகவுரையில் குறிக்கிறார். இதனின்று பள்ளி அள விலேயே அக்காலத்து நன்னூல் இடம் பெற்றிருந்தமை புலனு கிறது. தமதுடைய இந்நூலுக்கு, பெஸ்கியின் செந்தமிழ், கொடுந் தமிழ் இலக்கண நூல்கள், சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், தாண்டவராய முதலியாரின் இலக்கண விளக்கை, இரேனியசின் 'தமிழ் இலக்கணம்', டாக்டர் கிராலின் "Outlines of Tamil Grammar", வின்பிரட்டின் தமிழ் இலக்கணத் திரட்டு, அறிவானந்தம் பிள்ளையின் 'தமிழ் தொடரியல்', டாக்டர் போப்பின் தமிழ் இலக்கணம், டாக்டர் கால்டுவெல்லின் 'திராவிட ஒப்பிலக்கணம்', டாக்டர் வின்சுலோவின் 'தமிழ் ஆங்கில அகராதி' ஆகியன உதவியாய் இருந்தன என்று முன்னுரையில் எழுதுகிறார்.

நன்னூல் தொடர்பில் முன் வெளியிட்ட இரு பதிப்புகளைக் கொண்டு, புதிய ஆங்கில மொழி பெயர்ப்பொன்றை அழகான முறையில் அச்சிட்டு டிசம்பர் 1884இல் இலாசரஸ் வெளியிட்டார். நூற்பா ஒவ்வொன்றிற்கும் தமிழில் பொழிப்புரையும் எடுத்துக் காட்டுகளும் தரப்பட்டிருப்பதோடு ஆங்கில மொழி பெயர்ப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான்கு பின்னிணைப்புகள் தரப் பட்டுள்ளன. அவை: கலைச்சொற் பட்டியல், சில அடிச்சொற்கள் அமையுமாறு, தேர்வு வினாக்கள், நூற்பா முதற்குறிப்பு வரிசை. அமைப்பு முறையில் இடைச் சொல்லியல், உரிச்சொல்லியல் என்று குறிப்பிடுகிறார். இந்நூலில் மொத்தம் 223 நூற்பாக் களுக்கே உரை தரப்பட்டுள்ளது.

25

கிடைக்கப் பெரு நன்னூல் உரைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அச்சேற்றப்பட்டு, இன்று கிட்டிய உரைகள் அனைத்தையும் பற்றிய விளக்க இயலாய்வு மேலே இதுவரை கொடுக்கப்பட்டது. இவ்வுரைகள் அன்றி வேறு சில உரைகளும் இந்நூற்றாண்டில் இயற்றப்பட்டன. இவற்றின் பெயர்கள், பழைய நூல்களில், விளம்பரம், சிலரது வரலாறு, சிலர் காட்டும் மேற்கோள், சிலரது ஆய்வு நூல்கள் ஆகியவற்றின்மூலம் அறியப்பட்டன. இவை இன்று கிடைக்கப் பெறவில்லை. இவற்றுள் பெரும்பாலன காண்டிகை உரைகளே. தேர்வுத் தேவைகளை நிரப்புதற்கே இவை எழுதப்பட்டனவாதல் வேண்டும். சில விசாகப் பெருமாளையரின் காண்டிகை யுரையை முன் மாதிரி யாகக் கொண்டு இயற்றப்பட்டிருக்கின்றன. நன்னூலின் பல வேறு பதிப்பாசிரியர்களையே சிலர் தவருக உரையாசிரியர்கள் என்றும் குறித்துள்ளனர். ஒரு நூற்றாண்டுக்குள் மறைந்துவிட்ட இவ்வுரைகளுள் சிறந்தன சில இருத்தல் கூடும். காலப்போக்கில் அவை கிட்டுமானால், அவற்றிலிருந்து நன்னூல் பற்றிய புது விளக்கங்கள் சிலவாயினும் கிடைத்தல் கூடும் என்பது கருதி அவற்றின் பெயர்கள், ஆய்வின் மூலம் கிட்டியசெய்திகள் ஈண்டுத் திரட்டித் தரப்படுகின்றன.

சரவண முத்துப் புலவர் (1822): மனப்புலி முதலியார் என்பார்க்கு யாழ்ப்பாணம் நல்லூரிலே பிறந்தார். இருபாலை என்னும் ஊரிலே வாழ்ந்த சேனதிராயர் என்பாரிடம் கல்வி பயின்றார். நன்கு கற்றவர் ஆதலின், இவரிடம் ஆறுமுக நாவலர், சம்பந்தப் புலவர், கார்த்திகேய உபாத்தியாயர், சிவசம்புப் புலவர் ஆகிய பலர் கற்றுச் சிறந்தனர். களத்தூர் வேதகிரி முதலியாரும் இவரும் ஈழத்திலிருந்து வந்து கொண்டிருந்த 'உதயதாரகை' இதழில் கட்டுரை எழுதி வந்தனர். நைடதப் பாட்டு ஒன்றை முன்னிட்டு இவருக்கும் வேதகிரி முதலியாருக்கும் உதயதாரகை

இதழ் மூலம் எழுத்துப் போர் நடைபெற்றது. யாழ்ப்பாணம் வடமாகாணத்தில் இருந்த டயிக் துரையிடம் பல ஆண்டுகள் உடையார் என்னும் பெயருடைய அலுவல் பார்த்தார். வேதாந்த சித்தாந்த நூல்களிலும் தெளிந்த அறிஞராய் இருந்த இவர், வேதாந்த சுயஞ்சோதி, ஆத்மபோதப் பிரகாசிகை, நெல்லை வேலவர் உலா ஆகிய நூல்களை இயற்றினர்.

'நன்னூல் கருப்பை' என்ற நூல் இவரியற்றிய நன்னூல் விளக்க நூலாகும்.

சரவணப் பெருமாளையர் (1797—1839) : திருத்தணிகை விசாகப் பெருமாளையரின் இளவல் இவர். இவர் செய்த பெரும்பணிகளுள் குறிப்பிடத்தக்கது திருக்குறள் பரிமேலழகர் உரையை வெளியிட்டதாகும். கி. பி. 1830–இல் முதன் முதல் பரிமேலழகர் உரை, திருவள்ளுவ மாலை, திருவள்ளுவர் வரலாற்றேடு வெளியிடப்பட்டது.

சரவணப் பெருமாள் ஐயர் சாதகம்

சூ–சு	மேஷம் குரு	ரா	சனி
பு	சரவணப் பெருமாள் இராசி சக்கரம்		
ல	உத்திராடம் 2-ம் பாதம்		
செ சந்	தே		

பிறப்பு : பிங்கல வரு பங்குனி 2உ

இறப்பு : விளம்பி வரு மாசி 25உ

அடிப்படை : கோள தீபிகை - சரவணப் பெருமாளையர் 1839

இவரியற்றிய அல்லது பதிப்பித்த பிற நூல்கள்: குளத்தூர்ப் புராணம், கோளதீபிகை, அறிவியல் விளக்கம், இயற்றமிழ்ச் சுருக்கம், இலக்கணச் சுருக்க வினு விடை. திருவாசகத்தை தமையனுர் உதவியுடன் முதன் முதல் 1857 இல் பதிப்பித்தார், நைடத்தை 184. இல் பதிப்பித்தார். வாக்குண்டாம், நல்வழி (1841) பழமலையந்தாதி (1832), திருக்குறள் (1875), திருவள்ளுவ மாலை, நாலடியார், திருவெங்கைக் கோவை, நைடதம் (கைக்கிளைப் படலம் வரை), பிரபுலிங்கலீலை (மாயை உற்பத்திப் படலம் வரை) ஆகியவற்றிற்கு உரையியற்றினர். இவர் முடிக்காமல் விட்ட பகுதிகளுக்கும் இவருடைய மகனுர் கந்தப்பையர் உரை எழுதி முற்றுவித்தார்.

இவ்வரலாற்றில், இவர் எழுதிய உரைகளுள் ஒன்றுக காண்டிகை உரை குறிக்கப்பட்டுள்ளது.[1] இக்குறிப்பை உறுதி செய்யும் வேறு சான்றுகளோ தடயங்களோ அகப்படவில்லை.

சந்திரசேகர கவிராஜ பண்டிதர் (1855): இவர் நன்னூலுக்கு உரையொன்று எழுதினதாகச் சிலர் குறித்துள்ளனர்[2]. இக்குறிப்புச் சரியன்று. சங்கர நமச்சிவாயப் புலவரால் செய்யப் பட்டுச் சிவஞான சுவாமிகளால் திருத்தப்பட்ட நன்னூல் விருத்தி யுரையும், விசாகப் பெருமாளையரால் செய்யப்பட்ட பதவுரையும், அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார் முன்னிலையில் திருவையம்பூர்ச் சந்திரசேகர கவிராஜ பண்டிதரால் பார்வை யிடப்பட்டு, வல்லிபுரம் இராமசுவாமி முதலியாரால் முத்தமிழ் விளக்க அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பட்டன. இராட்சச ஆண்டு கார்த்திகைத் திங்களில் (1890) இப்பதிப்பு வெளியாயிற்று. 1851 இல் நன்னூல் விருத்தி ஆறுமுக நாவலரால் வெளியிடப் பட்டது. இரண்டாம் முறையாக மேற்கண்டவரால் மீண்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.[3] இவ்விரண்டாம் பதிப்பில் பழையவர் உரைகளைப் பார்வையிடும் பொறுப்பைச் சந்திரசேகர கவிராஜ் பண்டிதர் செய்திருக்கிறார். இஃதன்றி அவர் நன்னூலுக்குத் தனியுரை வகுத்ததாக யாதொரு குறிப்புமில்லை. இப்பண்டிதர் பல நூல்களைப் பதிப்பிக்கும் பழக்கமுடையவர். வச்சணந்தி மாலை, யாப்பருங்கலக் காரிகை ஆகியவற்றை 1854 இலும், சிதம்பரச் செய்யுட் கோவையை 1855 இலும், தண்டியலங்காரம் உரையை 1857 இலும், இவரே பதிப்பித்து வெளியிட்டிருப்பது, இவர் ஒரு பதிப்பாசிரியர் என்பதை உறுதி செய்கிறது. ஆதலின் இவரை

1. ஈசூர் கணக்கு சச்சிதானந்தம் பிள்ளை, பிரபுலிங்க லீலை, 1885, ப. 16
2. அரசிந்தன், மு. வை., உரையாசிரியர்கள், ப. 543
3. இப்பதிப்பு, சென்னை மறைமலையடிகள் நூலகத்தில் உள்ளது, நூலக நூலெண்: எ, 140.

உரையாசிரியர் என்று கொள்ளல் பொருத்தமின்று. பதிப்பாசிரியர் என்று கோடலே பொருத்தம்.

1858 இல் இ. சாமுவேல் பிள்ளை, தமது தொல்காப்பிய நன்னூல் பதிப்பின் இறுதியில் குறித்துள்ள இராமசாமி முதலியார் நன்னூல் விருத்தியுரைப் பதிப்பும் இதுவேயாம்[1]. மேலே உள்ள சந்திரசேகர கவிராஜர் பற்றிய குறிப்பில் வல்லிபுரம் இராமசாமி முதலியரால் நன்னூல் பதிப்பிக்கப்பட்டது என்று காணப்படும் செய்தி இச் செய்தியை உறுதி செய்கிறது.

டி. கி. பரசுராம முதலியார் (1873) : இவரால் இயற்றப்பட்ட நன்னூல் காண்டிகை உரை நான்கணு விலையில் 1873 இல் வெளியாகி இருக்கிறது.[2] இதன் பிறிதொரு பதிப்பு, ஆய்வுரை டயுன் கூட 1882 இல் வெளியாகியுள்ளது.[3]

ஆறுமுக சுவாமிகள் (1873) : இவர் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் விருத்தம், காமாட்சி அம்மன் விருத்தம் முதலியன பாடியுள்ளார். அவை வல்லூர் வேலாயுத முதலியாரால் பார்வையிடப்பட்டு அச்சாகியுள்ளன.

"சங்குவெண் குழையாய் சடையினை உடையாய்
சங்கரி யினைப்புற முடையாய்
தங்கிய மழுமான் தரித்தகை உடையாய்
தனையுணர்ந்த தறிந்திடும் அன்பர்
அங்கையி னெல்லிக் கனியென உடையாய்
அடியனேன் அகமிடம் உடையாய்
எங்களுங் தானுய் இலகுமெய் யுடையாய்
என்தையே காம்பர தேவே"

என்பது ஏகாம்பர நாதர் விருத்தத்தில் உள்ள ஒரு பாட்டு.

திருவெண்காட்டில் நெடுங்காலம் தங்கியிருந்தமையால் திருவெண்காடு ஆறுமுக சுவாமிகள் என்று அழைக்கப்பெற்றார். கி.பி. 1876 இல் இவர் காலமானார். இவரால் எழுதப்பட்ட காண்டிகை உரை, திருவெண்காடு 'பரப்பிரம முத்திராக்ஷர சாலை' என்ற அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

1. சாமுவேல் பிள்ளை, இ., தொல். நன்., ப. 70
2. சண்முகம் பிள்ளை, மு., தமிழ் நூல் விவர அட்டவணை 1867—1900, எண் 1769
3. மே. கா. நூ. 1774
4. இராமசாமிப் புலவர், வ. அ., தமிழ்ப் புலவர் வரிசை' 17, 1950, ப. 25

இஃது விசாகப் பெருமாகோயர் காண்டிகை யுரையையே பின்பற்றி எழுதப்பட்டுள்ளது.[1]

ஆசிரியர் பெயர் தெரியாதது (1874): காண்டிகை உரை யொன்று, சென்னை புஷ்பரதச் செட்டி கலாரத்னகரம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 1874, பிப்ரவரித் திங்களில் வெளி யாகியுள்ளது. ஆசிரியர் பெயர் அறிய முடியா இவ்வுரையின் விலை பன்னிரண்டனை.[2]

ஆசிரியர் பெயர் தெரியாதது (1880): உரைகாரர் பெயர் தெரியவில்லை. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் தலைமைப் புலவர் கோ. இராசகோபாலப் பிள்ளை இவ்வுரையைப் பதிப்பித்துள்ளார்.[3]

ஆசிரியர் பெயர் தெரியாதது (1886): எழுத்ததிகாரத்திற்கு மட்டும், பல பதிப்புகளையும் ஒப்புநோக்கித் திருத்தமாக வெளி யிடப்பட்ட இக் காண்டிகை உரை கலாரத்னகரம் அச்சுக் கூடத்தில் அழுத்தப்பட்டது.[4]

குமாரசாமிப் புலவர் (? — 1925): யாழ்ப்பாணம் புலோலி என்னும் ஊரிலே வேளாளர் மரபில் பிறந்தவர். கவி பாடுவதில் திறம் பெற்றவர்.

பன்மொழிப் பயற்சி: பள்ளிப் படிப்புக்குப் பின்னர் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். வித்துவ சிரோன்மணி பொன்னம்பலம் பிள்ளை அவர் களிடமும் பல நூல்களைப் பயின்றார். தன் தமையனார் கணபதிப் பிள்ளை வழி வடமொழியையும் படித்தார்.

இலக்கணக் கொத்தர்: சிறுவர்களிடத்திலும், கல்வி அறிவற்ற மக்களோடும் மற்றவர்களோடும் பேசும்போது கூட இலக்கண வழு இல்லாமல் பேசுவார். இலக்கணக் குற்றங் களோடு யாராவது பேசின் உள்ளம் வருந்துவார். அவர்களிடம் சென்று 'வழுவில்லாமல் பேச வேண்டும்' என்று வற்புறுத்துவார். அதனால் இவரைப் பொதுமக்கள் 'இலக்கணக் கொத்தர்' என்று குறிப்பிட்டு அழைப்பர்.

---

1. சண்முகம் பிள்ளை, மு, தமிழ் நால் விவர அட்டவணை 1867—1900, எண், 1419 (John Murdch Classified catalogue of Tamil Printed Books with Introducting notices 1968 P 503)
2. மே. கா. நூ. 1770
3. மே. கா. நூ. 1420
4. மே. கா. நூ. 1422

ஆசிரியப் பணி : யாழ்ப்பாணத்து வண்ணூர் பண்ணையில் உள்ள இந்துக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றினர்.

தமிழ்ப் பணி: தம் ஆசிரியர் சிவசம்புப் புலவர் இயற்றிய யாப்பருங்கலக் காரிகை உரைக்கும், இரகுவம்ச உரைக்கும் இவர் சிறப்புப் பாயிரங்களை வழங்கியுள்ளார். வில்லிபுத்தூரார் பாரதத்தின் சில பகுதிகளுக்கு இவர் உரை எழுதினர். நன்னூல் காண்டிகை உரையையும் திருத்தி அச்சிட்டார் என்பர்.[1]

சாலிவாகன சகாப்தம் ஆயிரத் தெண்ணூற்று நாற்பத் தெட்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இவ்வாசிரியரால் உரையொன்று இயற்றப்பட்டதாக நூலாசிரியர் ஒருவர் கூறுகிறார்.[2] இவர் கூற்றை மெய்ப்பிக்கும் சான்றை அவரும் காட்டவில்லை, ஆய்வில்வேறு சான்றுகளும் கிட்டவில்லை.

ஸ்ரீநிவாச முதலியார் (1888): இவரால் இயற்றப்பட்ட காண்டிகையுரை புரசவாக்கத்தில் இருந்த சுஜநரஞ்சநி முத்திரா க்ஷர சாலையில் அச்சேற்றப்பட்டு எட்டணை விலையில் வெளியானது.[3]

பி. எம். ஸ்ரீநிவாசாசாரியார் (1889): எழுத்ததிகாரம் முழுதிற்கும் எளிய உரை, ஒவ்வொரு விதிக்கான விரிவான விளக்கமுடன், காட்டுகளுடன், ஸ்ரீநிவாசாசாரியாரால் எழுதப்பட்டது. இவ்வுரை எஸ். ஜெ. சவுரியப்ப ஐயரால், சென்னை அல்பீனியன் அச்சகத்தில் பதிக்கப்பட்டு, எட்டணை விலையில் வெளியிடப் பட்டது.[4]

ஆசிரியர் பெயர் தெரியாதது (1889): எழுத்ததிகாரத்திற்குக் காண்டிகை யுரை எழுதப்பட்டு, சென்னை கலாரத்னகரம் அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது.[5]

தெய்வசிகாமணி முதலியார் (1889): இவரால் எழுதப்பட்ட விருத்தியுரை ஒன்றுண்டு. இவ்வுரையாசிரியர் காஞ்சிபுரத்தைச் சார்ந்தவர். உ. வே. சா. அவர்கட்கு நன். மயிலை உரையேட்டைக் கொடுத்தவர்களுள் இவரும் ஒருவர்.[6]

---

1. இராமசாமிப் புலவர், க. அ., தமிழ்ப் புலவர்வரிசை, 17, 1958, ப. 25
2. இளவரசு, சோம., இலக்கண வரலாறு, 1969, ப. 141
3. சண்முகம் பிள்ளை., தமிழ் நூல் விவர அட்டவணை, எண் 1415
4. மே. கா. நூ. 1776
5. மே. கா. நூ. 1428
6. திருநெல்வேலி சிவஞான முனிவர் நூலக அட்டவணை, ப. 17—22.

அமிர்தலிங்கச் செட்டி (1890): இவரால் எழுதிப் பதிக்கப் பட்ட நன். காண்டிகை யுரை, இரு தொகுதிகளாக வெளியிடப் பட்டிருக்கிறது. இதனைப் பற்றி வேறு தகவல் கிடைக்கவில்லை.[1]

அச்சிடப்படாத நன்னூல் உரைகள்: நன்னூல் ஏட்டுச் சுவடிகள் 38 தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்திலும், சென்னை அரசாங்கச் சுவடி நூலகத்திலும், திருவான்மியூர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்திலும் உள்ளன.[2] தஞ்சையில் 12 ஏடுகளும், சென்னைச் சுவடி நூலகத்தில் 10 ஏடுகளும், உ. வே. சா. நூலகத்தில் 16 ஏடுகளும் உள்ளன. இவற்றில், இந்நாள் வரை அச்சிடப்படாத நன்னூல் உரைகள் ஆறு, சென்னைச் சுவடி நூலகத்தில் உள்ளன.[3] இவ்வாறில் 63, 65ஆம் எண்களைப் பெற்றுள்ளன இழிவழக்கில் பேச்சு மொழியில் எழுதப்பட்ட உரைகளாகத் தெரிகின்றன. மிக அண்மைக் காலத்திலேயே இவை எழுதப்பட்டன போலும். ஏனைய நான்கு ஏடுகளுள், 64ஆம் எண்ணுள்ள ஏடு, பதவியலுக்கு மட்டுமே உரையைக் கொண்டுள்ளது. இக்காரணம பற்றியே இஃது அச்சிடப் படவில்லை போலும். இதன் உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. 66, 67ஆம் எண்ணுள்ள இரட்டை ஏடுகள் மிக இன்றியமை யாதவை. இவற்றுள் முதல் ஏடு பணையோலையில் எழுதப் பெற்றது. இரண்டாம் ஏடு தாளில் எழுதப்பட்டுள்ளது. இரண்டும் ஒத்தே உள்ளன. முன்னது பொதுவியலுக்கு மட்டுமே உரையை உடையது. பின்னது எழுத்தியல், பதவியல் வரை 68 நூற்பாக்களுக்கு மட்டுமே உரையைப் பெற்றுள்ளது. இரண்டுமே முற்றுப் பெறுதவை என்பதால் அச்சிடப் படவில்லை போலும். இவ்வுரைகளின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. எனினும் உரை எழுதிய போக்கைக் கொண்டு பார்க்கும் போது இவ்வாசிரியர் சமணர் ஆகலாம் எனத் தோற்றுகிறது. 68ஆம் எண்ணுள்ள நன்னூல் உரை ஒன்று பணையோலையில் எழுதப்பட்டுள்ளது. இதன் உரையாசிரியர் பெயரும் தெரிய வில்லை. இதன் உரையும் நன்னூல் முழுமைக்கும் அமைய வில்லை. எழுத்தியல், வினையியல், பொதுவியல் ஆகிய இயல் களுக்கு மட்டுமே உரை உள்ளது.

முடிப்பு: பத்தொன்பதாம் நூற்றாண்டு, நன்னூல் உரை வரலாற்றின் பொற்காலமாகும். வேறெக் காலத்திலும் எழாத

1. சண்முகம் பிள்ளை, மு., தமிழ்நூல் விவர அட்டவணை, எண் 35, 174
2. நன்னூல் ஏட்டுச் சுவடிகள் பற்றிய பகுதியைப் பார்க்க
3. A Descriptive Catalogue of the Tamil Manuscripts in the Govt. Manuscripts Library. Madras By M. Rangacharya. Vol. I. 1912 No. 63, 64, 65, 66, 67, 68.

அளவுக்கு இந்நூற்றாண்டில் உரைகள் எழுந்தன. தமிழில் ஏறத்தாழ இருபத்தாறு உரைகளும், ஆங்கிலத்தில் ஐந்து உரைகளும் தோன்றின. இவற்றுள் பதினைந்து உரைகள் கிட்டவில்லை. எனினும் இக்கால உரைப்பாதை மற்றைய உரைகளால் தெளிவாகிறது. பெரும்பான்மை உரையாசிரியர்கள், சில லெழுத்துக்களில் செறித்து வைக்கப் பட்டிருந்த நன்னூல் இலக்கணச் செய்திகளை எளிமைப் படுத்தினர்; பரப்பினர். இதனால் வேறு எந்தக் காலத்திலும் பயிலப் படாத அளவுக்கு நன்னூல் பலரால் பயிலப்பட்டது. ஆங்கில மொழி கற்ற அறிஞர் களால் நன்னூல் அண்மைத்து நாடுகளுக்கும் ஆங்கில மொழி வழி எடுத்துச் செல்லப்பட்டது. இதனால் நன்னூலுக்கு உரை வழங்கும் முயற்சி தமிழ் நாட்டில் மட்டுமன்றி, ஈழநாட்டு எல்லை வரை விரிந்து, மேலை நாட்டுப் பகுதி வரை பரந்தது. இலக்கண நூலில் எந்நூலுக்கும் கிட்டாத உலக வாழ்வு, இந் நூற்றாண்டில் நன்னூலுக்குக் கிட்டியது.

26

இருபதாம் நூற்றுண்டில் உரைகள்

இருபதாம் நூற்றுண்டு அரசியல் சூழல் : பத்தொன்பதாம் நூற்றுண்டில் இந்திய மண்ணில் நிலைபெறத் தொடங்கிய ஐரோப்பியர் ஆட்சி 20ஆம் நூற்றுண்டு தொடக்கத்தில் நன்கு காலூன்றி விட்டது. அதற்கு முன்பு முழுக்க முழுக்க, ஆங்கிலேயரின் நேரடி ஆளுகைக்கு உட்பட்டிருந்த இந்தியா இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் இந்தியர்க்கும் நாடாளும் வாய்ப்பு, அளவாகக் கொடுக்கப் பட்டது. மாண்டரு சிம்ஸ்போர்டு சீர்திருத்தத் திட்டம் 1919ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இதனால் உருவான இரட்டை ஆட்சிக்கு மாகாண கவர்னரே தலைவராக இருந்தார். அவருக்குத் துணைபுரிய ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக் குழுவில் கவர்னரால் நியமிக்கப்பட்டவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் சேர்ந்திருந்தனர்.

தென்னப்பிரிக்காவில் வெள்ளையருக்கு அடிமைப்பட்டு இன்னல்களுக்கு இடையே வாழ்ந்து வந்த காந்தியடிகள் இந்தியாவின் நலனுக்காக உழைத்து ஓரளவு வெற்றிகண்டு 1917இல் தாயகம் திரும்பினர். இவர் 1919 இல் வந்த சீர்திருத்தங்களைப் புறக்கணித்தார். ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். இந்திய மக்கள் அனைவரும் பேராளவு இவர் கீழ் திரண்டு நின்றார்கள். அடுத்து நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் காந்தியின் தலைமையையும் அவர் தலைமையில் நடந்த இயக்கத்தையும் மிகவும் பெரிதுபடுத்தின. சென்னையில் 1916 நவம்பர் 20ஆம் நாள் பிராமணர் அல்லாதார் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இவ்வமைப்பு தமிழ் இயக்கத்தையும், தமிழின இயக்கத்தையும் வேகப் படுத்தியது. என்றாலும் காலப் போக்கில் இவ்வமைப்பு வலி குன்றியது. பிராமணரும் பிராமணர் அல்லாதாரும் சம உரிமை பெறுகின்ற வரை இந்தியாவிற்கு விடுதலை கோரிடாம் என்பது

இவர்களது கருத்து. இவ்வமைப்பின் சார்பாக 1923ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற இவ்வமைப்பு சென்னைப் பல்கலைக் கழகச் சட்ட திட்டங்களை வகுத்து முதன்முறையாக சென்னை ஆந்திரப் பல்கலைக் கழகங்களைக் கொண்டு வந்தது. 1926ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாயிற்று. இந்திய நாடு முழுதுமே விடுதலை பெறவேண்டும் என்பது காந்தியடிகள் தலைமையில் நடந்த சுதந்தர இயக்கத்தின் முடிவான தீர்மானங்களாகும். இவ்வியக்கமே நாளடைவில் பெரும் வலிமை பெற்று நாட்டுக்கு 1947ஆம் ஆண்டு விடுதலை வாங்கிக் கொடுத்தது. இதன் பின்னர் இந்திய நாடு இந்தியராலேயே ஆளப்பட்டது. தமிழன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சீரிய கொள்கையோடு வாழும் நிலை உருவாயிற்று.

சமுதாயச் சூழல்: பெரிய அளவில் பலவேறு மொழி இன மக்களோடும் வாழ வேண்டிய தேவை இந்த நூற்றாண்டில் தமிழர் களுக்குக் கிட்டியது. ஐரோப்பிய மக்களின் பழக்க வழக்கப் பண்பாட்டு நாகரிகங்கள் தமிழருக்கு அறிமுகமாயின. பழைய கண்மூடிப் பழக்க வழக்கங்களில் தோய்ந்து கிடந்த தமிழர் அறிவியல் உணர்வு பெற்றார்கள். அஞ்சல், போக்குவரத்து ஆகியவற்றில் ஐரோப்பியர் செய்த மாற்றங்கள் தமிழரை வியப்பில் ஆழ்த்தின. ஆங்கிலேயரை மதிக்க வைத்தன. ஆங்கிலக் கல்வி யின் அறிமுகம், உலகத்தை மொத்தமாகப் பார்க்கவும் அயல் நாட்டான் விளைத்திருந்த அறிவியல் புதுமைகளை அறியவும் பெரிதும் உதவின.

அச்சுமுறை இந் நூற்றாண்டில் பரவலாகி விட்டதால் நூற்கள் நிரம்ப அச்சிடப்பட்டன. தமிழ் இலக்கியத்தின் சிறப்பையும் தமிழின் தொன்மையையும் உணர்ந்த தமிழறிஞர்களே சிலர் மழைய இலக்கிய இலக்கண நூற்களை அச்சிட்டனர். இதன் பயனைத் தமிழ்மக்கள் தம் மொழியின் பண்டைக் கால இலக்கிய வளத்தினையும் அக்காலத் தமிழ்நாட்டின் சீரியநிலை முதலிய வற்றினையும் கண்டனர். இதனால் தம் மொழியை மேன்மேலும் வளரச் செய்யும் முயற்சியில் ஈடுபடலாயினர். தமிழிலக்கியத்தின் பண்டை நிலையினைப் பாராட்டுதல் மட்டும் தமிழைப் போற்றுவது ஆகாது என்பதை உணர்ந்தனர். ஆசிரியர்கள் பலரும் அதனால் பிறநாட்டு மக்கள், தங்கள், இலக்கியத்தை வளப்படுத்துதல் போல தாமும் தமிழை வளப்படுத்துதல் வேண்டும் எனக்கொண்டு பல முறைகளிலும் உழைத்தனர். அதனால் தமிழ் இலக்கியங்கள் இந்நூற்றாண்டில் விரைவாக வளரத் தொடங்கின. ஆங்கிலக் கல்வி காரணமாகத் தமிழ் மக்களுடைய உள்ளம் விரிவடையத்

தொடங்கவே புதிய கருத்துகளும் கொள்கைகளும் அவர்கள் உணர்ச்சியைத் தூண்டத் தொடங்கின. அதன் பயனாகப் புதுமை கலந்த புத்திலக்கிய மரபு இந்நூற்றாண்டில் கால்கொள்ளத் தொடங்கியது.

சமயச் சூழல் : பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பாகத்தில் இராமலிங்க அடிகளாரால் தோற்றுவிக்கப்பட்டிருந்த சமரச சுத்த சன்மார்க்க சங்கம் இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மக்கள் நெஞ்சில் பேரளவு பரவி இருந்தது. அத்துடன் கிறித்துவ சமயத்தில் பரவு தலால் சமயத்தின் உள் நரம்புகளாகக் கிளைத்துக் கிடந்த நூற்றுக் கணக்கான சாதி உணர்ச்சி மெல்ல மங்கத் தொடங்கியது. அன்றி யும் கிறித்துவ சமயத்தை எதிர்க்கின்ற போக்கில் ஏனைய இந்தியச் சமயங்கள் தம் வேற்றுமைகளை மறக்கத் தொடங்கின. இதனால் கிறித்துவம், கிறித்துவம் அல்லாத சமயங்கள் தமக்குள் போட்டி யிட்டதன் விளைவாகத் தமிழ் இலக்கிய உரைநடை பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே பேரளவு தொடங்கி இருந்தது. இந்தியா வந்த வெளிநாட்டுப் பாதிரிமார்கள் இந்திய மக்களை அடிமைகளாகப் பாவிக்காமல் தமிழ் மக்களின் சமய மரபைப் புரிந்துகொள்ள முயற்சி செய்தார்கள். தனக்குப் பின்வரும் சமயத் தொண்டர் களும் தமிழர்களின் சமயப் பாங்கைப் புரிந்து கொள்ளத் துணை யாகத் திருவாசகம் போன்ற சமய இலக்கியங்கள் மட்டும் அன்றி, தமிழ் இலக்கணங்களையும் இவ்வடிப் படையிலும், தழுவியும் மொழி யாக்கம் செய்து ஆங்கிலத்தில் அறிமுகப் படுத்தினார்கள்.

இலக்கண வளர்ச்சி : சென்னை அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் இந்த நூற்றாண்டில் உருவானது தமிழரின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க கட்டமாகும். சிறப்பாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்க் கல்வியில் மிகுந்த அக் கறை செலுத்தியது. அதற்கு இணையாகச் சென்னைப் பல்கலைக் கழகமும் தமிழ்ப் பேரகராதி முதலான தலைமை வாய்ந்த செயல்களை இந்நூற்றாண்டில் செய்தது. ஏறத்தாழ சுதந்திரம் அடையும் வரை நன்னூல் மூலபாடமும் உரைப்பாடமும் முழுதுமாக பி.ஏ. வகுப்பு களுக்கும் எல்லாப் பிரிவுகளுக்கும் கட்டாயப் பாடமாக்கப்பட்டன. இஃதன்றி மெட்ரிக் வகுப்பிற்கும் கலைவகுப்பு முதல்நிலைக்கும் (First in Arts) நன்னூலின் செம்பாகம் பாடமாக்கப் பட்டிருந்தது. சென்னை ஜார்ஜ் கோட்டையிலிருந்த ஆங்கில அரசினரால் நடத்தப்பெற்ற கல்விச்சங்கம் நன்னூல் பாடத்தைத் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக கட்டாயமாகப் பயிற்றுவிக்கச் செய்தது. தொல்காப்பியம் மிகப் பெரிதாகவும் விரிவாகவும் இருந்தபடியாலும் மனித மனம் சுருக்கமாக அறிய முனைவதாலும் தொல்.முழுமைக்கும்

சரியான பல பதிப்புகள் வராததாலும், தொல்காப்பியத்தை விட நன்னூல் இந்நூற்றாண்டின் பாதிவரை தமிழ் இலக்கணத்துறையில் போராட்சி செலுத்தி வந்தது. இதன் விளைவாக நன்னூலுக்குப் பல பதிப்புக்கள், சுருக்கங்கள், எளிய விளக்கங்கள், ஆங்கில ஆக்கங்கள் ஆகியன மிகுந்த அளவில் வெளியாயின.

நன்னூல் உரைகள் : ஆனால் வசனத் துறையில், சிறுகதைத் துறையில், புதினத் துறையில் வெளிவந்த இலக்கிய முயற்சிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நன்னூலுக்கு இந்நூற்றாண்டில் பல உரைகள் தோன்றுமை தனிக் குறிப்பிற்குரியது. இதற்குக் காரண மென்ன ? நன்னூலுக்குத் தோன்றிய பழைய உரைகள் நன்னூல் மூலத்தை நேரடியாகப் புரிந்துகொள்ள முடியாமல் தடை செய்கின்றன; திசை திருப்புகின்றன. இக்கருத்து இந்நூற்றாண்டில் ஆங்கிலத்தில் ஆங்கிலேயரால் பெரிதும் கருதப்பட்ட ஒன்றாகும். இதனால் பழைய உரைகளின் பயிற்சி கூட ஓரளவு புறக்கணிக்கப் பட்டது. ஆதலால் புதிய உரைகளைக் காண்பதைக் காட்டிலும் நன்னூல் இலக்கணத்தை நேரடியாக எளிமையாகப் விளங்கிக் கொள்ளும் முயற்சியும் விளங்க வைக்கும் முயற்சியுமே மிகுதியாகப் போற்றப்பட்டு வந்தன.

இக்கருத்து விடுதலைக்குப்பின் வேகமாக மோசமாகத் திசை திரும்பியது. இதற்கு ஆங்கில ஆதிக்கமே காரணமாகலாம் ? ஆங்கில இலக்கியத்திற்கு நெடுங்காலத் தொன்மை இல்லாமை யால் அம்மொழியில் உரைகள் தோன்ற வாய்ப்பில்லை. இலக்கணத்தைப் பல கருத்துகளைச் சில சொற்களில் அடக்கிக் காட்டும் தமிழர்க்கே உரிய இலக்கண மரபு ஆங்கிலத்திற்கு இல்லை. இலக்கணத்தைச் சுருங்கிய சொற்களால் சூத்திரிக்கும் முறை ஆங்கில மொழியில் இல்லாமையே காரணம். இதனால் இலக்கிய இலக்கணங்களுக்கு உரைதோன்ற வேண்டிய இன்றி யமையாமை அம்மொழிக்கு இல்லை. அதனால் தமிழில் உரைகள் தனியே பயிலப்படுதல் போன்ற தேவை ஆங்கிலத்திற்கு இல்லை. இச்செய்திகளை முற்ற அறிந்தவராயினும் ஒப்பிட்டு உணர்வால் ஏற்பட்ட தவற்றால் தமிழ்உரை நூற்கள் தமிழ் பி.ஏ., எம்.ஏ., புலவர் வகுப்புகளில் தேவை இல்லை என்ற கருத்து 20ஆம் நூற்றாண்டில் தமிழரின் உரைப்பாட அறிவைத் தடை செய்தது. பல்கலைக் கழகப் பாட அளவிலும் கருத்து அளவிலும் பழைய தமிழ் உரைகள் புறக்கணிக்கப் பட்டமையால் புதிய உரைகள் இந் நூற்றாண்டில் தோன்றுமல் போயின. இஃதன்றி மூல நூலாசிரி யர்களைத் தமிழறிஞர் மதித்தகைப் போல உரையாசிரியர்களையும் நூலாசிரியர்களுக்கு இணையாக வைத்துப் போற்றினர். இந்தப்

போற்றுதல்களுக்குள்ளான பழைய சிறந்த உரைகள் இருக்கும் போது புதிய உரைகள் தம்மால் எழுதப்பட வேண்டுமா என்ற கருத்தும் தோன்றியிருத்தல் கூடும். இதனாலும் புதிய உரைகள் தோன்ற வாய்ப்பு இல்லாமல் போயின போலும்.

மூலபாடக் கல்வி : பழங்காலத்தில் மனப்பாடம் மிகுவாக வற்புறுத்தப்பட்டுள்ளது. மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் ஒரு தமிழறிஞர் 10000 சூத்திரங்கள் தனக்குப் பார்க்காமல் தெரியும் என்று சொன்னதுவும், மகாவித்துவான் தியாகராச செட்டியார் வழி அவரது மனப்பாடத் திறனைச் சோதித்துப் பார்த்ததுவும் இங்கே நினைத்தற்குரியன. மனப்பாடத் திறனைப் பெரிதாக வளர்க்கும் அவதானக் கல்வி பழைய நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டிலும் எங்கும் பரவியிருந்தது. ஆனால் அச்சுப்பொறி வந்தபின் இந்தநிலை மெல்லக் குறையத் தொடங்கியது. நூலையும் நூற்பகுதிகளையும் எளிமையாக உடனுக்குடன் அறிய அச்சிட்ட நூற்கள் பெருந்துணையாக இருந்தன. அந்நூற்கள் இடம்பெற்ற நூலகங்கள் மக்களுக்கு அருகில் இருந்தன. இதனால் அச்சுத் தாட்கள் சுமக்கும் செய்திகளை மனம் சுமக்க வேண்டிய தேவை குறைந்து வரலாயிற்று. இதனால் மனப்பாடம் செய்தே தீர வேண்டிய நிலைமை இல்லாது போயிற்று. ஆதலால் மூல பாடத்தை மனப்பாடம் செய்யும் போக்கு காலப் போக்கில் குன்றிப் போயிற்று.

இலக்கணக் கல்வி: இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் விளைவாக உலக நாடெங்கும் இயந்திர நுட்பம், பொறியியல் நுட்பம் பரவின. அதனுடன் புதிய அறிவியல் ஊழியே உலகெங்கும் ஊடுருவியது. ஆங்கில அரசின் நேரடி ஆதிக்கத்திலிருந்த இந்தியாவில் அறிவியல் போக்கு தலை யெடுத்தது. இதனால் கல்வித் துறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அரசாங்க அலுவலுக்காகவும் பழைய சாத்திரங் களைப் புரிந்து கொள்ளுதற்காகவுமே இதுகாறும் கல்வித் துறை கவனம் செலுத்தி வந்தது. சென்னை, ஆந்திர, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் தோன்றியபின் கற்பது சாத்திரப் பயிற்சிக் காகவும், அலுவலுக்காகவும் மட்டுமன்று. பலவேறு தொழிலியல் அறிவியல் நுட்பங்களைக் கற்க வேண்டும் என்ற நிலைமை உருவாயிற்று. இந்த நிலைமை உருவான பின் சாத்திர அளவிலும் அலுவலக அளவிலும் பேராட்சி செய்து கொண்டிருந்த மொழிக் கல்வி இரண்டாம் நிலையை அடைந்தது. அம்மட்டுமின்றி மொழிக் கல்வி என்பது பேரளவு இலக்கியங்களையும் ஓரளவு இலக்கணங்

களையுமே கொண்டது. இதனால் இலக்கணக் கல்வி ஏறத்தாழ மூன்றும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

காலப்போக்கில் நன்னூலில் இருந்து படிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த சில நூற்பாக்களும் வற்புறுத்தப் படவில்லை. இலக்கண நூற்பாக்களை அறிந்து வைத்திருப்பதை விட நூற்பாச் செய்திகளை ஓரளவு நினைவில் வைத்திருந்தாலே போதும் என்ற கருத்தே காரணம். பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டிலும் அயல் நாட்டாரும் தமிழரும் நன்னூலைக் கற்றதற்குப் பேரளவு காரணம் நன்னூல் படிப்பு அக்காலத்துத் தேர்வில் வற்புறுத்தப் பட்டதே ஆகும். அயல் நாட்டார் தமிழ் மொழியைப் பயில நன்னூலைத் துணையாகக் கொண்டனர்.

மொழியியல் துறையின் வரவும் வளர்ச்சியும்: பதினெட்டாம் நூற்றாண்டிலேயே, பாப்பு (Bop,), கிரிம் (Grimm) போன்ற ஐரோப்பிய அறிஞர்கள் பன்மொழி கற்று அவற்றின் இலக்கணங்களைத் தம் மொழிகளில் எழுதி இனமொழிகளை ஒப்பிட்டுக் குடும்பங்களாக வகுத்துக் காட்டினர். அவற்றைக் கற்றறிந்த மாக்சுமுல்லர் (Max muller) உலக மொழிகளை ஆய்ந்து ஒப்பியன்மொழி நூலை (Comparative philology) எழுதினர். இவ் வொப்பியல் இலக்கணம் தமிழகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேதான் அறிமுகமாயிற்று. இருபதாம் நூற்றாண்டுத் தொடங்கி ஒப்பியல் துறை அறிவியல்களுள் ஒன்றான மொழியியல் துறையாக மலர்ந்தது. டாக்டர் ஆட்சன் (Dr. Hodgson), டாக்டர் குண்டெர்ட் (Dr. Gundert), டாக்டர் கிட்டல் (Dr. Kittel), எல். வி. இராமசாமி அய்யர் ஆகியோரால் இத்துறை வளம்பெற்று, இன்று அண்ணாமலை, கேரளப் பல்கலைக் கழகங்களில், மொழியியல் தனிப் பெருந் துறையாக நிலைபெற்று, தமிழிலக்கண ஆய்வை அறிவியல் நெறிப்படுத்தி யிருக்கிறது. இதனால் நன்னூல், புதிய நோக்கில் படிக்கப் பெறும், ஆராயப் பெறும் நன்னிலை இந்நூற்றாண்டில் உருவாகி யிருக்கிறது.

திராவிட ஒப்பியல் ஆய்வு: டாக்டர் கால்டுவெல் அவர்களின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல் கி. பி. 1856இல் வெளிவந்த பின் தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளைப் பற்றிய அயல் நாட்டாரின் பார்வை மாறத் தொடங்கியது. சமற்கிருத மொழியின் சேய்மொழிகளே திராவிட மொழிகள் என்ற கருத்துப் பொய்ப்பிக்கப் பட்டது. இதனால், இந்தியா என்றால் சமற்கிருதம் என்று நினைத்த நிலை மாறி, திராவிட மொழிகளையும், தமிழையும் சிறப்பாக நினைக்கும், கற்கும் புதிய

நிலை அயல் நாடுகளில் உருவானது. இந்நிலை அவர்களைத் தமிழ் கற்கத் தூண்டியது. இதனால் தமிழிலக்கணக் கல்வி அயல்நாட்டார் அளவில் முதன்மை பெற்றது.

கருத்தரங்குகள்: நன்னூலைப் பொறுத்தவரை இச்சூழல் தனிப்பெரும் பயனைத் தனியே தராவிட்டாலும், நன்னூல் பல முனைகளில் ஆராய்ச்சிப் பொருளாயிற்று. அண்ணாமலை, கேரளப் பல்கலைக் கழகங்கள் இக்காலத்தில் இலக்கணத் தொடர்பான கருத்தரங்குகளை நடத்தின. அக் கருத்தரங்குகளில் நன்னூல் உள்ளிட்ட பல தமிழிலக்கண நூல்கள், அவற்றில் சொல்லப்பட்ட செய்திகள் ஆராயப்பட்டன. 1969ஆம் ஆண்டில் அமைந்த இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் என்ற அமைப்பு, ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான அறிஞர்களைக் கூட்டி, தமிழிலக்கண, இலக்கிய, வரலாற்று ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்தியது. இதன் சார்பில் மதுரை (1967), திருச்சி (1970), அண்ணாமலைநகர் (1971), திருவனந்தபுரம் (1972), சென்னை (1973) பாண்டிச்சேரி (1974) ஆகிய இடங்களில் நடைபெற்ற கருத்தரங்குகள், இலக்கணஞ்சார்ந்த மொழியியல் துறைகளில் பல ஆய்வுகளை நிகழ்த்தின. இக்கருத்தரங்குகள் அனைத்தும் தொடர்ந்து நடைபெறப் பல்கலைக் கழக மாணியக் குழுவும், சென்னை, மதுரை, அண்ணாமலை, கேரளப் பல்கலைக் கழகங்களும் பேரளவு பொருளுதவி செய்து வருகின்றன.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் (International Association of Tamil Research) என்ற அமைப்பு, பன்னாட்டுத் தமிழறிஞர்களாலும், தமிழார்வலர்களாலும் 1964இல் உருவாக்கப் பெற்று நான்கு பெரும் கருத்தரங்குகளை, கோலாலம்பூர் (1967), சென்னை (1968), பாரிசு (1970) யாழ்ப்பாணம் (1974) மாநகரங்களில் நடத்தியது. இம்மன்றம் அனைத்து நாட்டுக் கீழைத்துறைக் கூட்டம் (International Congress of Orientalists) என்ற அமைப்பு பலவேறு கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. 1971இல் தமிழக, கேரள அரசுகளின் பொருளுதவியோடு, திருவனந்தபுரத்தில் அமைக்கப்பட்ட திராவிட மொழியியல் கழகம் திருவனந்தபுரம் (1971), திருப்பதி (1972), தார்வார் (1973) சென்னை, பெங்களூர், மைசூர் (1974) ஆகிய இடங்களில் கருத்தரங்குகளை நடத்தியிருக்கிறது. இக் கருத்தரங்குகள் எல்லாம் பல முனைகளில் இலக்கண ஆராய்ச்சியைப் பெருக்கி வருகின்றன. இவற்றால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆராய்ச்சி வேட்கை, இருபதாம் நூற்றாண்டின் தனிப்பெரும் நன்கொடையாகும்.

ஆராய்ச்சி இதழ்ப் பணிகள்: இருபதாம் நூற்றாண்டின் சூழ்நிலை நன்னூல் முதலான இலக்கண ஆராய்ச்சியினை ஊக்கப் படுத்தியது. இதனால் நன்னூல் தொடர்பான கட்டுரைகள் பல எழுதப்பெற்றன. இந்நூற்றாண்டின், இன்றியமையாக் கருத்துப் பொறியாகிய இதழ்கள் இலக்கணத் தொடர்பான கட்டுரைகளை வெளியிட்டுப் பெருமை பெற்றன. செந்தமிழ், தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, தென்மொழி, ஆராய்ச்சி, கலைக்கதிர் முதலான தமிழ் இதழ்களும், Tamil Culture, Journal of Tamil Studies, International Journal of Dravidian Linguistics, Indian Linguistics முதலான ஆங்கில இதழ்களும் இத்துறையில் பெரும் பணியாற்றின. இவையன்றி சென்னைப் பல்கலைக் கழகக் கீழைத் துறை ஆய்விதழும், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆய்விதழும் இலக்கணக் கட்டுரைகள் வெளியிடுவதில் பங்கு பெற்றிருக்கின்றன. 1973 முதல் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை தனியே நடத்தும் 'தமிழாய்வு' என்ற இதழும், 1971 முதல் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் Journal of the Department of Tamil என்ற இதழும் ஈண்டுக் குறிக்கத்தக்க பெருமையுடையவை.

நன்னூல்—நன்னூல் அன்பு: மலர்களிலும், இதழ்களிலும், கருத்தரங்குகளிலும், நூல்களிலும் இடம்பெற்ற கட்டுரைகள் நன்னூல் பற்றி ஒரு புதிய கோட்பாட்டை இந்நூற்றாண்டில் தோற்றுவித்தன. இதற்குத் தொடக்கம் அளித்தவர் அரசஞ் சண்முகனாராவார். இவர் தன்னுடைய 'அரசஞ் சண்முக விருத்தி' என்ற நூல்வழி, நன்னூல், தொல்காப்பியத்திலும் தாழ்ந்தது என்பதை நிறுவ முயன்றார். இவரைத் தொடர்ந்து 20ஆம் நூற்றாண்டிலும் இக்கருத்துப் பரவியது.

நன்னூல் உரைகள்: இந்நூற்றாண்டில், நன்னூல் உள்ளிட்ட இலக்கணங்கள் கூறும் கோட்பாடுகள் பற்றிய கட்டுரை ஆராய்ச்சியே மிகுதி; முதனிலையில் உள்ளதுமாகும். இரண்டாம் நிலையில் நன்னூல் பல பதிப்புகள் பெற்றமை. நன்னூலுக்குப் புத்துரை எழுதும் முயற்சி, மூன்றும் நிலை என்றே கூறுதல் வேண்டும். இவ்வாறு நன்னூல் உரைத் தோற்றம் சுருங்கிப் போனதற்குத் தகுமையான காரணங்கள்: (அ) இருபதாம் நூற்றாண்டு மக்களுக்குப் பொருத்தமான, தேவையான எளிய உரைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் தோன்றியிருந்தன. அவற்றின் மறுபதிப்புகள் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டிலும் வெளிவந்து கொண்டிருந்தன. (ஆ) அறிவியல், தொழியியல் சார்ந்த இருபதாம் நூற்றாண்டு இயந்திரச்

சமூகத்திற்கு இலக்கணம் இன்றியமையாத ஒன்றாக இருக்கவில்லை எனினும் கடந்த எழுபத்து மூன்று ஆண்டுகளில், நன்னூலுக்கு முற்ற உரைகள் தோன்றாமல் போய்விடவில்லை. நான்கு உரைகள் தோன்றின. இவற்றுள் யாழ்ப்பாணம் ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை இயற்றிய நன்னூல் இலகு போதம் ஒன்று. அவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நன்னூல் உதாரணச் சுருக்கம் என்ற பிறிதோர் உரைநூல் எழுதியிருந்தமையால், அந்நூல் பற்றிய பத்தொன்பதாம் நூற்றாண்டு உரையாராய்ச்சியில், நன்னூல் இலகு போதம் பற்றிய ஆய்வும் இடம் பெற்றிருக்கிறது. இஃது அல்லாமல், இக்கால எல்லையில் எழுந்த உரை மூன்றாகும். அவற்றைப் பற்றிய விரிவான ஆய்வு ஈண்டுத் தரப்படவில்லை. இன்றியமையாக் குறிப்புகள் மட்டுமே தரப் படுகின்றன.

ச. பவானந்தம் பிள்ளை உரைப்பதிப்பு (1922): இவ்வுரை, மயிலை., சங்., கவிராயர் முதலிய உரையாசிரியர்களைப் பின்பற்றி எழுதப்பட்டது. இஃது மாணாக்கர்க்கே தேர்வுப் பார்வையில் இயற்றப்பட்டது என்பது முகவுரையால் விளக்க மாகிறது.[1] எனினும் சிறப்பான தனிப்பகுதிகள் இப்பதிப்பில் சில உள்ளன. மிக அழகான முறையில் பதிக்கப்பட்டுள்ள இப்பதிப்பில், நன்னூற் பாயிரப் பகுதி நூலின் புறப்பகுதியாக அச்சிடப் பட்டிருப்பதும் பொதுவியல் எட்டாம் இயலாகக் கொள்ளப்படாமல், நூலின் இறுதியியலாக, பத்தாம் இயலாகக் கொண்டிருப்பதும் குறிக்கத் தக்கன. ஆழமான முகவுரை ஒன்று ஆங்கிலத்திலும் தமிழிலுமாக இடம் பெற்றிருக்கிறது. தமிழ் முகவுரையில், 'தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கத்தைத் தாழ்வு படுத்தவே, திருவாவடுதுறை ஆதீனத்தார் சங். புலவரைக் கொண்டு நன்னூலுக்கு ஒரு விருத்தியுரையும், சிவஞான முனிவரைக் கொண்டு இலக்கண விளக்கச் சூறாவளியும் எழுதுவித்தாகக் கூறுவர். சங். செய்த விருத்தியுரையை மேற்காட்டிய காரணங் கொண்டே சிவஞான முனிவரைக் கொண்டு திருத்துவித்ததாகவும் கூறுவர்[2] என்று குறித்திருப்பது நன்னூல் விருத்தியுரை பற்றிய ஒரு மறைவடக்கத்தை வெளிப்படுத்துகிறது. பதிப்பில் இடம் பெற்றுள்ள பின்னிணைப்புகள்: இவ்வுரைப் பதிப்பில் 'அனுபந் தங்கள்' என்ற தலைப்பில் 12 பின்னிணைப்புகள் இடம் பெற்றுள்ளன. 73 பக்கங்களில் இடம் பெற்றுள்ள அவ்

1. பவானந்தம் பிள்ளை, ச., நன்னூல் உரை, 1922 முகவுரை ப. 24
2. மே. சா. நூ. முகவுரை ப. 16, 17

விணைவுகளுள், நன்னூல் நூற்பாக்களுக்கு இணையான தொல். நூற்பா அகராதி, உரை விகற்பங்களும் விசேடக் குறிப்புகளும், வடமொழி வழக்குப் பற்றி வரும் இலக்கணச் சொற்கள், தமிழிலக்கணக் குறியீடுகளுக்குச் சரியான ஆங்கிலக் குறியீடுகள் என்ற தலைப்புகளில் அமைந்த 2, 4, 5, 6ஆம் பின்னிணைவுகள் மிகப் பயனளிப்பவை. 'நன்னூற் சூத்திரத் தொகை வகை விளக்கம்' என்ற தலைப்பில் அமைந்துள்ள 12ஆம் பின்னிணைவும் மிகச் சிறப்பான ஒன்றாகும்.

கா. நமச்சிவாய முதலியார் உரைப்பதிப்பு (1936): "இது மாணாக்கர்கள் மயங்கா வண்ணம் தெளிவாக நன்கு பதிக்கப் பெற்றுள்ளது. இதில் மாணாக்கர்கள் அறியக்கூடிய அளவிற்கே உரை காணப்படும். மிகுதியாகக் காணப்பட்ட பகுதிகள் விலக்கப்பட்டன" என்ற இந்நூல் முன்னுரையே,[1] இவ்வுரைப் பதிப்பின் நோக்கையும் போக்கையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

சிறப்பான செய்திகள் : பாயிரப் பகுதியைப் பாயிர இயல் என்றே குறித்துள்ளார். காண்டிகை என்பது ஐந்து வகையாகக் கண்டித்து உரைப்பது என்று வரையறுத்துள்ளார்.[2] "அழலின் நீங்கான்" என்ற பாயிரத் தொடருக்கு, அகலாது அணுகாது தீக்காய்வார் போல ஆசானிடம் பழக வேண்டும் என்று மற்றவர் எல்லாம் உரைத்தனர். 'அழலின்' என்பதற்கு ஆசிரியன் கோபித்தால் எனப் பொருள் காட்டியுரைப்பார்.[3] தொகை வகை விரி முதலான நூல் வகைகளுக்குக் காட்டு நல்கும்போது, பழைய பாதையினின்று விலகி, 'தொகுத்தல்—நேமிநாதம், விரித்தல்—பெரிய புராணம், தொகைவிரி—நன்னூல், மொழி பெயர்ப்பு—நைடதம்' என்று காட்டுவர்[4]. ஆரியம் தமிழ்த்திரிபு முறைகளைத் தெளிவான பட்டியல் மூலம் விளக்குவார்[5]. பாயிரம் – பரந்து நிற்பது, நூலினுட் கூறப்படும் பரந்த பொருளைத் தன்னிடத்தே அடக்கி நிற்பது என்று விளக்கந் தருபவர், பதிகம் என்பதற்கு – 'இது பிரதீகம் என்னும் வடசொல்லின் திரிபு; பிரதீகம் என்பதற்கு அங்கம், உறுப்பு என்பது பொருள். நூலுக்கு இன்றியமையாத தலையங்கமாக நிற்பது' என்று விளக்குவார்.[6]

---

1. நமசிவாய முதலியார், கா., நன்னூல், 1936, முன்னுரை ப. 4.
2. மே. கா. நூ. 28
3. மே. கா. நூ. 46
4. மே. கா. நூ. 60
5. மே. கா. நூ. 135
6. மே. கா. நூ. ப. 7

மோசசு பொன்னையா ஆராய்ச்சி தெளிவுரை (1961): இத் தெளிவுரை முதற்பகுதி 196 இலும், இரண்டாம் பகுதி 1971 இலும் வெளிவந்துள்ளது. இவ்வுரையில், நூற்பாக்களுக்கு முதற்கண் தெளிவுரையை மரபுவழி நின்று எழுதி, அதற்கேற்ற எடுத்துக்காட்டுகளையும் அமைத்து, அதன் பின்னர் விரிவான ஆய்வுரை இடம் பெற்றுள்ளது. ஆய்வுரையில், தொல்காப்பியம் முதலான அனைத்து இலக்கண நூல்களும், அவற்றின் அனைத்து உரைகளும், அறிஞர் கட்டுரைகளும் பயன்படுத்தப் பெற்றுள்ளன. இஃது ஆழமாகவும், அகலமாகவும் செய்யப்பட்ட புத்துரையாகும்.[1]

சிறப்பான சில: "இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின்" என்னும் நூற்பாவைப் பெயரின் பொது விலக்கணம் காட்டுவது என்றனர் சங். இத் தெளிவுரை யாசிரியர், எழுத்தின் இலக்கணமே உணர்த்தினது என்று கூறி எழுத்துகளின் பெயரையும் எடுத்துக் காட்டி விளக்குவர்.[2] உகரச் சுட்டு, நடு, பின், மேல் என்பவற்றைச் சுட்டும் என்பர்.[3] உயிரளபெடையின் இலக்கணம் கூறும்போது, 'இசைகெடின்' என்று தொடங்கும் பகுதிக்கு, இசைவு, இணக்கம் என்று புதுப் பொருள் காண்பர்.[4]

நடவாய், வாராய் என்பனவே ஏவல் வினைகள். அவற்றின் ஆய் விகுதி கெட்டு நட, வா என ஏவலாய் வழங்கும் என்பர் முனிவர். இவர், நட, வா என்பன இயல்பாக ஏவற்பொருளை உணர்த்தும்போது ஏவல் வினைகள். வினைச் சொற்களின் முதனிலையாய் நின்று வினையை உணர்த்தின் பகுதிகள் என்று விளக்குவர்.[5] பவணந்தி, தொல்காப்பியர்க்கு முரண்பட்டு நூற்பா யாத்தவர் என்று குறிப்பர்.[6] இது போன்றே சொல்லதிகாரத்திலும் இவர் ஏறத்தாழ எழுபத்தாறு இலக்கண மரபுகளை ஒப்பீட்டு முறையில் ஆராய்ந்துள்ளார். இப்பதிப்பு ஆராய்ச்சி முன்னுரையில் இடம் பெற்றுள்ள குறிப்பொன்று தனியே சுட்டத் தக்கது.[7] அஃதாவது: "பவணந்தியார் குண்டூர் மாவட்டத்துச் சனகாபுரத்துச் சன்மதி என்ற நல்லாசிரியரின் மாணவராவர்.

---

1. அண்ணாமலை, டாக்டர் சு.ப., அணிந்துரை. நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை, 1968, ப. 20
2. மே. கா. நூ. ப. 38
3. மே. கா. நூ. ப. 40
4. மே. கா. நூ ப. 58
5. மே. கா. நூ. ப. 110, 111
6. மே. கா. நூ. ப. 56, 63, 106
7. ஔவை. துரைசாமிப் பிள்ளை, ஆராய்ச்சி முன்னுரை, மே. கா. நூ. ப. 3

சனகாபுரம் இப்போது பொங்கலூரு என வழங்குகிறது''. இக் குறிப்பு பவணந்தியார் பிறப்பிட வரலாற்றில் புதிய திருப்பத்தை உண்டாக்குவதாகும். ஆனால், இவ்வாறு கொள்ளுதற்குச் சான்று எதுவும் காட்டப்படவில்லை.

முடிப்பு : இருபதாம் நூற்றாண்டில் நன்னூலுக்கு நிரம்ப உரைகள் எழுதப்படவில்லை. எனினும் நன்னூல் கோட்பாடுகள் பற்றி நிகழ்ந்த ஆய்வுகள் மிகுதி. இந் நூற்றாண்டில் மட்டும் நன்னூல் ஏறத்தாழ நூற்றுக்கு மேல் மறு பதிப்புகளாக வெளியிடப் பெற்றிருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நன்னூலே தனிப்பெரும் நூலாகத் தலைமை வாழ்வு நடத்தியது. இத் தலைமை இந்நூற்றாண்டில் தொல்காப்பியத்திற்கு வந்து சேர்ந்தது. அன்றியும், தொல்காப்பியரின் தெளிவான விளக்கங்களைப் பவணந்தியார் கூறாது விட்டுவிட்டார் என்ற கோட்பாடும் இந் நூற்றாண்டில் பவணந்தியாருக்கு எதிர் முகமாகத் தோன்றி விட்டது.

மூன்றும் பகுதி

நன்னூல் உரை வேறுபாடுகள்

27

பாயிர உரை வேறுபாடுகள்

கருத்து வேறுபாடுகள் : நூல் காலங் கடந்து பார்க்கப்படுவ தாலும், நூலை நோக்கும் இலக்கியப் பார்வை எல்லார்க்கும் ஒத்த இயல்பினதாய் இருத்தல் வேண்டும் என்ற வரையறை இல்லாமை யாலும், பரந்த நூலறிவும், அறிந்த பிறமொழியறிவும், ஒருவர் எழுதும் நூலைத் தாக்குவது இயற்கை என்பதாலும், இலக்கியம் ஒரு பொருள் உடையதன்று, பல பொருள் உடையது (Connotative) ஆதலானும், சொல்வன சொல்வதைக் காட்டிலும் புதியன சொல்ல வேண்டும் என்ற அவாவினாலும் கருத்து வேறுபாடுகள் தோற்றம் எடுக்கின்றன. இலக்கியம் அல்லது இலக்கணம், உரைகாரர் களால் தொட்டனைத்தூறும் மணற்கேணி யாக்கப்பட்டிருப்பது, நமக்கு மூலம் என்ற ஒரு செல்வத்தை மட்டும் அன்றி உரை என்ற புதுச் செல்வத்தையும் வாரி வழங்கியுள்ளது. பல வேறு அறிஞர்கள், பல வேறு காலத்தில் மூலத்திற்கு உரையியற்றும் போது, அவரவரது புலமைக்கும், பார்வைக்கும் தக, கருத்து வேறு பாடுகள் எழுக்கின்றன. முன்பு எழுதப்பட்ட கருத்துக்கு, உரை கோளுக்கு எதிர் கருத்துரை எழும்போது, முன்னதன் உரைக்கு மறுபடியும் மறுப்புரையும் எழுகின்றது. இவ்வாறு ஒரு நூற்பாவோ நூற்பாவில் ஒரு சொல்லோ, தொடரோ கூட பல உரைகளைப் பெற்றிருப்பதைக் காணலாம். இவை உரையாசிரியர்களின் கொள்கைகளைத் துலக்குவன. இவை இலக்கண கூறுகளைப் பற்றிய விளக்கத்தை உடையன.

உரையாசிரியர்கள், பொருள் காணும்போது, புது விளக்கங்கள் தருவதோடு மட்டுமன்றி, மற்றைய உரையாசிரியர்களை மறுத்தும் மொழிகின்றனர். எதிரான இரண்டு மோதும்போது புதிய ஒளி பிறத்தல் இலக்கிய அளவினும் தருக்க அளவினும் உண்மை யானது. இத்தகு கருத்து மோதல்களில் அவரவர் பின்பற்றும் வழி முறைகள் வேறு வேறுனதாகலாம். சிலர் மாற்றுரைத் தூசனைக்

கருதி மறுக்கலாம். சிலர் மாற்றுரை மதித்து மறுக்கலாம். சிலர் மறுப்பதை கருத்தை அன்று; மாற்றுரைத்தான் எனப் பொருள் தாண்டிப் போய் விடலாம். சிலர் கருத்தை மட்டுமே மறுக்கலாம். சிலர் எதனையும் சுட்டி மறுக்காது புதிது ஒன்று கூறுவதன் மூலமே மறுக்கலாம். நன்னூல் உரையாசிரியர்கள் மேற்கண்ட ஐந்து வகைகளிலும் தம் மறுப்பு நெறியைப் பின்பற்றி இருக்கிறார்கள். தம் மறுப்புக்குத் தக்க, இலக்கிய மேற்கோள்களையும் அவர் கால உலக வழக்காறுகளையும், தொல்காப்பியம் முதலான பழைய இலக்கண நூற்பாக்களையும் வடமொழி இலக்கண நெறிகளையும் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளனர். நன்னூலைப் பொறுத்தவரை, உரையாசிரியர்கள் மறுப்புரைக்கும் இடங்கள் இரு திறத்தன; ஒன்று: முன்னைய தொல்காப்பிய உரையாசிரியர்களை, பிற இலக்கணவாணரை, பிற இலக்கண உரையாசிரியர்களை மறுப்பது. பிறிதொன்று: நன்னூலுக்கு எழுதப்பட்ட பிற உரைகளை மறுப்பது. இவற்றுள் இரண்டாவதான நன்னூல் உரை காணுவதில் உண்டாய கருத்து வேறுபாடுகளே ஈண்டு ஆராயப்படுகின்றன. சில இடங்களில் மறுப்புக்கு உள்ளாகும் நன்னூல் உரைகள், தொல்காப்பியம் முதலான பழைய இலக்கண உரைகளோடு ஒத்திருப்பதுண்டு. அவ்வாறு ஒத்திருக்கும் இடங்கள் மட்டும் ஆங்காங்கே சேர்த்துச் சுட்டப்படுகின்றன. தேவையான இடங்களில் மட்டும் இன்றைய மொழியியலார் கருத்துகளும் காட்டப்படுகின்றன.

ஆய்வு முறை : நன்னூலுக்குள் உரைகாரர் கருத்து வேறுபடும் இடங்கள் ஏறத்தாழ எழுபது இருக்கின்றன. இவையனைத்தும் பாயிரந் தொடங்கி, நூற்பா வரிசையில் ஈண்டு ஆராயப்படுகின்றன. அவை, (அ) வேறுபாட்டுக்கு உள்ளாகும் கருத்து, (ஆ) அக் கருத்துத் தொடர்பான ஆய்வு, (இ) முடிப்பு என்ற வரிசையில் ஆய்வு செய்யப்படுகின்றன.

பாயிர உரை வேறுபாடுகள் : நன்னூலுக்கு இருபத்திரண்டு அடிகளில் ஒரு சிறப்புப் பாயிரம் இருக்கிறது. இப் பாயிரம் 'மலர்தலை உலகின்...' எனத் தொடங்கி, 'இருந்தவத் தோனே' என்று முடிகிறது. இப்பாயிரத்தை யார் இயற்றினர் என்பது திட்டமாகக் கூறுவதற்கில்லை. இப்பாயிரம், பவணந்தியாரை அடுத்து வாழ்ந்த ஒரு சைன முனிவரால் செய்யப்பட்டிருக்கலாம். இக்கருத்தை சாமுவேல் பிள்ளை தம் முகப்புரையில் குறிப்பிட்டிருக்கிறார்.[1] சிலர் இப்பாயிரம் மயிலையால் இயற்றப்பட்டிருக்கலாம்

1. தொல்காப்பிய நன்னூல், 1858, ப. 8

என்றும் கூறுவர்.[1] அவ்வாறு கருதுதற்குக் காரணம், மயிலேயே முதல் நன்னூல் உரைபாசிரியர் என்று கொண்டதே. மயிலேக்கு முன்பே நன்னூலுக்கு உரை இருந்திருக்கிறது என்பது அவர் உரையாலேயே உறுதிப்படும் உண்மை. இவ்வுண்மை மயிலே. உரையாராய்ச்சியில் நிறுவப்பட்டிருக்கிறது. ஆதலின், நன்னூல் சிறப்புப் பாயிரத்தை மயிலேநாதருக்கு முன்பு வாழ்ந்த ஒரு சைன முனிவர் செய்தார் என்று கோடாலே நேரிது. நன்னூல் பாயிரம் செய்திச் செறிவும் கருத்துத் தெளிவும் வாய்ந்தது. தொல்காப்பியம் பனம்பாரனுர் பாயிரத்திற்கு நிகரானது இப்பாயிரம். இப்பாயிரம் இன்றேல் பவணந்தியின் வரலாறு அறியப்பட்டிருக்க முடியாது. ஆதலின் இப்பாயிரம், பவணந்தி வாழ்வின் வரலாற்றுச் 'சாசனம்' ஆகும். இதற்கு எழுதப்பட்ட உரை விளக்கங்களுள் சிலவற்றில் நன்னூல் உரைகாரர்கள் தம்முள் வேறுப்பட்டுள்ளனர். அவை முதலில் ஆராயப் பெற்றுத் தொடர்ந்து, பாயிரப் பகுதியில் உள்ள உரை வேறுபாடுகளும் இப் பகுதியில் ஆராயப்பெறும்.

யாப்பு (சிறப்புப் பாயிரம், 4)[2]: சிறப்புப் பாயிர இலக்கணங்கள் பதினென்றனுள் 'யாப்பு' என்பதும் ஒன்று. இவ்வியாப்பிற்கு, இறையனுரகப் பொருளின் உரைகாரர், மயிலே., சங்., கவிராயர், அரசஞ் சண்முகனர் ஆகியோர், 'தொகை, வகை, விரி' எனப் பொருள் உரைத்துப் போந்தனர்.[3] முனிவர், 'யாப்பு, தொடர்ச்சி, இயைபு என்பன ஒரு பொருள் கிளவி' என்று காட்டி, 'இன்னது கேட்ட பின் இது கேட்கற் பாற்று என்னும் இயைபு' எனப் பொருள் உரைப்பார். இதற்குத் துணையாக வடநூலார், 'ஆனந்தரியம்' என்ற சிறப்புப் பாயிர இலக்கணத்தை நீக்கிச் 'சம்பந்தம்' என்ற இலக்கணத்தைக் கூட்டி உரைப்பதையும் எடுத்துக் காட்டுவர். வடமொழியிலும் வல்லவராகிய விசாகப் பெருமாளையர், முனிவரை ஒட்டி, 'நிகண்டு கற்று இலக்கிய ஆராய்ச்சி செய்த பின்பு இந்நூல் கேட்கத் தகும் என்னும் இயைபு' எனப் பொருள் கூறுவர்.

முனிவர் கூறிய பொருள் அத்துணைப் பொருத்தமின்று என்று தெரிகிறது. முனிவர் குறிப்பிடும் இயைபு, சிறப்புப் பாயிரத்து

---

1. அறவாணன், க.ப. இலக்கணப் பாயிரங்கள்-ஒரு மதிப்பீடு, சுப்பையா பிள்ளை பவள விழா மலர், ப. 152.
2. கருத்து வேறுபாட்டுக்குரிய தலைப்பும், அத் தலைப்பை ஒட்டியுள்ள பிறைக் குறிக்குள் உள்ள எண்ணும் நன்னூல் நூற்பா சொல்லியும் அல்லது தொடரையும் எண்ணையும் குறிப்பன. நூற்பா எண்கள் தண்டபாணி தேசிகர் பதிப்பை (1971)ப் பின்பற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன.
3. இறையனுர் அகப்பொருள் உரை 1, நன் 47, அரசன் சண்முகனர் பாயிர விருத்தி, தஞ்சை, 1905, ப. 240

இலக்கணம் அன்று, பொதுப்பாயிர இலக்கணம். ஆதலின் அவ்வியைபு, 'நூல்பயில் இயல்பே நுவலின்' என்ற பொதுப் பாயிரம் பற்றிப நூற்பாவில் 'வழக்கறிதல்' என்பதில் குறிக்கப்பெறுகிறது.[1] முன்பே பொதுப் பாயிரத்தில் கூறிய ஒன்றைப் பின்பும் சிறப்புப் பாயிரத்தில் கூற வேண்டுவதில்லை. நூல் யாப்பு இன்னதெனத் தெளிவாக ஐம்பதாம் நூற்பாவில் பவணந்தியார் விளக்குவர். 'தொகுத்தல் விரித்தல் தொகை விரி மொழிபெயர்ப்பெனத் தகு நூல் யாப்பு ஈரிரெண்டென்ப' என்ற அந்நூற்பாவில், 'யாப்பு' என்பது தொகுத்தல் முதலியனவற்றைக் குறிக்கும் என்று பவணந்தியாரே கூறுகிறார். பாடல் சொல்லுதலின் வரலாற்றில், 'கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொளக் கோட்டமில்மனத்தினுல் கொடுத்த லென்ப' என்று பவணந்தியாரே குறித்திருக்கும் இடத்திலும்[2] முனிவர் கூறும் இயைபை அடக்கிக் கொள்ளமுடியும். தமிழிலக்கண மரபுகள் ஒவ்வொன்றையும் 'சம்பந்தம்' முதலான வடமொழி மரபோடு இணைத்துப் பார்க்க வேண்டிய இன்றியமையாமை இல்லை. இக் காரணங்களால், யாப்பு என்பதற்கு, நூலைத் தொகுத்து முடிப்பதும், தொகுத்து விரித்து முடிப்பதும், மொழி பெயர்த்து முடிப்பதுமாகிய நூற் கட்டு[3] என்று பொருள் கோடலே பொருத்தம். இப்பொருளே தமிழிலக்கண மரபிற்கும் பழைய உரையாசிரியர்களின் பொருள்கோள் மரபிற்கும் பொருந்துகிறது.

கேட்போர் : (சிறப்புப் பாயிரம் 47): பதினெரு சிறப்புப் பாயிர இலக்கணங்களுள் ஏழாம் இலக்கணம் 'கேட்போர்' என்பதாம். இச்சொல்லுக்கு, 'அரங்கேற்றுழிக் கேட்போரைக் கேட்போர்' எனப் பொருள் உரைத்தனர் இறையனார் அகப்பொருளுரைகாரர், இளம்பூரணர், மயிலை. நச்சினார்க்கினியர், இலக்கண விளக்க உரைகாரர் ஆகியோர்.[4] கவிராயர், 'சீயகங்கன் தருகென மொழிந்தனன் எனவே அவனே கேட்போன்' எனப் பொருளுரைத்தனர். சங். இக்கருத்தினரே. "நூலைக் கேட்டு அதன்கண் குற்றமின்மை ஆராய்வோர்" என்றனர் அரசஞ் சண்முகனார்[5]. இவையெல்லாம் ஒத்த, உறவுடைய பொருள்கோள்களே. முனிவர், இச்சொற்குப் புதுப்பொருள் காட்டுவர். "இன்ன நூல் கேட்டுச் செய்யுள்

1. நன்னூல், 41
2. நன்னூல், 36
3. இராமனுசக் கவிராயர் விருத்தி, 1847, ப. 4
4. இறையனார் அகப்பொருளுரை I. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தொல். பாயிர உரை, இலக்கண விளக்கம் சிறப்புப் பாயிர உரை
5. அரசஞ் சண்முகனார் பாயிர விருத்தி, ப. 7

ஆராய்ச்சி உடையாரே இன்ன நூல் கேட்டற்குரியர்" என்பது முனிவருரை. இவ்வாறு தான் கொள்ளுதற்குக் காரணங்களையும் அவர் காட்டுவர். கேட்போரென எதிர்காலத்தாற் கூறியது, காலத்திலும் களத்திலும் அடங்குவதால் வேறு கூற வேண்டாமை, நூல் வழங்கும் காலத்து நிகழவ தன்ருகலின் ஒருங்கு வைத்தெண்ணல் பொருந்தாமை ஆகியன அவர் காட்டும் காரணங்கள். முனிவர் உரைகோளும் காரணங்களும் ஆய்விற்குரியவை. முனிவரின் கருத்தின்படி கேட்போர் என்பது கற்போராகிய பாடம் கேட்போர் மாணாக்கர்-எனப் பொருளாகிறது. பவணந்தியார் கற்கும் மாணாக்கர் இயல்பைக் 'கொள்வோன் தன்மை' எனவும், 'கோடல் மரபு' எனவும், 'கொள்வோன் கொள்கை' எனவும் குறித்தனர். கற்போனைக் கொள்வோன் என்றும் கற்றலைக் கோடல் என்றும் கூறினரே[1] அன்றிக் கேட்போன் என்றும், கேட்டல் என்றும் யாண்டும் கூறவில்லை. மற்றும் கேட்டல் கற்றலெனப்படாது. பாடங் கேட்டல் கற்றலின் ஒரு பகுதியே. கற்றலுட் கேட்டல் அடங்கும், கேட்டலுள் கற்றல் அடங்காது. கேட்டல்—கற்றலின் ஒரு பகுதி எனினும் அதுவே முற்றக் கற்றல் எனும் பொருள் தாராது. அது கல்லாதார்க்கும் உரியது என்பது 'கற்றிலனாயினும் கேட்க' என்ற குறளாலும்[2] துலக்கமுறும். கேட்டலைப்பற்றி நன்னூல் 42, 43 நூற்பாக்கள் பேசினும் அவை கற்றலின் பொது வியல்பைப் பேசாமல் அதனது ஒரு கூருகிய கேட்டலின் இயல்பையே பேசுகின்றன. நூற்பெயர் இது, நூல் நுதலிய பொருள் இது. நூற்பயன் இது, முதனூல் இது, எல்லை இது, நூல் செய்தான் பெயர் இது என நூல் தொடர்பான பெயர்களைக் கூறும் வரலாறு பாயிரம். ஆதலின் நூல் கேட்டார் பெயர் இது என்று கூறலே பொருத்தம். நூலைக் கேட்கும் மாணாக்கர் தன்மை, கோடன் மரபு முன்பே பொதுப்பாயிரத்திற் கூறப் பட்டன.[3] மீண்டும் ஈண்டுக்கூற வேண்டுவதில்லை. கேட்டாரைக் கேட்போர் என எதிர்காலத்திற் கூறியது பொருந்தாது எனில், பொருந்தும். இறந்தகால நிகழ்ச்சிகளை அடுக்கடுக்காய் ஒன்றன் பின் ஒன்றுகச்சுட்டும்போது, முன்னிகழ்ச்சியை இறப்பிலும் பின்வருவனவற்றை எதிர்விலும் சொல்லுதல் பண்டைய மரபு. அ) திருக்குறள் 950இல் 'உற்றவன்' என இறப்பிற் கூறி, பின் 'தீர்ப்பான்', 'செல்வான்' என எதிர்காலத்திற் கூறியுள்ளமை காண்க. இறையனர் களவியலில் 'திணையே கைகோள்

1. நன்னூல், 36, 40, 44
2. குறள் 414
3. நன்னூல் 37-40

கூற்றே கேட்போர்' என வருதல் காண்க.[1] தொல்காப்பியத்தில் 'திணையே, கைகோள், கூற்றுவகை, எனஅக் கேட்போர் கண்ணே காலவகை எனஅ' என வருதல் காண்க.[2] ஆக்கியோன் பெயர் நுதலிய பொருள் என்றுற் போல இறந்த காலத்தாற் கூறாமல் கேட்போர் என எதிர்காலத்திற் கூறியதே அவைக்களத்துக் கேட்டோரை உணர்த்தாமல் பாடம் கேட்போரை உணர்த்திற்றென முனிவர் உரைத்த உரை அத்துணைப் பொருத்தமுடையது அன்று. முதலில் நடத்தலின் ஆக்கியோன் பெயர், நுதலிய பொருள் என இறந்த காலத்தாற் கூறலும் பின்னர் நிகழ்தலின் கேட்போர் என எதிர்காலத்தாற் கூறலும் முறையே என்பதுவும், கேட்போர் என்பது நூல் கற்கும் மாணாக்கரை உணர்த்தாது என்பதுவுமே மிகப் பொருத்தமுடையன. இப்போக்கில் உரை கண்ட அரசஞ் சண்முகனார் விளக்கமே நேரிது.[3]

பயன் (சிறப்புப் பாயிரம் 47): சிறப்புப் பாயிர இலக்கணங்களுள், 'பயன்' எட்டாவது, தகுயாயது. இப்பயனுக்குச் சிறப்புப் பாயிர உரையில் பொருள் உரைத்த மயிலை, "யாவரும் உணர-எல்லாரும் உணர்தல் பயனுக எனப்பயன் போந்தது" எனக் குறித்தனர். "பொருளோந்தையும் அறிந்து சொல்லுதலின் முட்டுப்பாட்டை நீக்குதலாலே மொழித்திறத்தின் முட்டறுத்தல் என்னும் பிரயோசனம்" என்பது விசாகப் பெருமாளையர் உரை. இலக்கண விளக்க உரைகாரரும் இப்பொருளே கொண்டனர்.[4] இறையனார் களவியல் உரைகாரர் வீடுபேற்றைப் பயனுகக் கூறுவர்.[5] சங். உம். கவிராயரும்அறம் பொருள் இன்பம் வீடு அடைதலைப் பயன் எனக் கூறினர்.

தமிழகத்தில் சமயங்கள் தலைமை எய்திய காலத்தில், மாந்தன் உலகில் பிறந்த நோக்கமே வினைவிளைவுகளை அனுபவித்து விட்டு வீடு பெறுவதே என வற்புறுத்தப்பட்டது. இக்கருத்தில் வைதிக, அவைதிக சமயங்கள் பேரளவு கருத்திலும் செயலிலும் ஒன்று பட்டிருந்தன. மனிதப் பிறப்பே வீடு பேற்றிற்குத்தான் என்ற கருத்து நாளும் மேலும் வளர்ந்து, கால அடைவில், அவனுல் உருவாக்கப்பெறும் கலைப்படைப்புகளுக்கும் கற்பிக்கப்பட்டது. இக் கற்பிப்பு இலக்கியங்களையும் விடவில்லை. அதனுல் இலக்கியம் முதலிய நூல்கள் படைப்பது கூட வீடுபேற்றிற்குத்தான் என்ற

1. இறை. கள. 56
2. தொல். பொருளியல் 313
3. அரசஞ் சண்முகனார் பாயிர விருத்தி, ப. 238-246
4. இலக்கண விளக்கம் சிறப்புப் பாயிர உரை
5. இறை. கள உரை 1

கருத்து வளர்ந்து நிலைபெற்றது. இவ்வாறு நிலைபெற்ற சூழலில் தான் பவணந்தியார் நன்னூல் எழுதினர். இக்கருத்தையே அவர் 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே' எனக் குறித்தார். வீடுபேற்றுக் கொள்கையையும், அதற்குரிய பின்புலத் தையும் புரிந்து கொண்டால், பாயிர இலக்கணங்களுள் ஒன்றாய பயன் என்பதற்கு அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் என உரைகாரர் கண்ட விளக்கத்தின் முறைமை முழுமை புலப்படும். இவ்வாறு பொருள் கொள்ளலே தக்கது என்பதனை நூலின் வரலாறு பற்றிப் பேசும் நான்காம் நூற்பாவும் வற்புறுத்துகிறது. அந்நூற் பாவில், 'நாற்பொருள் பயனெடு எழுமதம் தழுவி வருவது நூலின் இயல்பு' என விளக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு நாற்பொருள் வற்புறுத்தப் பெறுதலை யாப்பருங்கலக் காரிகை உரையிலும், யாப் பருங்கல விருத்தி உரையிலும் காணலாம்.[1] ஆக 'பயன்' என்ற பாயிர இலக்கணத்திற்கு நூலைக் கூறுவோர்க்கும் கேட்போர்க்கும் பயன் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கும் எனப் பொருள் கோடலே பொருத்தம் என்பது பெறப்படுகிறது.

விருத்தி உரை (23): 'காண்டிகை உரைபோல, சூத்திரத்துள் பொருள் விளக்குதல் மாத்திரையின் நில்லாது, அவ்விடங்கட்கு இன்றியமையாத பொருள்கள் யாவையும் விளங்கத் தானுரைக்கும் உரையானும், ஆசிரிய வசனங்களானும், மேற்கூறிய காண்டிகை உறுப்பு ஐந்தினானும் ஐயந்தீரச் சுருங்காது மெய்மைப் பொருளை விரித்துரைப்பது விருத்தியுரையாம்' என உரைவரைந்த சங்., தொடர்ந்து, 'சூத்திரத்துட் பொருளன்றியும் என்றமையான் மேற் கூறிய (நூற்பா 21) பதினென்கு உறுப்புங் கொண்டது விருத்திஉரை என்பது பெற்றும்' என விசேட உரை எழுதுவர். பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள், தொகுத்துரை, உதாரணம், வினா விடை, விசேடம், விரிவு, அதிகாரம், துணிவு, பயன், ஆசிரிய வசனம் என்ற பதினென்கும் உடையது விருத்தி என்பது சங். கருத்து. கவிராயர் இக்கருத்திற்கு உடன் பட்டிலர். உடன்பாட்டின் மைக்கு அவர் காட்டும் காரணங்கள் கருதுதற்குரியவை. காண்டி கைக்குச் சிறப்பு விதி 22 ஆம் நூற்பாவில் கூறி விருத்திக்கு 23 ஆம் நூற்பாவில் சிறப்பு விதி சொல்ல வந்தவர் மாட்டெறிந்து அப் பதினென்கும் (21 ஆம் நூற்பாவில் கூறப்பட்ட 14) விருத்தியாகும் எனக் கூற வேண்டும். அங்ஙனம் கூறவில்லை. பதினென்கு என 21 ஆம் நூற்பாவில் சுட்டிக் காட்டியது உரையின் பொது விலக் கணத்தை அன்றி, 23 ஆம் நூற்பாக் கருத்தை அன்று. ஆதலால் கருத்து, பதப்பொருள், காட்டு, வினா, விடை என்ற ஐங்

1. யாப் பருங்கலக் காரிகை, பாயிர உரை, யாப் பருங்கல விருத்தி பாயிரம்

காண்டிகை உறுப்பின் மேற்பட்டு வருவன எல்லாம் விருத்தியுரை என்பதே 23 ஆம் நூற்பாவின் கருத்தென்பர். இவ்வாறு உரை கொள்வதற்கு, 23ஆம் நூற்பாவில் உள்ள 'யாவையும் விளங்க', 'எஞ்சா திசைப்பது' என்பன தடையாக இருப்பினும், கவிராயரின் உரைநலம் முற்றப் புறக்கணித்தற்குரிய தன்று.

ஆசிரியர் ஆகாதவர் இலக்கணம் (31): ஆசிரியர் ஆகத் தகாதாரின் இழிகுணங்களைப் பட்டியல் படுத்துகிறது 31ஆம் நூற்பா. இவ்விழி குணப் பட்டியலுக்கு மயிலை., சங்., முனிவர் ஆகியோர் விரிவான பொருள் காட்டவில்லை. பின்வந்த உரை காரர்கள் விரிவாக விளக்கினர். அவ்வாறு விளக்கும்போது 'அச்சமாடல்' என்பதனைக் கவிராயர் இரண்டாக பிரித்துக் கொண்டு அச்சம்-அஞ்சத் தகாதனவற்றிற்கு அஞ்சுதலும் அவைக்கு அஞ்சுதலும் எனவும், ஆடல்-அழுக்காறு முதலான வற்றைத் தமக்கு உரிமையாக ஆளுதல் எனவும் புதுப்பொருள் நல்கினர். அச்சமாடலை ஒரு தொடராகக் கொண்டு கேட்போர்க்கு அச்சம் உண்டாகப் பேசுதல் என விளக்கினர் விசாகப் பெருமாளையர். ஆறுமுக நாவலரும் இவ்வாறே விளக்கினர். இரு பொருளையும் ஏற்றுக் கொண்டு, நன்னூல் இலக்கணத்தில் கூடச் சிலேடை அணி துலங்குவதைக் கண்டு மகிழலாம்.

மடற்பனை (33): உடல் முழுவதும் கருக்கோடு கூடிய மட்டை பற்றியிருக்கும் பெண்பனை. அஃது முட்புதர் நடுவில், உடல் முழுதும் குத்தும் கருக்கோடு சேர்ந்த மட்டைகளால் சூழப் பட்டிருக்கும். நன்கு காய்த்துப் பயன்படுதற்கு எளிதாய் இருப்ப தில்லை. இம்மடற்பனைபோல, மாணாக்கர் விரும்பிப் பாடங் கேட்கும் இடத்தில் இல்லாமையும், முரண்பட்ட நிலைப்பையும் உடையார் ஆசிரியர் ஆகார். "இங்கே சொல்லாமைக் கேது வாகிய இடத்திருப்பது, பாடஞ் சொல்ல வீற்றிருக்கும் ஆசனத்தை விட்டுப் போய், அந்தப்புரம் முதலிய இடங்களில் இருப்பது" என்றும், மடல்—பனையேடு; அது ஆகுபெயராய் மட்டைக்கு ஆயிற்று என்றும் விளக்குவர் கவிராயர். அரசஞ் சண்முகனார், மடற்பனை என்பதற்கு ஆண்பனை எனப் பொருள் கொள்ளுவர்.[1]

மடல் என்பது பாளையைத்தான் உணர்த்தும்; மட்டைக்குப் பெயராகாது என்பது அவர் முடிபு. அகப் பொருட்கண், மடல்மா ஏறுதல் என்பது பாளையாற் செய்த மாவில் ஏறுதல் என்பது பொருளும், மரபும் ஆகாமை தெளிவு.[2] ஆதலால், மடல் என்ப

1. அரசஞ் சண்முகனார் பாயிர விருத்தி, ப. 9
2. தண்டபாணி தேசிகர் பதிப்பு, அடிக்குறிப்பு, ப. 88

தற்கு மட்டை எனப் பொருள் கோடலே முறைமை. அன்றியும், மடற்பனையிடம் தானே தரத்தகும் பொருள் ஒன்று இருக்கிறது என்ற கருத்தில் 'தானே தரக் கொளின்' என்று நூற்பா பேசுகிறது. பெண்பனை ஒன்றிடமே தானுகத் தரக்கூடிய பனங்காயோ, பனம்பழமோ உண்டு. ஆண்பனையிடம் தரத்தக்க பொருள் எதுவும் இல்லாமை கருதுக. ஈண்டு பனங்காய் என்ற உவமைக்கு பொருள் ஆசிரியரின் 'அறிவு'. கல்வி அறிவு இருக்கிறது; அதனைப் பலரும் பயன்படுத்திக் கொள்ள அவர் இருக்கும் இடமும், சூழலும் தடுத்து நிற்கின்றன. இத்தகு ஆகா ஆசிரியர்க்கு, காய்த்தும் முட்புதர் நடுவில், உடல்முழுதும் முள் செறிந்த மடல் விரிந்த மட்டையால் சூழப் பெற்ற பெண்பனையை ஒப்புக் காட்டலே பொருத்தம்.

28

எழுத்ததிகார உரை வேறுபாடுகள்

அதிகாரம் (55): முன்னோர் மொழிகளைப் பொன்னே போற் போற்றுவதில் நன்மைகளும் உள்ளன; தீமைகளும் உள்ளன. பவணந்தியார் முன்னோர் மொழிகளை அடிக்கடி எடுத்தாளுவ தில்லை. மிகச் சிறு பான்மையாகவே எடுத்து மொழிவர். தொல் காப்பியத்தினின்று எட்டு நூற்பாக்களைத் தானெடுத்து மொழி தலாகக் கூறியுள்ளார். அவர் நூற்பாக்களைச் சிறுபான்மை மேற் கொள்வதும் அன்றி, பண்டைய இலக்கணச் சொற்களைப் போற்றிக் கொள்ளுதலும் உண்டு. தொல். கையாண்ட 'இயல்' என்ற பெயரையும், அதிகாரம் என்ற பெயரையும் மேற்கொண் டுள்ளார். இவற்றுள், 'அதிகாரம் என்ற பெயரின் பொருள் பொருத்தம் பற்றி உரையாசிரியர்களிடை கருத்து வேறுபாடு உள்ளது. "அதிகாரம் என்றது முறைமை" என்று விளக்கினர் மயிலையும், கவிராயரும். "எழுத்திலக்கணம் உணர்த்தினமையின் எழுத்ததிகாரம் என்னும் பெயர்த்து. எழுதப்படுதலின் எழுத்து" என்பது அவர்கள் தந்த விளக்கம். முனிவர், அதிகாரம் என்பதற்குப் புதியதொரு விளக்கம் கொடுப்பர். அவ் விளக்கம் சமற்கிருத நெறியைத் தழுவியது. "அதிகாரம்—அதிகரித்தல். அஃது இருவகைப்படும். ஒரு சொல் நின்றுழி நின்று பல சூத்திரங்களும் பல ஓத்துக்களும் தன் பொருளே நுதலி வரச் செய்வது. இஃது 'யதோத்தேச பக்கம்' எனப்படும். ஓரிடத்து நின்ற சொல் பல சூத்திரங்களோடும் சென்றியைந்து தன் பொருளைப் பயப்பிப்பது. இஃது 'காரிய காலப் பக்கம்'. அவற்றுள் ஈண்டு அதிகாரம் என்றது முன்னையது. அதனை உடையது எனவே, எழுத்தை நுதலி வரும் பல ஓத்தினது தொகுதி எழுத்ததி காரம் என்றவாறாயிற்று" என்பது அவர் தரும் விளக்கம். அதிகாரப் பெயர்களைப் பொறுத்த அளவில், பவணந்தியார், தொல்காப்பியரைப் பின்பற்றியிருக்கிறார். முனிவர் விளக்கம்

கொள்வதற்குரியது எனில் இருவரும் சமற்கிருதத்தைப் பார்த்துத் தலைப்பிட்டனர் என்று ஆகும். அவ்வாறு கூறுதல் பொருந்தாது. முனிவர் கூறுவது, தொல்காப்பியர்க்கு முன் சமற்கிருதத்தில் இருந்ததற்கான சான்றில்லை. ஆதலின் 'முறைமை' என்ற பொருளில் தமிழில் தலைப்பிட்டார் என்று கோடலே பொருத்தம். எனினும், முனிவர் கருத்தை, வடமொழி சார்ந்த விளக்கம் என்ற அளவில் கொள்ளலாம்.

சார்பெழுத்து (60): எழுத்து, முதல் எழுத்து சார்பெழுத்து என்ற இருவகை என்பதை முதன் முதலாகத் தெளிவாகக் கூறியவர் பவணந்தியார். 'எழுத்து, அது முதல், சார்பு என இரு வகைத்தே,' என்பது நன்னூல் 5ஆம் நூற்பாவின் கருத்து. தொல். முதல் நூற்பாவிலுள்ள, "சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே" என்ற சொற்றொடரைக் கொண்டுதான், அங்கும் முதல், சார்பு பிரிவுகளாக் கூறுகிறோம். நேமிநாதமும் வீரசோழியமும் கூட முதல், சார்புபெழுத்துகளைப் பற்றி வெளிப்படையாகக் கூறவில்லை. சார்பெழுத்து என்பதற்குத் தொல். கொண்ட பொருள் நுட்பமானது, திட்பமானது. நன்னூலாரின் சார் பெழுத்துப் பட்டியலில், தொல். கண்ட நுட்பநோக்கு இல்லை. தொல்காப்பியர்க்கும் நன்னூலார்க்கும் இடையே அமைந்த இவ் வேறுபாட்டை நுனித்தறிந்து கண்ட முனிவர், "ஆசிரியர் தொல் காப்பியர், செய்கை ஒன்றனையும் நோக்கிச் சார்பெழுத்து மூன்று எனக் கருவி செய்தாராகலின், இவ்வாசிரியர், செய்கையும் செய்யுளியலும் நோக்கிச் சார்பெழுத்துப் பத்து எனக் கருவி செய்தார் என்பதும் உய்த்துணர்க" என்கிறார். நன்னூலார் சார்பெழுத்தை விரித்த முறை சரியன்று என்ற கருத்துடையவர் முனிவர். ஐகாரக் குறுக்கம் முதலாயின சார்பெழுத்துகள் குறுகிய காரணத்தால் பிறிதோர் எழுத்து வகையாகக் கருதற் கிடமன்று. ஏனெனில் பெருமரம் சிறுத்தாலும், சிறுமரம் பெருத் தாலும் வேறொரு மரமாகாது என்பர் முனிவர்.[1] சார்பெழுத் திற்குப் பெயர்க் காரணம் கூறும்போது, பிறரிடமிருந்து வேறு பட்டு விளக்கந் தருவர் முனிவர். மயிலை. 'தம்மொடு தாம் சார்ந்தும், இடம் சார்ந்தும், இடமும் பற்றுக்கோடும் சார்ந்தும் விகாரத்தால் வருதலின் சார்பெழுத்தாயின' என்பர். சங். 'முதலெழுத்திடையே சார்ந்து வருதலானும் ஏனைய தத்தம் முதலெழுத்தின் திரிபு விகாரத்தால் பிறத்தலானும் சார்பெழுத் தாயின' என்பர். முனிவர், 'அவ்வாறன்றி உயிர்மெய் ஒழிந்தன,

1. தொல்காப்பிய சூத்திர விருத்தி, ப. 41

அகரம் முதலியன போல் தனித்தானும், ககரம் முதலியன போல் அகரமோடு சிவணியானும் இயங்கும் இயல்பின்றி, ஒரு மொழியைச் சார்ந்து வருதலே தமக்கு இலக்கணமாக உடைமையின் சார்பெழுத்தாயின' என்பர். தனக்கென்ற தனியியக்கம் இல்லாதது; ஏதேனும் ஒன்றைச் சார்ந்து வருவது என்ற முனிவரின் விளக்கம் மிகப் பொருந்துகிறது.

தற்கால மொழியியலார் சார்பெழுத்துகளைப் பொதுவாக மாற்றொலியன்களுள் அடக்குவர். ஏனையவற்றிற்குப் பொருந்தினும், உயிர்மெய், உயிரளபு, ஒற்றளபு, மகரக்குறுக்கம் ஆய்தத்திற்கு இனவெழுத்தின்மையின் பொருந்துமா என்பது ஆய்விற்குரியது. ஆய்தத்தை ல், ள், வ் ஆகியவற்றின் மாற்றொலியன்களாகக் கொள்வாருண்டு.[1] குற்றியலுகரம், குற்றியலிகரங்கள் குறிப்பிட்டதொரு சூழ்நிலையில் வருகின்றன. ஆதலால் அவற்றை வகையொலி (Conditional Variation) எனலாம். உடம்படுமெய் போன்று இகரம் தோன்றிய பின்னரே, குற்றியலிகரம் குறுகுவதால், வழுக்கொலி (Glide) என்றும் கூறலாம்.

சுட்டெழுத்து (66): தமிழில் அ, இ, உ என்பன சுட்டெழுத்துகள். இவை சொல்லின் அகத்தும் (அவன்), புறத்தும் (அக்காலம்) வரும். ஆனால் மயிலை. இவ்வாறு கொள்ளாது, புறச்சுட்டு மட்டுமே காட்டினர். இக் குறைபாட்டை உணர்ந்த சங். சுட்டு, மொழிக்கு அகத்தும் புறத்தும் வரும் என்று காட்டி, அவை அகச்சுட்டு, புறச்சுட்டு எனப் பெயர் பெறுவதைச் சுட்டி விளக்கினர். மயிலை. உரையை மனத்துள் கொண்டே, நன்னூலார் கருத்தை மறுத்து, அ, இ, உ இவை மொழி முதல் வரின் சுட்டே' என்று நூற்பா வகுத்து, அதற்குத் தக உரையும் கூறுவர் வைத்தியநாததேசிகர்[2]. நன்னூலாரின் நூற்பாப் போக்கை அறியாமல் மயிலை. உரையைக் கொண்டு, நன்னூலாரை மறுத்த வைத்தியநாத தேசிகரை, சுவாமிநாத தேசிகர் தன் நூலுரையில், மறுத்து மொழிகிறார்.[3] 'அ இ உ ம் முதல் தனிவரின் சுட்டே' என்ற நன்னூல் நூற்பாவிற்குச் சங். கொண்ட உரையே மிகப் பொருந்துவது.

வினா எழுத்து 'யா' (67): எ, யா என்பன மொழி முதலிலும், ஆ, ஓ என்பன மொழி இறுதியிலும், ஏகாரம் முதலிலும்,

---

1. சுபபு செட்டியார், டாக்டர் ந., 'தமிழ் ஒலியன்கள்', தமிழிலக்கணக் கொள்கைகள் கருத்தரங்கு, 2, மொழியியற் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1978, பிப்ரவரி.
2. இலக்கண விளக்க உரை, 6
3. இலக்கணக் கொத்துரை, 8

இறுதியிலுமாக வந்து வினுப் பொருளைத் தரும். இப் பகுதியோ உயிரெழுத்துப் பற்றிய அதிகாரம். இங்கு உயிர் மெய்யாகிய 'யா' இடம்பெற்றது எங்ஙனம் என்பது ஆய்விற்குரியது. இவ்வாறு உயிர் எழுத்துகளுடன் உயிர்மெய் எழுத்து மயங்கு மாறு கூறியது குற்றந்தான். மயங்கக் கூறல் எனும் குற்றம் என்றெழுதுகிறார் மயிலை. பிறகு அவரே அதற்கு அமைதியும் கூறுகிறார். "இது தொகை வகை விரிபடச் செய்கின்ற நூலாதலாலும், முதல் வினு எனும் பொருள் ஒற்றுமையாலும் குற்றமாகாது" என்பர். சங். மயிலைநாதரைப் போலக் குற்றம் ஒப்பி, அமைதி காணுதல், பவணந்தியார் 'யா' வினு எழுத்தை உடன் கூறியது குற்றம் அன்று; உத்தி முறை என்பது துலங்க, "ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்" என்னும் உத்தியான் யா வினுவையும் உடன் கூறினர் என அமைக்கிறார். விதியால் ஒற்றுமைப்பட்டவற்றை, ஒன்றைச் சொல்லுமிடத்து அதற்கு இனமாகிய மற்றொன்றையும் விரியாதிருக்க வேண்டி அதனுடனே கூட்டி முடித்தல் என்பது இவ்வுத்தியின் பொருள். உத்தியில் அடக்கிக் கொள்ள வாய்ப்பும் பொருத்தமும் இருக்கும்போது, மூலநூலைக் குற்றப்படுத்த வேண்டாவே. ஆதலின் 'ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்' என்ற உத்தியுள் அடக்கிக் கோடலே பொருத்தம்.

வகரப் பிறப்பு (85): "மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே' என்பது வகரப் பிறப்புப் பற்றிய நூற்பாவின் பொழிப்பு. இந் நூற்பாவிற்கு உரை வரைந்த மயிலை., சங். ஆகியோர், மேற்பல் லானது கீழிதழை உற வகரம் பிறக்கும் என உரை கண்டனர். கவிராயர் மேல்வாய்ப் பல்லை, கீழ்வாயுதடு பொருந்த வகரம் பிறக்கும் என்றனர். வை. மு. ச. வும், சே. கி.யும் இப்பொருளையே போற்றினர். மயிலையும் சங். உம் மேற்பல் –எழுவாய்; கீழிதழ் – செயப்படு பொருளாகக் கொண்டு பொருள் உரைத்தனர். கவிராயரோ, இதழை எழுவாயாகவும், மேற்பல்லைச் செயப்படு பொருளாகவும் கொண்டு பொருள் விரித்தனர். பின்னவர் கண்ட பொருளே மிகப் பொருத்தம். ஏனெனில் முக உறுப்புகளுள் மேற்பல் உள்ளிட்ட மேல்வாய் அசையா உறுப்பு; கீழிதழ் உள்ளிட்ட தாழ்வாய் அசையும் உறுப்பு; அசையும் உறுப்பாகிய கீழிதழ் இயங்கி, அசையா உறுப்பாகிய மேற்பல்லைப் பொருந்தியது எனப் பொருள் உரைப்பதே உடலியலுக்கும், தருக்க நெறிக்கும் பெரிதும் பொருத்தமாக இருக்கிறது.

இடைநிலை மெய்ம்மயக்கம் (110): மொழியிடையில் எழுத்துகள் தம்முள் மயங்குமாற்றைக் கூறும் இந்நூற்பா தம்முடன்

தாம் மயங்கும் மயக்கத்தை 'உடனிலை' என்றும், தம்முடன் பிற மெய் மயங்கும் மயக்கத்தை 'வேற்று நிலை' என்றும் வலியுறுத்துகிறது. நூற்பாவின் இறுதி, "உயிர்மெய் மயக்கு அளவின்றே" என முடிகிறது. இவ்வாறு முடியும் இத் தொடருக்குப் பொருள் உரைப்பதில் உரைகாரர் கூரிடையே வேறுபாடு இருக்கிறது. உயிர்மெய் மயக்கு அளவின்று என்பதற்கு உயிர்மெய் முன் உயிர்மெய் மயங்குதல் வரையறையின்று என்று பொருள் கூறுவர். மயிலை, நச்சினார்க் கினியர், இலக்கண விளக்க உரைகாரர் ஆகியோர் அவ்வாறு பொருள் காண்பர்.[1] அவ்வாறு பொருளுரைப்பது பொருந்தாது என்பது சங். கருத்து. கவிராயரும் இக்கருத்தினரே. மேலே உள்ள தொடருக்கு "உயிரும் தனிமெய்யும், உயிரும் உயிர் மெய்யும், உயிர்மெய்யும் தனி மெய்யும், உயிர்மெய்யும் உயிர்மெய்யும் மயங்குதல் வரையறை இன்றெனப் பொருள் கூறுவாரும் உள்ளனர். உயிர்மெய்யை ஈரெழுத்துக் கூட்டாகக் கொண்டே இவ்வதிகாரத்தில் நூற்பாக்களைப் பவணந்தியார் அமைத்திருக்கிறார். அவ்வாறு அமைத்தவர் ஒரெழுத்து என்ற கருத்துப்படும்படி உயிர்மெய்யம் உயிர்மெய்யும் கூடும் கூட்டத்தை ஈண்டுக் கருதி இரார் என்று கோடலே நேரிது. உயிரை அடுத்த மெய்யும் (அல், வில் போன்றன), மெய்யை அடுத்து உயிரும் (கா, பூ போன்றன) மயங்கும் மயக்கத்திற்கு அளவில்லை எனப் பொருள் கோடலே மிகப் பொருத்தமாகத் தெரிகிறது.

போலி (124): அகன்—அகம் என்ற மொழி இறுதிப் போலியையும், மையல் - மயல், அமச்சு—அமைச்சு என்ற மொழிமுதல் இடைப் போலியையும், ஐந்நூறு—ஐஞ்ஞூறு, யாத்த—ஞாத்த போன்ற மொழி இடை முதற் போலியையும் நன்னூலார் முறையே 122, 123, 124ஆம் நூற்பாக்களில் கூறினர். இப்போலி பற்றிய நூற்பாக்கள், இடைநிலை மெய்ம் மயக்கம் பற்றிய அதிகாரத்தை அடுத்துப் பேசப் பெற்றுள்ளமையால், மயிலை. பின்வந்த போலி பற்றிய செய்திகளையும் இடைநிலை மெய்ம்மயக்கத்தின் பாற்படுத்திப் பொருள் கூறினர். சங். இக் கருத்தை மறுத்தனர். கவிராயரும் இவர் கருத்தைப் போற்றினர். (அ) மொழி முதல், இடை, கடைப் போலிகள் அனைத்தையும் இடைநிலை மெய்ம்மயக்கத்தின் பாற் படுத்தல் பொருத்தமாயில்லை. இடைப் போலிகள் தவிர்ந்த ஏனைய இரண்டும், இடைநிலைமெய்ம் மயக்கத்துள் அடங்கா. (ஆ) போலி என்பது ஒரெழுத்து இருந்த இடத்தில் பிறிதோர்

1. தொல். நூன் மரபு 22; இலக்கண விளக்க வுரை 31

எழுத்து இருப்பது—இருப்பினும் பொருள் மாறுதது. இடைநிலை மெய்ம்மயக்கமோ, அடுத்தடுத்து நிற்கும் இரண்டு மெய்கள் தம் முள் மயங்கியும் மயங்காதும் இருப்பது. இவ்விரண்டும் ஒத்த இலக்கணத்தன அல்லவாதலின் ஓர் அதிகாரத்தன என்பது பொருத்தமற்றதாகிறது. (இ) இடைநிலை மெய்ம்மயக்க நூற்பாக்கள் முடிந்தவுடன், போலி பற்றிய நூற்பாக்கள் தொடங்குதற்கு முன்பே, இடைநிலை பற்றிய புறனடை நூற்பாவை (120)ப் பவணந்தியார் அமைத்துளார். ஆதலின் இரண்டும், இருவேறு அதிகாரங்களைச் சேர்ந்தன என்பதே நூலாசிரியர் கருத்து என்பது தெளிவாகிறது. (ஈ) 'உறழா நடப்பன' (122) என்றும், 'ஒக்கும்' (123), 'உறழும்' (124) என்றும் உவம உருபு கொடுத்து இம்மூன்று சூத்திரத்துக் கூறுதலாலும், யாண்டும் இடைநிலை மெய்ம் மயக்கத்தோடு மாட்டேற்றிக் கூறுமையாலும் மயிலை. கூறியதில் பொருத்தமின்மை புலனாகிறது. இந் நான்கு காரணங்களால், இடைநிலை மெய்ம் மயக்கம் வேறு; போலி வேறு என வேறு பிரித்துக் கோடலே தக்கது எனத் தோற்றுகிறது.

எழுத்துப் போலி (125): ஒலியன் மாறினாலும், சொல்லின் பொருள் மாறு வழக்காறுகளை வகையொலி (Free Variation) என்பர் மொழியியலார். எழுத்துப் போலி என்பர் மரபிலக்கணி யார். ஒன்று போல, மற்றொன்று இருக்குமாயின் அதனைப் போலி எனல் உலக வழக்கு. மொழியிலும், சில சொற்களில், குறிப்பிட்ட ஓர் எழுத்திற்கு ஈடாக, பிறிதோர் எழுத்து வந்தும் சொற்களின் பொருள் மாறுவது இல்லை. அவ்வாறு வழங்கும் எழுத்து போலியைத் தொல். தம் நூலுள் விளக்குகிறார். பவணந்தியாரும் தன்னூலில் விளக்குகிறார்.

> "அம்முன் இகரம் யகரம் என்றிவை
> எய்தின் ஐயொத் திசைக்கும் அவ்வோடு
> உவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன"

என்பது அவர் நூற்பா. இந்நூற்பாவிற்கு உரை காண்பதில் கருத்து வேறுபாடு எழுந்திருக்கிறது. இவ் வேறுபாடு தமிழ் இலக்கண வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அ + இ > ஐ; அ + ய் > ஐ
அ + உ > ஔ; அ + வ் > ஔ

இவ்வாறு நச்சினார்க்கினியர், சங்., மயிலை. இலக்கண விளக்க நூலார் ஆகியோர் எழுத்துப்போலி எனக்கொண்டு உரைகண்டு

விளக்கினர்.[1] இதனை வேற்றுமொழிப் பயிற்சி இன்றி, தமிழ்நூற் பயிற்சி ஒன்றுமே யுடையார் விளக்கிய பொருள் என்று இடித்துக் காட்டுகிறார் முனிவர். அன்றியும் இந்நூற்பா எழுத்துப் போலியை உணர்த்தவில்லை என்றும், சந்தியக்கரத்தையே உணர்த்துகிறது என்றும் விளக்குகிறார். வடநூலோடு ஒத்து உரை காண்டலே நெறி என்றும் சுட்டுகிறார். அ + இ + ய் > ஐ, அ + உ + வ் > ஔ என அவர் காட்டுவர். மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியால், அ + இ > எ, எனவும், அ + உ > ஒ எனவும் ஓவிக்கும் எனக் குறிப்பர். இவ்விளக்கமனைத்தும் வட மொழியைச் சார்ந்த விளக்கம் என்பது வெள்ளிடை.

எழுத்துச் சான்றுகளுள் கிடைத்தவற்றுள் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களே மிகத் தொன்மையானவை. அக் கல்வெட்டுகளுள் ஐகாரம் ஆளப்பட்டுள்ளது. ஔகாரம் ஆளப்படவில்லை. எனினும், பழந்தமிழ் நூல்களில் ஔகாரம் காணப்படுகிறது. தொல். ஐ, ஔ என்ற இரண்டினையும் சேர்த்து உயிர் பன்னிரண்டு என்றும், அவை சார்ந்து வாரா மரபின என்றும் கூறுவர். இதினிருந்து அவற்றைத் தொல். ஒலியன்களாக (Phonemes) கொண்டார் எனக் கருத முடிகிறது. ஆயினும் அவை ஈருயிர்களின் கூட்டாக வரும் என்பதனையும், உயிர் மெய்யெழுத்துகளின் கூட்டாக வரும் என்பதனையும் காட்டத் தவறவில்லை[2].

இளம்பூரணர். நச்சினார்க்கினியர் காலங்களிலேயே ஐகாரத்தினை 'அஇ' என்று எழுதும் வழக்கம் இருந்திருத்தல் வேண்டும். அவ் வழக்கு இவ்விருவர்க்கும் உடன்பாடன்று என்பது அவர் தம் குறிப்பால் தெரியவருகிறது. 'ஐயர் - அஇயர்' எனவரும்; அது கொள்ளற்க' என இரண்டு உரையாசிரியர்களும் எழுதுகின்றனர்.[3] ஐகாரத்தை 'அஇ' என்ற வரிவடிவில் எழுதும் வழக்கம் கேரளத்தில் உண்டு. இவ்வழக்கம் அங்குக் காணப்படும் தமிழ்க் கல்வெட்டுகளிலும், 'பாஷா கௌடில்யம்' போன்ற பழைய மலையாள நூல்களிலும் காணப்படுகின்றது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த வாழைப்பள்ளிக் கல்வெட்டில் 'கைலாசம்' என்ற சொல் 'கஇலாசம்' என்றெழுதப்பட்டிருக்கின்றது.[4] இச் சான்றுகள் ஐகாரத்திற்கு அஇ என்ற வரிவடிவமும் வழக்கில் இருந்தமையை அறிவுறுத்தும்.

---

1. தொல். நூன். 56 இலக்கண விளக்கம் 36.
2. தொல். நூன். 1, 2, 54, 55, 56
3. தொல். நூன். 54, 55
4. இளையபெருமாள், மா., தமிழ்மொழிச் சிந்தனைகள், 1964, ப. 32

இன்றைய ஐகார வரிவடிவம், உற்று நோக்கும்போது 'அ'வின் கீழ் 'ய'கரம் எழுதப்பட்டதுபோல அமைந்திருப்பது கருதுதற் குரியது. ஐ, அய் என்ற இரண்டின் கூட்டு என்று காட்ட இதுவும் ஒரு துணைக் காரணம்.

ஐ, ஔ என்பன தனி நெட்டுயிர்கள் அல்ல; கூட்டொலிகளே. மொழியியலார் ஐகாரத்தையும் ஔகாரத்தையும் தனியொலியன் களாகக் கொள்வதில்லை; ஐ ஔ என்ற இரண்டையும் குறைத்து, உயிர் எழுத்துகள் பத்தே என்றும் அவர் காட்டினர்.[1] அவ்வாறு காட்டுதற்கு வாய்ப்பாக இலக்கிய வழக்காறுகளும் அமைந் துள்ளன.

பழந்தமிழில் 'ஐயும்' 'ஔவும்' சில சொற்களில் உறழ்ந்தே வழங்குகின்றன. 'உறைநர்' என்றும் 'உறையுநர்' என்றும்,[2] 'கூறுநர்' என்றும் 'கூறையுநர்' என்றும் அவை ஆளப்படுகின்றன [3] உ + ற் + ஐ + உ + ந் + அர் என்றும், உ + ற் + ஐ + ந் + அர் என்றும் அவை அமைகின்றன. ஈண்டு ஐகாரத்தைத் தனியுயிராகக் கொண்டால் இடையே உகரம் வந்து சேருதற்குக் காட்டக்கூடிய மொழிப் பொருத்தத்தை விட, 'அய்' என்ற உயிர்மெய்க் கூட்டாக கொண்டு 'உ + ற் + அ + ய் + ந் + அர்', உ + ற் + அ + ய் + உ + ந் + அர்' என்று காட்டும்போது, உகரம் சேர்வது மிகப் பொருத்தமாக அமைகிறது. இவ்வமைப்பு வேறு மெய்ம் மயக்கங் களின் ஊடே வருதலும் காண்க. 'பகர்நர்' என்பது 'பகருநர்' என்றும்,[4] 'வாழ்நர்' என்பது 'வாழுநர்' என்றும்,[5] வருகின்றன. இவை போன்றே 'உறைநர்' என்பது 'உறையுநர்' என்று அமைத் திருத்தல் வேண்டும். 'சென்றனை' என்பது 'சென்றனைய்' என்று அமைந்துள்ள கல்வெட்டுகளும் ஈண்டு கருதத்தக்கன.[6] மொழி வரலாற்று நிலையிலும் இக்கொள்கை சிறந்ததாகப் படுவதால், ஐகாரத்தைத் தனியொலியனுகக் கொள்ளாமல் கூட்டொலியாக் கொள்ளலே தக்கது என்பர்.[7] ஐயம் என்ற சொல் அயிர், அயிர்ப்பு என்பனவற்றோடு தொடர்புடையது. இச்சொற்களுக்கு 'அய்' என்பதே அடிச்சொல். யகரம் சகரம் ஆக மாறி வழங்குதல்

1. Emeneau M. B.: An Introductory course in the comparative Draviden Phonology., 1959.
2. குறு. 145/4; அகம் 59/18 — ஐங் 96/3; குறு 65/4
3. கலி 58/9 — புறம் 68-2; நற் 43/10
4. பத்து. 6-11; பதிற்று 18-23 — சிலப் 5-25; மணி 28-31
5. நற் 135-4; புறம் 24-29 — பதி 49-15;
6. இராசு, புலவர், மதுரை வரலாற்றுக் கருத்தரங்கக் கட்டுரை, 1969
7. சண்முகம், செ.வை., இ.ப தமி. சுருத்தரங்க மலர், 1972, ப 268

தமிழ் இயல்பு. பயல்>பசல்; அயர்வு>அசதி; வியர்வை>விசர்த்தல். ஐகார மொழி முதற் சொற்கள் இவ்வடிப்படையில் மாறுகின்றன.

ஐயோ>அய்யோ>அச்சோ; ஐயன்>அய்யன்>அச்சன். இவ்வழக்குகளைப் பார்க்கும்போது ஐ, அகர யகரங்களின் கூட்டு என்பது உறுதியாகிறது. கைப்பு, கசப்பு, கயப்பு, கச்சால் என்பன சொல்மூல வரலாற்றில் உறவுடையன. இவை 'காய்' என்ற சொல்லடியாகத் தோன்றினவாதல் கூடும். கைப்பு என்பதைக் கய்ப்பே எனக் கொள்ளலும் கூடும்.

காய்>கய்ப்பு>கைப்பு; கய்>காய்; ஒ. கு. : உண்>ஊண்.

பச்சை, பசுமை, பைந்தமிழ், பாசடை, பாசி என்பனவற்றின் முதல் உருபன் பய் அல்லது பச் என்பதாம். இவற்றைப் போலவே மையல், மயல், மயங்கு, மஞ்சு, மச்சம் என்பனவை கூர்மை; வாய், வசி, வசை, வசவு இவற்றிற்கெல்லாம் 'வை' என்பதிலும் 'வய்' என்பதே அடிச்சொல்லாதல் காண்க. பழைமை, பழமை என்ற சொற்கள் 'பழம்' என்பதனோடு தொடர்புடையவை. பழம்>பழமை எனக் கொள்ளின் முன் சொல்லின் அடி ஐகார ஈருக இல்லாமல் 'அய்' ஈருக, ப+ழ்+அய்)+மை என அமைதல் காண்க. பழமை>பழசு. அய்>அச் மாற்றம் ஈண்டும்நினைக்கத்தக்கது.மொழியீற்று ஐகாரம் விளிவேற்றுமையில் நீளும்போது 'ஆய்' என்றே நீளும்.

தங்கை>தங்காய்; நங்கை>நங்காய்; காடை>காடாய் பாவை>பாவாய்; அன்னை>அன்னாய்.

இவ்விடங்களிலெல்லாம் நீண்ட வடிவம் ஆய் எனில் அதனது சுருங்கிய முன்னை வடிவம் 'அய்' எனக் கொள்ளலே பொருத்தம். நெட்டுயிர் அனைத்தும் ய், ர், ல், ள், ழ் என்ற மெய்கள் பின்வர வழங்கும். ஆய், ஆர், ஆல், ஆள், ஆழ்; வாள், வார், வால் வாள், வாழ் என. ஆனால் ஒரு சொல் கூட ஐகார நெடிலுக்குப் பின் இதுபோல வழங்கவில்லை. இவ்வாறு வழங்காமையே ஐ நெட்டுயிர் அன்று அகர யகர மெய்களின் சேர்க்கை என்பதைக் காட்டுகிறது. ஏனைய நெட்டுயிர்கள் இரண்டு மாத்திரைகளைப் பெறும். ஐகாரம் மட்டும் ஒன்றரை மாத்திரை பெறும் என்பது நன்னூலார் கொள்கை.[1] அங்ஙனமெனில் உயிர் (அ−1), மெய்ய்(−½ என்பவற்றின் கூட்டு என்று தானே ஆகிறது?

1. நன்னூல், 95

யாப்பிலும், ஐகாரம் இரண்டு மாத்திரையாய் வழங்குவதில்லை. அப்படி வழங்கினால் பிழைபட்டுப் போகும் அமைப்பில் சில பாக்களே உள்ளன. சான்றாக நல்வழி ஒன்பதாம் பாட்டு 'இல்லை யென மாட்டார் இசைந்து' என முடிகிறது. இவ்வரியில் இல்லை என்ற சொல்லீற்றில் உள்ள 'ஐ' இரு மாத்திரைகளையுடைய நெட்டுயிர் எனில் வெண்பாத் தளை தட்டுகிறது. ஒன்றரை மாத்திரையாகக் கொள்ளும்போதே தளை சரியாகிறது. ஆக யாப்புப் பார்வையாலும் ஐகாரம், உயிர், மெய்க் கூட்டு என்பதே பொருந்துகிறது. எதுகையில், அய், எய், ஒய், போன்றன 'கை' போன்ற சொற்களுக்கு எதுகையாக வருதல் காண்க. குறள் 354 இல், ஐயுணர்வு—மெய்யுணர்வு என்றும், 774இல் கை – மெய் என்றும் வருவன 'ஐ' உயிர், மெய்க் கூட்டு என்பதைக் காட்டு கின்றன. ஆக, ஒலியனியல் (Phonologically) படி, சொல் வரலாற்றின்படி (Etymologically), யாப்பின்படி, (Prosodically) ஐயும் ஔவும் உயிர், மெய்க் கூட்டு என்று கொள்ளவே இடந்தரு கின்றன.[1]

ஔகாரம் : ஔகாரம், 'அவ்' எனப் பழந்தமிழிலேயே வழங்கக் காணலாம். பௌவம்[2] பவ்வம்,[3] கௌவை,[4] கவ்வை[5] இவ்வாறு அமைவதால் ஔகாரத்தை 'அவ்' எனக் கொள்வதில் பெருந்தடையில்லை. எனினும் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலை யிலும் ஐந்து பிறமொழிச் சொற்கள் வேறெரு வகையில் வந்துள்ளன. கௌசிகன்,[6] கௌரியர்,[7] கௌடி,[8] பௌத்தம்.[9] பௌத்தன்[10]. இவை 'வ்ச்' 'வ்ர்' 'வ்ட்' 'வ்த்' எனத் தமிழ் மரபுக்கு மாறுன மெய்ம்மயக்கங்களாக அமைந்து கிடத்தலால் ஔ – அவ் எனக் கொள்ள இயலவில்லை. எனினும் அச் சொற் களில் சில ஔ—அவு என எழுதப்பட்டிருத்தல் கருதத்தக்கது. கவுரியர்,[11] பவுத்தர்[12].

---

1. Kothandaraman, Dr. P. Studies in Tamil Linguistics, 1972 P.81
2. புறம் 28, அகம் 70-4
3. புறம் 370-13; குறு 164-4
4. பத்து 10.105
5. பத்து 6-721
6. சிலம்பு 13-47, மணி 3-29
7. சிலம்பு 15-2
8. மணி 29-92
9. மணி 27-76
10. மணி 29-176
11. அகம் 70-13, புறம் 3-5
12. நான்முகத் திருவந்தாதி 6-1

இலக்கண ஆசிரியர்கள் ஔகாரத்தைத் தனி ஒலியனுகக் கொண்டது ஐகாரத்தை அடியொற்றி இருக்கலாம். இதனை மொழி பியலார் 'அழகுப்பழகு' (neatness of pattern) என்பர்.[1]

உயிர், மெய்க் கூட்டொலியாகக் கொள்ளுதற்குத் தடைகள் : ஐ, ஔ என்பவற்றை அய், அவ் என்று குறித்தால் அவை ஐகார ஔகாரக் குறுக்கங்கள் ஆகுமேயன்றி, இலக்கணப் புலவர் குறித்த நெடிலாக முடியாது. அஇ, அஉ எனக் குறித்தால் அது தமிழ் மரபாகாது. அயி, அவு எனக் குறித்தால் அவை நிரை அசை யாகிவிடும். இயல்பான நேரசை ஆகாது. ஐகாரம், செய்யுள் முதலில் இரு மாத்திரைகளையுடைய நெடிலுயிராகக் கொள்ளப் பட்டு, செய்யுளில் அலகிடப் படுகிறது. உயிர், மெய் எனக் கொண்டு, அலகிடும் போது அசை கெட வாய்ப்பிருக்கிறது. ஐகார ஈறு, உயிர் முதன் மொழிகளோடு புணரும் போது யகர உடம்படு மெய் பெறும். கலை + இல் = கலை + ய் + இல் > கலையில் என்று அமை யும்.உயிர், மெய்க் கூட்டாகக் கொண்டால் கலய் + இல் என்பதனை முறையே புணர்க்க முடியாது. திராவிட மொழிகளுள் ஒன்றான மலையாளத்தில் ஐயினுடைய மாற்றுருவங்களைப் பற்றி ஆராய்ந்த மொழியல் அறிஞர், ஐகாரத்தையே முன் மலையாள வடிவமாக நிறுவி 'அய்' வடிவத்தை ஏற்பதில் உள்ள இடையூறுகளைக் காட்டி யுள்ளார்.[2] இவ்விடையூறுகளை எல்லாம் கருதித்தான், பழைய இலக்கண வாணர் ஐகாரத்தைத் தனி ஒலியனுகக் கொண்டு உயிர் எழுத்தில் அடக்கினர் போலும்.

ஐ, ஔ வடமொழி வரவா? இதுகாறும் ஐ, ஔ என்பன அய், அவ் எனக்காட்டப் பெற்றதில் உள்ள மொழியியல் முறைமை புலப் பட்டது. இனி, இம்முறை வடமொழியைச் சார்ந்துஎழுந்த சந்தியக் கரமா என்பது ஆய்விற் குரியது. சிவஞான முனிவரும் டாக்டர் கால்டுவெல்லும் டாக்டர் தெ.பொ.மீனுட்சி சுந்தரனுரும் சமற் கிருதத் தழுவுதல் என்றே குறித்தனர்.[3] இக்கருத்தை, சமற்கிருதப் பேராசிரியர் டாக்டர் பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார் தக்க சான்றுகளுடன் மறுத்துள்ளார். அவர் தமிழ் ஐகார ஔகாரங்களும், அவற்றிற்கு இணையான சமற்கிருத சந்தியக் கரங்களும் வேறு வேருனவை. இவை ஒலிப்பிலும் பிறப்பிலும் வேறு பட்டவை. தமிழ் ஒலிகள் பண்டொலித்தபடியே இன்றும்

1. சண்முகம், டாக்டர், செ.வை., இ.ப.த. மலர், 1972, ப. 373
2. சுப்ரமணியம், டாக்டர் வி.ஐ., முன் மலையாள 'ஐ'யின் வளர்ச்சி மாற்றம் சுப்பையா பிள்ளை பவள விழா மலர், ப. 188-192
3. Meenakshi Sundaran. T.P.M.A History of The Tamil Language. 1965. P.63. Caldwell' Dr. 1956 - P. 136.

ஒலிக்கப்படுகின்றன. சமற்கிருத ஐகார ஔகாரங்கள் தமிழ் மொழியின் செல்வாக்கால் ஒலி மாறி ஒலிக்கின்றன. சமற் கிருத ஒலிமாற்றத்திற்குக் காரணமே தமிழ் மொழிதான் என்கிறார்.[1] "Hence I am led to belive that the present pronunciation of Sanskrit at might be due to the influence of Dravidian languages especially Tamil. It also seems to me that the Tamil pronunciation of au may have changed the pronunciation of Sanskrit au. என்பது அவர் கருத்து. தைத்திரேய பிராதி சாக்கியத்தில் (Taittiriya-Pratisakhya) சமற்கிருத ஐ, அ + இ எனப் பிரிக்கப்பட்டு 'அ' அரை மாத்திரை எனவும் 'இ' முழு மாத்திரை எனவும் குறிக்கப்படுகிறது. சுக்கில யசுர்வேத பிராதி சாக்கிய (Sukla yajurveda Pratisakhya) த்தில், ஐ ஔ என்ற இரண்டின் முதல் கூறு 'அ' என்றும், ஐகாரத்தின் பின்கூறு 'ஏ' என்றும், ஔகாரத்தின் பின்கூறு 'ஓ' என்றும் குறிக்கப்பட்டிருக் கிறது. தமிழில் முன்கூறு அகரம் எனினும் பின்கூறுகள் முறையே இகரம் உகரம் என வேறுபட்டிருத்தலைக் காண்க. ஔகாரம் சமற் கிருதத்தில் 'ஆஉ' (aau என்றே வழங்கும். இலக்கண வழக்காறு களில் மட்டுமே 'அஉ' (au) என வழங்கும். 'ஆஉ' (aau) என்ப தற்குப் பதிலாக 'ஆவ்' (aav) என வழங்கும் வழக்காறு உண்டே தவிர தமிழைப்போல 'அவ்' (av) என வழங்கும் வழக்காறு இல்லை. அஃது அகர உகர உயிர்களின் கூட்டே தவிர, அகர வகரங்களின் கூட்டன்று.[2] பண்டை ஆரியத்திலும் (Pro-Aryan) அதன் வழி கிரேக்க மொழி, லிதுவேனிய மொழிகளிலும் பன்னிரண்டு இணை யுயிர்கள் உள்ளன. ஆனால் இன்று இரண்டே எஞ்சியுள்ளன. அவை ஐயும் ஔவுமாம். வடமொழியில் இவையும் ஒலியளவில் மாறிவிட்டன. இன்றைய வடமொழி ஐ,ஔ,பண்டை ஆரியஐஔ, அல்ல. ஆரிய ஆய், ஆவ் என்பவற்றின் குறுக்கமே. வடஇந்தியா வில் இன்றும் ஐ, ஔ இரண்டும் இஆ, உஆ என்றுதான் ஒலிக்கப் படுகின்றன. இந்தியாவில் ஐ, ஔ வடமொழியிலிருந்தோ ஆரியத் திருந்தோ தமிழுக்கு வரவில்லை. தமிழிலிருந்தே ஆரியத்திற் புகுந்தன.[3] பண்டை வடமொழி ஒலி, பண்டைத் தமிழ்மொழி ஒலியே என்பதை வடமொழிப் புணரியல் காட்டும். (அ) தஸ்மை + அதாத் = தஸ்மாயதாத் — அவனுக்குக்கொடுத்தால் (ஆ) ததென +

1. Subramania Sastri, P.S. History of Grammatical Theories in Tamil And Their Relation to the Grammatical Literature in Sanskrit. 1934. P. 31, 32
2. Yadu Vanshi – The dipthony 'Au' in Sanskrit Prakrits And Hindi 1955, Transactions of the Linguistic circle of Delhi P. 1-6.
3. அப்பாதுரை, கா. தமிழ் ஐ ஔ எழுத்துக்கள், செந்தமிழ்ச் செல்வி, தொகுதி 28, 1951-52, பக். 301-304

இயம் = தானியம் கொடுத்தாள் = இவள்; ஒ. கு. (அ) தந்தை > தந்தாய், வந்தனை > வந்தாய்; ஒ: கு: ஆ) புலை > புலவு > புலால் (இந்தி).

சமற்கிருத சந்தியக்கரம் வேறு : தமிழ் எழுத்துப் போலி வேறு : சொற்களின் புணர்ச்சியின் போது இடையில் தோன்றும் ஐகாரம் ஔகாரம் ஆகியன வடமொழியில் சந்தியக்கரங்கள் எனப் படும். சிவ + ஏகம் > சிவைகம்; தரா + ஏகவீரன் > தரைகவீரன்; கோமள + ஓடதி > கோமளௌடதி: மகா + ஓடதி > மகௌடதி. ஒரு மொழியுள்ளே மொழிக்கு முன்னே நின்ற இ ஈ ஏக்கள் ஐயாகவும், ஊ ஓக்கள் ஔவாகவும், அகரம் ஆகாரமாகவும், ஏழா முயிர் ஆர் ஆகவும் திரிந்துவரும். இப் புணர்ச்சி முறை, சமற்கிருதத்தில் ஆதி விருத்தி எனப்படும். தமிழில், நச்சினார்க்கினியர், மயிலை. இலக்கண விளக்க நூலார் ஆகியோர் குறிக்கும் எழுத்துப் போலி வேறு முனிவர் குறிக்கும் சந்தியக்கரம் வேறு. எழுத்துப் போலி என்பது ஒரு சொல்லிற்குள்ளேயே நிகழ்வது. அஇ = ஐ; அய் = ஐ; கஇ = கை; கய் = கை, அஉ = ஔ; அவ் = ஔ என அமைவது. ஆதலின் தமிழ் எழுத்துப்போலி, தமிழ் இயல்பிற்கு இயைபிற்குப் பொருத்தமானது. சந்தியக்கரம் பொருத்தமற்றது.

எழுத்துப் போலி பற்றி வீர சோழிய, நேமிநாத நூலார் கருத்து: தொல்காப்பியர், பவணந்தி, சிவஞான முனிவர் போலாது, வீர சோழிய நூலார் அ + ய் = ஐ எனவும், அ + வ் = ஔ எனவும் தெளிவாகக் குறிக்கிறார்.[1] சமற்கிருதச் சார்பு நிரம்ப உடைய இவரே இதனைத் தமிழியல்புக்குத் தகக் குறித்தது ஆழ்ந்து நோக்குதற் குரியது.

> அகரம் வகரத்தி னேடியைந்து ஔவாம்; யகரத்தினேடு
> அகரம் இயைந்து ஐயாகும்

தொல்காப்பியப் பெருங்கடலைக் கடத்தற்குப் புணையாகப் போற்றப் பெற்ற நேமிநாத நூலாரும் இக்கருத்தினரே.[2]

> ஆகியுயிர் வவ்வியையின் ஔவாம் அஃதன்றி
> நீதியினுல் யவ்வியையின் ஐயாகும்

முனிவர் கூறுதற்கு வாய்ப்பாக, பவணந்தியார் சந்தியக்கரம் என்பது பற்றிக் குறிப்புக் கொடுத்துள்ளாரா எனில் இல்லை. "எண் பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை முதலீறிடைநிலை போலி

1. வீர சோழியம், 3
2. நேமிநாதம், 9

என்ரு பதம்புணர்பெனப் பன்னிருபாற் றதுவே" என வரும் நூற் பாவில் போலி எனக் கூறியிருக்கின்ருரே அன்றிச் சந்தியக்கரம் எனக் கூருமை கருதத்தக்கது. முனிவர் கூறும் சந்தியக்கரம், பவணந்தியார்க்கு உடன்பாடு என்ருல், வடமொழி சார்ந்து பத வியல் செய்த பவணந்தியார் அப்பதவியிலேயே இதனையும் கூறி யிருப்பார். அவ்வாறு கூருமையே, அவர்க்குச் சந்தியக்கரம் உடன் பாடன்று என்பதை வலியுறுத்தப் போதுமானது. சந்தியக்கரமே அவர்க்குக் கருத்தெனில் வடநூலார் சந்தியக்கரம் எனக் கூறும் எகர ஒகரங்களையும் உடன் கூறியிருப்பர். அவ்வாறு கூருமையே, அவர் உடன்படாமையைக் காட்டும்.

இருமை எண் (Dual Number) (128) : ஒன்று, ஒன்றல்லாத அனைத்தும் பல என்பது தமிழ் வழக்கு. ஒருமை, இருமை, பன்மை, என்றடுக்குவது வடநூல் வழக்கு. இக்கருத்து,

"ஒன்றல் லவைபல தமிழ்நடை; வடநூல்
இரண்டல் லவைபல என்றிசி னேரே"

எனவரும் யாப்பருங்கலக் காரிகை உரை மேற்கோளாலும்,[1] "ஒன்றல்லவை பல என்பது தமிழ்நடை" என்ற தக்கயாகப் பரணி உரையாலும் உறுதிபாகிறது.[2] பவணந்தியாரும் இக்கருத் தினரே என்பது "எழுத்தே தனித்தும், தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்" என்று கூறுவதால் புலனுகிறது. தனிநிலை, தொடர்நிலை என்ற இரண்டே தமிழ் வழக்கு என்பது கருத்து. இதனைச் சங். தம் விருத்தியுரையில் நன்கு விளக்குகிருர். விளக்குகையில் தொல் காப்பியத்தை மேற்கோள் காட்டுகிருர். காட்டும்போது, "ஒன்று இரண்டு பல என்பன வடநூல் வழக்கு; ஒன்றல்லன எல்லாம் பல என்பது தமிழ்நடையாதலின் வடநூல் வழக்குப் பற்றி ஆசிரியர் தொல்காப்பியர் "ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி" என்ருர் எனக் குறிப்பிடு கிருர். இக்குறிப்பால், தொல். வடநூல் வழக்கினர் என்பதனைச் சங். புலப்படுத்துகிருர். ஏகவசனம் த்விவசனம், பகுவசனம் என்ற மூன்றும் வடநூல் எண்முறை.

உரை இறுகியில், தொல்காப்பியர் கூறிய வடநூல் வழக்கு முறையை மறுத்து, பவணந்தியார் ஒன்று. பல என்ற தமிழ் வழக்கு நிலைநாட்டுகிருர் என்ற கருத்தைக் காட்டும் முகத்தான், சங். 128 ஆவது நன்னூற் நூற்பாவை "பிறர் நூல்குற்றங் காட்டல் என்னும்

1. யாப். காரிகை உரை 24
2. தக்க. பரணி உரை 406

மதம்" என்று குறிப்பிடுகிறார். இக்குறிப்பை முனிவர் மறுத்துரைக்கிறார்.

> "ஒரெழுத்து ஒருமொழி ஈரெழுத் தொருமொழி
> இரண்டிறந் திசைக்கும தொடர்மொழி உளப்பட
> மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே"

என்பது தொல்காப்பிய நூற்பா.[1] முனிவர், இரண்டிறந் திசைக்கும் தொடர் மொழி என அடைதந்து ஓதியதனால் தொல்காப்பியனார்க்கு ஈரெழுத்து மொழியும் தொடர் மொழியே என்பது கருத்து என்பர். தொல். வடநூல் வழக்கை உட்கொண்டுதான் சொன்னார் என்பதொரு கருத்து. அவர் எண்களில் (Number) உள்ள வட நூல்முறையைத் தழுவவில்லை என்று உரைப்பாரும் உளர்.[2] எங்ஙனமாயினும் பவணந்தியாரைப் பொறுத்த அளவில், ஐயத்திற் கிடனின்றி, உறழ்ச்சிக்கு இடனின்றி தமிழ் வழக்கை வெளிப் படையாக எடுத்தோதி இருக்கிறார். அதனைச் சங். நன்கு எடுத்துக் காட்டி இருக்கிறார்.

விகாரம் (156) : "ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே' என்ற இந் நூற்பாவிற்கு உரை கூறியதில் பெரும் வேறுபாடு உரை காரரிடை நேரவில்லை. விளக்கம் வழங்கியதில் நுணுகிய வேறு பாடுகள் சில காணப்படுகின்றன. இந்நூற்பாவிற்கு, மரை-தாமரையின் முதற் குறை ; ஓதி ஓந்தியின் இடக்குறை; நீல்-நீலத்தின் கடைக்குறை என்பவனவற்றைக் காட்டாக காட்டுவர். இவ்வழக்குகள் பாவலரால் அவ்வப்போது தோற்றுவிக்கப்படுவன அல்ல; தொன்று தொட்டு வருவன. இதனை 'வழக்கின்கண் மருஉப் போலச் செய்யுட்கண் மருஉவாய் அடிப்பாடாக ஒருமொழி முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் குறைந்து வருதல்' என விளக்கினர் சங். முனிவரும் இக் கருத்தினரே.

இலக்கண விளக்க உரையாசிரியர் இக் குறைகள் தொன்று தொட்டுவருவன அல்ல; பாவலர் செய்யிளின்பம் கருதிக் குறைக்க வருவனவே என்பர். கவிராயர் வகித்தல் முதலிய விகாரங்கள் ஆறும் செய்யுட் செய்யும் சான்றோர் வருவித்துழி வருமென்பதே கருத்தாதல் வேண்டும் எனத் தம்முரையில் வாதிடுவர். நூற் பாவில் 'அனைத்தே' என்ற மாட்டேறு, முன் நூற்பாவாகிய செய்யுள் விகாரத்தைக் குறிக்கிறது. அச் செய்யுள் விகாரம் அனைத்தும் பாவலரின் படைப்புகள். அதனைப் போன்றே இந்

1. தொல். மொழிமரபு 21
2. Sastri P.S.S., History of Grammatical Theories in Tamil P. 110

நூற்பாவில் கூறப்படும் 'விகாரம்' இன்றும் என்றும் வழங்குவன. சான்றுக வழக்கு மொழியில் லகரறி-இலகரறி முதலியவற்றையும் கவிராயர் காட்டுவர். தோன்றல் திரிதல் கெடுதல் என்ற மூன்று புணர்ச்சி விகாரங்கள் அல்வழி, வேற்றுமைப் பொருள் நோக்கத்தால் வருவன என்றும், வலித்தல் மெலித்தல் முதலான செய்யுள் விகாரங்கள் தொடை நோக்கி வருவன என்றும், முதற் குறை, இடைக்குறை முதலாயின ஒருமொழிக்கண் தொன்று தொட்டு வரும் செய்யுள் விகாரம் என்றும் கொள்ளலே தக்கது. இவற்றுள் புணர்ச்சி அமைவு பற்றி எழுத்து மறைதலைக் கெடுதல் விகாரம் எனவும், செய்யுளோசை அமைவுபற்றி இருமொழிகளிடை எழுத்து மறைதலைத் தொகுத்தல் விகாரம் எனவும் ஒரு மொழியில் முதல் இடை கடையில் எழுத்து மறைதலைக் குறைத்தல் விகார மெனவும் வேறுபடுத்தி அறிந்து கொள்ளுதல் வேண்டும். தொகுத்தல் விகாரம் பகுபதத்திலும், முதல், இடை, கடைக்குறை விகாரங்கள், பகாப்பதத்திலும் வரும் (வை. மு. ச. ப. 101).

தொண்ணூறு—தொள்ளாயிரம் (194) : நன்னூல் 194 ஆம் நூற்பா தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றிற்குப் புணர்ச்சி விதி கூறுகிறது. அவ்விதிப் போக்கு இங்ஙன் அமைகிறது:

தொண்ணூறு : ஒன்பது + பத்து: ஒன்பது + நூறு;

த் + ஒன்பது + நூறு; த் + ஒன் + நூறு; த் + ஒன் + நூறு;தொண்ணூறு

தொள்ளாயிரம் : ஒன்பது + நூறு; ஒன்பது + ஆயிரம்;
த் + ஒன்பது + ஆயிரம்; த் + ஒன் + ஆயிரம்;
த் + ஒன் + ஆயிரம்; தொள்ளாயிரம்

ஏறத்தாழத் தொல்காப்பியரும் சற்று மாறி இவ்வாறே சுற்றி வகைத்து நூற்பா யாப்பர்.[1] இது மொழியியல் போக்குக்கு முற்ற முரண் என்பது சிலர் கருத்து. நன்னூல்புணர்ச்சி விதியில் 'முன்ன தின் ஏனைய முரணி' என்ற தொடர்க்குப் பொருள் காணுவதில், உரை காரரிடையே வேறுபாடு. "முரணி – பத்தையும் நூற்றையும், நிரனிறை வகையானே நூறு எனவும் ஆயிரம் எனவும் திரித்து" எனப் பொருள் காண்பர் சங்.ஒன்பதினுலே பத்தையும் (9 × 10 = 90) நூற்றையும் (9 × 100 = 900) பெருக்கி எனப் பொருள் காண்பர் மயிலை. இப்பொருளையே நன்னூல் கருத்தெனக்கொண்ட இலக்கண விளக்க உரையாசிரியர் "பத்து நூருகவும், நூறு ஆயிரமாகவும் பெருக்கி நிலைமொழியாகிய ஒன்பது என்பதனோடு புணர்க்கப்படுமாயின்

1. தொல்காப்பியம், 445, 463

ஒன்பது + நூறு தொண்ணூருகாது; தொள்ளாயிரமாகும். அங்ஙனமே ஒன்பது + ஆயிரம் தொள்ளாயிரமாகாது ஒன்பதினாயிரமாகும்: அங்ஙனம் வருதல் வழுவாம்'' எனப் பவணந்தியார்க்கு மறுப்புரைப்பர்.[1] அதற்காகவே சங். ம், முனிவரும் முரணி என்பதற்குத் திரித்து எனப் பொருள் கொண்டனர். அன்றியும், அவ்வாறு திரிவதற்கு நன்னூல் நூற்பாவில் இடம் இல்லை என்றும், 'ஒன்பான் ஒகர மிசை' (தொல். குற்றிய, 40,) 'ஒன்பான் முதனிலை' (தொல். குற்றிய. 55) என்ற தொல். சூத்திரங்களான் திரிபறிந்து திரித்துக் கொள்க என விளக்கமும் தந்தார்கள்.[2]

நன்னூல் நூற்பா உரையில் மயிலை கொடுத்துள்ள ஓர் அரிய குறிப்பு நினைவு கூர்தற்குரியது. ''ஒன்றானான பத்து – ஒன்பது; அஃது அக்காலச் சொல்'' இவ்வரிய குறிப்பைக் கொண்டு ஒன்பதன் பழைய வரலாற்றைக் கண்டறிந்து விடலாம். 10—1 = 9 ஒன்று குறைந்த பத்து. இது போன்ற ஒத்த வழக்கு உரோமனில் உண்டு. நான்கு எனக் குறிப்பதற்கு உரோமன் எழுத்தில் 'V' (V = 5; I = 1) என எழுதுகின்றனர். இலத்தின் பேச்சு வழக்கிலும் பெரிய எண்ணுக்கு முன், சிறிய எண்ணைப் போட்டுக் கழித்துக் குறைக்கும் முறை உள்ளது.

'Viginiti' என்றால் 'இருபது' என்றும், 'un' என்றால் 'ஒன்று' என்றும், 'de' என்றால் அதிலிருந்து நீங்குவது என்றும் பொருள். எனவே, un + de + viginiti = undeviginiti என்றால் இருபதிலிருந்து ஒன்று நீங்கியது. அதாவது பத்தொன்பது (20—1 = 19) என்று பொருள். இது போலவே, duo + de + viginiti = duodeviginiti என்றால் இருபதிலிருந்து இரண்டு நீங்கியது என்று பொருள். 'duo'—என்றால் இரண்டு. இவ்விலத்தீன் ஏட்டு, பேச்சு வழக்கோடு மயிலை கூறும் 'ஒன்றானான பத்து' என்பதனையும் இணைத்துப் பார்த்தால் மயிலை கூற்றின் உண்மை புலப்படும். எண் வரலாற்றில் 9 ஐக் குறிக்கத் தனி எண் தமிழில் இல்லையா எனில் உண்டு. அஃது 'தொண்டு' என்பது. ''தொண்டு கடியிட்ட பத்துக் குறை''[3] ''தொடித் திரிவன்ன தொண்டுபடு திலவு''[4] ''ஆறென ஏழென எட்டெனத் தொண்டென''[5] ''தொண்டாயிரவர் தொகுப''[6] ''தொண்டிருந் துன்பம் தொடரும்''[7] ''தொண்டுபடு

1. இலக்கண விளக்கம், 112
2. தண்டபாணி தேசிகர், நன். விருத்தியுரை, ப. 249
3. தொல். செய். 101
4. மலைபடு, 21
5. பரி. 379
6. நாலடி. 284
7. முதுமொழி 72

திவவின் முண்டக நல்வியாழ்''[1] என வரும் இலக்கியச் சான்று கூறிக் காண்க. இவ்விலக்கிய ஆட்சிகளால், 'தொண்டு' வழக் காற்றைத் துணியலாம். ஆனால் இவ் வழக்காறு காலப்போக்கில் மறைந்து, ஒன்பது இடம்பற்றிக் கொண்டது. இதற்குப் பொருத்தமான காரணம் உண்டு. 'தொண்டு' என்ற சொற்குப் பல பொருள் உண்டு. அவற்றுள் அச்சொல்லிற்கு இழிபொருளும் வழங்கி இருக்கிறது. 'ஒழுக்கங் கெட்டவள்' என்று ஒரு பொருள் அச் சொல்லிற்குண்டு.[2] இது போன்ற சொற்களை ஒலிக்காமல் புறக்கணிப்பதும் மக்கள் இயற்கை. மக்கள் உண்ணமுகை என்பதனை இப்போது உண்ணாகை என்றே வழங்குகிறார்களே. அச்சொல்லையே விட்டுவிட்டுப் 'பால்' என்றே தென்பாண்டி நாட்டார் வழங்குகின்றனர். ஆந்திராவில், ஏழு என்ற பொரு ளுடைய 'ஏடு' என்பதை வழங்குதல் இல்லை. காரணம் அச்சொல் 'அழுகை' என்ற அவலப் பொருளையும் தாங்கி இருப்பதுதான். அச்சொல்லிற்குப் பதிலாக 'ஆறன்றெகெட்டி' (6+1=7) என்று வழங்குகின்றனர். 13 என்ற எண்ணையே ஆங்கிலேயர் வெறுத் தொதுக்க வில்லையா? இது போன்றே இழிபொருளையும் குறித்த 'தொண்டு' என்பது வழக்கு வீழ, ஒன்றானமான பத்து (10—1) என்ற பொருளுடைய ஒன்பது வழக்கேறி இருக்கிறது. இவ் வழக்கு தொல்காப்பியர்க்கு முன்பே தொடங்கி விட்டது. இத் தொண்டு என்பது தான் தொல்காப்பியர்க்கு முன் வழங்கியது என்பது பிறிதோர் ஆராய்ச்சியாலும் உறுதிப் படுகிறது. திராவிட மொழிகளின் எண்களைப் பற்றி மொழியியல் பார்வையில் ஆராயப் பட்டது. இவ்வாய்வில் பழந்திராவிட Pro-Dravidian) மொழியில் வழங்கிய பழவடிவங்கள் உய்த்துணரப்பட்டுள்ளன! அவ்வாறு ஒன்பது என்பதற்கு உய்த்தறியப்பட்ட பழைய வடிவம் 'தொண்டு' என்பதாம். 'தொண்டு' என்பதன் பெயரடியாக (Adjective Base), 'தொன்' என்பதுவும், 'தொண்' என்பதுவும் திராவிட முதன் மொழியில் வழங்கி இருத்தல் கூடும் என்பது அவ்வாய்வுரையின் முடிவு[3]. திராவிட முதல் தாய் மொழியில் வழங்கிய சில மூத்த வழக்காறுகள், தொல்காப்பியர்க்கு முன்பே வழக்கு வீழ்ந்தனை போல (நீம்—முன்னிலைப் பன்மை) தொண்டு என்பதுவும் மேலே காட்டப்பட்ட காரணத்தால் வழக்கு வீழ்ந்தது போலும். ஆக, 'ஒன்பது'வுக்கு முன் 'தொண்டு' என்பதுவே எண்ணுப் பெயராகவும், 'தொண்', 'தொள்'

1. ஆசிரியமாலை, ஆனந்தகிடன் அரசாதி, ப. 1610
2. மதுரை தமிழ்ச் சங்கப் போகாதி, 1958 ப. 1222
3. Panikkar G K. Dravidian Numeral Constructions, Dravidian Linguistics Seminar Papers 1969 P.P. 202, 217

என்பனவே எண்ணுப் பெயரடிகள் ஆகவும் வழங்கியிருக்கின்றன. இவற்றைக் கொண்டு தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றின் புணர்ச்சி முறைகளை எளிமையாக அமைத்துக் கொள்ள முடியும். தொள் + நூறு = தொண்ணூறு, தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம் இவ்வாறு அமைத்துக் கொண்டாலும் பொருள் பற்றிய சிக்கல் போகவில்லை. அதனை எப்படித் தீர்த்துக்கொள்வது.

தொள் + நூறு என்றால், "குறைவு பெற்ற நூறு" எனவும், தொள் + ஆயிரம் என்றால் குறைவுபட்ட ஆயிரம் எனவும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஒரு பெரிய முழு எண்ணிற்குச் சிறிது குறைவதைத் தனிப் பெயராகச் சொல்லாமல் அந்த முழு எண்ணின் பெயரைக் கொண்டே குறிப்பிடுவது மக்கள் இயல்பு. IX (10—1) = 9; XC (100—10) = 90 என்ற இலத்தீன் எண்களின் வழக்குகளையும் ஈண்டு இணைத்துப் பார்க்க.[1] ஒன்பது என்பது ஒன்று ஊனமான பத்து. ஒன்று குறைந்து பத்து என்னும் பொருளில் வழங்கியது என்ற மயிலை. கருத்தைப் பொருத்தி நினைக்க. 60 என்பதைத் தொள். செய்யுளியலில் 'பத்துக்குறை எழுநூறு' எனக் குறிப்பதும் 369 என்பதனை 'ஒன்றெழு முந்நூற்றெழுபான்' எனப் பவணந்தியார் குறிப்பதும் ஈண்டு ஒப்பிட்டு ஓரத்தக்கன.[2] 'தொள்' என்ற சொல்லிற்குக் குறைக்கப் பட்டது என்ற பொருள் உண்டு. குறைந்த காதினைத் தொள்காது எனப்படும் உலக வழக்கும், குறைந்த என்ற பொருளில் 'தொள்கா வான்பூ' எனவரும் அகநானூற்று இலக்கிய வழக்கும் 'தொள்கா மன்றத்து' எனவரும் புறநானூற்று இலக்கிய வழக்கும் மேற்கண்ட பொருளை உறுதி செய்கின்றன.[3] ஆக, 'தொள்' என்பதுவும், அதன் பொருளும் நினைவிற்கு வாராமை, குறைந்த பத்து, குறைந்த நூறு, குறைந்த ஆயிரம் என்று குறிக்கப்படும் வழக்காற்றுண்மை ஆகியன பண்டு உய்த்தறியப் படாமலேயே சிக்கல்கள் செறிந்த புணர்ச்சி விதிகள் அமைக்கப்பட்டன போலும்.[4] மயிலை. ஒருவரே ஒன்பது என்ற எண பற்றிய அரிய குறிப்பைத் தந்து போற்றினர். மற்ற உரைகாரர்கள் அவர் தம நுணுக்கத்தைப் புரியாது விட்டனர்.

---

1. சுந்தர சண்முகனார், தொண்ணூறு தொள்ளாயிரம், 1971, ப. 24
2. தொல், செய்யுளியல், 101; நன்னூல் 61
3. அகம் 149; புறம் 333
4. கோவிந்தராய நாட்டார். எட்டு, ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம்' 'தமிழ்ப் பொழில்' 1926-27, இரண்டாந் தொகுதி, ப. 122, 126, 303

29

சொல்லதிகார உரை வேறுபாடுகள்

வேற்றுமை (291): "ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈருய்" எனவே, ஏனை வினைச் சொற்களும் பெயர்ப்படா இடையுரிச் சொற்களும் வேற்றுமை ஏலா என்பது தானே போதரும் எனக் கொள்க" என்பது மயிலை. சிறப்புரை. இவ்வுரைக் குறிப்பை உள்ளத்துக் கொண்டு, இதற்கு மறுப்பாக சங். தம் விருத்தியில் எழுதுகிறார்: "வினைச் சொல் இடைச்சொல் உரிச்சொற்களுள் பெயர்ப்பட நின்றனவும் தழீஇக்கோடற்கு எவ்வகைப் பெயர்க்கும் ஈருய் எனப் பவணந்தியார் குறித்தார்" என மறுப்பு காட்டுவார் அவர். வினையடிப்படையில் பிறக்கும் தொழிற்பெயர்களும், வினையாலணையும் பெயர்களும் சொல் அளவில் வினை எனினும் செயற்பாட்டு (Function) அளவில் அவை பெயராக நின்று வேற்றுமை உருபு ஏற்கின்றன. மற்று, மற்றைய போன்ற இடைச் சொற்களும், உறு, மிக என்ற உரிச்சொற்களும், விணைப் பெயர்களாகி வேற்றுமை ஏற்கின்றன. இவற்றை எல்லாம் கருதியே சங். மேற்கண்டவாறு உரை எழுதி இருத்தல் கூடும். நான்கு சொற்களுமே ஒரு வகையில் உருபேற்பதால் சங். விளக்கம் பொருந்தி நிற்கிறது.

உயர்திணை (261): பகுத்தறிவிற்கு உட்பட்ட திணைப் பாகுபாடு தமிழில் உள்ளது. உயர்திணை, அஃறிணை என்ற இரு பாகுபாடுகளே அவை. இக்கூறுச் சொற்களுக்குப் பொருள் கூறி விரிப்பதில் உரையாசிரியரிடையே வேறுபாடு. குறிஞ்சித்திணை, முல்லைத்திணை முதலிய ஐந்திணைகளுக்கும் பொருள் குறிஞ்சி ஒழுக்கம், முல்லை ஒழுக்கம் என்பதுவே. தொல்காப்பியத்தில் ஊறித் திணைத்த நச்சினார்க்கினியரும் திணை என்பதற்குத் தொல் காப்பியத்தை ஒட்டி ஒழுக்கம் எனப் பொருள் விரித்தனர். "உயர் என்பது மிகுதி; திணை என்பது பொருள்; உயர்ந்த திணை உயிர்

திணை என வினைத்தொகை" எனப்பொருள் விரித்தார் மயிலை. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோரும் உயர்திணை வினைத் தொகை என்றே விளக்கினர்.[1]

ஒழுக்கம் எனப் பொருள் கூறுதலையும், வினைத்தொகையாக்கி உரைப்பதையும் சங். தம்முரையில் மறுக்கிறார். திணை என்ற சொல்லிற்குப் பல பொருளுண்டு. 'திணை நிலம் குலம் ஒழுக்கம்' என்பது சூடாமணி நிகண்டு.[2] ஆதலால் திணை என்ற பல பொருள் ஒரு சொல் இங்குக் குலத்தினை உணர்த்தி நின்றது. உயர்திணை எனில் உயர்வாகிய குலம், அஃறன்மையாகிய குலம் என விரியும். ஆக, இவ்விரண்டும் பண்புத் தொகை. திணை என்பதற்கு ஒழுக்கம் எனப் பொருள் கூறின், அஃறிணையை ஒழுக்கமல்லாதவை என விளக்க வேண்டி இருக்கும். அப்படி விளக்கினால், அவ் விளக்கம், அஃறிணைப் பொருளில் அடங்கிய உயிர் இல் பொருள்களுக்குச் செல்லாது. ஆதலின் அவ்வாறு பொருள் கொள்ளுதலும் செல்லாது. உயர்திணையை உயர்ந்த திணை என இறந்தகால வினைத்தொகையாக விரிக்கின், மரம் நாள்தோறும் உயர்ந்தமை கருதி உயர்மரம் எனவும், கல்வியறிவு நாள்தோறும் உயர்ந்தமை கருதியதிணை உடையார் மேலேற்றி உயர் மக்கள் எனவும் கூறும் வினைத்தொகை போல உயர்திணை என்பதற்கு உயரும் புடைபெயர்ச்சி வினை காட்சி வகையாலும் கருத்து வகையாலும் இன்மையின் அது வினைத்தொகை அன்றென்பது தெளிவு. தம் மறுப்புக்குச் சங். காட்டும் காரணங்கள் இவை.

திணை என்ற சொல்லிற்குப் பழந்தமிழில் குலன் என்ற பொருள் இருத்தல் கூடுமா என்பது ஆய்விற்குரியது. தொல். காலத் தமிழில் அச்சொல்லிற்கு அப்பொருளில்லை எனில், நச்சினார்க்கினியர் கூறும் விளக்கமே மிகப் பொருந்துகிறது. ஒழுக்கம் இல்லாதாரை மாக்கள் எனவும், மரம் எனவும் அஃறிணைப் பொருள்களாகத் திருவள்ளுவர் குறிப்பது கருதுக.[3] பவணந்தியாரும் உரியியலில் ஆரும் அறிவற்ற மக்களை விலங்கு பறவைகளோடு ஒன்ற வைத்து பேசுதல் உன்னத்தக்கது.[4] சங். உரை விளக்கம், அவர் காலத் திற்குப் பொருந்துவதாயினும், தொல். காலத் தமிழுக்குப்பொருந்து மாறில்லை.

---

1. தொல். சொல். கிளவியாக்கம் உரை 1.
2. சூடாமணி நிகண்டு, 11 வகரப் படலம் 5.
3. குறள் 410, 420, 997.
4. நன்னூல் 449.

படர்க்கை வினைமுற்று; படர்க்கைப் பெயர் (265) :

படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பின்
பெறப்படும் திணைபால் அஃறும் ஏனை
இடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே

இந்நூற்பாவிற்கு விளக்கம் உரைப்பதில் மயிலை, இலக்கண விளக்க உரைகாரர் ஆகியோர் மாறுபடுகின்றனர். இந் நூற்பாவிற்குச் சங். விரிவான உரையும் மறுப்பும் வழங்கியுள்ளார். இவரது உரைவிளக்கம் முழுதையும் அப்படியே எடுத்து கவிராயர் போற்றியுள்ளமை ஈண்டுச் சுட்டத்தக்கது. சங். இந் நூற்பா சொல் தன்னையும் உணர்த்தி, பொருளையும் உணர்த்துகிறது என்கிறார். இதனை இந்நூற்பா உரையிலேயே ஐந்து முறை மீண்டும் மீண்டும் வேறு வேறிடங்களில் எடுத்துக் காட்டுகிறார். இனி இந் நூற்பாவிற்கு இவ்வாறன்றி, இருதிணை ஐம்பாலைப் பொருளகத்து அறிவித்தது அன்றிச் சொல்லகத்து அறியுமாறு என உரைவிரித்தார் இலக்கண விளக்க உரைகாரர்.[1] அதனைச் சங். மறுக்கிறார். தொல். கிளவியாக்கத்தில் (10 படர்க்கை வினைமுற்று ஒன்றுமே கூறுகிறார்.[2] பவணந்தியாரோ படர்க்கை நாமத்தையும் குறிப்பிட்டுள்ளார். மேற்கண்டபடி பொருள் உரைப்பின் இது மிகைப்படக் கூறல் என்னும் குற்றமாக நேரிடும். ஏனை இடத்தவற்று ஒருமைப் பன்மைப் பாலே என்றல், தன்மை முன்னிலைகள் ஒருமை பன்மை மாத்திரையன்றி இருதிணை ஐம்பால் விளக்காமையின் மற்றொன்று விரித்தல் என்ற குற்றப்படும். இவ் வாறின்றி, மூவிடங்களின் ஒவ்வொன்றற்கு உரிய முற்றும் பெயருமே இருதிணை ஐம்பாற் பொருளினை விளக்கும். ஒழிந்தன விளக்கா எனப் பொருள் கூறின், எல்லாச் சொல்லும் மூவகை யிடத்து நின்று இருதிணை ஐம்பாற் பொருளை விளக்கும், எனக் கூறிய 'ஒரு மொழி தொடர்மொழி' (259) என்னும் பொதுச் சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலாம் என வரும் அவர் மறுப்புரைகள். சங். உரை பொருத்தமானது; ஆதலின் அவர் பொருள் போற்றல் நன்று.

குறிப்பின்: இந்நூற்பாவுள், 'குறிப்பின்' என வரும் சொல்லைச் செயின் எனும் வாய்பாட்டு வினையெச்ச மாக்காது சொல்லுவான் குறிப்பினாலும் இருதிணை ஐம்பாலும் விளங்கும் என மயிலை, இலக்கண விளக்க உரைகாரர் ஆகிய இருவரும் உரைகண்டனர். "நீ வருதலான் முல்லை அரும்பின; நீயிர் தொக்கு நிற்றலான்

1. இலக்கண விளக்க உரை, 167
2. தொல். சொல். கிளவி, 10

உடம்பாயிற்று என்றக்கால், மழையும் ஐம்பூதமு னெக் குறிப் பால் விளங்கும்'' என அக்குறிப்பை மயிலை. விளக்குவர். இவ் வாறு பொருள்கோடல் பொருத்தமின்று என்பர் சங். உம் முனி வரும். (அ) மூவிடச் சொல் போலக் குறிப்புச் சொல் என்ற ஒன்று தனியே இல்லை. (ஆ) படர்க்கை வினைமுற்று நாமம் என்ற அளவிலேயே குறிப்புச் சொல்லும் அடங்கிவிடும். (இ) மயிலை. குறிப்பிடும் குறிப்புச் சொல், 'ஒன்றொழி, பொதுச் சொல்' (209) என்னும் நூற்பாவில் பின் சொல்லப்படுகிறது. இங்கும் கூறியது எனில், கூறியது கூறல் என்று குற்றப்படும். இம்மூன்று காரணங்களால், மயிலை. கொண்ட உரை முறை பொருத்தமின்று என்று முடிவுரைக்கிறார் சங். உரைமுறையில் மிகப் பொருத்தம் இருப்பதால் அவர் விளக்கிய முறையையே ஏற்றுக் கொள்ளலாம்.

செந்தமிழ் நாடு (27): சொல், இயற்சொல், திரிசொல், வட சொல், திசைச்சொல் என நான்குவகை. இவற்றுள் இயற்சொற்கள் வழங்கும் நிலமே செந்தமிழ் நிலம். இச்செந்தமிழ் நிலத்தின் எல்லை பற்றிய கருத்து வேறுபாடு உண்டு. செந்தமிழ் நிலம் என்பது, கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும், வையை யாற்றின் வடக்கும், மருதமாற்றின் தெற்குமாம் என மயிலை. விளக்கினர். இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய தொல். உரையாசிரியர்களும் இக்கருத்தினரே.[1] யாப்பருங் கலக் காரிகை உரையாசிரியரும், இலக்கண விளக்க உரைகாரரும் இவ்வாறே விளக்கினர். இவர்கள் கூறும் எல்லைக்குட்பட்ட நாடு சோழ நாடு என்பது தெளிவு.

சங். இதனை மறுத்து, பாண்டிய நாடே செந்தமிழ் நாடு எனக் கருத்துரைத்தனர். அதற்குச் சான்றாக, ஒரு பாட்டையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

> ''சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்
> சவுந்தர பாண்டியன் எனுமதமிழ் நாடனும்
> சங்கப் புலவனும் தழைததினி திருக்கும்
> மங்கலப் பாண்டி வளநாடென்ப''

மயிலை. முதலானோர் கொண்ட உரை சரியன்று என்று நிறுவு தற்குச் சில காரணங்களை அவர் காட்டுவர். அவை: செந்தமிழ் நிலம் அல்லாத நிலம் கொடுந்தமிழ் நிலம். அக் கொடுந்தமிழ் நிலம் பன்னிரண்டென 'தென்பாண்டி குட்டம்'

1. தொல். சொல். எச்சவியல், 2

என்ற வெண்பா விளக்குகிறது. அவ்வெண்பாவின் பன்னிரு கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்றுக,புனல்நாடு குறிக்கப்படுகின்றது. அவற்றுள் ஒன்றுக் குறிக்கப்படும் நாடு, தனிச் செந்தமிழ் நாடு எங்ஙனம் ஆதல் இயலும்? பாண்டிய வேந்தனே 'தமிழ் நாடன்' எனப் பழந்தமிழ் இலக்கியத்துள் போற்றப்படுவதால், அவன் ஆண்ட இடமே செந்தமிழ் நிலமாதல் தெளிவு.[1] இவற்றோடு வேறிரண்டு காரணங்களையும் இணைத்துக் காட்டுவர் கவிராயர். அவை : செந்தமிழ் முனிவன், தன் மாணாக்கர் பன்னிரு வருள்ளே, பாண்டியன் ஒருவன் எனப் போற்றுவன். செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு' இயற்றப்பட்ட தொல்காப்பிய மென்னும் செந்தமிழிலக்கண நூல் பாண்டியன் அவைக் களத்து அரங்கேற்றப்பட்டமை. இந்நான்கு காரணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கனவே. எனினும், 'செந்தமிழ் நாடு' எது என்பது பற்றிய ஆய்வு, பிற்காலத்தில் சொந்த மண் நேயம் (Regional Feeling) ஆகக் கொள்ளப்பட்டு, விளக்கப்பட்டதோ எனத் தோன்றுகிறது. செந்தமிழ் நாடு பாண்டி நாடு என வாதிப்போர் அனைவரும் பாண்டி நாட்டினர் என்பது உளம் கொள்ளத் தக்கது. ஆதலின் இந்தப் பாகுபாடு பிற்காலத்தில் உரையாசிரியர்களின் படைப்புச் சிக்கலோ என்று கருத வேண்டியுளது. தொல்காப்பியர்க்கு முன் இப்பாகுபாடு இல்லை எனவும் உய்த்துணர வேண்டியுளது.[2]

திரிசொல் (272) : திரிசொல்லின் இலக்கணம் கூறும் முறையில் மயிலைநாதருக்கும், சங்.க்கும் வேறுபாடு. "திரிசொல்லிற்கு வேரோர் இயற்சொல் கொண்டு வந்து திரித்துச் சொல்ல வேண்டுதலால், திரிசொல்" என விளக்கினர். இவரை ஒட்டியே சேனாவரையர் திரிதல் என்பது உறுப்புத் திரிதல், முழுதும் திரிதல் என மேலும் விரிவாய் விளக்கினர். கிள்ளை, மஞ்ஞை என்பன கிளி, மயில் என்பனவற்றோடு உறழும் திரிசொற்கள். இவற்றுள் முதல் எழுத்து நிற்க ஏனைய எழுத்துகள் திரிந்தன; ஆதலின் இவை உறுப்புத் திரிந்தவை. வெற்பு என்ற சொல்லின் எல்லா எழுத்தும் திரிந்து விலங்கல், விண்டு என வந்தன. ஆதலால் இவை முழுதும் திரிந்த திரிசொற்கள். இளம்பூரணர், நச்சினார்க்கினியரும் இவ்வாறே விளக்கினர்.[3] இதனை ஓர் உவமையின் வாயிலாக மறுக்கிறார் சங். குரங்கிற்கு ஒரு பெயர் வலிமுகம் என்பது. அதன் முகம் தன் இயல்பாக இருந்த போதும், மாந்த

1. தமிழ்நிலை பெற்ற தாய்ப்பரு மரபின் மதுரை. — சிறுபாண். 67.
2. சுந்தரமூர்த்தி, கு. தொல். எழுத்து. நச்சினார்க்கினியர், ப. 274
3. தொல். சொல். 399

ரின் இயல்பின் மறுதலைப்பட்டமை கருதி வலிமுகம் எனப்பட்டது. அதுபோல, கல்வி ஏதுவான் அன்றி இயல்பாகத் தம் பொருளை உணர நிற்றலின் இயற்சொல் என்றும், அவ்வியல்பிற்கு மறுதலைப் பட்டுக் கல்வி ஏதுவால் தம் பொருளை உணர நிற்றலின் திரிசொல் என்றும் கூறப்பட்டன. மாறுக, இயற்சொல், திரிசொல், என்றது அவற்றின் எழுத்துகள் திரிந்தமையும் திரியாமையும் கருதி அன்று. சங். உவமை வழி விளக்கம் பொருத்தம் எனினும், மயிலை. சேனா வரையர் கூறும் விளக்கத்திற்கும் இடம் இருக்கிறது. ஆதலின் இரு விளக்கங்களையுமே 'ஓரட்டுற மொழிதல்' என்ற உத்தி வகை யான் ஏற்றுக் கொள்ளல் தக்கது.

தமிழ் ஒழி நிலம் (27) :

" தென்பாண்டி குட்டம் குடம்கற்கா வேள்பூழி
பன்றி அருவா அதன வடக்கு—ன்ருய
சீத மலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதமிலசீப் பன்னிருநாட் டெண"

இவை கொடுந்தமிழ் நிலம் பன்னிரண்டு. ஈண்டு வழங்கும் வழக் காறுகளை மயிலை. விரிவாகக் காட்டுவர். சங். உம் அவரைப் பின் பற்றி உரைக்கின்றனர். சேனாவரையர் மேற்கண்ட வெண்பாவை காட்டவில்லை. அத்துடன், வேணாடு, புனல் நாடு இரண்டையும் விலக்கிப் பொங்கர் நாடு, ஒலி நாடு[1] இவற்றைக் கொள்வர். புனல் நாட்டைச் செந்தமிழ் நாடாக அவர் கொண்டமையின் இவ்வாறு விளக்கினர் போலும். பலவாறு வழக்காறுகளைப் பண்டைய உரையாசிரியரை ஒட்டி வழங்கிய சங். தமிழ் ஒழிந்த பதினெறு நிலம் எனத் தம் விருத்தி உரையில் குறிக்கிறார். இவர் கருதும் அப்பதினெறு நிலங்கள் எவையெனத் தெரியவில்லை. மயிலை. தமிழ் ஒழிந்த நிலம் பதினேழு எனக் குறித்து அதன் பட்டியலையும் தருகிறார்:

" சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுக் குடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலிங்கம் கலிங்கம் வங்கம்
கங்க மகதம் கடாரம் கவடங் கடுங்குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ் நிலம்தா மிவையே"

இதற்கு மேற்கோள் துணையாகக் 'கன்னித் தென்கரைக் கண் பழந் தீவம்' என்ற அகத்திய நூற்பாவையும் காட்டுகிறார். இலக்கண விளக்க உரைகாரரும், கவிராயரும் இவர் உரையையே பின்பற்றி

1. தொல். சேனாவரையம், 400

யுள்ளனர்.[1] ஆக, தமிழ் ஒழி நிலம் பதினேழ் எனப்பல்லோராலும் காட்டப்பெற, சங். மட்டும், பதினாறு எனக் குறித்த காரணம் புலப் படவில்லை. அப் பதினாறு—எது எது என்பதும் தெளிவாக அறிய முடியவில்லை. ஒருகால், பதினேழு என்பதைப் பிழையாகப் பதினாறு என ஏடெடுத்து எழுதுவோர் எழுதி விட்டனர் போலும் சங். உரையை உறுதி செய்யும் சான்று கிட்டும் வரை, மயிலை. உரையைப் போற்றுதலே பொருத்தம்.

இடுகுறி காரணம் மரபோடு ஆக்கம் (275) : பெயரின் பொது இலக்கணம் கூறுமிடத்து, 'இடுகுறி காரணம் மரபோடு ஆக்கம்' என்பது கூறப்படுகிறது. இதற்கு மயிலை, இடுகுறிப் பெயர், காரணப்பெயர், மரபுப் பெயர், ஆகு (ஆக்கப்) பெயர் என்று நான் காக்கிப் பொருள் உரைத்தார். சங். இடுகுறிப்பெயர், காரணப் பெயர் எனப் பெயரிரண்டே. அவை, மரபையும் ஆக்கத்தையும் பற்றி வரும் எனக் கூறினர். அவர் கருத்துப்படி.

இடுகுறிப் பெயர் - 1. இடுகுறி மரபுப் பெயர் — மரம்
2. இடுகுறியாக்கப் பெயர் — முட்டை

காரணப் பெயர் - 1. காரண மரபுப் பெயர் — பறவை
2. காரண ஆக்கப் பெயர் — மலைமகள்

மரபு, ஆக்கம் இரண்டும், இடுகுறி, காரணம் என்ற இரண்டினுள் அடங்கும் என்பது இவர் கருத்து. இவ்வெண்ணம் மயிலை. அறிந் திருந்ததுதான். அவர் அவ்வாறு கொள்ளுதல் பொருத்தமில்லை என்கிறார். "மரபுப் பெயரும் ஆகுபெயரும் காரணப் பெயருள் அடங்குமேனும், முதலது இடுகுறியாய மரபு காரணமாகவும், ஆகு பெயர் பகுதி விகுதி பாய்க் காரணம் விளங்காததாகவும் வருதலின் அவ்வேறுபாடு அறிதற்கு வேறுதினர் என்க." என அவர் குறிப் பர். இதனைச் சங். உம், கவிராயரும் மறுத்துள்ளனர். 'இடுகுறிக் காரணப் பெயர் பொதுச் சிறப்பின்' என்று முன்பே (62) பவணந்தி யார் பெயரிரண்டே என வகுத்து விட்டார். எனவே எல்லாப் பெயரும் இடுகுறி காரணம் என்ற இரண்டனுள் அடங்கிவிடும். ஆக்கப்பெயர் என்பதற்கு ஆகுபெயர் என்றே பொருள் காட்டு கிறார் மயிலை. தெந்த, கடு என்பவற்றை எடுத்துக்காட்டாய்க் காட்டுகிறார். ஆகுபெயர் வேறு; ஆக்கப் பெயர் வேறு என வேறுபடுத்திக் கோடலே தக்கது. முன்னது ஒன்றன் இயற் பெயர், அதனைத் தொடர்புடைய மற்றொன்றினைத் தொன்று தொட்டு ஆகிவருவது. பின்னது, கடவுளர் பெயரை மனிதர்கட்கும்

1. இலக்கண விளக்க உரை 174.

விலங்குகட்கும் இட்டு வழங்குதல். ஆக, நான்கு பெரும் பிரிவு ளாக்கிக் கொள்ளுதலே விட, இடுகுறி, காரணம் என்ற இரண்டின் உட்பிரிவுகளாக்கிக் கோடலே நன்னூல், கருத்திற்குப் பொருந்தி வருகிறது.

இருதிணைப் பொதுப்பெயர் பாற்பொதுவாய் நிற்றல் (284): உயர்திணை, அஃறிணை என்ற இரு திணைகளுக்கும் பொதுவாக வரும் பெயர்கள் விரவுப் பெயர்களாகும்.

சாத்தன் இவன்
சாத்தன் இவ்வெருது
சாத்தி இவள
சாத்தி இப்பசு

என அவை,உயர்திணை ஆண் பெண் பால்களுக்குப் பொதுவாயும் அஃறிணை ஆண், பெண் பால்களுக்குப் பொதுவாயும் வருதலை 'ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும்'என அறைத்தார். இவற்றை உட்படுத்தித் தொல். சொல்-பெயரியலில்,[1] சாத்தி வந்தாள் என்பது போன்ற பன்மை எடுத்துகாட்டுகளையும் இணைத்து 'பன்மை பொதுப் பெயர்' என்றார். பவணந்தியார் இதனை விலக்கி, ஏனைய நான்கை மட்டும் கூறுதலால், இதனை 'மறுத்தல்' என்னும் மதம் என்கிறார் சங். ஒருமை உள்ளிட்ட பெயர்களைப் பன்மைப் பெயர் எனச் சுட்டுவது யாங்ஙனம் என வினு எழுப்பி விசேடண இலக்கணம் காட்டி விளக்கம் உரைத்தனர் சேனவரையர் முதலான தொல்காப்பிய உரையாசிரியர்கள். தொல்காப்பிய உரைகளைப் பின்பற்றி, மயிலையும் தம் நன்னூல் உரையில் 'யானை வந்தன' என்ற பன்மைப் பெயர் எடுத்துக்காட்டைக் காட்டுவர்.

பன்மைப் பொதுப்பெயர் உயர்திணைப் பலர்பாலையும் அஃறிணை பலவின் பாலையும் குறித்தற்குக் காட்டாக, சங்.'கோதைகள் இவர், கோதைகள் இவை' என்று காட்டுகிறார். இக்காட்டு நன்னூலார் காலத்திற்கு அமையும். தொல்காப்பியர் காலத்திற்கு அமையாது. ஏனென்றால் தொல்காப்பியர் காலத்தில் உயர்திணைச் சொற்களில் 'கள்' விகுதி சேர்ந்துவருதல் இல்லை. அஃறிணைச் சொற்களிலும் ஒரோ வழியே கொள்ளப்பட்டது. "பன்மைப் பொதுப் பெயருள் பன்மை என்பது பிறிதோடியையு நீக்கிய விசேடணம் அன்றெனத் தோன்றியவாறே விசேட இலக்கணம் சிதைத்து இடர்ப்பட்டு உரை கூறுவாரும் உளர்" என்று சங்., சேனவரையர், மயிலை. ஆகியோரை மறுத்துள்ளனர். இம்மறுப்புச் சரியன்று. விசேடணம்

1. தொல், சேனவரையம், 28,

அமைவுடையதும் மற்றொன்றினின்று வேறு படுத்துவதும் ஆகிய இரண்டிலக்கணமும் உடையதாயிருத்தல் வேண்டும். இது 'சம்பவ வ்ய பிசாராப்யாம், ஸ்யாத் விசேஷணமர்த்தவத்' என்பதனுல் அறியப்படும்.[1] 'கைமதயானை' என்பதில் கை என்பது அமைவு டையதாயினும், கையில்லாத யானை இன்மையான் ஒன்றனை வேறு படுத்தல் இன்றுகலின், இயைபுடையதாதல் இன்று. வெண்டாமரை என்பதில் வெண்மை செந்தாமரையை நீக்குதலின் இயைபுடைய தாயிற்று. இத்தகைய விசேடணமின்றி உபலட்சண விசேடணம் என்ற ஒருவகை உள்ளது. ஒருகூட்டத்துள், குறிப்பிட்ட ஒருவனை சுட்டிக் காட்டும்போது, 'சரிகைத் துண்டு தோளில் போட்டிருப் பவனே முருகன்' என்று ஒருவன் காட்டக் கண்டவன், மற்றொரு நாள், முருகன் தோள் துண்டு இல்லாதிருப்பினும் அடையாளங் கண்டு கொள்வான். துண்டு இல்லாத போது முருகன் பிறனொரு வன் ஆயினுமல்லன். பன்மை சுட்டிய பெயர் என்பதில், பன்மை என்பது இதுபோன்ற உவலட்சண விசேடணம். பன்மை சுட்டிய பெயர் ஒருகால் ஒருமையைச் சுட்டினும் தவறு இன்று; பன்மை சுட்டுதல் உண்மையின் அது பொருந்தும்.

தன்மை முன்னிலைப் பெயர்கள்—பொதுப் பெயர்களா? (85): யான், நான், யாம், நாம் என்ற நான்கும் தன்மையிடப் பெயர் கள். எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ என்ற ஐந்தும் முன்னிலை இடப் பெயர்கள். இவை, உரைத்தலும் கேட்டலும் இல்லா அஃறிணை இடத்தும் வருகின்றன. தொல்காப்பியம் அதற்கு இடந்தருகிறது என்பது சங். கருத்து.

> "கேட்குந போலவும் கிளக்குந போலவும்
> இயங்குந போலவும் இயற்றுந போலவும்
> அஃறிணை மருங்கினு மறையப் படுமே"

என்பது தொல்காப்பிய விதி[2] யாதலானும், பேய் பூதங்கள் உரைத்தலும் கேட்டலும் உள்ளவாதலானும் தன்மை முன்னிலைப் பெயர்கள் பொதுப் பெயர்களாயின. முனிவர் இக்கருத்தை மறுத்துரைப்பர். தொல். அஃறிணை உயிர்களையும் உயர்திணை யாகக் கொண்டு போற்றுவர்.

> "மக்கள் தாமே ஆறறி வுயிரே
> பிறவும் உளவே அகக்கிளப் பிறப்பே"

---

1. வேங்கடராசுலு ரெட்டியார். நன்னூல் உரையும், தொல்காப்பியமும் கோபால கிருஷ்ணமாச்சாரியர் 60 ஆம் நிறைவுமலர் 75-86
2. தொல். சொல். 409

எனக் கூறி,[1] "ஒருசார் விலங்கும் உளவென மொழிப"[2] என மேலும் கூறுதல் மூலம், விலங்கினுள் ஒரு சாரான கிளி, குரங்கு, யானை முதலியவற்றையும் ஆறறியுடையனவாய் அடக்குவர். ஆதலின் அம்மரபு பற்றிப் பொதுப் பெயர் எனப்பட்டன. "கேட்குந போலவும்" என்ற நூற்பாச் செய்தி புணர்ந்துரை வகையால் வழுவமைதியாகக் கூறப்பட்டனவேயாம். ஆதலின் அவைபற்றிப் பொதுப் பெயர் எனப்பட்டன எனக்கோடல் பொருந்தாது.

வினையாலணையும் பெயர் (286):

"வினையின் பெயரே படர்க்கை வினையால்
அணையும பெயரே யாண்டும் ஆகும்"

என்பது நூற்பா. தொழில் தன்னைச் சொல்லும் பெயர் தொழிற் பெயர்; தொழில் செய்தானைச் சொல்லும் பெயர் வினையால் அணையும் பெயர். இவை பெயராயின பொழுது உருபேற்கும். வினையாயின பொழுது பொருள் முற்றிப் பெயர் கொண்டு முடியும். தொழிற்பெயர் போல படர்க்கைக்கே உரியவாகாது. உண்டோன உண்டானை உண்டானை எனத் தனித்தனியாக மூவிடத்திற்கும் உரியவாக வரும். இது சங். விளக்கிய நுணுக்க உரை. மயிலை. "தொழில் தன்னைச் சொல்லும் பெயர் படர்க்கையாம். தொழிலாகும் பெயர்கள் மூவிடத்தும் ஆவனவாம்" என உரை வகுத்தனர். இந் நன்னூல் நூற்பாவை ஆசிரிய வசனமாக எடுத்தாண்ட இலக்கண விளக்கத்தாரும், மயிலை. வழியிலேயே பொருளுரைத்தனர்.[3] தொழிற்பெயர் படர்க்கைக்கே உரியவாம் எனத் தேற்றேகாரப் படுத்திச் சொல்வதற்கும், செய்திபாகப் 'படர்க்கையாம்' எனச் சொல்வதற்கும் வேறுபாடு உண்டு. இந்நுணுக்க உரை வேறுபாட்டை உணர்ந்து உரை இயற்றுகிறார் சங். தொழிற்பெயர் படர்க்கையிடத்து வரும் என்பது 285-ஆம் நூற்பாவில் கூறப் பட்டாகி விட்டது. மீண்டும் ஈண்டுங் கூறல், கூறியது கூறலாம். ஆதலின் சங். ஈண்டுப் புதிய செய்தி கூறப்பட்டது போலத் தேற்றேகாரங் கொடுத்து உரை வகுப்பதே பொருத்தமானது.

ஆகுபெயர் (290): ஒன்றன் பெயரால் அதற்கு இயைபிறிதைத் தொன்முறை உரைப்பது ஆகுபெயரின் இலக்கணம்.

---

1. தொல். பொருள், மரபியல் 33
2. தொல். பொருள். மரபியல் 34
3. இலக்கண விளக்கவுரை 186

இல்க்கணம் வரையறுப்பதிலும் நூற்பாவிற்கு உரை வகுப்பதிலும் உரையாசிரியர்களிடை கருத்து வேறுபாடு எழவில்லை. எடுத்துக் காட்டு நல்குவதில் வேறுபாடு நேர்ந்திருக்கிறது. மயிலை. குழிப் பாடி சீனமென்பன அவ்விடமுணர்த்தின் இயற் பெயராம்; இப்படாம் குழிப்பாடி, இப்பட்டுச் சீனமென அவ்விடத்திற் பொருள் உணர்த்தின் ஆகுபெயராம் எனக் காட்டினர். இக் காட்டைச் சங். மறுப்பர். அ) இப்பட்டுச் சீனத்துள்ளது என்பதே குறைந்து இப்பட்டுச் சீனம் என நிற்கிறது. இப்பட்டு என்னும் எழுவாய்க்கு உள்ளது என்பது பயனில்லை யன்றிச் சீனம் என்பது பயனில்லை அன்று. (ஆ) சுட்டிக் கூருது சீனம் என வாளா கூறின் அது பல பொருளொரு சொற் போல் அவ்விடத்தினையும் பட்டினையும் உணர்த்துவதில்லை. (இ) சீனம் என்பதனை ஆகுபெயர் எனின், 'திருவளர் தாமரை'[1] போன்ற உருவகங்களையும் ஆகுபெயர் எனக் கூறவேண்டி இருக்கும் என சங். தரும் மறுப்புரையில் தருக்க நெறி இருப்பினும், உலக வழக்கில் 'இப்பட்டுச் சீனம்' போன்ற வழக்காறுகள் இன்றும் வழங்குகின்றன என்பதனை மறுத்தற்கில்லை. மயிலை., எழுத்துச் சொற் பொருள் யாப்பணி என்பன, அச்சொல்லப்பட்ட பொருள்களை உணர்த்தின் இயற்பெயராம். இவ்வதிகாரம் எழுத்து, இவ்வதிகாரம் சொல், இவ்வதிகாரம் பொருள், இவ்வதி காரம் யாப்பு, இவ்வதிகாரம் அணி என அவற்றைச் சொல்லும் அதிகாரங்களை உணர்த்தின் (சொல்) ஆகுபெயராம் என எழுதினர். இதனைச் சங். மறுத்தனர். சொல்லாகு பெயராவது சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆவது. "இந்நூலுக்கு உரை செய்தான்" என்றதில் உரை என்ற சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆகிவந்தது. இது போன்று எழுத்துச் சொல் பொருள் யாப்பு அணி என்ற சொற்கள் ஆகிவருவதில்லை. ஆதலின் மேற்கண்டன சொல்லாகு பெயர்கள் அல்ல என்பர் சங். காரியத்தின் பெயர் காரணத்துக்கு ஆகிவருவது காரிய வாகுபெயராம். எழுத்து சொல் பொருள் முதலான இலக்கண மாகிய காரியத்தின் பெயர் அதனை அறிவித்தற்குக் காரணமாகிய நூல்களுக்கு ஆகிவருதலால் மேலே மயிலை காட்டின காரியவாகு பெயர்களாகின்றன. சொல்லாகு பெயர்கள் ஆவதில்லை. ஆதலின் சங். கருத்தே ஏற்புடையது.

ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே (293): இந் நூற்பாவிற்கு 'ஆறனுருபும் அவ்வுருபுகளை ஏற்கும்' என மயிலை. உரை

1. திருக்கோவையார், 1

வகுத்தனர். சங்., இலக்கண விளக்க உரையாசிரியர்[1] (195) ஆகியோரும் இவ்வாறே உரை கொண்டனர். தேசிகர், தம் இலக்கணக் கொத்துச் சூத்திரம் 25 உரையில், 'ஆறனுருபு உருபுகளே ஏற்றற் போல' எனக் குறிப்பதால் அவரும் இக்கருத்தினரே என்பது புலப்படுகிறது. தொல்காப்பியத்து வேற்றுமை மயங்கியலில் பிறிது பிறிதேற்றலும் என்பதற்கு இளம்பூரணரும் சேனாவரையரும் இப் பொருளே கொண்டனர். முனிவர் இவ்வாறு கொள்ளாது, எழுவாயாக நின்ற உருபே ஐம்முதலிய ஆறுவேற்றுமைகளின் உருபும் ஏற்கும் என உரை கண்டனர். இவ்வாறே கவிராயரும் விசாகப் பெருமாளையரும் முனிவரைப் பின்பற்றிக் கூறினர். முனிவரும் கவிராயரும் கொள்ளும் உரையே மிகப் பொருத்தம். ஏனெனில், உருபேற்றல் பெயர்க்கே உரிய இலக்கணம். 'பெயர் வழி தம்பொருள் தரவரும் உருபே'[2] என்றும், 'ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்'[3] என்றும் வரையறைகள் நூலாசிரியராலே முன்பே கூறப்பட்டுள்ளன. ஆதலால் 'அது' என்ற இடைச்சொல் அஃனத்து வேற்றுமை உருபேற்கும் எனல் மாறுகொளக் கூறலாம்.

சாத்தனதை சாத்தனதால் என்னுமிடத்துச் சாத்தனது என்பது துவ்விகுதியும் அகரச் சாரியையும் பெற்று உருபேற்று நின்ற வினைக் குறிப்புப் பெயர். உருபு ஏற்று நின்றது சாத்தன் என்ற பெயரே தவிர, 'அது' என்ற உருபன்று. உருபேற்புழிப் பெயர் போலத் தனித்து நின்று உருபேற்றல் வேண்டும். ஈண்டுச் சாத்தன் என்ற பெயரைச் சார்ந்து, உருபு உருபேற்றது என்பது பொருந்தாது. அதனை, அதனுல் என்று அன் சாரியை பெற்றே உருபேற்க வேண்டும். அவ்வாறு ஏலாமை இலக்கண மரபன்று. அவ்வாறு ஏற்றலும் சுட்டுப்பெயர் உருபு ஏற்றதாகுமன்றி ஆரும் வேற்றுமை உருபு ஏற்றதாகாது. இந் நூற்பாவிற்கு முதல் நூற்பா.

> "பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
> விளியென்றாகும் அவற்றின் பெயர்முறை

என்பதாம். இதனை அடுத்தே 'ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே' என்ற நூற்பா அமைகிறது. ஈண்டு அவ்வுருபு என்ற சுட்டு நெஞ்சறி சுட்டாய்ப் 'பெயரே' என்றதாற் போந்த பெயர் முழுவதும் உருபாய எழுவாய் வேற்றுமையை உணர்த்தி நின்றது. இவ்விரு நூற்பாக்களையும் அடுத்து, "நீயிர் நீவிர் நான் எழுவாய் அல

1. இலக்கணவிளக்க உரை 195
2. தன்னூல் 241
3. தன்னூல் 291

பெரு' என்ற நூற்பா அமைந்துளது. இந்நூற்பா, நீயிர் முதலிய சொற்கள் எழுவாய் வேற்றுமையை அன்றி, ஏனை ஆறு வேற்றுமை உருபையும் ஏலா என விதித்தலும், 'ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே' என்ற நூற்பாவில் கிடைத்த விதியை 'நீயிர் நீவிர் நான் முதலியன பெரு' என விலக்குதலும் காண்க. இவ்வாறில்லை எனில், எழுவாய் வேற்றுமைக்கு இலக்கணம் கூறியபின் 'நீயிர் நீவிர்' என்ற நூற்பாவை அமைத்திருத்தல் வேண்டும். அவ்வாறு அமைக்காமல் 'ஆறனுருபும் ஏற்கும் அவ்வுருபே' என்றதன் பின் 'நீயிர் நீவிர் நான்' என்னும் நூற்பாவை அமைத்ததே இக் கருத்தை வலியுறுத்தற்காகும்.[1]

எழுவாய் வேற்றுமை (295): முதல் வேற்றுமையின் உருபாவது திரிபில்லாத பெயரேயாம்; வினையையும் பெயரையும் வினவையும் கொள்ளுதல் அதன் பயனிலையாம். 'பயனிலையாவது மேலொன்றனையும் வேண்டாது பொருள் முற்றி நிற்கும் நிலை, கொண்டு முடிக்கும் சொல்' எனப் பயனிலைக்குச் சங். விளக்கம் கூறினர். இவ்விளக்கத்தை மறுப்பர் போன்று, முனிவர், சங். உரையைத் திருத்திப் புதுக்கினர். "பயனிலை என்றது ஈண்டு முடிக்கும் சொல்லன்று; பொருள் நிலை என உணர்க. பொருள் நிலை எனினும் பயனிலை எனினும் ஒக்கும்," என்பது முனிவரின் விளக்கம். மேலுந் தொடர்ந்து, 'வினை பெயர் வினாக்காளும் என முற்றுச் சொல்லால் கூறுமல், வினைபெயர் வினாக் கொளல் எனத் தொழிற் பண்புச் சொல்லால் கூறியிருத்தலானும், இரண்டாம் வேற்றுமை முதலியவற்றிற்கு உருபும் பொருளும் கூறுதலின் இம்முதல் வேற்றுமைக்கும் உருபும் பொருளும் கூற வேண்டிய இன்றியமையாமையானும், எட்டு வேற்றுமைகளுக்கும் முடிக்குஞ் சொல், 'எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும் அல்ல வினைகொளும்' (319) என்னும் நூற்பாவால் பிற் கூறப் படுதலானும், முன்னும் (295) கூறி பின்னும் கூறுதல், கூறியது கூறலாதலானும் பயனிலையை 'முடிக்கும் சொல்' எனக் கூறியார் கூற்றை மறுத்து உரைப்பர்.

இவற்றை நோக்க, முடிக்குஞ்சொல் என்பது பயனிலைக்கு ஒரு வகையில் பொருந்தினும், பலவகையில் பொருந்தவில்லை. ஆதலின் 'பொருள் நிலை' என விளக்கும் முனிவர் விளக்கமே மிகப் பொருந்துகிறது. எழுவாய் வேற்றுமை வினாக்களைக் கொண்டும் முடியும். அவ்வாறு முடிதற்கு 'ஆர் யாது, ஆர் எவன்' என்பவற்றை காட்டாகக் காட்டினர் முனிவர். மயிலை, 'சாத்தனே, மக்களோ

1. நன்னூல், தண்டபாணி தேசிகர் நன்னூற் பதிப்பு, அடிக்குறிப்பு, பு. 233

என்றும் விளைவேற்றன' என்று விளை இடைச் சொற்களைக் கொள்ளும் என உதாரணம் காட்டுவர். இதனைச் சுட்டிக்காட்டி, முனிவர் தம் உரையில் மறுத்துரைப்பர். விளை இடைச் சொற்களைக் கொள்ளும் எனக் காட்டின், தெரிநிலை தேற்றம் முதலிய பொருள் தரும் இடைச் சொற்களையும் கொள்ளும் எனக் கூற வேண்டி நேரும். அவ்வாறு கூறின் அஃது இடைச்சொல் சந்தி ஆகும். எழுவாய்ச் சந்தி ஆகாது. எழுவாய்ச் சந்தி பற்றிய அதிகாரத்தில் இடைச்சொல் சந்தி பற்றிப் பேசுதல் தேவையின்று. எனவே, மயிலைநாதர் காட்டுவது இடையியலுக்கே பொருந்தும்; பெயரியலுக்குப் பொருந்தாது. பெயரியலுக்குப் பொருந்துவதான முனிவரின் விளக்கமே ஈண்டுப் பொருந்தும்.

விளி ஏலாப் பெயர்கள் (314)

"நுவ்வொடு விளைச்சுட் டுற்ற னளர
வைதுத் தாந்தான் இன்னன விளியா"

இந்நூற்பாவில் குறிக்கப்பட்ட பெயர்களுள் 'தாம்' என்ற விரவுப் பெயர் பற்றிச் சிறு வேறுபாடு. மயிலை, இலக்கண விளக்க உரையாசிரியர், கவிராயர், 'தாம்' என்பதும் விளியேலாப் பெயர்களுள் ஒன்றே என்று விளக்கினர். இலக்கண விளக்க ஆசிரியர் 'தாமும் தானும் இன்மை வேண்டும் விளியொடு கொளலே'[1] என எண்ணும்மை கொடுத்துப் பிரித்துப் போற்றினர். சங். தாம் என்பது அசைநிலை என்று விலக்கினர். அவ்வாறு விலக்குதற்கு அவர் காட்டும் காரணம் மிகப் பொருத்தமானது. 304 ஆம் நூற்பா விளிக்கப்படும் ஈறுகளைப் பட்டியல் ஆகத் தருகிறது. ஆண்டுக் கூறப்படா ஈறுகள் விளி ஏலா ஈறுகள் என்பது அங்கேயே தெளிவு படுகிறது. அவ்வாறு விளி ஏலா ஈறுகளுள் மகர ஈற்றுப் பொதுப் பெயரும் அடங்கும். ஆதலின் முன்னரே (304) விலக்கப் பட்டமையின் ஈண்டு தாம் என்றது அசைநிலை எனக் கோடலே பொருந்தும்.

இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்றலுக்குப் புறநடை (316)

"முதலிலை சினையிலை எனவே றுளஇல
உரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும்"

இந்நூற்பாவிற்கு மயிலை, கண்ட உரை வேறு; பின்வந்தோர் கண்ட உரை வேறு. 'இவையே முதல், இவையே சினை என வேறறியக் கிடப்பனவில்லை; சொல்லுவார் குறிப்பினானே முதலே சினையுமாம்; சினையே முதலுமாம்; பிண்டப் பொருளும் அவ்வாறே

1. இலக்கண விளக்கம் 216

யாம் என உரைத்தனர். கை என்பது மனிதனை நோக்கச் சினை யாயும், விரலை நோக்க முதலாயும், விரல் என்பது கையை நோக்கச் சினையாயும், நகத்தை நோக்க முதலாயும் வருதல் காண்க என்பது மயிலை கண்ட உரை. சங். கண்ட உரை வேறு. 'யானையைக் குறித்தவழி யானை யுண்டாய்க் கால், கை, கோடு வேறில்லையாய், கால், கை, கோடு முதலியவற்றைக் குறித்தவழி அவையுண்டாய் யானை வேறில்லையாய் நிற்கும். கவிராயரும் இப் பொருளையே போற்றினர். "'வேறு உள இல' என்றமையான் முதல் சினை இரண்டன்பாலும், ஐயுருபு வாராமைக்கு ஏதுக் காட்டினர் என்பது இருவர்தம் துணை விளக்கம். மயிலை, கூறிய உரையை மறுத்துத் தன் உரையை நிலைநாட்டுகிறார் சங். கவிராயரும் அவரைப் பின்பற்றுகிறார். ஆனால், வை. மு. ச. உம் சே. கி. உம் மயிலை உரையை மற்றோர் உரையாகப் போற்று கிறார்கள். மயிலை, உரை ஏற்புக்குரியதா என்பது ஆய்விற் குரியது. மயிலை. முறையில் பொருள் உரைத்தால், முதல் சினை இரண்டன் பாலும் ஐயுருபு வாராமை என்ற கருத்துப் பெறப் படாது. முதலும் சினையும் ஒன்றை நோக்க முதலாயும், மற்றொன்றை நோக்கச் சினையாயும் வருதல் வெளிப்படை. இவற்றை உரைப்போர் குறிப்பின என்று நூற்பாவில் குறித்தல் வேண்டா. தொல்காப்பியரும் முதல் சினைகள் ஒரு பொருட் பகுதிய என்பது தோன்ற, "முதலும் சினையும் பொருள் வேறுபடா" என்று கூறியுள்ளார்.[1] இவற்றை நோக்க, சங். கண்டு காட்டிய உரை முறையே சிறந்தது எனத் தோற்றுகிறது.

செய்வித்தான்—ஏவற் கருத்தா (320): "செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய் பொருள் ஆறும் தருவது வினையே" என்பது விதி. செய்பவன் – கருத்தா எனப்படுவான். அரசன் ஆலயம் செய்தான் என்பதில் அரசன் – ஏவுதற் கருத்தா. இஃது இயற்றினன் தொழிலுக்கு ஏவினனைக் கருத்தாவாக்கிக் கூறுதலின் ஏவற்கருத்தா எனப்படும். குயவன் பானை வனைந் தான் என்பதில் குயவன் இயற்றுதற் கருத்தா. மயிலை. குயவனைக் கருமக் கருத்தா என்று குறிப்பர்.

'அரசன் ஆலயம் செய்வித்தான்' என்பது ஏவற் கருத்தா என்ற கருத்தில் மயிலை. எழுதுவார். இக் கருத்தைச் சங். மறத்து ரைப்பர். செய்தற் ருெழிலைத் தச்சன் இயற்றினுற் போலச் செய் வித்தற் ருெழிலை அரசன் இயற்றுதலின் இத்தொழிலுக்கு அரசனும் இயற்றுதற் கருத்தாவேயாம். சங். கருத்து ஏற்றற்குரியது. செய்

1. தொல். வேற்றுமை மயங்கியல் 6.

வித்தலும் ஒரு தொழில் என்று காட்டி, மயிலேயைச் சங். மறுக்கும் நுட்பம் ஓர்க.

வாய்பாடு (340): ''செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்'' என்ற பெயரெச்சம் பற்றிய முதல் வரிக்குச் 'செய்த செய்கின்ற செய்யும் என்னும் மூவகைப்பட்ட சொல்லின்கண்' என உரை வரைந்தனர் சங். பாட்டு என்னும் பல பொருள் ஒரு சொல் ஈண்டுச் சொல்லே உணர்த்தி நின்றது என்பது அவர் கருத்து.

மயிலே. பாட்டு—வாய்பாடு, எனப் பொருள் காட்டுவர். கவிராயர், வை.மு.ச., சே.கி. ஆகியோரும் இவ்வாறே 'வாய்பாடு' எனப் பொருள் உரைப்பர். வாய்பாடு எனப் பொருள் காட்டலே தக்கது. தமிழிலக்கண மரபிற்கும் பொருத்துவது.

கால், கடை (343): 'ஒலித்தக்கால்'[1] 'ஈதல் இயையாக் கடை'[2] என்பவற்றுள் 'கால்', 'கடை' என்பன காலம் பற்றிய இடப்பொருள் உருபுகள் என்பர் மயிலே. சங். இதனே மறுப்பர். 'அதனகத்து இடப்பொருள் இன்றி ஈதல் இயையாது ஆயின் என்னும் பொருள் தந்து நிற்றலின் வினையெச்ச விகுதியேயாம்' என்பர். இவ்வாறு பொருள் உரைப்பார் மயிலே, காலத்தும் இருந்தனர் போலும். அவர் சிறப்புரையால் இது விளக்கமாகிறது. ''பின் முன் கால் கடை என்பன முதலானவும் வினையெச்சம் என்பாரும் உளர். அவை செய்த என்னும் காலம் பற்றி இடப்பொருள் உருபாயும் அடங்கு மெனக் கொள்க' என்று அவர் கூறுதலினின்று இதனே அறியலாம். மயிலே. கூறுவதில் பொருத்தம் மிகுதியாய் இருக்கிறது. ஏனெனில், கால், கடை என்பன இடப்பொருள் ஆகியன உருபுகள் ஏழாம் வேற்றுமை நூற்பாவில் தரப்பட்டிருத்தலும்[3] இங்கும் அப்பொருள் பொருந்தியிருத்தலும், பரிமேலழகரும் இவ்வாறு பொருள் செய்துள்ளமையும் காண்க.

'ஒலித்தக்கால்' என்பதனே, ஒலித்த + அக் + கால் எனப் பிரித்துப்பொருள் கொள்ளுதல் ஒரு முறை. அவ்வாறு கொள்ளும் போது 'கால்' என்பதற்கு வினையெச்சமாகப் பொருள் கொள்ளுதல் இயலாது. 'பொழுது' அல்லது 'இடம்'என்றே பொருள் கொள்ளுதல் வேண்டும். கால், கடை என்பன பிற்காலத்து எச்ச ஈறுகளாகக் கொள்ளப்பட்டாலும், பவணந்தியார் யாண்டும் இவற்றை எச்ச ஈறுகளாகக் காட்டாமை கருதத்தக்கது. ஆதலின் இக்

1. திருக்குறள் 769
2. திருக்குறள் 280
3. நன்னூல் 302

காரணங்களை நோக்க, மயிலை. கொண்ட பொருளே மிகப் பொருந்துவதாகத் தெரிகிறது.

வினையெச்சங்களின் முடிபு (344) : செய்து முதலான பன்னிரண்டு வினையெச்சங்களுள் முதல் நான்காகிய செய்து செய்பு செய்பா செய்யூ ஆகியனவும், ஈற்றிலுள்ள வான், பான், பாக்கு என்பனவும் தன் கருத்தாவின் வினையைக் கொண்டு முடியும்.

செய்தென, செய்த, செயின், செய்யிய, செய்யியர், என்பன தன் கருத்தாவின் வினையையும், வேறு கருத்தாவின் வினையையும் கொண்டு முடியும்.



சங்., கவிராயர், வை.மு.ச. ஆகியோர் இக் கருத்தினரே. மயிலை. வேறு கருத்தினர். இலக்கண விளக்க உரைகாரரும் மயிலை. போக்கினரே.[1] அவ்விருவரும், முதலில் நான்கும், ஈற்றில் மூன்றும் தம்மை நிகழ்த்தின கருத்தாவினது வினையைக் கொண்டு முடியும். ஏனைய ஐந்தெச்சங்களும் பிற கருத்தாவினது வினையையும், உம்மையால் தம்மை நிகழ்த்தின கருத்தாவினது வினையையும் கொண்டு முடியும் என வகுத்தனர். இவ்வுரையைச் சங். மறுத்துரைப்பர். அம்மறுப்பு கருதுதற்குரியது. அது பொருளாயின் வினை முதல் வினை கொள்ளும் பிறவினை கொள்ளும் எனக் கூறினும் யாப்பு அமையும். ஆதலின் அங்ஙனம் கூறல் வேண்டும். ஆனால் அவ்வாறு நூலாசிரியர் கூறவில்லை. வினை கொண்டு முடியும் என இதற்குக் கூறினர் எனின் முன்னர்க்கூறிய பெயரெச்சத்திற்கும் பெயர் கொண்டு முடியும் எனக் கூறல் வேண்டும். அவர் அவ்வாறு கூறவில்லை. பொதுவியலுள், 'பெயர் வினை உம்மை' (300) என்னும் நூற்பாவில் எச்சங்கள் அனைத்தையும் திரட்டி, அவை அனைத்தும் தத்தம் எச்சம்

1. இலக்கண விளக்கம் 247

கொள்ளும் எனக் கூறுகிறார் ஆதலால், ஈண்டும் கூறினார் எனல் கூறியது கூறலாக ஆகும். நடந்து வந்தான் சாத்தன் என வினை கொண்டு முடியாமல் வினை முதல் வந்தே முடிவன உள்ளன. தொல்காப்பியர்[1] இவ்வாறு கூறவில்லை. கவிராயரும் இக் கருத்தினரே. மயிலை காட்டுவதிலும், சங். காட்டுவதில் மிகப் பொருத்தம் காணப்படுகிறது ஆதலின் ஏற்பதற்குரியது.

ஆக்கச்சொல் தொக்கு வருதல் (347) : ஆதல் என்னும் ஆக்கத்தைக் கொண்ட வினைக்குறிப்புச் சொற்கள் ஆக்கச் சொல் இல்லாமல் இயலா. எ.டு.: அறங்கேட்டு அருள் உடையன் ஆயினன்.

உடையன் — ஆக்கவினைக் குறிப்பு; ஆயினன் — ஆக்கச் சொல். இவ்வாறு ஆக்கச்சொல் பெற்றே வருவது வழக்கு நடை. ஆக்கச் சொல் இன்றியும் வருதல் உண்டு.

"வேங்கையும் கூந்தலும் நாறி
ஆம்பல் மலரினும் தான்தண் ணியளே"

என்று வருதல் காண்க.[2] இவ்வாறு வருபவற்றைச் செய்யுள் விகாரம் என்பர் மயிலை. இது பொருந்தாது என்பர். அவர் காட்டும் காரணங்கள் கருதுவதற்குரியன: 'இவர் கற்றுவல்லர்' எனவழக்கு நடையிலும் ஆக்கச் சொல்லின்றி வருதலும், பின்னே (345) ஆக்கச் சொல்லின்றி மொழி வரப்பெறும் என்பதை நூலாசிரியரே காட்டுதலும், ஆய்ந்து பார்க்கும் போது, மயிலை. கருத்து அத்துணை வலிவுடையதன்று என்பது தோற்றுகிறது.

உருபும் வினையும் எதிர்மறையில் திரியாமை (354)

"உருபும் வினையும் எதிர்மறுத் துரைப்பினும்
திரியா தத்தம் ஈற்றுஉருபின் என்ப"

'ஈற்றுருபின்' என்பதற்கு மயிலை. தத்தம் ஈற்றுருபுகளின் என்று ஆற்றொருழுக்காகப் பொருள் எழுதி, ஆ வாராது, உண்ணான் சாத்தன் என்றெல்லாம் எடுத்துக்காட்டு நல்கினர். சங். எதிர் மறுத்துக் கூறினும் உருபு, உருபினின்றும் திரியாது; வினை ஈற்றினின்றும் திரியாது என எதிர் நிரனிறையாகக் கொள்க என்று குறிப்பெழுதினர். 'உருபின்' என்பதிலுள்ள 'இன்' உருபை 'ஈற்று' என்ற இடத்தும் கூட்டவேண்டும். உருபும், வினையும் என நிறுத்தியபடியே தத்தம் உருபின் உருபும், ஈற்றின் வினையும் திரியா எனின் முறை நிரனிறைப் பொருள்கோள்.

1. தொல். வினையியல் 33, 85
2. அகம் 21

தத்தம் ஈற்றின், உருபின் என மாறிக் கூறலால், இது, எதிர் நிரனிறைப் பொருள்கோள். சங். விளக்கம் நூற்பாவின் பொருட் செறிவை மிகுதிப்படுத்துகிறது. ஆதலின், சங். உரைகோள் சிறப்பானது.

உருபும் வினையும் அடுக்கி முடிதல் (355): வேற்றுமை உருபுகள் விரிந்தாயினும் தொக்காயினும் தம்முள் விரவிப் பல அடுக்கி வரினும் வேறுவேறு பல அடுக்கி வரினும் மூவகை வினைச் சொற்களும் தம்முள் விரவி அடுக்கும் தன்மையவன்றி வேறுவேறு பல அடுக்கி வரினும் அவற்றவற்றின் எச்சம் இறுதியில் ஒன்று வர அதனோடு அனைத்தும் முடியும் என்பது நூற்பாவின் கருத்து. 'முருகன் யானையது கோட்டை நுனிக்கண் பொருட்கு வாளால் குறைத்தான்' என்று உருபுகள் விரவிப் பல அடுக்கிக் குறைத்தான் என்னும் ஒரு வினை கொண்டது. இந்நூற்பாவிற்குப் பிறிதொரு வகையில் எடுத்துக் காட்டு நல்குவர் மயிலை.

> "சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
> மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
> செல்வமே போலதலை நிறுவித் தேர்ந்தநூல்
> கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்ததவே"

என்ற சீவக சிந்தாமணிப் பாடலையும்[1]

> "நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
> பதனன்று புக்குத திறனன்று மொழியினும்
> வறிது பெயர்குநர் அல்லர் நெறிகொள"

என்ற புறநானூற்றுப் பாடலையும்[2] காட்டினர். இவை வினையெச்ச வினையும் குறிப்புமடுக்கி ஒரு வினை கொண்டன என்ற சிறப்புக் குறிப்பையும் அவர் தந்தனர். இக்காட்டுகள் இந்நூற்பாவிற்குப் பொருந்துவன அல்ல என்றனர் சங். இப்பாடல்களில் வந்துள்ள வினையெச்சங்கள் ஒன்றோடு ஒன்று முடிவன. "கருவிலிருந்து... ஈன்று" என்பதன்றி, "கருவிலிருந்து காய்த்த" என முடியாது. ஈண்டு கருவிலிருந்து என்ற வினையெச்சம் 'ஈன்று' என்ற பிறிதொரு வினையெச்சத்தைக் கொண்டே முடிகிறது. பல அடுக்கி வந்து ஒன்றைக் கொண்டு முடிவதே இந்நூற்பாவின் கருத்து. ஆதலால், மயிலை. கருத்து அத்துணைப் பொருத்தமாக இல்லை.

ஒரு மொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே (358): "பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் ஒன்றே நின்று ஒழிந்த

1. சீவக. 53
2. புறம் 124

தன்னினங்களையும் தழுவுதற்கு உரித்தாம்" என்பர் மயிலை. 'தக்கோலம் தின்று தலைநிறையப் பூச்சூடி' எனின், தக்கோலத் திற்கு இனமான தீம்பூ, இலவங்கம், சாதி முதலானவுந் தின்று, தக்கோலம் என்ற ஒரு பெயர் மொழி இனமான மொழிகளையும் தழுவியது காண்க. தமிழ் படிப்பார் சிறந்திருப்பார் எனில், படிப்பான் சிறந்திருப்பான், படிப்பாள் சிறந்திருப்பாள் படிப்பார் சிறந்திருப்பார் என வினை இனமானவற்றையும் தழுவுதல் காண்க. பெயரும் வினையுமே இவ்வாறு இனத்தையும் தழுவும் என்ற கருத்தில் உரை கண்டார் மயிலை. சங். பெயர் வினை இடை உரி என்னும் நால்வகைச் சொற்களையும் அடக்கிக் கூறினர். மேலும் நூற்பாவில் "மொழி எனப் பொதுப்படக் கூறினமையின் நால்வகைச் சொற்கள் என்பது பெற்றும்" எனக் குறிப்புரையும் எழுதினர். உரிச் சொல்லிற்கு 'நனி உண்டான்' என்று சான்றும் காட்டினர். இஃது பொருத்தமே ஆயினும் இடைசொல்லிற்கு அவர் எடுத்துக்காட்டு நல்காமை கருதுதற் குரிய ஒன்றும்.

எச்சங்களின் முடிபு (360): எச்சம், சொல்லெச்சம், குறிப் பெச்சம் என இருவகை. அவற்றுள் சொல்லெச்சம், பெயரெச்சம் முதலாக இசைபெச்சம் ஈறாக ஒன்பது வகை. குறிப்பெச்சம் தனி வகையினது. இச்செய்திபைத் தாங்கியுள்ள இந்நூற்பாவின் பொழிப்பு வருமாறு: பெயரெச்சமும், வினைபெச்சமும், உம்மை யெச்சமும், சொல்லெச்சமும், பிரிநிலை எச்சமும், 'என' எச்சமும், ஒழியிசை எச்சமும், எதிர்மறை எச்சமும், இசை எச்சமும் ஆகிய சொல்லெச்சம் ஒன்பதும், குறிப்பெச்சம் ஒன்றும் தத்தம் எச்சங் களாக் கொள்ளும்.

இவ்வெச்சங்களுக்கு விளக்கம் கூறும் வகையில், இருவேறு கொள்கைகள் பண்டு தொட்டு இருந்து வந்துள்ளன. சில கருத்து வேறுபாடுகள் இருப்பினும், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோரின் உரை முறை ஒரு வகை.[1] சங். உரை பெரும்பாலும் இவர்களைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது. தொல். உரையாசிரியர்களுள் ஒருவராகிய தெய்வச் சிலையார் உரை நெறி அவர்களினின்றும் வேறுபட்ட புதுநெறி. மயிலை தம்முரையில் சுட்டிக் காட்டும் அவிநய நூல் உரையாசிரியர் இராசபவித்திரப் பல்லவதரையர் உரையும், தெய்வச் சிலையார் உரையும் ஒத்துள்ளன. இராசபவித்திரப் பல்லவதரையர் உரையே பழமையானது; முன்னது. மயிலைநாதரும் தெய்வச் சிலையாரும் அவிநய உரையைப் பின்பற்றித் தத்தம் காலத்தில் உரையியற்

1. தொல். எச்சவியல் 430-441

தினர். இருவேறு கொள்கையினரும் காட்டும் சான்றுகளும் விளக்கங்களும் பெரிதும் வேறுபட்டுள்ளன. பெயரெச்சம் : மயிலை உரை. "இணரெரி தோய்வன்ன இன்னு செயினும் புணரின் வெகுளாமை நன்று"[1] என்பது பிறர் இன்னு செயினும் தான் வெகுளாமை நன்றென 'ஒருவன்தான்' என்ற எஞ்சிய பெயர் கொண்டு முடிதலின் பெயரெச்சம். சங். உரை: 'செய்த சாத்தன்'. வினையெச்சம் : மயிலை உரை: "காலங் கருதி இருப்பர் கலங்காது ஞாலஞ் கருதுபவர்"[2] கொள்ளும் காலம் குறித்துக் கலங்காது இருப்பர் என்பதில் 'போர்வினை மேற்கொள்ளுதல்' என்ற வினை எஞ்சி நிற்றலின் வினையெச்சம். சங். உரை: 'செய்து வந்தான்'. உம்மையெச்சம் : மயிலை. உரை: "இலங்கு வாள் இரண்டினுள் இருகை வீசி" என்பதில் 'இருகையும் வீசி' என உம்மை கொண்டு முடிதலின் உம்மையெச்சம் ஆயிற்று. சங். உரை: சாத்தனும் வந்தான் என்புழி முன்னே கொற்றனும் வந்தான் என இறந்தது தழுவியது உம்மை எச்சம். சொல்லெச்சம் : மயிலை. உரை: "இசையா ஒரு பொருள் இல்லென்றல் யார்க்கும் வசையன்று" என்பதில் இசையா ஒரு பொருள் இல்லென்று சொல்லுதல் என 'சொல்' என்பது கொண்டு முடிதலின் சொல்லெச்சம். சங். உரை: நல்லவன் என்றுன்—என்று சொன்னுன் என்பது கருத்து. ஈண்டு சொல் என்பது எஞ்சி நின்றது. இங்கு இருவரும் ஒரு கொள்கையினரே. ஆதலின் ஒத்த காட்டு காட்டினர். பிரிப்பெச்சம் : மயிலை உரை: "அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்; பொறுமின் பிறர் கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்; வெறுமின் வினை தீயார் கேண்மை; எஞ்ஞான்றும் பெறுமின் பெரியோர் வாய்ச் சொல்"[3] என்ற பாவினுள் ஓரிடத்து நின்ற எஞ்ஞான்று' என்பதனைப் பிரித்துப் பிறவழியும் கூட்டி முடிக்க வேண்டி இருத்தலின் பிரிநிலை எச்சமாயிற்று. இஃது தீபக அணியை ஒத்துள்ளது. சங். உரை: சாத்தனே கொண்டான் என்பதில் பிறன் கொண்டிலன் என்ற கருத்துப் பெறப்படுதலின் பிரிநிலை. எனை எச்சம் : மயிலை. உரை: "எடுத்தலும் படுத்தலும் ஆயிரண் டல்லது, நவிற வில்லை என்மரு முளரே" என்பதனுள் 'எடுத்தலும் படுத்தலுமென, அவ்விரண்டு அல்லதென' என்று 'என' என்பது கொண்டு முடிதலின் எனை எச்சமாயிற்று. சங். உரை: கடல் ஒல்லென ஒலித்தது—என்பதில் எனவென் எச்சம் தம்மெச்சமாகிய வினையைக் கொண்டு முடிந்தது. இருதிறத்தார் கருத்தும் ஈண்டு ஒத்துள்ளது.

---

1. குறள் 309
2. குறள் 486
3. தாண்டியார், நன்மொழி 2

ஒழியிசை எச்சம்: மயிலை உரை: "செறுநரைக்காணின் சுமக்க இறுவரை காணின் கிழக்காம் தலை"[1] கிழக்காந் தலை என்பதன் துணிபு தோன்றுவதற்கு ஒழிக்கப்பட்ட அவர் கெடுவர் என்பதைக் கொண்டு முடிகிறது. இசைபென்பது சொல். ஒழிக என்னும் சொல் எஞ்சி நிற்பதைக் கருதுவர். சங். உரை: கூரியதோர் வாள்மன்—இப்போது ஒடிந்தது என்று கருத்தினது. கூரியதோர் வாளாக முன்பு இருந்தது. இன்று அந்நிலை ஒழிந்தது என்பது எஞ்சி நின்றது. எதிர்மறை எச்சம்: மயிலை. உரை: "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேரா தார்"[2] என்பதில் சேர்ந்தவர் நீந்துவர் என எதிர்மறை கொண்டு முடிவது. சங். உரை: வரலும் உரியன், யானே செய்தேன் என்பன எதிர்மறை எச்சம். வாராமைக்கு முரியன், யான் செய்திலன் என எதிர்மறை யெச்சங்கள் கொண்டன. இசைபெச்சம்: மயிலை உரை: ஒன்று சொல்ல அச் சொல்லானே வேறுபொருள் இசைத்தல். அஃதாவது இரட்டுற மொழிதல் அல்லது சிலேடை என்பது மயிலை. கருத்து. "குமரியாட முந்தை நலிகின்ற முதுமூப்பு ஒழியும் என்றன்"[3] ஈண்டுக் 'குமரி' என்பது குமரிக் கடலையும், குமரி பெண்ணையும் உணர்த்தி நின்றது. சங். உரை: இசையென்பது சொல். நால்வகைச் சொற்களுள் வேண்டுவன எல்லாம் தந்து அகலம் (விரிவுரை) கூறவேண்டி நிற்பன இசையெச்சம். இதற்கு 'இணரெரி தோய்வன்ன...'[4] என்ற குறளை எடுத்துக் காட்டி அழகான அகல உரையும் சங். செய்து காட்டுவர். குறிப்பெச்சம்: மயிலை. உரை: பிறிது மொழிதலணி என்பர். "பீலிபெய் சாகாடும்...", "கடலோடா..." என்ற குறட்பாக்களை[5] எடுத்துக் காட்டுவர். சங். உரை: நன். 269ஆம் நூற்பாவில் கூறப்பட்ட ஒன்றொழி பொதுச் சொல் முதலானவற்றை ஈண்டுப் பொருத்திக் காட்டுவர்.

மயிலை உரைக்கும் சங். உரைக்கும் உள்ள வேறுபாடுகள்: எஞ்சுபொருட் கிளவிகள் பத்தும் இருவகைய என்பர் தொல். முதல் ஏழும் ஒருவகை, பின் மூன்றும் பிறிதொரு வகை, ஆனால் தொல். உரைகாரர்கள், நன்னூல் உரைகாரர் சங். ஆகியோர் உரை வகுத்துக்காட்டும் முறை, முன் ஏழு வகையை ஒரு வகை யாகக் காட்டவில்லை. ஆனால், மயிலை. காட்டும் இராசபவித்திரப்

1. குறள் 498
2. குறள் 10
3. சீவக. 2720
4. குறள் 308
5. குறள் 476, 496.

பல்லவதரையர் முன் ஏழனையும் ஒருப்போலக் காட்டுகின்றனர்.[1] இராச பவித்திரப் பல்லவதரையர், மயிலை., தெய்வச் சிலையார் விளக்கத்தின்படி, முதல் ஏழு எச்சங்களிலும் ஒத்திருக்கும் பொதுப் பண்பு: 'புலப்படாத ஒரு சொல்லை வருவித்தல்' ஆகும். இவ்வாறு வருவித்து உரைப்பதால், சொல்லா தொழிந்த பொருள் நன்கு விளங்குகின்றது. ஏனைய, தொல். நன். உரைகாரர் கருத்துப்படி இப்பொதுப் பண்பு, பிரிநிலை, ஒழியிசை, எதிர்மறை என்ற மூன்று எச்சங்களிலேயே அமைந்துள்ளன. இம்மூன்று இரு கொள்கைகளின் ஊடே உள்ள இன்றியமையா வேறுபாடு. சங். முதலானோர் உரையில் உள்ள குறைபாடும் ஆகும். மயிலை. மேற்கோளாகக் காட்டும் உரையால் வினையியலில் கூறப்படும் பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவையும், எச்சவியல் அல்லது பொதுவியலில் கூறப்படும் அப்பெயர்க் கிளவிகளையும் வேறு வேறு எனப் பிரித்துணர முடிகிறது. மற்றவர் உரையால் அவ்வாறு பிரித்தறிய முடியவில்லை. பிரிநிலை. ஒழியிசை. எதிர்மறை, உம்மை, என என்னும் எச்சங்களை அவ்வவ் இடைச் சொற்கள் கொண்ட எச்சங்கள் என்று கூறுவதாகும். இடைச் சொற்களால் வரும் எச்சங்கள் பொருள் தருமாற்றை இடையியலில் கூறியிருப்ப, பொதுவியலிலும் அவற்றைக் கூறினர் பவணந்தியார் என்ற கருத்தைத் தோற்றுவிக்கிறது சங். முதலானோர் கொண்ட உரை. இம்மூன்று நூலாசிரியர் 'கூறியது கூறினர்' என்ற குற்றத்திற் குள்ளாக்குகிறது. இவையனைத்தையும் நோக்க மயிலை மேற்கோளாக வழங்கியுள்ள இராசபவித்திர பல்லவதரையர் உரையே மிகப் பொருத்தம் எனத் தோன்றுகிறது.

தொகைநிலைத் தொடர்மொழி (361): "ஒருமொழி போல நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்" என்ற வரிக்கு விளக்கம் உரைப்பதில் சிறு வேறுபாடு. வினையொடு வினை தொகை நிலைத் தொடராகாமையின் அதனை ஒழித்தும், நிலத்தைக் கடந்தான் நிலம் கடந்தான் என உருபு இடைவிரியின் பிளவு பட்டும். தொக்கதேல் பிளவு படாதும் தொடரும். ஆதலால் பிளவு படாது தொடர்தலையே 'ஒருமொழி போல' என்று கூறினர். இது சங். உரை முறை. 'ஒருமொழி போல' என்பது பல சொல்லே எனினும் தொடர்ந்து ஒற்றுமைப்பட்டு (1) ஒரு பெயராய் எட்டு வேற்றுமைகளையும் வினைகளையும் ஏற்றலும், (2) நிலைமொழி வருமொழி களாகப் புணர்ச்சி வகை ஏற்றலும் (3) ஒரு வினைச் சொல் லேயாய்ப் பெயரேற்றல் முதலான வினையிலக்கணம் எல்லாம் ஏற்றலும் என மூவகையாக்கி உரைப்பர் மயிலை.

1. குமாரசாமி ராஜா, ந., இ. ப. த. கருத்தரங்கக் கட்டுரை, *எஞ்சு பொருட்சிலேடைகள்*, திருச்சி, 1970



இவ்வாறு உரைப்பதைச் சங். மறுத்தனர். தொகை நிலைத் தொடர், பெயராயும் வினையாயும் நின்று தம் முடிவு கொள்ளுதல் போல. தொகாநிலைத் தொடரும் கொள்ளுகின்றன.



ஆதலின் மயிலை, உரை பொருந்தாது என்பர். இக்குறை மயிலை. உரையில் இருப்பதால் சங். உரையே ஏற்கத் தகுந்தது.

தொகைநிலைத் தொடர்மொழி (361): வேற்றுமை உருபு முதலாயின தொகுதலின் தொகை ஆயின என்பர் உரையாசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோர். ஒட்டி ஒரு சொல் நீர்மைப் படுதலின் தொகை ஆயின என்பர் சேனாவரையர், தெய்வச் சிலையார் ஆகியோர். நன்னூலார், உருபு முதலாயின தொகுதலின் தொகை என்ற கருத்துடையவர். எனினும் தொகை, 'ஒருமொழிபோல்' நடத்தல் வேண்டும் என்பதனை நுற்பாவில் வற்புறுத்துகிறார். 'தொகை என்னும் பலபொருள் ஒருசொல் ஈண்டு உருபு மறைதலை உணர்த்தி நின்றது' என்று விளக்குகிறார். 'ஒருமொழிபோல நடத்தல்' என்பதை அவர் 'பிளவுபடாது நிற்றல்' என்ற அளவிலேயே கொள்கிறார். இக் கொள்கை, தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர்க்கு மாறுபட்டது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், இலக்கண விளக்க உரைகாரர் ஆகியோர்[1] தொகை 'ஒருமொழியே' என்று வரையறுத்தனர். 'ஒருமொழியே' என்பதனையும் 'ஒருமொழிபோல நடத்தல்' என்பதனையும் வேறுபடுத்தி அவற்றிடையே இருக்கும் நுணுக்க வேறுபாட்டைக்

1. இலக்கண விளக்கவுரை 334

கண்டு காட்டியவர் சங். தன் கருத்தை ஒரு சீரிய உவமை வாயிலாக இவர் நிலைநாட்டுகிறார். தொகை என்றாலே இரு சொல்லின் கூட்டு என்பதாம்; தாய் என்று சொன்னாலேயே குழந்தை பெற்றமையைக் குறிக்குமாதலின், அவள் பின் 'மலடி' என்றுரைப்பது நகையையே தோற்றுவிக்கும். அதுபோல தொகை என்று சொன்னாலேயே இருமொழியைக் குறிக்குமாதலின், அதன்பின் 'ஒருமொழி' என்றுரைப்பது நகையையே தோற்றுவிக்கும் என்பது இவர் விளக்கம். "விகனத்தொகை, பண்புத் தொகை, அன்மொழித்தொகை என்னும் அல்வழிப் புணர்ச்சியவாய தொகை நிலைத் தொடர் மொழிகளே ஒருமொழிகள் என்பாரும் உளர். அவர் கூற்றுத் தாயை மலடி என்று கூறுவது போலாம்" என்ற சங். விளக்கம் பொருத்தமானது. பிளவு படாது ஒட்டி நிற்றல், தொக்கு (சுருங்கி) ஒன்றாய் நிற்றல் கட்புலனாகாது அறிவிற்குப் புலனாகி நிற்றல் என்ற மூன்றும் தொகையின் இலக்கணங்களாம்.[1]

வேற்றுமைத் தொகை (363) : "இரண்டு முதலா இடை ஆறு உருபும் வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே" என்பது நூற்பா. இரண்டு முதலாக ஆறு வேற்றுமை உருபுகளும், இடையில் வெளிப்படாமல் நிற்பது வேற்றுமைத் தொகை என வரையறை செய்தனர் பவணந்தியார். இதனை மனங்கொண்டு மயிலை, ஒரு குறிப்புத் தருகிறார். இடையிலே தொகும் என்பது என்ன? கடந்தான் நிலம் இருந்தான் குன்றத்து என்பன நிலத்தை, குன்றத்தின்கண் என வேற்றுமை உருபுகள் ஈற்றிலும் தொக்கு நின்றன. இவ்வாறு தொக்கு நிற்பனவும் வேற்றுமைத் தொகைகளா? அவை வேற்றுமைத் தொகை எனில் 'ஆறுருபும் இடை வெளிப்படல் இல்லது' என்ற வரிக்கு மாறுகோளாக முடியுமே? இதற்கொரு அனைதி கூறினார் மயிலை. 'அவை ஒரு பெயரினையவாய் உருபு முதலாயின ஏலாமையின், தொகை விதியால் தொக்கன ஆகா; செய்யுள் விகார வகையால் தொகுக்கப்பட்டன என்க' என்றுரைப்பர். இக்கருத்து சங். க்கு உடன்பாடில்லை. அவ் வழக்காறுகள் ஓரோவழி மாறிக் கூறுதலின்பிளவுபட்டு நின்றன. அன்றி அவையும் இடைக்கண் தொக்க தொகைநிலைத் தொடரேயாம் என்பர். ஒரு சொல் நீர்மைத் தாதலும் தொகையின் இலக்கணங்களுள் ஒன்றெனப் போற்றுவர் இலக்கணவிளக்க உரைகாரர்.[2] ஐந்து தொகைகளிலும் உருபுகள், மொழியிடையிலேயே தொக்கு நிற்கின்

1. ஆறுமுகனார், டாக்டர் க. தொகைபற்றித் தொல்காப்பியர், தொல்காப்பிய மொழியியல். 1972, ப. 309-320
2. இலக்கண விளக்கவுரை 386

றன. அனைத்துத் தொகைகளும் பிளவுபடாது இருக்கின்றன. பிளவு பட்டொலித்தல், ஒரு சொன்னீர்மை குலைந்து தொகை யிலக்கணம் கெட்டு விடுதலே உம்மைத்தொகை வழி அறியலாம். பிளவுபடாது நின்றுல் தான் உம்மைத் தொகை. பிளவுபட்டு ஒலித் தால் அது செவ்வெண்ணுய் விடும். இவற்றைக் கொண்டு 'இருந்தான் மாடத்து' என்பன போன்ற தொடர்களே மயிலே முறைப்படி செய்யுள் விகாரம் என்றுதான் கொள்ளுதல் வேண்டும்.

விளித்தொகை: காலம்கரந்தபெயரெச்சம் விளித்தொகை'' என்பது இலக்கணம். முக்காலத்தையும் தோற்றுவிக்கும் இடை நிலைகளை, ஆகுபெயராகக் 'காலம்' என்று குறித்தார் பவணந்தியார் என்பது மயிலே கருத்து. காலம் காட்டும் இடைநிலைகள் மறைந்து வந்தன என்பது அவர் கொள்கை. கவிராயரும் பெயரெச்சத் தீறு தொக்கு மூன்று காலத்தும் நிகழ்வது என்றனர். மூன்று காலத்தை யும் தொகைச் சொல்லின் ஆற்றலால் உணர்த்துவது விளித் தொகை என்பர் சேனுவரையர். முற்றுத்தொகை : சிலர், அட்டது களிறு, அடாநின்றது களிறு, அடுவது களிறு என முற்றுகள் இறுதி தொகுதலின் அடுகளிறு என்பது விளித்தொகை என்றனர்.[1] அட்டது களிறு என்பது முற்றுப் பெற்ற ஒரு தொடர். அடுகளிறு இது, அடு களிறு வந்தது எனத் தொடர்கள் அமையும்போது, அட்டது களிறு இது, அட்டது களிறு வந்தது என்று விளக்க வேண்டியிருக்கும். அவ்விளக்கம் தொடர்ப் நிலை உடையதாயிருக்கும். ஆதலின் முற்றுகளின் தொகை விளித் தொகை என்பது பொருந்தாமற் போய்விடுகிறது என்பர் சங். காரியத் தொகை : அடு என்னும் முதனிலே விளையாகிய காரியங் கள் தொக்கு நிற்றலின் அடுகளிறு என விளித்தொகையாயிற்று என்பர்.[2] அடு என்ற காரணச் சொல்லின் கண், காரியங்கள் தொக்கது எனில், களிறு என்னும் முடிக்குஞ் சொல் வேண்டுவ தின்று. அன்றியும், அஃது ஒரு சொல்லிற்குள்ளேயே நடக்கும் மாற்றம். தொகையோ (விளித்தொகை) இரண்டு முதலான பல சொற்களின் இடையே நடப்பது என்று மறுப்புரைப்பர் சங். பெயரெச்சத் தொகை : அட்ட களிறு, அடாநின்ற களிறு, அடுங் களிறு என்பனவற்றுள் ஈற்றில் உள்ள பெயரெச்ச உருபுகள் தொக்கதே விளித்தொகை என விளக்குவர் சங். விளித்தொகை நிலைமொழி, வருமொழி என்ற இரு மொழிகளின் கூட்டு. இதனுள் முன்னிற்கும் நிலைமொழி பற்றிய ஆய்வும் முடிவுமே விளித் தொகையின் வரையறை பற்றிய ஆய்வும் முடிவுமாகும்.

1. சங். நன். உரை 364
2. மே. கா. நூ. 364

கொல்யாணை என்று வருவதில் 'கொல்' என்பது பெயரெச்சம் என்பது மரபிலக்கணியார் கொள்கை.[1] பவணந்தியாரும் இக்கொள்கையினரே என்பது 'காலம் கரந்த பெயரெச்சம் வினைத் தொகை' என நூற்பா அமைப்பதினின்று தெரிகிறது. பெயரெச்சம் தொக்கதே வினைத்தொகை என்பதே சங். கருத்து. வினைத்தொகையின் நிலைமொழிவினையடிச் சொல் என்று கூறுவார் உண்டு. விளக்க இயல் மொழியியலாளரும் இவ்வாறே கொள்வர்.[2] பெயரெச்சமும் அன்று; அடிச்சொல்லும் அன்று. அது தொழிற்பெயரே என்று கருதுவார் உளர்.[3] இம்மூன்று கொள்கைகளும் ஆராயத்தக்கன. பெயரெச்சம் தொக்கதே எனில், வினைத்தொகை காட்டும் பொருள் செறிவு (Semantic Significance) குன்றிப் போகிறது. கொன்ற யாணை என்பது தொக்கு, கொல்யாணை என்று நிற்குமேல் இறந்த காலம் ஒன்றுமே காட்ட வேண்டும். அங்ஙனமின்றி மூன்று காலமும் ஒருங்கு உணர்த்தி நிற்றலின் காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை என்ற கருத்தையே மறுப்பர் இலக்கண விளக்க உரையாசிரியர்.[4] அடிச்சொல்லே (Root) வினைத்தொகையின் நிறுத்தமொழி என்பது முற்றப் பொருந்துவதில்லை. வருத்துதொழில் பயிற்று திறன் என்பனவும் வினைத்தொகைக் குரிய எடுத்துக்காட்டுகளே. இவற்றுள் வருத்து, பயிற்று என்பன அடிச்சொற்கள் அல்லவே. ஈதன்றியும் சில அடிச் சொல்லடியாக வினைத் தொகைகள் தோன்றுவதே இல்லை. போ, பார், கேள், கல், நட ஆகிய அடிச் சொற்களினின்று வினைத்தொகை தோன்றுவதில்லை. ஆதலின் வினைத்தொகையில் முதல் நிலை, அடிச்சொல் என்பதுவும் முற்றப் பொருந்துவதாயில்லை. தொகை நிலைத் தொடர்கள் அனைத்திலும் உள்ள நிலைமொழிகள் பெயர்களாகவே உள்ளன. ஒரு சில நீங்கலாக ஏனைய அனைத்தும் பெயர்கூட்டுகளாக இருப்பதால், வினைத்தொகையும் பெயர்க் கூட்டாக இருத்தல் வேண்டும். வரிபுனை பந்து, கட்டுதலும் புனைதலும் பெற்ற பந்து என அமையுமே. வரிந்த புனைந்த பந்து எனப் பெயரெச்சங்கள் அடுத்தடுத்துத் தமிழில் தொகுத்து வருவதில்லை. ஆனால் பெயர்களோ, தொழிற் பெயர்களோ அடுத்தடுத்து வருதல் உண்டு. இவ்விரு காரணங்களையும் நோக்க, வினைத் தொகையின் நிலை மொழி முதல்நிலை தொழிற்பெயர் எனக் கோடலே மிகப் பொருத்தம் எனத் தோற்றுகிறது.

1. தொல். சொல். இளம்பூரணர் 401, தெய்வச்சிலையார் 410, நச்சினார்க்கினியர் 415.
2. Manickam. Dr. V. Sp. A Study of Tamil verbs. 1972. p. VI
3. Kothandaraman, Dr. Pon. Oru vinaithokai, Seminar on Grammatical Theories, Linguistics Dept. Annamalai University, 1973
4. இலக்கண விளக்கவுரை 398

பண்புத் தொகை (365): பண்பை விளக்கும் மொழி தொக்கி வருதலும், ஒரு பொருட்கு இருபெயர் வருதலும் பண்புத்தொகை என்று கூறப்பெறும். பின்னது இருபெயரொட்டுப் பண்புத்தொகை என அடைகொடுத்து அழைக்கப்படும். இப்பண்புத் தொகையுள் தொக்கு நின்ற மொழி எது என்பது பற்றி நூலாசிரியர் இடையேயும் உரையாசிரியர்கள் இடையேயும் கருத்து வேறுபாடு நிலவுகிறது. பவணந்தியார் பண்பை விளக்கும் மொழி எனக் குறித்தது 'மை' விகுதி என்பர். இதனைக் 'கருமை என்ற ஐகாரம்' என்று குறிப்பர் மயிலை. பெயரெச்ச விகுதி தொக்கது என்பாரும் உளர். செய்ய தாமரை > செந்தாமரை என்று வந்தது என்பர். செய்யது தாமரை என அமைந்து, செந்தாமரையாயிற்று என்று கூறி, குறிப்பு வினைமுற்று இறுதி தொக்கது என்பர். கருஞ்சாத்தன் என்பது கருமையை உடைய சாத்தன் எனப் பொருளுக்கும் பொருட் குணத்திற்கும் உள்ள ஒற்றுமைக் கிழமை தோன்ற விரித்துரைப்பதாகும். 'ஆகிய' என்னும் இடைச்சொல்லே தொக்கது என்பர், சங். முனிவர் முதலானோர். இவ் 'ஆகிய' என்ற பண்புருபின் கண் ஆக்க வினை இல்லை. ஆதலின், ஈது இலக்கணையால் செய்த என்னும் வாய்பாட்டின்பால் படுவதோர் வினை இடைச் சொல் என்று விளக்கம் தருவர் சங். இவ்வைந்து கொள்கைகளுள் எது மிகப் பொருத்தமானது என்பது ஆராய்ச்சிக் குரியது. நூற்பாவில் தொக்கு நிற்பது 'பண்பை விளக்கும் மொழி' என்பது தெளிவாகப் பவணந்திபாரால் வரையறுக்கப் பட்டிருக்கிறது. ஆக, மறைந்து நிற்பது மொழி என்பது பெறப்படுகிறது. பெறப்படின், மை, அ என்பன மொழிகள் அல்ல என்பது உறுதியாகிறது. ஆதலின் நூலாசிரியர், இவ்விடைச் சொற்களைப் 'பண்பை விளக்கும் மொழி' எனக் குறித்திருக்க மாட்டார். 'குணத்தொகை' என்றமையால் ஒரு பொருட்கு இருபெயர் வந்த இருபெயரொட்டுப் பண்புத்தொகைக் கண்ணும் பண்புருபு தொகும் என்பது நூலாசிரியர் கருத்து. வட்டக்கல் எனில், ஆகிய என்பது தொக்கு நின்று விரியும்போது வட்டமாகிய கல் என விரியும் என்பது அமையும். மாருக, மை, அ எனும் விகுதிகளைத் தொகுத்து விரித்துக் காட்ட முடியாமை வெளிப்படை. செய்ய, செய்யது என்பன வினைத்தொகைக் குறிப்பென்றல் கூடுமே அன்றி பண்புத் தொகை என்றல் கூடாமையானும், முற்று இறுதி தொக்கதேல் பண்புத்தொகை என்றல் கூடாமையானும் அது பொருந்தாது என்பர் சங். குணியோடு (தாமரை) குணத்துக்கு (செம்மை) உண்டாகிய ஒற்றுமை நயம் கருதாது ஒரு பொருளைக் குண குணியாகப் பிரித்து அவ்வேற்றுமை நயம் கருதச் செம்மையை உடைய தாமரை என விரிக்கின் இரண்டாம் வேற்றுமை உருபும்

பொருளும் உடன்தொக்க தொகையாதலன்றி, பண்புத் தொகை யாவதில்லை. 'ஆகிய' என்பதனைப் பண்புத்தொகை உருபு ஆக அமைத்து விரிக்கும்போது, மேற்கண்ட சிக்கல்கள் எழுவதில்லை. ஆதலின், அச்சொல்லையே 'பண்பை விளக்கும் மொழி'யாகக் கோடல் பொருத்தமாகிறது.

தொகைநிலைத் தொடர்கள் பல பொருள்படுதல் (373): வேற்றுமை உருபு முதலியன தொக்கு நின்ற இடத்து, பொருள் களால் மயங்குதற்கு உரிய தொடர்மொழிகள், இரண்டு முதல் ஏழு வரையில் உள்ள பொருள்களால் மயங்கும். எ-டு : தமிழ் வாழ்த்து – தமிழை வாழ்த்து (இரண்டாம் வேற்றுமை); தமிழுக்கு வாழ்த்து (நான்காம் வேற்றுமை) எனமயங்கி வருதல் காண்க. மயிலை, சொற்பொருள் என்பதனைச் சொல்லான் அறியப்படும் பொருள், சொல்லின் அறிபப்படும் பொருள் என மூன்றுவதனோடு ஐந்தாவதும் சேர்த்து விரிப்பர். இதனைச் சங். மறுத்துரைப்பர். மூன்றுவதற்கும் ஐந்தாவதற்கும் ஏதுப் பொருள் பொதுவானே. வேறிரண்டு பொருள்கள் இருந்து மயங்கினால்தானே மயக்கம். ஒரே பொருளாய் மூன்றும் வேற்றுமையிலும், ஐந்தாம் வேற்றுமை யிலும் இருப்பதால் அது மயக்கமன்று. அலர் முல்லை என்பதனை அலர்ந்த முல்லை, அலரையுடைய முல்லை என விரித்துப் பொருள் மயக்கம் காட்டுவர் மயிலை. அலர் என்பது வினைத் தொகையில் வினையாயும், வேற்றுமைத் தொகைக்கண் பெயராயும் சொல் வேறு பட்டமையின் அது பொருளால் மயங்கியது அன்று எனக் கொள்க என்பர் சங். "தொக்குழி மயங்கும் இரண்டு முதலேழ் எல்லைப் பொருளின் மயங்கும் என்ப" என்ற நூற்பாவில் பொருள் மயக்கமே காட்டப்படுகிறது என்பது நூற்பாவில் தெளிவாய் இருக்கிறது. மயிலை. உரைகோள் பொருள் மயக்கம் கருதாததாய் உள்ளது. ஆதலின் சங். கருத்தே ஈண்டு ஒப்பற்குரியது.

வினா விடைகள் எழுவாமல் காத்தல் (376): திணை ஐம்பத்தையும் பால்ஐம்பத்தையும் அவ்வவற்றின் பொதுச் சொல்லாலும், துணிந்த பொருள்மேல் அல்லாத தன்மையை வைத்தும் சொல்லுதல் வேண் டும். இவ்விலக்கணத்திற்கு எடுத்துகாட்டு நல்கி விளக்கியதில் உரையாசிரியரிடை கருத்து வேறுபாடு உளது. குற்றியோ மகனே என்று வினவினார்க்கு மயிலை குற்றியினல்லன் என்பதைக் குறித்து ஐந்தாம் வேற்றுமை உருபு விரிய நின்று வற்றாகாம் என்பர். ஐந் தாம் வேற்றுமை விரித்துக் கூறுவது எங்கும் பொருந்துவதில்லை. 'நீ அல்லன்' என்பதுவும் குற்றியல்லன் போன்ற தொடர்தான். குற்றியினல்லன் என்று விரித்தது போல 'நீ அல்லன்' என்பதை ஐந்தாம் வேற்றுமை கொண்டு விரித்தல் இயலாது. ஆதலால்

குற்றியனல்லன் என்று மயிலை. விரித்தது வழு என்பர் சங். குற்றியல்லன் என்பது வேற்றுமைப் புணர்ச்சி என்பது மயிலை. கருத்து. அஃது அல்வழிப் புணர்ச்சி என்பது சங். கருத்து. குற்றியோ மகனே என்ற வினாவிற்கு 'மகனல்லன் குற்றி' என்று கூற வேண்டும் என்பர் மயிலை. இதனை மறுப்பர் சங். மகனல்லன் என்று விடையிறுத்தலே போதும். கூடுதலாகக் கூறுவது வேண்டாம் என்பது அவர் கருத்து. விடையளிக்கும்போது சொற் சுருங்க விடையளிப்பதே வழா நிலையாம். பண்டையோர் போற்றிய இலக்கண மரபு மாகும். சொற்பல்க விடையிறுப்பது வேண்டாதது. ஆதலின் மயிலை. கருத்திலும் சங். கருத்தே சிறப்பானது.

திணையில் மரபு வழு அமைதி (377): திணையும், பாலும் வேறு வினைப் பல பொருள்களும் கலந்து நின்றவாயின் அவை சிறப்பினானும் மிகவினானும் இழிவினானும் ஒரு முடிபாக முடிவனவாம். இதற்கு எடுத்துக்காட்டு நல்கும்போது 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்பதனைக் காட்டினர். இவ்வாறு காட்டிய துடனன்றி, 'ஒருவன் கொல்லோ பலர் கொல்லே இச்செய் புக்கார்? ஒருத்தி கொல்லோ பலர் கொல்லோ ஈண்டுப் புக்குற்றார்' என்பவற்றைக் காட்டி., இவை ஒருமை பன்மை விரவிவந்து பன்மை மிக வினால் பன்மை முடிவு பெற்றன என்று குறிப்பெழுதினர் மயிலை. இது பொருந்தாது என மறுப்பர் சங். வும் கவிராயரும். ஐயம் திணை பால் அவ்வப் பொதுவிலும் (376) என்ற நூற்பாவினுள் இக் காட்டுகளை அடக்கிக் கொள்ளலாம். இங்ஙனம் காட்டிய இலக்கியங்கட்கு இலக்கணமும் இல்லை. ஆதலின் சங். மறுப்பே பொருந்துவதாம்.

பால்திணை வழு அமைதி (378) : மகிழ்வும், உயர்வும், தலைமையும், வெகுளியும், இழிவுமாகிய ஐந்தினானும், பாலும், திணையும் வழுவி வரும். அவ்வாறு வருபவற்றை வழுவமைதிகளாகக் கொள்க என்பது நூற்பா ஆணை. தாய், தன் ஆண்மகனை 'என் அம்மா' என்று கொஞ்சுகிறாள். அங்கு உவப்பால் ஆண்பால், பெண்பாலாகிறது. உயர்திணை இழிப்பினால் அஃறிணை ஆனதற்கு "நாம் அரன் உடைமை' (நாம் – உயர்திணை; சிவனின் உடைமைகள்– அஃறிணை) என்பதனைக் காட்டினர் சங்., கவிராயர் முதலானோர். மயிலை, "ஏவவும் செய்கலான் தான்தேரான் அவ்வுயிர் போஒ மளவும் ஓர் நோய்[1] என்ற திருக்குறளைக் காட்டினர். "சொற்புத்தி இல்லாமலும், சுயபுத்தி இல்லாமலும் இந்தப் பனின் உயிர், நோய் போன்றது" என்று திருவள்ளுவர் சாடுகிறார். 'நோய்' என்று திருவள்ளுவர் இழித்துக் கூறியது சினத்தாலா? இழிப்பினாலா?

1 திருக்குறள் 848

இழிப்பினும் உயர்திணை அஃறிணை யாயிற்று என்பர் மயிலை. சினத்தினும்தான் உயர்திணை அஃறிணையாயிற்று என்று குறிப்பர் சங். இக்குறிப்பின் மூலம் திருவள்ளுவரைச் சினமுடையவராய்க் காட்டுகிறார் சங். 'செய்கலான் தான்தேரும்' என்று திருக்குறளின் தொடர்களைப் பார்க்கும்போது சங். கருத்தின் பொருத்தம் புலப்படுகிறது.

பால் இடவழு அமைதி (38): ஒருமைப் பாலிலே பன்மைச் சொல்லைச் சேர்த்துக் கூறுதலும் பன்மைப் பாலிலே ஒருமைச் சொல்லைச் சேர்த்துக் கூறுதலும், ஓரிடத்திலே பிற இடசொல்லைச் சேர்த்துக் கூறுதலும் உண்டு. 'வெயில் எல்லாம் மறைத்தது மேகம்', 'இருநோக்கு இவள் உண்கண் உள்ளது' என்பன வற்றுள் அஃறிணைக்கண் ஒருமையில் பன்மையும் பன்மையில் ஒருமையும் வந்தன. இதற்குக் காட்டாக, மயிலை. (1) 'ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின், (2) 'யான் எம்மூர் புகுவல்' என்று காட்டினர். இவற்றுள் உயர்திணை ஒருமையில் பன்மையும், பன்மையில் ஒருமையும் மயங்கின. இக் காட்டுகள் பொருந்தாதன என்று சங். கவிராயர் ஆகியோர் மறுத்தனர். ஒருவர் என்ற ஒருமைச் சொல் பன்மையை முடிக்கும் சொல்லாகக் கொண்டு முடிவதை (ஒருவிர்...கழிமின்), 'ஒருவர் என்பது உயரிரு பாற்குரிப் பன்மை விகுதிகொளும் பாங்கிற் றென்ப' எனவரும் நூற்பாவில் (28) அடக்கிக் கொள்ளலாம். இந்நூற்பாவில் அடக்கிக் காட்ட வேண்டியதில்லை. 'யான் எம்மூர் புகுவல்' என்பதில் யான் என்ற ஒருமைக்கு முரணாக 'எம்' என்பது நிற்கிறது. இதனைத் 'தன் சுற்றத்தாரையும் தன்னொடு படுத்து எம்மூர்' என்றான் என்று கொள்க என்பார் சங். இவ்விளக்கம் அத்துணைப் பொருத்தமாய் இல்லை. யான், எம் என்பன தெளிவான முரண் சொற்களாக இருக்கின்றன. ஆதலின், மயிலை. கருத்தை ஒட்டி, பின்னுள்ள எடுத்துக் காட்டை, இந்நூற்பாவில் அடக்கிக் கோடலே பொருத்தம்.

காலப் பகுப்பு (39): "இறப்பு எதிர்வு நிகழ்வு எனக் காலம் மூன்றே" என்பது நூற்பா. மூன்று காலங்களையும் சொல்லும் போது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று சொல்லுவதே முறை. அவ்வாறு சொல்லாமல், பவணந்திபார் இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்று முறை மாற்றிச் சொல்லுகிறார். இலக்கண ஆசிரியர்கள் காரணமின்றி முறை மாற்றுவதில்லை. ஆதலால் இம்முறை மாற்றத்திற்குக் காரணம் காண முயன்றனர் உரைகாரர். காலம் பற்றிப் பலவேறு கொள்கைகள் அக்காலத்து இருந்தன. அவையாவன: காலம் என்ற ஒன்று இல்லை என்பார், ஒரு பொருள்

நிகழுமிடத்துப் பொருண்மைப் பேறல்லது காலமென்று வேற் றுணர்வும் பிறவும் படுவதில்லை என்பர். காலம் ஒன்றே ஒன்று என்பார், யாறு ஒழுகும், மலை நிற்கும் என உள்பொருள் ஒரு காலத்தானே சொல்லப்படும், பிறிதில்லை என்பர். காலம் இறப்பு, எதிர்வு என்ற இரண்டே என்பார், கோலோடுங்கால் சென்றதும் செல்வதும் இல்லை அல்லவா? அதனால் நிகழ்காலம் என்ற ஒன்றில்லை என்பர். காலம் மூன்று என்பார் நெடுநலே வந்தான், இன்று வாரா நின்றான், நாளை வருவான் என்பவற்றைக் காட்டுவர். இவ்வாறு காலம் பற்றி வேறு வேறு கொள்கைகள் இருந்தமையைக் காட்டுதற்கே, பவணந்தியார் முறை மாற்றி நூற்பா யாத்தார் என்பர் மயிலை. "இறப்பாவது தொழிலது கழிவு. நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறுத நிலைமை. எதிர்வாவது தொழில் பிறவாமை. தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சி யாகலின், அஃதொரு கண நிற்பதல்லது இரண்டு கண நில்லாமை யின், நிகழ்ச்சி என்பதொன்று அதற்கில்லை" என்று சேனவரை யரும் மயிலை கருத்தைச் சார்ந்து உரைப்பர்.[1]

சங். முறை மாற்றத்திற்கு, மயிலை. கூறிய விளக்கத்தை மறுப்பது போலப் புதியதொரு விளக்கம் தருவார். நிகழ்காலம் வெளிப்படையானது; இன்றே காண்பது. ஆனால் "இறந்தகாலம் எதிர்காலம் இரண்டும் மறை பொருளாய் நிற்றலின், இறப்பு நிகழ்வு என்னுது இறப்பு எதிர்வு என்றார்" என்று விளக்குவார் சங். காலம் பற்றிய வரலாற்றில் காலம் அல்லாத நிலையே பழைய நிலை. பின்னர் இறந்தகாலம், இறவாக்காலம் என்ற இரண்டே இருந்திருத்தல் வேண்டும். பின்புதான் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலக் கொள்கை வளர்ந்திருத்தல் வேண்டும். இதுவே இன்றைய மொழியியலார் கொள்கை.[2] காலம் பற்றிய கருத்து வேறுபாடுகள் உரையாசிரியர்கள் காலத்திலேயே இருந்து வந்துள்ளது. இதனை, மயிலை. சேனவரையர் உரைக் குறிப்புகளன்றி, முனிவரின் மாபாடியமும் உறுதி செய்கிறது.[3] ஆதலின், காலம் பற்றிய கருத்து வேறுபாடு பற்றியே, பவணந்தி யார் நூற்பாவை முறை மாற்றி அமைத்துள்ளார் என்ற மயிலை. கருத்தே மிகப் பொருந்துகிறது.

கால வழுவமைப்பு (333): "முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச் செப்புவர் நிகழுங் காலத்தானே" என்பது நூற்பா.

---

1. தொல். சேனவரையம், 200
2. சுப்ரமணியம், டாக்டர் ச. வே., இலக்கணத் தொகை, சொல். 1971, ப. 201
3. சிவஞான மாபாடியம் - காலதத்துவ ஆய்வுப் பகுதி

இந் நூற்பாவிற்கு மயிலை. மலைநிற்கும், தீச்சுடும் என்பனவற்றைக் காட்டாகக் காட்டுவர். தொடர்ந்து, 'பண்டும் இன்றும் மேலும் என முக்காலப் பொதுவாக்குக' என்று சிறப்பு குறிப்பும் எழுதுவர். தொல். உரைகாரர் அனைவரும் இவ்வாறே காட்டினர்.[1] இலக்கண விளக்க உரைகாரரும் இங்ஙனமே காட்டினர்.[2] கவிராயரும் இம்முறையிலேயே எடுத்துக்காட்டு நல்கினர். சங். மேற்கண்ட எடுத்துக் காட்டுகளை மறுத்துரைப்பர். நினக்குத் துணை யான் நிற்கிறேன் என்ற தொடரை இந்நூற்பாவிற்குக் காட்டாகக் காட்டுவர். நினக்குத் துணையாக, நேற்றும், இன்றும், நாளையும் என்றும் இருப்பேன் என்பது சங். கருத்துப் போலும். சங். மற்றைய உரையாசிரியர்களை மறுப்பது பார்வைக்குரியது. (அ) பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையாக வரும் முக்காலத்திலும் ஒத்தியல் பொருட்கு இயையவில்லை. (ஆ) அத்தகு வழக்குகள் வழங்கு தல் இல்லை. (இ) யாறு ஒழுகும், தீச்சுடும் என்பன ஒழுகுந் தன்மையுடையது, சுடுந்தன்மையுடையது என்ற பொருளின. ஆதலால், இவற்றை 'இயற்கைப்பொருளை இற்றெனக் கிளத்தல்'[3] என்ற நூற்பாவில் அடக்கிக் கொள்ளலாம். இவை அவர் மறுப் புரை.

சங். காட்டும் எடுத்துக்காட்டுப் புதுமையாகப் பொருந்துவ தாக இருந்தாலும், மயிலை. முதலானோர் காட்டும் சான்றுகளை இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் என்ற நூற்பாவில் அடக்க இயலும் என்பதாலும் சங். உரையே பொருத்தமாக அமைகிறது.

கால வழுவமைதி (384) : விரைவு, மிகுதி, தெளிவு, இயல்பு என்ற நான்கு காரணங்களால் மூன்று காலங்களும் பிறழ்ந்து வருத லுண்டு. உண்டு போவதற்கு இருப்பவனை விரைவில் உடன் அழைத்துக் கொண்டு போக வேண்டிய மற்றொருவன் 'இன்னும் உண்ணவில்லையா?' என்றால், அவன் 'உண்டேன், உண்டேன்' என்பான். இங்ஙனம் விரைவினால் எதிர் காலமும், நிகழ்காலமும் இறந்த காலமாகச் சொல்லப்பெறும். இதற்கு மயிலை. 'அக் காட்டில் புகின் கூறை கோட்பட்டான்' என்பது இயல்பு எனவும், 'அறஞ்செய்தான் சுவர்க்கம் புக்கான்' என்பது மிகுதி எனவும் கூறுவர். இளம் பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், இலக்கண விளக்கவுரைகாரர் ஆகியோரும் இக் கருத்தினரே.*

1. தொல். சொல். விளையியல், 43
2. இலக்கண விளக்கவுரை 303
3. நன்னூல் 404
4. தொல். சொல். விளையியல் 242, இலக்கண விளக்கவுரை 304

முன்னது மிகுதி என்றும், பின்னது தெளிவு என்றும் வேருக்கி, மற்றவர் குறித்த காட்டுகளை மாற்றி உரைப்பர் சங். அதற்கு அவர் காட்டும் காரணம் பொருத்தமானது. காட்டில் புகுந்தால் பெரும்பாலும் கூறை பறிக்கப்படும். சிறுபான்மை பறிக்கப் படாமலும் போகலாம். ஆக, மிகுதி கருதியே மேற்கண்ட தொடர் அமைந்தது. எனவே பொருத்தம். அறம் செய்தவர் சுவர்க்கம் புகுவது உறுதியானது. ஆனில் சிலர்க்குச் சுவர்க்கம் கிடைக்கும்; சிலருக்குக் கிடைக்காது என்பதில்லை. ஆகவின் 'அறம் செய்தான் சுவர்க்கம் புக்கான்' என்ற தொடரை மிகுதி என்பதைக் காட்டிலும், தெளிவு எனலே பொருத்தம்.

'சாத்தன் உழுது வருவான் போனான்' என்பதை வழுவமைதி யாகக் காட்டுவர் மயிலை. இறப்பும் எதிர்வும் மயங்கின என்பது அவர் கருத்து. இதனை வழாநிலையாக் கொள்ளுவர் சங். உழுது (இறப்பு) வருதல் (எதிர்வு) என்பவற்றில் முன்னது நடந்தபின், பின்னது நடக்க இருப்பதால், முன்னது இறந்த காலமாயும், பின்னது எதிர் காலமாயும் தொடர் அமைக்கப்பட்டன. இதனால் காலவழு எதுவும் இல்லை ஆதலால், இஃது வழாநிலை என்பதே மிகப் பொருத்தம்.

சிறப்புப் பெயரும் பொதுப் பெயரும் [393]: "திணை நிலம் சாதி குடி பே உடைமை, குணம் தொழில் கல்வி சிறப்பாம் பெய ரோடு, இயற்பெயர் ஏற்றிடில் பின்வரல் சிறப்பே" என்பது நூற்பா. 'திணை முதலாகக் கல்வி ஈறுக விதந்தன பற்றி வரும் சிறப்புப் பெயருடனே', எனப் பொருள் உரைத்தனர் சங். சிறப்புப் பெயரை முன் கொடுத்து, இயற்பெயரைப் பின்வைத்து எழுதுக என்பது கருத்து. அது ஆசிரியன் அமிழ்தன் எனவரும். பின்வந்த நன்னூல் உரைகாரர்களும் இந்நெறியையே போற்றி உரைகண்டனர்.

மயிலை. சிறப்புப் பெயர் என்பதனையும் தனியே ஒரு வகை யாகக் கொண்டு 'ஏனாதி ஏறன்' எனக் காட்டினர். மன்னர் முதலியோராற் பெறும் வரிசைச் சிறப்புப் பெயராம். ஏனாதி— அரசன் தந்த சிறப்புப்பெயர்; ஏறன்—இயற்பெயர். 'கல்வி சிறப்பாம் பெயரொடு' என்பதற்குக் கல்வி முதலிய சிறப்புப் பெயருடனே எனப்பொருள் கொள்வர். முதலிய என்பது தவம், ஆள்வினை, உறுப்பு முதலியவற்றைத் தழுவியது என விளக்கந் தருவர். தன் விளக்கத்திற்குத் தக, முனிவர் அகத்தியன், படைத் தலைவன் சாத்தன், முடவன் முருகன், குருடன் கொற்றன் என்பனவற்றைக் காட்டுவர் கவிராயர். மயிலை., கவிராயர் கண்டு காட்டுவதற்கு நூற்பாவில் இடம் இருப்பதால்,

அவர்கள் கருத்தையும் கொள்ளலாம். அக் கருத்துகளை மற்றைய உரையாசிரியர்கள் மறக்காததும் பார்வைக்குரியது.

பிரிக்க முடியாப் பெயர்கள் (397): "ஒரு பொருட் பல்பெயர் பிரிவில வரையார்" என்பது நூற்பா. ஒரு பொருள்மேல் பல பெயர் கூறங்கால் அப்பொருளினின்றும் பிரிதல் இல்லாதன வற்றைப் புலவர் நீக்காது கூறுவர். இதற்கு அழகான வெண்பா ஒன்றை மயிலை. மேற்கோள் காட்டுவர்.

"கொய்தளிர்த் தண்படகைக் கூத்தப் பெருஞ்சேந்தன்
வைகலும் ஏறும் வயககளிறே—கைதொழுவல்
காலேக வண்ணனைக் கண்ணுரக காணெம்
சாலேகம் சார நட"

"கொய்யப்பெற்ற தளிராலாகிய இலைமாலையை அணிந்த கூத்தப் பெருஞ்சேந்தன் நாள்தோறும் ஏறிச் செல்லுகின்ற வலிமையு டைய களிறே! உன்னைக் கைகூப்பி வணங்குகின்றேன். கலவைச் சந்தனம் பூசியதால் பொன் நிறமுடைய அவனை' கண்ணுரப் பார்க்க எமது பலகணிக்குப் பக்கமாக நடந்து செல்" என வேண்டிக் கொள்கிருள் ஒரு தலைவி. இப்பாடலில் 'அவனை' எனக் கூறவேண்டியவள், அவன் நிறமும் பூச்சின் மணமும் சேய்மையிலும் தன்னைக் கவர்ந்ததனல் காலேக வண்ணன் என்கிருள். காலேக வண்ணனுய் இருத்தல், இவனுக்கே உரிமை யுடையது அன்று. ஆதலின், இப்பாடல் வழு என்ற கருத்துப்பட மயிலை. காட்டுவர். சங். இப்பாடலையே எடுத்துக்காட்டி இப் பாடல் வழு உடையது அன்று என்று கூறுவர். (அ) காலேக வண்ணம் பொதுவியல்பாக இருக்கலாம். ஆனல் அத்தன்மை சேந்தனிடமிருந்து பிரிந்தது அன்று. (ஆ) சேந்தனை யானையின் மேல் சேய்மைக்கண் வரக்கண்டவள், அவனைக் கண்ணுரக் காண வேண்டும் என பெருவேட்கை தந்தது அவனது காலேக வண்ணம் என்பாள் அவ்வாறு கூறவேண்டுவது தேவை. (இ) இது சான்ருேர் இலக்கியம். இவற்றுல் மேற்கண்ட செய்யுள் வழுவன்று என்கிருர் சங். இக்கருத்து ஏற்புடையது.

ஒருபொருட் பன்மொழி (398): "ஒரு பொருட் பன்மொழி சிறப்பின் வழா" என்பது விதி. ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்கள் செவிக்குச் சொல்லின்பம் தோன்றச் சிறந்து நிற்றலின் வழுவாகா. மீமிசை, புனிற்றிளங் கன்று என வருவன காண்க. 'செவிக்குச் சொல்லின்பம் தோன்ற நிற்றல் இதன் தனிச்சிறப்பு' எனச் சங். குறிப்புரை வழங்கினர். இந்நூற்பாவிற்கு மயிலை. சற்று

மாற்றிப் பொருள் உரைத்தனர். பொருள் வேறின்றி ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்கள் அப்பொருளைச் சிறப்பித்தலின் வழு வென்று நீக்கப்படா என்றனர். சிறப்பின் என்பதற்குச் சிறப்பித்தல் எனப் பொருள் கண்டனர். 'சிறப்பித்தல்' என்று பொருள்கோடலை மறுத்துரைப்பர். கவிராயரும், மயிலை. பதப்பொருள் விளங்க உரை எழுதாது இடர்ப்பட்டு உரை எழுதினர் என்பர். (அ) 'சிறப்பினின் என்பதற்குச் சிறப்பித்தலின்' என்று பொருள் கூற இயைபில்லை. (ஆ) இக்காரணத்தால் வந்தனவேல், ஈண்டு ஒருபொருட்பன்மொழி யாய் வரும் பெயர்கள் ஒருபொருட் பல பெயருள் அடங்கி விடும். (இ) மீமிசை என்றல் மேல் என்றே பொருளன்றி விசேடித்ததோர் சிறப்பு இல்லை. (ஈ) அத்தகு சிறப்பு இருக்குமாயினும் அஃது இன்னது என விதந்து கூறுவர் நூலாசிரியர். அவ்வாறு கூறவில்லை. மயிலை பொருள் விளக்கமும், காட்டும் பொருத்தமே எனினும் சிறப்பினின் என்பதற்குச் 'சிறப்பித்தலின்' எனப் பொருள் கூறுவது பொருத்த மாயில்லை. ஆதலால், சங். உம் கவிராயரும் கூறும் விளக்கமே பொருத்தமாயுள்ளது.

உம்மை பெறும் சொற்கள் (399) : இவ்வளவு என்று வரை யறை வேண்டப்படும் பொருளும், எவ்விடத்தும் எக்காலத்தும் உலகில் இல்லாத பொருளும் விளைப்படுத்துச் சொல்லும்போது முற்றும்மையை வேண்டி நிற்கும். 'கண் இரண்டும் சிவந்தன' 'மன்னுற் செய்த படமும் (ஆடை நூலாற் செய்த கடமும் (பானை) என்றும் இல்லை' என்று அவை வரும். உம்மை வரும் என்று கூறு மல் 'உம்மை வேண்டும்' என்பதனாலே, அந்த உம்மை எஞ்சி நின்றது என்பது கருத்து. எச்சவும்மையாகக் கொள்ளாமல், செய்யுள் விகாரத்தினால உம்மை தொக்கது என்று வரைவர். இளம் பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலான தொல்.உரை காரரும் இவ்வாறே வரைவர்.[1] சங். செய்யுள் விகாரமாகக் கொள் வதை மறுப்பர். உலகின் இல்லாப் பொருள் உள்பொருள் போல் காலத்தொடு பட்டதன்று என்பது தோன்ற என்றும் இல்லை என்னது காலத்தொடு பட்டது போல வைத்துப் பவளக் கோட்டு நீல யானை பண்டும் இல்லை என எச்சவும்மை தந்து காட்டுவார். அது யானை குடத்திலும் இல்லை, தூசியிலும் இல்லை என்றது போலும் என்க என்பர். மயிலை. விளக்கத்தினும், சங். விளக்கமும், மறுப்பும் மிகப் பொருந்தியுள்ளன. முனிவரும், சங். உரையை அப்படியே போற்றுதலும் ஈண்டு நினைக்கத் தக்கது. செய்யுள் விகாரமாய்த் தொக்கது என்பது பொருந்தாது. ஏனெனில் இது போன்ற வழக்காறுகள் உலக வழக்கிலும் உள்ளன.

1. தொல். சொல். கினவி. 33

செயப்பாட்டு வினை (400) : ''செயப்படு பொருளைச் செய்தது போலத் தொழிற் படக்கிளத்தலும் வழக்கினுள் உரித்தே'' என்பது நூற்பா. தன் செய்கை இன்றிப் பிறராற் செய்யப்படும் பொருளைத் தன் செய்கைத்துப் போலத் தொழிற்படக் கிளத்தலும் வழக்கடிப் பாட்டிற் குரியது. 'இவ்வெழுத்து என்னால் எழுதப்பட்டது' என் றெழுதற்குப் பதிலாக, இவ்வெழுத்து யான் எழுதியது'என வருவது போன்றன இந்நூற்பாவினுள் அடங்கும். இந்நூற்பாவிற்கு வர லாறுக,'இல்லம் மெழுகிற்று, எழுத்தாணி எழுதா நின்றது' என்பன வற்றைக் காட்டுவர் மயிலை. இளம்பூரணர், சேனாவரையர், நச்சி னார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகியோரின் உரையும் இதுவே.[1] இதனைச் சங். மறுத்தெழுதுவர். 'இல்லம் மெழுகிற்று' என்பதோர் வழக்கின்மை யானும், நடத்த நடந்த தேரினைப் போல ஒருவன் எழுத எழுதியது எழுத்தாணியாதலின் அது தன் தொழிலேயன்றி ஒருவன் தொழிலன்று, ஆதலின், மயிலை. காட்டியன பொருந்தா என்பது சங். கருத்து. இவர் மறுப்பு ஏற்றுக் கோடற்குரியதே. இவ்வழக்கு தமிழில் செயப்பாட்டு (Passive voice) வினை வழக்கில் இருந்தமையைக் காட்டும் என்பாரும், காட் டாது என்பாரும் மொழியியல் துறையில் உள்ளனர். டாக்டர் கால்டுவெல், செய்வினை, செயப்பாட்டு வினையமைப்புகள் திராவிட மொழிகளில் இல்லை என்பர்.[2] இக்கருத்தை மறுத்து டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார், மேலே உள்ள நூற்பாச் செய்திகளையும் நூற்பா உரைகளையும் கொண்டு, தமிழில் செயப் பாட்டு வினை உண்டென்று நிறுவுவர்.[3] அண்மையில் இதுபற்றி ஆராய்ந்த மொழியியலார், இல்லம் மெழுகிற்று என்பது போன்ற வழக்காறுகளைச் செயப்பாட்டு வினை என்பதைக் காட்டிலும் செயப் படுபொருள் குன்றிய வினைகளாகக் (Intransitive verb) கொள்ளு தலே பொருத்தம் என்பர்.[4]

இயற்கைப்பொருள் இன்ன தன்மையது எனல் (404) : இயற்கைப் பொருள் செயற்கைப் பொருள் எனப்பொருள் இரு வகைப்படும். பொருள்களுள் இயற்கைப் பொருளை இத்தன்மைத்து என்று கூற வேண்டும் என்பது ''இயற்கைப்

1. தொல். வினை. 79
2. Rev. R. Caldwell A comparative Grammar of the Dravidian Languages P. 355
3. Chidambaranathan Chettiar Dr. A. The passive voice in Tamil. 38-39 Journal of Annamalai University. Vol VII No. 2. PP 124-133 Vol III No. 1 P. 22-34
4. Agesthiyalingam Dr. S. Passive in Dravidian Linguistic Dept. of Annamalai University Seminar Papers P 1-23.

பொருளே இற்றெனக் கிளத்தல்" என்ற நூற்பாவின் கருத்து. மெய் உள்ளது, பொய் இல்லது எனச் சங். காட்டுவர். இம்மட்டு மன்றி, வளிஉளரும், உயிர் உணரும் என்பன வற்றையும் காட்டினர்மயிலை. சேனவரையரும், நச்சினர்க் கினியரும், தெய்வச் சிலையாரும் இவ்வாறு காட்டியுள்ளார்கள்.[1] இலக்கண விளக்க உரையாசிரியரும் இக் கொள்கையினரே.[2] சங். மேற்கண்டவாறு காட்டுரைப்பதை மறுத்து எழுதினர். இந் நூற்பா, இத்தன்மைத்து—இற்று எனக் கூறப்பெறும் இயற்கைப் பொருள்களையே பேசுகிறது. வளி உணரும் உயிர் உணரும் எனக் காட்டின், வளியின் கண்ணும், உயிரின் கண்ணும் உளர் தலும் உணர்தலுமாகிய செயல் நிகழ்ந்த அளவிலேயே அவற்றிற்கு அவை செயற்கையாவதன்றி இயற்கை ஆவதில்லை. அவ்வாறு கூறுதற்கான விதியுமில்லை. ஆதலின் மயிலை. உரை பொருந்தாது. இயற்கையின் இயல்பு இன்னது என்ற நூற்பாவின் கருத்திற்குத் தக வளி யுளரும் தன்மைத்து, உயிர் உணரும் தன்மைத்து, என்ற எடுத்துக் காட்டுகள் கொடுத்திருத்தல் அவை ஏற்றுக் கொள்ளத்தக்கன.

விடைமரபு வழுவாமல் காத்தல் (406) : வினவின இடத்தும் விடையிறுக்கும் இடத்தும், சொல் சுருக்கத்தின் பொருட்டு ஒருவன் கேட்டது தம்மிடம் இல்லையாயின் அதனை இல்லை எனக் கூறப்புகின், அவன் வினவியதற்கு இனமாய்த் தம் பக்கல் உள்ளதனைச் சொல்லி அச்சொல்லினுலே அதனை இல்லை என்று மாற்றியம் உள்ளதாயின், இவ்வளவு உண்டென்றும் சொல்லுதல் வேண்டும். 'பயறுளதோ வணிகீரே' என்றார்க்கு அதில்லை என்பார், "உழுந்துண்டு, உழுந்துந் துவரையுமுன் டென்க" என்பது இந்நூற்பாவின் நோக்கு. கவிராயர் உள்ளிட்ட பலரும் இவ்வாறே பொருளும், காட்டும் உரைத்தனர். மயிலை. பொருள் இவ்வாறே உரைத்தனராயினும் காட்டுகள் காட்டுவதில் சற்று வேறுபட்டனர். அவர், வினவினர்க்கு விடையிறுக்கும் பொழுது 'உழுந்தல்லது இல்லை; இத்துணைப் பயறுள' என்க' எனக் காட்டினர். இதனைச் சங். மறுத்தனர். அம் மறுப்புப் பொருத்தமானதே. சொற் சுருக்கத்திற்கே இந்நூற்பா வரையப்பட்டது. அவர் காட்டுவதோ சொற் பெருக்கமாய் இருக்கிறது. ஆதலின் அது மிகைப்படக் கூறல் என்னும் குற்றமாம்.

குறிப்பு மொழிகள் (408) : "முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே" என்பது நூற்பா, வெளிப்படையாலன்றி குறிப்

1. தொல். கிளவி. 19
2. இலக்கண விளக்கவுரை 813

பினுல் பொருளறியப் படுகிற சொற்களும் உள்ளன, என்பது நூற்பாவின் பொழிப்பு. "குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர்" என்றவிடத்துக் கோழி எறிவர் என்பது தலைமைப் பொருளாகாது. பெருஞ்செல்வ வாழ்க்கையர் என்பதே குறிப்பினுல் அறிபப்படும் தலைமைப் பொருளாம். முன்னர் 26) ஆம் நூற்பாவில் கூறப்பட்ட "ஒன்றெரிப் பொதுச் சொல்" முதலான அனைத்தும் இந்நூற்பாவில் வழுவமைதிகளாகப் போற்றப்படு கின்றன என்பது சங். கருத்து. சொற்கிடந்த வாறன்றிச் சொல்லு வான் குறிப்பினுலே வேறுபொருள் பட வருஞ்சொற்களும் சில உள வாம் என்று சொல்லுவான் குறிப்பொன்றை மட்டுமே காட்டினர் மயிலை. இதனை இளம்பூரணர், சேனுவரையர், இலக்கண விளக்கத் தார் போற்றுகின்றனர்.[1] இக்கருத்தினைச் சங். மறுத்துரைத்தனர். கோழி எறியும் வாழ்க்கையர் முதலானவற்றை மட்டும் சொல்லு வான் குறிப்புடன் ஈண்டுக் காட்டப்பட்டது எனில், ஏனையவற்றை வழுவமைதிகளாகக் கொள்ளும் இடம் இல்லாது போகும் என்ற கருத்தில், "அங்ஙனமாயின் ஏனைய குறிப்பின் பொருள்தரும் மொழியல்லவாம் எங்க" எனக் குறித்தனர் சங். விடுபாடு இல்லாமல் அனைத்தையும் அடக்கிக் கூறுவதால் சங். உரையே பொருத்தமாகிறது.

யாற்றுநீர்ப் பொருள்கோள் (412): "மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள் அற்றற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே" என்பது நூற்பா. கருதிய பொருளுக்குப் பொருந்திய மொழிகளை ஓரடியுள்ளே மாற்றிச் சொல்லுவது என்று உரை கூறி பின்வரும் எடுத்துக்காட்டை நல்கினர் மயிலை.[2]

> "அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்
> விலைப்பாலின் கொணர்தேன் மிசைவதும் குற்றம்
> சொலறபால அல்லாத சொல்லுதலுங் குற்றம்
> கொலைப்பாலும் குற்றமே யாம்"

யாப்பருங்கல விருத்தி உரையாசிரியரும், நேமிநாத உரையாசிரிய ரும் மயிலை. உரையை ஒத்த கருத்தினரே.[3] இவ்வுரை முறையை சங். மறுத்தனர். மொழி மாற்று முதலிய பொருள் கோள்கள் போல மாறிச் செல்ல வேண்டாமல், செய்யுளின் அடி களில் எல்லாம் சிறந்த பொருள் அமைந்து அமைந்து நடப்பது

1. தொல். எச்சவியல். 63: இலக்கண விளக்கம் 354
2. நான்மணிக்கடிகை 26
3. யாப். விருத்தி 95, நேமிநாத உரை சொல் 68

என்று கூறிக் கீழ்வரும் சீவக சிந்தாமணிப் பாடலைக் காட்டினர்.[1] சங்.

> "சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
> மெலலவே கருவிருந்து ஈன்று மேலலார்
> செல்வமே போல்தலை நிலவித் தேர்ந்தநூல்
> கல்விசேர் மாந்தரில் இறைஞ்சிக் காய்ததவே"

இப்பாட்டினுள் "சொல் என்னும் எழுவாயினை முதலெடுத்து அதன் தொழிலாகிய வினை எச்சங்கள் ஒன்றனையொன்று கொள்ள, இடையே முறை நிறீஇக் காய்த்த என்னும் பயனிலையை இறுதிக் கண் தந்து முடித்தலையின் இப்பொருள் ஒழுகுதல் யாற்றுநீர் ஒழுக்குப் போன்றிருத்தல் காண்க" எனப் பொருந்த உரையும் புகன்றனர். 'யாற்றுநீர் ஒழுக்குக்கு இடையறுதல் இன்மையாலும் அப்படி உடையதேல் அதனை ஒழுக்கு என்றல் கூடாமையாலும் ஒவ்வோரடி ஒழுகுதற்கு உவமையாயிற்று எனின் அஃது உவமை அன்றும், பாட்டு முழுவதும் இடையருது ஒழுகிப்பயின்று வரும் பொருள்கோள் மொழிமாற்று முதலியவற்றுள் அடங்காமையின் குன்றக்கூறல் ஆதலானும், அவர் காட்டியது போன்ற பாடல்களை, அடிமறிமாற்றுப் பொருள்கோள் அடக்கிக் கொள்ள இயலும் என்பதாலும்' மயிலை. காட்டிய பாட்டும் கருத்துரையும் இப் பொருள்கோளுக்குப் பொருந்தா என்பது சங். மறுப்பு. மறுப்பின் கண் தருக்கத்திறன் பளிச்சிடுகிறது. எனினும் 'அற்று அற்று' என்ற நூற்பாச் சொற்களுக்கு 'அமைந்து அமைந்து' எனப் பொருள் கொள்ளுதல் பொருந்துமா என்பதுவும், சூத்திர நிலை களுள் ஒன்றுக குறிக்கப்படும் ஆற்றொழுக்கு[2] என்பதனுக்கும், யாற்று நீர்ப் பொருள்கோளுக்கும் வேற்றுமை வேண்டாவா என்பதுவும் ஆராய்ச்சிக் குரியன. இவற்றை நோக்கின் மயிலை. உரையும் காட்டுமே பொருந்துகின்றன.

நிரனிறைப் பொருள்கோள (414) : பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலை களையும் வேறுவேறு நிரையாக நிறுத்தி, முறையாயேனும் எதிரா யேனும் இதற்கு இது பயனிலை என்பது படக் கூறும் பொருள் கோள் நிரனிறைப் பொருள் கோளாம். இப் பொருள்கோள் உரை யில் யாப்பருங்கல முடையார் காட்டிய பாட்டொன்றைக் காட்டி "இப்பாட்டு மபக்க நிரனிறை என்று யாப்பருங்கலமுடையார் காட்டினர்" என மயிலை. பின்குறிப்பும் எழுதினர். அப் பாட்டு:

---

1. சீவக. 53
2. நன்னூல் 19

"அம்ம பவள்ள் வரிநெடுங் ணுய் வஞ்சிக்
கொம்ம பவள்ள் கொடிமருங்குல் கோங்கின்
அரும்ம பவள் முலை ஒக்குமே ஒக்கும்
கரும் பவள் வாயிற் சொல"

இப்பாடல் மயக்க நிரனிறை என்பார் கருத்தை மறுத்தனர் சங். இது யாற்றுநீர்ப் பொருள்கோளைச் சார்ந்தது. இது சொல்நிலையும் பொருளையும் தனித்தனி நிறுத்திக் கூறிபதன்றி நிரனிறையாக நிறுத்திக் கூறுமையின் நிரனிறை அன்று. யாற்றுநீர்ப் பொருள் கோளுக்கு வேறு வகையில் பொருள் விளக்கம் செய்தமையின், மயிலை. ஆல் இப்பாடல் அங்குக் காட்ட இயலவில்லை போலும். நிரனிறைப் பொருள்கோள் இலக்கணத்தை வைத்து நோக்கும் போது இப்பாடலை, நிரனிறையில் அடக்க முடியாது என்பது தெளிவாகிறது. மயக்க நிரனிறை என்று கொள்ளுதற்கும் காரணம் புலப்படவில்லை. ஆதலின், இப்பாடலை யாற்றுநீர்ப் பொருள் கோளில் அடக்கிக் கொள்ளுதலே பொருந்தும்.

கொண்டு கூட்டுப் பொருள்கோள் (418) : செய்யுளது பல அடிகளுள்ளும் இயல்பாகிய யாற்றுநீர்ப் பொருளுக்கு ஏலாது, கோத்துக் கிடந்த மொழிகளை எடுத்து அப்பொருளுக்கு ஏற்ற விடத்துக் கூட்டும் பொருள்கோள் கொண்டு கூட்டுப் பொருள் கோளாம். சங். மயிலை. ஆகிய இருவரும் பிறரும் பொருள் கொள்வதில் ஒத்த கருத்தினராகவே காணப்படுகின்றனர். ஆனால் மயிலை. கொண்டு கூட்டுப் பொருள்கோளுக்குக் காட்டிய காட்டைச் சங். மறுத்து உரைத்து "மொழிமாற்றிற்கும் கொண்டு கூட்டிற்கும் வேற்றுமை உணராரை கூற்றும் என்க" என இடித் துரைப்பர். அக்காட்டு :

"ஆலத்து மேல குவளை குளத்துள
வாலி னெடிய குரங்கு"

இஃது ஆலத்துமேல் குரங்கு, குளத்துள குவளை என ஈரடியுட் பெயரையும் வினையையும் வேண்டுழிக் கூட்டிக் கொண்டமையான் ஈடிக் கொண்டு கூட்டு; இதனை மொழிமாற்றென்பாரும் உளர். அவ்வாறு கொள்ளின், ஏனைப்பல அடிகளுள் வரினும் பல பெயர் கொடுக்க வேண்டுமென்க. இஃது மயிலை. கருத்துரையாம். இதனை மறுத்துச் சங். கூறுவனவும் முற்றப் பொருந்துவதாக இல்லை. அப் பொருந்தாமையைக் கவிராயர் தம் விருத்தியில் எடுத்துக் காட்டி, மேற்கண்ட இருவரிப் பாடல் பூட்டுவிற் பொருள் கோள் எனக் கொண்டனர். மொழி மாற்றுப் பொருள்கோளுக்கும் கொண்டு கூட்டுப் பொருள்கோளுக்கும் வேறுபாடு இவ்

விரண்டும், சொற்கள் முன்பின்னாக மாற்றுப்படுதலால் ஒப்புமை உடையன. எனினும் ஒரு வேறுபாடு உண்டு. அஃது: ஓரடியில் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றுவது மொழிமாற்றுப்பொருள் கோள். பல அடிகளிலும் நின்ற சொற்களை ஏற்றபடி கொண்டு கூட்டுவது கொண்டு கூட்டுப் பொருள்கோள். இவ் விலக்கணத்தை வைத்து நோக்கின், மயிலை. உரைமுறைப்படி மேற்படிப் பாடலை ஈரடிக் கொண்டு கூட்டு என்று கோடலே பொருந்துகிறது.

இடைச்சொல் (430): பிறிதினிடத்தைச் சார்ந்து நடத்தலான் இடைச்சொல் என்பது மயிலை. விளக்கம். 'பெயர், வினைகளின் இடமாக நடத்தலின் இடைச்சொல்' என்பது சங். 'பெயர்ச்சொல் வினைச் சொற்களும் ஆகாது அவற்றின் வேறும் ஆகாது இடை நிகரவாய் நிற்றலின் இடைச்சொல் எனக் காரணக் குறிபெற்றன. இது பாலைத்திணை, நடுவுநிலைத் திணை எனப் பெயர் பெற்றது போலும்' என்பர் முனிவர். 'தனித்து நடத்தலன்றிப் பெயர் வினை களிடமாக நடத்தலின் இடைச்சொல் எனக் காரணக் குறி போந்தது எனினும் அமையும்' என்ற சங். கருத்தையும் ஏற்பர் முனிவர். அங்ஙனமெனில், பெயர் வினைகளின் இடமாக வரும் பெயரைப் பெயரிடைச்சொல் வினை இடைச்சொல் எனக் கூற லாமோ என்ற ஐயம் எழும். இவ்வையத்தை ஓர் உவமை மூலம் விளக்கித் தெளிவுறுத்துகிறார் முனிவர். "வாளா முதனூலின் வழியாக நடக்கும் நூலை அங்ஙனம் கூறுது வாளா வழிநூல் என்றாற் போலப் பெயர், வினைகள் இடமாக நடக்கும் சொல்லை அங்ஙனம் கூறுது இடைச்சொல் என்று கூறப்பட்டது" என்று அவர் விளக்குவர். தனித்தியங்கும் ஆற்றல் இடைச்சொற் களுக்கு இல்லை. பெயருடனே வினையுடனே அவை ஒட்டி வரு கின்றன. ஆயின் விளக்க இயலார் (Descriptive linguists) குறிப்பிடும் ஒட்டுகளாக (Affixes) மட்டும் அவை அமைந்து விடவில்லை. மரபிலக்கணங்கள் அனைத்தும் இடைச் சொற்களை முழுச் சொற்களாகவே கருதுகின்றன. தொல்காப்பியம் இடைச்சொற்களை ஏழாகப் பிரிக்க, நேமிநாதம் ஆறுகப் பிரிக்க நன்னூல் எட்டாக்குகிறது.[1]

எண்ணிடைச் சொற்கள் வினையோடு வருதல் (430): பொருந் துவனவாகிய எண்ணிடைச் சொற்கள் பெயரோடு அன்றி வினையகத்தும் வரும் என்பது நூற்பாவின் கருத்து.

1. சுப்பிரமணியன் டாக்டர் ச. வே., இலக்கணத் தொகை. சொல், 1971 ப. 284. ஞானமூர்த்தி, டாக்டர் தா. ஏ. 'இடைச்சொல் ஓப்பாய்வு தமிழிலக்கணக் கருத்தரங்கு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1978

"மண்டில மழுங்க மலிநிறங் கிளர
வண்டின மலர்பாந் தூத மிசையே
கண்டற் கானற் குருகின மொலிப்ப[1]

என்பது விஞையோடு வந்த செவ்வெண். மருங்கவும், கிளரவும், ஊதவும், குருகினம் ஒலிப்பவும் என உம்மை இடைச்சொல் விட்டிசைத்துத் தொக்கு நின்றது. மேற்கண்ட பாடலையே மயிலை. ஐப் பின்பற்றிப் பின் வந்தோரும் காட்டினர். "சாத்தன்வந்தான், கொற்றன் வந்தான் இருவரும் வந்தமையால் கலியாணம் பொலிந்தது என விஞைச் செவ்வெண் தொகை பெற்றது" என்று மயிலை. சுட்டினர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார்[2] ஆகிய மூவரும். உரைகாரர்களும் இப்போக்கிலேயே காட்டு நல்கினர். இதனைச் சேனாவரையரும் சங்.உம் மறுத்துரைத்தனர். 'இருவரும்' என்பது ஈண்டுத் தொகைச் சொல். இச்சொல் சாத்தன், கொற்றன் என்ற பெயர்களைக் குறிக்கின்றது. 'வந்தான்' என்ற விஞையைக் குறிக்கவில்லை. விஞையைக் குறித்தால் தான் அது விஞைச் செவ்வெண் ஆகும். வந்தான் என்னும் விஞை முற்று இரு முறை வந்ததாயினும் அதற்கு எண்ணுப் பொருட்டன்மை இல்லை. ஆகவே விஞைச் செவ்வெண் என்று கூறுதல் பொருந்தாது.

மற்றையது எனனும் இடைச்சொல் (434) : மற்று என்னும் இடைச்சொல் பற்றி 'விஞைமாற்று அசைநிலை பிறிதெனும் மற்றே" என்று நூற்பா பேசுகிறது. இந்நூற்பாவை அடுத்து 'மற்றையது' என்னும் இடைச்சொல் பற்றிய "மற்றைய தென்பது சுட்டியதற் கினம்" என்ற நூற்பா இடம் பெறுகிறது. இந்நூற்பாவிற்கு இரு வகையில் உரைகாரர்கள் பொருள் கூறினர். ஓரிடத்தில் சில பொத்தகங்களும், எழுத்தாணிகளும் உள்ளன. ஒருவன், தன் பணிபாளனை விட்டுப் 'பொத்தகம் கொண்டுவா' என்று ஏவுகிறான். அவன் ஒரு பொத்தகம் கொண்டு போனபோனது "மற்றையது கொண்டு வா" என்று மீண்டும் பணிக்கிறான். பணிபாளன், பிறிதொரு பொத்தகத்தை எடுத்துக் கொடுக்கிறான். ஈண்டு மற்றைபது என்பது முன் காட்டிய பொத்தகத்தின் இனமான பொத்தகத்தைக் குறித்தது. இவ்வாறு குறிப்பதே 'மற்றைபது' என்ற சொல்லின் பொருள் என்பர் மயிலை. தொல். உரையாசிரியர்கள் அனைவரும் இவ்வாறே கொண்டனர். ஆனால் சங். 'மற்றையது கொண்டு வா' என்று பணிக்கிற பொழுது, பொத்தகத்திற்கு இனமான எழுத்தாணியைக் கொண்டு

1. அகம் 260
2. தொல். இடையியல் 45

வா என்பதே கருத்து என்றுரைப்பர். விசாகப் பெருமாளையர், ஆறுமுக நாவலர் ஆகியோரும் இவர் கருத்தையே வழி மொழிந்தனர்.

ஒத்தவர்களையே 'மற்றவர்கள்' என்று குறிப்பிடும் இன்றைய வழக்கும், ஒரே பொருளின் பிறிதொன்றை 'மற்றது' என்று அழைக்கும் ஈழத்து வழக்கும் மயிலை. உரையை உறுதி செய்கின்றன. வை. மு. ச., சே. கி. ஆகியோரும், ச. பவானந்தம் பிள்ளையும், கா. நமச்சிவாய முதலியாரும் மற்றையது என்பதற்கு இவ்வாறே உரைகண்டு போற்றினர். பழைய தொல். உரையாசிரியர்கள் அனைவரும் இக்கருத்தே கொண்டனர். ஆதலின் மயிலை. உரையே பொருத்தமாகிறது.

உரிச்சொல் (442): ஒரு சொல்லின் வேர்ச்சொல் உரிச்சொல் (Root word) எனலாம். அச்சொல்லின் மற்ற உறுப்புகள் இடைச் சொற்களாம். சான்றாக, 'இசைத்தான்' என்ற சொல்லில் 'இசை' என்பது வேர்ச்சொல் அல்லது உரிச்சொல். 'த்', 'ஆன்' ஆகியவை இடைச்சொற்கள் (Non-Root). இவ் விலக்கணம் அடிப்படையானது. குழப்பமற்றது. தெளிவான வரையறை என்பர்.[1] தொல்காப்பியர்க்கு ஏற்ற விளக்கம் இதுதான் என்பது அவர்தம் முடிபு. தெய்வச் சிலையார், 'இசையிலும் குறிப்பிலும் பண்பிலும்' என்பவற்றை விளக்கும் போது வடமொழி இலக்கணத்தில் உள்ள முக்கிய அர்த்தா, இலட்சண அர்த்தா, கௌணிக அர்த்தா ஆகியவற்றை மனத்தில் கொண்டு விளக்கினர். 394ஆம் நூற்பாவிற்கு உரையியற்றும்போது தெய்வச் சிலையார் உரிச்சொற்கள் எல்லாம் திரிசொற்கள் என்று குறித்தனர். அவை செய்யுளுக்கே உரியவை என்றும் எழுதினர். பவணந்தியார் உரியியலுக்கு எழுதுமுன் இக்கருத்து அவரை முற்றப் பாதித்திருக்க வேண்டும். அப்பாதிப்பின் விளைவே 'ஓருவா செய்யுட்குரியன உரிச்சொல்' என்ற நூற்பாச் சட்டமாகும். செய்யுட்கே உரியன உரிச் சொற்கள் என்பர் மயிலை. உம். சங். உம். பொருட்கு உரிமை பூண்டன ஆதலின் இவற்றிற்கு உரிச்சொல் எனக் காரணக்குறி போற்றது என்பர் முனிவர். செய்யுட்கே உரிபன என்பது தவறு என்பதனாலேயே முனிவர் இவ்வாறு விளக்கிப் போற்றனர்.

1. Meenakshi Sundaram T. P., Uriccol, Seminar on Cramma tical Theories in Tamil, Annamalai University, 1973, P.4.

உரிச்சொல் இலக்கணம்: தொல்காப்பியம் அதன் உரைகள், நன்னூல், அதன் உரைகள், நேமிநாதம், இலக்கண விளக்கம், அவற்றின் உரைகள் எனும் இவற்றைக் கொண்டு உரிச்சொல் இலக்கணத்தை, (அ) இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்டு உரியவாய் வரும், (ஆ) பெயரையும் வினையையும் சார்ந்து வரும், (இ) ஒரு சொல் பல பொருட்கு உரிமையாய் வரும், (ஈ) பலசொல் ஒரு பொருட்கு உரிமையாய் வரும், (உ) வழக்கின் பயிலாத சொற்கள், பயிலும் சொற்களோடு சார்த்தி உரைக்கப்படும், (ஊ) உரிச்சொல் என்பது காரணம் பற்றி வந்த ஒரு பெயர் என இவ்வாறு தொகுத்துக் காட்டலாம். இவற்றை அடித்தளங்களாகக் கொண்டு உரையாசிரியர்கள் பலரும், உரிச் சொல்லின் பெயர்ப் பொருத்தத்தைக் குறித்துள்ளனர். இசை என்பது ஓசை; அது செவியால் உணரப்படுவது. குறிப்பு என்பது மனத்தால் உணரப்படுவது. பண்பு என்பது குணம்; அது பொறியான் உணரப்படுவது. இம் முப்பொருட்கும் உரியவாதலின் 'உரிச் சொல்' எனப் பெயர் பெற்றது. ஒரு சொல் பல பொருட்கும், பல சொல் ஒரு பொருட்கும் உரிமைப்பட்டு வருதலான் 'உரிச்சொல்' ஆயிற்று. ஒரு வாய்பாட்டான் சொல்லப்படும் பொருட்குத்தானும் உரித்தாகி வருவதால் 'உரிச்சொல்' ஆயிற்று. செய்யுட்கே உரியவாய் வருதலின் அப்பெயர் உடையதாயிற்று. நால்வகைச் சொற்களும் செய்யுட்கே உரியனவாதலின் செய்யுட்குரியன உரிச்சொல் என்பது பொருந்தாது என்பர் கவிராயர். பொருட்கு உரிமை பூண்டு வருதலின் உரிச்சொல் ஆயிற்று. சொல் பிறப்பதற்கு உரிய சொல் ஆதலின் உரிச்சொல்லாயிற்று.[1] பெயர்ச்சொல் உள்ளிட்ட எல்லாச் சொற்களின் பகுதிகளும் 'உரிச்சொல்லே' என்பதுவும், அவ்வடிப்படையில் சொல் பிறப்பதற்கு உரிய சொல் ஆதலின் உரிச்சொல் எனப்பட்டது என்பதுவும் மிகப் பொருந்துகின்றன.[2] இவ்விளக்கமே இற்றை மொழியியலார் கொள்கைக்கும் முற்றப் பொருந்துவது.

உரை வேறுபாடுகள்—முடிப்பு: நன்னூல் உரை காணுவதில் உரையாசிரியர்கள் வேறுபட்ட இடங்கள் அறுபத்தொன்பது ஆகும். இவற்றுள் ஆறு பாயிர உரையிலும், பதினொன்று, எழுத்ததிகார உரையிலும், ஐம்பத்திரண்டு சொல்லதிகார உரையிலும் இடம் பெற்றுள்ளன. வேறுபட்டு உரை வகுக்கும் போது ஒவ்வோர் உரையாசிரியரும் மேற்கொள்ளும் முறை

1. இலக்குவனார், டாக்டர் சி., தொல்காப்பிய ஆராய்ச்சி, ப. 109.
2. சாம்பசிவன், ச. உரிச்சொல், தமிழிலக்கண கருத்தரங்கு, அண்ணாமலை பல்கலைக் கழகம், 1973, ப. 9.

தனித்தன்மை வாய்ந்தது. உரை வேறுபாடுகளில் அவரவர் கொண்டுள்ள தனிப்பாங்கே உரையாசிரியர்களை எளிதில் அடையாளம் காட்டும் வலிமை வாய்ந்தது. ஆகவே ஒவ்வோர் உரையாசிரியரின் தனிப்பாங்கு ஈண்டுத் தொகுத்துரைக்கப் படுகிறது.

மயிலை: பதின்மூன்றிடங்களில் பிற உரைகாரர்களைச் சுட்டியிருக்கிறார்.[1] அவர் சுட்டுவனவற்றுள் சில தொல்காப்பிய உரைகளைச் சுட்டும். சிலர் யாரைச் சுட்டுகின்றன என்பது தெரியவில்லை.[2] அவை மயிலைக்கு முன்பிருந்த மாற்றுரை வழங்கிய பிற நன்னூல் உரையாசிரியர்களைச் சுட்டுதல் கூடும். மயிலை வேறு உரை வழங்கும் போது, மறுப்பிற்கு உள்ளாகும் உரையையோ, உரையாசிரியரையோ மதிப்புக் குறைவாய்ச் சுட்டுவதே இல்லை. இளம்பூரணர், இராசபவித்திரப் பல்லவ தரையன் முதலான உரையாசிரியர்களையும் அகத்தியர், தொல்காப்பியர், அவிநயனர் முதலாயின நூலாசிரியர்களையும் சிறப் படைகளுடன் பெயர் சொல்லிப் போற்றும் மயிலை. மறுப்புரைக்கு ஆளாகும் நூலாசிரியரையோ உரையாசிரியரையோ, பெயர் சுட்டி மறுக்காமை அவர் பெருந்தன்மைபைக் காட்டுகிறது. இம்மரபு மயிலைக்குரிய தனிச் சிறப்பாகும். பின்னும் சில இடங்களில் தான் கண்ட உரை முறையின்றி, பிறிதோர் உரையிருக்குமாயின் அதனை ஏற்றுப் போற்றும் தன்மையை இவரிடம் காணலாம். 'அவையும் அறிந்து கொள்க' என்று பிற உரையையும் வழிமொழியும் மாண்பை மயிலை. இடத்தில் பார்க்கலாம்.[3] இவர், தான் உடன்படும் உரைகளை மறுக்காமல் வழிதே காட்டிப் போற்றுதலும் உண்டு.[4]

சங்: ஏறத்தாழ எழுபது இடங்களில் பிற உரைகளைச் சுட்டிக்காட்டி ஏற்றும் எதிர்த்தும் சென்றிருக்கிறார்.[5] இவ்

---

1. மயிலை. நன். உரை: 60, 94, 97, 161, 213, 238, 271, 289, 290, 319, 342, 364, 417
2. மே. கா. நூ. 97, 271, 417
3. மே. கா. நூ. 364
4. மே. கா. நூ. 97, 161, 213, 238, 271
5. சங். நன். உரை. பாயிரம் ப. 4, ப. 5, நூற்பா 3, 20, 48, 95, 97, 109, 110, 110, 124, 139, 152, 158, 162, 164, 178, 194, 207, 254, 261, 264, 275, 276, 279, 284, 284, 286, 290, 290, 291, 316, 319, 320, 320, 323, 340, 343, 347, 355, 356, 360, 360, 361, 365, 370, 373, 373, 376, 378, 380, 382, 386, 384, 397, 398, 399, 399, 400, 404, 404, 408, 412, 413, 420, 425, 430, 434. (இரண்டு எண்கள் ஒரே நூற்பாவில் இரண்டிடங்களில் மறுப்புண்மையைக் காட்டுவன).

விடங்கள் அனைத்தும் மயிலை. உரையை மட்டும் சுட்டி எழுதப் பட்டன அல்ல என்பது மிக இன்றியமையாத செய்தியாகும். மயிலைநாதரைக் கருதாது வேறுரையாசிரியர்களைக் கருதி எழுதப் பட்ட மறுப்புகளும் உள்ளன. தொல்காப்பிய உரையாசிரியர்கள், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், முதலான அனைவரையுமோ அல்லது அவர்களுள் ஒரிருவரையோ மறுக்கு மிடங்கள் ஏறத்தாழ இருபத்தைந்து உள்ளன.[1] இலக்கிய விளக்கவுரைகாரரை உளங்கொண்டு மறுக்கும் இடங்கள் ஏறத் தாழ பதினைந்து உள்ளன.[2] இறையனார் களவியல் உரையைக் கருதி மறுக்கும் இடமும் (பாயிர உரை) அவிநய உரையைக் கருதும் இடமும் (261, யாப்பருங்கல விருத்தியுரையைக் கருதும் இடமும் (111, நேமிநாத உரையைக் கருதும் இடமும் (412), இலக்கணக் கொத்துடையாரையும் பிரயோக விவேக நூலா ரையும் 'ஒருசார்' எனச் சுட்டும் இடமும் (291), உள்ளன.[3] இவையன்றி மயிலை. உரையை மட்டுமே மனத்துட்கொண்டு மறுக்கும் இடங்கள் ஏறத்தாழ இருபத்தைந்து ஆகும்.[4] சங். மறுப்புரைகளில் யாரைச் சுட்டுவன என அறிய முடியாத இடங்கள் ஏழு உள்ளன.[5] இவை மயிலை. உரைக்கு முன்பிருந்த சமணர் உரையைச் சுட்டியன ஆகலாம்.

மறுப்புரைக்கும் போது சங். சற்றுக் கடுஞ் சொற்களைக் கை யாண்டு மறுப்புரைப்பது உண்டு. "சாதிப்பாரும் உளர்" எனவும் "இடர்ப்பட்டு உரை காண்பர்' எனவும், "அவர் கருத்துப் பொருந்தாது" எனவும், "அமையாது" எனவும், "அவர் மலிவு" எனவும், " உதாரணம் கூறுவார் கூற்றை எல்லாம் உய்த்துணர்ந்து களைக' எனவும் பிற உரையாசிரியர் களையும், உரைகளையும் சுட்டி உரைக்கிறார்.[6] மற்றவர் பெயரைச் சுட்டாமல் மறுப்புரைக்கும் தகையுடைய சங். பிறர் உரைகளை உடன்பட்டு எடுத்துக்காட்டுதலும் உண்டு

1. சங். நன். உரை. பாயிரம் ப. 4; நூ. 3, 110. 152, 158, 162, 164,261,276, 284, 290, 347, 360, 365, 376, 382, 383, 384, 399, 400, 404, 408, 425, 430, 434.
2. மே. கா. நூ. பாயிரம் ப. 5; நூ. 3, 97, 110, 139, 152, 178, 194, 275. 276, 268, 356, 383, 425
3. மே. கா. நூ. இறை. பாயிர உரை, அவிநயம் 261, யாப். விருத்தி 412, நேமிநாதம் 412, இலக்கணக்கொத்து, 291; பிரயோகவிவேகம் 291,
4. மே. கா. நூ. 93, 124, 207, 254, 279, 290, 316, 319, 320, 324, 340, 343. 355, 363, 370, 373, 378, 380, 382, 397, 398, 400, 406, 413, 420
5. மே. கா. நூ. 20, 48, 109, 264, 363, 276, 279
6. மே. கா. நூ. 164, 284, 316, 319, 320, 370, 380

இலக்கணக் கொத்துடையார் கருத்தினையும், பிரயோக விவேக நூலுடையார் கருத்தினையும் ஒரு சாரார் கொள்கை என்று உடன் பட்டிருப்பர்.[1] மயிலை. உரையை ஏற்றுப் போற்றுவர்.[2] மயிலை உரைக்கு எதிராக எழுதப்பட்டது சங். உரை என்பார் எண்ணிப் பார்க்கத்தக்க இன்றியமையாக் குறிப்புகளுள் இஃது ஒன்று ஆகும். கருத்து வேறுபாடுகளை மறுத்துரைப்பதில் சங்.க்கு உள்ள தனித்தன்மை அழகான தன்மை வழி மறுப்பதாகும். சங்.இன் இத் தனிக்கலை இவர் உரைக்குப் பெரும்புகழ் நல்குவதாகும்.[3]

சிவஞான முனிவர் : உரை விளக்கம் எழுதிய நன்னூல் நூற்பாக்கள் 83[4]. இவற்றுள் இவர் மற்றைய உரைக்காரர் களிடமிருந்து கருத்து வேறுபட்ட இடங்கள் பதினான்கு.[5] அசையை அடிப்படையாக வைத்துக் குற்றியலுகரம் எழு வகை என்று கூறிய யாப்பருங்கலக் காரிகை உரைகாரரை மறுத்து ஈற்றடியில் எழுத்தை வைத்துக் குற்றியலுகரம் ஆறு வகையே என ஓரிடத்திலும், இலக்கண விளக்க உரையை நான்கிடத்திலும் சங்.ஐ ஏழு இடத்திலும், தொல்காப்பிய உரையாசிரியர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோரை மூன்றிடத்திலும் இறையனார் களவியல் உரைகாரரை ஓரிடத்திலும், சேனாவரை யரை ஓரிடத்திலும், பரிமேலழகரை ஓரிடத்திலுமாக மறுத் துரைப்பார். இலக்கண விளக்கமும், அதன் உரையும் முனிவரின் பெருந்தாக்குதலுக்கு உள்ளாகி யிருப்பது தனித்துச் சுட்டத்தக்கது. இவர் மறுப்புரை முறை மிகக் கடுமையாது. கூரிய சொற்களில் மாற்றுக் கருத்தாளர்களைச் சுட்டுரைப்பர். இளம்பூரணர் முதலான உரைகாரர்களைக் 'கருத்தறிப தவர்கள்' என்றும், 'தமிழ்ப் பயிற்சி ஒன்றுமே உடையார்' என்றும், 'தமக்கு வேண்டியவாறே பொருள் எழுதிச் சொற்றணம் வாளா போயினர்' என்றும் குறித்திடுவர்.[6] எனினும் இவர் மறுப்புரைக்கும் இடங்களில் தருக்கமும் முடுக்கமும் விரவி இருப்பதைக் காணலாம். குற்றிய லுகரம், எழுத்துப்போலி, ஒருமை, இருமை, அளபெடை ஆகியன இவர் உரைத்திறத்தால் விரிவான விளக்கம் பெற்றன எனலாம்.

---

1. சங். நன். உரை, 291
2. மே. கா. நூ. 323
3. சங். உரை, ப. 144.
4. இந்நூல் ப. 155
5. சிவஞான முனிவர் நன்னூல் விருத்தியுரை தண்டபாணி தேசிகர் பதிப்பு: 1971. ப. 41 நூ. 91,94, 125, 128, 137, 138, 184, 194; 284, 290, 293, 295, 339
6. மே. கா. நூ. சிறப்புப் பாயிர உரை, ப. 41, நூ. 125 339.

கவிராயர்; ஆங்காங்கே சிவஞான முனிவரின் உரையை மறுத்தும், தொல். உரையாசிரியர்களை உடன்பட்டும் சென்றுள்ளனர்.[1]

இவர் தவிர ஏனைய காண்டிகை உரையாசிரியர்கள் அனைவரும் பழைய உரைகளைப் பொன்னேபோல் போற்றினர். ஆதலின் புத்துரை காண்பதிலோ புது விளக்கம் தருவதிலோ முனைய வில்லை. ஆக; கருத்து வேறுபாடுகள் என்றும் இவ்விறுதிப் பகுதியில் மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர், சிவஞான முனிவர் ஆகியோரே பேரிடம் பெறுகிறார்கள். இராமானுச கவிராயர் அவர்களுக்கு அடுத்த நிலையில் இடம் பெற்றுள்ளனர். இருபதாம் நூற்றாண்டில் நடுப்பாகத்திலிருந்து, நன்னூலார் கருத்து என தனியாய்வு இடம் பெறுவதை விட, பொதுவாகத் தமிழிலக்கணக் கோட்பாடுகளே முதன்மை பெற்றன, நன்னூல் போன்ற தனி நூல்கள் இரண்டாம் நிலையை அடைந்தன.

1. இராமானுச கவிராயர் நன். உரை. 23 88 91 94 : 32 284

30

முடிவுரை

இடைக்காலத் தமிழ், முக்காலத் தமிழுக்குக் கொடுத்த 'இலக்கணக் காமதேனு' நன்னூல். இந்நூல் சமயச் சூழலில் பிறந்து சமயச் சூழலில் வளர்ந்து 'சமரசச்' சூழலில் தழைத்து நிற்கிறது. இதனிடத்திருந்து இலக்கண உதவியைப் பெற்றவர்கள், நன்றி மறவாது பதிலுக்கு உரை என்ற நன்கொடையை வழங்கி விட்டுப் போயிருக்கிறார்கள். தங்கத் தட்டிலே வைக்கப்பட்டிருந்த அந்நூல், உரைகள் என்னும் தங்கத் தடாகத்திலே மிதக்க விடப் பட்டிருக்கிறது. இப்போதோ ஆராய்ச்சி என்னும் தங்கக் கடலிலே அமிழ்து அசைந்தாடிக் கொண்டிருக்கிறது. எழுநூறு ஆண்டுக் கால நீண்ட பயணத்தில நன்னூல் பெற்ற பெருமைகள் பல. தட்டைத் தாண்டி, தடாகத்தில் நீந்தி, கடலிலே மூழ்கும் முயற்சி இவ்வாசிரியாரின் முயற்சி. நன்னூலை ஒட்டி உயிர்த்த கருத்து முத்துக்களை எல்லாம் கண்டெடுத்து மாலையாகத் தொடுப்பதுவே முடிப்புரையின் மூச்சுரையாகும். அம் மூச்சுரையின் பேச்சுரை பின்வருவன:

1. பவணந்தியார் சிறந்த தமிழிலக்கணம் எழுத முதன்மைக் காரணம் பிற்காலச் சோழர் காலத்திருந்த சமயப் பொதுமையே. 2. சோழர் கால நூற்களுள் சமற்கிருத மொழியின் செல்வாக்குப் படிந்திருந்தது. நன்னூல் இதற்கு ஓரளவு ஆட் பட்டாலும், சமற்கிருதச் செல்வாக்கை உறுதிப்படுத்தியது. 3. இலக்கணப் படைப்பில் புறச் சமயத்தாரின் அக்கறை தவிர்க்க முடியாதது. நன்னூலும், சமண நெறியினரால், சமணச் சார்புள்ள வேந்தனுல் செய்விக்கப்பட்டது. 4. நன்னூல் போன்ற இலக்கணங்கள் தோன்ற, தொல்காப்பியத்திருந்த அகலமும், ஆழமும் அனைத்து வகை மாந்தர்க்கும் விளங்காமல் இருந்ததும் ஒரு காரணம். 5. சோழர் காலத்தின் தனிப்பெரும் நன்கொடை,

ஐந்திலக்கண மரபாகும். நன்னூலும் இந்த மரபை உட்படுத்தி முழுமையாக்க எழுந்ததே. 6. பவணந்தி முனிவரின் காலம் கி.பி. 1131 முதல் 1212 வரை ஆகும். 7. பவணந்தி முனிவர்க்கு 'நன்னூலார்' என்றே ஒரு பெயர் அறிஞரால் வழங்கப்பெற்றது. 8. பவணந்தி, சமணர் என்பதுடன் அவர் ஒரு துறவியும் ஆவார். 9. சன்மதி என்னும் பெயர் உடையார், பவணந்தியாரின் தந்தை அல்லர், அவருக்கு அறிவு கொளுத்திய 'ஞானத் தந்தை'யே ஆவார். 10. பவணந்தியாரின் பிறப்பிடமும் வாழ்விடமும், தொண்டை நாடா? அன்று. மைசூர் நாடா? அன்று, கொங்கு நாடா? அன்று, ஆந்திர நாடா? அன்று, தொண்டை நாட்டில் பிறந்து, கொங்கு நாட்டில் வாழ்வு பெற்றார் என்பதே தக்கது. 11 பவணந்தியார், ஆறு பெருமைகளை உடையார். 12. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற இலக்கண நெறியை முதன் முதலில் கோட்பாடாக ஆக்கிக்கொடுத்தவர் பவணந்தியாரே ஆவர். 13. பவணந்தியின் நன்னூல், தொல்காப்பிய எதிர் நூலாகச் சிலரது கருத்திற்பட்டது, சரியன்று. 14. பவணந்தியார் நன்னூலை ஐந்ததிகார நூலாக இயற்றவில்லை. எழுத்து, சொல் என்ற இரட்டை அதிகார நூலாகவே செய்தார். 15. நன்னூல் பாயிரம் பவணந்தியரால் இயற்றப்பட்டது அன்று. பாயிரம் பல வேறு நூல்களில் மேற்கோளாக ஆளப்பட்ட நூற்பாக்களின் சேர்க்கையே. 16. பொதுவியலை எட்டாவது இயலாகக் கொள்வதைக் காட்டிலும், பத்தாவது இயலாகக் கொள்ளுதலே பொருத்தம். 17. இடையியல், உரியியல் என்பன பழைய பெயர்கள் அல்ல. இடைச்சொல்லியல், உரிச் சொல்லியல் என்பனவே முன்னைய பெயர்கள். 18. உரையில்லாத, உரைத் தேவை யில்லாத காலம் ஒன்று இருந்தது. அது பழைய காலம். 19. தொடக்கத்தில் தோன்றிய உரைகள் வாய்மொழியாகவே இருந்தன. இலக்கியத்தை விட, இலக்கணங்களுக்கு உரைகள் பல்கின. காரணம், இலக்கணம், சொல்லப்பட்டுள்ள சூத்திர யாப்பின் செறிவேயாகும். முன்னைய தமிழிற்கும், பின்னைய தமிழிற்கும் இடையே பெருந்துண்டிப்பு ஏற்படாமல், இணைப்புப் பாலம் அமைத்தபெருமை இடைக்கால உரையாளர்களையேசாரும். 20. சைவ, வைணவ, சமண சமயத்தார் தம் தத்துவ நூல்களை விளக்க எடுத்துக் கொண்ட முயற்சி, தமிழில் உரை காணும் பேரியக்கத்தையே உண்டாக்கி விட்டது. இவ்வாறு, இடைக் காலத்தில் எழுந்த உரையியக்கமே, நன்னூல் உரைத் தோற்றத் திற்குப் பெருங்காரணமாக இருந்தது. 23. நன்னூல். திட்ப நுட்பம் செறிந்த நூற்பா யாப்பில் அமைக்கப் பட்டிருந்த இலக்கணம் ஆதலால், பல வேறு உரை

விளக்கம் அந் நூலுக்குத் தேவைப்பட்டது, 24. சமயப் போட்டியின் விளைவாகவும், நன்னூலுக்கு உரைகள் எழுந்தன. தொல் காப்பியம் உரை பல பெற்றதற்குக் காரணம் விளங்காமை நன்னூல் உரை பல பெற்றமைக்குக் காரணம் சமயப் போட்டி ஆகும். 25. பள்ளியிலும், கல்லூரியிலும் நன்னூல் பாடமாக்கப் பட்டமை, பல எளிய உரைகள் வெளிவரக் காரணமாயிற்று.

26. உரை, பதினென்கு வகையினது. நன்னூல், பழமை வாய்ந்த உரை வகைகளான, காண்டிகையுரை பலவற்றையும், விருத்தியுரை சிலவற்றையும் பெற்றது. 27. மயிலைநாதருக்கு முன்பும் நன்னூலிற்கு உரையோ, உரைகளோ இருந்தன. அப்பழைய உரைகளுள் ஒன்றைச் சமண முனிவருள் ஒருவர் இயற்றினர். 29. மயிலைநாதர் உரையைச் சமண முனிவர் உரை என்று கூறுதலைக் காட்டிலும் சைவர் உரை என்று கூறுதற்கே சான்றுகள் மிகுதியாக உள்ளன. 29. நன்னூல் உரையாசிரியர் ஆண்டிப் புலவரின் காலம் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டு அன்று. பதினாறும் நூற்றாண்டே. இவர், எழுத்தியல், பதவியல் என்ற இரண்டு இயல்களுக்கு மட்டுமே உரை எழுதினர் எனல் பொருத்தமில்லை. எழுத்து, சொல் என்ற இரண்டு அதிகாரங்களுக்கும் பொருள் எழுதினர், எனலே பொருந்துவது. நன்னூலுக்குச் செய்யுள் வடிவத்தில் அமைந்த ஒரே உரை இவருடையதே. 30. இலக்கியத்தின் நாடியாகிய உவமை யாட்சியை, இலக்கண நெறிகளுக்குக் கொண்டு வந்து விரிவான அளவில் காட்டியது சங்கர நமச்சிவாயர் உரை. 31. வடநூல் மரபு கொண்டு, கொட்டும் அருவிபோல, எதிர் உரையை வெட்டி முறிப்பது சிவஞான முனிவர் உரையாகும். 32. நன்னூலுக்கு எழுதப் பெற்ற முதல் கிறித்தவர் உரை, கூழங்கைத் தம்பிரான் உரையேயாகும். 33. இலக்கணப் படைப்பாளியான வைத்திய நாத தேசிகரால் எழுதப்பட்ட நன்னூல் உரையொன்று உண்டு. இவ்வுரை, தேசிகரைப் படைப்பாளி மட்டுமன்றி உரையாளி என்றும் காட்டுகிறது. 34. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமைந்திருந்த அரசியல் சமூக, சமயச் சூழ்நிலைகள், நன்னூற் கல்வியைப் பெருக்கின; பரவலாக்கின. 35. அச்சுப் பொறியும், சென்னைக் கல்விச் சங்கமும், மாநிலக் கல்லூரியும் நன்னூற் கல்வியை இந் நூற்றாண்டில் மலிவாக்கின. 36. இந்நூற்றாண்டில் நன்னூல் உரைகள் பெருகின. பெருக்கத்திற்குக் காரணம், ஆய்வு, நோக்கும் அன்று; தேர்வு நோக்கமே. 37. இச்சூழலில் நன்னூலுக்கு முதல் காண்டிகை யுரை விசாகப் பெருமாளையர் அவர்களால் எழுதப்பட்டது. இவ்வுரையே முதலில் (1839) அச்சேறிய

நன்னூல் உரையாகும். அக்காலத்துக் காண்டிகை உரை என்றுல் விசாகப் பெருமாளையர் காண்டிகை யுரையையே குறிக்கும். 38. வினுவிடை அமைப்பில் முதன் முதல் எழுதப்பட்ட நன்னூல் உரை யாழ்ப்பாணத்து மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை யால் எழுதப்பட்ட நன்னூல் உரையாகும். 39. முகவை இராமானுச கவிராயாரால் எழுதப்பட்ட நன்னூல் விருத்தி யுரையே முதல் வைணவ விருத்தியுரையாகும். 40. களத்தூர் வேதகிரி முதலியார் எழுதிப் பதிப்பித்த நன்னூல் உரையே முதன் முதல் (1855) சிவஞான முனிவரின் விருத்தியுரையில் அச்சிட்ட சில பகுதிகளை உடையதாகும். 51. திருப்பாற் கடல் நாதன் கவிராயரால் செய்யப் பெற்ற நன்னூல் உரையே, ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட முதல் (1851) நன்னூல் உரையாகும். 42. டாக்டர் போப்பையரால் எழுதிப் பதிக்கப்பட்ட நன்னூல் உரையே, நன்னூல் உரைபதிப்புகளுள் தலைசிறந்தது ஆகும். 43. நன்னூல் முழுதையும் முதன் முதல் (1858) தொல்காப்பியத் தோடு ஒப்பிட்டுக் காட்டிய பெருமை, சாமுவேல்பிள்ளை பதிப்பித்த நன்னூல் உரைப்பதிப்பைச் சேர்ந்ததாகும். 44. க. பெ. சவுந்தர நாயகம் பிள்ளை வெளியிட்ட நன்னூற் சுருக்கமே, வரலாற்றில் எழுந்த முதற்சுருக்க நூலாகும். 45. ஆறுமுக நாவலர் உரையே முதலில் எழுதப்பட்ட நன்னூல் காண்டிகை உரையாகும். 46. வை. மு. சடகோப ராமானுசாசாரியாரும், சே. கிருட்டின மாச்சாரியாரும் எழுதிய உரையே இரட்டையரால் செய்யப் பட்ட முதற் காண்டிகை உரையாகும். 47. கா. ஸ்ரீ. கோபாலாசாரியாராலும், தி. கோ. ஸ்ரீரங்காசாரியாராலும் இயற்றப்பட்ட நன்னூல் உரை, இரட்டையரால் செய்யப்பட்ட இரண்டாவது முயற்சியாகும். 48. 1952இல் சென்னை அரசியலார் வெளியிட்ட நன்னூல் உரை, ஆசிரியர் பெயர் தெரியாப் பழைய உரை எனக் குறிக்கப் பட்டிருக்கிறது. இக்குறிப்புத் தவறுடையதாகும். முன்பே வெளியான விசாகப் பெருமாளையர் உரையின் மறு பதிப்பே இதுவாகும். பழைய உரைப் பயிற்சி யின்மையால் இவ்வுரையாசிரியர் பெயர் தெரியவில்லை எனத் தவறுதலாகக் குறிக்கப் பட்டிருக்கிறது. 49. ஐரோப்பியர், வட்டார மொழியைப் பயின்றுக வேண்டும் என்ற காலக் கட்டாயமே ஆங்கிலத்தில் நன்னூலை அறிமுகமாக்கியது. 50. நன்னூலுக்கிருந்த பெருஞ் சிறப்பு, தெளிவு குன்றுச் சுருக்கம். இத் தனித்தன்மையே பிற தமிழிலக்கணங்களைக் காட்டிலும் நன்னூலை அயலார் விரும்பக் காரணமாயிற்று.

51. நன்னூலின் பகுதிகளை முதன் முதல் ஆங்கிலத்தில் பெயர்த்தவர் ஹேரேனியசு ஐயர் ஆவர். 52. நன்னூல் ஆங்கில

மொழி பெயர்ப்பைச் செய்ய முதல் முயற்சியை மேற்கொண்ட இரட்டையர்கள் வால்ற்றர் ஜாய்சும், சாமுவேல் பிள்ளையும் ஆவர். 53. நன்னூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த முதல் சைவத்தமிழர் திருநெல்வேலி அருணாசலம்பிள்ளை ஆவார். 54. நன்னூல் பாயிரம் பகுதியை முதன் முதல் மொழி பெயர்த்தவர் என்றிபவர் ஐயர் ஆவார். 55. நன்னூல் முழுதையும் ஆங்கிலத்தில் முதன் முதல் மொழி பெயர்த்தவர் இலாசரசு ஐயர் ஆவார். 56. சரவண முத்துப் புலவர், சரவணப் பெருமாளையர், டி. இ. பரசுராம முதலியார், ஆறுமுக சுவாமி, ஸ்ரீநிவாச முதலியார், ஸ்ரீநிவாசாசாரியார், தெய்வசிகாமணி முதலியார், குமாரசாமிப் புலவர் முதலானோரால் நன்னூலுக்கு உரைகள் இயற்றப்பட்டுள்ளன. இவை இன்று கிட்டவில்லை. 57. இன்றும் அச்சேறுத ஆறு நன்னூல் உரைகள் உள்ளன. இவை, சென்னை அரசாங்கச் சுவடி நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. 58. நன்னூலுக்கு உரை காண்பதில் ஏறத்தாழ எழுபது இடங்களில் மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், இராமானுச கவிராயர் ஆகியோர் வேறுபடுகின்றனர். அவற்றின் வன்மை மென்மை களைத் தொல்காப்பியம், அதன் உரைகள், பிற இலக்கணம், அவற்றின் உரைகள், இற்றைய மொழியியல் சான்றுகொண்டு அங்கங்கே ஆராயப்பட்டு முடிவுரைக்கப் படுகின்றன. 59. இருபதாம் நூற்றாண்டிலும் நன்னூல் மிகச் சில உரைகளைப் பெற்றிருக்கிறது. நன்னூலுக்கு உரை காணும் முயற்சியைக் காட்டிலும் நன்னூலார் கோட்பாடுகளை கருத்தரங்குகளில் பட்டை தீட்டி பாய்ச்சும் அறிவாளர் முயற்சி பல்கியிருக்கிறது. 60. நன்னூல் அறிவாளர் உடைமையாய் உருவாகி, பொதுமக்கள் உடைமையாய்ப் பரவி, இன்று அரசு மீண்டும் அறிவாளர்களின் தனியுடைமையாக மாறி வருகிறது.

நன்னூல் ஆராய்ச்சித் திட்டங்கள்:

1. தொல்காப்பியரும் நன்னூலும்.
2. தொல்காப்பிய உரையாசிரியர்களும் நன்னூல் உரையாரியர்களும்
3. தொல்காப்பிய உரைகளும் நன்னூலும்
4. தமிழிலக்கண நூல்களில் நன்னூலின் பங்கும் பாங்கும்
5. நன்னூல் பதிப்புகளும் பதிப்பாசிரியர்களும்

6. நன்னூலுக்குப் பின் எழுந்த இலக்கண இலக்கியங்களில் நன்னூலின் செல்வாக்கு
7. மொழியியல் நோக்கில் நன்னூலின் போக்கு
8. நன்னூலில் சமற்கிருதத்தின் செல்வாக்கு
9. நன்னூல்—பிறமொழி மொழிபெயர்ப்புகள் அல்லது தழுவல்கள்
10. நன்னூல் மொழிநிலை

31

நன்னூலைப் பற்றிய புகழ்மொழிகள்

பாயிர ஆசிரியன்

முன்னோர் நூலின்
வழியே நன்னூற பெயரின் வகுத்தனன்
பொன்மதிற சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்று நாமத் திருந்தவத் தோனே

நன்னூற் பாயிரம் 19–23

சுவாமிநாத தேசிகர்

சேற்று நிலத்திற் கவிழ்ந்த பால் தேன் நெய் முதலியனவும் சேருறற் போல. நன்னூற் சூத்திரமும் அவ்வுரையுடனே கலந்து குத்தப்பட்டதென்க. முன்னூலொழிபப் பின்னூற் பலவினுள் நன்னூலார் தமக்கு எந்நூலாரு மிணையே என்னும் துணிவே மன்னுக. முன்னோர் ஒழியப் பின்னோர் பலரினுள் என்றலும் ஒன்று.[1]

சிவஞான சுவாமிகள்

நன்னூலாரை உட்கொண்டு சிவஞான சுவாமிகள் தம் நூல்களில் எழுதியிருக்கும் இடங்கள்: தொல்காப்பியப் பாயிர விருத்தி ப–ச — (நாவலர் பதிப்பு); இலக்கண விளக்கச் சூறாவளி: 6, 23, 27, 31, பதவியல் 1, உயிரீற்றுப் புணரியல் 2, 7, 9, 19, 35 பெயரியல் 37

1. சுவாமிநாத தேசிகர்—இலக்கணக் கொத்துரை, பக். 17, ஆறுமுக நாவலர் பதிப்பு, விரோதிகிருது. நன்னூலைப் பற்றிய பிற இடங்கள்: இலக்கணக்கொத்துரை: 6, 7, 8, 12, 44, 53, 63, 117, 129, 131.

சுப்பிரமணிய தீட்சிதர்

பிரபோக விவேக உரை : 2, 5, 6, 7, 8, 12, 18, 19, 21, 24, 26, 33, 34, 35, 36, 37, 39, 47, 49.

சங்கர நமச்சிவாயர்

கையறியா மாக்கட்கன்றி, நூலியற்றும் அறிவினையுடைய மக்கட்குப் பல்கலைக் குருசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான் புகழ்போல விளங்கி நிற்றலான், உலக மலையாமை உள்ளிட்ட பத்தழகோடும் பிறந்து நின்றது இச் சூத்திர மென்றுணர்க.[1]

சிரகிரிக் கோவை

"சேவிய வார்கொடி எம்மான் சிராமலைத் தேமலராற்
காவிய லாரு மளிகா ணுமக்குக் கழறுவதென்
பாவிய லாருநற காரிகை யோதியின் பாலமர்ந்து
மேவிய லாருநன் னூலிடை யாய விதமதென்னே!"[2]

கோடீச்சுரக் கோவை

"செறிப்புறு வான்புகழ்க் கோடீச்சுரேசர் சிலம்பிடைநாம்
உறுப்பமை நன்னூ லிடைநீடு மமம்பால் உறுதொடர்பைச்
சிறப்புறு கேள்வி பெறுபாங் கனுக்குத் தெளிவுபெறக்
குறிப்பினு மோதும் வெளிப்படைச் சொல்லினும் கூறுதுமே"

"நின்னூர் தனக்கென்று நீபோன பின்பு நெடுவளத்தின்
மன்னூர முத்தமிழ்க் கோடீச்சுர நம்பர் மால்வரைமேல்
பொன்னூர் வரைதனில் கொண்டெமர் பாலிப் புலவரெலாம்
நன்னூ லிடைஎழில் காரிகை கேட்க நணுகினரே"[3]

திருவெங்கையுலா

"புன்துரும்பு போன்றலைந்தார் போற்றுமவி காரிமுனம்
சென்றுவரு செல்திரிதல் போல்—மென்றளிராம்
மேனி திரிந்தார்"[4]

திருத்தணிகையுலா

"பயிற்சி பெறு
நேமிநாதத் தானிலே தெரியாச் சொற்புணர்ச்சி
காமற் நன்னூற் சூத்திரத்தாற் காட்டிடுர்"[5]

---

1. நன்னூல் 137 உரை
2. சிரகிரிக் கோவை 8
3. கோடீச்சுரக் கோவை 44, 241
4. திருவெங்கையுலா 393-4
5. திருத்தணிகையுலா அரிவை

பிரபுலிங்க லீலை

" குறில்வழி லகரத் தனிநிலை யாயு கூடிய தகரமுன்
னெழுத்தென்
றறிகுறி வடிவந் திரிதல்போ னந்தியடல்விடை மெய்திரிந்
துறினும்
நறுமலர் விழியிற் கண்டவ ரெல்லா நத்தியே என்றுள
மகிழ்ந்தார்" [1]

தமிழ் விடு தூது

" எண்முதலா கப்பகரு மீரா றெனும் பருவம்
மண்முதலோர் செய்து வளர்க்குநாள்" [2]

கொங்கு மண்டல சதகம்

" சங்கக் குருசில் உவக்க நன்னூலைக் கனிந்துபுகல்
துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்
கொங்கிற் குறும்பு தனிலாதி நாத குருவிளங்கு
மங்குற் பொழிற் சனகா புரமுங் கொங்கு மண்டலமே"

" சொல்காப் பியத்தின் குணதோடந் தேர்ந்து சொலுவதற்குத்
தொல்காப் பியங்கற்க நீண்ட ததனைச் சுருக்கியிசை
ஒல்காப் பெரும் பவணந்தியென் றேதி யுபகரித்த
வலகா வலன்சீய கங்கனுந்தான் கொங்கு மண்டலமே"

தொண்டை மண்டல சதகம்

" தன்னூர்ச் சனகையிற் சன்மதி மாமுனி தந்தமைந்தன்
நன்னூ லுரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
சின்னூ லுரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மன்னூ புரத திருவன்ன மின்னே தொண்டை மண்டலமே"

H. STOKS (1830)

"The Nannul is a work which stands conspicuous among the Grammatical treatises of all nations, for logical arrangement, and comprehensive brevity.[3]

---

6. பிரபுலிங்க லீலை
7. தமிழ் விடு தூது 23
1. H. Stocks Esq., of the Madras Civil Service, in his scholar-like translation and edition of the Nitineri Vilakkam, a tamil treatise on Morals, published in 1830.
Quoted by Bower, "Introduction to Nannul", 1876, P.V.

Testimonial by T. BROTHERTON (1848)

It is generally allowed by all who are at all conversant with Tamil literature that the Nunnool or Tamil Grammar of Pavananti is the most philosophically and logically arranged Grammar of any language in the Universe, and that a thorough acquaintance with it, though requiring the labour of years of study, is not too dearly bought even at that price, in as much as without that thorough acquaintance with it, no one can be said to be a perfect master of the Tamil language.[1]

SAMUEL PILLAI (1858)

The Tholkappiam and the Nunnool are in other words no other than the Eyndrum and the Panineum in principle. The former is treated more upon the Inductive method. The Nunnool lays down general rules and divides its subjects orderly into general classes, species and particulars; the Tholcapyam gives a few general rules only, and that too, in no regular order. It is for the most part one continued string of particulars and individuals, and the reader has the labour either to commit the Sutrums to memory or to compare them with others before he can arrive at a definite conclusion. Pavanandhi studied the Tholcapyam Eyndrum and the confused heap of Agastyam, and must have well digested the whole plan of the Panineum before he wrote his celebrated Nunnool, which is executed entirely upon the syllogistic or Deductive system.[2]

Rev. BOWER (1863)

The Nannul itself is an able work, and is the general text book and the great authority for the Institute of the Tamil Language.[3]

1. An English Version of the celebrated Tamil Nunnool by W. Joyes and S. Samuel Pillai, 1848. *P.* 7.
2. Samuel Pillai, Tholcapya Nunnool, *1858*, p. vill
3. Rev. H. Bower's letter to G. P. Savundaranayagam Pillai, 14th Dec. *1863*
   G.P.S's Nannul Churkka Unipatam *1864*, p. vi

Rev. BOWER (1876)

The Nannul of Pavanandhi is the Tamil Grammar, as the Kural of Thiruvalluvar is the Tamil classic.[1]

Rev. H. BOWER (1876)

But there are some who think that the method of the Naunul *is complicated and perplexing. Others do not think so.* The arrangement is simple and natural, and not after the elaborate and intricate plan of Panini, whose sudras are based on a system of algebraical formulas, of which Mr. Colebrooke justly remarks: "The Sutras of Panini, detached from their context are wholly unintelligible, and, without the commentator's exposition, they are indeed what Sir William Jones has somewhere termed them 'dark as the darkest oracles'.[2]

Dr. A SATHASIVAM (1966)

It is clear, then, that Pavananthi as a scientific grammarian knew how words should be segmented and the free and bound morphemes enumerated according to their position in the structure of words.

Of the three grammars (Vira coliyam, Neminatam and Nannul) only Nannul contains linguistically relvent material that could be utillised for the study of the concept of morphology. It is a descriptive grammar based partly on contemporary data and partly on historical documents. If "grammar is the science of the structure of a language and the rules and principles of its generally accepted use, (Mario A.Pei and Frank Gaynor, A Dictionary of Linguistics, New York, 1954, p. 85), then Nanunl essentially a grammar.[3]

---

1. Rev. H. Bower, D.D., Anglo-Indian Introduction to the Nannul The Tamil Text and English Translation with Appendices of notes and grammatical terms-1876, p.l.
2. Quoted by Bower (1876) in his Introduction to Nannul
3. Dr. A. Sathasivam, Uhiv. of Ceylon, The Concept of Morphology in Mediaval Theories in Tamil Grammar Seminar on Grammatica Theories in Tamil, Annamalainagar. Linguistics Dept., July, Aug 1966, pp. 4-8

32

நன்னூல் ஏட்டுச் சுவடிகள்

தஞ்சாவூர் மகாராச சரபோசி சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள ஏட்டுச் சுவடிகள் :

1. 64. எண். 632 நன்னூல் மயிலைநாதர் உரை: ஏடுகளின் மொத்த எண்ணிக்கை 218. சிதைந்த நிலையில் உள்ளது. ஒரு பக்கத்திற்கு 4 முதல் 10 வரிகள் எழுதப் பெற்றுள்ளன. இவ் வேட்டில் இறுதி மூன்று நூற்பாக்களும் அவற்றிற்கு உரையும் இல்லை. 2. 65. எண். 633 நன். மயிலை. உரை: ஏடுகள் 240. முற்றுப் பெற்றது. பக்கத்திற்கு 4 முதல் 10 வரிகள். இவ்வேட்டின் முதல் ஏட்டில் "எண்ணின எண்ணிய எய்துப" எனத் தொடங் கும் விநாயகர் வணக்கப் பாடல் உள்ளது. இப்பாடலும், பாடல் தொடர்பான ஆய்வும் மயிலைநாதர் வரலாற்றில் இடம் பெற் றுள்ளன. 3. 66. எண். 634 நன். மயிலை. உரை: ஏடுகள் 222. முற்றுப் பெருதது. பக்கத்திற்கு 4 முதல் 8 வரிகள், தொடக்கம் முதல் விஜயியல் 23ஆம் நூற்பா வரை உரை உள்ளது. 4. 67. எண். 635 நன். மயிலை. உரை: ஏடுகள் 135, முற்றுப் பெற்றது. பக்கத்திற்கு 4 முதல் 8 வரிகள். ஏடு மிகச் சிதைவாய் உள்ளது. 5. 68. எண். 637 நன். மயிலை. உரை: ஏடுகள் 36, முற்றுப் பெருதது. பக்கத்திற்கு 4 முதல் 8 வரி. தொடக்கம் முதல் மெய் யீற்றுப் புணரியல் 16 ஆம் நூற்பா வரை உரையுள்ளது. 6. 69. எண். 638 நன். மயிலை. உரை: ஏடுகள் 74, முற்றுப் பெருதது. பக்கத்திற்கு 7 முதல் 8 வரி. சிறப்புப் பாயிரம் முதல் உயிரீற்றுப் புணரியல் 17ஆம் நூற்பா வரை உள்ளது. 7. 70. எண். 640 நன். மயிலை. உரை: ஏடுகள் 41, முற்றுப் பெருதது. பக்கத்திற்கு 6 முதல் 7 வரி. பாயிரம் முதல் எழுத்தியல் 19ஆம் நூற்பா வரை உரையுள்ளது. 8. 71. எண். 641 நன். மயிலை. உரை: ஏடுகள் 138 முற்றுப் பெருதது. பக்கத்திற்கு 8 வரி. பெயரியல் 3ஆம் நூற்பா முதல் நூல் முழுவதற்கும் உரை உள்ளது. ஏடு சிதைந்த

நிலையில் உள்ளது. 9. 72. எண். 631 (a) நன்னூல் மூலம்: ஏடுகள் 257. பக்கத்திற்கு 7 முதல் 8 வரி. நன்னூல் மூலம் முழுதும் உள்ளது. 10. 83. எண். 636 (a) நன்னூல் மூலம்: ஏடுகள் 124. முற்றுப் பெருதது. பக்கத்திற்கு 7 முதல் 9 வரி. இதில் இந் நூலோடு தொடர்பில்லாத பாடல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. "எண்ணின எண்ணிய" "தவளத் தாமரை","சந்தனப் பொதிய" என்னும் செய்யுட்களும் இடம் பெற்றுள்ளன. 11. 90. எண். 639 (a) நன்னூல் மூலம், ஏடுகள் 84. முற்றுப் பெருதது. பக்கத்திற்கு 5 வரி. எழுத்தியல் 22ஆம் நூற்பா முதல் நூல் முழுவதும் இருக்கிறது. 12. 94. எண். 166 (a) நன்னூல் மூலம் ஏடுகள் 34. முற்றுப் பெற்றது. பக்கத்திற்கு 5—9 வரி. மூலம் முழுதும் இடம் பெற்றுள்ளது.

சென்னை, தமிழக அரசு ஓலைச்சுவடி நூலகத்தில் உள்ள நன்னூல் ஏட்டுச் சுவடிகள்: 13. எண் 60. நன்னூல் சங். விருத்தியுரை, தாளில் எழுதப்பட்டுள்ளது. அளவு 1—1/4 × 8 அங்குலம். பக்கங்கள் 434. பக்கத்திற்கு 20 வரி. நல்ல நிலையில் உள்ள இப்படி எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் முழுமைக்கும் உரையைப் பெற்றிருக்கிறது. சங். சொல்லதிகாரம் ஐந்தாவது இயலை 'உரிச்சொல்லியல்' என்று குறிற்துள்ளார் என்பதற்கு இவ்வேடு சான்றாக உள்ளது. ஏட்டின் இறுதியில் 'ஐந்தாவது உரிச்சொல்லியல் முற்றும்' என்று அமைந்துள்ளது. 14. எண். 61. நன்னூல் சங். உரை. பனையேட்டில் உள்ளது. அளவு 16—3/4 × 1—1/4 அங். பக்கம் 51. பக்கத்திற்குப் பத்து வரி, எழுத்ததிகாரத்தில் முதல் 46 நூற்பாக்களுக்கே உரையுள்ளது. 15. எண். 62. நன்னூல் சங். உரை, பனையேட்டில் உள்ளது. அளவு 15—3/4 × 1/1—4 அங். பக்கம் 174. பக்கத்திற்கு 7 வரி. மெய்யிற்றுப் புணரியலுக்கு மட்டுமே உரை உள்ளது. 16. எண். 63, நன்னூல் உரை: உரைகாரர் பெயர் தெரியவில்லை. பனையோலைகளின் எண்ணிக்கை 78. அளவு 13×1—3/4 அங். பக்கத்திற்கு 10 வரி. சிதைந்த பழைய ஏடு. உரையின் தன்மை இழிவழக்கு மொழியில் எழுதப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டு: "சொன்னதுகள் கொஞ்சம் ரெட்டிக்கு மென்றும் விதவாதன சிறுபான்மை மிகா எனவும் கூறினராயிற்று. யெடுத்துச் சொல்லாததுகள் கொஞ்சம் மிகமாட்டா தென்றுஞ் சொன்னும் போலேயாச்சுது". 17. எண் 64. நன்னூல் உரை பதவியலுக்கு மட்டும் பனையேட்டில் உள்ளது. அளவு 18—1/4×2 அங். பக்கம் 58. பக்கத்திற்கு 8 வரி. பிழை மலிந்த உரை. உரையாசிரியர் பெயர் தெரிய வில்லை. சான்று: "எழுத்தே தனித்துந்

துடர்ந்தும் பொருடரிலது பதமாம் ... இச் சூத்திரம் என்னத்தைச் சொல்ல வந்தது என்ருல்...'' 18. எண் 65. எண் 63 போன்றது. தாளில் எழுதப்பட்டுள்ளது. அளவு 15-3/8 × 5-3/4 அங். பக்கம் 70. பக்கத்திற்கு 47 வரி. பதவியல் முதல் மெய்யீற்றுப் புணரியல் சில பகுதி வரை நூற்பாக்கள் உள்ளன. 19. எண் 66. நன்னூல் உரை: அளவு 17-1/8 × 1-3/8 அங். பனையோலை ஏடுகள் 320. பக்கத்திற்கு 8 வரி முற்றுப் பெருத பழைய உரை. எழுத்தியல் தொடங்கி பொதுவியல் சேரும் நூற்பா வரை உரையினைப் பெற்றது. இதுவரை அச்சிடப்படாத இவ்வுரையின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. உரைப் போக்கு, உரையாசிரியர் சமணர் என அறிவிக்கிறது. 20. எண் 67. நன்னூல் உரை. தாளில் எழுதப்பட்டுளது. அளவு 13½ × 8½ அங். பக்கம் 406. பக்கத்திற்கு 24 வரி. எழுத்தியல், பதவியல் 68 நூற்பாக்களுக்கு உரையுள்ளது. இது வரை அச்சிடப் படாத இவ்வுரை சமணரால் இயற்றப் பெற்றது. உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. தாளில் எழுதப்பட்டுள்ளது. எண் 66 ஐப் பார்த்துப் படியெடுக்கப் பட்டதாகலாம். 21. எண் 68. நன்னூல் உரை. பனையோலையில் எழுதப்பட்டுள்ளது. அளவு 10½ × 1½ அங். பக்கம் 41. பக்கத்திற்குப் பதினெரு வரி. உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. முற்றுப் பெருத இவ்வுரை எழுத்தியல், வினையியல், பொதுவியல் ஆகிய வற்றிற்கு மட்டுமே உள்ளது.

திருவான்மியூர் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூலகத்தில் உள்ள ஏட்டுச் சுவடிகள் :

22. எண் 118. நன்னூல் மூலம் (601). அளவு 13-3/4 × 1½ அங். பக்கம் 31. பக்கத்திற்கு 12 வரி. சிறந்த நிலையில் முழுதுமாக உள்ளது. 23. எண் 119. நன்னூல் மூலம் (670). அளவு 14-3/4 × 1¼ அங். பக்கம் 76. பக்கத்திற்கு 6 வரி. இவ்வேட்டின் தலைப்பில் 'விளம்பி வருஷம் ஆவணி மாதம் அண்ணுசாமி எழுதிப் படிக்கின்ற நன்னூல் மூலபாடம்' என்ற குறிப்பும் உள்ளது. 24. எண் 120. நன்னூல் மயிலை. உரை (55). அளவு 16½ × 1-3/4 அங். பக்கத்திற்கு 11 வரி. முழுமையாக உரை உள்ளது. முன்னதைப் போன்றது. 25. எண் 121, நன்னூல் மயிலை. உரை (39). அளவு 16-3/4 × 1½ அங். பக்கம் 360. பக்கத்திற்கு 3 வரி. முன்னதைப் போன்றது. 26. எண் 122. நன்னூல் மயிலை. உரை (90). அளவு 15 × 1½ அங். பக்கம் 392. பக்கத்திற்கு 8 வரி. முன்னதைப் போன்றது. முடிவில் ''நன்னூல் எழுத்தும் சொல்லுமாக இருவகைக் காண்டிகையும் ஒரு வகையாய் முற்றிற்று'' என்று உள்ளது.

27. எண் 123. நன்னூல் மயிலை உரை: (261). அளவு 13½ × 1 அங். பக்கம் 272. பக்கத்திற்கு 8 வரி. முற்றுப் பெருதது, 'வேங்கடம் குமரி தீம்புனற் பௌவம்' எனத் தொடங்கும் பண்டைய எல்லையைக் கூறும் பாவின் பகுதி உள்ளது. 28. எண் 124. நன்னூல் மயிலை உரை: (76). அளவு 16 × 1¼ அங். பக்கம் 176. பக்கத்திற்கு 9 வரி. முன்னதைப் போன்று முற்றுப் பெரு உரை. பதவியல் முதல் நூற்பாத் தொடங்கிப் பெயரியல் 56 ஆம் நூற்பா வரையில் உரை உள்ளது. முதலும் கடைசியும் இல்லை. 29. எண் 125. நன்னூல் மயிலை. உரை. (132) முற்றுப் பெருதது. அளவு 15 × 1½ அங். பக்கம் 302. பக்கத்திற்கு 11 வரி. முன்னதைப் போன்றது. எழுத்தியல் முதல் இடைச் சொல்லியல் 19 ஆம் நூற்பா வரை உரையுள்ளது. 30. எண் 126. நன்னூல் சங். உரை (18). அளவு 17¼ × 1½ அங். பக்கம் 418. பக்கத்திற்கு 8 வரி. முழு உரையான இஃது 'ஐந்தாவது உரிச் சொல்லியல் முற்றும்' என்று முடிகிறது. 31. எண் 127 (515). நன்னூல் சங். உரை. அளவு 15–3/4 1½ அங். பக்கம் 428. பக்கத்திற்குப் பத்து வரி. சங். உரையுடன் சிவஞான முனிவரின் திருத்தமும் இடம் பெற்றுள்ளது. இறுதி 'ஐந்தாவது உரிச்சொல்லியல் முறறும் என்று முடிகிறது. 32. எண். 128 சங். சிவஞான முனிவர் உரை (543). 127 ஐப் போன்றது. அளவு 13½ × 1½ அங். பக்கம் 332. பக்கத்திற்கு 12 வரி. 33. எண். 129 (591) 127 ஐப் போன்றது. அளவு 15 × 1¼ அங். பக்கம் 300 பக்கத்திற்கு 8 வரி. முற்றுப் பெரு உரை. 34. எண். 130 (27) 127 ஐப் போன்றது. அளவு 16 × 1–3/4 அங். பக்கம் 200. பக்கத்திற்கு 15 வரி. முற்றும் உரை உள்ளது. 35. எண் 131 (572). 127ஐப் போன்றது. அளவு 12 × 1–1/4 அங். பக்கம் 594. பக்கத்திற்கு 8 வரி. முழு உரை. 36. எண். 132. (563). அளவு 12½ × 1½ அங். பக்கம் 420. பக்கத்திற்கு 10 வரி. 127 ஐப் போன்றது. 37. எண் 133. (616). நன்னூல் மூலமும் விசாகப் பெருமானையர் காண்டிகை உரையும். அளவு 9 × 1¼ அங். பக்கம் 326. பக்கத்திற்கு 3 வரி. இச் சுவடியில் உருபு புணரியல் 7ஆம் நூற்பா முதலாக முற்றும் உரை உள்ளது. இற்தி 'உரிச் சொல்லியல் முற்றுப் பெற்றது' என்று முடிகிறது.

பொருளடைவு

(சொல்லகராதி)

(எண் பக்க எண்)

அச்சிடப்படாத உரைகள், 259
அச்சியந்திரம், 175
அணுத்திரள், 32
அது, 314
அதிகாரம், 284
அமிர்தவிங்கச்செட்டி, 259
அருணாசலம்பிள்ளை, 246
அவிநயம், 111
அவிநயப் புறனடை, 129
அறுபத்துமூவர், 148
அன்மொழித தொகை, 185, 189
அனேத்து, 114
அனேத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம், 267

ஆக்கச் சொல், 320
ஆகுபெயர், 185, 312
ஆங்கில உரைகள், 241
ஆசுவதாயண சிரௌதத்த சூத்திரம், 80
ஆசிரியர் ஆகாதவர், 282
ஆசிரிய நிகண்டு, 118
ஆசிரியர்...தெரியாதது, 267
ஆண்டிப்புலவர், 116
—உரை, 119
—ஊர், 119
—காலம், 118
ஆரிய மொழி, 102
ஆறன் உருபு, 313
ஆறுமுக சுவாமிகள், 256
ஆறுமுக நாவலர், 227
—கட்டுரை...தந்தை, 229
—காண்டிகையுரை, 230
—கிறித்துவமத கோளரி, 229
—சொற்பொழிவுக்கூலி, 228
—பதிப்பாசிரியர், 229
—பாவலர், 228
—பைபிள்...பணி, 227
—விருத்தியுரை, 230

இடுகுறி, 306
இடைச்சொல், 344
இடைநிலை மெய்ம்மயக்கம், 287
இடையியல், 60
இயல்கள், 58
இயற்கைப்பொருள், 339
இரண்டாம் வேற்றுமை, 316
இராமனுச கவிராயர், 192
—இலக்கண மேற்கோள், 196
—இலக்கிய மேற்கோள், 196
—உரை, 194
—உரையில் குறிப்புகள், 197
—உரையின் தனிச்சிறப்பு, 199
—ஊர், 192
—(உரை) விருத்தியா? காண்டிகையா?
இருதிணைப் பொதுப்பெயர், 310
இருபதாம் நூற். உரைகள், 261
இருமை எண், 297
இரேனியசு ஐயர், 242
—ஊர், 242,
—தமிழ்ப்பணி, 243
—மொழிபெயர்ப்பு; 244
இலக்கண உரைத் தோற்றம், 77
இலக்கண கல்வி, 265
இலக்கணக் கொத்தர், 257

இலக்கண வளர்ச்சி, 263
இலக்கண விளுவிடை, 176
இலக்கணை, 134
இலக்கியத் தொகை, 110
இலாசரசு ஐயர், 250
இளங்காடு, 92
இளம்பூரணர், 112

உணர்வெழுத்து, 108
உம்மை. 338
உயர்திணை, 303
உயிர்மெய்க் கூட்டொலி, 294
உரிச்சொல், 346, 347
உரியியல், 60
உருபும் விளையும், 320, 321
உருவ எழுத்து, 108
உரை இலக்கணம், 87
உரைதோன்றிய காலம், 75
உரைநடை, 79
உரைப்பாயிரம், 184
உரைவகை, 85
உரையின் வரலாறு, 75
எச்சங்களின் முடிவு, 322

எண்ணிடைச் சொற்கள், 344
எண்ணூல், 111
எதிர்நூல, 44
எதிர்மறை, 320
எழுத்ததிகார உரையேடு, 284
எழுத்துப்போலி, 289
எழுவாய் வேற்றுமை, 315
என்றி பவர், 248

ஏகார ஓகாரம், 198
ஏட்டுச்சுவடி, 363
ஏவற்கருத்தா, 317

ஐத்ரேயபிராமணம், 80
ஐந்ததிகாரம், 114
ஐந்ததிகார நூலா, 50
ஐந்திரக் கோட்பாடு, 45
ஐந்திலக்கணத் தேவை, 30
ஐ, ஔ வடமொழி வரவா; 294

ஒருபொருட் பன்மொழி, 337
ஒலி எழுத்து, 708

ஒழியிசை எச்சம், 324
ஒன்பது, 109

ஔகாரம், 283

கங்கர், 90
கடை, (கால்) 318
கபாலிகம், 94
கபாலீசுரம், 94
கபாலிச்சுரர், 94
கயாதரம், 118
கருத்தரங்குகள், 267
கல்வெட்டுத் தொடர்கள், 144
களத்தூர்
வேதகிரி முதலியார், 201
—இலக்கணக் களஞ்சியம், 202
—இலக்கணப் பேரறிஞர், 202
—உரை (காண்டிகை). 203
—உரையில்...செய்திகள், 204
—ஊர், 201
—எழுதிய நூல்கள், 201
களபம், 110

காங்கேயர், 118
கார்த்தியாயர், 20
காரணப்பெயர், 309
கால், (கடை), 318
காலப்பகுப்பு, 333
காலம், 110
காலவழுவமைதி, 335
கால வழுவமைப்பு, 334

கிடைக்கப்பெரு உரைகள், 253
கிரந்த எழுத்து, 103, 114

குகையிடி கலகம், 24
குமாரசாமிப்புலவர், 257
—ஆசிரியப்பணி, 258
—இலக்கணக்கொத்தர், 257
—தமிழ்ப்பணி, 258
—பன்மொழிப் பயிற்சி, 257
குழ, 110
குறிப்பின், 305
குறிப்பு மொழிகள், 340
குறிப்பு வினை, 162
குறிப்பு வினையாலணையும்
பெயர், 162

கூழங்கைத்தம்பிரான், 168
எழுதிய நூல்கள், 171
—கூழங்கையர், 168
—பரம்பண விளக்கம், 169, 170
விருத்திரை, 172

கேட்போர், 278

கோபாலாச்சாரியார், 236
—ஆசிரியர், 236
—உரையின் இயல்புகள், 237
—காண்டிகை உரை, 237

சகரக்கிளவி, 109
சங்கம், 34
சங்கர நமச்சிவாயர், 123
—அகத்தியப் புலமை, 128
—அவிநயப்புலமை, 128
—ஆசிரியர், 123
—இலக்கணப் புலமை, 126, 129
—இலக்கண மேற்கோள், 131
—இலக்கியப் புலமை, 129
—இலக்கிய மேற்கோள், 129
உரை இயல்பு, 137
உரை நெறி, 137
ஊர், 123
—எடுத்துக்காட்டும் அழகு, 136
—உத்தி, 136
—உவமை, 140
—குற்றங்கள், 136
—சூத்திர நிலைகள், 136
—மதங்கள், 136
—குறட்பாவுக்கு உரை, 145
—சான்றுரைப் போற்றுதல், 146
—சிவநேயச் செல்வர், 125
—தனித்தன்மைகள், 151
—தொல்காப்பிய உரைப்புலமை, 127
—பாடபேதங்கள், 150
—மொழிநடை, 139
—வடமொழிப்புலமை, 132
—வாதத் திறன், 144
சடகோபராமானுசாச்சாரியார், 232
—உரையாசிரியர், 232
—உரையின் இயல்புகள், 233
—ஊர், 232
—காண்டிகை உரை, 233
—மதுரைத் தமிழ்ச்சங்க உறுப்பினர், 234
சத்குரு சிஷ்யா, 80
சந்தியக்கரம், 132, 296
சந்திரசேகர கவிராஜ பண்டிதர், 255
சம்பந்தர், 32, 34
சமணர் உரை, 84
சமணத் துறவி 32, 34
சமற்கிருதம், 26, 81, 159
சர்வானுக்கிரமணி, 80
சரவணப் பெருமாளையர், 254
சவுந்தர நாயகம், 221
—ஊர், 221
—எழுதிய நூல்கள், 221
—சுருக்க உரை, 221
சனகாபுரம், 37, 38
சனகாபுரி, 37
சனகை, 37
சனாதபுரம், 38, 39

சாமுவேல்பிள்ளை, 212, 244
சார்பெழுத்து, 285

சிவஞான முனிவர், 152
—இலக்கணப்புலமை, 156
—இலக்கியப் புலமை, 157
—உத்தி, 160
—உரை, 156
—உரை வரைந்த சூழல், 155
—உரையில் ஒரு குறை, 166
—உரை.. செயதிகள், 165
—எடுத்துக்காட்டில் புதுமை, 163
—படைப்புகள், 154
—மறுப்பில் புதுமை, 165
—மறுப்பு முறைகள், 164
—மொழிநடை, 161
—வடநூல் மரபு 159
—வடமொழிப்புலமை, 158
சினேந்திரன், 34
சீயகங்கன், 23, 37
சீனுபுரம், 38, 40

சுட்டெழுத்து, 287
சுருக்க உரை, 221
சுருக்கப் பதிப்புகள், 226
சுந்தரி, 80

செஞ்சி, 118
செந்தமிழ் நாடு, 306
செய்யுள் வடிவில்உரை, 120
செய்வித்தான், 317
செயப்பாட்டுவினை, 339

ஞானபிதா, 35
ஞானபுத்திரன், 35

தமிழ்ச்சங்கம், 41
தன்மை எழுத்து, 108
தன்மை...பெயர்கள், 311

தாம், 316

திராவிட ஒப்பியல் ஆய்வு, 266
திரிசொல், 307
திருக்குறள், 157
திருநூற்றந்தாதி, 92
திருப்பாற்கடல் நாதன், 205
—உரைபற்றிய குறிப்புகள், 206
—ஊர், 205
—கிருஷ்ணபிள்ளைக்கு ஆசிரியர், 205
—நன்னூல் உரை, 206
—முத்துவீரிய உரை, 206
திருமயிலாபுரி, 92
திருமயிலாபுரி நேமிநாதர் பத்து, 92

தீர்த்தங்கரர், 92

தெய்வசிகாமணி முதலியார்,

தேவசேனை (பவணந்தி சீடர்) 33
தொகை, 110

தொகைநிலைத் தொடர், 325, 326, 331
தொண்ணூறு, 299

தொல்காப்பிய நன்னூல், 218
தொல்காப்பியப் பதிப்புகள், 213

நந்தி; 32
நமச்சிவாய முதலியார், 270
—உரை, 270
—சிறப்பான செய்திகள், 270
நன்னூல் ஆராய்ச்சி, 356
நன்னூல் இலகுபோதம், 190
நன்னூல் உரை, 79
நன்னூல் உரையாசிரியர், 89
நன்னூல் கருப்பை, 254
நன்னூலன்று, 268
நன்னூல் காலம், 35
நன்னூல் சுருக்கங்கள், 222
நன்னூல் சுருக்கச்சார்பு, 225
நன்னூல் செய்யுள்உரை, 118
நன்னூல் யாப்பு. 61
நாவல், 109, 139
நிகண்டு, 118
நூற்புத் தொகை, 62

பகதேவன், 118
பகுபத முடிவுகள், 114
பஞ்சம், 24
பண்புத்தொகை, 330
பதமஞ்சரி, 80
பயன், 270
பரதாசுவாமின், 80
பரசுராமமுதலியார், 256
பரிமாணம், 112
பருவப் பெயர்கள், 109
பவ, 33
பவானந்தம்பிள்ளை, 269
பழமொழி, 111
பழைய உரை, 239
பழைய உரையாசிரியர், 78
பன்னிருமாணாக்கர், 154
பனம்பாரம், 112

பாடபேதங்கள், 150
பாணினி, 35
பாயிர உரை, 275
பாயிரம், 53, 115
பால் இடவழு, 333
பால்திணைவழு, 332

பாவாடை வாத்தியார், 118
பிரிக்க முடியாப் பெயர்கள், 337
புகழ்மொழிகள், 358
புடைநூல், 109
புதியன புகுதல், 149
பைபிள், 227
பொதுப் பெயர், 336
பொதுவியல், 59
பொரி, 110
பொருள்கோள்
—கொண்டு கூட்டு, 343
—நிரனிரை, 342
—யாற்றுநீர், 341
போப்பையர், 108
—உரை, 210
—எழுதிய நூல்கள், 209
—தனிச் சிறப்பு, 211
—பதிப்புச்சிறப்புகள், 210
போலி, 288

மடற்பிணை, 282
மரபுவழி, 332
மயிலாப்பூர், 91
—சைவத்தலம், 94
மயிலாப்பூர் பத்து, 92
மயிலைநாதர், 90
—ஆளும் உத்தி, 107
—இலக்கணக்கடல், 100
—இலக்கணப்புதுமை, 113
—இலக்கியக்கடல், 101
—இலக்கியநடை, 105
—உரை, 97
—ஊர், 91
—எதுகை நடை, 106
—காலம், 110
—சமயம், 92
—செய்திக் களஞ்சியம், 108
—பழமொழியை ஆளுதல், 106
—பெயர்க்காரணம், 91
—பேச்சு வழக்கை ஆளுதல், 106
—வடமொழி அறிவு, 102
மற்றையது, 345
மாதவன், 80
முத்துதம்பிப்பிள்ளை, 187
—அன்மொழித் தொகை ஆராய்ச்சி, 189
ஊர், 187
—தன்னூல் இலகுபோதம், 190
—நன்னூல் உரை, 189
முத்துவீரியம், 206
முதல் காண்டிகை, 183
மூலபாடக்கல்வி, 265
மேற்புள்ளி, 198
மொழியியல்துறை, 266
மோசசு பொன்னையா, 271
—உரை, 271

யாப்பு, 277
வகரப் பிறப்பு, 287
வள்ளிமலை, 33
வாய்பாடு, 318
வாய்மொழி இலக்கியம், 76
வால்டர் ஜாய்சு, 244

விகாரம், 298
விசாகப் பெருமாளையர், 173
—உரை, 182
விடைமரபு, 340
விருடபதேவர், 33
விருத்தி உரை, 281
விருத்தியா? காண்டிகையா? 198
வில்லவதரையன், 120
வினாஎழுத்து, 114, 286
வினாவிடை, 331
வினை எச்சம், 319
வினைத்தொகை, 328
வினையாலணையும் பெயர், 109

வேற்றுமை, 302
வேற்றுமைதொகை, 327
வைத்தியநாததேசிகர், 172
ஸ்ரீபுராணம், 81
ஸ்ரீநிவாச முதலியார், 258

குறிப்பு— நன்னூற் பதிப்புச் செய்திகள், சொல்லடைவு, மூலம் ஆகியன கையகம் இருந்தும் அவற்றை அச்சாக்க இயலவில்லை.

உசாத் துணை நூல்களுட் சில

1. அரசஞ் சண்முகனார், தொல்காப்பியச் சண்முக விருத்தியின் முதலாவது பகுதியாகிய பாயிர விருத்தி, வர, கோபால சாமி ரகுநாத ராஜாவி, ஸ்ரீவித்தியாநோதினி முத்திரா சாலே, தஞ்சை, 1905.

2. அரவிந்தன், மு. வை., உரையாசிரியர்கள், முதற்பதிப்பு, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1968.

3. அருணைசலம். மு., தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ்ப்புலவர் வரலாறு. பதினேராம் நூற்றாண்டு. முதற்பதிப்பு, காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், மாயூரம், தஞ்சை, 1971.

4. இராமசாமிப் புலவர், க. அ., தமிழ்ப்புலவர் வரிசை, முப்பது தொகுதிகள், கழகம், சென்னை—1, 1947—72.

5. இளவரசு, சோம., இலக்கண வரலாறு, முதற்பதிப்பு தொல் காப்பியர் நூலகம், 107, கனகசபை நகர், சிதம்பரம், 1973.

6. இளையபெருமாள், மா., லீலா திலகம், முதற் பதிப்பு, தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் சாலே, சென்னை-5, 1971

7. சுப்பிரமணியன், டாக்டர் ச. வே., இலக்கணத்தொகை— எழுத்து, சொல், பாரிநிலையம், 59, பிராட்வே, சென்னை-1, 1967, 1971.

8. Agarawala, V. S. INDIA AS KNOWN TO PANINI Second Edition, prithvi Kumar. prithvi prakasham, Varanasi-5. 1963,

9. Bower, Rev. H , INTRODUCTION TO THE NANNUL Kazhagam, Madras-1, 1972.

10. Meenakshisundaram, T. P., A HISTORY OF TAMIL LANGUAGE. Linguistic Society of India, Deccan College, Poona. 1965,

11. Murdoch, John, TAMIL PRINTED BOOKS, First Edition 1861, Tamil Development and Research Council, Govt. of Tamilnad, 1968.

12. Subrahmanya Sastri, P. S., HISTORY OF GRAMMATICAL THEORIES IN TAMIL NADU AND THEIR RELATION TO THE GRAMMATICAL LITERATURE IN SANSKRIT. The Journal of Oriental Research, Madras, 1934.

13. Vijayavenugopal, G., A MODERN EVALUATION OF NANNUL, ELUTTU, Annamalai University, 1968.